# தண்பதம்

# Thanpatham



**Proceedings of Annual Conference**
**2017**



தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்பதம்

# Thanpatham

## புதியநோக்கில் நாட்டார் வழக்காற்றியல்

## Folklore: New Perspective


**பதிப்பாசிரியர்கள்**

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

எம்.எம். ஜெயசீலன்



வெளியீடு

தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்பதம்
பதிப்பாசிரியர்: கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன், எம்.எம். ஜெயசீலன்

© 2017

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது
தமிழ்த்துறை, கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை
தொ.பே. 0812392545, மி.அஞ்சல்: *headtamil@yahoo.com*

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது
39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-6,
தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: *kumbhlk@gmail.com*

ISBN 978-955-589-249-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக்குழு

**பேராசிரியர் சி. தில்லைநாதன்**
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்)

**பேராசிரியர் சி. பத்மநாதன்**
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்)

**பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்**
(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் துரை. மனோகரன்**
(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் சி. மௌனகுரு**
(கிழக்குப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் வை. சுப்பராயலு**
(தகைசார் பேராசிரியர் தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

**பேராசிரியர் ச. உதயசூரியன்**
(முன்னாள் தலைவர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

**பேராசிரியர் ந. அதியமான்**
(புலத்தலைவர், சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

**பேராசிரியர் வீ. அரசு**
(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)

**பேராசிரியர் கா. இராஜன்**
(தொல்லியல் துறை, புதுச்சேரி நடுவண் பல்கலைக்கழகம்)

## மலர்க்குழு

**பேராசிரியர் வ. மகேஸ்வரன் (போசகர்)**
**கலாநிதி எஸ்.ஆர். தேவர் (தலைவர்)**
**திரு. பெருமாள் சரவணகுமார்**
**திருமதி ஆன்யாழினி சதீஸ்வரன்**
**செல்வி சோ. ஜதீனா**
**செல்வி த. அருள்விழி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF PERADENIYA, SRI LANKA

# Message from the Vice – Chancellor University of Peradeniya

It is with great pleasure that, I send this congratulatory message to the 'Thanpatham' (proceeding of annual Conference - 2016) published by the department of Tamil of the University of Peradeniya.

The Tamil department of the University of Peradeniya is considered as one of the oldest and traditional department in Sri Lanka. Over the last four years this department has taken the initiative to conduct International Conference on Tamilology, which is highly commendable. It is noteworthy to mention that Tamil Scholars from the Universities of Sri Lanka and India will be participating in this conference as before. It is also remarkable to note that the research articles presented at this Conference has been compiled into a book titled 'Thanpatham' and published annually.

Accordingly, I have been informed that the publications of the articles presented last year, which was based on the theme FOLKLORE: NEW PERSPECTIVE will be released on the same day. In conclusion, I take this opportunity to congratulate the organizing committee of this annual conference for their tremendous efforts to put into make this event a grand success.

**Prof. Upul B. Dissanayake,**
Vice-Chancellor,
University of Peradeniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF PERADENIYA, SRI LANKA

# Message from the Dean, Faculty of Arts University of Peradeniya

It is with pleasure and honour that I present this message of congratulations and appreciation for international conference on Tamilology. I believe the Department of Tamil in the University of Peradeniya as the oldest Department in that discipline has taken the right and courageous decision to organize this annual national seminar. I believe the literary work in Tamil will positively contribute to establishing personal liberties and cultural mindsets to a harmonious and a sustainable society.

Many this kind of efforts are required to resurrect and rejuvenate the Tamil literature in Sri Lanka. I also wish that the scholars and artists in Tamil will be able to contribute to social development and harmony through literary work. These efforts will also help creating the next generation of scholars who will contribute to the richness and the quality of Tamil literature.

The conference will also pave the way for more academic collaborations and cooperation with many university institute abroad and develop and a mutually beneficial future programmes for research and study partnerships.

I wish the conference be a great success.

**Professor O.G. Dayaratna Banda,**
Dean, Faculty of Arts,
University of peradeniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

இலங்கை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளுள் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பழைமை வாய்ந்தது; ஆய்வு முதிர்ச்சியைப் பெற்றது. பேராதனைத் தமிழ்த்துறையினர் பல்வேறு சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்கு கொண்டு ஆய்வுலகில் தம் அறிவுப்புலத்தை நிலைநிறுத்திக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையில், தமிழ்த்துறையின் கருத்தரங்கத் தொடரின் நான்காவது வெற்றிப்படியாக அமையும் இவ்வருட ஆய்வரங்கானது, "புதிய நோக்கில் சிலம்பும் மேகலையும்" என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ளது.

தமிழ்த்துறையின் ஆய்வரங்கில் இடம்பெறும் கட்டுரைகளின் பதிவேட்டு ஆவணமாக "தண்பதம்" என்ற தொகுப்பு நூல் ஒவ்வொரு வருடமும் வெளிவருகின்றது. துறையின் முதல் தண்பதமானது தமிழியல் ஆய்வுகளின் பொதுவான மதிப்பீடாகவும், இரண்டாவது தொகுப்பு சங்க இலக்கியங்களைப் புதிய நோக்கில் பதிவு செய்வதாகவும் அமைந்துள்ளன. இம்மூன்றாவது தண்பதமானது 'புதியநோக்கில் நாட்டார் வழக்காற்றியல்' என்ற தொனிப் பொருளில் அமைந்த சென்ற வருட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். இவ்வாறு தண்பதம் தன் பெயருக்கேற்ற வகையில் ஒவ்வொரு வருடமும் புதுப் பொருளில் புதுப்பொலிவோடு வெளிவருகின்றது.

தண்பதத்திற்கான ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியவர்கள் சிறந்த பல ஆய்வுகளைச் சமர்ப்பித்துள்ளனர். இவர்களது ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வுலகில் அவர்களுக்கிருக்கும் புலமையைப் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தினது தமிழ்த்துறையின் வளர்ச்சிக்காக அயராது பேருதவி வழங்கிவரும் தமிழகப் பேராசிரியர்களுக்கும் எமது துறைசார்ந்த பேராசிரியர் களுக்கும் நன்றிகூற எமது துறை கடமைப்பட்டுள்ளது.

இத்தண்பதத்திற்கான கடந்த மாநாட்டின் பேருரையை வழங்கிய பேராசிரியர் க. பிலவேந்திரன் அவர்களுக்கு எமது நன்றிகள். மற்றும் சிறந்த அறிவுரைகளையும் ஆய்வுரைகளையும் வழங்கிய அனைத்துப் புலமையாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

இம்மாநாட்டினைச் செம்மையாக நடாத்துவதற்கு சகலவிதத்திலும் உதவிய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் உபுல். பி. திசாநாயக்க அவர்களுக்கும் எமது பீடத்தின் அதிபதி ஓ.ஜி. தயாரட்ன பண்டா அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகள். மற்றும் இம்மாநாட்டை ஒழுங்கமைப்பதில் எல்லாவகையிலும் உதவிய விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றியுரித்து.

மேலும், நல்ல ஆய்வாளர்களை உருவாக்குவதற்கும் பதப்படுத்துவதற்கும் வழி வகுக்கும் இத்தகைய ஆய்வரங்குகள் இனிவரும் காலங்களிலும் தொடர வாழ்த்துகின்றேன்.

கலாநிதி (திருமதி) எஸ்.ஆர். தேவர்
தலைவர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நாட்டார் வழக்காற்றியல் என்ற கல்விப்புலம் தொடங்கப்பட்டு ஒன்றரை நூற்றாண்டு களுக்குமேல் கடந்துவிட்டது. இக்காலப்பகுதியில் உலக வரலாற்றில் ஏற்பட்டுவந்துள்ள சிந்தனை மாற்றங்களுக்கு ஏற்ப நாட்டார் வழக்காற்றியற் கல்விப்புலமும் பல மாற்றங்களைத் தாங்கி வளர்ச்சியடைந்து வந்துள்ளது. தொடக்க காலத்தில் மானுடவியலின் துணைப்பிரிவாக இருந்த நாட்டார் வழக்காற்றியல் பிந்தைய காலத்தே தனித்த துறையாக விருத்திபெற்றதோடு ஏனைய பல துறைகளின் கூறுகளையும் உள்வாங்கித் தன்னை விசாலப்படுத்திக்கொண்டது. இத்தொடர்வளர்ச்சியின் அடுத்த கட்டமாக இன்றைய நிலையில் மானுடவியல், அமைப்பியல், மொழியியல், கலையியல், சமூகவியல், வரலாற்றியல் போன்ற பல துறைகளின் தகவற் களஞ்சியமாகவும் ஆய்வுப்பொருளாகவும் நாட்டார் வழக்காற்றியல் விளங்கிவருகின்றது. அதனால் எந்தவொரு சமூகத்தினதும் அசைவினைப் புரிந்துகொள்ள நாட்டார் வழக்காற்றியல் பற்றிய அறிவு அடிப்படையானது என்பதைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தமிழ்ச் சூழலிலும் நாட்டார் வழக்காற்றியற் கல்விப்புலம் தொடங்கப்பட்டு ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமேல் கடந்துவிட்டது. கிறிஸ்தவ மிஷனரிமார்களாலும் காலனிய அதிகாரிகளாலும் தொடங்கப்பட்ட தமிழ் நாட்டாரியல் கல்விப்புலமானது இன்று தமிழியலின் முக்கிய அங்கமாக விளங்கிவருகின்றது. ஆரம்ப காலத்தில் சுதேசிய மேட்டுக்குடியினரால் 'தீண்டப்படாததாகக்' கருதப்பட்ட நாட்டார் வழக்காற்றியலானது, தமிழ்ச் சமூக வரலாற்றுக்கும், தமிழ்ச் சிந்தனை மரபுக்கும் அடிப்படையானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு பன்முக நோக்கிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெவ்வேறு துறைகளைச் சார்ந்தோரும் நாட்டார் வழக்காற்றியலைத் தமக்கான தரவுகளாகக் கொண்டு ஆய்வுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

இலங்கைத் தமிழ்ச் சூழலிலும் நாட்டார் வழக்காற்றியல் குறித்த அக்கறை காலனித்துவக் காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார்களாலும் காலனிய அதிகாரிகளாலும் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின்னரே சுதேசிய ஆய்வாளர்கள் பலர் அதில் அக்கறை செலுத்தினர். என்றாலும், நீண்டகாலமாகவே சுதேசிய மேட்டுக்குடியினர், நாட்டார் வழக்காற்றியலைத் தீண்டப்படாததாகவே கருதிப் புறமொதுக்கி வந்தனர். ஆனால், நாட்டார் வழக்காற்றியலானது அப்புறமொதுக்கல்கள் யாவற்றையும் தகர்த்து, பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கும் துறையாக வளர்ச்சியடைந்ததோடு ஆய்வுகளை நிகழ்த்திப் பட்டங்களைப் பெறும் துறையாகவும் ஏனைய துறைகளைச் சார்ந்தோரும் ஊடாட வேண்டிய அறிவுப்புலமாகவும் விருத்திபெற்றுள்ளது. இவ்வாறு பல வளர்நிலைகளை அடைந்திருந்தாலும் தமிழ்நாட்டு நாட்டார் வழக்காற்றியல் புல வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம்.

தமிழ்நாட்டிலும் நம்நாட்டிலும் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய தொடக்கநிலைச் செயற்பாடுகள் நாட்டார் வழக்காறுகளைத் தொகுத்தல், வகைப்படுத்தல் என்ற நிலையிலேயே இருந்தன. அதன்பின்னரே தொடக்கநிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை பெரிதும் நாட்டார் வழக்காறுகளை அறிமுகப்படுத்துவதாகவும் விவரணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதாகவும் அமைந்திருந்தன. ஓரிரு ஆய்வுகளே அறிமுகப்படுத்தல் என்ற நிலையையும் தாண்டி, நாட்டார் வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டு சமூகப் பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்த முயன்றன. இதன் தொடர்ச்சியாகவே நாட்டார் வழக்காறுகளை அறிவியல் அடிப்படையில் நுணுக்கமாக ஆய்வுக்கு உட்படுத்துவதும் பிறதுறைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதும் பெருகின. அதனது அடுத்தகட்ட நகர்வாகவே பிற துறையினர் நாட்டார் வழக்காறுகளைத் தமக்கான தகவற் களஞ்சியமாகவும் ஆய்வுப்பொருளாகவும் கொள்ளும் நிலை தோன்றியது.

நாட்டார் வழக்காறுகளைத் தொகுத்தல், வகுத்தல், தொடக்கநிலை ஆய்வுகள் ஆகியன இரு நாடுகளிலும் சமாந்தரமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆனால், நாட்டாரியலாய்வின் வளர்ச்சிக் கட்டத்தில் தமிழ்நாடு எம்மைவிட, பல தூரம் முன்னேறிச் சென்றுவிட்டது. நாட்டார் வழக்காற்றியலின் பல துறைகள் சார்ந்த சேகரிப்பும் தொகுப்பும் ஆய்வும் இன்னும் எமது நாட்டில் பரவலாக மேற்கொள்ளப்படவில்லை. அதிகமான ஆய்வுகள் நாட்டார் பாடல்களையும் சமய மரபுகளையும் நிகழ்கலைகளையும் அடிப்படையாகக் கொண்டவையாகவே அமைந்துள்ளன. நாட்டார் வழக்காற்றியல் பற்றிய கோட்பாட்டியல் ரீதியிலான ஆய்வுகள் மிகக் குறைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் என்ற தனித்த அடையாளங்கொண்ட எந்தப் புலமையாளரும் இன்னும் எம்மத்தியில் மேற்கிளம்பவும் இல்லை. இந்நிலைக்கு அடிப்படைக் காரணம், எமது நாட்டில் நாட்டார் வழக்காற்றியல் தனித்த கல்வித்துறையாக மேற்கிளம்பாமையும் நாட்டார் வழக்காற்றியல் சார்ந்து இயங்கும் தனித்த நிறுவனங்கள் தோற்றம் பெறாமையுமாகும். எமது கல்விமுறையில் தமிழ்த்துறையோடும் இந்துநாகரிகத் துறையோடும் இணைந்த ஒரு துணைப்பாடமாகவே நாட்டார் வழக்காற்றியல் விளங்கிவருகின்றது. அத்துறைகளைச் சார்ந்தவர்களின் செயற்பாடுகளினாலேயே நாட்டார் வழக்காற்றியலுக்குச் சமூக ஏற்புடைமை கிடைத்ததோடு, நாட்டார் வழக்காற்றியல் பற்றிய புலமைத்துவ உரையாடல்களும் இடம்பெற்றன. இதில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பங்கும் பணியும் கனதியானவையாகும். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரான க. கணபதிப்பிள்ளையே இலங்கையில் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய புலமைத்துவ நிலையிலான உரையாடலைத் தொடக்கி வைத்து, அதனைப் பாடவிதானத்துக்குள்ளும் கொண்டுவந்தார். அதன் பின்னர் அவரது மாணவரான பேராசிரியர் சு. வித்தியானந்தன் இலங்கை நாட்டார் வழக்காற்றியலை இன்னொரு தளத்துக்கு நகர்த்தினார். அவரது செயற்பாடுகளினாலேயே நாட்டார் வழக்காற்றியலுக்கும் நாட்டுப்புற கலைஞர்களுக்கும் சமூகத்தில் மிகுந்த அந்தஸ்து கிடைத்ததோடு நாட்டார் வழக்காற்றியல் குறித்த விழிப்பும் அக்கறையும் பெருகின. அதன் தொடர்ச்சியைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இற்றைவரை பேணிவருகின்றது. தமிழ்த்துறையின் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு நாட்டார் வழக்காற்றியல் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டுவருவதோடு அத்துறைசார்ந்த ஆய்வுகளையும் தமிழ்த்துறை ஊக்கப்படுத்தி வருகின்றது. அதிகமான இளங்கலை மாணவர்களும் முதுகலை மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வாளர்களும் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வுகளை நிகழ்த்தி தமிழ்த்துறையில் பட்டம் பெற்றுள்ளனர். இத்தகையச் செயற்பாட்டின் ஒரு வெளிப்பாடாகவே சென்ற வருடத் தமிழியல் கருத்தரங்கம், 'புதிய நோக்கில் நாட்டார் வழக்காற்றியல்' என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியலைச் சரியான திசையில் வளர்த்தெடுக்கும் முகமாக காலத்துக்குக் காலம் வெவ்வேறு அமைப்பினரால் பல ஆய்வு மாநாடுகள் நடாத்தப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 1980ஆம் ஆண்டு நடாத்திய இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் கருத்தரங்கும், இந்துசமய, கலாசார அலுவல்கள் அமைச்சு 1993ஆம் ஆண்டு நடாத்திய தமிழ் நாட்டார் வழக்காற்றியல் கருத்தரங்கும், வடக்கு-கிழக்கு கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு 2000ஆம் ஆண்டு நடத்திய நாட்டார் இலக்கியக் கருத்தரங்கும் தனித்துவம் மிக்கவையாகும். அம்மாநாடுகளால் நாட்டார் வழக்காறுகள் குறித்த விழிப்பும் தேடலும் பெருகியதோடு புதிய நோக்கினாலான ஆய்வுகளும் வெளிவரத்தொடங்கின. என்றாலும், குறிப்பிட்ட காலத்துக்குப்பின் அவை மீண்டும் தேக்கநிலை அடையத்தொடங்கின. இந்நிலையை மாற்றி இலங்கைத் தமிழ் நாட்டாரியல் ஆய்வுப் புலத்துக்குப் புத்தொளியைப் பாய்ச்சுவதை இலக்காகக் கொண்டே தமிழ்த்துறையினால் இக்கருத்தரங்கம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நோக்கினை எய்துவதற்காகத் தமிழ்நாட்டிலிருந்து சிறப்பு ஆய்வாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆறு. இராமநாதன், தே. லூர்த்து போன்ற மூத்த தலைமுறையினருக்கு அடுத்து தற்காலத்தில் பரவலாக அறியப்பட்ட நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களுள் ஒருவரான பேராசிரியர் ச. பிலவேந்திரனை மாநாட்டுப் பேருரையினை நிகழ்த்துவதற்காக அழைத்திருந்தோம். 'தமிழ்ச் சிந்தனை மரபும் நாட்டார் வழக்காற்றியலும்' என்ற அவரது பேருரை கருத்தரங்கின்போது நூலாகவும் வெளியிடப்பட்டது. அதன் விரிவாக்கப்பட்ட பதிப்பு இந்நூலில் இடம்பெறுகின்றது.

ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் பெரிதும் இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியலை அடிப்படையாகக் கொண்டவையாகவே அமைந்திருந்தன. அக்கட்டுரை களை மொத்தமாக நோக்கின், அவை மூன்று வகையான கட்டுரைகளாகவுள்ளன. ஒன்று, புதிய கோட்பாடுகளின் அடிப்படையில் நாட்டார் வழக்காற்றியலை ஆராய்தல், இரண்டு, இலங்கையின் வேறுபட்ட பிராந்தியங்களில் நிலவும் சடங்குகள் முதலிய வழக்காறுகளைத் தொகுத்தல், மூன்று, இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பற்றி இடம்பெற்றுள்ள ஆய்வுகளை மதிப்பிடுதல். இப்பல்வகையிலான ஆய்வுகளும் இலங்கையில் இன ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் வேறுபட்டமைந்துள்ள தமிழ் நாட்டார் வழக்காற்றியலை வரையறைகளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அக்கட்டுரைகளின் தொகுப்பாகவே இந்நூல் அமைகின்றது. அண்மைக் காலத்தில் தமிழில் இடம்பெற்றுவரும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளோடு ஒப்பிடுகையில் இத்தொகுப்புச் சில போதாமைகளைக் கொண்டுள்ளது என்பது வெளிப்படை. குறிப்பாக, நாட்டார் வழக்காற்றியலின் எல்லாத் துறைகளையும் தழுவிய கட்டுரைகள் இத்தொகுப்பில் அடங்கவில்லை. எனினும், இலங்கைத் தமிழ் நாட்டாரியல் ஆய்வு வரலாற்றின் ஒரு தள வளர்ச்சி மாற்றத்தை இத்தொகுப்புச் சுமந்துள்ளது. இதுவரை இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நாட்டாரியல் ஆய்வுகளின் மதிப்பீடும் புதிய நோக்கிலான வாசிப்புக்களும் இந்நூலில் இடம்பெற்றிருப்பதானது எதிர்கால நாட்டாரியல் ஆய்வுகளுக்கான பாதைகளைத் திறப்பதாய் உள்ளது. அதனால், இக்கருத்தரங்கமும் கருத்தரங்க ஆய்வுத் தொகுப்பும் இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுப் புலத்தில் சலனங்களையும் மாற்று உரையாடல்களையும் ஏற்படுத்தும் என நம்புகிறோம்.

ஆய்வரங்கில் கட்டுரை சமர்ப்பித்து உரிய நேரத்தில் எழுத்துப் பிரதிகளைக் கையளித்த அனைத்து ஆய்வாளர்களுக்கும் எமது அழைப்பையேற்று மாநாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருரையினை நிகழ்த்திய பேராசிரியர் ச. பிலவேந்திரன் அவர்களுக்கும் எமது நன்றிகள். கருத்தரங்கத் தலைவராகவும், தண்பதத்தின் ஆலோசகராகவும் இருந்து கருத்தரங்கும் ஆய்வு மலரும் சிறப்பாக அமையத் துணைநின்ற பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களுக்கும் இந்த ஆண்டுக்கான கருத்தரங்கத் தலைவர் கலாநிதி திருமதி எஸ். ஆர். தேவர் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இக் கருத்தரங்கினை நடாத்துவதற்கு அனுமதியளித்து, கருத்தரங்கில் கலந்து சிறப்பித்த பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் உபுல் பி. திசாநாயக்க அவர்களுக்கும் பிரதித் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.எல். விஜேவீர அவர்களுக்கும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ஓ.ஜி. தயாரத்ன பண்டா அவர்களுக்கும் எமது நன்றிகள். கருத்தரங்கம் சிறப்பாக இடம்பெறுவதற்கும் கருத்தரங்கத் தொகுப்பான தண்பதம் வெளிவருவதற்கும் காலாக அமைந்த கருத்தரங்க அமைப்புக் குழுவினரான தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் அனைவருக்கும் ஒத்துழைப்பு வழங்கிய மாணவர்களுக்கும் நூலினைச் சிறப்பாகப் பதிப்பித்துதவிய குமரன் புத்தக இல்லத்துக்கும் எமது நன்றிகள்.

**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**<br>
**எம்.எம். ஜெயசீலன்**<br>
(கருத்தரங்க இணைப்பாளர்கள் 2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. தமிழ்ச் சிந்தனை மரபும் நாட்டுப்புறவியலும் 1
- *பேராசிரியர் ச. பிலவேந்திரன்*

2. மொழியியல் நோக்கில் நாட்டார் இலக்கியங்கள் 19
- *பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்*

3. அழகியல் நோக்கில் நாட்டுப்புற இலக்கியம் 24
- *பேராசிரியர் துரை. மனோகரன்*

4. சமுதாயவியல் நோக்கில் நாட்டார் வழக்காற்றியல் 30
- *திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்*

5. அமைப்பியல் நோக்கில் நாட்டார் வழக்காற்றியல் 36
- *கலாநிதி ம. நதிரா*

6. நாட்டார் வழக்காற்றியலும் நவீனமயமாதலும் 49
- *திருமதி தேவகுமாரி சுந்தரராஜன்*

7. வரலாற்றுப் படிமமாக நாட்டார் வழக்காறுகள் 57
- *கலாநிதி க. இரகுபரன்*

8. ஆவிகளின் உலகம்: நிலம், பொழுது, ஆள் பற்றிய பண்பாட்டுக் கருத்தமைவுகள் 65
- *பேராசிரியர் ச. பிலவேந்திரன்*

9. பல்லினப் பண்பாட்டுச் சூழலில் நாட்டார் வழக்காற்றியல் 76
- *கலாநிதி அ.ப.மு. அஷ்ரஃப்*

10. போர்க்காலச் சூழலில் நாட்டார் கலை இலக்கியங்கள்: வடபுல வலிகாமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 83
- *திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்*

11. நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும்: கிழக்கிலங்கையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 97
- *கலாநிதி வடிவேல் இன்பமோகன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மலையகத் தமிழரின் நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும் 106
- கலாநிதி எஸ்.ஆர். தேவர்

13. அரபு முஸ்லிம் உலகில் தொன்மை அரங்கக் கலை மரபுகள் 115
- பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்

14. ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வு மற்றும் தொகுப்பு முயற்சிகள் 122
- பேராசிரியர் கி. விசாகரூபன்

15. வன்னிப் பிரதேச நாட்டார் வழக்காற்றியலைச் சூழமைவுபடுத்துதல்: நடைமுறைகளும் பிரச்சினைகளும் 134
- திரு. க. அருந்தாகரன்

16. கிழக்கிலங்கை நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள் 144
- பேராசிரியர் றமீஸ் அப்துல்லா

17. மலையக நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வு முயற்சிகள் 150
- திரு. வ. செல்வராஜா

18. ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் நாட்டார் பாடலின் செல்வாக்கு 162
- பேராசிரியர் செ.யோகராசா

19. கிராமியத்தெய்வ வழிபாட்டு முறையின் அடிப்படைகள் 174
- கலாநிதி முருகு தயாநிதி

20. நாட்டார் வழக்காற்றியலும் ஆவணப்படுத்தலும் 184
- திருமதி விஜிதா திவாகரன்

21. நவீன ஊடகத்தில் நாட்டுப்புறக் கலைகள் 189
- திரு. இரா. மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சிந்தனை மரபும் நாட்டுப்புறவியலும்

பேராசிரியர்ச. பிலவேந்திரன்

## முன்னுரை

தமிழ்ச் சிந்தனை மரபும் நாட்டுப்புறவியலும் என்று எடுத்துக் கொள்கிறபோது சிந்தனை மரபு என்பதனையும் நாட்டுப்புறவியல் என்பதனையும் வேறுபடுத்தியே பொருள்கொள்ள வேண்டியுள்ளது. ஏனென்றால், ஒரு சமூகத்தின் சிந்தனை மரபும் நாட்டுப்புறவியலும் ஒன்றே என்று பொதுப்படையாக எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் உண்டு. மனித சமூகம் கால வரலாற்று வெளியில் ஒரு திண்மையான (concrete) நிலப்பரப்பில் வாழ்ந்து வந்திருக்கிறது. இவ்வாழ்தல் கால வெளியில் பல்வேறு பட்டறிவுகளையும் அப்பட்டறிவுத் தொகுப்புக்களினூடாக அறிவு அல்லது சிந்தனையையும் அது உருவாக்கிக் கொள்கிறது. இவ்வறிவு மரபுகள் அல்லது சிந்தனைத் தொகுப்புகள் தொடர்ந்து கால வெளியில் பல்லாயிரம் தலைமுறைகளைக் கடந்து வருகிறபோது அவை அறிவுத் தொகுப்பாக, ஒரு சிந்தனை மரபாக அச்சமூகத்தில் நிலைபேறு கொள்கின்றன. இதனை வேறு வகையில் சொல்வதானால், இதனை ஒரு சமூகத்தின் பண்பாட்டு மரபு அல்லது நாட்டுப்புற வழக்காற்றுத் தொகுதி என்று சொல்லலாம். ஆக, நாட்டுப்புற வழக்காறுகள் ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்தச் சிந்தனை மரபினைக் கருத்தாக்கங்களாக உருத்திரட்டி வைத்திருக்கின்ற பண்பாட்டுப் பொதி எனலாம். இத்தகைய கருத்தாக்கங்கள் ஒரு நீண்ட கால வெளியினூடாகத் தொடர்ந்து பயணம் செய்கிறபோது மேலும் மேலும் பெற்றுக் கொண்ட புதிய புதிய அனுபவ அறிவுருக்களையும் சேர்த்து இணைத்துக்கொண்டு திரட்சியான வடிவமாகவும் இன்றைய நிலையில் எளிதான புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட குறியீடுகளாகவும் கெட்டித் தன்மையனவாகவும் மாறுகின்றன. இத்திரட்சியுற்ற அறிவறிவுக் கூறுகளை மீண்டும் கட்டுடைத்து அவற்றின் உட்பொதிவுகளை ஏரண வகையிலான (logical) பொருள்கோடலுக்கு உட்படுத்தும் செயல்பாடாக நாட்டுப்புறவியல் திகழ்கிறது. இவ்வகையில் நாட்டுப்புறவியல் ஒரு படிப்பு சார்ந்த ஆய்வுப் புலமாகப் பரிணமித்துள்ளது. இவ்வாய்வுப் புலமானது உலகந்தழுவிய அளவில் மக்கள் பண்பாடு சார்ந்த சிந்தனை மரபுகளை ஆய்வு செய்வதற்கெனப் பல உத்திகளையும் முறையியல் களையும் கோட்பாடுகளாக முன்வைத்துள்ளது. மேலும், நாட்டுப்புறவியல் படிப்பு பிற சமூக அறிவியல் துறைகளான சமூகவியல், தொல்லியல், மொழியியல், குறியியல், அமைப்பியல், உளப்பகுப்பாய்வியல் போன்றவற்றின் ஆய்வு அணுகுமுறைகளையும் உத்திகளையும் நாட்டுப்புறப் பண்பாட்டு மரபுகளை ஆய்வு செய்வதற்குப் பயன்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவு மரபும் தொடர்ச்சியும்: எழுத்து, சொல் மரபுகளின் ஊடாக

'தமிழ்ச் சிந்தனை மரபு' என்கிற தொடரை இங்கு நான் ஒரு விரிந்த பொருளில் பயன்படுத்துகிறேன். சுருக்கமாக, தமிழ்ச் சிந்தனை மரபு என்பது தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அறிவறிவு மரபு எனலாம். இந்த அறிவறிவு மரபு இரு தளங்களில் தமிழ்ச் சூழலில் இருந்துவருவதை நாம் கூர்ந்து கவனிக்கத் தவறியுள்ளோம் என்பதை நான் சற்றுக் கவனமாகவே இங்குக் குறிப்பிட விரும்புகிறேன் அல்லது, இவற்றை நாம் அவ்வாறே கவனித்து வந்துள்ளோம் எனக் குறிப்பிடுவோமானால் இவ்விரண்டையும் ஒருங்கிணைத்துக் கொண்டு நாம் இதுவரை செய்துள்ள ஆய்வுகள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளனவா என்கிற வினாவையும் எழுப்ப விழைகிறேன். தமிழ்ச் சிந்தனை மரபு ஒரு தளத்தில் நாட்டுப்புறப் பண்பாட்டு மரபு அல்லது நாட்டுப்புற வழக்காறுகள் ஆகும். இம்மரபு பெரும்பான்மையும் எழுத்தாகப் பதிவு செய்யப்படாத வாய்மொழி மரபையும் (oral tradition) செய்மரபையும் (performing tradition) இணைத்துக் குறிக்கின்ற 'சொல் மரபு' என்று குறிப்பாகச் சுட்டலாம். அதேவேளையில் தமிழ்ச் சமூகப் பரப்பு தமது வாழ்வனுபவங்களின் வரலாற்றையும் சிந்தனைக் கருத்தாக்கங்களின் வரலாற்றையும் எழுத்துக்களாகவும் பதிவு செய்துள்ளது. இவ்எழுத்திலக்கியங்கள் தமிழ்ப் படிப்புலகில் வெறும் மொழி, வரலாறு, இலக்கணம், அழகியல், அறம், வாழ்வியல் போன்றன சார்ந்தவையாக மட்டுமே இதுவரை கவனிக்கப்பட்டு வந்துள்ளன. ஆக, ஒரு சமூகம் எழுத்தல்லாத சொல் மரபையும் எழுத்தாக்கம் பெற்ற இலக்கியங்களையும் ஒருங்கே பெற்றிருந்தும் இவ்விரண்டையும் ஒருமித்து வைத்து அச்சமூகத்தின் முழுதளாவிய பரிமாணத்தைக் கவனிக்கத் தவறியுள்ளோம் என்று கூறுவது பிழையாகாது எனக் கருதுகிறேன். இந்த நோக்கில் தான் தமிழ்ச் சிந்தனை மரபு என்பதனைச் சொல் மரபு, எழுத்து மரபு ஆகியவற்றின் கூட்டுத் தொகையாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை எழுகிறது.

தமிழின் எழுத்து மரபுகள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வந்திருந்த போதும் அவை குறிப்பிடும் பல்வேறு செய்திகளின் உள்ளார்ந்த, விரிந்த அல்லது மிகச் சரியான பொருள் தளங்கள் மீட்டெடுக்கப்பட்டு விளக்கப்படாமல் உள்ளன அல்லது, இவற்றை மீட்டெடுக்கத் தவறியுள்ளோம் எனலாம். இந்த விடுபடல் அல்லது குறையை எழுத்தல்லாச் சொல் மரபின் பொருள் அடுக்குகளிலிருந்து பெற முயற்சி செய்யும் போக்கையும் நாம் எடுத்தோம் இல்லை. அதேபோன்று சொல் மரபின் திரட்சியை அல்லது பொருண்மைத் தளங்களைப் புரிந்துகொள்வதற்கு எழுத்து மரபின் துணையைக் கோரினோம் என்பதும் இல்லை. இலக்கியவியலையும் அது சார்ந்த பிற துறைகள் சார்ந்த கோட்பாடுகளையும் எழுத்திலக்கியங்களுக்கும் நாட்டுப்புறவியல் கோட்பாடுகளைச் சொல் மரபிற்கும் பயன்படுத்தும் ஆய்வுப்போக்கையே நாம் பெரிதும் கைக்கொண்டுள்ளோம். இவ்விடத்தில் எழுத்து மரபின் ஆழ்தளங்களுக்குள் செல்வதற்குச் சொல் மரபையும் சொல் மரபின் ஆழ்தளங்களுக்குள் செல்வதற்கு எழுத்து மரபையும் பயன்கொள்ளும் தேவையைப் புரிந்துகொள்ள வேண்டும். இவையிரண்டுக்கும் இடையிலான அறிவுப்பூர்வமான உறவுத் தளங்களை அகழ்ந்தெடுக்கிற போது இவையிரண்டும் வளம் பெறுவதோடு இலக்கியவியல், நாட்டுப்புறவியல் என்னும் துறை சார்ந்த ஆய்வியல்களுக்கும் பெரிதும் பயன்விளையும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேற்கூறிய நோக்கில் எழுத்து மரபு வெளிப்படுத்தி நிற்கும் பற்பல கருத்துத் தளங் களின் உள்ளார்ந்த பொருண்மை அடுக்குகளை அகழ்ந்தெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொருண்மை அடுக்குகள் தமிழ்ச் சமூக அறிவு மரபின் பரிமாணங்களை வெளிக் கொணர்வதோடு தமிழ்ப் பண்பாட்டு மரபுகளின் இது வரையில் நாம் விளங்கிக் கொள்ளாத அல்லது விளங்கிக் கொள்ளத் தவறிய புள்ளிகளின் பரிமாணங்களையும் வெளிக்கொணரும். அதேபோன்று சொல் மரபின் கருத்துத் தளங்கள் எழுத்து மரபு பூடகமாகவும் சன்ன மாகவும் குறித்து நிற்கும் பொருண்மை அடுக்குகளைப் புரிந்துகொள்ளவும் துணைபுரியும். எழுத்து மரபும் சொல்மரபும் இவ்வகையில் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு தமிழ் அறிவு மரபின் ஆழ்தளங்களை உணர்த்தி நிற்பதை விளங்கிக்கொள்ளவியலும். இவ்வகையில் தமிழ் எழுத்து மரபு முன்வைத்துள்ள மூன்று முகாமையான கருத்தாக்கங்களாக நாம் சிலவற்றைச் சுட்டிக்காட்டலாம். அவை:

1. பிரபஞ்சத்தின் மூல ஆதாரக் கூறினை (essence of cosmos) முதற் பொருள் என்றும் அது நிலம், பொழுது ஆகும் என்றும் சுட்டியுள்ளமை

2. பிரபஞ்சத்தில் மனித சமூக வாழ்தலின் கால வரலாற்றுப் பரிணாமத்தைக் களவு என்றும் கற்பு என்றும் நிரல்படுத்தியுள்ளமை.

3. சமூக / தனி மனித வாழ்வுச் செயல்பாட்டின் மூல ஆதாரத்தை அகம் என்றும் புறம் என்றும் சுட்டியுள்ளமை

இம்மூன்றும் மேலோட்டமான தளத்தில் மிக எளிமையானவையாகத் தோன்றலாம். ஆனால், இவற்றின் அடியாழத்தில் தமிழ்ச் சமூகம் ஒட்டுமொத்தமாகத் தமக்குள் உருத் திரட்டி வைத்திருக்கின்ற அறிவின் அறிவியலைக் காணவியலும். நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகளை உற்று நோக்கி அறிகிறபோது இக்கூறுகளின் இயங்கு தளம் அல்லது இயங்கு புள்ளியாக இந்த முகாமையான கருத்தாக்கங்கள் இருப்பது புலனாகும்.

## நிலமும் பொழுதும் நாட்டுப்புறப் பண்பாடும்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தின் தனித் தன்மைகளை ஒட்டி ஐவகையாக நிலம் பாகுபடுத்தப்பட்டிருப்பதை இலக்கியங்கள் வழி அறியலாம். எனினும், இது நுண்ணிய தளத்தில் வேறொரு வகையில் பகுக்கப்பட்டிருப்பதைப் பண்பாட்டுச் செயல்பாட்டு மரபுகள் உணர்த்தி நிற்கின்றன. இந்த நுண்ணிய வேறுபாட்டினைச் சமூகம் தனது அன்றாடச் செயல்பாடுகளை நிகழ்த்தும் முறையிலிருந்து புரிந்துகொள்ளலாம். நமது குடும்ப அமைப்புமுறை, மனித உறவுச் செயல்பாடுகள் ஆகியவை ஒரு நிலையான 'வீடு' என்னும் அமைப்பிற்குள் அமைவுறப் பெற்றுள்ளன. உணவுத் தேடல், உற்பத்தி செய்தல் போன்ற பொருளியல் செயல்பாடுகளைப் பிறிதோர் இடத்தில் செயல்படுத்துகின்றன. மனிதர்கள் குழுவாக, சமூகமாக ஓரிடத்தில் குழுமி இணைந்து வாழ்வது 'நாடு' என்னும் களமாக அமைய அதன் பொருளியல், போரியல் நடத்தைகள் 'காடு' என்னும் களமாக அமைகின்றன. குழுமமாகவும், சமூக அமைப்பு முறை சார்ந்தும் நாடு சார்ந்த களத்தில் அது அக வாழ்வாக அமையப் பெறுகிறது. இதனையே பண்பாட்டு வாழ்வு என்கிற வகையில் செயற்கையாக மனித சமூகம் தொடர்ந்து உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இவ்வகையில் நாடு என்பது செயற்கையான பண்பாட்டுக் களமாகக் குறியீடு பெறுகிறது.

இயற்கையாக அமைந்துள்ள காட்டுக் களம் உணவுத் தேவைக்கான போராட்டக் களமாக அமைவதோடு இக்களத்தில்தான் மனிதன் பிற உயிர்களாகிய தாவரம், விலங்குகள், மலைகள், புதர்கள், நீர் நிலைகள் போன்ற இயற்கையோடும் உறவாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. ஆக நாடு என்பது சமூகப் பண்பாட்டுக் களமாயும் காடு என்பது இயற்கைக் களமாயும் குறியீடு பெறுகின்றன. சமூகம் தொடர்ந்து இவ்விரு களங்களோடும் தொடர்பு கொள்வதோடு இவ்விரண்டுக்குள்ளும் நடமாடவும் செய்கிறது. இவ்விரு களங்கள் அடிப்படையில் எதிரும் புதிருமான தன்மைகளைக் கொண்டிருப்பதால் எதிரும் புதிருமான பொருண்மைகளையும் குறியீடு செய்பவையாகவும் அமைகின்றன. எதிரும் புதிருமான இருவேறு களங்களை ஒரு மெல்லிய இடப்பரப்பு அவற்றுக்கிடையே நின்று பிரித்து வைப்பதாகவும் உள்ளது. இது எல்லைக் களம் எனப்படும். சிற்றூர்ப் புறங்களின் எல்லைகள் எல்லைக் கற்களாலும் எல்லைக் கோயில்களாலும் குறியீடு செய்யப்பட்டிருப்பதை இவ்வாறுதான் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழகச் சிற்றூர்ப் புறங்களின் எல்லைகளில் இளவட்டக்கல் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

செயற்கையான நாட்டுக் களம் மனித சமூகச் குழுக்களுக்கான இடமாகக் குறியீடு பெறகிறபோது இயற்கையான காட்டுக் களம் இயற்கை, உயிர், உயிர் ஆதாரங்கள் (நீர், தாவரம், விலங்குகள்), இயலிகந்த ஆற்றல்கள் (தெய்வங்கள்) ஆகியன நிலைகொள்ளும் இடமாகக் குறியீடு பெறுகின்றது. இயல்பூக்கமாக, தன்னெழுச்சியாக எழும் காதலும் அதன் செயல்பாடான புணர்தலும் தொடக்க நிலையில் களவு ஒழுக்கம் எனப்பட்டுக் காடு சார்ந்த களங்களிலேயே நிகழ்த்தப்படுவதாக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. தலைவன், தலைவி ஆகியோர் துடிப்பாகச் செயல்படும் இடங்களாக மலை முகடுகளும் அருவிகளும் நீரோடைகளும், புலி, யானை, நாய்கள் நடமாடும் புதர்க் காடுகளும், தினைப்புனங்களும், இவ்விடங்களிலேயே அமைந்துள்ள ஆயங்களும் அமைவதாகக் குறிப்பிடப்படுவதை இலக்கியங்கள் வழி அறிந்துகொள்ளலாம். இக்களவு ஒழுக்கம் நெறிமுறைப்படுத்தப்பட்டு மணம், குடும்பம் என்பதாகப் பண்படுத்தப்பட்டுக் கற்பு ஒழுக்கமாகச் செயற்கையான நாட்டுக் களத்திற்குள் இடம் பெயர்க்கப்படுவதையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

இயற்கைச் செயல்பாட்டு வெளிக்கும் பண்பாட்டுச் செயல்பாட்டு வெளிக்கும் இடையில் ஊடாடும் எல்லைக்களச் செயல்பாட்டினையும் தமிழ்ப் பரப்பில் காணலாம். இயல்பூக்க எழுச்சியோடும் சீரற்ற வகையிலும் அமையும் களவுச் செயல்பாட்டைச் சமச்சீர் செய்து அதனைச் சமூகப் பண்பாட்டின் கற்புச் செயல்பாடாக மடைமாற்றி மணம், குடும்பம் என்கிற பண்பாட்டு நிறுவனத்துக்குள் கொண்டு சேர்க்கிற இடையீட்டாளர்களாகத் தோழி, செவிலி, பாங்கன் ஆகியோர் உள்ளனர். இவர்களுடைய களவு வாழ்க்கை, குடும்பம், உறவு பற்றித் தெளிவான குறிப்புகள் இல்லாமையே இவர்களைச் செயலூக்கம் கொண்ட எல்லைக்கள மாந்தராகிய இடையீட்டாளர்கள் என்று கருத இடமளிக்கிறது. இது போன்று பல்வேறு செய்திகள் தமிழ்ச் சிந்தனை மரபின் இடம் குறித்த கருத்தாக்கங்களை விளக்கும் கூறுகளாக எழுத்துப் பனுவல்களில் இடம்பெற்றுள்ளன.

தமிழரின் 'இடம்' குறித்த கோட்பாட்டைச் சரியாக விளக்கக் கூடியதாக நாட்டுப்புறச் சமயப் பண்பாட்டுச் செயல்பாடுகள் விளங்குவது குறிப்பிடத்தக்கது. பொதுவாகச் சமயம் என்பது திண்மையான மனிதருக்கும் அல் - உருவமான (abstract) இயலிறந்த ஆற்றலுக்கும் இடையிலான இடையுறவு என்பதனை எல்லாச் சமய மரபுகளும் உணர்த்துகின்றன. இது பொழுது என்கிற அல்லது திண்மையான மெய்ம்மைக்கும் திண்மையற்ற அல் - உருவமான மெய்ம்மைக்கும் இடையிலான உறவு அல்லது கருத்துப் பரிமாற்றம் ஆகும். மனித சமூகம் வாழும் இடப்பரப்பு திண்மையானது இதனை நாட்டுக் களம் (சமூகக் களம்) என ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். மனித சமூகம் இயலிறந்த அல் - உருவமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ம்மையை, தான் வாழ்வதற்குத் தேர்ந்தெடுக்காத இயற்கை சார்ந்த காட்டுக் களத்திற்குள் இடம் அமர்த்துகிறது. சமய வழிபாடுகளையும் சடங்குகளையும் இக்காட்டுக் களத்தில் தான் சமூகம் நிறைவேற்றுகின்றது. அல் - உருவமான மெய்ம்மையான இயலிறந்த ஆற்றலைக் காணவும், அதற்குச் சடங்குகள் செய்யவும் இயற்கையான காட்டுக் களத்திற்குள் செல்லும் சமூகம் தனது புறவடிவ இயல்புகளையும் காட்டுக் களத்துக்கான ஒன்றாக மாற்றிக் கொள்கிறது. இவ்வாறான கருத்துப்படிமங்களை எழுத்து மரபுகள் சுட்டும் கானமர் செல்வி, காடு கிழாள், அணங்கு, சூர், சூரர மகளிர் போன்றவை உறையும் இடங்களிலும் சாலினி வாக்குரைத்தல், கொற்றவை வழிபாடு, பலியிடல், முருகு அயர்தல், வேலன் வெறியாட்டுப் போன்ற நிகழ்த்துதல் வெளிகளிலும் நாம் காணவியலும்.

மேலும், சில நிலையான, இயற்கையான, காடு சார்ந்த அமைப்புகளை மனித சமூகத் தீண்டல் அற்ற இடமாகவும் மிகைப் புனித இடமாகவும் மாற்றியுள்ளமையைச் சாமித் தோப்புகள், கோயில் காடுகள் (sacred groves), புனித உலா இடங்கள் போன்றவற்றின் அமைப்பியல்புகளை உற்றுநோக்கும்போது தெளிவாகும். கோயில்களின் உள்ளே அமைக்கப்படும் கருவறையானது காடுசார் களத்தின் குறியீட்டுப் பண்பைத் தீவிரமாக உணர்த்தக்கூடியது. கோயிலின் கருவறையானது முற்றிலும் இருள் சூழ்ந்த இடமாகவே வைக்கப்படுகிறது. இங்கு பெரும்பாலும் அதிக ஒளி உமிழும் மின்விளக்குகள் பொருத்தப் படுவதில்லை. சிறு அளவில் ஒளி தரும் ஓர் அகல் விளக்கு மட்டுமே இடம் பெறுகிறது. தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்ட அல்லது அதன் குறியீட்டு வடிவப் பொருள்கள் (கற்சிலை, மரச்சிலை, சாமிப் பெட்டி போன்றவை) மட்டுமே கருவறைக்குள் இடம்பெறு கின்றன. இங்கு இருக்கும் தெய்வச் சிலை 'மூலவர்' என்றழைக்கப்படுகிறது. கோயில் திருவிழாச் சடங்கின் ஒரு பகுதியாக, தெய்வச்சிலை வீதி உலா எடுக்கப்பட்டு ஊருக்குள் தேரில் வைத்துக் கொண்டுவரப்படும்போது இந்த மூலவர் சிலை கருவறையிலிருந்து வெளியில் எடுத்து வரப்படுவதில்லை மாறாக, இதற்கென வேறோர் உருவக் குறியீடு (சிலை / கரகம்) 'உற்சவர்' என்கிற பெயரில் எடுத்துவரப்படுவதுண்டு. கருவறைக்குள் பொது ஆட்கள் யாரும் நுழைவதில்லை. அதற்கென உள்ள பூசாரிகளே கருவறைக்குள் இருந்து வழிபாடு நிகழ்த்துகின்றனர். கோயிலின் கருவறை மிகு புனிதம் நிறைந்த களமாகவே குறியீடு பெறுகின்றது. இந்த வகையில் கோயில் கருவறையானது காடுசார் களத்தின் குறியீட்டுப் பொருண்மையை உள்ளடக்கியதாக விளங்குவதைப் புரிந்து கொள்ளலாம்.

சமயப் பண்பாட்டில் முழுமையாகத் தெய்வநிலை அல்லாததும் மனித நிலை அல்லாததுமான சில அல் - உருவமான மெய்ம்மைகளும் குறிப்பிடப்படுகின்றன. இவையே ஆவி, பேய், முனி, காத்து, கருப்பு என்பவை ஆகும். இவை திண்மையானவையும் அல்லாத மனிதரும் அல்லாத முழுமையான தெய்வ ஆற்றல்களாகவும் அல்லாத இடைப்பட்ட நிலையைப் பெற்று இருப்பதால் இவை மீயியல் ஆற்றல்கள் (liminal spirits) எனப்படுகின்றன. இந்த மீயியல் ஆற்றல்கள் தொடர்ந்து மனிதரைத் (குறிப்பிட்ட சிலரை) தொடரும், அச்சுறுத்தும் பண்பு கொண்டவை. இந்த மீயியல் ஆற்றல்களைச் சமூகம் நாட்டுக் களத்திற்கும் காட்டுக் களத்திற்கும் இடைப்பட்ட அந்தர வெளியான எல்லைக் களங்களிலேயே இடம் அமர்த்துகின்றது.

காட்டுக்களம், நாட்டுக்களம் ஆகியவற்றுக்கு நடுவே அமைந்து அவையிரண்டையும் குறியீட்டு முறையில் பிரித்து நிற்பதே எல்லைக் கள வெளியாகும். இவ்வெல்லைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தின் இருப்பு சமூகப் பண்பாட்டுச் செயல்பாடுகள், சடங்கியல் நிகழ்த்துதல்கள், கருத்துருவ நிலைகள் ஆகியனவற்றில் வெளிப்படுவதை அறியலாம். பொதுவாக, ஆரத்திச் சடங்குகள், வீட்டு முற்றம், ஊரின் எல்லை போன்ற எல்லைக் களங்களில் வைத்தே நிகழ்த்தப்படுகின்றன. புது மணத்தம்பதிகள், பூப்படைந்த கன்னியரை பூப்புனித நீராட்டுச் சடங்கு முடிந்து வீட்டுக்குள் ஏற்கும் முன்பாகவும் ஆரத்திச் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. புதிதாக வாங்கிக்கொண்டு வரப்படும் பசுவைக் கூட வீட்டு முற்றத்தில் ஓர் உலக்கையைக் குறுக்காகக் கிடத்தி அதனைத் தாண்டி வரச் செய்தே வீட்டுக்குள் அழைத்து வருவர். ஓர் ஊருக்குள் புதிதாக வரும் அரசியல் தலைவர், வேற்றுநாட்டு விருந்தினர் போன்றோரையும் கூட ஊரின் எல்லையில் ஆரத்திச் சடங்கு செய்து ஊருக்குள் (நாட்டுக் களத்திற்குள்) அழைத்து வரும் செயல்கள் இன்றும் நடைமுறையில் உண்டு. இந்த எல்லைக் களம் பல வேளைகளில் திண்மையான ஒரு மெல்லிய இடப்பரப்பால் அடையாளப்படுத்தப்பட்டாலும், வேறு பல சூழல்களில் அல்உருவ வெளியாகவும் கருத்தமைவு செய்யப்பட்டதாகவும் இருக்கிறது. சான்றாக, நாட்டுப்புறச் சமயப் பண்பாட்டு மரபு 'இடம்' என்பதனை வேறொரு பரிமாணத்திலும் கருத்தமைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இடம் என்பதனைக் கிடைமட்டத் தளத்தில் இயங்கும் ஒன்றாகவே சிந்தித்து விட்ட நமக்கு அது செங்குத்துத் தளத்திலும் இயங்கக்கூடியது என்பதை அறியும்போது தமிழ்ச் சிந்தனை மரபின் ஆழம் புலப்படுகிறது. தெய்வங்களுக்கான மூல இருப்பிடத்தைக் காடு சார்ந்த இயற்கைக் களம் குறியீட்டாக்கம் செய்தாலும் அது செங்குத்துத் தளத்தில் பூமிக்கு வெகு அப்பால் மேலேயிருக்கும் வானுலகையும் குறியீட்டாக்கம் செய்கிறது. மலை முகடுகள், மேலிருந்து கீழாகச் சரியும் அருவிகள், காணவியலாத உயர்ந்த புதர்க் காடுகள், அவற்றுக்குள் மூடுண்டு கிடக்கும் நீர்ச்சுனைகள் ஆகியவை தெய்வங்களுக்கான மூல இருப்பிடங்களாகச் சமூக மனங்களில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தெய்வங்களுக்கான திருவிழாச் சடங்குகள் குறிப்பிட்ட தெய்வத்தை அதன் மூல இடத்தில் இருந்து குறியீட்டு வகையில் இடம்பெயர்த்து (செங்குத்து அச்சில்) வானுலகில் இருந்து கீழுலகிற்கும் (கிடைமட்ட அச்சில்) இயற்கை சார்ந்த காட்டுக் களத்திலிருந்து சடங்குக் குறியீடுகளால் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ள நாட்டுக் களத்திற்குள்ளும் அழைத்து வரும் செயல்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. தொன்மையான முருகன் கோயில்கள் மலை முகடுகளில் பள்ளி கொண்டிருப்பது இதனை உறுதிப்படுத்தும். வழிபாட்டுச் சடங்குகளில் இடம்பெறும் தெய்வமுறும் (ritual possessions trances) நிகழ்வுகள் அல் - உருவமான தெய்வ ஆற்றல்கள் தூலமான மனித உடல்களுக்குள் மனிதரின் (செங்குத்து அச்சில்) தலை வழியாக இறங்கி உறைவதை நாம் காணவியலும். தெய்வமுறுதல் நிகழ்த்துதலின் இறுதியில் அவ்வாற்றலை மனித உடலிலிருந்து வெளியேற்றி அதன் மூல இருப்பிடத்திற்கு அனுப்பும் விரட்டும் நிகழ்வு 'மலையேற்றுதல்' எனப்படுகிறது.

அதேபோன்று பேய் பிடித்து ஆடுபவர்களின் உடல்களிலிருந்து வேண்டப்படாத ஆவிகளை வெளியேற்றுவதற்கு அல்லது மலையேற்றுவதற்காக அவர்களின் தலைமயிரை அறுத்து அதனைக் காடு சார்ந்த வெளியில் மரத்தின்மேல் ஆணி வைத்து அடித்து நிலைப்படுத்தும் செயலும் இக்கருத்தினை வலுச் செய்வதாக உள்ளது. எல்லாப் புனிதத் தலங்களும் மனித வாழ்விடங்களுக்கு அப்பால் வெகு தொலைவிலமையும் காடுகளிலும் வனாந்தரங்களிலும் மலை முகடுகளிலுமே அமைந்துள்ளன. இவ்விடங்களில் இயற்கையான நீர்ச்சுனை, நீரூற்று, நீர் ஓடை இருப்பது கூடுதல் பொருண்மையைத் தருகிறது. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் 'இடம்' என்பது பற்றிய தமிழ்ச் சிந்தனை ஓட்டத்தைத் தெள்ளிதின் விளக்கக் கூடியன.

தமிழ்ச் சமூகத்தின் சமயப் பண்பாட்டில் இடம் குறித்த மூலப்பழவடிவக் கருத்தமைவு மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. நாட்டுப்புறச் சமயம், தெய்வங்கள் பற்றிய ஆய்வுகளில் 'இடம்' குறித்த இத்தமிழ்க் கருத்தோட்டம் பெரும்பாலும் கவனம் பெறாதே போயுள்ளது. என்றாலும், இக் கருத்தோட்டத்திற்கு முரணான செய்திகளோ தரவுகளோ விளக்கங்களோ இவ்வாய்வுகளில் இடம் பெறவில்லை என்பது சற்று ஆறுதல் அளிக்கக்கூடியதாகும். தெய்வங்களை வகைப்படுத்துவதில் பல்வேறான முறைகள் தமிழ்ச் சமய ஆய்வுகளில் பின்பற்றப்பட்டுள்ளன. தொடக்கநிலை ஆய்வுகளான பர்த்தலோமியோ சீகன்பால்கு (1869), ஹென்றி ஒயிட்ஹெட் (1921), தியோடர் எல்மோர் (1915) தொடங்கி லூயி துய்மோன் (1986), துளசி இராமசாமி (1985) என இன்றைய ஆய்வுகள் வரையிலான ஆய்வுகளைச் சான்றாகக் குறிப்பிடலாம். மாசிலாமணி மேயர் (2004) இடம் சார்ந்த இந்தக் கருத்தாக்கத்தை ஒட்டித் தெய்வங்களைக் காட்டுத் தெய்வங்கள் என்றும் ஊர்த்தெய்வங்கள் என்றும் பிரித்து வகைப்படுத்துவது சிறப்பாகச் சுட்டத்தக்கது.

முதற்பொருளின் இரண்டாம் கூறான பொழுது என்பதனைத் தமிழ்ச் சிந்தனை மரபு இயல்புப் பொழுது, இயல்பல்லாப் பொழுது என வகைமைப்படுத்தியுள்ளது. சமூகத்தின் பண்பாட்டுச் செயல்பாடுகளான சடங்குகள், விழாக்கள், வழிபாட்டு நிகழ்த்துதல்கள் இயல்பல்லாப் பொழுதுகளில் நிகழ்த்தப்படுகின்றன.

எழுத்தல்லாச் சொல் மரபின் சடங்கு, நம்பிக்கைப் பனுவல்கள், இடம், பொழுது என்பனவற்றின் உள்ளார்ந்த பொருள் பொதிவுகளை மிகத் துல்லியமாகவும் கடுத்தமாகவும் தமக்குள் இயைபுபடுத்தி இருப்பதையும் நாட்டுப்புறவியல் பார்வையில் விளங்கிக் கொள்ளவியலும். வாழ்க்கை வட்டச் சடங்குகள் ஒவ்வொரு தனியுடலின் தொடர் வாழ்பருவப் பயணத்தில் ஏற்படும் மாற்றங்களான குழவி, சிறுவர், பூப்பு, சூலுறுதல், தாய்மை, இறப்பு என்கிற உடலியங்கியல் வளர்சிதை மாற்றங்களைச் சமூகம் இடம் சார்ந்ததும் பொழுது சார்ந்ததுமான குறியீட்டாக்கங்களால் சடங்கு வயப்படுத்துகின்றது. ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு இடம் பெயர்தலுக்கும் இடைப்பட்ட நிலையினை 'மீயியல்' நிலையினதாக்கிக் குறியீட்டாக்கம் செய்கின்றன. இது 'கடந்து போதல்' (transition) என்றும் இதுவுமல்லாத அதுவுமல்லாத இதற்கும் அதற்கும் இடையிலான மீயியல் தன்மை என்றும் முறையே வான் கென்னப்பும் (1969) விக்டர் டர்னரும் (1967) விளக்கிச் செல்வர். இது கடந்துபோகும் நிலையினையும் அதனைக் குறியீட்டுச் செயல்பாடுகளால் சடங்குவயப்படுத்தும் சமூக நடத்தையையும் பற்றிய விளக்கங்கள் ஆகும். ஆயினும், இந்தச் செய்மரபின் பின்னணியில் இயங்கும் அல்லது இந்தச் சடங்கு முறைகளைக் கோரும் உளவியல் அல்லது உள இயங்கியல் தேவை எது என்பது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியது ஆகும். அறுபது, நூறு ஆண்டுகள் கடந்தும் வான் கென்னப், டர்னர் ஆகியோரின் விளக்கங்களைத் தாண்டிய ஆய்வு இல்லை. ஆனால் இடம், பொழுது என்பவற்றின் பொருண்மை நீட்டிப்பு உடல்கள் மீதும் சாற்றப்படுவதைச் தமிழ்ச் சிந்தனை மரபு தொடர்ந்து நிகழ்த்துகிறது என்பதை இங்கு நாம் கவனிக்க முடியும். அதாவது, இயல்பு நிலையில் நிற்கும் உடலையும் உடலியங்கியலின் வளர்சிதை மாற்றத்தால் அடுத்த நிலைக்குப் பெயர்ந்து கொண்டிருக்கும் உடலையும் இயற்கை உடல், பண்பாட்டு உடல் என்னும் எதிர்மறைகளாக்குகிறது. எதிரும் புதிருமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுக்குமிடையிலான நகர்வினை அல்லது உடலானது இயற்கையிலிருந்து பிறழும் வேளையைக் கண்டு சமூகம் அதிர்ச்சியுறுகிறது. இயற்கையிலிருந்து பிறழ்ந்து நிற்கும் அக்குறுகிய கால வெளியில் அவ்வுடலை மீயியல் களத்திலும் காலத்திலும் உலவும் உடலாகச் சமூகம் கருதுகிறது. மீயியல்பு நிலை என்பது புனிதம் சார்ந்ததாயும் இருண்மையானதாயும் புதிரான ஆற்றல் வாய்ந்ததாயும் இருப்பதாகச் சமூக ஓர்மை பொருள்படுத்துகிறது. இது ஒரு கொந்தளிப்பான நிலையுமாகும். இந்தக் கொந்தளிப்பை ஆற்றுப்படுத்தி மீண்டும் அவ்வுடலை இயல்பு நிலைக்கு இழுத்துவரும் செயலையே அவ்வுடல் மீது செய்யப்படும் சடங்குகள் குறியீட்டாக்கம் செய்கின்றன. அனைத்து வாழ்க்கை வட்டச் சடங்குகளிலும் இயல்பு நிலையிலிருந்து பிறழ்ந்த மீயியல் உடலை மீண்டும் இயல்பு நிலைக்குக் கட்டி இழுத்து வரும் பொருண்மையிலான சடங்குகள் அந்தந்த நிலைகளுக்கேற்ப நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறான ஒரு ஏரணத்தைத் தமிழச் சிந்தனை மரபு பொதிந்து வைத்திருப்பது ஆர்வமூட்டக் கூடியதாக உள்ளது (பிலவேந்திரன், 2016: 6-27).

இதேபோன்று சகுனம் பார்த்தல் என்னும் நம்பிக்கை சார்ந்த பனுவல்களிலும் இடம், பொழுது சார்ந்த ஏரணத் தொடரியைபுகள் ஊடாடி நிற்பதைக் காணவியலும். ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கான நகர்வில் அல்லது ஒரு செய்கையிலிருந்து பிறிதொரு செய்கைக்கான நகர்வில் இடையீடாகக் குறுக்கிடும் ஒரு விலங்கு அல்லது ஓசையானது அந்த நகர்வை அல்லது செய்கையை இடைமறிக்கிறது அல்லது அதிர்வுக்கு உள்ளாக்குகிறது. இதனாலேயே இது ஒரு நல்ல  கெட்ட சகுனம் என்பதாகக் கொள்ளப் படுகிறது. இந்த அதிர்வை ஏற்படுத்தும் விலங்கு, ஓசை என்பன மீயியல்புப் பண்புகளான புனிதம், புதிரான ஆற்றல், இருண்மை ஆகிய பொருண்மைகளை உள்ளடக்கியதாகச் சமூகம் கருத்தமைவு செய்துள்ளது. நாடு சார் களத்திலிருந்து காடு சார் களத்தை நோக்கிய நகர்வு இரு எதிரும் புதிருமான களங்களை ஊடறுக்கும் செயல்பாடாகும். இவ்வூடறுத்தல் ஒரு மீயியல் தன்மைகொண்ட விலங்கு ஓசையால் தடைசெய்யப்படுகிறது. இருவேறு களங்களுக்கு இடையிலான புலப்பெயர்வு ஒரு இடையீட்டுக் குறியீட்டுச் செயல்களின் தலையீட்டின் பேரால் தடை செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுகிறது. ஒரு தொடர் நகர்வு பிளவுபடுத்தப்படுகிறது. இப்பிளவைச் சீர் செய்யும் வகையில் ஒரு சிறு சடங்குச் செய்கையும் நிகழ்த்தப்படுகிறது. அதன் பின்னரே அப்பயணம் நகர்வு தொடர்ந்து முன்னேறுகிறது (பிலவேந்திரன். 2005: 107 -133).

இவ்வாறு நிலமும் பொழுதும் என்கிற அடிப்படை முதற்பொருள் அலகுகள் சமூக மன ஓர்மையில் அழுத்தமாக இடம்பெற்றுச் சமூகச் செயல்பாடுகளில் அவ்வவற்றின் பொருண்மை அடுக்குகளோடு வெளிப்படுகின்றன. மனித சமூகம் என்றல்லாது அனைத்து உயிரினங்களும் நிலம், பொழுது என்னும் அடிப்படை முதற் பொருள் அலகுகளை ஏதோவொரு வகையில் ஓர்மைப்படுத்தியுள்ளனவா என்கிற வினாவை இத்தகு சூழலில் எழுப்ப வேண்டியுள்ளது. ஏனென்றால், சில தாவரங்கள் சில குறிப்பிட்ட கால, இடச் சூழல்களில் செழிப்பாகவும் நிறைவான வகையிலும் தழைத்தோங்கி வளருகின்றன. ஒரு குறிப்பிட்ட தாவரம் ஒரு குறிப்பிட்ட காலப் பொழுதில் மட்டும் பூப்பதும், காய்ப்பதும் அது பொழுது பற்றிய ஓர்மையைத் தனக்குள் கொண்டிருக்கிறது என்பதை எடுத்தியம்புவதாக உள்ளது. தாவரங்களும் விலங்குகளும் குறிப்பிட்ட காலத்தை அவற்றின் இனப்பெருக்கச் செயல்பாட்டிற்குத் தேர்ந்தெடுப்பது அக்காலப் பொழுதின் நுட்பமான சாதகக் கூறுகளின் முகாமைப் பண்புகளை முன்னிறுத்தியே ஆகும் எனக் கருத இடமுண்டு. எருக்கஞ்செடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவ மரமும் ஆடி மாதக் காலத்தில்தான் காய்த்து முற்றி வெடிக்கின்றன. வெடித்தெழும் பழுத்த நெற்றுகளிலிருந்து பாராசூட் அமைப்புப் போன்ற இலகுவான பஞ்சுச் சிறகுகள் கொண்ட விதைகள் ஆடி மாதத்தின் சுழன்றடிக்கும் காற்றில் பறந்து மிதந்தோடி பல்வேறு இடங்களில் விழுந்து அந்தந்த இடங்களில் புதிய உயிர்களைத் தோற்றுவிக்கின்றன. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில்தான் அயிரை மீன்கள் புதிய நீர்ப்பெருக்குகளில் உற்பத்தி ஆகின்றன. மாவும் பலாவும் வேனிற் காலத்தில்தான் பழுத்துக் குலுங்குகின்றன.

விலங்குகளும் பறவைகளும் நீர்வாழ்வனவும் கூட இதனைப் போன்றே கால, இடச் சூழலமைவுகளின் நல்ல அல்லது கெடு வாய்ப்புக் கூறுகளைத் தங்களின் வாழ்வியலில் அனுசரித்து ஒழுகும் பண்புகளைக் காணவியலும். ஆக இடம், பொழுது என்பனவற்றின் தன்மைகளைத் தங்களின் அறிவு மரபுக்குள் அனைத்து உயிர்களும் பொதிந்து வைத்துள்ளதை மிக நுட்பமாகக் கவனிக்கிறபொழுது தெரியவருகிறது. பெருங்கடற் பரப்பில் வாழும் ஆமைகள் தமது தாயகக் கடற்கரைப் பரப்பில் வந்துதான் இனப்பெருக்கம் செய்து, முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. சங்க இலக்கிய அகநானூற்றில் ஆமைகள் (கடல்) பற்றிய பதிவினை பி. எல். சாமி (1993) எடுத்துக் காட்டியுள்ளார். ‘பஞ்சல ஆமை’ எனப்படும் ‘பங்குனி ஆமைகள்’ இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் பகுதிக் கடலிலிருந்து பல்லாயிரம் மைல் கடந்துவந்து வங்காளக் குடாவில் ஒடிசா தொடங்கி இலங்கை வரையிலான கடற்பரப்பில் குறிப்பிட்ட (மாசி, பங்குனி மாத) காலத்தில் இனப்பெருக்கம் செய்வது குறித்து பாலாஜி லோகநாதன் (2016: 58-60) குறிப்பிட்டுள்ளார். யானை போன்ற விலங்குகள், பறவைகள், சைபீரிய நாரைகள், கொக்குகள் வலசை போவதும் குறிப்பிட்ட இடங்களில் (தமிழகத்தின் வேடந்தாங்கலில் பனிப்பகுதிப் பறவைகள்) இனப் பெருக்கம் செய்வதும் நாமறிந்தவையே. இவ்வாறு எல்லா உயிர்களிடத்தும் காலம், இடம் பற்றிய ஓர்மைகள் வலுவாகவே செல்வாக்குச் செலுத்தி வருவதை அறியலாம்.

நமது எழுத்துப் பனுவல்களின் பாடல் புனையும் செயல்பாடுகளில் பாடுபொருள்களாகிய திணை மரபுகளுக்கும் அவை புனையப்படும் / பாடப்படும் காலப் பொழுதுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருக்கும் வாய்ப்புகள் உண்டு. இது குறித்த பார்வைகள் நம்மிடையே அதிகமாக இல்லை எனலாம். குந்தர் சொந்தெய்மர் (1993) என்னும் ஜெர்மானியச் சமயவியலாளர் தமிழ் எழுத்து மரபின் திணைக் கருத்தமைவுகள், கர்நாடக மகாராட்டிரப் பகுதிகளின் இடையர் / ஆநிரை வளர்க்கும் குடிகளிடம் இன்றளவும் அவர்களது சமய இலக்கியப் பாடல் புனையும் மரபுகளின் அடிப்படை அலகுகளாக விளங்குவதை விளக்கியுள்ளார்.

நமது சிறுவர் நாட்டுப்புற விளையாட்டுக்கள் இட அமைவுகளோடும் காலப் பொழுதுகளோடும் நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளதை அறிய முடியும். சிறுவர் விளையாட்டுக்களில் எல்லாக் காலங்களிலும் விளையாடப்படும் நாட்டுப்புற விளையாட்டு என எதனையும் சுட்டவியலாது. ஒரு விளையாட்டினை இந்தக் காலத்தில்தான் விளையாட வேண்டும் எனச் சிறுவர்கள் மிகு ஓர்மையுடன் செயல்படுவதில்லை. ஆனாலும், ஒவ்வொரு காலப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட விளையாட்டு / விளையாட்டுக்களைக் கோரி நிற்கின்றது. இது ஒருவகையான காலப் பொழுதுக்கும் இடவியல் சூழலமைவுக்கும் விளையாடும் மன விழைவுக்கும் இடையிலான ஓர் இயைபுத் தொடர்பு ஆகும். இது போன்று சிறுவர்களின் அனைத்து விளையாட்டுக்களும் பொழுதுபோக்கு நடத்தைகளும் காலப் பொழுதோடும் நிலவியல் அமைப்போடும் நெருங்கிய தொடர்புடையனவாய் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொடர்பு ஒழுங்கை உயிர்மங்களின் இட, கால ஓர்மை (biological space and time consciousness) என்கிற கருத்தாக்கமாக வளர்த்தெடுத்துச் செல்லும் வாய்ப்புகள் உண்டு. எல்லா உயிர்களும் காலம், இடம் ஆகியவற்றின் தன்மைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டனவாய் உள்ளன. அதேபோன்று மனித சமூகப் பண்பாட்டு நடத்தைகளிலும் இந்தத் தொடர்பு வெளிப்படையாகவும் வெளித் தெரியாமல் உள்ளார்ந்தும் செயல்படுவது சுட்டத்தக்கதாகும். பண்பாட்டு வழக்காறுகளிலும் எழுத்து இலக்கியப் பனுவலாக்கங்களிலும் இது காணப்படுவதாக உள்ளது. இவ்வாறான, உயிர்களின் இட, கால இயைபு ஓர்மை பண்பாட்டு நடத்தைகளின் பொருண்மைத் தளங்களை மேலும் விளக்குவதாக அமையும்.

இவ்வாறு, தமிழ்ச் சிந்தனை மரபுக்குள் பொதிந்திருக்கும் இடம், பொழுது, பற்றிய ஓர்மைகளையும் அவற்றின் பொருண்மைத் தளங்களையும் நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகளின் வழியாக ஊடறுத்துப் பார்க்கும்போது தமிழ்ப் பண்பாட்டின் அறிவறிவுத் திரட்சியைக் காணவியலும்.

## களவும் கற்பும்: அறுபடாது தொடரும் தமிழ்ச் சிந்தனை மரபு

தமிழ் இலக்கிய ஆய்வுப் பரப்பில் தொடக்கம் முதல் இன்று வரையிலும் தொடர்ந்து பேசப்பட்டு வருவதாகக் களவு, கற்பு என்கிற வாழக்கை ஒழுகலாற்று முறை இருந்து வருகிறது. இது தமிழ்ச் சமூகத்தின் பரிணாம வரலாற்றுத் தன்மையையும் குறித்து நிற்கின்றது என்கிற பார்வைகள் ஆய்வுகளில் இடம் பெற்றுள்ளன என்றாலும், அது எத்தகைய வரலாறு, அதன் ஆழ அகலங்கள் என்னவென்பது குறித்த விரிவான கருத்தாடல்கள் நடைபெறவில்லை என்றே கூறலாம். களவுச் செயல்பாடு என்பது தலைவன், தலைவி ஆகியோர் மணத்துக்கு முன்பாகக் கொள்ளும் பாலியல் விளைவு சார்ந்த செயல்பாடு எனும் விளக்கமும் இக்காமக்கூட்டம் எங்கு, எப்போது, எச்சூழலில் நிகழும் என்பது பற்றிய விளக்கங்களும் உண்டு. களவுக் கூடுதலே கற்புக் கூடுகைக்கு முன்னோட்ட நிகழ்வு களவானது கற்பில் நிறைவுறும் என்றும் இதன் வழி சங்ககாலப் பரப்பில் குடும்பம், உறவுமுறை போன்ற சமூக அமைப்புமுறையின் செயல்திட்டம் குறித்தும் பெரிதும் பேசப்பட்டுள்ளது. ஆயினும், 'களவு' பற்றிய எழுத்துப் பனுவல்கள் பெரும்பான்மையும் கிடைத்தில் அதுபற்றிய ஊகங்கள் கொண்ட புனைவுக் கதைகளே பதிவாகியுள்ளன. களவு பற்றிய வெற்றிடம் அது குறித்த மேலதிகக் கேள்விகளை முன்வைக்கிறது. தமிழ் கற்பிக்க முனைந்த கபிலர், களவு பற்றியே உரையாடுவது ஏன் என்கிற வினாவும் எழுகிறது. 'களவு' வாழ்க்கை முறையானது கால வரலாற்றின் சமூக நினைவுகளிலும் எழுத்துப் பதிவுகளிலும் இருந்து துடைத்தெறியப்பட்டிருக்கக் கூடுமோ என்கிற வினா பொருளற்றதல்ல என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது (பிலவேந்திரன், 2006: 186-191).

இந்த இடத்தில் தமிழ்ச் சொல்மரபில் வழக்கிலுள்ள ஒரு தொன்மம் பதிவாகியுள்ளது என்பதனைக் குறிப்பாகச் சுட்ட வேண்டியுள்ளது. இத்தொன்மம் உலக மறுபடைப்பாக்கம் பற்றியதாகும். இதனை ஒத்த தொன்மம் ஒன்று விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலும் 'நோவாவின் பேழை' என்பதாகப் பதிவு பெற்றுள்ளது. மேலும், 'பெருவெள்ளமும் உலக மறுபடைப்பாக்கமும்' என்கிற இத்தொன்மம் பெரும்பாலான உலகச் சமூகப் பண்பாடுகளின் சொல்மரபுகளிலும் எழுத்து மரபுகளிலும் வழக்கில் உள்ளமை ஊடக இணையத் தளங்களின் வழி அறியக் கிடைக்கிறது. இத்தொன்மம் பற்றித் தொன்மவியலாளர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடவியலாளர்கள், நாட்டுப்புறவியலாளர்கள், உளப்பகுப்பாய்வியலாளர்கள் ஆய்வு செய்துள்ளனர். இத்தொன்மத்தின் ஒரு மாற்று வடிவம் பின்வருமாறு:

ஒலகமே மாமாங்கம் பொங்குனப்ப தகப்பனும் மகளும் சேர்ந்து ஒரு பெரிய சொரக்குடுக்க செஞ்சு அதுக்குள்ள இருந்துருக்காங்க. வானம் பொங்கி ஒலகமே அழுஞ்சுருக்கு. இந்த சொரக்குடுக்க மட்டுந் தண்ணியில் மெதந்துக்கிட்டேருந்தது. ஒரு திட்டு மேட்டுல தங்கிருக்கு. அப்ப கடவுளு கிட்டுணன் (கிருஷ்ணன்) விட்டு ஒலகம் பன்னீராயிரத்துலயும் மனுப்பூடு இருக்காண்டு பார்த்துட்டு வர அனுப்பிருக்காரு. அப்ப கிட்டுண(ன்) ஒலகத்தைச் சுத்தி வரும்போது ஒரு திட்டு மேட்டுல தங்குன சொரக்குடுக்கயப் பார்த்து அதுல போயி நிண்டுறுக்கு. அப்ப அந்த சொரக்குடுக்கக்குள்ள கசு, புசுண்டு சத்தங்கேட்டுருக்கு. ஒடனே கடவுளுட்ட வந்து சொல்லவுமே. அவரு காலால் தூக்கிட்டு வரச் சொல்லியிருக்காரு. கிட்டுணனும அந்தபடியே காலால் தூக்கி ரெக்கயால அனச்சிட்டு வந்திருக்கு. கடவுளு குடுக்கயப் பாத்து குடுக்கயில் இருக்கவங்களே நீங்க எப்படி உள்ள போனீங்களோ. அப்படியே வெளிய வாங்கண்டுருக்காரு. அவங்களும் வெளிய வரவுமே நீங்க ரெண்டு பேரும் யாருண்டு கேக்க. நாந் தகப்பன். இவ எம் மகண்டு சொல்லிருக்காரு. ஒடனே கடவுளு மனுப்பூட உண்டாக்க ரெண்டு பேரையும் கெழக்க ஒருத்த மேற்க ஒருத்தருமா திரும்புங்கண்டு சொல்லிருக்காரு. அவங்களுந் திரும்பிருக்காங்க. பெறகு திரும்பச் சொல்லி இப்ப நீங்க ரெண்டு பேரும் யாருண்டு கேட்டுருக்காரு. நானு புருச(ன்) அவ எம்பொஞ்சாதிண்டு சொல்லிவிட்டா(ன்). சரி நீங்க ரெண்டு பேரும் நல்லாருங்கண்டு சொல்லி கடவுளு மறஞ்சுட்டாரு. அவங்க இன்னக்கி ஆம்பளப்பிள்ளை. நாளக்கி பொம்பளப் பிள்ளைண்டு மாத்திமாத்தித் தெனமும் பிள்ளையா பெத்து இந்த ஒலகத்தையே உருவாக்கிவிட்டாங்களாம். அந்த தகப்பந்தா வள்ளுவன். நாமெல்லாம் வள்ளுவன் வகுத்துப் பிள்ளைக.

பெருவெள்ளம் தொடர்பான தொன்மக் கதைகளில் மனித இனம் கூண்டோடு அழிய, பின் ஒரே குடும்பத்திலிருந்து மீண்டும் மனித இனம் பெருகியது எனச் சொல்லப்படுகிறது. இது ஏன்? சனக்கூட்டம், பெருவெள்ளம், அழிவு, மறு உற்பத்தி என்கிற இத்தொடர் நிகழ்வு வெறும் கற்பனையா அல்லது வரலாற்று நிகழ்வா என்னும் கேள்விகளை எழுப்புகிறது.

பெருவெள்ளம் தொடர்பான தொன்மங்கள் உலகம் முழுமையும் அனைத்துப் பண்பாடுகளிலும் காணக்கிடைக்கின்றன. இத்தொன்மம் பற்றிய ஆய்வுகளை நூறு ஆண்டுகட்கு முன்பே பலர் செய்துள்ளனர் என்பதை ஆபிரகாம் பண்டிதர் குறிப்பிடுகிறார். இவ்வாய்வு விளக்கங்களை ஒப்பு நோக்கிய ஆபிரகாம் பண்டிதர் இரண்டு குறிப்பிடத்தக்க முடிவுகளை முன்வைக்கிறார். ஒன்று, ஜலப்பிரளயம் என்பது (பெருவெள்ளம் என்பதனை 'ஜலப்பிரளயம்' என்றே ஆபிரகாம் பண்டிதர் குறிப்பிடுகிறார்.) உலகம் முழுவதும் ஒரே காலகட்டத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதனை நிறுவப் பெரிதும் முயன்றுள்ளார். மேலும், இந்த ஜலப்பிரளயத்துக்கு முந்தைய காலகட்டத்தை ஒரு (முந்தைய முதலாம்) யுகத்தின் இறுதிப் பகுதியாகவும் பிந்தைய காலகட்டத்தை அடுத்த (பிந்தைய இரண்டாம்) யுகத்தின் தொடக்கப் பகுதியாகவும் அமைந்தது என்று விளக்குகிறார். இரண்டு, இந்த ஜலப்பிரளயத்திற்குப் பின் யாவும் அழிந்துபட,

....பின்பு ஒரேயொரு மனிதனுடைய குடும்பத்திலிருந்து திரும்பவும் மனிதர் விருத்தியானதாகவும் ஒரு கதை சொல்லப்பட்டு வருகிறது. இப்படியே அவரவர்கள் தேசத்திலும் ஒரு மனிதன் தப்பிப் பாதுகாக்கப்பட்டானென்றும், அவன் மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதிகளுக்கு இரண்டாவது தந்தையானான் அதாவது, இரண்டாந்தரம் மனிதர் அவனிலிருந்து உற்பத்தியாகிப் பெருகினார்களென்றும் சொல்லப்பட்டு வருகிறது.

(ஆபிரகாம் பண்டிதர், 1994: 29, 30)
(அழுத்தம் என்னுடையது)

என்று எழுதிச் செல்கிறார். உலகில் நிகழ்ந்த பல்வேறு பெருவெள்ளம் தொடர்பான தொன்மங்கள் பற்றி இவ்வாறு குறிப்பிடலாம்: பெருவெள்ளத்துக்கு முன்பான காலம், பின்பான காலம் என்பவை இரு யுகங்கள் என்றும் முன்னதன் இறுதியில் தப்பிப் பிழைத்த குடும்பமே அடுத்த யுகத்தின் சமூகத் திரளை உற்பத்தி செய்தது; இந்த மனித இனத் தொடர்ச்சியானது இரண்டாம் யுகத்தின் தொடக்கமானது முதல் யுகத்துக் கடைசிக் குடும்பத்தின் தகாப்புணர்ச்சியில் அடங்கியுள்ளது என்பதை வெளிப்படையாகக் குறிப்பிடா விட்டாலும், அதுவே இவரது விளக்கங்களில் பூடகமாக இடம்பெற்றுள்ளது. இவருக்குப் பின்பு இத்தொன்மம் பின்வரும் முறைகளில் விளக்கப்பட்டுள்ளன.

இத்தொன்மக் கதைகளின் முற்பகுதி பெருவெள்ளம், அழிவு, மறுபடைப்பு பற்றிக் குறிப்பிடுகின்றன. பிற்பகுதி பெருவெள்ளத்திற்கு முன்பான கட்டற்ற பாலியல் நடத்தை பற்றியும் மீண்டும் ஒரு தகாப்புணர்ச்சியின் வழி மறுபடைப்பு நிகழ்வது பற்றியும் குறிப்பிடுகின்றன. பெருவெள்ளத்திற்கு முந்தைய நிலையில் முறையற்ற, கட்டற்ற பாலியல் நடத்தை கண்டு பொறுக்காததாலேயே கடவுள் உலகை அழித்தார். நோவா தொன்மத்தில் இது தெளிவாகவும் தமிழ்க் கதைகளில் இது பூடகமாகவும் குறிப்பிடப்படுகிறது. தென்மேற்கு வங்கப் பகுதியிலும் இதே கதைக் கூறுகள் கொண்ட தொன்மங்கள் கிடைப்பதாக பிரேசர் குறிப்பிடுவார். இது போன்ற தொன்மத்தின் மாற்றுவடிவம் ஒன்றை வெரியர் எவ்வினும் தொகுத்து வெளியிட்டுள்ளார். அவரது When the World was Young என்கிற கதைத் தொகுப்பு நூல் பிரிஜிட்டா ஜெயசீலன் என்பரால் உலகம் குழந்தையாக இருந்த போது (1996) என்னும் தலைப்பில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது. எனினும், தகாப்புணர்ச்சி பற்றிய சொல்லாடலே பொதுவாக உலக அழிவுத் தொன்மத்தின் பிற்பகுதியாக அமைகின்றது. இந்த அமைப்புக்கு இணையான அமைப்புக் கூறுகள் கொண்ட கதைகள் தென்கிழக்கு ஆசியா, சீனா போன்ற பகுதிகளிலும் கிடைக்கின்றன. கதையின் பிற்பகுதியிலும் தந்தை x மகள், தாய் x மகன், சகோதரன் x சகோதரி பாலியல் உறவே எஞ்சி நின்று அதன் வழியாகவே மீண்டும் மனித உயிர்த் தொடர்ச்சி நிகழ்வதாகவும் குறிப்பிடப்படுகின்றன. வெள்ளத்திற்கு முந்தைய நிலையிலும் பிந்தைய நிலையிலும் பாலியல் நடத்தையே மையப்படுத்தப்படுகின்றது.

தொன்மக் கதை வடிவங்கள் மனித இனப்பெருக்கம், கட்டற்ற நடத்தை, பேரழிவு, பேரழிவிலிருந்து தப்பும் குடும்பத்தினர், அவர்கள் தமது உறவுமுறையை மாற்றியமைத்தல், பின் மீண்டும் மனித இனப் பெருக்கம் என்கிற தொடர்ச்சியில் செல்வதைக் காணலாம். இத் தொன்மக் கதைகளை (1) கெட்ட நடத்தை கொண்ட மனிதக் கூட்டம் பெரு வெள்ளம் (சில வடிவங்களில் மட்டும் பெரு நெருப்பு) கொண்டு அழிக்கப்படுகிறது. இந்தப் பேரழிவிலிருந்து ஒரேயொரு குடும்பம் மீள்கிறது (2) மீந்திருக்கும் ஒரே குடும்பத்திலிருந்து மீண்டும் மனித இனத் தொடர்ச்சி நிகழ்கிறது என்கிற இருநிலைகளில் வைத்து விளக்கலாம்.

இத்தொன்மம், ஒரு காலத்தில் உலகத்தில் பாவங்களும் நேர்மையற்ற நடத்தைகளும் மலிந்து குழப்பங்கள் நிறைந்த சூழலில் உலக மனிதர்கள் அனைவரும் (பிற உயிரினங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட) ஒரு பெருவெள்ளத்தால் அழிக்கப்படுகின்றனர் என்றாலும், இருவர் (ஆணும், பெண்ணும் அதாவது, தந்தையும் மகளும் / தாயும் மகனும் / சகோதரனும் சகோதரியும்) மட்டும் ஒரு பேழை, கப்பல், மலை அல்லது சுரைக்குடுவை மீதேறித் தப்பிக்கின்றனர். வெள்ளம் வற்றிய பின்பு இவர்கள் மூலம் புதிய மனிதர்கள் உருவாகின்றனர் என்று விளக்குகிறது.

இந்தத் தொன்மத்தில் பெருவெள்ளம், பேழை (சுரைக் குடுவை), கப்பல் பயணம் ஆகிய மூன்று குறியீடுகள் இடம்பெற்றுள்ளன. பெருவெள்ளக் குறியீடு என்பது ஆண்களானவர்கள், பெண்களின் இனப்பெருக்கத் (உற்பத்தி) திறனைப் பார்த்துப் பொறாமை கொள்கிறார்கள் அது அவர்களது ஆழ்மனத்தில் பதிவாகிவிடுகிறது அதுவே பெருவெள்ளக் குறியீடாகக் கனவிலும் தொன்மக் கதையிலும் வெளிப்படுகிறது. கருவுற்ற பெண்கள் பன்னீர்க்குடம் உடைய, தண்ணீர்ப் பெருக்கினூடாகக் குழந்தையைப் பெற்றெடுக்கிறார்கள். இதனைப் போன்றே இரவுத் தூக்கத்தில் சிறுநீர் கழிக்கும் உந்துதலும் (கனவு), பெருவெள்ளத்தினூடாக மீண்டும் புதிய உயிர்களைத் தோற்றுவிப்பதும் (தொன்மம்) நிகழ்கிறது என்பன போன்ற விளக்கங்கள் உளப்பகுப்பாய்வியலாளர்களால் தரப்படுகின்றன. இந்த வகையில் இது ஆண் நோக்கிலான தொன்மக்கதை என்றும் டண்டிஸ் (1990) விளக்கியுள்ளார். தமிழ்ச் சூழலிலும் இத்தொன்மக்கதை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இத்தொன்மக் கதையைச் சேகரித்துத் தமிழ் எழுத்துப் பதிவில் வெளியிட்ட சி. பொன்னுத்தாய் (1998) இதனைத் தொன்மவியல் சார்ந்து விளக்கியுள்ளார். தமிழ்ச் சூழலில் திருவிழாக்களில் இடம்பெறும் தெப்பத் திருவிழாச் சடங்கியலை ஆய்வு செய்ய முனையும் இ. முத்தையா (2010), இத்தொன்மக்கதையில் இடம்பெறும் வெள்ளத்தின் ஊடான பயணத்தைத் தெப்பத் திருவிழாச் சடங்கோடு ஒப்புமைப்படுத்தி இதனுள் இடம்பெறும் உளவியலை விளக்கியுள்ளார். இது ஒருவகையில் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உறைந்துகிடக்கும் நனவிலி மனதின் 'கருப்பைக்குள் சென்று திரும்புதல்' (return to the womb) என்கிற விளைவை வெளிப்படுத்துகிறது என்கிற அவரது விளக்கம் தெப்பத் திருவிழாச் சடங்கின் பொருண்மையை மீட்டெடுப்பதில் பொருத்தமானதே என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும், உலக மறுபடைப்பாக்கம் என்னும் இத்தொன்மத்தில் இடம்பெறும் பெருவெள்ளத்திற்கு முன்பான சமூகம், பின்பான சமூகம் என்கிற வேறுபாடு எதைக் குறித்தது என்பதற்கான விளக்கங்கள் இல்லை. பெருவெள்ளத்துக்கு முன்பான சமூகம் கட்டற்ற (பாலியல்) நடத்தைகள் கொண்ட சமூகமாயும் பின்பான சமூகம் கட்டுண்ட (பாலியல்) நடத்தைகள் கொண்ட சமூகமாயும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, இந்தத் துல்லியமான குறியீட்டுச் செய்தியைத் தமிழ்த் தொன்மம் கொண்டிருக்கிறது என்பது இங்குச் சுட்டத்தக்கது.

இந்தவகை விளக்கத்தின் வழியே தமிழ்த் தொன்மக்கதைகளையும் புரிந்துகொள்ள இயலும் என்றாலும், தகாப்புணர்ச்சி பற்றிய சொல்லாடல் தமிழ்த் தொன்மக் கதையில் ஒரு குறிப்பிட்ட தனித்தன்மையைச் சுட்டி நிற்பது குறிப்பிடத்தக்கது. முதல் குடும்பம் அல்லது முதல் மனித இனம் உருவாவது குறித்த தொன்மக்கதைகள் கண்டிப்பாக ஏதாவதொரு வகையில் சில தகாப்புணர்ச்சிப் புதிர்களை உள்ளடக்கியதாக இருக்கின்றன என மரியா லீச் (1986: 9), மூர் (1964: 1309) போன்றோர் குறிப்பிடுவர். இத்தொன்மங்களில் வெள்ளத்திற்குப் பிந்தைய குடும்பத்தில் தகப்பன் x மகள், தாய் x மகன் என்கிற உறவு நிலையினரே எஞ்சி நிற்கின்றனர். தாய் இருந்தாலும் அவள் சாகடிக்கப்படுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பன் x மகள் என்கிற தகாப்புணர்ச்சி உறவு நடத்தையைக் குறிப்பிடப்படுகிறது. தகாப்புணர்ச்சி அதிகரித்ததாலேயே உலகம் அழிக்கப்பட்டது என முற்பகுதி குறிப்பிட்டாலும் பிற்பகுதியில் தகாப்புணர்ச்சியே மிகு வாய்ப்புள்ள அல்லது ஒற்றை வாய்ப்பு உறவுநிலையாக விடப்படுகின்றது. இத்தகாப்புணர்ச்சி உறவுநிலை யூதத் தொன்மத்தில் ஓர் ஒப்புரவின் அடிப்படையில் கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது, தந்தையை மதுவின் மயக்கத்திற்கு ஆட்படுத்திவிட்டு மகள்கள் அவருடன் உறவு கொள்கின்றனர். மனித உயிர்த் தொடர்ச்சி நிமித்தமாக இது முறை என நிலைநாட்டப்படுகிறது. தமிழ்த் தொன்மத்தில் இது இன்னொரு குறியீட்டுத் தளத்தில் வைத்துக் குறிப்பிடப்படுகின்றது. அதாவது தகப்பனும் மகளும் எதிரெதிர்த் திசைகளை நோக்குமாறு நிறுத்தி வைக்கப்பட்டுப் பின்னர் ஒருவரை ஒருவர் நோக்க அவர்கள் கணவன் x மனைவி என்கிற உறவு நிலையை அடைகின்றனர். ஒரு குறியீட்டு வகையில் அவர்களுக்கிடையிலான தகாப்புணர்ச்சி உறவு தகுபுணர்ச்சி உறவாக மாற்றியமைக்கப்படுகிறது. இதன் பின்னரே மனித இனத் தொடர்ச்சி இவர்கள் மூலம் நிகழ்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதனைப் புரிந்துகொள்ள மனித சமூகத்தின் பரிணாம வரலாற்றையும் புரிந்துகொள்ள வேண்டும். தொடக்ககால மனித சமூகம் கட்டற்ற பாலியல் வாழ்க்கையைக் கொண்டிருந்தது. அதுவே பின்பு வரலாற்றுப் பரிணாமத்தில் மெல்ல மெல்லக் கட்டுண்ட பாலியல் வாழ்வுக்கு மாற்றம் பெற்றது. உறவுமுறைகள் தெளிவாக வரையறுக்கப்படாத காலகட்டத்தில் பாலியல் நடத்தைவிதிகளும் வரன்முறை அற்றதாகவே இருந்தன. உறவு முறைகள் சமூகத்தில் வரைமுறைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பாலியல் நடத்தைக்கான உறவுமுறை விதிகள் பின்பற்றப்பட்டன. கட்டற்ற அல்லது உறவுமுறையற்ற பாலியல் நடத்தைக் காலத்திற்கும் கட்டுண்ட அல்லது உறவுமுறைக்குட்பட்ட பாலியல் நடத்தைக் காலத்திற்குமான கால இடைவெளி நிச்சயமாக ஒரு குறுகிய காலமாக இருக்கவியலாது. அது பல தலைமுறைகளாக, ஒரு விரிந்த கால எல்லையில் பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்தக் கட்டற்ற நிலையிலிருந்து கட்டுண்ட நிலைக்குப் பரிணாமம் பெற்ற மாற்றம் என்பது ஒரு சமூகத்தின் நினைவுப் பொதியில் ஒரு நினைவுத் திட்டாக, ஒரு குறியீடாகவே நிலைத்திருக்கிறது.

தமிழ் இலக்கியப் பரப்பில் பாலியல் நடத்தை குறித்துக் களவு, கற்பு என்கிற கருத்தாக்கங்கள் உண்டு. களவு வாழ்க்கை முந்தைய காலத்தியது கற்பு வாழ்க்கை பிந்தைய காலத்தியது என்கிற புரிந்துகொள்ளுதலும் உண்டு. சங்க இலக்கியத்தில் மட்டுமே களவு பற்றிய குறிப்புகள் உள்ளன. சங்க காலத்தில் பெண்ணின் சுதந்திரப் பாலியல் நடத்தை பற்றிய குறிப்புகள் உண்டு. களவியல் குறித்த பொருள் விளக்கச் சிந்தனை ஒரு நீண்ட பரிணாம வளர்ச்சியின் ஊடாகவே நிகழ்ந்துள்ளது களவு பற்றிய பொருள் விளக்கம் மேனிலைப்படுத்தப்பட்டுள்ளது. அது புனிதம் எனப் புனைந்துரைக்கப் பட்டுள்ளது. களவு பற்றிய உரை விளக்கங்கள் போதுமானவையாக இல்லை இது பற்றிய இலக்கியங்களும் உரை விளக்கங்களும் காலத் தொடர்ச்சியற்று உள்ளன. களவு பற்றிய உண்மை வரலாற்று நிலை ஒரு புதிராகவே உள்ளது. எனினும் களவு, கற்பு நெறி என்பன மேற்சுட்டிய கட்டற்ற, கட்டுண்ட பாலியல் வாழ்நிலைகளை ஒக்கும் எனலாம். தமிழ்த் தொன்மத்தின் இந்தப் பாலியல் தகாப்புணர்ச்சிப் புதிர் காலப்பரிணாமத்தில் உறவுமுறைப் பரிணாம வளர்ச்சியின் கட்டற்ற - கட்டுண்ட பாலியல் வாழ்வுப் பரிணாம வளர்ச்சியின் நினைவுத் திட்டுக்களை எடுத்தியம்பும் தன்மையது.

உறவுமுறை தோன்றிய வரலாறு, பாலியல் நடத்தையின் பரிணாம வரலாறு, களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கையாகப் பரிணாமம் பெற்ற வரலாறு புதிர்கள் நிறைந்தவையாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இந்நிலையில் பெரு வெள்ளம் தொடர்பான இத்தமிழ்த் தொன்மக்கதை புதிரை விடுவிக்கும் ஒரு தொடக்கப் புள்ளியாக அமைவதாகக் கொள்ளலாம். இவ்விடத்தில் களவு வாழ்முறைமை தமிழ்ச் சமூகத்திற்குள் கருத்துருவாக்கம் செய்யப்பட்ட வரலாறு பற்றி கௌதமன் (2011) குறிப்பிடுவது சுட்டத்தக்கது. எழுத்து மரபில் களவு வாழ்க்கை இருந்தது பற்றிய தெளிவான குறிப்புகள் இருக்கின்றன. அவ்வாழ்வு ஒரு குறுகிய இரண்டு மாத கால அளவிலேயே நிறைவுற்று கற்பு வாழ்க்கை என்னும் மணவாழ்க்கையைத் தொடங்கும் என்பதாகவே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (சூத்திரம். 32 மற்றும் சூத். 32 உரை). எனினும், 'களவு' வாழ்க்கையான கட்டற்ற பாலியல் வாழ்வினை உயர்நிலைப்படுத்தியும் அதனைக் கற்பின் கட்டுண்ட மணவாழ்வுக்கான முன்தேவையாகவும் நிலைப்படுத்திய எழுத்து மரபின் செயல்பாடுகள் வைதீகத்தின் மாபெரும் தொடக்கம் என ராஜ்கௌதமன் களவு, கற்பு பற்றிய வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்கிறார் (2011: 67-68).

களவு, கற்பு என்னும் தொடர் தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வரலாற்றினை அதன் தொல் நிலையிலிருந்து மீட்டு வருவதாக அமைகின்றது. இந்த வரலாற்று மீட்டுருவாக்கத்தினை ஒரு தொன்மச் சொல்மரபு நிறைவு செய்வதாகவும் அமைகின்றது. இந்நிலையில், தமிழ்ச் சமூகப் பரப்பில் காணப்படும் பரத்தை, பரத்தமையின் தோற்றம் பற்றிய தெளிவான வரலாறு பற்றிய ஐயங்களும் எழுகின்றன.

கட்டற்ற பாலியல் சுதந்திரம் கொண்ட வாழ்நிலைக் காலக்கட்டத்திலிருந்து கட்டுண்ட வரைமுறைக்குட்பட்ட பாலியல் வாழ்நிலையே குடும்பம் என்கிற நிறுவனமும் தெளிவான உறவுமுறைகள் தோன்றுவதற்குமான தொடக்கப் புள்ளி ஆகும். இவ்விரு வாழ்முறைமைகளும் அடிப்படையில் எதிரெதிர்ப் பண்பாட்டு உளவியல் முறைமைகளையும் பொருண்மைப்படுத்தக் கூடியன. மேலும், கட்டற்ற (களவு) நிலையிலிருந்து கட்டுண்ட குடும்பம், உறவுமுறை சார்ந்த ஒழுக்க நெறிமுறைக்கு உட்பட்ட வாழ்முறைக்கு மாறுவது காலவெளி கடந்த நிலையில் பண்பாட்டு நடத்தைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து வெளியேறும் செயல்பாடாகும். இவ்வாறு, முன்னதை முற்றிலும் புறந்தள்ளிவிட்டு வேறொரு பண்பமைதி சார்ந்த குடும்ப வாழ்வு நிலைக்குள் வந்து சேர்வது உளவியல் வகையிலும் பெருத்த பரிணாம வளர்நிலையைக் கோரி நிற்பதாகும்.

இந்தப் புள்ளியில் பெண் தலைமையிலிருந்து விடுபட்டு ஆண் தலைமையிலான சமூகம் என்கிற பரிணாமமும் நிகழ்கிறது. கட்டற்ற வாழ்நிலையிலிருந்து முற்றிலும் விடுபட்டு வர விரும்பாத அல்லது வருவதற்கான உளவியல் முகிழ்ப்பு நிகழாத சூழலில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சனக் கூட்டம் தொடர்ந்து பழைய நிலையிலேயே தொடர்ந்து இருந்திருக்கிறது. அதேவேளையில், வேறு ஒரு சனக்கூட்டம் புதிய குடும்பம் சார்ந்த கற்பு மன நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. பழைய நிலையில் நீடித்திருந்தவர்களின் கட்டற்ற பாலியல் வாழ்க்கையைப் 'பரத்தமை' என்பதாகக் கொள்ளலாம் இச் சமூகத்தைப் புதிய கட்டுண்ட குடும்ப வாழ்முறைக்கு வந்துவிட்ட சமூகம் தரநிலையில் தாழ்நிலைப் படுத்தியுள்ளது. கற்பு நிலையிலான குடும்ப வாழ்க்கை முறையின் பண்பாட்டியல் ஒழுகலாறு, உளவியல் நிலைகளை மேலும் மேலும் விரித்து நோக்குகிற போதுதான் 'பரத்தமை'யின் உண்மையான பொருண்மைத் தளங்களைப் புரிந்துகொள்ள இயலும்.

புதிய ஆண் தலைமைச் சமூகக் கட்டமைப்புக்குள் வந்து சேர்ந்த பின்பும் பழைய கட்டற்ற பாலியல் நடத்தைக்கான ஏக்கமும் அதற்குள் மறைமுகமாகவோ கள்ளத்தனமாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளவும் சென்று திரும்பும் செயல்பாடுகளும் நிறைந்த நிலைகள் இருந்துள்ளனவற்றையே தலைவனின் பரத்தை விழைதல், பரத்தமைக்காகத் தலைவன் தலைவியைப் பிரிதல் என்கிற இலக்கியப் பதிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. பரத்தமை பாற்பட்ட நடத்தைகள் பற்றிப் பல்வேறான விளக்கங்கள் தொல் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. மேலும், களவு வாழக்கையில் ஈடுபட்ட பின், தலைவி தலைவனைத் தன்னை வரைவு செய்து கொள்ளத் தொடர்ந்து நச்சரிப்புச் செய்கிற செய்திகள், எங்கே, தலைவன் கற்பு நிலை வாழ்முறைக்கு வராமல் தன்னை மறந்துவிட்டு, களவுநிலை வாழ்க்கையான (வேறு தலைவியருடன் கூடி) பழைய கட்டற்ற பாலியல் சமூக வாழ்க்கையை நோக்கியே திரும்பி விடுவானோ என்கிற பதைபதைப்பு பெண்களிடம் நிலவியதை எடுத்துக் காட்டுகிறது. இதனை 'வரைவு கடாதல்' என்னும் துறை தெளிவுபடுத்துகிறது.

எனவேதான், இவ்வொழுகலாறு குறித்த தெளிவான பார்வைக்கு களவு, கற்பு வாழ்நிலைகளின் அன்றைய காலத்துப் பண்பு நெறிசார்ந்த சமூகப் பரிணாமவியற் பார்வைகள் துணைபுரியக்கூடும். மேலும், இது குறித்த பண்பாட்டு மரபுகள் நெறிமுறைகள், வழக்காறுகள், எழுத்துப் பதிவுகள், இன்றைய நிலையிலான பழங்குடிச் சமூகங்களின் பண்பாட்டியல் நடத்தைகள் போன்ற அனைத்தையும் ஒருங்கு திரட்டி நோக்கும் தேவை மிகுந்து உள்ளது.

இவ்வொழுகலாறு குறித்த தெளிவிற்கும் களவு, கற்புக் கூறுகள் பயனளிக்கும். எழுத்து மரபின் விடுபடல்களைச் சொல் மரபும் சொல் மரபின் விடுபடல்களை எழுத்து மரபும் மேவி வந்து நிரவும் தன்மையை இவ்வாறு புரிந்துகொள்ளலாம். இங்கு முழுமையும் மேலைத்தேய அல்லது இன்றைய உலகளாவிய கோட்பாட்டியல் பார்வைகளை நமது சிந்தனை மரபுகளோடு இயந்திரகதியில் பொருத்திப் பார்ப்பதைவிட இச்சிந்தனை மரபுகளுக்குள் பொதிந்திருக்கும் பொருண்மைத் தளங்களை மீட்டெடுக்கும் பணியே அடிப்படையானதாயும் இன்றியமையாததாயும் இருக்கும்.

**முடிவுரை**

தமிழ்ச் சமூகம் நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் உடையது. இது பல்வேறு சமூகப் பண்பாட்டு நாகரிக நிலைகளைக் கடந்துவந்துள்ளது. இந்நிலைகளைக் கடந்து வந்ததினூடாகத் தனது அனுபவம், வாழ்வு, அறிவு முறைகள் முதலானவற்றைப் பண்பாட்டு வழக்காறுகள் வழியாகக் கடத்திவந்துள்ளது. கடந்த காலப் பண்பாட்டு வரலாறு சொல் மரபுகளிலும் பின்பு எழுத்து மரபுகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வரலாற்றினூடாகப் பல்வேறு வகையான சமூக, உற்பத்தி அதிகார முறைகளும் பரிணமித்து வந்துள்ளன. இவ்வாறான அரசியல் அதிகார வளர்முறையில் சொல்மரபுகள் பின்தள்ளப்பட்டு அல்லது ஓரங்கட்டப்பட்டு எழுத்து மரபு மேலாதிக்கம் பெற்றது. வேந்து, அரசு அமைப்புகளின் அதிகார முறைகள் சமூக வாழ்தலைத் தனக்கு ஏற்ற முறையில் மாற்றும் தன்மைகளைக் கொண்டிருந்தன. இந்த மாற்றங்களை நிறைவுசெய்யும் பணியை எழுத்து மரபு கைக்கொண்டது. சங்க இலக்கிய மரபு தொடங்கி இன்றைய இலக்கிய மரபு வரையிலான எழுத்து மரபினை உற்றுநோக்கினால் இது புலனாகும். விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட சொல் மரபு ஆதார சுருதியாகத் தொடர்ந்து மக்களிடம் பேணப் பட்டு வந்தது. இந்தச் சொல் மரபு சமூகப் பண்பாட்டு வரலாற்றைத் தொடர்ந்து கடத்தி வருவதையும் புதிய சூழல்களை எதிர் கொள்வதையும் அதன்வழி எதிர்ப்புக் கூறுகளையும் உருவாக்கிக் கொண்டபோதும் தொல் நினைவுகளையும் அவற்றைச் சடங்குகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைகள், நிகழ்த்துமரபுகள் ஆகியவற்றின் வழி புதுப்பித்துக் கொண்டே வந்துள்ளது. எழுத்து மரபும்கூட, குறிப்பாகத் தனிப்பாடல்கள், சித்தர் இலக்கியங்கள் இத்தகைய போக்கில் செயல்பட்டன என்பதனையும் கவனிக்க இயலும்.

இவ்வாறு, எழுத்து மரபும் சொல் மரபும் வெவ்வேறு திசைகளில் பயணித்து வந்த போதும் இவ்விரண்டும் ஏதோவொரு வகையில் தமிழ்ச் சமூகத்தின் ஆழமான சிந்தனைப் போக்கையும் அறிவறிவையும் பதிவுசெய்துகொண்டே வந்துள்ளன. சொல் மரபு அதன் அடியாழத்தில் இன்றும் தமிழின் சிந்தனை மரபினைப் பொதிந்தே வைத்துள்ளது. இது வெவ்வேறு காலகட்டங்களில் அதிகார அரசியல் அசைவுகளுக்கப்பாற்பட்டே நிகழ்ந் துள்ளது. ஏனென்றால், மக்கள் தங்களது கடந்தகால நினைவுகளோடும் அறிவறிவின் தருக்கங்களோடும் வெகு நெருக்கமாகவே இணைந்திருந்தனர். சொல் மரபு மக்களின் பொது நினைவுள்ளுக்குள் ஆழக்கால் பதித்திருந்தது. சங்க காலம் தொடங்கி 12ஆம் நூற்றாண்டு வரையிலான தொடர் அரசியல், அதிகார மாற்றங்கள் எழுத்து மரபின் மீது மிகுந்த தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன ஏற்படுத்திக்கொண்டும் வருகின்றன. ஆயினும், சொல் மரபு நிலைகுத்தி நின்று அவற்றுக்கு எதிர் வினையாற்றுவதோடு தன்னையும் வெவ்வேறு வகைகளில் மறுசீரமைப்பும் செய்து கொண்டுள்ளது.

பௌத்தம், சமணம், வைதீகம், இஸ்லாம், கிறித்துவம், ஐரோப்பியர் வருகை ஆகியவை எழுத்து மரபின் மீது செலுத்திய ஆதிக்கத்தினைச் சொல்மரபின் மீது செலுத்தவியலாதவாறு இருந்தது. ஐரோப்பியத் தத்துவம், கிறித்துவம் ஆகியவை கிளர்த்திய மாற்றங்கள் சொல்மரபின் ஆழ்தளங்களுக்குள் இறங்கவில்லை. சொல்மரபு தமிழ்ச் சிந்தனை மரபின் அறுபடாத சங்கிலியாக இன்றுவரை தொடர்ந்து வருகிறது. உலகளாவிய நிலையில் வளர்ந்து படர்ந்துவரும் மேலைத்தேயக் கோட்பாடுகள் தமிழ் எழுத்து, அறிவுப் பரப்பின் மீது தாக்குறவு செய்தபோதும் சொல் மரபு தனது பூர்வீக அசைவியக்கங்களுடன் தொல்மனதின் வரலாற்றுத் தடங்களை இழக்காமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மேலும், சொல் மரபின் அறிவறிவுப் பூர்வீகம் ஆழமானதாயும் மேற் குலகின் பிற பண்பாட்டு அறிவறிவு மரபுகளில் இருந்து வேறுபட்டும் தனித்த தன்மைகளுடனும் விளங்குகிறது. உலகளாவிய சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் தமிழ்ச் சிந்தனை மரபுகளை ஆராயும் பொருட்டு அப்படியே தரவிறக்கம் செய்வது முழுப்பயன் தராது. அவை ஓரளவுக்குப் புதிய பார்வைகளையும் பரிமாணங்களையும் அணுகுமுறைகளையும் தரலாம். தமிழ்ச் சிந்தனை மரபின் தனித்த அமைப்பு ஒழுங்குமுறைகளையும் வரலாற்று ஓர்மைகளையும் அறிவறிவுத் தளங்களையும் அடையாளப்படுத்துகிறபோது அவை உலகளாவிய நாட்டுப்புறவியல் போக்கைச் செழுமைப்படுத்தும். பிரபஞ்சத்தின் ஆதாரமான முதற்பொருள் தமிழ்ச் சிந்தனை மரபிற்குள் பதிவாகி ஒட்டுமொத்தப் பண்பாட்டு நடத்தைகளை ஒழுங்கமைவு செய்திருப்பதை இப்பகுதியில் விளக்கியுள்ளேன். அதே போன்று மனித சமூகத்தின் பதிவுகள் விளக்கவியலாத புதிர்களை உள்ளடக்கியிருப்பதைத் தொன்மவியலாளர்கள் குறிப்பிட்டிருந்தனர். அந்த இருண்மையான பரப்பின் மீது வெளிச்சம் பாய்ச்சுவதாகத் தமிழ்ச் சொல்மரபின் ஏரணவிய ஒழுங்குகள் அமைந்திருப்பதை இரண்டாம் பகுதி விளக்கியுள்ளது.

சொல் மரபின் புரிபடாத ஆழ்தளங்களை அகழ்ந்தெடுக்க எழுத்து மரபும் எழுத்து மரபின் புரிபடாத இருண்மைகளை ஒளியேற்றுவதற்குச் சொல்மரபும் பெரும் பயன் தரக்கூடியன. இவ்விரண்டின் கூட்டியைவிலான ஆய்வுகள் தமிழ்ச் சிந்தனை மரபின் பன்முகத்தன்மையை செழுமைப்படுத்தும் தமிழ்ப் பரப்பின் தனித்தன்மைகளை வெளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொணரும். இவ்விரு புலங்களுக்கிடையிலான ஒப்புரவான ஆய்வுப் போக்குகள் 'தமிழ்' தனித்த பேராற்றலுடன் உலகளாவிய கோட்பாடுகளின் மீது காத்திரமான செல்வாக்குச் செலுத்தும் தன்மையது என்பதனை வெளிப்படுத்தக்கூடியன.

## துணை நூல்கள்


ஆப்ரகாம், பண்டிதர். 1994. கருணாமிருத சாகரம். சென்னை; அகரம் பதிப்பகம்.

இராமசாமி, துளசி. 1985. நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள். சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

எல்வின், வெரியர். 1996. உலகம் குழந்தையாக இருந்தபோது. (தமிழில். பிரிஜிட்டா ஜெயசீலன்). இந்தியா; நேமனல் புக் டிரஸ்ட்.

கௌதமன், ராஜ். 2011. நான்மாடக் கூடலும் திருவிளையாடலும். மணற்கேணி. இதழ். 8. அக்டோபர் 2011. பக் 67-78.

பொன்னுத்தாய், சி. 1998. தொன்மக் கதைகள்: பன்முக நோக்கு. மதுரை: கொ. பெ. சின்னமாயன் வெளியீடு.

............ 1998. தொன்மக் கதைகளும் வாய்மொழி வரலாறும். மதுரை; கொ. பெ. சின்னமாயன் வெளியீடு

Daniel, E. V. 1984. Fluid Signs: Being a Person the Tamil Way. Berkeley: University of Chicago Press.

Dumont, L.1986 (1957). A South Indian Subcaste: Social Organisation and Religion of Pramalai Kallar. (Trans.) M. Moffatt and A. Morton. Delhi: Oxford University Press.

Dundes, Alan. 1990. The Flood as Male Myth of Creation. In. Essays in Folklore Theory and Method. (Ed). Alan Dundes. Madras: Cre. A. Pp. 209-227.

Elmore, W. Theodore. 1984 (1915). Dravidian Gods in Modern Hinduism. New Delhi: Asian Educational Services.

Gennep, Arnold Van. 1969. Rites of Passage : A Classic Study of Cultural

Celebrations. Chicago: Chicago University Press.

Leach, Edmund. R. 1967. Genesis as Myth. In. Myth and Cosmos: Readings in Mythology and Symbolism. (Ed. ). John Middleton. Austin: University of Texas Press. Pp. 1-13.

Mayer, Eveline Masilamani. 2004. Guardians of Tamilnadu: Folk Deities, Folk Religion, Hindu themes. Halle: verlag der Franckeschen Stiftungen zu halle.

Sontheimer, Gunther D. 1993. Pastoral Deities in Western India. (Trans.). Anne Feldhaus. Delhi: Oxford University Press.

Turner, Victor. 1967. The Forest of Symbols: Aspects of Ndembu Ritual. Ithaca London: Cornell University Press.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியியல் நோக்கில் நாட்டார் இலக்கியம்

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்

நாட்டார் இலக்கியத்தை வாய்மொழி இலக்கியம் என்றும் நாம் சொல்கிறோம். அது மிகவும் தொன்மையானது. வாய்மொழியாகவே பயின்றுவருவது. மனிதகுலம் எழுத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே தோன்றிய இலக்கியம் அது. இன்றுகூடப் பேச்சுவழக்கில் மட்டும் உள்ள மொழிகளில் தோன்றும் இலக்கியங்கள் எல்லாம் வாய்மொழி இலக்கியங் களாகவே உள்ளன. தொன்மையான எழுத்து வழக்குள்ள தமிழ் போன்ற மொழிகளில் கூட எழுத்தறிவற்ற மக்கள் தங்கள் உணர்வுகளையும் அநுபவங்களையும் வாய்மொழி இலக்கியங்களாகவே வெளிப்படுத்துகின்றனர். வாய்மொழி இலக்கியங்கள் மிகப் பிற்காலத்திலேயே எழுத்தில் பதிவுசெய்யப்பட்டன. எழுத்தில் அச்சிடப்பட்டாலும் அவை வாய்மொழி இலக்கியம்தான். அவற்றின் பிறப்பு அப்படி.

சங்க இலக்கியமும் வாய்மொழியாகவே பயின்றுவந்து பின்னர் எழுத்துவடிவம் பெற்றது என்ற கருத்தில் பெரும்பாலான அறிஞர்கள் மத்தியில் உடன்பாடு உண்டு. எனினும் சங்க இலக்கியத்தை வாய்மொழி இலக்கியம் என்று இன்று யாரும் கருதுவதில்லை. அது தமிழின் செவ்வியல் இலக்கியமாகவே போற்றப்படுகின்றது. அது வேறு கதை.

மொழியியல் மொழி பற்றிய அறிவியல் என வரையறுக்கப்படுகின்றது. மொழிபற்றிய சகல அம்சங்களையும் அது அறிவியல் நோக்கில் ஆராய்கின்றது. இன்று நாம் பேசும் நவீன மொழியியல் என்பது குறுகிய கால வரலாறு உடையது. நவீன மொழியியலின் தந்தை எனப் பேசப்படும் சசூரிலிருந்து தொடங்கினால் நவீன மொழியியலுக்குச் சரியாக நூறு வயதாகின்றது. சசூரின் A Course in General Linguistics (பொது மொழியியல் பாடநெறி) என்னும் அவரது புகழ்பெற்ற நூல் அவரது மறைவுக்குப் பின் 1916இல் தான் வெளிவந்தது. எனினும் ஒரு குறுகிய காலத்தில் மொழியியல் பெருவளர்ச்சிகண்ட ஒரு அறிவியல் துறையாக நிலைபெற்றுவிட்டது.

இக்கருத்தரங்கில் மொழியியல் பற்றி நான் விரிவாக எதுவும் பேசப்போவதில்லை. ஆனால். மொழியியல் நோக்கில் நாட்டார் இலக்கியத்தை, குறிப்பாக அதன் மொழியை, எவ்வாறு பார்க்கலாம், நாட்டார் இலக்கிய ஆய்வில் மொழியியல் எத்தகைய பங்களிப்பைச் செய்ய முடியும் என்பதைப் பற்றிச் சில கருத்துகளைச் சுருக்கமாக இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## நாட்டார் இலக்கியத்தின் மொழி பற்றிய நோக்கு

நாட்டார் இலக்கியம் வாய்மொழியாகப் பயின்றுவருவது என்பதும், எழுத்தறிவற்ற மக்களின் உற்பத்தி என்றவகையில் முற்றிலும் பேச்சு மொழியில் அமைவது என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், பேச்சுமொழி பற்றிய தமிழ்ச் சமூகத்தின், குறிப்பாக, சமூக உயர் குழாத்தின், மனப்பாங்கு சாதகமானதல்ல. பேச்சுத் தமிழ் கொச்சையானது, இலக்கணமற்றது, தரம்குறைந்தது என்ற கருத்து தமிழ்ச் சமூகத்தில் ஆழமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்துள்ளது. செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற பாகுபாடு தொன்மையானது, தொல்காப்பிய அங்கீகாரம் பெற்றது. அதனால், நீண்ட காலமாக நாட்டார் இலக்கியம் சமூக உயர் குழாத்தின் அக்கறைக்குரிய ஒன்றாக இருக்கவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் சில கிறிஸ்தவ மிஷனரிமார்களின் முயற்சியினால் நாட்டார் இலக்கியம் தொகுக்கப்படத் தொடங்கியது. எனினும் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரையும் இதில் பெரிய முன்னேற்றங்கள் எவையும் இருக்கவில்லை. ஆர்வமுடைய சில தனிநபர்களின் முயற்சியில் அது தங்கியிருந்தது. சமூகத்தின் கீழடுக்கைச் சேர்ந்த படிப்பறிவற்ற சாதாரண மக்களின் பேச்சுத் தமிழில் அமைந்த இலக்கியம் என்றவகையில் அது பரவலான முக்கியத்துவம் பெறவில்லை. ஆரம்பகாலத்தில் தொகுப்பு முயற்சிகளில் ஈடுபட்ட 'மேன்மக்கள்' கூட இவற்றை நாட்டுப்புற இலக்கியம், கிராமிய இலக்கியம், பாமர இலக்கியம் என்றவாறுதான் அறிமுகப்படுத்தினர். அவர்களும் இவ்விலக்கியங்களின் மொழியை முழுமையாக ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல. அதனால் ஆரம்பத்தில், தற்போதும்கூட, நாட்டார் இலக்கியத்தைத் தேடித் தொகுத்து எழுத்துவடிவில் பதிப்பித்த பலர் அதன் மொழியை எழுத்துமொழிக்கு மாற்றியுள்ளனர். கோட்பாட்டுரீதியில் பேச்சுமொழியை ஏற்றுக்கொண்டவர்கள்கூட தம்பதிப்பில் ஒரு ஒருமைப்பாட்டைப் பேணவில்லை. பேச்சுமொழியில் உள்ளவற்றை எழுத்தில் பதிப்பிப்பதில் உள்ள சிக்கல்களையும் இவர்கள் தாண்ட முயலவில்லை எனலாம்.

இப்பின்னணியில் பார்க்கும்போது, பேச்சுமொழியை அறிவியல் ரீதியில் புரிந்து கொள்வதிலும், அதை எழுத்தில் பதிவுசெய்வதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதிலும் மொழியியல் நமக்கு உதவமுடியும். மொழியியல் மொழிபற்றிய அறிவியல் என்றவகையில் மொழிபற்றிய ஒரு அறிவியல் பார்வையை நமக்குத் தருகின்றது. மொழி என்பது அடிப்படையில் பேச்சுத்தான் என்பது மொழியியலின் நிலைப்பாடாகும். ஆயினும், பேச்சு, எழுத்து ஆகிய இரண்டையும் அது சமமாகவே நோக்குகின்றது. ஒன்று உயர்ந்தது மற்றது தாழ்ந்தது என்று அது கருதுவதில்லை.

தமிழ் போன்ற இரட்டை வழக்கு மொழிகளை (diglossic languages) அறிவியல் ரீதியில் புரிந்துகொள்வதற்கு மொழியியல் கல்வி நமக்கு அவசியமாகும். இரட்டை வழக்கு (diglossia) என்பது ஒரு சமூக மொழியியல் கருத்தாக்கமாகும். ∴பேர்குசன் (Ferguson) என்ற சமூக மொழியியலாளர் 1959ல் இக்கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தினார். அரபு, சீனம், தமிழ், சிங்களம் உட்பட உலகின் தொல்சீர் மொழிகள் சிலவற்றில் இரட்டை வழக்கு என்னும் ஒரு விசேட சமூக மொழியியல் சூழல் காணப்படுவதாக அவர் கூறினார். அவருடைய கருத்துப்படி பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு என்னும் இருவழக்குகள் உடைய மொழிகள் எல்லாம் இரட்டை வழக்கு மொழிகள் அல்ல. ஒரு இரட்டை வழக்கு மொழி பின்வரும் நான்கு முக்கிய பண்புகளைக் கொண்டிருக்கும்.

1. இலக்கண அமைப்பில் வேறுபட்ட இருவேறு வழக்குகளைக் கொண்டிருத்தல்.
2. இரண்டும் ஒரே சமூகச் சூழலில் அன்றி வெவ்வேறு சமூகச் சூழல்களில் பயன்படுத் தப்படல்
3. இவற்றுள் ஒன்று உயர் வழக்காகவும் மற்றது தாழ்வழக்காகவும் அம்மொழிச் சமூகத்தால் கருதப்படல்.
4. தாழ்வழக்கு குடும்ப, சமூகச் சூழலில் இருந்து இயல்பாகவும், உயர் வழக்கு எப்போதும் கற்பித்தல் மூலமும் கற்றுக்கொள்ளப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பண்புகளைக் கொண்ட தமிழ் ஒரு இரட்டை வழக்கு மொழி என்பது தற்கால மொழியியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். அவ்வகையில் தாழ் வழக்காகக் கருதப்படும் பேச்சுவழக்கில், கொடுந்தமிழில், அமைந்த நாட்டார் இலக்கியம் நீண்டகாலமாக ஒதுக்கப்பட்டு வந்ததில் ஆச்சரியம் இல்லை. 1950க்குப் பிறகுதான் நாட்டார் இலக்கியத்துக்குப் படிப்படியாக ஒரு ஏற்புடைமை ஏற்பட்டது. நவீன உரைநடை இலக்கியங்களான நாவல், சிறுகதை, நாடகம், புதக்கவிதை என்பவற்றின் வளர்ச்சிக்கும் ஏற்புடைமைக்கும் இதற்கும் இடையில் ஒரு தொடர்பை நாம் காணலாம். பல்கலைக் கழகங்களில் இவையும் பாடங்களாக அங்கீகரிக்கப்பட்டன. நவீன இலக்கியங்களிலும், நாட்டார் இலக்கியத்திலும் உயர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்குரிய சூழல் ஏற்பட்டது. என்றாலும் இன்றுகூட எழுத்திலக்கியம், அல்லது உயர் இலக்கியத்துடன் ஒப்பிடுகையில் வாய்மொழி இலக்கியம் அல்லது நாட்டார் இலக்கியத்துக்கு ஒரு சம அந்தஸ்து இல்லை என்றே சொல்லவேண்டும். வாய்மொழி இலக்கியத்தை அடியொற்றியே எழுத்திலக்கியம் தோன்றி வளர்ந்தது என்பதையும், மொழியியல் அடிப்படையில் அவற்றுக் கிடையே ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதையும், அடிப்படையான அழகியல் அம்சங்களைப் பொறுத்தவரை இரண்டுக்கும் இடையே கோட்பாட்டுரீதியில் பெரிய வேறுபாடுகள் எவையும் இல்லை என்பதையும் மனங்கொண்டால் நாட்டார் இலக்கியம் எழுத்து இலக்கியத்தைவிட எவ்வகையிலும் குறைந்ததல்ல என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மொழியியல் மொழி அமைப்பை அதன் ஒலியமைப்பு, சொல்லமைப்பு, வாக்கிய அமைப்பு என்ற வகையில் வகைப்படுத்தி, அவற்றை ஆராய்வதற்கும் பதிவுசெய்வதற்கும் உரிய கொள்கைகளையும், முறையியலையும் தருகின்றது. அவ்வகையில் நாட்டார் இலக்கியத்தை, அதன் மொழியை, பதிவுசெய்வதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் அது நமக்கு உதவுகின்றது.

ஒரு நாட்டார் இலக்கியம் எந்தப் பிரதேசத்தில், எந்தச் சமூகச் சூழலில் தோன்று கின்றதோ, அந்தப் பிரதேச சமூகக் கிளைமொழியிலேயே அது அமைந்திருக்கும். அவ் வகையில் கிளைமொழி ஆய்வு நாட்டார் இலக்கிய ஆய்வுக்கு உதவுகின்றது. அவ்வகையில் நாட்டாரியல் ஆய்வாளர்களுக்கும், பதிப்பாசிரியர்களுக்கும் கிளைமொழியியல் அறிவு அவசியம் எனலாம்.

நாட்டார் இலக்கியத்தின் மொழி பற்றிய பிரக்ஞை இல்லாமல் அவற்றை அச்சில் பதிப்பிப்பவர்கள் பல குழறுபடிகளைச் செய்கின்றனர். இங்கு இரண்டு உதாரணங்களை மட்டும் தருகிறேன்.

1. *ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்*
*அம்மியடியில் கும்மியடித்தேன் சும்மாவா இருந்தன்*

இப்பாடலில் பேச்சுவழக்கு எழுத்துவழக்கு இரண்டும் கலந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். இதன் பதிப்பாசிரியர் இப்பாடல் வழங்கும் பிரதேசத்துக்குச் சென்று, இது எவ்வாறு பாடப்படுகின்றது என்பதைக் கேட்டுப் பதிவுசெய்திருக்கமாட்டார் என்று தோன்றுகின்றது.

2. *காவற் பரணிற் கண்ணுறங்கும் வேளையிலே*
*கண்ணான மச்சி வந்தென் காலூன்றக் கண்டேனே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் மயங்கி வந்திருப்பதைக் காணலாம். முதல் அடியில் இடம்பெற்றுள்ள லகர ஈற்றுப் புணர்ச்சி செவ்வியல் தமிழுக்குரியது. காலூன்ற என்பதும் எழுத்துவழக்காகும். இப்பாடல் வழங்கும் கிழக்கிலங்கையில் -ன்ற்- என்பது பேச்சு வழக்கில் -ண்ட்- என்று மாற்றமடையும் என்பதை பதிப்பாசிரியர் கருத்தில் கொள்ளவில்லை.

## நாட்டார் இலக்கியத்தின் கவித்துவ அமைப்பு

நாட்டார் இலக்கியத்தின் ஒலியனியல் உருபனியல் கூறுகளை மட்டுமன்றி, நாட்டார் இலக்கிய வடிவங்களின் மொழிக்கட்டமைப்பை விளக்குவதிலும் மொழியியலின் பங்களிப்பு முக்கியமானது. குறிப்பாக நாட்டார் இலக்கியத்தின் யாப்புக் கட்டமைப்பு, குறியீட்டுமுறை, உருவகம் முதலியவற்றின் மொழி அம்சங்களை விளக்குவதில் மொழியியல் பின்புலம் மிகுந்த பயனுடையது. மொழியியல் பயிற்சி இல்லாத நாட்டாரியலாளர் இதில் அதிகம் வெற்றிபெறுவதில்லை. ஹிந்தி மொழியில் வழங்கும் புதிர்களின் (riddles) யாப்புக் கட்டமைப்பு பற்றி விரிவாக ஆராய்ந்த அலன் டண்டிஸ் (1990) 'புதிர்களின் மொழியின் வடிவக் கூறுகள், அதாவது புதிர்களின் மொழியியல் பண்புகள் நாட்டாரியலாளர்களால் பெரிதும் புறக்கணிக்கப்பட்டுள்ளன' எனக் கூறுகிறார். இது ஒரு முக்கியமான கூற்றாகும். பெரும்பாலான நாட்டாரியலாளர்கள் மொழியியல் தேர்ச்சி அற்றவர்கள் என்பதை மட்டுமன்றி, நாட்டார் இலக்கியத்தின் மொழிக் கட்டமைப்பை சிறப்பாக விளக்குவதில் மொழியியலின் முக்கியத்துவத்தையும் இது உணர்த்துகின்றது.

நாட்டார் இலக்கியத்தின் மொழிக் கட்டமைப்பு அதன் கவித்துவக் கட்டமைப்புடன் (poetic structure) பிரிக்க முடியாதவகையில் பிணைந்துள்ளது. நாட்டார் இலக்கியத்துக்கு மட்டுமன்றி எழுத்து இலக்கியத்துக்கும் இது பொதுவானது. அவ்வகையில் நாட்டார் இலக்கியத்தின் கவித்துவ அமைப்பைத் தெளிவுபடுத்துவதற்கும் மொழியியல் நமக்கு உதவுகின்றது. மொழியியலும் கவிதை இயலும் (Linguistics and Poetics) என்ற தனது புகழ்பெற்ற கட்டுரையில் மொழியியலுக்கும் கவிதை இயலுக்கும் இடையிலுள்ள உறவு பற்றி றோமன் யகோப்சன் விரிவாகப் பேசுகிறார். மொழியின் ஆறுவகைச் செயற்பாடுகள் பற்றி யகோப்சன் கூறுவது நம் கவனத்துக்குரியது. கவித்தவச் செயற்பாடு (poetic function) அவற்றுள் ஒன்று. இது பொருளை அல்லது தகவலைக் குவிமையப்படுத்துவது, தகவலை வெளிப்படுத்தும் முறை பற்றியது. மொழி அமைப்பினால் பின்னப்படும் கவித்துவக் கட்டமைப்பால் வெளிப்படுவது. 'பெத்த வகிறு பத்தி எரியுதுடா' என்பது இத்தகையது. இவ்வகையில் ஒரு இலக்கியப் படைப்புக்கு இரண்டு அமைப்புகள் இருக்கும்.

1. அதன் மொழி அமைப்பு
2. அதன் கவித்துவ அமைப்பு

மொழி அமைப்பு அடிப்படையானது. ஒலியமைப்பு, சொல் அமைப்பு, வாக்கிய அமைப்பு என இது விரியும். ஒரு படைப்பின் அடிப்படைப் பொருளைத் தருவது இது.

கவித்துவ அமைப்பு மொழி அமைப்பைக் கொண்டு அதற்கு மேலாகக் கட்டப்படுவது. மொழியின் அழகியல், கவித்துவக் கூறுகள் இங்கு அதிகம் பயன்படுத்தப்படும். யாப் போசை, ஒத்திசை, உவமை, உருவகம், குறியீடு முதலிய படிம வகைகளின் பயன்பாடு எல்லாம் இதில் அடங்கும். உதாரணமாக ஒரு நாட்டார் பாடலை இங்கு நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வந்தா ரெண்டா மச்சான்*
*வாச லெல்லாம் பூமணந்தான்*
*போனா ரெண்டா மச்சான்*
*பூப்பூத்து ஓஞ்சதுபோல்*

**இதன் மொழி அமைப்பு**

1. இரண்டு வாக்கியங்கள்
2. ஒவ்வொரு வாக்கியத்திலும் இரண்டு வாக்கியத் தொடர்கள்
3. ஒவ்வொரு தொடரிலும் 2 அல்லது 3 சொற்கள்

**இதன் அடிப்படைத் தகவல்:**

*மச்சானின் வருகையால் ஏற்படும் மகிழ்ச்சியும்,*
*மச்சானின் பிரிவால் ஏற்படும் வெறுமையும்.*

இந்த அடிப்படைப் பொருளல்ல இங்கு முக்கியம். 'மச்சான் வந்தால் மகிழ்ச்சியாக இருக்கும், மச்சான் போனால் வெறுமையாக இருக்கும்' என்பது கவிதையல்ல. யகோப்சன் சொல்வதுபோல் அது மொழியின் சுட்டுச் செற்பாடு (Referential Function). இத்தகவல் தரும் உணர்ச்சி நிலையை மிகைப்படுத்துவதற்கு (intensify) வேறு மொழி வடிவம் இங்கு கையாளப்படுகின்றது.

*வாசலெல்லாம் பூமணம்*
*பூப்பூத்து ஓய்தல்*

ஆகிய இரு படிமங்கள் இங்கு மொழியினால் உருவாக்கப்படுகின்றன, இது நுகர்ச்சியும் காட்சியும் இணைந்த படிமம். இப்படிமங்கள் மச்சாளின் உணர்வுலகின் உருவகமாக. குறியீடாக அமைந்து, கவிதையின் பொருளைச் செறிவுபடுத்துகின்றன. இவ்வாறு மொழியினால் பிறிதொருமொழி கட்டமைக்கப்படுகின்றது. இவ்வகையில் கவிதை என்பது மொழியினால் உருவாக்கப்படும் பிறிதொரு மொழியாகின்றது.

நாட்டார் இலக்கியத்தை அணுகுவதற்கும் ஆராய்வதற்கும் இலக்கிய ஞானம் மட்டும் போதாது. நாட்டாரியல் கொள்கைகளோடு மானுடவியல், மொழியியல் பயிற்சியும் சேரும்போதுதான் நாட்டார் இலக்கிய ஆய்வு வளம்பெறும்.

(புதிய நோக்கில் நாட்டார் வழக்காற்றியல் கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கமான கட்டுரை வடிவம்)

**உசாத்துணை**

Dundes Alan (1990) Essays in Folklore Theory and Method, CreA, Madras.

Ferguson, C. A. (1959) "Diglossia", Word, Vol. 15, 1959, pp. 325-40

Jakobson, Roman (1987) Language in Literature, Harvard University Press, London.

Saussure, Ferdinand De (1978) Course in General Linguistics, Fontana/ Collins.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியல் நோக்கில் நாட்டுப்புற இலக்கியம்

பேராசிரியர் துரை. மனோகரன்

கலை இலக்கியங்களைப் பொறுத்தவரையில் அழகியல் என்னும் சொல், அவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்கிவந்திருக்கிறது. அழகியல் தொடர்பான தேடல்கள் பழைய கிரேக்கர் காலம் முதலாகவே நிகழ்ந்துவந்துள்ளன. அழகு என்றால் என்ன என்று சொல்வாயா? என்ற சோக்கிரட்டீஸின் கேள்வி முதல் இது பற்றிய விசாரணைகள் தொடக்கம் பெற்றன எனலாம். அவரைத் தொடர்ந்து பிளேட்டோ, அரிஸ்டோட்டில் ஆகியோரும் அழகியல் பற்றிய விசாரணைகளைத் தொடர்ந்தனர். காலப்போக்கில் கான்ட், ஹெகல் போன்றோரும் அழகியல் தொடர்பான கருத்துகளை முன்வைத்தனர். அழகியல் என்னும் சொல்லுக்குரிய பொருளை, அச்சொல்லுக்கு ஏற்ப பயன்படுத்தியவராக ஹெகல் விளங்குகிறார். அழகியல் கோட்பாட்டுக்கு உரிய முறையில் ஆழமாக அதனைப் பயன்படுத்தியவர், ஹெகலே ஆவர். அழகியல், கலை இலக்கிய விமர்சனம் தொடர்பில் மார்க்சிய அழகியல் ஒரு முன்னேற்றகரமான பாதையை ஏற்படுத்தியது. மார்க்சிய அழகியலைப் பொறுத்தவரை, கலையின் சாராம்சத்தையும், கலையின் அடிப்படை விதிகளையும், கலைப்படைப்பாக்கத்தின் இயல்புகளையும் உள்ளடக்கிய விஞ்ஞானமாகவே அது அழகியலை நோக்குகிறது. அழகியலோடு தொடர்பான கலைத்துவம் என்பது, கலையின் படைப்பாக்கம், செய்நேர்த்தி ஆகியவற்றைக் குறித்துநிற்கிறது. கலை இலக்கியத்தில் என்ன கூறப்படுகிறது என்பதை விடவும், எப்படிக் கூறப்படுகிறது என்பதை நோக்குவதே அழகியலின் அடிப்படையாகும் என்பர். இக்கட்டுரை அழகியல் நோக்கில் நாட்டுப்புற இலக்கியத்தை நோக்குவதாக அமைகிறது.

எம் மொழி இலக்கியங்களை நோக்கினும், என்றும் அவற்றின் முன்னோடிகளாக விளங்குபவை, நாட்டுப்புற இலக்கியங்களாகும். ஏட்டு இலக்கியங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குபவையும் அவையே ஆகும். தமிழைப் பொறுத்தவரையிலும், சங்க இலக்கியங்களுக்கு முன்தோன்றி, அவற்றுக்கு முன்னோடியாக விளங்கியவை, நாட்டுப்புற இலக்கியங்களே. காலப்போக்கில் அவை தனியாகவும், ஏட்டு இலக்கியங்களோடு இணைந்தும் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியம், நாடோடி இலக்கியம், வாய்மொழி இலக்கியம், பாமர இலக்கியம், கிராமிய இலக்கியம், நாட்டார் இலக்கியம் எனப் பல்வேறு பெயர்களால் இவ்விலக்கியம் குறிப்பிடப்படுகின்றது.

நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு வகையான நாட்டுப்புறப் பாடல்கள், நாகரிக வாசனை வீசாத கிராமியப் பகைப்புலத்தில் தோன்றி, ஆக்கியவரின் பெயரை அறிய இயலாது, எல்லோர் நாவிலும் பயின்று வந்துள்ளன. எளிய சொற்களும், பேச்சுவழக்கும், இசைத் தன்மையும், பாடல் அடிகள் திரும்பத் திரும்பப் பாடப்படும் இயல்பும் கொண்டவையாக அப்பாடல்கள் விளங்குகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் தாலாட்டு முதல் ஒப்பாரி வரை மனித வாழ்வோடு இயைந்த பல்வேறு அம்சங்களையும் தம்முள் அடக்கி வளர்ந்துவந்துள்ளன. தமிழில் சங்ககாலக் கவிஞர் முதல் இளங்கோ, மாணிக்கவாசகர், பாரதி உட்படப் பல்வேறு கவிஞர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதித்து, தமது செல்வாக்கை அவை உணர்த்திவந்துள்ளன. கோபாலகிருஷ்ண பாரதியார் போன்றோர் தமது கீர்த்தனைகளுக்கு வளம் சேர்ப்பதற்கு நாட்டுப்புறப் பாடல் வடிவங் களையும் கையாண்டுள்ளனர். கொத்தமங்கலம் சுப்பு, திருலோக சீதாராம், சுரபி போன்ற கவிஞர்கள் நாட்டுப்புறப் பாடல் மரபிலேயே தமது கவிதைகளை எழுதி, தம்மாலான முறையில் தமிழுக்குப் புதிய வளத்தைச் சேர்த்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் யுகக் கவிஞர் பாரதி, நாட்டுப்புற இலக்கியத்தில் தாம் கொண்ட இயல்பான ஈடுபாட்டைக் குயில்பாட்டின் ஓரிடத்தில் குதூகலத்தோடு குறிப்பிடுகிறார்.

*ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்குங்*
*கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்*
*சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்*
*பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்*
*வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்*
*கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்*

தாம் நெஞ்சைப் பறிகொடுத்தமை பற்றி, அவர் சுவை ததும்பக் கூறுகின்றார்.

நாட்டுப்புறப் பாடல்கள் வாய்மொழியாகவே பரவிவந்துள்ளன. அதனால், அவற்றில் மாற்றங்கள் ஏற்படுவதும் இயல்பானதே. அத்தகைய மாற்றங்கள் திரிபு வடிவம், மாற்றுவடிவம் எனப் பெயர் பெறுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்தும் களநிலைப் பாடல்கள் என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. அவை பெரும்பாலும் பாவனைப் பாடல்களாகவே விளங்குவதைக் காணலாம். நாட்டுப்புறப் பாடல்களில் எதுகையை விட மோனைக்கே அதிகம் இடமளிக்கப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. இவற்றில் பெரும்பாலும் தனிச் சொற்கள் இடம்பெறுவதுண்டு. இவை சொற்களின் சேர்க்கைக்கும், பாடல்களின் நீட்டிசைப்புக்கும் துணை புரிவனவாக விளங்குகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழில் பாடல்கள், காதல் பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், கதைப் பாடல்கள் எனப் பலவகைப்படுகின்றன. இவற்றுள் தாலாட்டும், ஒப்பாரியும் பெண்களாலேயே பாடப்படுகின்றன. கும்மியும் பெரும்பாலும் பெண்களால் பாடப்படுகின்றன. விளையாட்டுப் பாடல்கள் சிறுவர் பாடல்களாக அமைந்துள்ளன. தொழில் பாடல்கள், காதல் பாடல்கள் முதலியன இருபாலாரும் சேர்ந்து பாடுவனவாக விளங்குகின்றன.

தாலாட்டுப் பாடல்கள் பொதுவாக ஆராரோ, ஆரிரரோ, ஓரோரோ, ஓஓஓஓ, ஓராரோ, ரிரிரி, ரோரோரோ போன்ற முன்னோட்ட இசையைக் கொண்டிருக்கும். பிரதேசத்துக்குப் பிரதேசம், சாதிக்குச் சாதி இத்தகைய முன்னோட்ட இசை வேறுபாடுகள் இடம்பெறுகின்றன. பெண் ஒருத்தி தாலாட்டுப் பாடத் தொடங்கும் முன் சிணுங்குவது வழக்கம். இத்தகைய சிணுங்கல் ஒரு சிணுங்கல், இரண்டு சிணுங்கல், மூன்று சிணுங்கல் எனவும் அமைவது உண்டு. தாலாட்டுப் பாடல் ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது:

*ஆரடித்தார் ஏன் அழுதாய்?*
*அடித்தாரைச் சொல்லியழு - நான்*
*அடிக்கு அடியே வாங்கிடுவேன் - நீ*
*கூவி அழுவதென்ன*
*குயிலின் குரல்நோக? - நீ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஏங்கி அழுவதென்ன*
*ஏலப்பூ வாய்நோக? - நீ*
*பாடி அழுவதென்ன - உன்*
*பவளப்பூ வாய்நோக?*

நாட்டுப்புறக் காதல் பாடல்கள் காதலின் சிறப்பைப் பாடுவனவாக மாத்திரம் அமையவில்லை. அவை காதல் தோல்வி, மணமுறிவு, பொருந்தா மணம், கள்ள உறவு முதலானவற்றையும் எடுத்துரைக்கின்றன மானுடவியல் அறிஞர் எல்வின் குறிப்பிடுவதைப் போல, உண்மையான, வெளிப்படையான, ஒழிவுமறைவற்ற காதல் பாடல்களாக நாட்டுப்புறக் காதல் பாடல்கள் இருக்கின்றன.

நாட்டுப்புறக் காதல் பாடல்களில் சுட்டி ஒருவர் பெயர் கொளப்படும் முறை இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆயினும், சுட்டி ஒருவர் பெயர் கூறும் முறை சில பாடல்களில் இடம்பெறுவதைக் காணலாம். பின்வரும் பாடல் அதற்கு உதாரணமாக விளங்குகிறது:

*கொத்து மல்லித் தோட்டத்திலே*
*குளிக்கப் போயி நிக்கையிலே*
*அத்தை மகன் முத்துசாமி*
*அத்தெறிந்தான் பிச்சிச் சரம்...*

காதல் பாடல்களில் இடம்பெறும் வெளிப்படைத்தன்மைக்குப் பின்வரும் பாடல் ஓர் உதாரணம்:

*மாங்கனியும் இல்லையடா*
*தேங்கனியும் இல்லையடா*
*பால்குடிக்கும் பாலனுக்கு*
*பால்குடம் கொண்டுபோறேன்.*

காதல் பாடல்களில் ஆணும், பெண்ணும் சேர்ந்து பாடுகின்ற போக்கும் காணப்படுகிறது. அதேவேளை, ஆணும், பெண்ணும் தனித்தனியாகப் பாடும் முறைமையும் இடம்பெறுகின்றது. நாட்டுப்புறக் காதல் பாடல்கள் பெரும்பாலும் தெம்மாங்குப் பாடல்களாகவே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற இலக்கியத்தின் பிறிதொரு வகையாக அமைவன, நாட்டுப்புறக் கதைகளாகும். நாட்டுப்புறக் கதைகள் தொடர்பாக நா. வானமாமலை கூறுவன மனங்கொள்ளத்தக்கன:

நாட்டுக் கதைகள் சமூகத்தையும் அதன் உறுப்பான குடும்பத்தையும் சித்தரிக்கின்றன. குறிப்பிட்ட சமூக வளர்ச்சிக் கட்டத்தில் குடும்ப உறுப்பினர்களிடையே நிலவும் உறவுகளைச் சித்தரித்து பிரச்சனைகளையும் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டின் மானிட மதிப்புகளை (Human Values) உருவாக்கி, அவற்றை எடைக்கல்லாகக் கொண்டு, மனிதர்களின் செயல்களையும், சிந்தனைகளையும், சமூக வழக்கங்களையும் மதிப்பிடுகிறது. இந்த மானிட மதிப்புகளின் அடிப்படையில் அரசியல், சமூக நிகழ்ச்சிகளை விமர்சிக்கிறது. கேலியும் நகைச்சுவையும் கலந்து இக்கதைகள் நீதி போதிக்கின்றன. நீதி அம்சம் பெரும்பாலான கதைகளில் முனைப்பாக உள்ளன. நமது கிராம மக்களின் பண்பாட்டு வரலாற்றை அறிந்துகொள்ள இக்கதைகள் பெரிதும் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புறக்கதைகளில் மக்களின் இயல்பான பேச்சுவழக்குகளும், சமுதாய நடை முறைகளும் இடம்பெறுவதைக் காணலாம். அவற்றின் அழகியல் கவர்ச்சியும் அவை செல்வாக்குப் பெறக் காரணமாக அமைகிறது.

நாட்டுப்புற இலக்கியங்கள் நீண்டகாலமாகப் பல்வேறு கவிஞர்களையும் பெருமளவு பாதித்துவந்துள்ளன. தமிழ்த் திரைப்படங்களில் பல்வேறு கவிஞர்களும் நாட்டுப்புறப் பாடல்களை அடியொற்றிப் பல பாடல்களைப் புனைந்துள்ளனர். அவை திரைப்படப் பாடல்களுக்குப் பொருளிலும், அமைப்பிலும், இசையிலும், சுவையிலும் வளம் சேர்த்துள்ளன. உடுமலை நாராயணகவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், என்.எஸ். கிருஷ்ணன், முகவை ராஜமாணிக்கம், சுந்தர வாத்தியார், கு.மா. பாலசுப்பிரமணியம், கா.மு.ஷெரிப், கண்ணதாசன், பஞ்சு அருணாசலம், கே.சி.எஸ். அருணாசலம், கலைஞானம், புலமைப்பித்தன், நெல்லை அருள்மணி, வைரமுத்து, முத்துலிங்கம், நா. காமராசன், கங்கை அமரன் போன்றோர் தமது திரைப்படப் பாடல்களில் நாட்டுப்புற இலக்கியங்களின் வடிவங்களையும், பாணியையும், சாயலையும் புகுத்தியவர் களாக விளங்குகின்றனர்.

இசையமைப்பாளரைப் பொறுத்தவரையில் ஜி. ராமநாதன், கே.வி. மகாதேவன், புகழேந்தி, மாஸ்டர் வேணு, விஸ்வநாதன், ராமமூர்த்தி, இளையராஜா, நரசிம்மன், தேவா உட்படக் கணிசமானோர் நாட்டுப்புற இலக்கிய மெட்டுக்களில் இசையமைத்து, திரைப்படப் பாடல்களைச் செழுமையுறச் செய்துள்ளனர்.

நாட்டுப்புற இலக்கியங்கள் கிராமங்களின் உயிர்ப்பையும், ஊக்கத்தையும், உழைப்பை யும், களிப்பையும், சுகத்தையும், சோகத்தையும் எடுத்துக்காட்டுகின்றன. உழைப்பில் ஈடுபடும் மக்கள், தங்கள் களைப்பை மறப்பதற்கு இனிய பாடல்களைப் பாடி இன்புறுவர். அத்தோடு, கிராமத்து முக்கிய நிகழ்ச்சிகளின்போதெல்லாம் எல்லோரையும் அழைத்து, உழைத்து மகிழ்வது கிராம மக்களின் வழக்கமாகும். தமிழ்நாட்டுக் கிராமங்களில் தொன்றுதொட்டு இவ்வழக்கம் இருந்துவருவதைக் காணலாம். இத்தகைய அம்சத்தைக் கொண்ட சுவையான திரைப்படப் பாடல் மனத்தைக் கவரும் முறையில் விளங்குகிறது.

*அடி ராக்காயி மூக்காயி*
*குப்பாயி சரஸ்வதி*
*கஸ்தூரி மீனாட்சி*
*தங்கப்பல் காரையா*
*தங்க மகளுக்கும்*
*வாத்தியா ரையாவுக்கும்*
*தைமாசம் கல்யாணம்*
*நெல்லுக்குத்த வாங்கடியோ*

*சுத்தச்சம்பா பச்சைநெல்லுக்*
*குத்தத்தான் வேணும்*
*முத்துமுத்தாப் பச்சரிசி*
*அள்ளத்தான் வேணும்*
*முல்லைவெள்ளி போல அள்ளிப்*
*பொங்கத்தான் வேணும்*
*நம்மவீட்டுக் கல்யாணம் - இது*
*நம்மவீட்டுக் கல்யாணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தொடர்ந்துசெல்லும் அப்பாடலை, எஸ். ஜானகி குழுவினர் அதியற்புதமாகப் பாடியுள்ளனர்.

பொதுவாகக் கிராமவாசிகளுக்குப் பட்டண வாழ்க்கைமீது கவர்ச்சியிருப்பது உண்டு. பட்டண வாழ்க்கையச் சொர்க்கம் என்றும், சுகத்தின் விளைநிலம் எனவும், இனிய பொழுதுபோக்குகளின் இருப்பிடம் என்றும், வருமானத்துக்கு உரிய வழிவகைகள் காட்டும் இடம் எனவும் கிராமவாசிகள் கருதுவது உண்டு. இக்கரைக்கு அக்கரை பச்சை அல்லவா? இதே அடிப்படையைக் கொண்டு, சுவை மிகுந்த திரைப்படப் பாடல் ஒன்றைப் புனைந்துள்ளார், உடுமலை நாராயணகவி. பட்டண வாழ்வை விரும்பும் கணவன் ஒருவனையும், அதனை வெறுத்துக் கேலி செய்யும் மனைவி ஒருத்தியையும் நாட்டுப்புறப் பாடல் அடிப்படையில் அமைந்த அப்பாடலில் காணலாம்.

*பட்டணந்தான் போகலாமடி - பொம்பளே*
*பணங்காசு தேடலாமடி - நல்ல*
*கட்டாணி முத்தே - என்*
*கண்ணாட்டி நீயும்*
*வாடி பொண்டாட்டித் தாயே*

*டவுணுபக்கம் போகாதீங்க - மாப்புளே*
*டவுணாகிப் போயிடுவீங்க - அந்த*
*டாம்பீகம் ஏழைக்குத்*
*தாங்காது பயணம்*
*வேண்டாம்னாக் கேளுமாமா*

எனத் தொடங்கும் அத்திரைப்படப் பாடல், பட்டண வாழ்வு பற்றிய சுவாரசியமான விமர்சனமுமாக அமைந்துள்ளது.

இவை போன்றே தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், காதல் பாடல்கள், கதைப்பாடல்கள் முதலியனவும் திரையிசையில் இடம்பெற்றுவந்துள்ளன. இவை மாத்திரம் அன்றி, இலாவணி, வில்லுப்பாட்டு, கும்மி, கரகம் முதலானவை தொடர்பான பாடல்களும் திரையிசைப் பாடல்களாக வெளிவந்துள்ளன.

தமிழர் சமுதாயத்தில் நீண்டகாலமாகக் கூத்துகள் இடம்பெற்றுவந்துள்ளன. இவற்றுள் தெருக்கூத்தும் ஒன்றாகும். புராண, இதிகாசக் கதைகளினின்றும் பெறப்பட்ட கதையம்சங் களைப் பெரும்பாலும் கொண்டிருக்கும். தெருக்கூத்தின் செல்வாக்கினை திரையிசைத் துறையிலும் காணலாம். நவராத்திரி திரைப்படத்தில் இடம்பெறும் சத்தியவான் சாவித்திரி தெருக்கூத்து இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற இலக்கியம் ஒரு சமுதாயத்தின் உயிர்த்துவமான உணர்வுகளை செயற்கைப் பூச்சுகள் இன்றி இயல்பாகக் காட்டுகின்றது. அத்தகைய இலக்கியத்தின் செல்வாக்கு, பல்வேறு துறைகளிலும் பரந்து காணப்படுவதைப் போன்று, திரைப்படப் பாடல்களிலும் ஊடுருவி, அத்துறைக்குச் செழுமையூட்டி வந்துள்ளது. மேற்கத்தைய ஆரவார இசைகளுக்கு மத்தியில், நமது மண்ணின் மணத்தை நுகரச் செய்யும் நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் திரைப்படப்பாடல்களுக்குப் புதிய வலுவையும், வனப்பையும், வளத்தையும் சேர்த்துவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புற இலக்கியத்துக்கே உரிய தனித்துவமான இயல்புகளோடு, அவற்றின் அழகியல் அம்சமும் சேர்ந்தே அவற்றுக்கெனத் தனிச் செல்வாக்கைத் தேடித்தந்துள்ளது. அழகியல் நோக்கில் நாட்டுப்புற இலக்கியங்களை நோக்குவது ஒரு சுவாரசியமான அனுபவமாகும்.

## உசாத்துணை நூல்கள்

இளங்கோ, நா. (2005) நாட்டுப்புறக் காதல் பாடல்களும் அகப்பொருள் மரபுகளும், சென்னை: காவ்யா.

கனகசபை, த. (2004) நாட்டுப்புறப் பாடல்களின் அழகியல் கட்டமைப்பு, சென்னை: பொன்னி.

சண்முகசுந்தரம், சு. (1976) நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, சென்னை: இலக்கிய மாணவர் வெளியீடு.

மனோகரன், துரை. (2005) பழம் புனலும் புது வெள்ளமும், கண்டி.

ராஜநாராயணன், கி. (பதிப்பு) (1991) நாட்டுப்புறக் கதைகள் - ஒரு பன்முகப் பார்வை, சிவகங்கை: அன்னம்.

ராஜநாராயணன், கி. (2002) கிராமியக் கதைகள், தஞ்சாவூர்: அகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயவியல் நோக்கில் நாட்டார் வழக்காற்றியல்

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

## அறிமுகம்

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் அறிவியலில் ஏற்பட்ட வளர்ச்சி மனிதர்களையும் அவர்களது வாழ்க்கை முறைமைகளையும் கற்கின்ற பல்வேறு துறைகள் வளர்ச்சியடையக் காரணமாகியது. நாட்டார் வழக்காற்றியலும் அவ்வாறு வளர்ச்சியடைந்த துறைகளுள் ஒன்றாகும்.

இலக்கியத்தின் உருவாக்கத்திலும் அதன் பொருள் அமைவுகளிலும் மக்கள் மத்தியிலான அதன் பரம்பலிலும் சமுதாயத்திற்கு முக்கிய இடமுள்ளது என்ற கருதுகோள் அடிப்படையில் இலக்கியத்தை நோக்குவது சமுதாயவியல் அணுகுமுறையாகும். இவ்வணுகுமுறையானது படைப்பாளியின் பின்னணி அல்லது களம் அவர்தம் படைப்பிற்கான கருவினைத் தீர்மானிக்கின்றது என்பதை வலியுறுத்துகின்றது. ஒரு படைப்பானது அது எழுந்த சமுதாயத்தை உள்ளவாறே பிரதிபலிக்கின்றது என அறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும் சமுதாயப் பின்புலத்திலிருந்து எந்தவொரு படைப்பாளியும் விலகிச் சென்றுவிடுவது கடினமானதென்பதும் உணரப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் நாட்டார் வழக்காறுகளை சமுதாயவியல் அணுகுமுறையில் நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. இதன் மூலம் நாட்டார் வழக்காறுகளை உருவாக்குவதிலும் அவற்றை நிலைபெறச் செய்வதிலும் அல்லது கைவிடுவதிலும் சமூகத்தின் செல்வாக்கு உள்ளமையை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாட்டார் வழக்காறுகள் நாட்டார் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கதைகள், நம்பிக்கைகள், சடங்குகள், கலைகள் என பல்வேறு விடயங்களை உள்ளடக்கியவை. அவை வழங்கும் பிரதேசத்திலுள்ள மக்கள் சமுதாயத்தின் பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுவனவாகவும் சமுதாய நடைமுறைகளைப் பதிவு செய்வனவாகவும் இவை செயற்படுகின்றன.

சமுதாயத்திற் காணப்படும் உடன்பாடான விடயங்களை மட்டுமன்றி முரணான விடயங்களையும் எதிர்ப்புணர்வினையும் அரசியல் சமூக நிலைகளுக்கு அப்பால் மிக வெளிப்படையாகவே பேசுகின்ற பண்பினையுடையனவாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக நாட்டார் இலக்கிய வடிவங்களான பாடல்கள், கதைகள் ஆகியவற்றில் இப் பண்பினைச் சிறப்பாகக் காண முடியும். சமூகத்திற் செயற்படும் முரண்சக்திகளும் நாட்டாரியலில் வெளிப்பட்டிருக்கின்றன.

ஆளுவோர் - ஆளப்படுவோர்: நகரத்தார் - கிராமத்தார்: பெரும்பான்மையினர் - சிறுபான்மையினர்: உயர்ந்த சாதி - தாழ்ந்த சாதி: ஆண் - பெண்: முதலாளி – தொழிலாளி என யாவும் இதனுள் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயவியல் நோக்கில் நாட்டாரியலைப் புரிந்துகொள்வதற்கு நாட்டார் இலக்கிய வடிவங்களில் சிலவற்றினை இக்கட்டுரை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

பெண்கள் தொடர்பாக தமிழ்ச் சமூகத்தில் வழங்கும் பழமொழிகள் அவை உருவாக்கப்பட்ட சூழலில் பெண்களின் சமூக நிலைமை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையை உணர்த்துவன. 'பொம்பள சிரிச்சா போச்சு புகையில விரிஞ்சா போச்சு', 'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை', 'தாய் எட்டடி பாய்ந்தால் மகள் பதினாறு அடி பாய்வாள்', 'பெண் புத்தி பின் புத்தி', 'வேரோடி விளாத்தி முளைச்சாலும் தாய் வழி தப்பாது'. 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?', 'பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்: தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்'. முதலானவை அத்தகையன.

'வேரோடி விளாத்தி முளைச்சாலும் தாய் வழி தப்பாது' என்னும் பழமொழி சமூக அமைப்பில் தாய்வழி மரபிலேயே 'குடிமரபு' மாற்றப்படும் நடைமுறை குறித்த பழமொழி. இந்நடைமுறை பின்பற்றப்படும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இப்பழமொழி வழங்குகின்றது. தற்காலத்தில் இப்பழமொழியானது பெண்பிள்ளைகள் சம்பந்தப்பட்ட வரையில் தாயைக் குறை கூறும் நோக்கிலேயே பபயன்படுத்தப்பட்டு வருவது அவதானிக்கத்தக்கது.

'நாய் அறியுமா ஒருசந்திப் பானையை?" என்பது கிறிஸ்தவ சமூகத்தில் வழங்கப்படும் ஒரு பழமொழியாகும். 'ஒருசந்தி' எனக் குறிப்பிடப்படுவது கிறிஸ்தவர்களால் கடைப் பிடிக்கப்படும் விரத முறைகளுள் ஒன்றாகும். விபூதிப்புதன் (Ash Wednesday) பெரிய வெள்ளி (Good Friday) முதலான நாட்களில் குழந்தைகள், வயோதிபர், நோயாளிகள் தவிர்ந்த ஏனையோர் ஒரு வேளை மட்டும் உண்ண வேண்டும் (ஒரு சந்தி) என்பதும் 'சுத்த போசனமாக' (மாமிசத் தவிர்ப்பு) உண்ண வேண்டும் என்பதும் திருச்சபைச் சட்டமாகும். எனவே இச்சூழலில் அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அவ்வுணவினை நாய் உண்டுவிட்டால் எவ்வித நிலைமையிருக்கும் என்பதன் ஊடாக அவ்விரதத்தின் மகிமையை அறியாத அதன் தன்மையையும் இப்பழமொழி குறிப்பால் உணர்த்துவதைக் காணலாம். 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?' என்னும் பழமொழியோடு இது ஒத்த தன்மையுடையது.

இங்கு சமுதாயச் சித்திரிப்பு முதன்மை பெறுவதைக் காணலாம். அதன் பன்முகத் தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டியதும் அவசியமானது. ஒவ்வொரு சமூகமும் தனது இருப்பிற்கான போராட்டத்தில் சில பொதுவான சமூக மதிப்புகளை அல்லது விழுமியங்களைக் கட்டமைத்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகும்.

இந்த விழுமியம் சமுதாயத்தின் ஆன்மா எனக் கருதப்படுகின்றது. சமுதாயவியல் நோக்கில் இது இன்றியமையாதது. விழுமியங்கள் குறிப்பிட்ட சமூக, அரசியல் மற்றும் சமய, பண்பாட்டுப் பின்னணியில் தோன்றுவதனால் இந்நிலைமைகள் மாறுகின்றபோது அதன் மதிப்புகளும் மாறக்கூடியனவாகின்றன.

அதேவேளை சமூக மதிப்புகளுட் சில அதனை உருவாக்கிய சமூகச் சூழல் மறைந்துவிட்ட பின்பும் தொடர்ந்து வாழ்வனவாகவும் அமைகின்றன. ஆக, ஒரு குறிப்பிட்ட காலத்தில் முதன்மை பெறும் விழுமியங்கள் பிறிதொரு சூழலில் பாரமாகி அல்லது மதிப்பிழந்து போய்விடுவதும் உண்டு.

இதனை ஈழத்து நாட்டார் பாடல்களில் தாலாட்டு மற்றும் ஒப்பாரி ஆகிய பாடல்களில் காணலாம். குழந்தைப் பேறற்ற திருமணமான பெண் குறித்த தமிழ்ச் சமூக மதிப்பீடுகளைக் குறிப்பிட முடியும். சுப காரியங்களில் முன்னிலைப்படுத்தப்படாமை உட்பட 'மலடி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சொல்லாட்சி மூலம் இத்தகு பெண் இகழ்ந்துரைக்கப்படுகிறாள். எனவே 'பிள்ளைக்கலி தீர்க்க வந்த குழந்தையை' தாலாட்டுகின்றபோது சமூக அந்தஸ்தை பெற்றுத் தந்தமைக்காக வாழ்த்துவதாக அமைவதைக் காணலாம்.

*மலடி மலடியென்று*
*மாநிலத்தோர் ஏசாமல்*
*மலடிக்கொரு குழந்தை*
*மாயவனார் தந்த பிச்சை*

எனவும்

*தங்க மகனே அழகுகண்டார்*
*தனி மலடு தீர்த்தவனே*
*பிள்ளை வேணுமெண்டு*
*நாங்க கதிர்காமம் போகையிலே*
*கதிர்காமக் கந்தன்*
*பிள்ளைக்கலி தீர்த்தானையா*

எனவும் நாட்டார் தாலாட்டுப் பாடல்கள் அமைகின்றன.

இலங்கையில் இன முரண்பாடுகளால் தோற்றுவிக்கப்பட்ட சூழல், பலரின் துர்மரணத் திற்குக் காரணமாயிற்று. கைதுகளும் சித்திரவதைகளும் கொலைகளும் அதிகரித்தன. பிள்ளைகளின் சடலங்களை வீதிகளில் காணும் அவலம் நேர்ந்தது. ஆண் மக்களைப் பெற்றிருக்கக் கூடாது என்ற மனநிலையைத் தோற்றுவிக்கும் அளவிற்கு பெற்றோர், குறிப்பாகத் தாய்மார் பெருந்துயரை அனுபவித்தனர். பின்வரும் ஒப்பாரிப் பாடல் போராளியாய் மாண்ட மகனை இழந்த தாயின் துயரை வெளிப்படுத்துகின்றது.

*நீ போருக்கு போனடத்தை*
*போராடி மாண்டாய் ஐயா*
*மகனே*
*பாரத்துவக்கெடுத்தோ*
*உங்களுக்கு*
*பயந்தவெடி வைச்சானோ*
*உங்களுக்கு பெரிய துவக்கெடுத்தோ*
*உங்கள பேசாமல் சுட்டெறிந்தான்*
*மகனார்*
*உன்ன சந்தியில கண்டடத்தை*
*உன்னைப் பெத்த கறுமி*
*தலை வெடித்துப் போறனையா*
*மகனார் நீ கப்பலில வாராயெண்டே*
*நாங்க கடலருகில் காத்திருந்தோம்*

*மகனே நீ*
*இருந்த இடத்தைப் பாத்தாலும்*
*இரு தணலாய் மூளுதையா*
*.........................................*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனே
உன்னைப் பெற்ற கறுமி நான்

இங்கே உப்பளந்த நாழியைப்போல்
நீ இல்லாம
நாள்தோறும் உக்கிறேனே

காலத்திற்குக் காலம் ஏற்படும் அரசியல், சமூக மாற்றங்கள் சமூக மதிப்பீடுகளையும் மாற்றத்திற்கு உள்ளாக்குவதை மேற்குறித்த உதாரணங்கள் தெளிவுறுத்துகின்றன.

ஒப்பாரி தொடர்பாக அவதானிக்கின்றபோது இது தொடர்பில் கத்தோலிக்கர் மத்தியில் வழக்கிலிருந்த 'புலம்பல்' வகையொன்றினையும் இவ்விடத்திற் குறிப்பிடுவது பொருத்தமானது. பொதுவாக கிறிஸ்தவர்கள் மரண வீடுகளில் 'ஒப்பு'ச் சொல்லி அழுவதில்லை.

ஆயினும் இலங்கையில் கத்தோலிக்கம் பரப்பப்பட்ட 16ஆம், 17ஆம் நூற்றாண்டுக் காலத்தில் இந்து மரபுடன் இணைந்ததான கிறிஸ்தவ புலம்பல் கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்திலுள்ள சொறிக்கல்முனை என்னும் கிராமத்தில் வழங்கியமையை அறிய முடிந்தது. தமிழ் மரபைப் புறந்தள்ளாமல் அதேவேளை கத்தோலிக்க மதக் கருத்துக்களை குறிப்பாக இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்ட புலம்பல் மரண வீடுகளில் பாடப்பட்டன. 'காதல் மரித்தோர் புலம்பல்' என அழைக்கப்படும் இம்மரபு வாய்மொழியாகப் பின்பற்றப்பட்டு வந்தது. சடலம் வீட்டிலிருந்து எடுக்கப்பட்டு இடுகாட்டிற்குச் செல்லும் வழிவரையிலும் இப்புலம்பல் பாடப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1950கள் வரை இந்நடைமுறை அங்கு வழக்கிலிருந்ததாகத் தெரியவருகின்றது.

கிறிஸ்தவர்களிடையே 'ஒப்பாரி' வழக்கம் கடைப்பிடிக்கப்படாமைக்கு மத அனுஷ்டான விசுவாசம் காரணமாக அமைந்திருக்கலாம். யாழ்ப்பாணத்தில் வழங்குவதாகக் குறிப்பிடப்படும் பின்வரும் ஒப்பாரிப் பாடல் இதனை உணர்த்துகிறது. கிறிஸ்தவப் பெண் ஒருவரது மரண வீட்டில் ஒப்பாரி வைத்து அழாமையைக் கண்டு அப்பெண்ணின் உறவினரும் சைவ சமயத்தைச் சேர்ந்தவருமான ஒரு பெண்ணின் ஒப்பாரியாக இது அமைகின்றது.

"என்ரை ஆத்தை இவை வேதசமயமெணை
விரும்பி அழ மாட்டினமாம்
நாங்கள் சைவ சமயமெணை
உன்னோட சருவி அழ மாட்டினமாம்

ஊர்தேசம் விட்டாய்
உறவுகளைத்தான் மறந்தாய்
மேபிள் துரைச்சியென்று இஞ்ச
மேட்டிமைகள் பேசுகினம்
ஊரும் அழவில்லையெணை
என்ரை ராசாத்தி
உறவும் அழவில்லையெணை"

என இந்த ஒப்பாரி அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து முஸ்லிம்களிடையே வழங்கும் நாட்டார் வழக்காறுகளும் அச்சமூகத்தின் நிலைமைகளையும் பண்பாட்டுப் பேணலையும் எடுத்துக் காட்டுவனவாய் அமைகின்றன. உதாரணமாக:

அ) வேளாண்மைச் செய்கையின்போது காவல் பரணில் காலம் கழிக்கும் காதலன் தன் காதலியை நினைத்தேங்கும் நிலையைப் பின்வரும் பாடல் எடுத்தியம்புகின்றது.

*காவல் பரணில்*
*கண்ணுறங்கும் வேளையிலே*
*கண்ணான மச்சி வந்தென்*
*காலூான்றக் கனவு கண்டேன்*

ஆ) தலைவனின் பிரிவு குறித்ததாக அமையும் பின்வரும் பாடலில் கிழக்குப் பிரதேச உணவுப் பழக்கமும் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

*சீனெட்டி நெல்லும்*
*சிவந்த இறால் ஆணமும்*
*பொத்துவில் ஊரும்*
*பொருந்தினதோ உங்களுக்கு*

இ) பின்வரும் பாடல் தலைவியின் கூற்றாக இடம்பெறுகின்றது.

*காத்தான்குடிக்கு*
*கரத்தை கொண்டு போற மச்சான்*
*சீத்தை இரண்டு முழம் அந்தச்*
*சீமையிலே பஞ்சமாமோ*

சமயச்சடங்குகளில் ஒன்றான 'தெப்பத் திருவிழா' குறித்த பதிவொன்றினையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. கத்தோலிக்க மரபில் இவ்வழக்கம் பின்பற்றப்படுவதைக் குறித்ததாக இது அமைகின்றது. ஆற்றங்கரை மற்றும் கடற்கரையோரங்களில் அமைந்திருக்கும் கத்தோலிக்க ஆலயங்களின் திருவிழாவின் ஒன்பதாம் நாள் சடங்கின்போது தெப்பத்திருவிழா நடைபெறுவதனைப் பெரும்பாலும் அவதானிக்கலாம். மட்டக்களப்பில் உள்ள அமிர்தகழி கப்பலேந்தி மாதா ஆலயச் சடங்கில் சிறப்பாக இதனைக் காணலாம். இச்சடங்கு இரவு வேளையில் நடைபெறும். அன்னை மரியாளின் திருச்சுரூபத்தைத் தாங்கிய படகு, ஏனைய படகுகளின் அணிவகுப்புடன் கடலும் ஆறும் சங்கமிக்கும் முகத்துவாரப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு வாவியில் பயணித்து மீளும். இச்சடங்கில் மீனவ சமூகத்தைச் சேர்ந்த இந்துக்களும் பங்குகொள்வது சிறப்பானதாகும். திருவிழாத் திருப்பலியின் பின்னர் இடம்பெறும் 'அன்னதானத்தினை' நாவலடிக்கிராம மக்கள் (அமிர்தகழிக் கிராமத்தை அண்டிய ஆற்றுக்கு அப்பால் உள்ளதும் ஒருபால் கடற்கரையை அண்டியதுமாக நாவலடிக் கிராமம் அமைந்துள்ளது. இந்துக்கள் வாழும் பிரதேசமாக இது உள்ளமை குறிப்பிடத்தக்கது.) வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மத நல்லிணக்கத்தின் அடையாளமாகப் பின்பற்றப்பட்டுவரும் இச்சடங்கு நாட்டார் வழக்கினூடாக சமுதாய நல்லிணக்கத்திற்குக் கிடைத்த சந்தர்ப்பமாகும்.

மட்டக்களப்பின் வடக்கு எல்லையில் அமைந்துள்ள மாங்கேணிக் கிராமத்தில் உள்ள மாதா ஆலயத் திருவிழாவிலும் தெப்பத் திருவிழா இடம்பெறும். கடலில் நடைபெறும் இச்சடங்கில் அங்கு வாழும் சிங்கள இனத்தவர்களும் அத்துடன் புத்தளம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்கொழும்பு முதலான இடங்களிலிருந்து வருகை தரும் சிங்கள இனத்தவர்களும் கலந்து கொள்வதுண்டு.

1980களின் பின்னரான இலங்கையின் போர்ச்சூழலானது மேற்கூறிய இரு ஆலயச் சடங்குகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தமையையும் இவ்விடத்திற் குறிப்பிட வேண்டும்.

எனவே சமூக வாழ்க்கை நடைமுறைகளை, வாழ்வு நெறிகளிலான மாற்றங்களை நாட்டார் வழக்காறுகள் அவ்வப்போது பெற்று வளர்ந்திருப்பதைக் கண்டுகொள்ள முடியும். செந்நெறி இலக்கிப் பாரம்பரியங்களோடு ஒப்பிடுகையில் அதில் காணப்படாத அளவிற்கு நாட்டார் இலக்கியங்களில் எதிர்ப்புக் குரல்களையும் காண முடிகின்றது. முதலாளிக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தினரதும், அடக்குமுறைக்கு எதிரான ஆளப்படுவோரதும் கருத்துக்களைத் தாங்கிய வகையில் சமுதாயத்தைப் பெரும்பாலும் பிரதிபலிப்பனவாகவும் சமூகப் பெறுமானங்களைப் பதிவு செய்வனவாகவும் நாட்டார் வழக்காறுகள் அமைவதைக் காணலாம்.

## உசாத்துணை


அம்மன்கிளி.மு, 2007, (தொகுப்பாசிரியர்) 'இலங்கைத் தமிழரிடையே வாய்மொழி இலக்கியம்', குமரன் புத்தக இல்ல வெளியீடு, கொழும்பு – சென்னை.

இளங்கோவன்.மு, 2006, 'நாட்டுப்புறவியல்', வயல்வெளிப் பதிப்பகம், கங்கை கொண்ட சோழபுரம், தமிழ்நாடு.

உதுமான் ஸாஹிப் எம்.வை, 2006, (தொகுப்பாசிரியர்) 'கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள்' முஹம்மது இப்ரரர் வெளியீட்டகம், அக்கரைப்பற்று.

சக்திவேல். சு., முதற்பதிப்பு: 1983, மறுபதிப்பு: 2001, 'நாட்டுப்புறவியல் ஆய்வு' மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சண்முகலிங்கம்.க, 1995 (பதிப்பாசிரியர்), 'தமிழ் நாட்டார் வழக்காற்றியல்', இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்பியல் நோக்கில் நாட்டார் வழக்காற்றியல்

கலாநிதி ம. நதிரா

**அமைப்பியல்வாதம்** (Structuralism)

அமைப்பியல்வாதம் என்பது சமூக விஞ்ஞானத் துறைகளில் பெருமளவு தாக்கம் செலுத்தும் ஒரு கோட்பாடாகும். பேர்டினன்ட் டீ சசூரின் அமைப்பு மொழியியலிலிருந்து (structural linguistics) தோன்றிய இக்கோட்பாடு பல்வேறு சமூக, பண்பாட்டுத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தியது. மொழியின் அடிப்படையாக ஓர் ஒழுங்கு அல்லது அமைப்பு உள்ளது என்பதும் அவ்வடிப்படை அமைப்பே மொழியின் பல்வேறு உட்கூறுகளின் பயன்பாட்டை, அவற்றுக்கிடையிலான உறவைத் தீர்மானிக்கின்றதென்பதும் சசூரின் கருத்தாகும்.

ஒட்டுமொத்த மொழி ஒழுங்கையும் (Langue), ஒரு தனித்த கூற்றையும் (Parole) வேறுபடுத்திப் பார்க்கும் அவர், மொழியை மேலிருந்து கீழான வரலாற்று நோக்கில் ஆராயும் நோக்கை விடுத்து அதைக் கிடைநிலையில் அதாவது ஒரு சமகாலத்தில் காணப்படும் மொழியின் அமைப்பையும் அதன் உள்ளீடுகளுக்கிடையிலான உறவுகளையும் ஆய்வு செய்தார். மொழி ஆகிய குறி இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன: குறிப்பான் (Signifier) – ஒலி, எழுத்து), குறிப்பீடு (Signified – பொருண்மை) என்பனவாகும். ஒலிக் குறியீடுகளுக்கிடையேயான வேறுபாடுகளையே மொழியமைப்பின் அடிப்படைகளாக அவர் கருதுகின்றார்.

மொழி என்பது யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கான முழுமையான ஒரு குறியீட்டு ஒழுங்காகும். யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதிலும் அதை வெளிப்படுத்துவதிலும் மொழியின் கட்டமைப்பு முக்கியமான பாத்திரம் வகிக்கின்றது என்பது அவரது கருத்தாகும். மொழியை ஒரு முழுமையான குறியீட்டு ஒழுங்காகவும், தனிநபர் கூற்றை அவ்வொழுங்கின் ஒரு பகுதியாகவும் சசூர் விளக்குகிறார். மனிதர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதை இம்மொழிக் கட்டமைப்பு உட்பட்ட பல்வேறு குறியீட்டுத் தொகுதிகளின் அமைப்புக்களே தீர்மானிக்கின்றன என்பது (சசூரின் அமைப்பு மொழியியலின் அடிப்படையில் தோன்றிய) அமைப்பியல்வாதத்தின் கருத்தாகும்.

ஒரு மொழியை அதன் வரலாறு சார்ந்து ஆய்வு செய்யும் நோக்கில் இருந்து வேறுபட்டு அதன் அமைப்பு, அதன் உள்ளீடுகள், அவற்றிற்கிடையேயான உறவுகள் என்பவை தொடர்பாக சசூர் முன்வைத்த கருத்துக்கள் பல்வேறு கற்கை நெறிகளுக்கும் பொதுவானவையாகப் பயன்படுத்தப்பட்டன. மொழியியலைப்போலவே ஏனைய அறிவுத் தொகுதிகளையும் குறியீடுகளின் தொகுதியாக அடையாளம் காணும்போது அவ்வத்துறைகளிலும் குறியீடுகளின் அமைப்பே பொருண்மையைத் தீர்மானிப்பதாகக் கருத முடியும்.

மானுடவியலாளரான லெவி ஸ்ட்ரொஸ் (Claud Levi Strauss) பல்வேறு சமூக, பண்பாடு களிலும் ஒரு குறித்த அடிப்படை அமைப்புமுறை உள்ளதையும் அதன் அடிப்படையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் இயங்குகின்றன என்றும் கருதினார். குறிப்பாக குடும்ப உறவு முறைகள் (Kinship) தொடர்பாக பல்வேறு சமூகக் குழுக்களிடையே காணப்படுகின்ற சில பொதுவான விதிகளின் வழி இயங்குகின்ற கட்டமைப்பை ஆய்வு செய்து மானுடவியலில் அமைப்பியல்வாதத்தை அறிமுகப்படுத்தினார். இதேபோல் சமூகவியல், உளவியல், பண்பாட்டியல், இனஇசையியல் ஆகிய துறைகளிலும் அமைப்பியல்வாதம் அறிமுகப் படுத்தப்பட்டது. அமைப்பியல்வாதத்தின் அடிப்படைகளாவன:

1. மனிதச் சிந்தனையில் பொதுவான ஒரு கட்டமைப்பு உள்ளது.
2. இதனால் பல்வேறு அறிவுத் தொகுதிகளும் குறித்த கட்டமைப்புக்களின், விதிகளின் வழியே ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன.
3. அக்கட்டமைப்புக்களின் உட்பிரிவுகளின் செயற்பாட்டை அடிப்படைக் கட்டமைப்பு தீர்மானிக்கின்றது.
4. ஒரு சமூகத்தின் பண்பாடு மேற்கூறிய வகையிலான கட்டமைப்புக்களின் கூட்டிணைவே ஆகும்.
5. இலக்கியம் உட்பட்ட பண்பாட்டு வடிவங்களின் பொருண்மை என்பது ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்தக் குறியீட்டு ஒழுங்கின்(அமைப்பின்) அடிப்படையிலேயே உருவாக்கப்படுகின்றது.
6. மேற்கூறிய மொழி உட்பட்ட ஒட்டுமொத்தக் குறியீட்டுக் கட்டமைப்பின் ஊடாக மட்டுமே ஒரு தனிநபர் தனது கருத்துக்களை வெளிப்படுத்த முடியும்.
7. எனவே, ஒரு தனிநபரது தனிப்பட்ட அல்லது பண்பாட்டு வடிவம் சார்ந்த வெளிப்பாட்டை விட குறியீட்டுக் கட்டமைப்பே அமைப்பியல்வாதத்தில் முதன்மை பெறுகிறது.

இலக்கியத்தைப் பொறுத்தவரை அமைப்பியல்வாதம் ஒரு பிரதியின் அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. அத்துடன் அவ்விலக்கியப் பிரதியானது குறித்த இலக்கிய மரபின் விசாலமான கட்டமைப்பினுள் எவ்வாறு பொருந்துகிறது என்பது பற்றியும் அமைப்பியல்வாதம் ஆய்வு செய்கின்றது. உதாரணமாக ஒரு பிரதியின் யாப்பு, வடிவம், பல்வேறு இலக்கிய உத்திகள், அவை தொடர்பான இலக்கண விதிகள், அப்பிரதிக்கும் ஏனைய பிரதிகளுக்குமிடையிலான பிரதி உறவு (intertextuality) என்பன அமைப்பியலவாத இலக்கிய விமர்சனத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

பேர்டினனட் டி. சசூர், லெவிஸ்ட்ரொஸ், விளாடிமிர் ப்ரொப் (Viladimir Prop), ரோமன் ஜெக்கப்ஸன், ரோலண்ட் பாத் (Roland Barthes), லக்கான் (Jacques Lacan) ஆகியோர் அமைப்பியல்வாதத் திறனாய்வில் முக்கியமானவர்கள்.

## நாட்டார் வழக்காற்றியலில் அமைப்பியல் அணுகுமுறை

இருபதாம் நூற்றாண்டுகளில் நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் அறிவியல் அடிப்படையிலான சிந்தனைகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது அமைப்பியல் கோட்பாடாகும். அணுக்கொள்கையின் (Atom theory) விளைவாக 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமூக, அறிவியல் புலங்களில் செல்வாக்குச் செலுத்திய அணுவியல் போக்கு (பொருளைச் சிறுசிறு கூறுகளாகப் பிரித்து அணுகும் போக்கு) முழுமையான பார்வை அல்ல என்றும் குறைபாடுடையது என்றும் விமர்சனத்திற்குள்ளாகப்பெற்ற சூழலிலேயே ரஷ்யாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவவியல் தோற்றம் பெறுகிறது. இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக அமைப்பியல் முழுதளாவிய பார்வையாக அறிமுகமாகி பின் இவ்வணுகுமுறை பிரான்சுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. அமைப்பியல் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு பேர்டினனட் டி சசூர், லெவிஸ்ட்ரொஸ், ரோமன் ஜெக்கப்ஸன், விளாடிமிர் ப்ரொப், டெல்ஹைம்ஸ், ரோலண்ட் பாத், கென்னத் பைக், லக்கான் ஆகியோர் முன்வைத்த கருத்தியல்களும் ஆய்வுகளும் பெரும்பங்காற்றின. 1920, 30 களிலேயே முப்பதுகளிலேயே மொழியியல் (Linguistics), உளவியல் (Psycology), இனஇசையியல் (Ethomusicology), மானிடவியல் போன்ற துறைகளில் அமைப்பியல் ஆய்வுகள் பல இடம்பெற்றன. ஆனால் நாட்டார் வழக்காற்றியலில் இக் காலகட்டத்தில் (விளாடிமிர் ப்ரொப்பின் Morphology of the Folk Tale - 1928 - நாட்டார் கதைகளின் உள்ளமைப்பு என்ற நூலைத் தவிர) அமைப்பியல் அணுகுமுறை வளரவில்லை. ப்ரொப்பின் (Prop) இவ்வாய்வு வெளிவரும்வரை நாட்டார் வழக்காறுகளைக் கதைக்கூறு (motif), கதைவகை (Tale Type) எனப் பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கும் அணுவியல் (Atomistic) போக்கே பிரபலமாக இருந்தது. ப்ரொப்பின் இவ்வாய்வு நூல் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. பகுதிகளை மட்டும் பிரித்துப் பார்க்கும் அணுவியல் போக்கு அமைப்பியலின் அறிமுகத்துக்குப் பின்னர் வலுவிழந்து நாட்டார் வழக்காற்றியலில் அமைப்பியல் ஆய்வு மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளது. இதற்குப் பல்வேறு கோட்பாடுகளும், வேறுபட்ட அணுகுமுறையினரும் தோற்றம் பெற்றுள்ளமையே சான்றாகும்.

## அமைப்பியல் நோக்கில் நாட்டார் வழக்காற்றியல்

நாட்டார் வழக்காற்றியலில் இருவகை அமைப்பியல் ஆய்வுச் சிந்தனைப் பள்ளிகள் (School of thoughts) உள்ளன. அவையாவன:

1. ரஷ்ய அறிஞர் விளாடிமிர் ப்ரொப் (Viladimir Propp) முன்வைத்த அணுகுமுறையான தொடர்பாட்டு ஆய்வு முறை (Syntagmatic Analysis)
2. பிரெஞ்சு அறிஞர் லெவிஸ்ட்ராஸ் (Claude levi Strauss) முன்வைத்த அணுகுமுறையான வாய்ப்பாட்டு அணுகுமுறை (Paradigmatic Analysis)

ப்ரொப்பின் 'நாட்டார் கதைகளின் உள்ளமைப்பு' (Morpologija skazki) என்ற நூல் வெளியிடப் பெற்று முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் 1958இல் அமெரிக்காவில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிப்பட்டது. அதன் பின்னர் நாட்டார் வழக்காற்றியல் துறையில் பெரும் மாறுதல் ஏற்படத் தொடங்கியது (உஷா நம்பூதிரிபாடு, ஸ்டீபன். ஞா: 2003). 1920களில் ப்ரொப் ஓர் அமைப்பியல்வாதியாகவும் ரஷ்ய உருவவியல் சிந்தனையாளர் களுள் ஒருவராகவும் அணுகப்பட்டார். உள்ளமைப்பு – morphology என்னும் கருத்தாக்கத்தால் உருவாக்கப்பட்ட கருத்துருவங்களுக்கு இந்தத் தனிப்பெரும் முதல் நூல் கொடையாக அமைந்தது. பின்னர் இவரது எழுத்துக்கள் அனட்டொலி லைபர்மேன் (Anatoly Liberman) ஆல் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகள் 1946லிருந்து லைபர் மேனின் தொகையியல் (Anothology) நூலில் இடம்பெற்றன. இத்தொகை நூலுக்கு லைபர் மேன் எழுபத்திரண்டு பக்கங்களில் எழுதியுள்ள நீண்ட முன்னுரையில் ப்ரொப்பின் படைப்புக்கள் பற்றியும் அவரது நூல்கள் பற்றிய தரவுகளையும் குறிப்பிட்டுள்ளார். இதனால் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக்குப் ப்ரொப்பின் பங்களிப்பு எல்லா மட்டத்தினரையும் சென்றடைந்தது (ஸ்டீபன். ஞா, 2013:3).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரொப் தனது ஆய்வுகளைத் தொடங்கிய காலத்தில் நாட்டார் கதைகள் குறித்து அறிவியல் முறையில் அமைந்த ஆய்வு நூல்கள் குறைவாகவும் நாட்டார் கதைகளின் தொகுப்புக்கள் மிகுதியாகவும் காணப்பட்டன. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் பெரும்பாலும் தோற்றம் பற்றிய ஆய்வுகளாவே அமைந்தன. நாட்டார் கதைகள் பற்றிய ஆய்வுகள் தொடக்க நிலையிலும் அரிதாகவும் இருந்தன. இதனால் கதைகள் பற்றி விளக்கிய பின்னரே தோற்றம் பற்றி ஆராயவேண்டும் என்றும் கதைகளின் பண்புகளையும் அவற்றின் உள்ளீடான விளக்கங்களையும் தெளிவுபடுத்தும் முன் தோற்றம் குறித்துச் சிந்திப்பது பலனற்றது என்றும் ப்ரொப் கருதினார். எனவே, தோற்றம் குறித்த ஆய்வுகளை விமர்சனத்திற்குட்படுத்தினார். எல்லா ஆய்வுகளுக்கும் அறிவியல் அடிப்படையிலான வகைப்படுத்துதலே முதற்படி என்றும் அவ்வகைப்படுத்துதலும் சில முதல்நிலை ஆராய்ச்சிகட்குப் பின்னரே நடைபெற வேண்டும் என்றும் குறிப்பிடுவர். சிலர் வகைப்படுத்திக் கொண்டு தம்முடைய மூல ஆய்வு ஆதாரங்களை அவற்றிற்குள் திணிக்க முயலுகின்றனர். வகைப்படுத்துதலும் புறப் பண்புகளைக் கொண்டு அமையாது, சான்று மூலங்களின் உட்பண்புகளைக் கொண்டே அமைய வேண்டும் என்பது ப்ரொப்பின் கருத்து.

சாதாரணமாக விசித்திர பாணியில் அமைந்த விந்தைக் கதைகள் (fantastic tales), அன்றாட வாழ்வு பற்றிய கதைகள் (tales of every day life), விலங்குக் கதைகள் (Animal Tales) என்று பிரிக்கின்றனர். விலங்குக் கதைகளில் பெரும்பாலானவை விசித்திரப் பாணியில் அமைவதில்லையா? விசித்திரப் பாணிக்கதைகளில் விலங்குகள் வருவதில்லையா? 'அறுவடையைப் பங்கிடுதல்' (தானியமிருக்கும் தலைப்பகுதியை ஒரு பாத்திரம் எடுத்துக் கொள்ள வேர்ப்பகுதியை வேறொன்று எடுத்துக் கொள்ளுதல்) என்ற கதையில் - ரஷ்ய நாட்டில் வழங்கும் கதையில் ஏமாற்றப்படுவது கரடி. மேலை நாட்டில் (west) ஐரோப்பாவில் ஏமாற்றப்படுவது பேய் - ஐரோப்பாவில் ஒரு மாற்றுவடிவில் விலங்குகளின்றி இந்தக் கதை சொல்லப்படுகின்றது. இதனை எவ்வாறு விலங்குக் கதையில் சேர்ப்பது என்கிறார் ப்ரொப் (ஸ்டீபன். ஞா, 2013: 6). எனவே, ஏனைய அறிவியல் துறைகளில் வகைப்படுத்தல் அறிவியல் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது போலக் கதைத் துறையிலும் நடைபெறவேண்டும் என்று குறிப்பிட்டு அதற்கு அமைப்பியல் ஆய்வை அடிப்படையாகக் கொள்கின்றார்.

ப்ரொப் தமது ஆய்விற்கு அஃப்னசவ் தொகுத்த நூறு தேவதைக் கதைகளை (Narod nye Brusskie skazki – A.N. Afanasev) எடுத்துக் கொண்டார். தேவதைக் கதைகள் (Fairy tales) தனித்ததொரு வகையின. அன்ட்டி ஆர்னி வகைப்படுத்திய கதைவகை அடைவில் 300-749 வரை உள்ளவற்றை அவர் தேவதைக் கதைகள் என்று குறிப்பிட்டார். ப்ரொப் ஒப்பீடு செய்வதற்காக தேவதைக் கதைகளின் உறுப்புக்களை (பகுதிகளை) தனித்ததொரு முறைகொண்டு பிரித்தார். உறுப்புக்களின் அடிப்படையில் அவை ஒப்பிடப் பட்டன. அவ்வாறு ஒப்பிடும் பொழுது சில உறுப்புக்கள் திரும்பத் திரும்ப வருவதையும் சில உறுப்புக்கள் மாறாமல் இருப்பதையும் சில உறுப்புக்களுக்கு எண்ணற்ற பதிலிகள் வந்தமைவதையும் ப்ரொப் கண்டறிந்தார். இவ்வாறு வந்தமைந்த உறுப்புக்களைத் தர்க்கத்தின் அடிப்படையில் ஒன்றோடு ஒன்று ஒப்பீடு செய்தார். இந்த ஒப்பீட்டின் விளைவாக நிலையான சில உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று உறவு கொண்டு முழுமையை உருவாக்குகின்றன என்பதைக் கண்டறிந்தார். இவற்றின் அடிப்படையில் ப்ரொப் அமைப்பு என்பதை வரையறுத்தார். இதன் விளைவே அமைப்பு என்ற கருத்தாக்கமாகும் (ஸ்டீபன். ஞா, 2013: 6).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியாகிய உறுப்புக்களின் விளக்கமும் அவை ஒன்றோடு ஒன்று கொள்ளும் உறவும் முழுமையோடு கொள்ளும் உறவும் அமைப்பு ஆகும். மாறாத தன்மையுடைய உறுப்புக்கள் தம்மோடு தாமும் முழுமையோடும் கொள்ளும் உறவுகளின் மூலம் ஒழுங்கமைப்பை உருவாக்குகின்றது. இந்த ஒழுங்கமைப்பே அமைப்பு என்று அழைக்கப்படுகின்றது. இங்கு பகுதிகள் என்பவை தம்மளவில் முழுமையானவை. அவை உருபன்களைப் போன்று தனித்து நின்று பொருள்தரும் இயல்பைப் பெற்றவை. உருபன்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வாக்கியம், உரையாடல், கதையாடல் என விரிவடைவது போல ப்ரொப் குறிப்பிடும் பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து கதை என்ற முழுமையை உருவாக்குகின்றன. இந்த முழுமை பகுதிகளுக்கிடையிலான உறவுகளால் கட்டப்படுகின்றது. இந்த உறவுகள் பகுதிகளை ஒன்றோடு ஒன்றும் முழுமையோடும் தர்க்க அடிப்படையில் இணைத்து ஓர் ஒழுங்கமைப்பைத் தருகின்றன.

இலக்கியவகை ஒன்றின் அமைப்பைக் கண்டுபிடிப்பதற்கு எவை மாறாதவை (constants), எவை மாறுபவை (Variables) என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். ப்ரொப் சில வாக்கியங்களைக் கூறி அவற்றின் நிலைத்த கூறு எது என்றும் வெவ்வேறு கதை வாக்கியங்களை எடுத்துக்காட்டி அவற்றுள் மாறாமல் நிலைத்து நிற்கும் கூறுகளையும் அடையாளம் காட்டுகின்றார். எ-டு:

1. சார் (TSAR) மன்னன் ஒரு கழுகை ஒரு வீரனுக்குக் கொடுக்கின்றான். அந்தக் கழுகு அந்த வீரனை வேறொரு நாட்டுக்குக் கொண்டு செல்கின்றது.

2. ஒரு முதியவர் சுசென்கோவிற்கு ஒரு குதிரையைக் கொடுக்கிறார். அந்தக் குதிரை சுசென்கோவை வேறொரு நாட்டிற்குக் கொண்டு செல்கின்றது.

3. ஒரு மந்திரவாதி இவானுக்கு ஒரு படகைக் கொடுக்கிறான். அந்தப் படகு இவானை வேறொரு நாட்டுக்குக் கொண்டு செல்கிறது.

4. ஒரு இளவரசி இவானுக்கு ஒரு மோதிரம் கொடுக்கின்றாள். அந்த மோதிரத்திலிருந்து சில இளைஞர்கள் தோன்றி இவானை வேறொரு நாட்டுக்குச் சுமந்து செல்கின்றனர்.

மேற்கூறப்பட்ட வாக்கியங்களில் அனுப்பப்படுபவரும் கொடுக்கப்படுகின்ற பொருளும் வேறுபடுகின்றன. ஆனால் அனுப்புவதும் போவதும் கொடுக்கப்படுவதும் நிலையானவை. இந்த நிலையானவற்றை செயல் அல்லது வினை (function) என்று ப்ரொப் குறிப்பிடுவார் (லூர்து, தே,1981:29).

இதுவே கதைகளின் அடிப்படை அலகு. இங்கு மாறாதனவும், மாறுவனவும் காணப் படுகின்றன. கதைப் பாத்திரங்களின் பெயர்களும் அவற்றின் இயல்புகளும் வேறுபடினும் அவற்றின் செயல்களில் வேறுபாடின்மையைக் காணலாம்.

1. வினை/செயல் (function) என்பது ஒரு கதையின் இயக்கத்திற்கு (தொடர்ச்சிக்கு இன்றியமையாத பாத்திரத்தின் செயல்பாடாகும்.

2. யார் எப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாது, வினைகள் பாத்திரங்களின் செயல்களைப் பொறுத்து மாறாமல் கதைகளின் நிலையான மாறிலிகளாக (constants) இருக்கின்றன. அவை கதைகளின் அடிப்படை உறுப்புக்களாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளில் பயன்படுத்தப்படும் வினைகளின் அல்லது செயல்களின் மொத்த எண்ணிக்கை மிகக் குறைவாகும் (லூர்து, தே, 1981: 30). (தேவதைக்கதைகள் ஒரு வகைமை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவை ஒரு குறிப்பிட்ட நிலவியல் பகுதிக்கோ அல்லது பண்பாட்டிற்கோ சொந்தமானதல்ல. மாறாக உலகளாவிய தன்மை பெற்றவை.)

## ப்ரொப் (Viladimir Propp) தரும் கதைகளின் மாதிரி (Model) அமைப்பு

தேவதைக்கதைகளில் கதைப்பாத்திரங்களின் வினைகள் மாறாதிருப்பதை அவதானித்த ப்ரொப் தேவதைக்கதைத் தொகுதியிலிருந்து முப்பத்தொரு வினைகளை இனங்காட்டினார். ஒவ்வொரு செயலைப் பற்றியும் ஒரு சுருக்கம், ஒரு வார்த்தையில் அச்செயல் பற்றிய ஒரு வரையறை, ஒரு குறியீடு முதலியவை கொடுக்கப்படும். இக்குறியீடுகள் பல்வேறு கதைகளை ஒப்பிடும் திட்டத்திற்கு உதவுவன. பின்வரும் வினை/செயல்களின் வரிசை தேவதைக் கதைகளின் அமைப்புக்கு அடிப்படையாக அமைகின்றன. ப்ரொப் தரும் கதைகளின் மாதிரி (Model) அமைப்பு பின்வருமாறு அமைகிறது:

1) வெளியேற்றம் 2) தடை 3) தடை மீறல் 4) வில்லன் வேவு பார்த்தல் 5) செய்தியறிதல்
6) சூழ்ச்சி 7) வில்லனின் சூழ்ச்சிக்கு உடன்படுதல் 8) கொடுஞ்செயல் அல்லது குறை
9) இணைக்கும் நிகழ்ச்சி 10) மாற்று நடவடிக்கை தொடக்கம் 11) புறப்படல்
12) கொடையாளியின் முதற்செயல் 13) எதிர்வினை 14) மந்திரக் கருவி பெறுதல்
15) வழிகாட்டப்படுதல் 16) போட்டி 17) அடையாளமிடல் 18) வெற்றி
19) குறை நீக்கம் 20) திரும்புதல் 21) பின் தொடர்தல் 22) மீட்பு
23) அடையாளம் தெரியாது வருதல் 24) பொய்யாக உரிமை கொண்டாடுதல்
25) கடும்பணி 26) தீர்வு 27) கண்டுகொள்ளல் 28) பொய்மை வெளிப்பாடு
29) உருமாற்றம் 30) தண்டனை 31) திருமணம்

(லூர்து, தே, 1981: 31-58).

ப்ரொப் மேலுள்ளவாறு தேவதைக் கதைகளின் அமைப்பு இருக்கலாம் என்கிறார். மொத்தம் 31 வினைகளே உள்ளன என்றும் இவை தவிர வேறு செயல்கள்/வினைகள் வந்தால் அவை வேறுவகைக் கதைகளினின்றும் உள் நுழைந்தவை என்றும் குறிப்பிடுகின்றார். இங்கு குறிக்கப் பெறும் 31 வினைகளும் ஒரு கதையில் அமையும் என்பதில்லை. ஒரு சில வினைகள் இடம்பெறாமலும் இருக்கலாம். சில கதைகள் கொடுஞ் செயலில் தொடங்கித் திருமணத்தில் முடியலாம். தேவதைக் கதை கட்டாயம் 31 வினைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், தேவதைக் கதைகளில் 31 வினைகளுக்கு மேல் இல்லை என ப்ரொப் குறிப்பிடுகின்றார். (1928: 25-65)

## அலன் டண்டிஸின் (Alan Dundes – 1964) அணுகுமுறை

ப்ரொப்பின் ஆய்வை விரிவுபடுத்தி அலன் டண்டிஸ் செயல்களை/ வினைகளை (functions) அமெரிக்க மொழியியல் அறிஞரான கென்னத் பைக் (K.L.Pike) இன் கோட்பாட்டடிப்படையில் 'Motifeme' கதைக்கூறன் என்று குறிப்பிடுகிறார். ப்ரொப் குறிப்பிடும் வினை/செயல் என்னும் சொல்லின் பொருள் கென்னத் பைக் குறிப்பிடும் கதைக்கூறன் என்னும் சொல்லின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளோடு பொருந்துகிறது. எனவே, அமைப்பியல் ஆய்வுக்கான அலகாகக் கதைக் கூறனைப் பயன்படுத்தலாம் என டண்டிஸ் முன்மொழிந்துள்ளார். (1964:59)

கதைக் கூறன் என்ற சொல்லால் குறிக்கப்படும் கருத்தானது மொழியியலில் உள்ள சுவடுகளை இட்டு நிரப்பல் (Slot-and fillers correlation) என்னும் கருத்தை அடியொற்றியதாகும். 'இராமன் வந்தான்' என்ற வாக்கியத்தில் சொல் நிலையில் இரு சுவடுகள் உள்ளன. ஒன்று பெயர்ச்சொல், மற்றொன்று வினைமுற்று. முதல் சுவட்டில் கண்ணன், கந்தன், கந்தசாமி என்னும் பெயர்ச்சொற்களைக் கொண்டு நிரப்பலாம். அதேபோன்று இரண்டாவது சுவட்டில் வந்தான், போனான், இருந்தான் என்னும் வினைவடிவங்களை இட்டு நிரப்பலாம். இங்கு பெயர், வினைமுற்று என்னும் அடிப்படை மாறாது.

மொழியியலில் குறிப்பிடப்பெறும் உருபன் (Morpheme), மாற்று உருபனைப் (allomorph) போல் நாட்டார் கதைகளில் கதைக்கூறன் (Motifeme), மாற்றுக்கதைக்கூறன் (allomotifeme) இருக்கினறன என டண்டிஸ் குறிப்பிடுகின்றார். ப்ரொப் மாற்றுக் கதைக்கூறன் (allomotifeme) பற்றிக் குறிப்பிடவில்லை. டண்டிஸ் மொழியியலைப் பயன்படுத்தி கதைக் கூறன் குறித்துக் கூறுகின்றார். இது கதைகளில் எவ்வாறு அமையும் என்பதைப் பின்வரும் சான்றுகள் மூலம் விளக்கலாம்:

*பண்டைக் காலத்தில் நெருப்பு இல்லை.*
*பண்டைக் காலத்தில் நிலம் இல்லை*
*கொலம்பிய நாட்டு மக்களுக்குக் கண்கள் இல்லை.* (ஸ்டீபன்.ஞா, 2013:23).

மேலுள்ள வாக்கியங்களில் இல்லை என்பதை 'Slot' சுவடாகக் கொண்டால் நெருப்பு, நிலம், கண்கள் என்பன இட்டு நிரப்பப்படும் மாற்றுக் கூறன்களாகும். ஏதோ ஒன்று 'இல்லை' என்ற வடிவம் நிலையானது. ஒவ்வொன்றிலும் இட்டு நிரப்பப்படும் மாற்றுக் கூறன்கள் மாறினாலும் 'இல்லை' என்ற சுவடு மாறுவதில்லை. மேலும், 'இல்லை' என்ற வடிவில்தான் அமையும் என்றில்லை. மறைமுகமாகவும் அமையலாம். சான்றாக ஒரு கதையில் பெருவெள்ளம் ஏற்பட்டது என்றோ உலகம் இருளில் மூழ்கிக் கிடந்தது என்றோ அமைந்துள்ளது என்றால் இவையிரண்டும் குறையையே குறிப்பிடுகின்றன. பெருவெள்ளம் இருக்கும் போது நிலம் பற்றாக்குறையாகக் காணப்படும் என்றும் இருளில் மூழ்கிக் கிடக்கும் போது வெளிச்சம் இல்லாதிருக்கும் என்றும் பொருள் தருகின்றன (ஸ்டீபன். ஞா, 2013:23).

மூலக் கதைக்கூறன் என்பது ஒரு கதையின் அமைப்பில் மிகமிக அடிப்படையானதாகும். ஒரு கதையின் இயக்கத்திற்கு மூலக் கதைக்கூறனே ஆதாரமாக அமையும். நாட்டார் கதையொன்றிலிருந்து அதன் மூலக்கதைக்கூறனை நீக்கினால் அக்கதை கட்டவிழ்ந்து போகும். நாட்டார் கதைகளில் இடம்பெறும் மூலக்கதைக்கூறன் இணைகளின் வரன்முறையை (sequence) அடிப்படையாகக் கொண்டு ஒரு குறிப்பிட்ட வகைக் கதையை அமைப்பியல் அடிப்படையில் வகைப்படுத்த முடியும். ஒரு கதையில் எத்தனை மூலக்கூறன் இணைகள் இடம்பெற்றுள்ளன என்பதன் அடிப்படையில் அவ்வகைப்பாடு அமையும். அலன் டண்டிஸ் வடஅமெரிக்க, இந்திய நாட்டார் கதைகள் இரண்டு, நான்கு, ஆறு மூலக்கதைக் கூறன் வரன்முறை கொண்டது எனும் 3 வகைப்பாட்டுக்குள் அடங்கும் என்பர் (1964: 61). டண்டிஸ் தனது ஆய்வின் மூலம் கண்டறிந்த இம்மூவகை அமைப் பொழுங்கு மாதிரிகள் பின்வருமாறு அமைகின்றன. (ஸ்டீபன். ஞா, 2013:23):

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. குறை/குறை நீக்கம்
   தடை/தடை மீறல்

2. சூழ்ச்சி/ஏமாற்றப்படல்
   தடை / தடைமீறல் / விளைவு / தப்பிக்கும் முயற்சி

3. குறை / சூழ்ச்சி / ஏமாற்றப்படல் / குறைநீக்கம்
   குறை / குறை நீக்கம் / தடை / தடைமீறல் / விளைவு / தப்பிக்கும் முயற்சி

எ-டு: கொலம்பியா நாட்டு மக்களுக்குக் கண்கள் இல்லை (குறை) அவர்கள் நுகர்வதன் மூலமே உணவைத் தேடி உண்டனர். கோயோட்டி என்பவன் அவர்களது கண்களையும் வாயையும் திறந்தான் (குறை நீக்கம்) (Dundes 1964:12).

இக்கதையில் கண்கள் இல்லை என்பது குறையாகவும் கண்கள் திறக்கப்பட்டது குறை நீக்கமாகவும் அமைகின்றன. கொலம்பிய நாட்டு மக்களுக்கு வாய் அல்லது கால் இல்லை என்று மாற்றிக் கூறினாலும் குறை, குறைநீக்கம் என்ற அடிப்படை அமைப்பு மாறுவதில்லை. கொலம்பியா நாட்டு மக்களுக்குக் கண்கள் இல்லை என்பது சமநிலை இன்மையையும் கண்கள் திறக்கப்பட்டமை சமநிலையையும் குறிக்கும். இது போன்ற அமைப்பு வடஅமெரிக்க, இந்திய நாட்டார் கதைகளில் இருப்பதைக் கண்டிறிந்து இக்கதைகள் சமநிலையின்மையிலிருந்து சமநிலைக்குத் திரும்புபவையாக அமைகின்றன என்று குறிப்பிடுவர். டண்டியின் அமைப்பியல் மாதிரியைத் தமிழ்க் கதையில் பொருத்திப் பார்க்கலாம்.

எ-டு: முற்காலத்தில் வானம் மிகத்தாழ்வாக இருந்தது. எனவே எல்லோரும் கூனர் களாக இருந்தனர். ஒரு நாள் ஒரு கூனக் கிழவி தன் கையிலிருந்த சுளகால் வானத்தை அடிக்க வானம் மேலே சென்று விட்டது. அதன் பின் மனிதர்களின் கூன் அகன்றது. இக்கதை இரண்டு மூலக்கதைக்கூறன்கள் கொண்டவை. (ஸ்டீபன்.ஞா, 2013:23).

வானம் தாழ்வாக இருந்தது. அனைவரும் கூனர்களாக இருந்தனர். (குறை) வானம் உயரத்தில் இல்லை. மனிதர்களால் நிமிர்ந்து நடக்க இயலவில்லை என்பது இன்மையை உணர்த்துகிறது. கூனல் கிழவி சுளகால் வானத்தை அடிக்க அது மேலே சென்றுவிட மனிதர்கள் கூன் நிமிரப் பெற்றனர். (குறை நீக்கம்) வானம் உயரத்தில் சென்றது மனிதர்களின் கூன் அகன்றது என்னும் வினைகள் இன்மையை நிறைவு செய்வன.

**க்ளோட் லெவி ஸ்ட்ராஸின்** (Caude Levi Strauss) **வாய்பாட்டு அணுகுமுறை**

ப்ரொப், டண்டிஸ் ஆகியோரது அமைப்பியல் ஆய்வோடு தொடர்புடைய ஆய்வு முறைதான் லெவி ஸ்டிராஸ்ஸின் வாய்பாட்டு அணுகுமுறை Paradigmatic analysis) என்பதாகும். இவர் அமைப்பை இருதுருவங்கள் (binary opposites) (வாழ்வு - சாவு, பிறப்பு - இறப்பு, ஆண் - பெண்) எனக் கொண்டு முரண்பாடுகளுக்கிடையே நிகழ்வுகள் இயங்கிச் செல்வதாக விளக்குகிறார். இவர் புராணக் கதைகளின் உள்ளமைப்புக்களைப் பகுத்து, அதன் தொடர்புகளை விளக்கினார். புராணக் கதை அமைப்பில் - பண்பாட்டின் சில அடிப்படைச் சக்திகளின் போராட்டத்தை அதாவது புராணத்தின் நோக்கத்தைக் காண்கிறார். இவர் அடிப்படையாகக் கொள்ளும் 'Gross Constituent, Units, mytheme' ஆகியவை ப்ரொப், டண்டிஸ் குறிப்பிடும் 'Motifeme' என்பதனுடன் தொடர்புடையவை. ப்ரொப்பைப் போலவே லெவிஸ்ட்ரொஸ்சும் 'Gross Constituent Unit' என்பவற்றுக்கு தனித்தனிப் பெயரிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் செயல்களுக்கிடையே அடுத்தடுத்துள்ள உறவைக் காண்பது மாத்திரமன்றி ஒத்த செயல்களுக்கிடையே உள்ள மேல் - கீழ் உறவையும் பார்க்க வேண்டும் என்பர். (A.dundes:1964)

எனவே இவ்விரண்டு சிந்தனைப் பள்ளிகளும் (syntagmatic Analysis-Propp, Paradigmatic Analysis -Levi Strauss) வெவ்வேறு அணுகுமுறைகளைக் கொண்டவையெனினும் 'அமைப்பு' (Structure) என்ற கோட்பாட்டடிப்படையில் ஒத்த கருத்தையே கொண்டுள்ளன.

## தமிழில் அமைப்பியல் நோக்கில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்

தமிழில் இந்திய நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் அமைப்பியல் ஆய்வுகள் 1960களில் தொடங்கப்பெற்றன. கே.பி.எஸ் ஹமீது (அலன் டண்டிஸைப் பின்பற்றி தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரைப்பகுதி ஆதிவாசிகளிடம் உள்ள ஒரு புராணக் கதையின் அமைப்பை ஆய்வு செய்துள்ளார். பின்னர் கண்ணகி கதை, பழையனூர் நீலி கதை ஆகியவற்றில் ப்ரொப், டண்டிஸ் ஆகியோரின் ஆய்வுமுறையை இணைத்து அமைப்பியல் ஆய்வை மேற்கொண்டனர். (1966, 1968) பா.ரா. சுப்பிரமணியம் இராவணர் கைலாய மலையைத் தூக்கிய புராணக் கதையையும் (1969) தாலாட்டு ஒப்பாரிப் பாடல்களையும் அமைப்பியல் ஆய்வு செய்துள்ளார். "ஒப்பாரிப்பாடல் அறிவிப்பு – துணிபுரை என்னும் அமைப்பை உடையது. தாலாட்டு – முன்மொழி – புனைந்துரை என்னும் அமைப்பைக் கொண்டுள்ளது என விளக்குகின்றார். வி.ஐ சுப்பிரமணியம் கதைகளைப் பொருண்மையின் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளார். (1972)

தே. லூர்து அவர்கள் டண்டிஸைப் பின்பற்றித் தமிழ்ப் பழமொழிகளை அமைப்பியல் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். பழமொழிகள் சிறந்த அமைப்புடையவை என்று குறிப்பிடுவர். இவ்வாய்வு கதைகளும் பாடல்களும் மட்டுமே அமைப்பியல் ஆய்வுக்கு உரியவையாகக் கருதப்பட்ட நிலையை மாற்றி, பிற இலக்கியவகைகளிலும் அமைப்பியல் ஆய்வுசெய்யும் வாய்ப்புள்ளதை நிரூபித்தது. பழமொழிகளின் குறைந்தபட்ச அடிப்படை அலகு 'ஒரு விளக்கக் கூறு' ஆகும். ஒரு தலைப்பையும் (Topic) அதற்குரிய ஒரு முடிபுரையையும் (comment) கொண்டது ஒரு விளக்கக் கூறு ஆகும். 'பணம் பத்தும் செய்யும்' என்ற பழமொழியில் பணம் என்பது தலைப்பாகும். பத்தும் செய்யும் என்பது முடிபுரையாகும். தமிழில் மூன்று விளக்கக் கூறுகளைக் கொண்ட பழமொழிகள் வரை காணப்படுகின்றன என்று குறிப்பிடுவர். சான்றாக:

*"பார்க்காமே கெட்டது பயிரு*
*ஏறாமே கெட்டது குருத*
*போகாமே கெட்டது கடன்"*

என்பதைக் எடுத்துக்காட்டுவர் (லூர்து,தே,1997: 208 - 237). நாட்டுப்புற நம்பிக்கைகள் பற்றி (தமிழவன், 1976) பெரியபுராணக் கதை (சங்கரி: 1976) கந்தபுராணக்கதை (விசயலட்சுமி, 1977) மதுரைத் தல புராணங்கள் பற்றிய அமைப்பியல் ஆய்வு (நாச்சிமுத்து, 1981: தருமி – நக்கீரர் கதை, பெரியாழ்வார் கதை) குமரி மாவட்ட மூடக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு ஞா. ஸ்டீபன் ஆய்வு செய்துள்ளார் (1993) தமிழ்க்கதைப்பாடல்களை வே. தயாளன் அமைப்பியலாய்வுக்குட்படுத்தியுள்ளார் (1993 - இலங்கை நாட்டார் வழக்காற்றியல் மாநாட்டுக் கட்டுரைத் தொகுப்பு),1988 இல் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக் கழக இதழ் லெவிஸ்ட்ரொஸ் சிறப்பிதழாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. முத்துமோகன், நா. இராமச்சந்திரன், தே. லூர்து, ஆ. செல்லப்பெருமாள், பிரான்சிஸ் ஜெயபதி, எம்.டி. முத்துக் குமாரசாமி, சரஸ்வதி வேணுகோபால் ஆகியோர் அமைப்பியல் குறித்து முக்கியமான கட்டுரைகளை இவ்விதழில் எழுதியுள்ளனர்.

ஞா.ஸ்டீபன் பழமரபுக் கதைகளின் அமைப்புப் பற்றி ஆய்வு செய்துள்ளார் (2004: 10 - 30). அமைப்பியல் ஆய்வு கதைவகைகளில் பெருமளவில் செய்யப் பெற்றிருப்பினும் எல்லாக் கதைவகைகளிலும் சமஅளவில் ஆய்வு செய்யப்படவில்லை. நாட்டார் கதைகள், புராணம், தேவதைக்கதைகள், மூடக்கதைகள் ஆகிய வகைமைகள் உலகளவில் அமைப்பியல் ஆய்வால் பெரிதும் ஈர்க்கப்பெற்றன. பழமரபுக் கதைகள் மிகஅரிதாகவே அமைப்பியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்றுள்ளன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஏனைய கதை வகைகளின் வழங்கியல் மரபைபோன்று பழமரபுக் கதையின் வழங்கியல் மரபு பரந்துபட்டதல்ல. அவற்றிற்கு வட்டாரப் பண்பு அதிகம். ஒரு குறிப்பிட்ட வகைமாதிரிக்குப் பல வடிவங்கள் கிடைப்பது அரிது. எனவே, ஒரு குறிப்பிட்ட வகையான பழமரபுக் கதையின் தொகுதியைச் சேகரிப்பது, பிற கதைவகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் எளிதானதன்று. இதனால் பழமரபுக் கதைகள் பெரிதும் அமைப்பியல் ஆய்வுக்குட்படுத்தப் படவில்லை என்று குறிப்பிடுவர்.

அமைப்பியல் ஆய்வு ஒரு குறிப்பிட்ட வகைமைக்கு மட்டும் உரியதன்று எல்லா வகையான வழக்காற்று வகைமைகளிலும் அது சாத்தியமானது. எவ்வளவிற்கு அதிகமான வழக்காற்று வகைமைகளிலும் வகைகளிலும் அமைப்பியல் ஆய்வுசெய்கிறோமோ அவ்வளவிற்கு வழக்காறுகள் குறித்தும் நாட்டார் குறித்தும் புரிந்துகொள்ள இயலும் வழக்காறுகளைச் சேகரித்து வகைப்படுத்தினால் மட்டும் போதாது. பொருள்கோள் செய்யாமல் வெறும் அமைப்பு ஆய்வுமட்டும் செய்வதும் போதுமானதன்று ஒப்பீட்டு ஆய்வுகளைப்போல் அமைப்பியல் ஆய்வுகளும் பொருள் கோள் செய்வதற்கான திறப்புக்களைச் கண்டறியவேண்டும் என அலன் டண்டிஸ் குறிப்பிடுகின்றார். (1976:89)

தமிழில் நாட்டார் வழக்காற்றுத் தொகுப்புப் பணி நடந்த பின்னரே வழக்காறுகள் பற்றிய முறையான ஆய்வுகள் இடம்பெறத் தொடங்கின. தொகுப்புப் பணி தொடங்கப் பெற்ற காலங்களிலேயே ஒப்பீட்டு ஆய்வுகளும் பரவல் குறித்த ஆய்வுகளும் தொடங்கின. உதாரணமாக நாட்டார் கதைகளைத் தொகுத்த கிரிம் சகோதரர்கள் ஒரு குறிப்பிட்ட கதை வடிவம் பல்வேறு நாடுகளில் வழக்கில் இருப்பதை உணர்ந்தபோது வடிவம் (Version) குறித்த சிந்தனையை முன்வைத்தனர். இதன் தொடர்ச்சியாக பரவல் குறித்த சிந்தனையும், இச்சிந்தனைகளின் வளர்ச்சிப் போக்கினால் வரலாற்று நிலவியல் கோட்பாடும் கதைவகை அடைவும் தோற்றம் பெற்றன. ஆனால், தமிழில் மேற்குறித்த சிந்தனைகள் பெரிதும் (சிறு ஆய்வு முயற்சிகள் தவிர) இடம்பெறவில்லை (ஸ்டீபன்.ஞா, 2013:87)

1960-69 வரையிலான காலகட்டம் நாட்டுப்புறவியல் ஆராய்ச்சிக்குத் தொடக்கமாகவும் 1970க்குப் பின்னுள்ள காலகட்டம் நாட்டுப்புறவியல் ஆராய்ச்சிக்கு வளர்ச்சிக் கட்டமாகவும் உள்ளன என்பார், ஆ. சிவசுப்பிரமணியம் (1991: 176). தமிழக நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் உருப்பெற்ற ஆய்வின் தொடக்ககாலம் கோட்பாடுகளுக்கே முதன்மையளித்தது. குறிப்பாக அமைப்பியல் ஆய்விற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பெற்றது. எஸ்.கார்லோஸ் (தமிழவன்) தமிழில் அமைப்பியல் கோட்பாட்டைப் பின்பற்றிச் செய்யப்பெற்ற ஆய்வுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதனை ஆய்வு செய்துள்ளார். (1987: 46-47)

தமிழில் அமைப்பியல் ஆய்வுகள் பல நிகழ்ந்தபோதிலும் மேலைநாடுகளில் செய்யப் பெற்றது போன்ற ஆழமான ஆய்வுகளோ அமைப்பியல் சிந்தனைகளுக்குப் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புக்களோ செய்யப்பெறவில்லை. மேலைநாடுகளில் அமைப்பியல் தொடர்பான ஆய்வுகள் பலகட்ட வளர்ச்சிகளை அடைந்துள்ளன. மேலைத்தேய ஆய்வாளர்கள் பல்வேறு வகைப்பட்ட அமைப்பியல் மாதிரிகளை உருவாக்கி அவற்றின் மூலம் சில அமைப்பியல் சமன்பாடுகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அலன் டண்டிஸ், லெவிஸ்ட்ராஸ், யுகாபெண்டிக் காய்னன் போன்றவர்கள் முன்வைத்த சமன்பாடுகள்: ஞா.ஸ்டீபன் - அமைப்பியல் கோட்பாடுகளும் ஆய்வுகளும், 2013)

ப்ரொப்பின் அமைப்பியல் மாதிரி உள்ளடக்கத்தைப் பற்றிக் கவலைப்படாமல் வடிவத்திற்கு மிகுந்த இன்றியமையாமையைத் தருகின்றது என்ற விமர்சனம் காணப்படுகின்றது. உலகளாவிய வடிவம், உலகளாவிய அமைப்பு ஆகிய கருத்தாக்கங்கள் பண்பாட்டுத் தனித்தன்மையைப் புறக்கணிப்பவையாகும். அமைப்பியல் ஆய்வு உலக அளவில் பொருத்தமுடையது என்றாலும் வெவ்வேறு மொழி, பண்பாடுகளைச் சார்ந்த கதைகளில் அது முழுமையாகப் பொருந்துவதில்லை என்ற விவாதங்களும் காணப்படுகின்றன (ஸ்டீபன்.ஞா, 2013). அமைப்பியல், ஆய்வுப் பொருண்மையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டாலும் பொருண்மைத் தளத்தில் விளக்கமளித்தலுக்கோ அல்லது தர்க்கங்களை உருவாக்குவதற்கோ அமைப்பு பயனுள்ளது என்பதைப் பிற்கால அமைப்பியலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## பின்னமைப்பியல்வாதம் (Poststructurelism)

அமைப்பியல்வாதத்தின் போதாமை கருதி அதன் மீதான சிந்தனை சார்ந்த எதிர்வினைகளின் தொகுப்பாகப் பின்னமைப்பியல்வாதத்தைப் பொதுவாக வரையறுக்கலாம். பின்னமைப்பியல் வாதம் அமைப்பியல்வாதத்தின் அடிப்படைகளை ஏற்றுக்கொள்கின்ற போதும் அதன் மீது சில காத்திரமான எதிர்வினைகளை மேற்கொள்கின்றது. யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கும் அதை வெளிப்படுத்துவதற்கும் ஒரு சமூகத்தில் காணப்படுகின்ற மொழி உட்பட்ட குறியீட்டுக் கட்டமைப்புக்களே முக்கியமானவை என்பதை பின்னமைப்பியல்வாதம் சில நிபந்தனைகளோடு ஏற்றுக்கொள்கின்றது. பின்னமைப்பியல்வாதத்தின் அடிப்படைச் சிந்தனைகளாகக் கட்டவிழ்ப்புவாதத்தையும் கதையாடல் கோட்பாட்டையும் குறிப்பிடலாம்.

## நாட்டார் வழக்காற்றியலில் பின்னமைப்பியல்வாதம்

நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் குறிப்பாக வாய்மொழிக் கதைகளை ஆய்வுக்குட்படுத்திய அமைப்பியலாளர்கள் சில சமன்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

1. ப்ரொப், டண்டிஸ் ஆகிய இருவரும் தொடர்பாட்டு ஆய்வு முறையைப் பின்பற்றியவர்கள்.
2. ப்ரொப் ரஷ்ய தேவதைக் கதைகளை ஆய்வுக்கு உட்படுத்தி தேவதைக் கதைகளின் அமைப்பியல் மாதிரி (model) ஒன்றை முன்வைத்தார்.
3. டண்டிஸ் வடஅமெரிக்க, இந்திய நாட்டார் கதைகளை ஆய்வுக்கு உட்படுத்தி நாட்டார் கதைகளின் அமைப்பு மாதிரி ஒன்றை முன்வைத்தார்.

இவ்விரு அமைப்பு மாதிரிகளும் அடிப்படையில் ஒரே மாதிரியான தர்க்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை. ப்ரொப்பின் மாதிரியில் ஒரு கதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள எல்லா வினைகள் / செயல்களும் ஒழுங்குபடுத்தப்பெற்றுள்ளன. இவற்றுள் ஒரு கதையுள் எல்லாச் செயல்களும் வரவேண்டும் என்றில்லை. சில இடம்பெறாமலும் போகலாம். அதனால் கதை அமைப்பு பாதிக்கப்படமாட்டாது என்பார், ப்ரொப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரொப்பின் மாதிரியில் கட்டாயமாக வந்தமைய வேண்டிய வினைகளும் கட்டாயமற்ற வினைகளும் இருப்பதனால் நெகிழ்சியானதாக அமைந்துள்ளதால் டண்டிஸ் இவ்வமைப்பு மாதிரியை இன்னும் இறுக்கமானதாக மாற்றி மூலக்கதைக் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட அமைப்பியல் மாதிரியை உருவாக்குகிறார். ஒரு அமைப்பு மதிரியை உருவாக்கும் போது அது நெகிழ்சியானதாக இருக்கக் கூடாது என்பதே டண்டிஸின் கருத்தாகும்.

மூடக் கதைகளின் அமைப்புக் குறித்த ஆய்வில் மூடக்கதைகள் குறை / குறைநீக்கம் / தவறாகப் புரிதல் / விளைவு / குறைநீக்கும் முயற்சி / தலையீடு என்னும் ஆறு மூலக் கதைக்கூறன் அமைப்புடையவை என்றும் இவற்றுள் தலையீடு / குறைநீக்கம் ஆகிய இரு கதைக்கூறன்கள் கட்டாயமற்றவை என்று நிரூபித்துள்ளார் (1993: 157-159). தமிழ் மூடக்கதைகள் சமநிலையிலிருந்து சமநிலையின்மைக்குத் திரும்புகின்றன என்று குறிப்பிடுவர் (1993: 198). அதாவது மூடக்கதைகள் சமநிலைக்குத் திரும்புவதே இல்லை. தலையீட்டாளன் அமையும் கதைகள் மட்டுமே சமநிலைக்குத் திரும்புகின்றன என்கிறார். லெவிஸ்ட்ரொஸ் குறிப்பிடும் வாழ்வு / சாவு என்ற சமன்பாடும் புராணங்களுக்கு மட்டும் உரியதா? என்பதும் ஆய்விற்குரியது (ஸ்டீபன். ஞா, 2013:85)

வாழ்வு / சாவு, சமநிலை / சமநிலையின்மை என்ற எல்லா மாதிரிகளும் / சமன்பாடு களும் ஒட்டுமொத்த மனித வாழ்வுக்குப் பொருந்துவன. வாழ்க்கையோடு தொடர்புடைய எல்லா நிகழ்வுகளுமே இவ்விரு சமன்பாடுகளோடு தொடர்புடையவை. மனித நடத்தை முறைகளையும், சமூக வாழ்க்கையையும் சுருக்கும்போது இவ்விரு சமன்பாடுகளுக்குத்தான் வரமுடியும். இவற்றுள்ளும் எண்ணற்ற வகைமைகளும் நடத்தை முறைகளும் அடங்கி யுள்ளன. எனவே இவற்றைக் குறிப்பிட்ட வகைமைக்கு மட்டுமேயுரிய சமன்பாடுகள் / மாதிரிகளாகக் கொள்ள முடியாது. சுருக்குவதாலும் பொதுமைப்படுத்துவதாலும் வகைமைகளின் தனித்துவம் புறக்கணிக்கப்படுகின்றது.

அமைப்பியல் கோட்பாடு தரவுகளை அளவுக்கதிகமாகச் சுருக்கி விடுகின்றது என்ற விமர்சனமும் உண்டு. அமைப்பியல் சமன்பாடு வகைமை சார்ந்ததாக அமைந்தால் மாத்திரமே அது தனித்தன்மை பெற்றதாக அமையும். தனித்தனி வகைமை சார்ந்த அமைப்பியல் மாதிரிகளைக் கண்டறிவதன் மூலம் வகைமைகளுக்கிடையிலான உறவுகளையும் அவ்வுறவு பண்பாட்டோடு கொண்டுள்ள உறவுகளையும் கண்டறிய முடியும் (லூர்து, தே., 2003 ஸ்டீபன். ஞா,2013)

ஒரு குறிப்பிட்ட வகைமையின் வகைமாதிரிகளைக் கண்டறிவதற்கு அமைப்பியல் ஆய்வு உதவுகின்றது. ஆகவே, அமைப்பியல் ஆய்வு அதனளவில் இறுதியானதன்று. அது முடிவைக் காண்பதற்கான ஒரு வழியாக அமைகின்றது. அலன் டண்டிஸ் ஒப்பீட்டு முறை, உளவியல் கோட்பாடு ஆகியவற்றை இணைத்து ஒரு புதிய அணுகுமுறையை உருவாக்கியுள்ளார். அதேபோல தொடர்பாட்டு, வாய்பாட்டு மாதிரிகளின் அடிப்படையில் இன்று பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## துணைநின்ற நூல்கள்


1. திருநாகலிங்கம், ஆ. (பதி.) 2004, நாட்டுப்புறவியலும் கோட்பாடுகளும், புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.
2. முத்துக்குமாரசாமி,எம். டி (சிறப்பாசிரியர்), நாட்டார் வழக்காற்றியல் (லெவிஸ்ட்ரொஸ் சிறப்பிதழ்), தொகுதி- 2 : 3,4 நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக்கழகம், திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. லூர்து,தே., 'பிராப்பின் அமைப்பியல் ஆய்வு' (p 25-64), 1981, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், லூர்து,தே, (பதிப்பாசிரியர்), திருநெல்வேலி.

4. லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள், 1997, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

5. லூர்து,தே. 1988, நாட்டார் வழக்காறுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

6. லூர்து, தே., ஸ்டீபன். ஞா., 'அமைப்பியலின் பிற்கால வளர்ச்சி' (p321-331), 2003, நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள், பக்தவதசல ரெட்டி, என்., இராமநாதன், ஆறு (பதிப்பாசிரியர்கள்), தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம், திருவனந்தபுரம்.

7. ஸ்டீபன்.ஞா, 2013, அமைப்பியல் கோட்பாடும் ஆய்வுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.

8. Dundes, Alan. 1964, The Morphology of North American Indian Folktales, Helsinki< Folklore Fellows Communication.

9. Levi Strauss Claude,1963, Structurel Anthropology. New york ,Basic Books.

10. Propp,V.1958, Morphology of the Folklore, Austin and London, University of Texas Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் வழக்காற்றியலும் நவீனமயமாதலும்

திருமதி தேவகுமாரி சுந்தரராஜன்

நாட்டாரியல் அல்லது நாட்டார் வழக்காற்றியல் என்ற துறையானது இன்று அனைவராலும் கவனத்திற் கொள்ளப்படுகின்றதொரு துறையாக வளர்ச்சியடைந்து வருகின்றது ஆங்கிலத்தில் இது Folk lore என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல்கலைக்கழகங்களிற்கூட தனியானதொரு துறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதோடு, பலர் தமது ஆய்வுகளைக்கூட இத்துறையில் மேற்கொண்டுள்ளனர்; மேற்கொண்டு வருகின்றனர். இன்று நாம் இங்கு கூடியிருப்பதுகூட இவ்வடிப்படையிலேயே ஆகும். நாட்டுப்புற, கிராமப்புற, பாமரமக்களின் வாழ்வியல் அம்சங்கள் அத்தனையையும் உள்ளடக்கியதொரு துறையாக இத்துறை அமைகின்ற தென்றால் மறுப்பதற்கில்லை. இந்த நாட்டார் வழக்காறுகள் காலங்காலமாகப் பரம்பரை பரம்பரையாக வாய்வழியாகவும் செயற்பாட்டு ரிதியாகவும் கடத்தப்பட்டு வருவனவாகும். இவ்வாறு கடத்தப்படுகின்ற வேளையிலேயே அவை நவீனமயமாதலுக்குட்படுகின்றன. 'நவீனம்' என்ற பதமானது புதியது, தற்காலத்திற்குரியது என்ற பொருள்களையே நமக்குத் தருகின்றது. எனவே, காலவோட்டத்திற்கேற்ப நாட்டார் வழக்காறுகளிற் சில எந்தவித மாற்றமும் இன்றியும், பல சிலபல மாற்றங்களுக்குட்பட்டும், மேலும் சில தன்னிடத்தில் இருந்த சில தனித்துவப் பண்புகளை இழந்தும், இன்னும் சில மேலதிக அம்சங்களைப் பெற்றும், காலத்திற்கும் சூழ்நிலைக்கு ஏற்பவும் திரிபடைந்தும், மாற்ற மடைந்தும், தம்மைப் புதுப்பித்துக்கொண்டும் வழங்குவதை அவதானிக்க முடிகின்றது. சில நாட்டாரியற் கூறுகள் முற்றாகவே அழிந்துவிடுவதையும் அவதானிக்கமுடிகின்றது. இவ்வம்சங்கள் நாட்டார் வழக்காறுகள் நவீனமயமாதலையும் அதனால் ஏற்படுகின்ற சாதக பாதகங்களையுமே எமக்குப் புலப்படுத்துகின்றன. எனவே, பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியுள்ள 'நாட்டார் வழக்காற்றியலும் நவீனமயமாதலும்' என்று பரந்த பகுதியை குறுகிய காலத்திற்குள் ஆய்வு செய்வதென்பது சிரமமான தொன்றாகும். இதனால், இலங்கையில் உடப்புக்கிராமத்தின் நாட்டார் வழக்காறுகளில் ஒன்றாகிய 'கும்மிச் சடங்கு' நிகழ்ச்சி மட்டுமே இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் புத்தள மாவட்டத்தில் அமைந்துள்ளதொரு தமிழ்க் கிராமமே உடப்பு ஆகும். வடமேற்குக் கரையோரத்திலுள்ள தமிழ்க் கிராமங்கள் அந்நியர் வருகையினால் மதம் மாற்றப்பட்ட வேளையிலும்கூட, அதிலிருந்து தப்பி தமது பாரம்பரிய பண்பாட்டம்சங்ளைக் கைவிடாது பேணிப்பாதுகாத்து வரும், தமிழ் மக்களை மிக அதிகமாகக் கொண்ட கிராமமாக இது திகழ்கிறது. இக்கிராமம் முந்தல் களப்புக்கும் (Lake) இந்து சமுத்திரத்திற்கும் இடையிலுள்ள ஒரு பூ சந்தியில் (Isthums) அமைந்துள்ளது. மேலும், இலங்கையின் தலைநகரான கொழும்பு நகரிலிருந்து கிட்டத்தட்ட 99 கிலோமீற்றர் வடக்கே இக்கிராமம் அமைந்துள்ளதுடன், சதுப்பு நிலங்களாலும் சேற்று நிலங்களாலும் அயலிலுள்ள கிராமங்களிலிருந்து புவியியல் ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாண்டியர் படையெடுப்புகளின் போது வடமேற்குக் கரையோரங்களில் நிலைத்துவிட்ட பாண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர் பரம்பரையினர் என்று சொல்லப்படுபவர்களும், இற்றைக்குக் கிட்டத்தட்ட 450, 500 வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் இராமேஸ்வரத்தையும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்தும் புலம் பெயர்ந்து வந்த மக்கள் பரம்பரையினருமே இக்கிராமத்தில் வாழ்ந்துவருகின்றனர்.

இக்கிராம மக்கள் இற்றைக்கு கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு முன்பு வரை வெளியுலகத் தொடர்புகள், போக்குவரத்து வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள் போன்றன மிகவும் அருகிய நிலையில் தமக்கெனத் தனித்துவமானதொரு பாரம்பரியத்தினைக் கொண்டவர்களாகவும் அவற்றைப் பிரதிபலிக்கும் நாட்டார் வழக்காறுகளைக் கொண்டவர் களாகவும் இருந்தனர். இவை அவர்களுடைய பூர்வீகம், பழக்கவழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களைப் புலப்படுத்துவனவாக இருந்தன. இருப்பினும், இற்றைக்காலச் சூழ்நிலையில் வெளியுலகத் தொடர்புகள், போக்குவரத்து வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள் போன்றன நன்கு விருத்தியடைந்துள்ளதோடு, பெரும்பான்மையானவர்கள் சொந்த நாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் மட்டுமன்றி வேறு பல வெளிநாடுகளிலும் பல்வேறு காரணங்கள் கருதி குடியேறி வாழ்ந்து வருகின்ற நிலையினையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான காரணங்களினால் இக்கிராம மக்களின் வாழ்க்கை முறையிலும் நாட்டார் வழக்காறுகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதுடன் பல நாட்டார் வழக்காறுகள் மறைந்து வருகின்ற தன்மையினையும் அவதானிக்கமுடிகின்றது. இது காலமாற்றத்திற்கேற்ப அம்மக்களின் வாழ்க்கைமுறையில் ஏற்பட்டுள்ள நவீன நாகரிகத்தின் தாக்கத்தினையும் அவர்களைப் பிரதிபலிக்கும் நாட்டார் வழக்காறுகள் நவீன மயமாகிவருதலையுமே எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. அந்த வகையில் 'சித்திரைச் செவ்வாய்' என்று அழைக்கப்படும் இக் கும்மிக் கலையானது எவ்வாறு நவீனமயமாதலுக்குட்பட்டு வருகின்றது என்பதை நோக்குவோம்.

இக்கிராமத்தின் தொன்மையினையும் தனித்துவத்தினையும் பறைசாற்றும் நாட்டார் வழக்காறுகளில் 'சித்திரைச் செவ்வாய்' என்று அழைக்கப்படுகின்ற கும்மிச் சடங்கு நிகழ்ச்சியும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இங்கு மக்கள் குடியேறி வாழத்தொடங்கிய காலத்திலிருந்தே இக்கும்மிக்கலை இடம்பெற்று வருகின்றது. இது ஒரு நிகழ்த்து கலை யாக உள்ளது. கும்மி கொட்டுதலோடு இசையுடன் இணைந்த பாடல்களும் இக்கலை நிகழ்ச்சியின்போது முக்கிய இடம்பெறுகின்றன. ஏற்கனவே நாம் பார்த்ததைப் போல இதன்போது பாடப்படும் பாடல்கள் இக்கிராம மக்களின் பூர்வீகம், அவர்களுடைய பாரம் பரியப் பழக்கவழக்கங்கள், சமய நம்பிக்கைகள், வழிபாடுகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களையும் புலப்படுத்துகின்றன. நவீன நாகரிகத்தின் தாக்கம் காரணமாக அண்மைக்காலமாக இச்சடங்கு நிகழ்ச்சியிலும் அதன்போது பாடப்படும் பாடல்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. அதாவது இச் சித்திரைச் செவ்வாய் சடங்கு நிகழ்ச்சியானது நவீனமயமாதலுக்குட்பட்பட்டு வருகின்ற மையினை அவதானிக்க முடிகின்றது.

சமயச் சடங்குகள், சமூக விழாக்கள் என்பவற்றில் கும்மி என்பது கும்மி கொட்டுதல், கொம்மி கொட்டுதல், கொப்பி கொட்டுதல் என இடத்திற்கிடம் வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அதுவே உடப்புக் கிராமத்தில் 'சித்திரைச் செவ்வாய்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. பொதுவாக நோக்குகின்ற பொழுது கும்மிக் கலையானது கொண்டாட்டம் சார்ந்ததொரு கலையாக இருப்பினும், உடப்புக் கிராமத்தைப் பொறுத்த வரையில் சமயச்சடங்கு சார்ந்ததொரு வழக்காறாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமங்கலிகள் அல்லாத, இளமையும் துடிப்பும் வேகமும் நிறைந்த கன்னியர்கள் ஒன்று கூடி, ஒரு பொருளைத் தெய்வமாகப் பாவனை செய்தோ, அல்லது மலர்க்கூடை, பலகாரத் தட்டு என்பவற்றில் ஒன்றை மத்தியில் வைத்து அதனைச் சுற்றி வளைய வந்து கைகொட்டுதலால் உண்டாகும் ஒலியுடன், கைவளையலும் கால் கொலுசும் சேர்ந்தொலிக்க, ஒருவர் முன்பாட்டுப் பாட, மற்றவர்கள் பின்பாட்டுப் பாடிக்கொண்டு, குனிந்து நிமிர்ந்து கைகொட்டி ஆடும் ஆட்டமே கும்மி என்பர்.

ஒயில் கும்மி போன்ற சிலவற்றைத் தவிர சிறப்பாகப் பெண்களுக்கே உரிய இக் கும்மிக் கலையானது பெண்தெய்வ வழிபாட்டிலேயே முக்கிய இடம் பெறுகின்றது. பொங்கல் விழா, பெண் பருவமெய்திய சடங்கு, மாவிளக்கேற்றல், பெண் விரதமிருத்தல், மழை கேட்டல், முளைப்பாரியிடல் போன்ற சமயச் சடங்குகளிலும் கொண்டாட்டங்களிலும் கும்மி கொட்டி ஆடிப்பாடுகின்றனர்.

உடப்புக் கிராமத்திலும் சித்திரைச் செவ்வாய் நிகழ்வானது பெண்தெய்வமாகிய மாரியம்மனுக்காக பெண்களாலேயே நிகழ்த்தப்படுவதை அவதானிக்கலாம். முன்பெல்லாம் இச் சடங்கின்போது ஆண்கள் தம்மாலான முழு உதவிகளையும் நல்குவதோடு நின்றுவிடுவார்கள். ஆனால், தற்காலத்தில் பெண்கள் கும்மி கொட்டிக் களைப்படையும் பொழுது அவர்களது களைப்பைப் போக்கும் விதத்தில் ஆண்களும் சேர்ந்து கொட்டுவதை அவதானிக்க முடிகின்றது. இத்தன்மையானது காலச் சூழ்நிலைக்கேற்ற மாற்றமாக உள்ளதோடு, இக்கலையானது நவீனமயமாதலையும் எமக்குப் புலப்படுத்துகின்றது.

இச்சித்திரைச் செவ்வாய்ச் சடங்கானது சித்திரை மாதத்தில் வரும் நல்ல நாளோடு கூடியதொரு திங்கட்கிழமையில் ஆரம்பிக்கப்படுகின்றது. இச்சமயச்சடங்குக் கலையினை நிகழ்த்த நேர்த்திக்கடன் வைத்துள்ள வளவுகளைச் சேர்ந்தவர்கள், நியமிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு கிழமைக்கு முன்பிருந்தே வீடு வளவைக் கழுவிப் பெருக்கி சுத்தம் செய்து, தினமும் நீராடி மச்சம் மாமிசம் தவிர்த்து விரதமிருப்பர். நியமிக்கப்பட்ட நாள் வந்ததும் அன்றும் வீடு கழுவி வளவெல்லாம் கூட்டிப்பெருக்கித் துப்பரவு செய்து யாவரும் நீராடித் தூய்மையடைவர். பின்பு வீட்டிலுள்ள சுவாமி அறையில் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மூன்று சுமங்கலிப் பெண்களும் பருவமெய்தாத குறிப்பாகப் பத்துவயதிற்குட்பட்ட பேதைப் பெண்களும் சேர்ந்து நவதானியங்கள் முளைக்கவைக்கக் கூடிய விதத்தில் அளவான மண் சட்டிகளை எடுத்து அதில் நன்கு இடித்துத் தூள் செய்யப்பட்ட சாணத்தை நிரப்பி, இச்சடங்கில் முக்கிய அம்சமான முளைபதித்தலுக்கான ஒழுங்குகளைச் செய்வர். இச்சடங்கின்போது பாடப்படும் மேல்வரும் பாடல் இதனை நன்கு விளக்குகின்றது.

"செவ்வாயில் எருவெடுத்து சிவந்த சித்திரக் கோலமிட்டு
கோலமிட்டு குரவையிட்டு குங்குமத்தால் நீராட்டி
நீராட்டித் துகிலுடுத்தி நீலவர்ணப் பொட்டுமிட்டு
பொட்டுமிட்டு பொட்டுடனே பூமணக்க பூமணக்க பளபளக்க"

முளைபதித்த அன்றும் முளைப்பாக்களைச் சுற்றிச் செவ்வாய் (கும்மி) கொட்டும் வேளையிலும் இப்பாடல் பிரதானமாக இடம்பெறும். முளைபதிப்பதற்கான நவதானியங்கள் வீடு வீடாகச் சென்றே பெற்றுக்கொள்ளப்பட்டன. அவ்வாறு நவதானியங்களைப் பெறச் சென்றவர்கள் ஒவ்வொருவரது வீட்டு முற்றத்திலும் நின்று மேல்வரும் பாடலைப் பாடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"கடல சிறு பயறு கானம் மணிப்பயறு*
*தங்கமுத்து நச்சியர்க்கு எங்கம் சிறுபயறு"*

இப்பாடலைக் கேட்ட வீட்டிலுள்ளவர்கள் தம்மிடமுள்ள நவதானியங்களில் சொற்பத்தை வழங்குவர். அவ்வேளையில் வீட்டு முற்றத்தில் நின்று பாடப்படும் பாடலானது "இச்சடங்கினை இன்றிலிருந்து மாரியம்மனுக்கு நிகழ்த்தவுள்ளோம். எனவே, ஊரிலுள்ளவர்களாகிய நீங்களும் இதற்கு உதவி செய்து ஒத்துழையுங்கள். அப்பொழுதுதான் ஊரிலுள்ளவர்களாகிய எமக்கு அன்னை அருள்பாலிப்பாள்" என்பதையே சித்திரிப்பதாகக் கூறுவர். மேலும் ஊர் மக்களின் நன்மை கருதி மேற்கொள்ளப்படும் இச்சமயஞ்சார் சடங்குக்கலையின்போது மக்களை எந்த நெருக்கடிகளுக்கும் உள்ளாக்காமல் அவர்களுடைய பொருளாதாரத்தில் எந்தவிதப் பாதிப்பினையும் ஏற்படுத்தாமல், அவரவரிடத்திற் கிடைக்கக் கூடிய நவதானியங்களைப் பெற்று அதனையே முளையிடப் பயன்படுத்தினர். அதுமட்டுமன்றி இச்சடங்கு நிகழ்ச்சியானது இம் மக்களிடத்தில் சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

ஆனால், இன்று வீடுவீடாகச் சென்று பாடிக் கொண்டு நவதானியங்களைச் சேகரிக்கும் வழக்கொழிந்துவிட்டமையினைக் காணலாம். இன்று இச்சடங்கினை மேற்கொள்ளுபவர்கள் இச்சடங்கில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்று அதன் மூலம் இச்சடங்கிற்குத் தேவையான பொருட்களை வாங்குகின்றனர். எனவே, நவதானியங்கள் இன்று கடைகளிலேயே வாங்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி இன்றைய காலத்தைப்போல இந் நிகழ்ச்சிக்காக முன்னைய காலங்களில் பெருந்தொகையான பணச்செலவு ஏற்பட்டதில்லை. இவ்வாறு பெறப்பட்ட நவதானியங்கள் வீட்டில் சுவாமியறையில் விளக்கேற்றித் தூபதீபம் காட்டி முன்பு சாணம் நிரப்பி ஒழுங்கு செய்யப்பட்ட சட்டிகளில், மூன்று சுமங்கலிப் பெண்களின் வழிகாட்டுதலில் பருவ வயதை அடையாத சிறு பெண்களினால் முளைக்கவைக்கப்படுகின்றன. ஆனால் முன்னைய காலங்களில் அனுபவ முதிர்ச்சியுடைய வயது முதிர்ந்தவர்களாலேயே நவதானியங்கள் முளைக்கவைக்கப் பட்டுள்ளமை அறியத்தக்கது. இவ்வாறு நவதானியங்கள் முளைக்கவைத்த சட்டிகளை 'முளைப்பா' என்பர். முளைப்பாக்களுக்கு அச்சிறு பெண்கள் ஒரு நாள் விட்டு அடுத்தநாள், தாம் நீராடிய பின்பு, தமது ஈரக்கூந்தலாலேயே நீர் தெளிப்பது வழக்கம். முன்னைய காலங்களில் பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமப்புற மக்களிடத்தில், பூவாளிகள் இருந்திருக்காத அச்சந்தர்ப்பத்தில், மென்மையான இயல்புடன் வளர்ந்துவரும் அந்த நவதானியங்கள் சிதைந்துவிடக்கூடாது என்பதற்காகவே கூந்தலால் நீர் தெளித்துள்ளனர் போலும். மேலும், முன்பெல்லாம் அதற்குரிய நீர் கோயிற் கிணற்றிலிருந்தே கொண்டு வரப்பட்டது. தற்காலத்தில் இவ்வாறான நடைமுறைகள் வழக்கொழிந்துவிட்டன.

நவதானியங்களை முளைக்கவைத்தல் என்பது அனேகமான சமயச்சடங்குகளில் காணப்படுகின்றது. இது பயிர்வளம் சிறக்க வேண்டும், அவ்வாறாயின் நன்கு மழை பெய்ய வேண்டும், அதன் மூலம் கிராமம் சிறக்க வேண்டும், நாடு நலம்பெற வேண்டும் போன்ற உள்ளார்ந்த அர்த்தங்களை எமக்குப் புலப்படுத்துகின்றது. எனவே, சமூகக் கூட்டுறவைப் பேணும் இச்சடங்கில் சுயநலம் தவிர்த்துப் பொதுநலம் பேணினர். ஆனால், இன்று இவ்வாறான சிந்தனையோட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மைகள் அருகி வருவதை அவதானிக்கலாம்.

இந்தியாவில் இராமநாதபுரத்தில் காணப்படும் முளைப்பாரிச் சடங்கு, ஒயிற் கும்மி போன்றவற்றில் இவ்வாறு நவதானியங்களை முளைக்க வைத்தல் முக்கிய இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பெல்லாம் முளைப்பாரிச் சடங்கில் நவதானியங்களை முளைக்க வைப்பதற்கு மண்பானையின் அடிப்பகுதி அல்லது வேறு உலோகப் பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை இச்சடங்கில் கலந்துகொள்ளுபவர்களின் பொருளாதார பலத்தைக் காட்டுவனவாக இருந்தன. ஆனால், இன்று பொதுவாக நவதானியங்களை முளைக்க வைப்பதற்கு மண் சட்டிகளே பயன்படுத்தப்படுகின்றன. விஷேடமாக இதற்காகவே மண்சட்டிகள் தயாரிக்கப்படு கின்ற தன்மையினையும் அவதானிக்கமுடிகின்றது. உடப்பில் ஆரம்பகாலங்களிலிருந்து மண்சட்டிகளே நவதானியங்களை முளைக்கவைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. முன்பு ஒரேவிதமான மண்சட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இன்று அதற்காகவே விசேடமாகத் தயாரிக்கப்படுகின்றன.

நவதானியங்களை முளைக்க வைத்ததன் பிறகு ஒருநாள் விட்டு ஒரு நாள் நீர்தெளிக்கும் வேளைகளில் காலையிலும் மாலையிலும் முளைபதியவைத்த வீட்டின் முன்றலில் ஒரு சிறிய மேசையை வைத்து, அதன் மேல் சுத்தமான வெள்ளைத் துணியை விரித்து, அதில் நாளுக்கு ஒரு முளைப்பாவாக வைத்து நீர் தெளிக்கும் பெண்களும் அவ்வளவில் செவ்வாய் கொட்டுவதற்குச் சேர்ந்துள்ள பெண்களும் இணைந்து, அம்முளைப்பாவைச் சுற்றிச் சுற்றி வந்து கும்மி கொட்டுவர். அச்சந்தர்ப்பத்தில் சற்று வயது முதிர்ந்த பெண்கள் முன்பாட்டுப் பாட ஏனையவர்கள் பின்பாட்டுப் பாடுவர். அவர்கள் வினாயகர் துதியுடன் ஆரம்பித்து மாரியம்மன் புகழ்பாடும் பாடல்களைப் பாடிக்கொண்டே கும்மி கொட்டுவர்.

தற்காலத்தில் இச்சடங்கு நிகழ்வின்போது அனுபவம் வாய்ந்த முதியவர்களைவிட பெரும்பாலும் இளம் சந்ததியினரே ஈடுபடுகின்றனர். அனுபவம் வாய்ந்த முதியவர்கள் தொகை வெகுவாகக் குறைந்துவிட்ட நிலையில், இருக்கும் ஒருசிலரும் இச்சடங்கின் போது தமக்கு உரிய இடம் கிடைக்குமா என்ற சந்தேகத்தில் ஒதுங்கிக்கொள்ள முற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

முன்னைய காலங்களில் எந்தக் காரணத்திற்காகவும் வீட்டைவிட்டு வெளியில் செல்லாதிருந்த பெண்களுக்கு செவ்வாய் கொட்டுவதிற் பங்கேற்பதற்குப் பெற்றோரிடம் அனுமதி பெறுவதும், அவ்வாறு அனுமதி பெற்றுவிட்டாலும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் முன்பு மற்றவர்களினது கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகாமல் சிறப்பாக அந்நிகழ்வில் பங்குபற்றுவதென்பதும் ஒரு சவாலாகவே இருந்தது. இவ்வாறு பெண்களுக்கிருந்த சமூகக்கட்டுப்பாடுகளை, பிற்போக்குத்தனமான சிந்தனைகளை இன்றைய கல்வியறிவு, நாகரிக வளர்ச்சி என்பவை காரணமாக உடைத்தெறியக்கூடிய தன்னம்பிக்கையினைப் பெற்றுக்கொண்ட இளம் சந்ததியினர் பயமோ, கூச்சமோ இன்றி மிக இயல்பாக இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வதையும் அவதானிக்கமுடிகின்றது.

முதன்முறையாகச் செவ்வாய் கொட்டும் பொழுது சிறிது நேரம் கொட்டுவர். தொடர்ந்துவரும் நாட்களில் கொட்டும் நேரத்தை அதிகரித்துக்கொண்டு செல்லுவர். “ஓராம் நாள் முளை எழுந்து ஓங்கி வளருமாம் மாரிமுள(ளை)....” என்று தொடரும் பாடலில் நவதானியங்கள் முளைக்கவைத்த நாளிலிருந்து படிப்படியான அதன் வளர்ச்சிபற்றிக் கூறப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். நவதானியங்களை முளைக்க வைக்கும் பொழுது மிகவும் தூய்மையுடனும் பயபக்தியுடனும் முளைக்க வைக்க வேண்டும். அதேபோல் தூய்மையுடனும் பயபக்தியுடனும் ஒவ்வொரு நாளும் பராமரிக்க வேண்டும். இல்லையானால் அவை நன்கு முளைத்து வளரமாட்டா என்பது அண்மைக்காலம் வரைக்கும் அக்கிராம மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாக இருந்து வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை நன்கு வளரவில்லையாயின் அம்மனை வேண்டியதிலும் முளைப்பதிய வைத்ததிலும் ஏதோ குறைகள் உள்ளன என்று ஆளுக்கு ஆள் கிசுகிசுப்பதை அவதானிக்கலாம். முளைக்க வைத்த நவதானியங்கள் நன்கு வளர்ந்துவருமானால் அன்னையின் அருள் எமக்குச் சம்பூரணமாகக் கிடைத்துள்ளது, அவளுடைய அருட்டிறமே இவ்வாறு வளர்ந்து வருகின்றது எனக் கூறிக் குதூகலிப்பர். அதுமட்டுமன்றி இவ்வாண்டு அம்மை போன்ற உஷ்னத்தால் ஏற்படுகின்ற நோய்நொடிகள் ஏற்படாமல், மழைவளம் சிறந்து பயிர்கள் செழித்து வளரும் என்றும், திருமணமாகாத கன்னியர்களுக்கு நல்ல துணைவர்கள் கிடைத்து விரைவிலேயே திருமணங்கள் கூடிவரும், இவ்வாறு கிராம மக்களுக்கு எந்தவிதக் குறைபாடுகளும் அண்டாது என்றும் அதீத நம்பிக்கையுடையவர்களாக இருந்துவந்துள்ளனர். ஆனால், தற்காலத்தில் கல்வி விருத்தி, வெளியுலகத் தொடர்பு, நாகரிக வளர்ச்சி, பொருளாதார வளமேம்பாடு போன்றவற்றால் ஊரின் நலனைப் பாதுகாப்பதற்கு அம்மன் அருள் மிகவும் இன்றியமையாதது போன்ற நம்பிக்கைகள் தற்போதைய சூழ்நிலையில் அறிவியல்பூர்வமான விமர்சனங்களுக்குட்பட்டுவருகின் றமையோடு, சித்திரைச் செவ்வாய்ச் சடங்கினை நிகழ்த்தும் வளவினரும் 'அவ்வளவு' நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பெண்களும் தமது சித்திரைச் செவ்வாய் நிகழ்ச்சியே சிறப்பாக இருந்தது, தமது வளவு நிகழ்வில் கலந்து கொண்ட பெண்களின் ஆடை ஆபரணங்களே விலையுயர்ந்தனவாக இருந்தன, எமது வளவுக்காரரே அழகாகச் செவ்வாய் கொட்டினர், எமது வளவுக்காரரே அழகாகப் பாடல்களைப் பாடினர், எமது வளவு நிகழ்விலேயே அம்மனுடைய மேடை அலங்காரம் அழகாக இருந்தது, எமது வளவிலேயே அம்மனுடைய மேடைக்காக மணவறை பயன்படுத்தப்பட்டது எனத் தத்தமது பொருளாதார வளத்தை வெளிப்படுத்து வதனையே முக்கியநோக்கமாகக் கொள்ளுகின்றனர். இவ்வாறான விடயங்களிலேயே மக்கள் பெரிதும் திருப்தி கொள்ளுகின்றமையினையும் அவதானிக்கமுடிகின்றது. இச்சடங்கு நிகழ்ச்சிக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பே இச் சித்திரைச் செவ்வாய் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுகின்ற பெண்கள் வயதிற்கேற்ப தத்தமக்குப் பொருத்தமானவர்களுடன், பிடித்தவர் களுடன் இணைந்து குழுக்களாகப் பிரிந்து ஆடை ஆபரணங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபடுகின்றனர். ஒரு குழுவினர் கொள்வனவு செய்த சேலையைவிட மற்றக் குழுவினர் கொள்வனவு செய்த சேலை பெறுமதியிலும் அழகிலும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என எண்ணுகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு குழுவினரும் தமது குழுவினருடைய ஆடை, ஆபரண, அலங்காரங்களே சிறப்பானவையாக இருக்க வேண்டும், மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆடை, ஆபரண, அலங்காரப் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர். இதற்காகப் பெரும்பாலும் இந்தியாவிற்குச் செல்லுகின்ற தன்மையினையும், ஓரிரு மாதங்களுக்கு முன்பே கூறப்பட்டு, வடிவமைக்கப்பட்டுப் (ஆடைகள்) பெற்றுக்கொள்ளுகின்ற தன்மையினையும் அறியலாம்.

இவ்வாறு இக்கும்மி நிகழ்ச்சியின் இறுதி நாள் கொண்டாட்டத்திற்கு முதல் நாள் மாலையில் சித்திரைச் செவ்வாய்க்காக ஏற்பாடு செய்யப்பட்ட வீடுகளில் குலைவாழைகள் நாட்டப்பட்டு, இளநீர்க்குலைகள் தொங்கவிடப்பட்டு, மாவிலை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அவ்வீடு விழாக்கோலம் பூணும். இவ்வலங்காரத்தில் அம்மனுக்கு மிகவும் உகந்ததும் பிடித்ததுமாகிய வேப்பிலைக் கொப்புகள் முக்கிய இடத்தைப் பிடித் திருப்பதை அவதானிக்கலாம். விஞ்ஞான ரீதியாக நோக்குகின்ற பொழுதும் வேப்பிலை பல மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. அத்துடன் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணச் சேலைகளும் இவ்வலங்காரத்திற்குப் பயன்படுத்தப்படும். ஆனால், தற்காலத்தில் வேப்பிலையின் பயன்பாடு வெகுவாகக் குறைந்துவிட்டதுடன், சேலைகளின் பயன்பாடும் குறைந்துவிட்டது. காரணம், பொருளாதார வசதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த அக்கால மக்கள் இச்சடங்கினை மிகவும் பயபக்தியுடன் தம்மிடம் மிகவும் இலகுவாகக் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டே நிறைவேற்றினர். இன்றைய சூழ்நிலையில் பெரும்பாலும் வீட்டிற்கொருவராவது ஏதாவதொரு வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பைப் பெற்றுச் சென்றுள்ளமையினால் இம் மக்களின் பொருளாதார வளம் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றது. அதற்கேற்ப நாகரிக மேம்பாட்டினையும் அவதானிக்கலாம். இதனால், முற்காலத்தைப் போன்று திருமணத்திற்கு அமைக்கப்படுவது போன்று ஆண்கள் பலரும் ஒன்றுகூடி இச்சடங்கினை நிகழ்த்தும் வீடுகளின் முன் பல்வேறு சிரமங்களின் மத்தியில் பந்தல் அமைப்பது போன்று பந்தல் அமைப்பதில்லை. வாடகைக்குப் பொருட்கள் வழங்குபவர்களிடம் தகவல் சொல்ல, அவர்கள் தமது வாடகைப் பொருட்களைக் கொண்டு நவீன முறையில் பந்தலை அமைத்துச் செல்ல, முன்னைய காலத்தைப் போலன்றி நவீன அலங்காரப் பொருட்கள் கொண்டு அலங்கரிக்கப்படுகின்றது.

மேலும் முதல் நாள் மாலையில் செவ்வாய்ச் சடங்கில் கலந்துகொள்ளும் பெண்களின் வீடுகளில் அவிரியல் பொரியலுடன் அறுசுவை உணவுகள் சமைக்கப்பட்டு அவை ஓலைக் பெட்டிகளில், தாம் செவ்வாய்க்குச் சேர்ந்துள்ள வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அம்மனுக்குப் படையலாக வைக்கப்படும். அதுவரைகாலமும் மச்ச உணவுகளைத் தவிர்த்து, விரதமிருந்து தூய்மையாக அச்சடங்கு நிகழ்வுகளில் கலந்து கொண்ட பெண்கள் அன்று கருவாட்டுப் பொரியல் போன்ற மச்ச உணவினையும் படையலுக்காக எடுத்துச் செல்லுகின்றமை சிந்தனைக்குரியதே. "முட்ட முருங்கக்காய் முகிழ் அழியாக் கத்தரிக்காய், கத்தரிக்காய் மூணு துண்டு கருவாடு இரண்டு துண்டு" என்று வரும் பாடல் வரிகள் இதனைப் புலப்படுத்துகின்றன. காளியம்மனுக்கான படையலில் அசைவ உணவுகள், மதுபானங்கள் சங்ககாலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டுவருகின்றமை நாம் அறிந்த விடயமே. மேலும் கிராமியத் தெய்வங்களுக்கு மாமிச, மதுபானவகைகள் நிவேதனப் பொருட்களாகப் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டுவருகின்றமையும் நாம் அறிந்த விடயங்களே. இங்கும் இறுதிநாளன்று மாரியம்மனுடன் காளியம்மனும் வழிபடப்படுவதால் கருவாடு, முட்டை போன்ற உணவுகளும் நிவேதனப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனலாம். எதிர்வரும் காலங்களில், மடாலயங்களாக இருந்த கோயில்கள் பல இன்று ஆகமமுறைப்படி மாற்றியமைக்கப்பட்டு பிராமணர்களால் பூசைகள் நிகழ்த்தப்படுவது போல் இந்நடைமுறையிலும் மாற்றமேற்படலாம். முன்னைய காலங்களில் படையலுக்காகப் பனையோலைப் பெட்டிகளிலேயே உணவு எடுத்துச் செல்லப்பட்டது. காரணம் இரவில் படைக்கப்பட்ட இவ்வுணவானது அடுத்த நாள் மதியம் வரைக்கும் பழுதடையாமல் இருக்கவேண்டும் என்பதற்காக. ஆனால், இன்று இந்நடைமுறை அருகி சில்வர் பாத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றமை கண்கூடு. அதுமட்டுமன்றி, முன்பு போலல்லாது அதிகாலையிலேயே உணவினைச் சமைத்து எடுத்துச் செல்லுகின்றனர். மேலும், ஆரம்ப காலங்களில் இச்சடங்கு நிகழ்ச்சியினை நிழற்படம் எடுப்பதோ, ஒளிப் பதிவு செய்வதோ விருப்புக்குரியதாக இருந்திருக்கவில்லை. தற்போது அதற்கு எந்தவிதத் தங்குதடையும் இல்லையென்பதும் கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இன்றைய உலகில் நவீன நாகரிகத்தின் தாக்கம் காரணமாகப் பல்வேறு விடயங்களில், பல்வேறு செயற்பாடுகளில், மக்களுடைய பழக்கவழக்கங்களில், பண்பாடு களில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றமையினை நாம் அவதானிக்கமுடிகின்றது. முன்னைய காலந்தொட்டு இன்றுவரை மக்களுடைய வாழ்வியலம்சங்களை உள்ளது உள்ளபடிச் சித்திரிப்பது நாட்டாரியலாகும். அதிலும் நாட்டாரிலக்கியங்கள், நாட்டார் கலைகள் போன்றன இன்றியமையாதன. தற்போதைய சூழ்நிலையில் நவீனநாகரிகத்தின் தாக்கம் காரணமாக இவற்றிலும் பாரிய மாற்றங்களும் சிதைவுகளும் ஏற்பட்டுவருகின்றமை ஆய்வுகளின் வெளிப்பாடுகளாகக் காணப்படுகின்றன. இவ்வாறானதொரு தாக்கமே உடப்புக்கிராம நாட்டாரியற் கூறுகளுக்கும் ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக அம் மக்களினுடைய தனித்தன்மையினைப் பிரதிபலிப்பதில் இன்றியமையாத இடத்தினை வகிக்கும் சித்திரைச் செவ்வாய்ச் சடங்கு நிகழ்ச்சியானது நவீன நாகரிகத்தின் தாக்கம் காரணமாக மேற்குறிப்பிட்ட விதத்தில் பல்வேறு மாற்றங்களுக்கும் சிதைவுகளுக்கும் உட்பட்டுவருகின்றமை ஆய்வுகளின்போது அவதானிக்கத்தக்க விடயங்களாக இருக்கின்றன. எதிர்வரும் காலங்களில் இது போன்ற நாட்டாரியற் கூறுகள் முற்றாக அழிவடைந்தோ அல்லது தமது தனித்தன்மைகளை இழந்தோ விடக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதனால், அவை ஆவணப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டியமை இன்றியமையாததாகும்.

## உசாத்துணை நூல்கள்


அதிபரும், வில்லிசைக் கலைஞரும், வடமேல்மாகாண கலாசார ஒன்றிய உறுப்பினருமாக இருந்த சோமாஸ்கந்தரிடம் பெற்றுக்கொண்ட தகவல்கள்.

ஆய்வாளர் நேரில் அவதானித்தவை.

கலைக்களஞ்சியம், 1956, தொகுதி 03, தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடு, சென்னை.

கலைக்களஞ்சியம், 1959, தொகுதி 06, தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடு, சென்னை.

குணசேகரன், கே.ஏ., 1992, நாட்டப்புற நடனங்களும் பாடல்களும், சென்னை

கோதண்டராமன், மா., 1995, வட ஆர்க்காரகாடு மாவட்ட நாடடுப்புறப் பாடல்கள், சென்னை.

சண்முகசுந்தரம், சு., 1986, திருநெல்வெலி மாவட்ட நாட்டுப்புறப்பாடல்களில் சமுதாய அமைப்பு, காவ்யா வெளியீடு, சென்னை.

சொக்கலிங்கம் பூசாரி, சி., 1929, ஸ்ரீதிரௌபதாதேவி மான்மியம், திருமகள் அச்சகம், சுன்னாகம்.

வீரசொக்கன், 1989, உடப்பு ஸ்ரீதிரௌபதையம்மன் (பார்த்த சாரதிப் பெருமாள்) ஆலய வரலாற்று நூல்.

லூர்து, தே., 1990, நாட்டார் வழக்காறுகள், சென்னை

ஷாஜஹான், ஏ.என்.எம்., 1992, புத்தளம் வரலாறும் மரபுகளும், கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் படிமமாக நாட்டார் வழக்காறுகள்

கலாநிதி க. இரகுபரன்

வரலாறு என்னும் அறிவுப் புலத்தில் 'வரலாற்று வரைவியல்' (Historiography) என்பது ஓர் அடிப்படைக் கூறாகும். அது வரலாற்றை வரையும் நெறிமுறை தொடர்பான ஓர் அறிகையாகும். வரலாற்றை எழுதுவதற்கு வழிகாட்டும் வரலாற்று வரைவியலானது, வரலாற்றை எழுதுவதற்கு ஆதாரமான அடிப்படைச் சான்றுகள் - மூலங்கள் - என்று பல்வேறு விடயங்களைக் குறிப்பிடும். அவற்றுள் நாட்டார் வழக்காறுகள் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. நாட்டார் வழக்காறுகள் எழுத்துவடிவம் பெறாதவை; வாய்மொழியாக வழங்குபவை; அவை மாறும் தன்மை கொண்டவை; கற்பனை சார்ந்தவை என்ற எண்ணப்பாங்கே அதற்கான முக்கிய காரணம். எனினும் அண்மைக்காலமாக மானிடவியல், நாட்டாரியல் முதலான துறைகளைச் சார்ந்தவர்கள், நாட்டார் வழக்காறுகளுள் ஒளிந்திருக்கும் சமூக வரலாறுகளை ஒளிரச் செய்ய முயன்றிருக்கிறார்கள்.[1] முற்போக்கான வரலாற்றாசிரியர்களும் வரலாறு எழுதுவதற்கு நாட்டார் வழக்காறுகளை துணைக் கொள்ளத் துணிந்துள்ளார்கள்.

வரலாறு என்றால் என்ன என்பதற்குப் பல்வேறு விதமான வரைவிலக்கணங்கள் தரப்படுகின்றன. பொதுவாகப் பலரும் அதை கடந்தகாலம் பற்றிய ஒன்றாகவே கருதிக் கொள்கின்றார்கள். ஒருநாட்டை, அதன் மக்களைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளைக் கால வரிசைப்படி பதிவதும் அந்த நிகழ்ச்சிகளின் காரண காரியங்களைக் கண்டறிந்து சொல்வதும் வரலாறு எனலாம். அந்த நிகழ்ச்சிகள் கடந்த பழங்காலத்துக்கு மாத்திரம் உரியன அல்ல. கடந்த காலம் பற்றிய வரலாற்றை அறிவதுகூட நிகழ்காலத்தைத் தீர்மானத்துக் கொள்வதற்காகவே. வரலாற்றை அறிவதனுடைய நோக்கம் கடந்தகாலத்தை நேசிப்பதோ கடந்த காலத்திலிருந்து விடுபடுவதோ அல்ல; நிகழ்காலத்தைப் புரிந்துகொள்வதற்கான கருவியாகக் கடந்த காலத்தைக் கொள்வதேயாகும். நிகழ்காலப் பிரச்சினைகளுக்கான தீர்வை கடந்தகால வரலாற்றிலே பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டார் வழக்காறு பற்றிய புரிதல்களும், அதனை கடந்த காலத்தோடு தொடர்புபட்ட ஒன்றாகவே கொள்கின்றன. கடந்த காலத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், பாடல்கள், கதைகள் முதலானவற்றைக் குறிப்பதாகவே நாட்டாரியல் விளங்கிக் கொள்ளப்படுகின்றது. அவ்வகையில் நாட்டார் வழக்காறு என்பது கடந்தகாலத்தின் பதிவாகும். சமூகத்தில் சமகாலத்தில் நிலவும் அத்தகு கூறுகள் சமகாலப் பதிவாகவும் அமையும் என்பதும் குறித்த ஒரு காலத்தின் சமகாலப் பதிவே காலவோட்டத்தில் கடந்தகாலப் பதிவாக மாறுகிறது என்பதும் மனங்கொள்ள வேண்டியன.

வரலாறு என்னும் அறிகைநெறி தொடர்பாக பொதுவாக முன்வைக்கப்படும் குறைபாடொன்று இங்கு மனங்கொள்ள வேண்டியது. காலனிய காலத்திலும் அதன் தொடர்ச்சிக் காலகட்டங்களிலும் எழுதப்பட்ட வரலாறுகள் யாவும் நாட்டை ஆண்ட அரசர்களின் வரலாறுகளாகவே அமைந்தன. அவர்களை அனுசரித்து வாழ்ந்த புலவர்கள், பிரதானிகளது வரலாறுகளும் அவர்களை எதிர்த்து நின்றவர்களின் வரலாறுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றோடு தொங்கிக் கொண்டன. ஆனால் சாதாரண மக்களுக்கு அந்த வரலாற்றில் இடம் இல்லை. மக்களுக்கு இடம் மறுக்கப்பட்ட வரலாறாக, உண்மை வரலாற்று ஆர்வாலர்கள், அந்த வரலாற்றைக் கடிகிறார்கள். அதன் விளைவாக மேல் நிலையில் நின்று வரலாறு எழுதுவதற்கு மாறாக, கீழ்நிலையில் நின்று - அடித்தளத்தில் நின்று - வரலாறு (Histroy from below) எழுத வேண்டும் என்ற சிந்தனை எழுகின்றது. வட்டார வரலாறு (Local History), அடித்தள வரலாறு (Protological History), இன வரலாறு (Ethno History) முதலான அணுகுமுறைகள் அதற்குத் துணை செய்தன.

மேல் நிலையிலிருந்து வரலாறு எழுதும்போது அதற்கான மூலாதாரங்களாக எழுத்துவடிவ ஆவணங்களும் மேல்வர்க்கத் தொடர்புடைய தொல்பொருட்களும் (அரண் மனை கோயில்கள் முதலானவை), சான்றாக அமைகின்றன. அடிநிலையிலிருந்து எழுதும்போது வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றாக அமையத்தக்கன எவை என்று சிந்திக்கும்போதுதான் நாட்டார் வழக்காறுகளின் முக்கியத்துவத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

நாட்டார் வழக்காறுகள் வரலாறு எழுதுவதற்குத் தேவையான மதிப்பார்ந்த விவரங் களைக் கொண்டுள்ளன. இதுவரையில் எழுதப்பட்ட வரலாறுகளிற் காணப்படும் இடைவெளி களை இட்டு நிரப்பும் ஆற்றல் நாட்டார் வழக்காறுகளுக்கு உண்டு. வரலாற்றாசிரியனுக்கும் நாட்டாரியலாளனுக்கும் இடையிலான உடன்பாடான ஊடாட்டம், உண்மை வரலாற்றைத் துலக்க உதவும். இலங்கையில் சனங்களின் குடியேற்ற வரலாற்றை அறிவதற்கு உதவும் நாட்டாரியல் அம்சம் ஒன்றை எடுத்துக் காட்டுவதன் மூலம் இந்த உண்மையை உணர்த்துவதற்கே இக்கட்டுரை முற்படுகிறது.

மகுடிக்கூத்து என்னும் நாட்டார் அரங்கு பெரும்பாலும் இலங்கையின் எல்லாப் பாகத்திலும் இடம் பெற்று வந்துள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் ஆடப்பட்ட அக்கூத்துத் தொடர்பாக முறையே செ. சுந்தரம்பிள்ளையும் சி. மௌனகுருவும் விரிவாக ஆராய்ந் துள்ளார்கள்.[2] அவற்றைத் தொகுத்து நோக்குவதன் மூலமும் வியாக்கியானம் செய்வதன் மூலமும் எமது குறிக்கோளை இலகுவில் எய்தலாம்.

மௌனகுரு மட்டக்களப்பில் மூன்று வகையான மகுடிக் கூத்துகள் இடம் பெற்றதாகக் கூறுகிறார். அவற்றுள் முதலாவதன் தன்மை பின்வருமாறு விவரிக்கப்படுகிறது:

> “மலையாளத்தில் இருந்த ஒண்டிப் புலியும் அவன் மனைவி காமாட்சியும், அவன் தம்பி கங்காணிக் குறவனும் அவன் மனைவி மீனாட்சியும் மட்டக்களப்புக்கு வருகின்றனர்; வழியில் சில குறவர்கள் அவர்களுடன் சேர்ந்து கொள்கின்றனர். மட்டக்களப்பை அவர்கள் அடைந்ததும் அங்குள்ள மந்திர தந்திரங்களையும் மகுடி விளையாட்டுக்களையும் பார்க்கின்றனர். மட்டக்களப்பினருக்கு ஒரு பிராமணன் தலைமை தாங்குகிறான். அவருக்குப் பக்கபலமாக ஒரு சீடப்பிள்ளையும் கஞ்சாச்சாமி ஒருவரும் ஊமைச்சாமி ஒருவரும் ஐந்து பிராமணப் பிள்ளைகளையும் இருக்கின்றனர்.
>
> மட்டக்களப்பாருக்கும் மலையாளத்தாருக்கும் இடையே போட்டி உண்டாகிறது. தான் வைத்திருக்கும் ஐந்து சிறிய மடைகளையும் வட்டா மடை ஒன்றினையும் பூரண கும்பத்தினையும் தன் மந்திரக் கட்டுப்பாடுகளையும் மீறி எடுக்க வேண்டும் எனவும் அவற்றை எடுத்தால் கொடிமரத்தில் கட்டியிருக்கும் பணப்பை ஒண்டிப் புலிக்குச் சொந்தமாவதுடன் அவர்கள் இந்த நாட்டில் குடியேறலாம் எனவும் பிராமணன் கூறுகிறான். தாங்கள் வென்றால் பிராமணன் தன் கூட்டத்துடன் அந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென அவர்கள் பந்தயம் போடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தயம் நடைபெறுகிறது. சகல மடைகளையும் மலையாளத்தார் எடுக்கின்றனர். பிராமணன் தோற்றோடுகின்றான்.[3]"

இந்தக் கதை மட்டக்களப்பின் ஒரு காலகட்டத்துக் குடியேற்ற வரலாற்றின் படிமமாக அமைகிறது என்று கொள்ளலாம். அந்தக் காலகட்டத்தில் அங்கே பிராமணீயம் நிலை கொண்டிருந்தது என்று கொள்ளலாம். சோழராட்சிக் காலத்திலிருந்து கிழக்கில் - குறிப்பாக மட்டக்களப்பில் - வைதீக மரபே நிலைகொண்டிருந்தது என்பது கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு பூர்வசரித்திரம், திருப்படைக் களஞ்சியம் முதலான நூல்கள் மூலம் புலானகின்றது.

"மட்டக்களப்பு பூர்வசரித்திரமும் (ம.பூ.ச) கோணேசர் கல்வெட்டும் மேற்படி பெருங் கோயில் மையப்பட்ட நீர்ப்பாசனக் குடியேற்றங்களையும் அவற்றின் அரசியல், சமூக முறைகளையும் கோடிட்டுக் காட்டுகின்றன. அரசின் அதிகாரி, பிராமணர், வணிகர், வெள்ளாளர், கோயில், ஊழியச் சாதிகள், அடிமைக்குடிகள் என்ற படிமுறைச் சமூக அமைப்பைக் கொண்ட நீர்ப்பாசனக் குடியேற்றமும் அதன் சாதியமைப்பை மீளுறுதி செய்யும் மையமாகப் பெருங்கோயிலும் அக்கோயிலின் முதல் மரியாதைக்குரியவனாக அரசின் பிரதிநிதியான வன்னியனும் என்ற வகையில் அமையும் சோழப் பேரரசின் நீர்ப்பாசனக் குடியேற்ற வடிவத்தையே கோணேசர் கல்வெட்டும் மட்டக்களப்பின் பூர்வசரித்திரமும் முதன்மைப்படுத்துகின்றன.[4]"

அதன் பின்னரான ஒரு காலகட்டத்தில் மலையாளிகள், வேடர்களின் குடியேற்றம் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் கணிசமான அளவில் ஏற்பட்டிருக்கிறது என்பதும் அது ஏலவே அங்கிருந்த குடிகளுக்கு அச்சத்தைக் கொடுத்தது என்பதும் காலகதியில் மலையாள சமூகம், வேடுவ சமூகம் முதலானவை அங்கு நிலை கொண்டுவிட்டன என்பதும் பிராமணியத்தின் செல்வாக்கு மட்டக்களப்பிலிருந்து மெல்லமெல்லத் தோல்வி யுற்றதென்பதும் மேற்படி மகுடிக்கூத்தின் கதையம்சங்களால் உணரத்தக்கன எனலாம். அண்மைக்கால மட்டக்களப்பு பிராமணியச் செல்வாக்கு அற்றதென்பது பலராலும் எடுத்துரைக்கப்படுவது.

மட்டக்களப்பில் மலையாளிகள் பெற்ற முக்கியத்துவம் பற்றி, வரலாற்றாசிரியர் வருமாறு கூறுகிறார்:

''மாகனுடைய ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பிலே சமுதாய பண்பாட்டு நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின. மலையாள தேசத்துமுக்குவர் உயர் பதவிகளையும் நிலமானியங்களையும் பெற்றனர். ஆட்சிமுறை சமூக வளமைகள் என்பனவற்றில் அவர்களின் செல்வாக்கு மேலோங்கியது. அதன் காரணமாக மருமக்கள் தாய முறையினை அடிப்படையாகக் கொண்ட முக்குவர் வழமை தேசத்து வழமையாக அழுத்தம் பெற்றது.[5]"

மட்டக்களப்புச் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றவர்கள், மலையாள வம்சாவளியினர் என்பது இங்கு அழுத்தமாக அவதானிக்கத்தக்கது. நாம் எடுத்துக் கொண்ட மகுடிக்கூத்தின்படி, மலையாளத்திலிருந்து வந்த ஒண்டிப்புலி முதலானவர்களோடு சில குறவர்களும் (வேடுவர்கள்) சேர்ந்து கொள்கின்றனர். அதன்படி நோக்கும்போது அந்தக் குறவர்கள் மட்டக்களப்பின் பூர்வீககுடிகள் அல்ல. இடைக்காலத்திலே வந்துசேர்ந்தவர்கள் என்று உணரக்கூடியதாகும். மட்டக்களப்பிலே இன்றுள்ள வேடுவர்களிற் பெரும்பாலானவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் தெலுங்குச் சாயலுடைய மொழியும் அவர்கள் கடல்கடந்து வந்தவர்கள் என்பதை உணர்த்தும்.

மட்டக்களப்பில் ஆடப்பட்ட மகுடிக்கூத்துகளில் இரண்டாவது வகை பற்றி மௌனகுரு கூறும் முக்கிய அம்சங்கள் வருமாறு:

> ''இரண்டாவது வகையினைச் சேர்ந்த இம் மகுடிக்கூத்தில் கதை அம்சம் குறைவு..... முனிவர் மேடைக்குள் சீடப்பிள்ளையுடன் சுழன்று நடந்துவந்து கொடிமரத்தையும் கும்பங்களையும் திருநீறு எறிந்து காவல் பண்ணுவார். சாம்பலாண்டிகளை எச்சரிப்பார். ஒருதரம் காவல் செய்து மந்திரம் சொல்லித் திருநீறு அணிந்தபின் மேடையில் கிழக்கு அல்லது மேற்குக் கோடியில் உள்ள பந்தல்களில் ஏதாவது ஒரு பந்தரில் அமர்ந்து கொள்வார்.......... இவ்வண்ணம் அடிக்கடி சீடப்பிள்ளையுடன் எழுந்து சென்று மடைகளைக் காவல் செய்தபடி அடுத்த பந்தரில் இருப்பார். இவ்வண்ணம் சீடப்பிள்ளையுடன் இரு பந்தல்களிலும் மாறிமாறி இருப்பதால் **ஆடரங்கம் முழுவதும் அவருக்கே சொந்தமானதாக இருக்கும். இதற்குப் பின் மேடைக்குட் பிரவேசிப்பவர்கள் பறங்கியும் பறங்கிச்சியும் ஆவர்.......** ஆடரங்கைச் சுற்றிவந்து வாயில்வரும் பாஷைகளைச் (பறங்கிப் பாஷை எனும் நினைப்பில்) கதைப்பார்கள். பார்வையாளரைப் பார்ப்பார்கள்; அவர்களுடன் கதைப்பார்கள்; கொடிமரத்துக்குச் சென்றதும் அங்கு காவல்காக்கும் சாம்பலாண்டி சாம்பலால் எறிவார். இவர்கள் பயப்படுவார்கள்.
>
> இவர்களை அடுத்து அரங்கினுள் வேடனும் வேடுவச்சியும் வருவர்...... அந்தநேரம் மேடைக்குள் புலிவரும்...... புலியைக் கண்டதும் மேடையில் நின்ற வேடர் வேடுவிச்சி கூட்டமும் பறங்கி பறங்கிச்சியும் பயந்து ஓடுவார்கள். புலி அவர்களைப் பாய்ந்து பாய்ந்து மேடைக்குள் துரத்திச் செல்லும். பறங்கி துவக்கினால் புலியைச் சுடுவான். வேடர்கள் அம்பினால் புலிக்கு எய்வார்கள். புலி சோர்ந்துவிழும். வீழ்த்தியவர்கள் புலியை வீழ்த்திய மகிழ்ச்சியில் அதன் அருகில் செல்வார்கள். புலி மீண்டும் எழுந்து பாய்ந்தோடும். வேடுவிச்சி ஓடிச் சென்று பந்தரில் இருக்கும் முனிவரிடம் முறையிடுவாள்....... முனிவர் சீடப்பிள்ளை புடைசூழ வேடனின் மயக்கம் தெளிவித்துச் செல்வார். புலிக்கு வேடன் எய்வதும் புலி விழுவதும், புலி மீண்டும் எழுவதும், வேடன் மயங்குவதும், முனிவர் வந்து அவன் மயக்கம் தீர்ப்பதும் மூன்று, நான்கு தடவைகள் மீண்டும் மீண்டும் நடைபெறும். இறுதியில் வேடன் புலியைக் கொல்வான். இறந்த புலியை வேடன் பங்கு போடுவான். **ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு கூறு என வேடன் பங்கு போடுவான்**.[6]"

இங்கு எம்மால் தடித்த எழுத்திற் காட்டப்பட்ட பகுதிகள் அவதானிக்கத்தக்கன. இந்த இரண்டாவது வகை மகுடிக்கூத்தில் நாம் அவதானிக்கத்தக்க முக்கிய விடயம் பறங்கியரின் பிரசன்னமாகும். அது புதிய இனக்குழுவொன்றில் வரவாகும். ஆட்சியதிகாரப் போட்டியை மாத்திரமன்றி மதரீதியான போட்டியையும் இக்கூத்துப் பிரதிபலிக்கின்றது எனக் கொள்ள இடமுண்டு. மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சாதிக்குமான பங்கீடு என்பதும் முக்கிய விடயமாகும். முக்குவரோடு தொடர்புபட்ட வகையில் சாதிப் பங்கீடு தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்து இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் மட்டக்களப்பில் தமக்குக் கிடைத்த அரசியல் ஆதிக்கத்துக்கு ஏற்றவகையில் தமது (முக்குவரது) அந்தஸ்தைப் பெறும் முயற்சி முழுமையாக வெற்றியளிக்கவில்லை என்றே நாம் கருதவேண்டியுள்ளது. கொக்கட்டிச் சோலை திருப்படைக் களஞ்சியத்தில் மரியாதைப் பங்கீட்டு வரிசையில் முதல் மரியாதை படையாட்சிகளுக்கும் அடுத்ததாக பிராமணர், கலிங்க வெள்ளாளர், வணிகர் என வரிசைப்படுத்துகின்றது. இதில் பன்னிரண்டாவது படியிலேயே மலையாள முக்குவர்கள் கூறப்படுகின்றனர். படையாட்சிகளின் அதிகாரம் அற்றுப்போய் அவர்கள் முக்குவர் சமூகத்தின் ஒரு குடியாக (படையாண்ட குடி) மாறிய பின்னரும் அவர்களின் கையிலேயே கோயில் நிருவாக உரிமை இன்றும் இருப்பது ஆராய்வதற்குரியது (மட்டக்களப்பில் கோயிலார், செட்டி, தாதன் ஆகிய சாதிகள் 19ஆம் நூற்றாண்டளவில் மருவி கோயிலார்குடி, செட்டிகுடி, தாதன் குடி என இன்று காணப்படுவதை நாம் நோக்கவேண்டும்.) கோயில் மையப்பட்ட சமூகமொன்றில் வந்து குடியேறுபவர்களுக்கு நீண்டகாலத்தின் பின்னரும், பல உள்ளூர் இழுபறிகளின் பின்னருமே கோயில் உரிமை வழங்கப்படுவதை நாம் இன்றும் மட்டக்களப்பின் சில இடங்களில் காணலாம்.[7]''

வடபகுதியில் ஆடப்படும் மகுடிக்கூத்துக்களும் இன, மத அடிப்படையில் புதிய ஒரு சமூகக்குழுமத்தின் பிரசன்னம் குறித்து ஏலவே நிலைபெற்றிருந்த சமூகக்குழுமம் காட்டும் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவனவாகவே காணப்படுகின்றன.

"வட இலங்கையில் ஆடப்படும் மகிடிக்கூத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன:

1. பிராமணர்களுக்கும் முஸ்லிம் வியாபாரிகளுக்கும் ஏற்பட்ட தகராறை அடிப்படையாகக் கொண்ட மகிடிக் கூத்து.

2. பிராமணர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் ஏற்பட்ட தகராறை அடிப்படையாகக் கொண்ட மகிடிக் கூத்து."[8]

பிராமணர்களுக்கும் முஸ்லிம் வியாபாரிகளுக்கும் இடையிலான தகராறை மையப்படுத்திய கூத்து மூன்று வகையிலே நடைபெற்றதாக இனங்காணப்படுகிறது. எனினும் அவை யாவற்றினதும் பொதுப்பண்பு இருசாராருக்கும் இடையேயான முரண்பாடே. கடல் வழியாக வந்து உள்ளூரில் வியாபாரம் செய்ய முற்படும் முஸ்லிம்களுக்கும் உள்ளூர்ப் பிராமணர்களுக்குமிடையில் நிச்சயிக்கப்பட்ட மந்திர தந்திரப் போட்டிகளுக்கு நடுவர்கள் நியமிக்கப்படுவர்.

''இப்போட்டிக்கு நடுவர்களாக மகாராசாவும் மகாராணியும் இருப்பதாகச் சில இடங்களிலும் பறங்கித்துரையும் துரையின் மனைவியும் இருப்பதாக வேறு இடங்களிலும் கதையை அமைப்பர்"[9]

இது, வேறுவேறு காலகட்டங்களில் - யாழ்ப்பாண அரசர் காலத்திலும் போர்த்துக்கேயர் காலத்திலும் - இடம்பெற்ற முஸ்லிம் குடியேற்றங்களையும் அதை உள்ளூர்ச் சைவர்கள் எதிர்கொண்டவற்றையும் பிரதிபலிப்பன எனக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முல்லைத்தீவு, வவுனியா ஆகிய வன்னிப் பகுதிகளிற் பெரிதும் பயிலப்பட்டு வந்த இந்தக் கரண நாடகம் யாழ்ப்பாணத்தில் அரியாலை, ஓட்டுமடம், தீவுப்பகுதி ஆகிய சில இடங்களில் இடைக்கிடை நிகழ்ந்ததாகத் தெரிகிறது,"[10]

இக்கூத்தினைத் தமிழர்களும், முஸ்லிம்களும் ஆடி வந்திருக்கிறார்கள்.

''தமிழர்கள் ஆடும்போது பிராமணர்கள் வெற்றிபெறுவதாகக் கதை அமையும், முஸ்லிம்கள் ஆடும்போது பிராமணர்கள் தோல்வியடைவதாகக் கதை நிறைவுபெறும். முஸ்லிம்களுள் முல்லைத்தீவு முஸ்லிம்களே இக்கூத்தை நிகழ்த்தி வந்திருக்கிறார்கள் என்பர். முல்லைத்தீவிலே தமிழர்களும் இக்கூத்தைப் பார்த்து மகிழ்வதுண்டு. கதை ஒரு தகராறை அடிப்படையாகக் கொண்டதாக விருந்தாலும் இருசாராரும் இக்கூத்தை, ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாக ஏற்று ஒற்றுமையாகக் கண்டுகளிப்பது முக்கியமான விடயமாகும்."[11]

யாழ்ப்பாணத்துக்கான முஸ்லிம்களின் குடிவரவு தொடக்கத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் எச்சரிக்கையுணர்வைத் தோற்றுவித்தபோதிலும் காலகதியில் புரிந்துணர்வோடு கூடியதாக அமைந்துவிட்ட தன்மை மேற்படி கூத்துக்களின் முடிவுகள் உணர்த்துகின்றன.

''கூத்து முடிவில் முஸ்லிம்கள் தோல்வியை ஒத்துக்கொள்வர். அப்பொழுது வெள்ளைக்காரத்துரையும் துரைசானியும் இருசாராரையும் சமாதானம் செய்வர். அதன்பிறகு **புரோகிதர் எல்லோருக்கும் நன்மையுண்டாக வேண்டிக் கோயிலில் (பந்தலில்) பூசை செய்வர்.** இத்துடன் கூத்து நிறைவுபெறுகிறது..... முஸ்லிம்கள் ஆடும் மகிடக் கூத்தில்..... ஈற்றில் பிராமணர்கள் தோல்வியை ஒப்புக்கொள்வர். துரையும் துரைசானியும் இருசாராரையும் சமாதானம் செய்வர். **எல்லோருக்கும் நன்மை வேண்டி முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபடுவர்**"[12]

இரு சமூகத்துக்கும் இடையிலான சமரசம் இக்கூத்தின் பிரதான அம்சமாகும். எம்மால் தடித்த எழுத்திற் காட்டப்பட்ட பகுதிகள் அவதானித்தற்குரியன. கத்தோலிக்கர் மத்தியில் ஆடப்படும் மகிடிக்கூத்து இதற்கு நேர்மாறானது. அது இனக்குழுமம் ஒன்றின் குடிவரவு தொடர்பாக பிரச்சினையை மையமாகக் கொண்டதாகவும் அமையவில்லை. ஏலவேயிருந்த ஒரே இனக்குழுமத்தில் மதரீதியாக வேறுபட்ட இருசாராருக்கிடையிலான போட்டியைப் பிரதிபலிப்பதாகவே அது அமைந்துள்ளது. 'மெய்ஞ்ஞான வர்த்தகன்' என்ற பெயர் கொண்ட மகிடிக் கூத்து கத்தோலிக்கர்களால் ஆடப்பட்டது. கிறிஸ்தவ மரபில் ஏனைய மதத்தவர் யாவரும் அஞ்ஞானிகள் கிறிஸ்தவர்களே மெய்ஞ்ஞானிகள் என்று கொள்ளப்படுவது இங்கு மனங்கொள்ளவேண்டியது. கத்தோலிக்க மகிடிக்கூத்தின் பிரதான கதையம்சங்கள் சில வருமாறு:[13]

- பிராமணன் ஒருவனும் அவன் மனைவியும் மகனும் ஒரு சத்திரத்தை அடைதல்.
- வர்த்தகன், அவன் மனைவி, அவர்களது பணியாள் மூவரும் தேவமாதா கோயிலில் வணங்கியபின் அச்சத்திரத்தை அடைதல்.
- சத்திரத்தில் வர்த்தகன் தங்குவதைப் பிராமணன் எதிர்த்தல்.
- இருவரும் தத்தம் சமயமே மெய்ச்சமயம் என வாதம் செய்தல்.
- இருசாராருக்குமிடையில் மந்திர தந்திரப் போட்டி இடம்பெறல்.
- அதில் வர்த்தகன் இறக்க நேரிடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பின் தேவமாதா அருளால் எழுந்து வர்த்தகன் போட்டியில் வெற்றிபெறல்.
- பிராமணன் தோல்வியை ஒப்புக்கொண்டு கத்தோலிக்க மதத்தைத் தழுவுதல்.

கத்தோலிக்க மகிடிக்கூத்தில் சைவநிந்தனை பல இடங்களிலும் காணப்படுவது முக்கிய அம்சமாகும். கத்தோலிக்க மகிடிக்கூத்துக்கு எதிர்வினையாகச் சைவர்கள் மத்தியில் எந்த மகிடிக்கூத்தும் ஆடப்பட்டதாகத் தெரியவில்லை.

இலங்கைத் தமிழ்ச் சூழலில் வழங்கிய மகுடி (மகிடி) கூத்தை ஒத்ததாக சிங்களவர் மத்தியில் வழங்கும் சொக்கறி என்னும் நாட்டார் அரங்கம் அமைவதை, காரை சுந்தரம்பிள்ளை எடுத்துக் காட்டியுள்ளார்.

> ''சிங்கள நாட்டுப்புற மக்கள் மத்தியில், குறிப்பாக சிங்கள வன்னி, உடறட்ட ஆகிய இடங்களில் உள்ள கிராமிய மக்கள் மத்தியில் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்டார் கூத்துக்களிலொன்றாக 'சொக்கறி' விளங்குகிறது. 'சொக்கறி' என்னும் அழகிய பெண்ணும் அவளுடைய கணவனாகிய குருஹாமியும் (ஆண்டி குரு) காசியிலிருந்து ஊரூராக அலைந்து திரிந்து, சீவனோபாயத்திற்கேற்ற வழியின்றி ஈற்றில் இலங்கைக்கு வர முடிவுசெய்வர். இவர்களுடன் பறையா என்னும் பணியாளும் அவனுடைய மனைவி காளியம்மாவும் கூட வருவர். இவர்கள் மரம் தறித்துத் தோணி செய்து, அதன்மூலம் கடலைக் கடந்து இலங்கையிலுள்ள புத்தளத்தை அடைவர். இங்கே நிலமொன்றைத் தெரிவுசெய்து, வீடுகட்டி வாழும்பொழுது குருஹாமியை நாய் கடித்துவிடும். நாட்டுப்புற வைத்தியரொருவர் இதற்குப் பரிகாரம் செய்வர். அப்பொழுது வைத்தியருக்கும் சொக்கறிக்கும் கள்ள நட்பு உண்டாக இருவரும் ஒருநாள் களவிலோடி விடுவர். இதனால் கவலை கொண்ட குருஹாமி அவளைப் பல இடங்களிலும் தேடியலைந்து, ஈற்றிற் கதிர்காமக் கடவுளருளாற் கண்டுபிடித்து நையப்புடைத்து அழைத்து வருகிறான்.''[14]

சொக்கறியின் கதையம்சம் தொடர்பாக காரை சுந்தரம்பிள்ளை தரும் வியாக்கியானமும் கருதத்தக்கது.

> ''சொக்கறியின் கதையமைப்பும் புலப்பெயர்வு சம்பந்தப்பட்டதாகவேயுள்ளது. இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த சொக்கறி, குருஹாமி, பறையா (பக்கிமீரா), காளியம்மா ஆகியோர் இலங்கையிற் குடியேறிய முறைமையை இக்கூத்து விளக்கிச் செல்கிறது. சொக்கறியில் வரும் பறையா, காளியம்மா, வைத்தியர் ஆகிய பாத்திரங்கள் தமிழிலும் உரையாடக் காணலாம். சொக்கறி, குருஹாமி ஆகியோர் சிங்களத்திலேயே உரையாடுகின்றனர். இக்கூத்தின்படி வைத்தியர் ஈழநாட்டைச் சேர்ந்தவர். எனவே ஆரியக் குடியேற்றங்கள் இலங்கையில் ஏற்பட்ட பொழுது வாழ்ந்தவர்கள் தமிழ் பேசும் குழுவினரென்பதும், அவர்களுடன் வந்தேறு குடிகள் (ஆரியர்) கலந்து கொண்டனரென்பதும் இதனாற் பெறப்படுகிறது.''[15]

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நிகழ்ந்த பெரும்பாலான குடியேற்றங்கள் புத்தளத்தினூடாகவே நிகழ்ந்தன. சொக்கறி வைத்தியரோடு கொண்ட கள்ளத் தொடர்பு, அதனாற் கவலை கொண்ட குருகாமி அவளை மிகமுயன்று மீட்டுவந்து நையப்புடைத்தமை ஆகியன சிங்களச் சமுதாயம் தமிழ்ச் சமுதாயத்தோடு கலந்து கொண்டமை, சிங்கள சமுதாயம் தமிழ்ச் சமுதாயத்தோடு கலப்புற்றமை, சிங்களமொழி தமிழ்மொழியின் தாக்கத்துக்குள்ளாமை ஆகியவற்றையும் அது குறித்த சிங்கள சமுதாயத்தின் பண்பாட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புணர்ச்சியையும் குறிப்பனவாகலாம் என மேலதிக வியாக்கியானங்களையும் செய்வதற்கு இதில் இடமுள்ளது.

இக்கட்டுரை நாட்டார் வழக்காறுகள், வரலாற்றை அறிந்து கொள்ளத் துணைசெய்ய வல்லன அல்லது வரலாற்றைப் பிரதிபலித்து நிற்பன என்பதைக் குடியேற்ற மரபு என்ற எல்லைக்குட்பட்ட வரையில் மட்டுமே நோக்கியது; அதற்கு மகுடி / மகிடிக்கூத்து என்ற ஒரு நாட்டார் அரங்க முறைமையை மாத்திரமே துணைக் கொண்டது. ஆனால் வரலாற்றின் பல்வேறு அம்சங்களையும் கண்டுகொள்வதற்கு நாட்டார் வழக்காற்றின் பல்வேறு அம்சங்கள் துணைசெய்யும் என்பது இங்கு வலியுறுத்தப்பட வேண்டியது.

> 'வரலாற்றாய்வாளருக்கு குறைவான மூலங்களும் கடினமான செருப்புக்களும் தேவை'
>
> - ஆர்.டிச். டானி

## அடிக்குறிப்புகள்

1. Birendarath Dtta (2002) *Folklore and Historiography*, National Folklore Support centre, Chennai.
2. அ. காரை.செ. சுந்தரம்பிள்ளை (2000), *வடஇலங்கை நாட்டார் அரங்கு*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

   ஆ. சி. மௌனகுரு (1998), *மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்*, விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.
3. சி. மௌனகுரு, மேற்படி, பக். 180, 181.
4. டி. சிவராம் (2004), 'மட்டக்களப்பின் குடியேறற மரபுகள்', *வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலகங்களாக...*, கோல்டன் ஓப்செற் அச்சகம், கல்முனை.
5. சி. பத்மநாதன் (2001), *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்*, குமரன் புத்தக இல்லம், சென்னை - கொழும்பு.
6. சி. மௌனகுரு, மு.கு, நூ, பக். 190-197.
7. டி. சிவராம், மு.கு.நூ. பக். 65-66.
8. காரை செ. சுந்தரம்பிள்ளை, மு.கு,நூ, ப. 80.
9. மேற்படி, பக். 86.
10. மேற்படி, பக். 79.
11. மேற்படி, பக். 79, 80.
12. மேற்படி, பக். 84, 85.
13. மேற்படி, பக். 98, 99.
14. மேற்படி, பக். 105.
15. மேற்படி, பக்.. 106.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவிகளின் உலகம்: நிலம், பொழுது, ஆள் பற்றிய பண்பாட்டுக் கருத்தமைவுகள்

பேராசிரியர் ச. பிலவேந்திரன்

## முன்னுரை

ஆவி, பேய், பிசாசு, பூதம், காத்துக் கருப்பு, முனி, மோகினி, காட்டேறி என இன்றைய நிலையில் பொதுவாகக் குறிப்பிடப்படுபவை, பழந்தமிழ்ச் சொல்லாடலில் கழுது, சூர் (சூர்மகளிர், அரமகளிர், சூரர மகளிர், வரையர மகளிர்), முருகு, ஐயை, அணங்கு, கொற்றவை (பெருங்காட்டுக் கொற்றி), கூற்றுவன், பழையோள், காடுகாள், (காடுகிழாள், காடுகிழவோள்) கானமர் செல்வி, கடல்கெழு செல்வி, மலையுறை தெய்வம், கொல்லித் தெய்வம் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவை பற்றிப் பழந்தமிழ்ப் பனுவல்களும் இன்றைய பண்பாட்டு வழக்காறுகளும் பெரும்பாலும் ஒத்துக் காணப்படுவதுடன் ஒரே படித்தான பண்புக் கூறுகளையும் (stereotypes) வெளிப்படுத்துகின்றன. எனவே இவற்றின் பொதுவான பண்புக் கூறுகளின் அடிப்படையில் இவற்றைக் குறிப்பிடலாம். ஏனென்றால் இவை அனைத்தும் ஒரேயொரு மீயியல் மெய்ம்மையையே (liminal category liminal reality) சுட்டுகின்றன. ஆவி பற்றிய கருத்தாக்கம் என்பது முதன்மையாகப் பண்பாடு சார்ந்ததும் மனம் சார்ந்ததுமான கருத்தமைவு (cultural and mental construction) ஆகும். இந்த அல்லுருவமான கருத்தமைவு நிலம், பொழுது, ஆள் என்னும் திண்மியமான பொருள்களின் பண்பியக்கங்கள் பற்றிய கருத்தமைவுகளின் பிழிவாக அமைவதைக் காணலாம். ஆக, ஆவி பற்றிய ஒரு முழுதளாவிய புரிந்து கொள்ளுதலை நோக்கியதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆவி: தொடக்க நிலைப் புரிந்து கொள்ளுதல்

இது குறிப்பிட்டதொரு அல்லது ஏதாவதொரு வகையில் மனிதரை சமூகத்தை அதிர்வூட்டும், அச்சமூட்டும் தன்மையது. எல்லாச் சமூகங்களும் ஆவி பற்றிய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளன. ஆவிக்கான வழிபாடுகளையும் சடங்குகளையும் கூடக் கொண்டுள்ளன. இவ்வாறு உலகந்தழுவிய நிலையில் சமூக மனங்களில் நீங்கா இடம்பெற்றிருக்கும் ஆவி மனிதரைக் காட்டிலும் கூடுதலான ஆற்றலையும் இயங்கு வெளியையும் கொண்டுள்ளதாகக் கருத்தமைவு பெற்றுள்ளது. மனிதரோடு தொடர்ந்து உறவில் இருக்கின்றது. இது திண்மியத் தன்மை ஏதுமற்றது உடலற்று, உருவமற்று, அல்லுருவமான ஒன்றாக உள்ளது. மனித சமூக மன ஓர்மைக்குள் மட்டுமே இயங்கிக் கொண்டிருப்பதாக உள்ளது. அதனாலேயே மனித - சமூகத்துடன் நெருக்கமான உறவோடும் மனிதரையும்-சமூகத்தையும் தொடர் அதிர்விலும் அச்சத்திலும் வைத்திருப்பதாக உள்ளது. பண்டைய காலங்களிலும், இன்றும், இனிவருங் காலங்களிலும் மனிதரோடும் மனிதச் சமூகங்களின் நனவோடும், நனவிலியோடும் தொடர் இணைப்பில் இருந்து கொண்டிருக்கும் ஆவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய அடிப்படையான தேடல் இன்றைய பண்பாட்டு ஆய்வில் தேவையான ஒன்றாக இருக்கின்றது.

ஆவி எந்த வகையினத்தைச் சார்ந்தது? விலங்கினமா? ஆணினமா? பெண்ணினமா? என்கிற அடிப்படை வினாக்களைத் தொடுக்கும்போது பின்வரும் கூறுகள் வெளிப்படுகின்றன. இது விலங்கினத்தைச் சார்ந்ததன்று. மனிதரையே குறித்து நின்றாலும் (represent) சில சூழல்களில் ஆணினத்தையும் சில சூழல்களில் பெண்ணினத்தையும் குறித்து நிற்கிறது. என்றாலும், பொதுநிலையில் ஆண், பெண் பாலினம் சாராத பாலினமற்ற (genderless) மெய்ம்மையையே இது குறித்து நிற்பதையும் சுட்ட முடியும். அடுத்ததாக, இது நிகழ்காலத்திய மெய்ம்மையா, கடந்த காலத்திய மெய்ம்மையா என்பதும் இன்றியமையாதது.

பண்டைய வரலாற்றுத் தரவுகளும் நிகழ்காலப் பண்பாட்டுத் தரவுகளும் இதனை வேறொரு வகையாக விளக்குவதைக் காணலாம். அதாவது, ஆவி என்பது நேற்றைய நாளின் ஆண்டின் கடந்த காலத்தில் உருப்பெற்றது. எனவே, கடந்த காலம் சார்ந்தது எனினும், அது கடந்து போன ஒன்றாய் முடிவுறாமல் இன்றளவும் தொடர்ந்து நிகழ்வதாகவும், உயிர்ப்புள்ளதாகவும் தொடர்ந்து இருந்து வருகிறது. நிகழ்காலத்திலும் பண்பாட்டு வெளியில் எங்கேனும் ஏதோவொரு சூழலில் ஆவி தோற்றம் பெற்றுக் கொண்டேயிருக்கிறது. பாலினச் சார்பற்று, கால வெளி கடந்து, கூடுதல் ஆற்றல் கொண்டு, திண்மைத் தன்மையற்ற அல்லுருவமானதாய் விளங்குகிறது. இது மனித சமூக மனத்தின் கூட்டு நினைவு, எண்ண வெளிகளுக்குள் புனைவுருவாய் நின்று மனிதரையும் சமூகத்தையும் தொடர்ந்து அசைவுறுத்திக் கொண்டும் அச்சுறுத்திக் கொண்டும் இருப்பதாக உள்ளது.

இவ்வாறாக, மனித மனத்தின் கூட்டு நினைவு வெளிக்குள் இயங்கும் 'ஆவி' என்பதன் தோற்றம், இருப்பு, இயங்கு சூத்திரங்களைத் தமிழ்ச் சமூகப் பொருட்கோட்பாடு வழியே மேலும் விரிவாகப் புரிந்துகொள்ளலாம். தமிழ்ப் பண்பாடு அனைத்திற்கும் முதற்பொருளாக நிலத்தினையும் பொழுதினையும் குறிப்பிட்டுச் சொல்கிறது. மனிதப் பண்பாட்டுக் கூறுகளின் தருக்க ஒழுங்கமைவுகள் இந்த நிலம், பொழுது எனும் முதற்பொருள்களின் அமைப்பியல் ஒழுங்கமைவுக்கு இயைபாகவே அமைந்துள்ளதைப் பல்வேறு காட்டுகளின் வழி விளக்கலாம். இந்தக் கட்டுரையில் 'ஆவி' பற்றிய கருத் தமைவின் அடிப்படை ஏரணம் சார் கருத்தாடல்களைத் தமிழ்ப் பண்பாடு கட்டமைத்துள்ள நிலம், பொழுது என்னும் முதற்பொருள் கோட்பாடு வழியும் 'ஆள்' (person) பற்றிய கருத்தமைவுகளின் வழியும் புரிந்துகொள்ளலாம். மனித சமூக வாழ்தலுக்கும் இருத்தலுக்கும் சிந்தனைக்கும் அடிப்படையாக 'நிலம், பொழுது' ஆகிய இரண்டும் அமைகின்றன. இவ்விரண்டும் பண்பாட்டு சமூக நடத்தை, சிந்தனை ஆகியவற்றின் ஏரணவிய முறைமையையும் ஒழுங்கமைதியான அமைப்பையும் உருவாக்கும் அடிப்படைகளாக விளங்குகின்றன என்றும் சொல்லலாம். நிலம், பொழுது ஆகிய முதற்பொருட்களுடன் ஆள் பற்றிய பண்பாட்டுக் கருத்தமைவுடனும் கடந்த காலத்தைச் சார்ந்த மனிதனின் அல்லுருவமானதும் புனைவுருவானதுமான 'ஆவி' ஒரு தொடர்பிசைவில் ஒன்றிணையும் உள்ளுறை நுட்பத்தையும் புரிந்துகொள்வதில்தான் ஆவி பற்றிய சமூகப் பண்பாட்டுச் சொல்லாடலின் முழுப்பரிமாணத்தையும் விளங்கிக் கொள்ள இயலும். எனவே நிலம், பொழுது என்னும் அடிப்படை முதற் பொருள்களைக் கொண்டும் ஆள் பற்றிய சமூகக் கருத்தமைவைக் கொண்டும் ஆவியின் தோற்றம், இருப்பு, இயக்கம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டில் நிலம்

மனிதப் பண்பாடுகள் அனைத்தும் 'நிலம், பொழுது' என்னும் திண்மையான பரப்பிற்குள்ளேயே தமது அனைத்துச் செயல்பாடுகளையும் வடிவமைத்துக் கொண்டுள்ளன. மனிதனின் சமூகத்தின் புலனறிதிறனிலும் (cognitive development) அறிவாராய்ச்சியிலும் (epistemology) இவ்விரு முதற்பொருள்களது பங்கு அடிப்படையானது. நிலம் பற்றிய வரைவு வரலாறு, இலக்கியங்கள், பண்பாட்டு வழக்காறுகள் முதலிய அனைத்திலும் இது வெகுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிலம் என்னும் முதற்பொருள் பண்பாட்டு வளர்ச்சியில் கொண்டுள்ள அடிப்படையான அடிவேர்களைக் காணும் தளங்கள் மிகுதி.

மனிதன் வரலாற்றுக் காலம் முழுவதுமே ஒரு குழுவுக்குள் இயங்குபவனாகவே இருந்து வந்துள்ளான். ஒவ்வொரு குழுவும் அவ்வக்குழுவுக்கேயுரிய வாழ்தல் முறை, அறிதல் முறை, உலகப் பார்வை, தொன்மம், உளவியல் மனம், உணர்வுகள், இலக்கியம் முதலிய பல கூறுகளைக் கொண்டதாக உள்ளது. ஒரு குழுவின் நிலவியல் வாழ்தளமும் அதனுள் இயங்கும் அமைப்பு சார்ந்த கூறுகளுமே அக்குழுவின் தனித்தன்மைகளாக அமைகின்றன. அவையே அக்குழு தன்னை ஒரு தனித்த 'தன்னிலை', 'தான்' (I, Me) ஆக உணரும் தன்மையைத் தருகின்றது. இவ்வாறாக, ஒவ்வொரு குழுவும் தன்னை ஒரு 'தான்' (அகம்) ஆக உணருதலும் அதனைத் 'தான்' சார்ந்த பிற குழுக்களுடன் நீட்டித்துக் கொள்வதும் நடைபெறுகின்றன. ஒரே குழுவுக்குள்ளும் பல குழுக்கள் அல்லது தனிநபர்கள் தனித்த தான் என்னும் அடையாளத்தைக் கொண்டிருப்பதை அறியலாம்.

நிலம் என்பது ஓர் எதிர்வு வாய்ப்பாடு கொண்டதாகப் பகுக்கப்பட்டுப் பண்பாட்டுப் பொருள் தளங்களை உள்ளடக்கியதாக இருப்பதை இலக்கியப் பனுவல்களும் சமூகப் பண்பாட்டு வழக்காறுகளும் உணர்த்துகின்றன. தற்காலத்தில் 'நிலம்' என்பதனை தொல் தமிழ்ப் பகுப்பான ஐந்திணை நில அமைப்பையும் தாண்டியதாகக் கொள்ளவியலும். ஒவ்வொரு குறுநிலப் பரப்பும் (சிற்றூர், நகரம், வட்டம், மாவட்டம், மாநிலம், நாடு) தன்னளவில் நிறைவுபெற்ற தனித்த முழுமையான சமூக, பொருளியல், அரசியல் தளங்களில் செயல்படுவதைக் காணவியலும். நிலம் அல்லது இடப்பரப்பு என்ற தளத்தில் ஒரு சிறு அலகான குடியிருப்பு அல்லது சிற்றூர் கூட ஒரு தன்னிறைவான முழுமையான அமைப்பாகச் செயல்படுவது குறிப்பிடத்தக்கது. இன்னும் சொல்லப்போனால் ஒரு குடும்பம் தனிநபர் வாழும் வீடு என்னும் மிகச் சிறிய அலகே கூட இடம் என்கிற அளவில் ஒரு குறு உலகமாக (microcosm) தன்னிறைவான களமாக (space) இயங்குகின்றது.

ஏற்கெனவே சுட்டியவாறு ஒவ்வொரு சமூகமும் தனது நிலப்பரப்பினை ஓர் எதிரெதிர்ப் பண்புகளை உணர்த்தும் பகுதிகளாகப் பிரித்து வைத்துள்ளது. இப்பகுதிகள் முறையே 'நாட்டுக்களம்', 'காட்டுக்களம்' அதாவது மனிதர் வாழும் பகுதி, மனிதர் வாழாப் பகுதி என்பனவாக உள்ளன. இவ்விரு களங்களும் எதிரெதிர்ப் பண்புகளை உள்ளடக்கியவையாகவும் சமூக ஓர்மைக்குள் கருத்தமைவு செய்யப்பட்டுள்ளன. இவ்வெதிரெதிர்க் களங்களை ஒரு மெல்லிய இடப்பரப்புவெளி பிரித்துவைத்து உள்ளதும் சமூகச் சடங்கியல் வேளைகளில் பொருண்மைப்படுத்தப்படுகின்றது. இது 'எல்லைக் களம்' எனப்படும்.

நாட்டுக்களம், காட்டுக்களம், எல்லைக்களம் ஆகியன திண்மையாகவும் சடங்கிய லாகவும் அடையாளப்படுத்தப்படுவதைச் சமூகப் பண்பாட்டு, சடங்கியல், அரசியல் நிகழ்வுகளில் தெளிவாக அறியமுடியும். நாட்டுக்களமும் காட்டுக்களமும் முரண்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்களாகச் செயல்படுவதோடு இவை ஒன்றொடொன்று இரண்டறக் கலக்காமல் சமூகத்தின் ஒழுங்கு, அமைதி, இறையாண்மை போன்றவற்றைக் கட்டிக்காக்கும் ஒன்றாகவும் பொருண்மை கொண்டுள்ளன (கிளாஸ் 1979, இராபர்ட் லெவி 1993, பிலவேந்திரன் 1993, 1997, 1998). இக்களங்கள் வெறும் முரண்தன்மை கொண்ட களங்களாக மட்டுமின்றித் தத்தமக்குள் ஆழ்ந்த பண்பாட்டுப் பொருண்மைகளை உட்பொதிந்திருக்கும் களங்களாகவும் திகழ்கின்றன. நாட்டுக்களம் என்பது அமைதி, காதல், குடும்பம், பாதுகாப்பு, வாழ்வு, சமூகத்தன்மை போன்றவற்றையும் காட்டுக்களம் என்பது அமைதியின்மை, குழப்பம், அச்சம், போர், பாதுகாப்பின்மை, சாவு, சமூகத் தன்மையின்மை போன்றவற்றையும் முறையே பொருண்மைப்படுத்துகின்றன. இக்களங்களின் தனித்த பண்பு நியதிகள் மீறப்படுதல் அல்லது புறந்தள்ளப்படுதல் சமூக, அரசியல், சடங்கியல், உளவியல் நிலைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகிறது என்பதைப் பல பண்பாட்டுக் கூறுகள் எடுத்தியம்புகின்றன.

இவ்வாறு, நிலம் பல உட்தளங்களைக் கொண்டதாக உள்ளது. மேலும், இக்களங் களைச் சமூகம் / பண்பாடு இரு அச்சுக்களிலும் (அதாவது கிடைமட்டம், செங்குத்து) இயங்குவதாகக் கருத்தமைவு செய்துள்ளது. கிடைக்கோட்டு அச்சில் நாட்டுக்களம் சமூகம் ஒரு முனையிலும் காட்டுக்களம் இயற்கை (மனிதர் தவிர்த்த பிற உயிரினங்கள், இயற்கை, காடு, ஆறு, நீராதாரங்கள், கடல், ஆவி, தெய்வம்) எதிர் முனையிலும் இயங்குகின்றன. செங்குத்து அச்சின் கீழ் தரைப்பகுதியில் சமூகமும் மேல் பகுதியில் இயற்கை, ஆவி, தெய்வம் ஆகியனவும் இயங்குகின்றன. எனினும், இந்த எதிரெதிரான திசை இயக்கமும் சமூகச் சடங்கியல் தளங்களில் அச்சுக்கள் இடம் மாற்றப்பட்டு இயங்குவதையும் அறியமுடியும்.

களம் பற்றிய பண்பாட்டுக் கருத்தமைவுகளைப் பின்வருமாறு சுருக்கித் தரலாம்.

1. களம் என்பது பண்பாடு, இயற்கை ஆகியவற்றின் பொருண்மைகளை உள்ளீடு செய்வனவாக முறையே நாடு, காடு என்கிற களங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. இக்களங்கள் எதிர்மறைப் பண்பு கொண்ட களங்களாகச் செயல்படுகின்றன.

2. இவ்விரு களங்களின் நிலைபேற்றையும் அவற்றின் முரண்தன்மைகளையும் பொருண்மைப்படுத்துவதோடு அவற்றைத் தனித்தனியே பிரித்து நிற்கும் மென்பரப்பு ஒன்றும் உண்டு. இப்பரப்பே இவ்விரு களங்களையும் பிரித்து நிற்பதோடு இவற்றுக்கிடையில் ஊடாடும் ஓர் இடைக் களமாகவும் செயல்படுகிறது. இவ்விடைக் களம் எல்லைக்களம் எனப்படும்.

3. நாடு, காடு என்ற இவ்விரு களங்களும் தத்தமது தனித்த பண்புகளுடனும் கருத்தமைவுகளுடனும் தனித்து இயங்கக்கூடியன. மேலும் இவையிரண்டும் எந்த வேளையிலும் ஒன்றின் செயலைப் பிறிதொன்று செய்தலோ ஒன்றோடொன்று இணைதலோ கலத்தலோ சாத்தியமற்றது. அவ்வாறு இவையிரண்டும் ஒன்றாகக் கலக்க நேரிட்டால் அது பிரபஞ்சச் சீரழிவையும் அண்ட ஒழுங்கின் சீர்குலைவையும் உருவாக்கும் என்று கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்பாடும் பொழுதும்**

நிலம் என்பது பண்பாட்டில் கருத்தமைவு பெற்றிருப்பது போலவே 'பொழுது' என்பதும் அதன் பண்பினடிப்படையில் கருத்தமைவு பெற்றுள்ளது. திண்மையான நிலத்திலும் பொழுது என்னும் அசைவியக்கத்திலும் தான் சமூகங்களினதும் மனிதர்களதும் இருப்பு, இயக்கம் கால்கொண்டுள்ளது. சமூகம், பொழுது என்பதின் நுண்மையான அசைவியக் கங்களையும் பண்புகளையும் தனித்தே அடையாளப்படுத்தியுள்ளது. தமிழிலக்கியச் சொல்லாடல் பொழுதினைப் 'பெரும் பொழுது', 'சிறு பொழுது' என விரிநிலையில் பாகுபடுத்தியுள்ளது. பெருநிலையில் சூரியன், பூமிக்கிடையிலான சுற்று, இயங்குதல் அடிப்படையில் ஆறு பருவங்களாகப் பிரியும் ஓர் ஆண்டு என்பதனைப் பெரும் பொழுது என்பதாகவும் இன்னொரு நிலையில் ஓரிரவு, ஒரு பகலினை உள்ளடக்கும் ஒரு நாளைய பொழுதினைச் சிறுபொழுது என்பதாகவும் பகுத்துள்ளது. பெரும் பொழுதும் சிறு பொழுதும் வேறொரு வகையில் அவற்றின் பகுதிகளின் இணைவில் குறிப்புச் சுட்டுகைப் பண்புகொண்ட சிறப்புப் பொழுதுகளாகவும் விளங்குகின்றன. வேனிற்காலமும் கார்காலமும் ஒன்றையொன்று பிரிந்தும் இணைந்தும் நிற்கிற காலங்கள் தை, ஆடி மாதங்களாகப் பண்பாட்டில் சிறப்புப் பெற்று அவற்றுக்கேயான தனித்த கருத்தமைவுகளுடன் விளங்குகின்றன. அதுபோன்றே சிறுபொழுதுகள் 'உச்சி', 'உரும வேளை' எனச் சிறப்பாகச் சுட்டப்பட்டு அவற்றுக்கான தனித்த கருத்தமைவுகளுடன் விளங்குகின்றன.

இது போன்றே பூமிக்கும் நிலவுக்கும் இடையிலான இயங்கியல் உறவின் அடிப்படையில் ஒளி, வளி, நீர், உயிர் ஆகியவற்றிடத்தே ஏற்படும் உயிர்ம வேதி மாற்றங்களைக் கணக்கில் கொண்டு இன்னொரு வகையான பொழுது காட்டி வரைபடம் (lunar calendar) ஒன்றும் பண்பாட்டில் செயல்படுகிறது. வேளாண் உற்பத்தி, வேட்டை, மனிதனின் இனப்பெருக்க நடவடிக்கைகள் இந்த வகையில் தீர்மானிக்கப்படுவது நடைமுறையாகும். இவ்வாறான அடிப்படையில் விரிநிலையில் அமாவாசை, பௌர்ணமி, வளர்பிறை, தேய்பிறை என்ற பாகுபாடுகளும் உண்டு. தமிழருக்கான ஆண்டு, நாள் கணக்கீட்டு முறை ஒன்றும் உள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்காட்டியும் உண்டு. இதில் அமாவாசை, பௌர்ணமி ஆகியவை சந்திரனின் தோற்றநிலைகளை மையமிட்டுக் குறிக்கப்படுகின்றன. தமிழில் சந்திக்கட்டு (சந்துக்கட்டு) நாட்கள் என நான்கு அல்லது ஆறு நாட்களைக் குறிப்பதுண்டு. ஒரு மாதத்தின் இறுதி 2-3 நாட்களும் வருமாதத்தின் தொடக்க 2-3 நாட்களுமே சந்திக்கட்டு நாட்கள் எனப்படும். கார்காலத்தில் சந்திக்கட்டு நாட்களில் மழை பெய்யத் தொடங்கினால் அது உடனடியாக நிற்காது தொடர்ந்து சில நாட்கள் வரை மழை நீடிக்கும் என நம்பப்படுகிறது. இதனால் இந்நாட்கள் சிறப்புச் சுட்டுகை பெறுகின்றன (சந்துக்கட்டு பற்றிய தகவலை முனைவர் த. லலிதமாலா (புதுச்சேரி) உடனான உரையாடலிலிருந்து பெற்றேன். அவருக்கு நன்றி). நுண்ணிலையிலும் வேறுசில பாகுபாடுகள் உண்டு. இவை தேர்ந்த சில வானியல் சாத்திரங்களைக் கற்றோரிடம் மட்டுமே புழக்கத்தில் உள்ளன. எனினும், இவற்றின் நுண்தளங்கள் பண்பாட்டு வழக்காறுகளில் பதிவுபெற்றே உள்ளன என்பதனையும் இங்கு நினைவிற் கொள்ளலாம். பூமிக்கும் பிற கோள்களுக்கும் இடையிலான உறவு, பூமியின் திணையடிப்படையிலான நிலத்துக்கும் பொழுதுக்குமான உறவு, இதனடிப்படையில் உயிர்களிடத்தே இயல்பாக எழும் உயிரியல் உணர்வு சார்ந்த உறவு ஆகிய அடிப்படைகளிலும் வெவ்வேறான பொழுது காட்டி வரைபடங்கள் பண்பாட்டில் இயங்குவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங் காணலாம். இது குறித்த விரிவான ஆய்வுகள் பண்பாட்டின் வேறு சில ஆழ்பரிமாணங்களை வெளிக்கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை.

இன்னொரு நிலையில் பொழுது என்பது 'முக்காலம்' என்பதாகவும் பதிவுபெற்றுள்ளது. இது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பதாகும். இப்பகுப்பு மொழி, பண்பாட்டு ஒழுகலாறு, வரலாறு நினைவு ஆகிய தளங்களில் பெரிதும் கவனம் பெறும் ஒன்றாகும். எனினும் தமிழ்ப் பண்பாட்டில் இறந்த காலம், நிகழ்காலம் ஆகிய இரண்டு மட்டுமே பெருமளவில் சிறப்புப் பெறுகின்றன. எதிர்காலம் நிச்சயமின்மை என்கிற காரணத்தால் கூடுதல் சுட்டுகையோ இடமோ பெறுவதில்லை (இது மேலும் ஆராய்ச்சிக்குரியது). ஆயினும், செவ்வியல் சமயத்தின் ஆன்மிகத் தளத்தில் இது கூடுதல் அழுத்தம் பெறுகிறது. இறந்த காலமும் நிகழ்காலமும் தொடர் உறவிலும் இணைப்பிலும் தொடர்ந்து இயங்கக்கூடியவை. நிகழ்காலம் கழியக்கழிய அது இறந்த காலமாகவும் அக்காலத்து நிகழ்வுகள் கடந்த காலத்து நிகழ்வுகளாகவும் 'வரலாறு' ஆகவும் 'காலம்' என்பதற்குள் நிலைத்து நிற்கக்கூடியன. நிலைத்து நிற்கும் நிகழ்வுகளின் பதிவுகள் அவற்றின் இன்றியமையாத்தன்மை, அழுத்தம் ஆகிய காரணங்களால் வரலாற்றுச் சுவடுகளாகப் பண்பாட்டு ஓர்மையில் பதிவுபெறுகின்றன. தொடர்ந்து காலங்கள் கழிய அவை பண்பாட்டு ஆழ்மனத்தில் நனவிலிகளாய்ப் பதிவுபெறுகின்றன. வரலாற்றில் இவ்வாறு சேகரமாகும் ஒரே வகையான நிகழ்வுகள் அனுபவங்களின் தொடர்பதிவுகள் பண்பாட்டு மூலப்படிவமாகத் (archetype) திரள்வடிவம் கொள்கின்றன.

பண்பாட்டு வழக்காறுகளான கதைகள், தொன்மங்கள், சடங்குகள், செய்மரபுகள், உச்சாடனங்கள், பழமொழிகள், பாடல்கள், நம்பிக்கைகள், நிகழ்த்து கலைகள் போன்றவை கடந்த காலங்களின் நிகழ்வுகளை நிகழ்காலத்துக்கு உரைப்பதுடன் தொடர்ந்து சமூக மனங்களின் நனவிலியில் அவற்றைத் தக்கவைப்பதும் உறைய வைப்பதுமான பணியையும் செய்கின்றன. இலக்கியப் பனுவல்களும் இதே பணியைச் செய்கின்றன. அவ்வகையில் பழந்தமிழ் இலக்கியப் பனுவல்கள் கடந்த கால வரலாற்றின் இனக்குழும வாழ்வியலையும் களவு வாழ்வியலையும் அவற்றைத் தொடர்ந்த பல்வேறு கால வரலாற்றுச் சமூக வாழ்வனுபவங்களையும் எடுத்தியம்பி நிற்பது வெளிப்படையானதே.

பொழுது பற்றிய கருத்தமைவுகள் இவ்வாறிருக்கப் பொழுதுகளுக்கிடையிலான மயக்கமே மீயியல் பொழுது என்பதாகக் கருத்தமைவு பெற்றுள்ளது. ஏற்கனவே சுட்டியபடி ஒரு நாளைய ஆறு சிறுபொழுதுகளில் ஒரு பொழுது முடிந்து அடுத்த பொழுது தொடங்கும் வேளை இவ்விரு பொழுதுகளும் மயக்கமுறும் வேளையே மீயியல் பொழுதாகிறது. இவ்வகையில் முற்பகலும் பிற்பகலும் மயங்கிய நண்பகல் (உச்சிவேளை), பிற்பகலும் முன்னிரவும் மயங்கிய மாலை / சாயுங்காலம் (அந்தி), முன்னிரவும் பின்னிரவும் மயங்கும் உரும வேளை (நடுச்சாமம்). பின்னிரவும் முற்பகலும் மயங்கும் அதிகாலை (காலைக் கருக்கல்) என நான்கு மீயியல் பொழுதுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாகப் பொழுது இயல்புப் பொழுது, மீயியல் பொழுது எனப் பகுக்கப்பட்டு இவ்விரண்டுக்கும் இடையிலான பொருண்மையாக்கங்களும் வழக்கில் உள்ளன. இந்த மீயியல் பொழுதுகளில் என்னென்ன செயல்பாடுகள் செய்யப்படலாம், செய்யப்படலாகாது என்ற விதிமுறைகளும் பண்பாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆள்-ஆவி: பண்பாட்டுக் கருத்துருவாக்கம்

சமூகம் தன்னை ஆக்கும் உறுப்பினர்களின் சமூக இருப்பு, தகுதிநிலை குறித்த ஓர்மையை மிகுந்த கவனத்துடன் கொண்டுள்ளது. ஒரு நிலையில் ஆண், பெண் வேறுபாட்டினைச் சிறியவர், மணமானவர், முதியவர் என்ற அடிப்படையில் வெவ்வேறு வகையாகப் பகுத்துள்ளது / வேறொரு நிலையில் அதே மனிதரை 'முழு ஆள்', 'அரை ஆள்' என்பதாகவும் பகுத்துக்கொண்டுள்ளது. இந்த நுண்ணிய வேறுபாடு சமூகப் பண்பாட்டுச் செயல்பாடுகளில் ஒரு நுண்ணிய வகையில் வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த நுண்ணிய வேறுபாடு, பாலின வேறுபாடு, வயது, மணம், குழந்தைப்பேறு, குடும்ப உறவு, சமூக உறவு, சடங்கியல் தகுதி போன்றவற்றின் அடிப்படையில் வரையறுக்கப்படுவதாக இருக்கிறது. சான்றாக, வண்ணத்துப்பூச்சியின் பரிணாமமானது முட்டை, லார்வா, கூட்டுப்புழு, வண்ணத்துப்பூச்சி என்கிற நிலைகளில் பரிணமிப்பதாக உள்ளது. இதனைப் போன்றே மனிதரின் முழுப்பரிணாமம் என்பது குழவி, சிறுவர், பருவமடைதல், விடலை, தன்னின உயிரி(களை) மறுஉற்பத்தி செய்தல் என்னும் நிலைகளில் பரிணமிப்பதாக உள்ளது. தன்னின உயிரினை மறுஉற்பத்தி செய்து வாழ்வினை நிறைவுசெய்த ஒருவரே முழுமையான வாழ்வு வாழ்ந்தவர் என்றும் இவரே முழு ஆள் என்றும் கருதப்படுகிறார். இந்த முழுமை என்பதன் பொருண்மை ஆண், பெண், இருபாலருக்கும் பொருந்தக் கூடியதே. இந்த முழுமையை அல்லது மனித உயிர்த் தொடர்ச்சியை உறுதி செய்யாத அல்லது உறுதி செய்யும் முன்னதாகவே ஏதேனும் ஓர் இடைப்பருவ நிலையில் ஏதேனும் ஒரு காரணத்தால் சாவினை எதிர்கொள்ள நேர்கிற ஒருவரை 'முழு ஆள்' என்பதாகக் கொள்வதில்லை, அவர் குறை வாழ்வு பெற்றவராகவே கொள்ளப்படுவார்.

வாழ்வின் நிறைவை அல்லது முழுமையைப் பூர்த்தி செய்யும் முன்பாகவே இறந்துபடும் மனிதர் சமூகப் பண்பாட்டு நினைவில் குறிப்பாகச் சுட்டப்படுவார். குறை நிலையில் இறப்பு என்பது இயல்பல்லாத சில நோய் (கொள்ளை), விபத்து, கொலை, தற்கொலை என்கிற ஏதோ ஒரு காரணத்தால் மட்டுமே நிகழக்கூடியது. இவ்வகையில் இப்படிப்பட்ட சாவு 'வன்சாவு' என்பதாகவும் இவ்வாறு இறந்துபடுபவர் 'குறை ஆள்' ஆகவும் கொள்ளப்படும் பண்பாட்டுக் கருத்தமைவு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக, இறப்புக்கான காலம் அல்லாத காலத்தில் நிகழும் சாவு 'காலமல்லாக் காலச் சாவு' எனக் கொள்ளப்படுகிறது. இது பொதுவாக 'அகால மரணம்' (அல் + காலம் = அகாலம்) என்று குறிப்பிடப்படுகிறது. இதன் எதிர்நிலையில் நிறைவாழ்வு பெற்று இறப்பவரின் சாவு 'காலமானவர்' (காலம் + ஆதல் = காலமாதல் காலத்துக்குள் இணைந்து விடுதல்) எனக் குறிப்பிடப்படுவதை இங்கு நினைவுகூரலாம். மேலும், இவ்வாறான சாவு 'இயற்கை எய்துதல்' (இயற்கையுடன் இணைந்து கொள்ளுதல்) என்றும் குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியப் பதிவுகளில் குறிப்பிடப்படும் 'பாம்புச்சாவு', 'பாறைச் சாவு', 'புலிச்சாவு', 'யானைச் சாவு' ஆகியன காலமல்லாக் காலச் சாவினையே குறிப்பிடுவன என எடுத்துக் கொள்ளலாம்.

பிறப்பு, இறப்பு என்கிற நிகழ்வுகள் இயற்கையிலிருந்து தொடங்கி மீண்டும் இயற்கைக்கே திரும்பும் நிகழ்வுகளாகப் பொருள்படுகின்றன. இறப்புப் பொதுவாக இருவகைப்பட்டதாக உள்ளது. இதனைப் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட கால வெளியில் (நிலம், பொழுது) ஒருவரின் வாழ்வே (நிறை / வாழ்வு குறைவாழ்வு) தீர்மானிப் பதாக இருக்கிறது. நிறைவாழ்வு பெற்றவர் இறப்புக்குப் பின் (காலமாதல் / இயற்கை எய்துதல்) தான் தோற்றம் பெற்ற இயற்கையோடு மீண்டும் இணைந்து இயற்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைந்து விடுகிறார். இந்த இயற்கை அசைவற்ற, அமைதியான, தெய்வநிலைப் பண்புகளைப் பொருண்மைப்படுத்துகிறது. குறைவாழ்வு பெற்றவர் இறப்புக்குப்பின் (அகாலமாதல்) மீண்டும் தான் தோற்றம் பெற்ற இயற்கைக்குத் திரும்பவியலாது, தற்காலிகமான காலவெளியில் (அந்தர வெளியிலும் சமூகம் அவரைத் தமது நினைவு வெளியில் இருத்தியிருக்கும் காலம் வரையிலும்) அமைதியற்ற, உருவமற்ற, அல்லுருவமான ஒன்றாய் அலைந்து திரியும் ஆவியாக மாற்றம் பெறுகிறார். ஒரு குறிப்பிட்ட ஆள் இவ்வகையான இறப்புக்குப் பின் அவரைச் சார்ந்தோரின் நினைவில் இருக்கும் காலம் வரையில் பெயர், அடையாளங்களுடன் சுட்டப்படுவார். இவரை நினைவு கொள்ளும் வகையில் வழிபாடு, சடங்குகள், தெய்வ வழிபாடு ஆகியன கடைப்பிடிக்கப்படும். இவ் வகை நினைவு வெளியிலிருந்து கடந்துபோன பிறகு ஆவி என்கிற பொது நினைவுள்ளுக்குள் இடம் பெயர்க்கப்பட்டுத் தனித்த பெயர் அடையாளங்கள் ஏதுமின்றி ஆவிகளின் கூட்டத்தில் இணைக்கப்படுகிறார்.

- ஆவி பற்றிய இந்தக் கருத்தமைவு உலகெங்கிலும் அனைத்துப் பண்பாடுகளிலும் காணப்படுகிறது. பல்வேறு பண்பாட்டுச் சமூகங்களின் இவ்வாறான நம்பிக்கைகளைத் தொகுத்துப் பார்க்கிறபோது அவற்றுக்குள் பொதுவான, ஒரே படித்தான கூறுகளே இடம்பெற்றிருப்பதை நோக்க முடியும், அக்கூறுகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

- புவியில் வாழ்ந்து ஆனாலும் முழு வாழ்வையும் வாழ்ந்து முடிக்கும் முன்பாகக் கொலை, தற்கொலை, விபத்து, கொள்ளை நோய் போன்ற ஏதேனும் ஒரு காரணத்தால் இயற்கைக்கு இயல்புக்கு மறுதலையான வகையில் செத்துப்போன மனிதரே ஆவியாக மாறுவர்.

- இந்த ஆவிகள் பூமியிலும் வாழ இயலாது, மேலுலகிலும் வாழ இயலாது பூமிக்கும் வானுலகுக்கும் இடைப்பட்ட அந்தர வெளியான காடுகள், மலைகள், மரங்கள், நீர்நிலைகள், பாலைவனம், சுடுகாடு போன்றவற்றில் உறைகின்றன. இவை நிரந்தர இடமின்றியும் ஓய்வு ஒழிச்சலின்றியும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் இயல்பின.

- இவை திண்மையான உடல்வடிவம் கொண்டிருப்பதில்லை என்பதாலும் அல்லுருவ மானவை என்பதாலும் விரும்பிய வடிவத்தை அவ்வப்போது பெற இயலும்.

- இவை மனித வடிவெடுத்து நடமாடினாலும் பூமியில் கால் பதித்து நடமாட இயலாதவை.

- இவை உறையும் அல்லது நடமாடும் இடங்களில் இவற்றின் கடந்த காலப் பூவுலக வாழ்பனுபவத்தை ஒத்த வாழ்வனுபவம் கொண்டிருக்கும் மனிதர்கள் யாரேனும் பெரும்பாலும் ஒற்றையாகத் தென்பட்டால் அவர்களைத் தொடரலாம் அல்லது அவர்கள் மீதிறங்கி உறையலாம்.

இவை தவிர நடப்புக்கால மனிதருள் இருவகைப் பாகுபடுத்தங்களும் உண்டு. அனைத்து மனிதரும் பொதுநிலையில் ஆள் எனச் சுட்டப்பட்டாலும் சில 'ஆள்'களை 'மீயியல் மனிதர்' எனச் சுட்டுவதும் உண்டு. அதாவது மனித உடல் சில பருவநிலை மாற்றங்களைப் (உயிரியல் வளர்சிதை மாற்றங்கள்) பெறுகிறபோது இந்த மீயியல் பண்பு அவ்வுடல்களின் மீது சாற்றப்படுகின்றது. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. ஒவ்வோர் ஆணும் பெண்ணும் குறிப்பான அந்தப் பருவ மாற்றங்களைப் பெறுகிற, அனுபவிக்கிற அல்லது அடைகிற வேளைகளில் அவர்கள் மீயியல் மாந்தராகக் கருதப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகப் பச்சிளம் குழந்தை, பூப்பெய்திய கன்னி, விடலைப் பையன் (மணமாகா இளைஞன்), மாதவிடாய் கண்டிருக்கும் பெண், கருவுற்ற பெண், பாலூட்டும் தாயர், தலைச்சன் பிள்ளைகள் போன்றோரே மீயியல் தளத்தில் உலவுபவர்கள் எனக் கருதப்படுகின்றனர். இதனை வேறொரு வகையில் விளக்குவது என்றால் இவர்கள் ஒரு குறிப்பிட்ட பருவநிலையின் முழுமையை (உச்சம்) நிறைவாக அனுபவித்துக் கொண்டிருப் பவர்கள்: மேலும், இவர்கள் ஒரு பருவ நிலையில் இருந்து விலகி அடுத்த பருவநிலைக்குக் கடந்து கொண்டிருப்பவர்கள், பச்சிளம் குழந்தை (கரு → குழந்தை), பூப்பெய்திய கன்னி (சிறுமி → கன்னி), கருவுற்ற பெண் (பெண் → தாய்), பாலூட்டும் தாய் (பெண் → தாய்), விடலை (சிறுவன் → இளைஞன்) என ஓர் உடல் பருவத்திலிருந்து இன்னொன்றுக்குக் கடந்து கொண்டிருப்போர் ஆவர். இந்தக் கடத்தல் ஓரிரு நாள் முதல் பல நாட்கள் (சில மாதங்கள்) வரை தொடர்வது உண்டு. இந்த நாட்களில் மட்டுமே இவர்கள் மீயியல் தளத்தில் அலையக் கூடியவர்கள். இதேபோன்று தலைச்சன் பிள்ளை (ஆணும் பெண்ணும்)யும் மீயியல் தன்மை கொண்டவரே. இவர்கள் மீது சாற்றப்படும் மீயியல் பண்பு நிரந்தரமானது. ஏனென்றால், இந்தத் தலைச்சன் பிள்ளைதான் ஒரு பெண்ணையும் ஆணையும் தாய், தந்தை நிலைக்குக் கடத்துவதில் முதன்மைக் காரணியாகச் செயல்பட்டவர். எனவே, தலைச்சன் பிள்ளைகள் அவர்களது கடைசிக் காலம் வரை மீயியல் தன்மை கொண்டோராகக் கொள்ளப்படுவர். இவர்கள் பிற சடங்கியல் விழாக்களில், குறிப்பாக, குழந்தைப் பிறப்பு, பூப்பு, இறப்புச் சடங்கு போன்றவற்றில் எச்சரிக்கை உணர்வுடனேயே கலந்துகொள்வர். இவருக்கு சமூகத்தில் சில கூடுதலான கவனிப்பும் விலக்குகளும் உண்டு.

## நிலம், பொழுது, ஆள்: மீயியல்புகளும் பண்பாட்டு இயங்கியலும்

இந்தப் பகுதியின் முற்பகுதியில் நிலம், பொழுது, ஆள் என்பன பற்றிய பண்பாட்டுக் கருத்தமைவுகள் பற்றியும் பொதுவாக, அவை இயல்பு நிலையில் இயங்கி வந்தாலும், சில குறிப்பிட்ட சிறப்பான சூழல்களில் தமது இயல்பு நிலைகளிலிருந்து விலகி வேறுபட்ட நிலைகளில் இயங்குவது பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. ஆகவே நிலம், பொழுது, ஆள் என்கிற கூறுகள் தனித்த, சிறப்புச் சூழல்களில் முற்றிலும் குறிக்கத்தக்க வேறுபட்ட தன்மைகளுடன் செயல்படுவதைச் சமூகம் தெளிவாகவே கவனித்துள்ளது. இவ்வாறான இயல்பு நிலையிலிருந்து விலகிய வேறுபட்ட தன்மையினை மீயியல் (liminality) என நாட்டுப்புறவியல், மானிடவியல் துறைகள் விளக்குகின்றன. நிலமும் பொழுதும் ஆளும் ஓர் இயல்புத் தளத்தில் இயங்கும்போது மட்டுமே சமூக ஒழுங்கு, அமைதி, பிரபஞ்ச ஒழுங்கு ஆகியன சீரான தளத்தில் உள்ளதாகப் பண்பாடு கருத்தமைவு செய்துள்ளது. இவை தமது இயல்புத் தன்மைகளிலிருந்து பிறழ்ந்து மீயியல் தன்மை பெற்று ஒருமித்து இயங்குகிறபோது சமூக ஒழுங்கும் அமைதியும் பிரபஞ்ச ஒழுங்கும் சமநிலையிலிருந்து பிறழ்வதாகக் கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில்தான் ஆவி என்பது தோற்றம் கொள்ளும் முறை ஒழுங்கினை முழுமையான தளத்தில் வைத்துப் புரிந்துகொள்ள இயலும்.

நிலம், பொழுது, ஆள் என்னும் திண்மையான மெய்ம்மைகள் தனித்தனியான மெய்ம்மைகள் தாம் எனினும் பண்பாடு இவற்றை ஒரு மையப் புள்ளியில் ஒருங்கிணைத்து ஒரே மெய்ம்மையாக இயங்கச் செய்வதும் அல்லது ஒரே மெய்ம்மையில் இயங்கும் முப்பரிமாணம் கொண்ட மெய்ம்மையாக வெளிப்படுத்தி நிற்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், பொழுது ஆகியன தமிழ்ப் பண்பாட்டில் ஆளாக்கம் (personification) பெற்றுள்ளதை இலக்கியத் தரவுகளின் வழி அறியமுடியும். பொதுவாக, நிலம் இயங்காத் தன்மை கொண்ட அசையாது நிலைத்த (static) மெய்ம்மை எனக் கொள்ளப்பட்டாலும் அது உற்பத்திக்கும், வளமைக்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குவதால் இதுவும் இயங்கியல் தன்மை (dynamic kinetic) கொண்டதே. பொழுது ஒவ்வொரு நொடியும் இயங்கிக் கொண்டிருப்பதில் இது இயங்கியல் தன்மை கொண்டது. தமிழ்ப் பண்பாடு நிலத்தைப் பெண்ணாகவும் பொழுதினை (வரலாறு) ஆணாகவும் உருவகித்துள்ளதை ஜமாலன் (2003) விளக்கியுள்ளார். எனினும் நிலம் என்பதனை ஒரு குறிப்பிட்ட சமூகம் (பிரான்மலைக் கள்ளர்) ஆண் சார்ந்ததாகக் கருத்தமைவு செய்துள்ளதை முத்தையா (2010) குறிப்பிட்டுள்ளார்.

இயற்கையிலிருந்து தோற்றம் பெற்று இயற்கைக்கே திரும்பி விட்ட இறந்துபட்டோரில் குறை வாழ்வோடு காலமல்லாக் காலத்தில் வன்சாவு பெற்றோரின் ஆவி மீண்டும் இயற்கைக்கும் பூமிக்கும் திரும்பா நிலையில் மீண்டும் சமூகத்தோடும் சமூகக் களத்தோடும் இணைய முடியாது, ‘ஆவி’ என்பதாக இங்குமல்லாத அங்குமல்லாத அந்தர வெளிகளில் குறைவுற்ற மனநிலையோடும் நிறைவேறாத ஆசைகளுடனும் (நிராசை) சுற்றித் திரிகின்றன. இவை பண்பாட்டு எல்லையைத் தாண்டியவையாகப் பண்பாட்டு விதிகளுக்கு அப்பாற்பட்டவையாக இருக்கின்றன. எனவே, இவை மனித சமூகக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவையாகச் சமூக ஒழுங்குகளுக்கு அப்பாற்பட்டவையாகவும் இருக்கின்றன.

இந்த ஆவிகள் மீயியல் களங்களில், மீயியல் பொழுதுகளில், பூமிக்கும் வானுக்கும் (மேலுக்கு) இடைப்பட்ட அந்தர வெளிகளில் (நீர்நிலை, பாறை, குகை, மலைமுகடு, சுடுகாடு, இடுகாடு, பாலைவனம், ஒற்றையான மரங்கள், பாழடைந்த கட்டடங்கள், பாழடைந்த கிணறுகள்) அமைதியற்றுப் பசியுடனும் அல்லலோடும் நடமாடக்கூடியவை. ஆவிகள் தங்களின் இயங்குவெளிகளிலும் இயங்கு பொழுதுகளிலும் நடமாடும் நடப்புக்கால மனிதரை (தனியாக நடமாடும் மீயியல் மனிதர்) அச்சுறுத்தும், தொடரும், அணங்கும், அவர்கள் மீதிறங்கும் என்கிற நம்பிக்கைகளின் அடிப்படைகளை இவ்வாறே புரிந்துகொள்ளலாம். தமிழிலக்கியப் பனுவல் குறிப்பிடும் அணங்குதல், முருகயர்தல் போன்றவற்றையும் இவ்வண்ணமே புரிந்துகொள்ளலாம்.

## பின்னுரை

ஆவி பற்றிய ஓர் உலகந் தழுவிய பண்பாட்டுப் பனுவலின் பொருண்மைத் தளங்களைப் புரிந்துகொள்ளப் பண்பாட்டின் அடிப்படையான முதற்பொருள்களாகிய நிலம், பொழுது பற்றியும், மேலும், ஆள் பற்றிச் சமூகம் காலங்காலமாகத் தமது வாழ்வனுபவத்தில் உருவாக்கிக் கட்டமைத்து வைத்திருக்கும் கருத்தமைவுகளையும் ஆழ்மன ஓர்மைகளையும் ஒருங்கிணைத்துப் பார்த்தல் வேண்டும். ஆவி பற்றிய இந்தக் கருத்தமைவு முழுக்க முழுக்கப் பண்பாட்டு மனம் (சமூகக் கூட்டு மனம்) சார்ந்த ஒரு கூட்டுப் படைப்பு ஆகும். இந்தப் பனுவலை மெய்ம்மைப்படுத்தும் சடங்குகளும் நம்பிக்கைகளும் வழிபாடுகளும் மனம் சார்ந்த அல்லுருவமான கருத்தமைவுகளை ஒட்டியே பரிணமித்துள்ளன. ஆவி என்பதற்கான திண்மையான ஆதாரங்கள் வேறெதுவும் இல்லை. ஆவி உண்டா? இல்லையா? என்ற வினாவும் விவாதமும் பொருளற்றவையே. ஏனென்றால் மனம் சார்ந்த கருத்தமைவுக்குக் கடிவாளம் போடுவது யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூல்கள்

பிலவேந்திரன், ச. 1997. தமிழ்ப் பண்பாட்டில் எல்லைக்களமும் தர்க்கவியல் சிந்தனையும். யாணர் 1: 93 - 103.

...................... 1998. நாட்டார் சமயம்: அல்-மனிதர்களும் பண்பாட்டுக் கருத்தமைவுகளும். யாணர் 2, 1: 201-121.

முத்தையா, இ. 2010. அடித்தள மக்களின் பண்பாடு தொடர்பான சொல்லாடல்கள். சென்னை; என்.சி.பி.எச்.

ஜமாலன். 1998 - 1999. மொழியும் நிலமும்: தொல்காப்பியமும் தமிழ் நிலமும் - ஒரு மறுவாசிப்பிற்கான முயற்சி. காலக்குறி 9, அக்டோபர் 1998: 9-19 காலக்குறி 10, மார்ச் 1999: 4-14

Claus, Peter, J. 1979. Spirit Possession and Spirit Mediumship from the Perspective of Tulu Oral Traditions. Culture, Medicine and Psychiatry 3: 29-52.

Daniel, E. V. 1984. Fluid Signs: Being a Person the Tamil Way. Berkeley: University of Chicago Press.

Levy, Robert. I. 1992. Mesocosm: Hinduism and the Organisation of a Traditional Newar City in Nepal. Delhi: Motilal Banarsidass.

Pilavendran, S. 1993. The Structural Allegories between Human Space and Divine Space. Proceedings of the Conference - Seminar on Folkloristics, organised by IFC (Calcutta), CIIL (Mysore) and PILC (Pondicherry).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லினப் பண்பாட்டுச் சூழலில் நாட்டார் வழக்காற்றியல்

கலாநிதி அ.ப.மு. அஷ்ரஃப்

## அறிமுகம்

சில தனித்துவமான அடிப்படைகளைக் கொண்ட குழுமங்கள் இனங்களாகவும் சமூகங்களாகவும் கட்டமைக்கப்படுகின்றன. அவற்றுள் இனக்குழுமத்திற்கு என்றுமே தனிச்சிறப்புண்டு. இவ்வினக்குழுமம் எப்போதுமே தனக்குரிய தனித்துவமான பண்பாட்டைப் பிரதிபலிக்கும். ஓர் இனக்குழுமத்தின் அங்கத்தினராகப் பண்பாட்டை மையப்படுத்திய மக்களே விளங்குகின்றனர். அம் மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கான சான்றுகளாகப் பல்வேறு அடிப்படைகள் உள்ளன. அவற்றுள் நாட்டார் இலக்கியங்கள் குறிப்பிடத்தக்கன. நாட்டார் இலக்கியங்கள் மக்களது வாழ்விலிருந்து மிளிர்கின்றன. நாட்டார் வழக்காறுகளை அடிநாதமாகக் கொண்ட நாட்டார் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. நாட்டார் இலக்கியத்தின் பாடுபொருளாகவும் பேசுபொருளாகவும் அமைவதும் யதார்த்த வாழ்க்கையே. ஓர் இனத்தின் வாழ்க்கைமுறை அவ்வினத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயிலாகவும் விளங்குகிறது. ஆகவே, பண்பாட்டின் கூறுகளை இனங்காண்பதற்கு நாட்டார் இலக்கியங்கள் ஆதாரங்களாக அமைகின்றன. நாட்டார் இலக்கியங்களின் வாயிலாக ஓர் இனத்தின் நாட்டார் வழக்காறுகள் தெளிந்த உருவம் பெறுகின்றன. அவ்வாறு உருவம்பெறும் நாட்டார் வழக்காறுகள் பல்லினப் பண்பாட்டுச் சூழலில் எத்தகைய செயற்பாட்டுத் தளத்தினைக் கொண்டிருக்கின்றன என்பதையே இக்கட்டுரை ஆய்கிறது. எடுத்துக்காட்டாக, பன்மைத்துவச் சமூக அமைப்பைக் கொண்ட ஈழத்துச்சூழல் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என அமையும் ஒரு பல்லினப் பண்பாட்டுச் சூழலாகும். இவ்வாறானவொரு பல்லினப் பண்பாட்டுச் சூழலில் நாட்டார் வழக்காறுகள் எத்தகைய செயற்பாட்டுத் தளத்தினைக் கொண்டிருக்கின்றன என்பதை அறியுமோர் முன்னோடி முயற்சியாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

## கருதுகோள்

"பல் இன, பண்பாட்டுச் சூழலில் நாட்டார் வழக்காறுகள், ஒரு பன்மைத்துவச் சமூகத்தளத்தில் சேர்ந்தே இயங்குகின்றன" என்ற கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது.

## நோக்கம்

"பல்லினப் பண்பாட்டுச் சூழலில் நாட்டார் வழக்காறுகள் எத்தகைய செயற்பாட்டுத் தளத்தினைக் கொண்டியங்குகின்றன" என்பதைப் புதிய நோக்கில் அணுகுவது ஆய்வின் பிரதான நோக்கமாகும். பன்மைத்துவச் சமூகத்தளத்தில் சேர்ந்தியங்கும் நாட்டார் வழக்காறுகளை இனங்காண்பது ஆய்வின் துணை நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு முறையியல்

இது ஒரு பண்புசார் ஆய்வாகும். பல்லினப் பண்பாட்டுச் சூழலில் வழங்கும் நாட்டார் வழக்காறுகளை ஒப்பிட்டு ஆய்வதனால் ஒப்புமை அணுகுமுறையும் அவற்றின் பண்புசார் விளக்கங்களைத் தெளிவுபடுத்துவதற்காக விவரண அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது.

## ஆய்வின் எல்லை

இந்தியத் துணைக் கண்டத்தில் பிரதான இனக்குழுமங்களாக விளங்கும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், மராட்டியர்கள் போன்றோரது நாட்டார் வழக்காறுகளே கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

## தகவல் சேகரிப்பு

நேரடி அவதானிப்பின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## உரையாடல்

பல்லின, பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டிருந்த பல்வேறு நிலப்பகுதிகள், சமகால உலகமயமாதற் கருத்தியலின் விளைவாக ஒரே பண்பாட்டின் தொகுதியாக மாற்றம் கண்டு வருகின்றன. பண்பாடுகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணி மொழி. அவ்வாறான மொழியை அடிப்படையாகக் கொண்ட இனக்குழுமங்கள் அல்லது சமூகக்குழுக்கள் ஆகியன இன்றைய உலகமயமாதலின் விளைவாக ஒரே சட்டதிட்டங்களுக்கும் வாழ்க்கைமுறைகளுக்கும் உட்பட்டு நிற்கும் ஒரு பொதுப் பண்பாட்டு முறையின் கீழ் இணைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதனை மையமாகக் கொண்டே பல்லினப் பண்பாட்டுச் சூழலில் நாட்டார் வழக்காறுகள் என்ற இக்கட்டுரை அமைகின்றது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் கூட்டத்தினரை "நாட்டார்" என்றும், கிராமத்தையும், அதையொட்டியுள்ள கிராமப்புறப் பகுதிகளையும் "நாட்டுப்புறம்" என்றும் குறிப்பிடுகிறது. அதேபோன்று, "குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் காலங்காலமாகத் தொடர்ந்துவரும் கதைகள், பாடல்கள், கலைகள் போன்றவற்றை நாட்டார் வழக்காறு" எனக் குறிப்பிடுகின்றது.[1] Mega LIFCO English - English - Tamil Dictionary, Folk lore என்ற சொல்லுக்கு legends, beliefs, traditions etc. அதாவது நாடோடிக் கதைகள், பரம்பரையாக வந்த வரலாறுகள் என விளக்கம் தருகிறது.[2] இவற்றை ஒட்டி, நாட்டார் வழக்காறு என்றால் என்ன? என்பதைப் பலரும் பலவிதமாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். எனினும் நாட்டார் வழக்காறுகள் தொடர்பான விளக்கம் குறித்து நாட்டார் வழக்காற்றியல் அறிஞர்களிடையே கருத்தொற்றுமை இல்லை. காலங்காலமாகப் பல்வேறு அறிஞர்களும் பல்வேறு விளக்கங்களை அளித்து வந்துள்ளனர். folk என்ற சொல் நாட்டுப்புற

---

1. க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, தமிழ் - தமிழ் - ஆங்கிலம், க்ரியா: சென்னை, மே-2008, பக்-811-812

2. Mega LIFCO English - English - Tamil Dictionary, LIFCO PUBLISHERS (PVT.) LTD.: CHENNAI, Reprint-2014, p464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையும் lore என்ற சொல் வழக்காறுகளையும் குறித்து நிற்கின்றன. இவையிரண்டும் இணைந்த Folklore என்ற ஆங்கிலச்சொல் "நாட்டார் வழக்காறு" என்ற பொருளில் பயன்பட்டு வருகிறது. நாட்டார் வழக்காறு என்ற சொல்லுக்கு நிகராகத் தமிழில் நாட்டுப்புறவியல், நாட்டாரியல், நாட்டுப்புற இலக்கியம் போன்ற பல சொற்றொடர்களைப் பல அறிஞர்களும் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றிற்கிடையே சொல் நிலையில் நுணுக்கமான வேறுபாடுகள் உள்ளன. அவ்வேறுபாடுகள் தெளிவுறுத்தப்பட வேண்டியவை.

நாட்டார் வழக்காறுகள் என்ற சொற்றொடர் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், வணக்க வழிபாடுகள், வாய்வழி இலக்கியங்கள் போன்ற பொருண்மைகளை உள்ளடக்கியிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்துள் நாட்டார் வழக்காறுகளை மையமாகக் கொண்ட பண்பாட்டுத்தளத்தில் விரைவாக மாற்றங்கள் நிகழ்ந்த காலம் அந்நியர் படையெடுப்புக்கள் இடம்பெறத் தொடங்கிய காலமாகும். குறிப்பாக, இஸ்லாமியர், ஐரோப்பியரின் படையெடுப்புக்கள் இடம்பெற்ற காலமாகும். கைத்தொழிற் புரட்சியுடன், அது மேலும் முனைப்புப்பெறுகிறது. அந்நியர் படையெடுப்புக்கள், புதிய மொழிகள் சமயங்களின் அறிமுகம், இனக்கலப்பு உருவாக்கம் போன்ற பல்வேறு அம்சங்கள் பண்பாட்டுத்தளங்களில் மாற்றம் நிகழக்காரணிகளாயின. மேற்குறித்த காரணிகளால் இடம்பெற்ற அரசுகளின் நிலப்பெருக்கம், அதனால் விளைந்த பண்பாட்டு எல்லைகளின் விரிவு - சுருக்கம் - ஊடறுப்பு முதலானவை தனித்தனிப் பண்பாடுகளுக்கிடையே கலப்புத்தன்மையினையும் கூட்டுத்தன்மையினையும் பொதுத்தன்மையினையும் ஏற்படுத்தலாயின.

இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவிவந்த திணைப் பண்பாட்டின் தொடர்ச்சி, அயற்பண்பாடுகளின் பரவல், இவற்றுக்கிடையிலான உறவு ஆகியனவற்றால் விளைந்த பன்முகப் பண்பாட்டுச் சூழல் ஒரு பொதுப் பண்பாட்டு உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இவ்வாறான பல்லின, பண்பாட்டுச் சூழலில் நாட்டார் வழக்காறுகளின் கலப்புத் தன்மையினையும் கூட்டுத்தன்மையினையும் பொதுத்தன்மையினையும் பின்வருமாறு இனங்காணலாம்.

### சமூக வழக்காறுகள்

- திருமண வழக்காறுகள்: தாலி கட்டுதல்: தாலிகட்டும் பண்பாடு சிங்களவர்ளைத் தவிர ஏனையோரிடம் பொது வழக்குப் பெற்றுள்ளது. சீதனம் வழங்குதல்: சீதனம் என்னும் சீர்வரிசை இந்தியாவிலும் இலங்கையிலும் வேறுவிதமாக அணுகப்படுகிறது. கூறைப்புடைவை
- சேலைகட்டும் வழக்காறு: தமிழ், சிங்கள, முஸ்லிம் பெண்களின் பிரதான வழக்காகவும் இந்தியத் துணைக் கண்டத்தின் பொது வழக்காகவும் மாறியுள்ளது.

### சமயச் சடங்குகள், வழக்காறுகள்

- சித்தர் மரபோடு தோற்றம்பெறும் இறைநேசர்கள் (அவுலியாக்கள்) வழிபாடு: இறை நேசர்களை அணுகித் தமது குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்காகச் செய்யப்படும் நேர்ச்சைகளுடன் கூடிய வழிபாட்டு முறைமை, பிரசித்திபெற்ற நாட்டார் வழக்காகப் பொதுத்தன்மை பெற்றிருக்கிறது. குணங்குடி மஸ்தான் சாஹிபு, அப்துல்காதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய்லானி, நாகூர் ஆண்டகை முதலானோரை முன்னிறுத்தித் தமது நேர்ச்சைகளைச் செய்யும் வழக்காறு இந்தியாவில் முஸ்லிம்களிடம் மட்டுமல்லாது இந்துக்களிடமும் பெருவழக்குப் பெற்றுள்ளது.

- திருவிழாக்களில் தேர்வலம்: இந்துக்கோயில்களில் திருவிழாக்காலங்களில் இடம்பெறும் சுவாமி வீதிவலம் / ஊர்வலம் இன்று சந்தனக்கூடு ஊர்வலமாகக் கலப்புத்தன்மை பெற்றுள்ளது. கோயில்களில் கொடியேற்றங்கள் நிகழ்வதைப்போல இறைநேசர்களாகக் கருதப்படுகின்றவர்களின் அடக்கஸ்தலங்களிலும் விழாக்காலங்களில் கொடியேற்றங்கள் நடைபெறுகின்றன.
- கோயில்களில் நடைபெறும் அன்னதானத்தை அடியொற்றி, இறைநேசர்களாகக் கருதப்படுகின்றவர்களின் நினைவு நாட்களில் கந்தூரிகள் நடைபெறுகின்றன.
- மைபார்த்தல்- மைவெளிச்சம் பார்த்தல்.
- சிறுதெய்வ வழிபாடு: காளி அம்மன் - சிங்களவர்களிடம் பெருவழக்கு, கண்ணகி வழிபாடு - சிங்களவர் பத்தினி தெய்யோ

## பண்பாடுகள், பழக்கவழக்கங்கள்

- மருதாணி போடுதல்: திருமணம், பூப்புநீராட்டு, பெருநாட்கள் முதலான விழாக்காலங் களில் உருது முஸ்லிம் பெண்கள் தங்களது கை, கால்களை அழகுபடுத்த மெஹெந்தி எனும் மருதாணி போடும் வழக்காறு இன்று முழு இந்தியத் துணைக்கண்டத்திலும் பொதுவழக்காறாக மாற்றம் பெற்றுள்ளது. மேலும் மத்திய கிழக்கிலும் இது பெருவழக்குப் பெற்றுள்ளது.
- பால் பொங்குதல்: க்ரஹப்பிரவேசம் - வீடு குடிபுகும் காலங்களில் பால்பொங்கும் பழக்கம் இந்துக்களிடம் மட்டுமல்லாது, முஸ்லிம்களிடையேயும் பெருவழக்குப் பெற்றுள்ளது.
- விழாக்காலங்களில் பலகாரம் செய்தல் - பரிமாறுதல்: குறிப்பாகத் தற்காலத்தில் வட இந்தியச் செல்வாக்கினால் இனிப்புப் பண்டங்களை அதிகமாகச் செய்தல். இதுவும் ஒரு பொதுப்பண்பாடாக மாற்றம்பெற்றுவிட்டது. முஸ்லிம், சிங்களவர், தமிழர், மராட்டியர் என இவ் வழக்காறு இன்று முழு இந்தியத் துணைக்கண்டத்திலும் பொதுவழக்காறாக மாற்றம் பெற்றுள்ளது. தொதல், மஸ்கட் முதலானவை (Bombay Sweets)
- பிரியாணி: வடநாட்டில் பிரசித்திபெற்ற உருதுப் பண்பாடு. தமிழகத்தில் தலப்பாக்கட்டு பிரியாணி. சிங்கள மக்களிடமும் வழக்குப் பெற்றுள்ளது.
- உணவு வகைகள்: தோசை, வடை, பரோட்டா முதலானவை இந்தியத் துணைக் கண்டத்தின் பொதுவான உணவுப் பண்பாடாக மாறிவிட்டது.
- குத்து விளக்கேற்றல்: மங்களகரமான ஆரம்பத்திற்காகக் குத்துவிளக்கேற்றல் தமிழ் - சிங்களப் பொதுப் பண்பாடாகியுள்ளது.
- குரவையிடல் - ஆரத்தி எடுத்தல்: தென்னிந்திய, இலங்கை இந்து, முஸ்லிம் மக்களின் பொதுப் பண்பாடாக மாறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நம்பிக்கைகள்

- கண்ணூறு கழித்தல்: தீயவர்களின், கெட்ட ஆவிகளின் பார்வையில் இருந்து விடுபடலாம். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பொதுப்பண்பாடாக மாறியுள்ளது.
- தாயத்துக் கட்டுதல் அல்லது கூடு போடுதல்: தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பொதுப்பண்பாடாக மாறியுள்ளது.
- ஓதிப்பார்த்தல்: இஸ்லாமியர் வழக்கு. இந்துக்களும் செய்வதுண்டு (மந்திரித்த நீர்)
- காது குத்துதல்: குழந்தைக்குச் சிறு காயம் ஏற்படுத்த வேண்டும். ஏதேனும் உலோகத்தை அணிவித்தல். இந்தியத் துணைக்கண்டத்தில் பெண் குழந்தைகளுக்குப் பெருவழக்கு. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பொதுப்பண்பாடாகவும் மாறியுள்ளது. ஆனால் முஸ்லிம் ஆண் குழந்தைகளுக்கு காது குத்தும் வழக்கமில்லை.
- காகம் கரைதல்: காகம் கரைந்தால் விருந்தினர் வருவர். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பொதுப்பண்பாடாக மாறியுள்ளது.
- பூனை குறுக்கிடுதல்: கெட்ட சகுனம் - தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பொதுப் பண்பாடாக மாறியுள்ளது.
- பல்லி சொல்லுதல்: பேசியது உண்மை
- ஆந்தை அலறுதல்: உறவுக்குள் மரணம் சம்பவிக்கும்
- சூனியம் குறித்த நம்பிக்கைகள்
- வைக்கோல் பொம்மை: இலங்கையில் தமிழர் - வெருளி, சிங்களவர் - பம்பயா
- பூசணி கட்டுதல்: கண் திருஷ்டிக்காக வாசலில் பூசணி கட்டுதல், சிங்களவர் வெஸ் முகுன கட்டுதல். மேலும் முஸ்லிம்களிடம் மாஷா அல்லாஹ் என்றும் சிங்களவரிடம் புது சரணய் என்றும் மரபு மாற்றம் பெற்றுள்ளது.

### கலைகள்

- இசைக்கலை: கர்நாடக இசை இந்தியத்துணைக்கண்டத்தில் பெருவழக்குப் பெற்றுள்ளது. சிங்களவரிடமும் கர்நாடக இசைமரபு முக்கியம் பெற்றுள்ளது. தமிழர் பண்பாட்டினடியாக முஸ்லிம்களிடமும் இசைக்கலை பெருவழக்குப் பெற்றுள்ளது. இசை இஸ்லாத்தில் ஆகுமாக்கப்பட்டதா? இல்லையா? என்ற வாதப்பிரதிவாதங் களுக்கப்பால் இந்தியத் துணைக்கண்ட இசைப்பாரம்பரியத்தில் முஸ்லிம்கள் பெருஞ் செல்வாக்குச் செலுத்தி வருவதை அவதானிக்கலாம். உருது முஸ்லிம்களிடம் கஸல் பெருவழக்குப் பெற்றுள்ளது.
- மேடை நாடகங்களும் பெருவழக்குப் பெற்றுள்ளன. பாரசீக மரபோடு நொண்டி நாடகங்கள் தமிழில் வழக்குப் பெற்றன. நாட்டுக்கூத்துக்கள், உள்ளடக்க ரீதியாக, சமகாலப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு, தெருக்கூத்துக்களாகவும் வீதி நாடகங்களாகவும் வளர்ச்சிகண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விளையாட்டுக்கள்

- சிலம்பாட்டம்: சலாம் வரிசையாக முஸ்லிம்களிடம் வழக்குப் பெற்றுள்ளது.
- கிளித்தட்டு, சடுகுடு (கபடி) முதலானவையும் கிட்டிப்புள் (இன்று கிட்டிப்புள் கிரிக்கட் ஆட்டமாக மாறியுள்ளது), ஆடு - புலி ஆட்டம் (சதுரங்கம் அல்லது ச்செஸ் விளையாட்டாக மாறியுள்ளது), கள்ளன் - போலீஸ், பட்டம் விடுதல், குண்டு விளையாட்டு (கோலி, ஜில்போல), பல்லாங்குழி, தாயம், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், கிடுகு பின்னல், தலையணைச் சண்டை, வழுக்கு மரமேறுதல் முதலான விளையாட்டுக்களும் இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுப்பாரம்பரிய விளையாட்டு மரபாகப் பரிணாமம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### திருவிழாக்கள்

- சித்திரை முதல் நாள் தமிழ் வருடப்பிறப்பு - இலங்கையில் தமிழ் - சிங்களப் புதுவருடம்
- திருவிழாச் சந்தைகள்: இலங்கையில் திருவிழாச் சந்தைகள் பெருஞ் சந்தைகளாக விருக்கும். இது இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு மரபாக இன, சாதி, மத, நிற பேதமின்றி எல்லோருமே கலந்து சிறப்பிக்கும் மரபாக வழக்குப் பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றைப் போன்றே பொருளாதார வழக்காறுகள் (கை முழுத்தம்), அரசியல் வழக்காறுகள் (பஞ்சாயத்து) எனப் பல வழக்காறுகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

நாட்டார் வழக்காறுகளுள் இடம்பெறும் மிக முக்கியமான அம்சங்களுள் ஒன்றாக நாட்டார் இலக்கியங்கள் விளங்குகின்றன. நாட்டார் இலக்கியங்களுள் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் ஆகியன அடங்குகின்றன. பல்லின, பண்பாட்டுச் சூழலில் இந்நாட்டார் இலக்கியங்களிடையேயும் கலப்புத் தன்மையினையும் கூட்டுத்தன்மையினையும் பொதுத்தன்மையினையும் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையைப் பொறுத்தளவில் பொருண்மை அடிப்படையில் தமிழ் - சிங்கள பழமொழிகளிடையே மிகுந்த ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் வாய்மொழி இலக்கியங்களுக்கும் தமிழர்களின் வாய்மொழி இலக்கியங் களுக்குமிடையே பொருண்மை அடிப்படையில் ஒரு பொதுத்தன்மையினைக் காணக்கூடியதாக உள்ளது.

### முடிவுரை

மேற்குறித்த அவதானிப்பும் அணுகுமுறையும் ஒரு குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தது. இது மிகப் பரந்தளவில் முழுமையாகவும் தெளிவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டியது. தற்காலத்தில் கற்றுத்தேர்ந்த நகரத்தவரிடமும் நவீனத்துவம் பேசுபவர்களிடமும் இவ்வழக்காறுகள் செல்வாக்குப் பெற்றே விளங்குகின்றன. உலகமயமாதலின் விளைவினால் பல்லினப் பண்பாட்டுச்சூழல் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. இவ்வாறான பல்லினப் பண்பாட்டுச் சூழல் தனித்தனிப் பண்பாடுகளுக்கிடையே கலப்புத்தன்மையினையும் கூட்டுத் தன்மையினையும் பொதுத்தன்மையினையும் ஏற்படுத்திவிட்டன. எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாட்டார் வழக்காற்றினை, அது எந்தத் தனிப்பட்ட பண்பாட்டைப் பிரதி பலிக்கும் இனக்குழுமத்திற்கானது என வரையறுப்பதிலும் இனங்காண்பதிலும் சிக்கலேற்பட வாய்ப்புள்ளது. உலகளாவியளவில் நாட்டார் வழக்காற்றியல் பெருஞ் செல்வாக்குப்பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிகண்டு வருகிறது. இந்தியாவிலும் தமிழகத்திலும் மிகத் தாராளமாக நாட்டார் வழக்காறுகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிகவேகமாக மாறிவரும் உலகில், நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி, நாட்டார் வழக்காறுகளை நம்பகத்தன்மை மிக்கதாக ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். விவரண முறைமை யினையும் ஒப்புமை முறைமையினையும் கையாண்டு புதிய நோக்கில் நாட்டார் வழக்காறுகள் அணுகப்படவேண்டியதும் அவசியமானதே.

## உசாத்துணை


இராசேந்திரன். அ., நாட்டுப்புறப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், சென்னை: வனிதா பதிப்பகம், 2006.

இராமநாதன். ஆறு., (ப.ஆ), நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள், திருவணந்தபுரம்: தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம், 2003.

இராமநாதன். ஆறு., (ப.ஆ), நாட்டுப்புறவியல் களஆய்வு நெறிமுறைகள், திருவணந்தபுரம்: தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம், 2003.

சக்திவேல். சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2003.

சற்குணவதி., தமிழக நாட்டுப்புறவியல், சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2004.

சாந்தி. க., (ப.ஆ), நாட்டுப்புறவியல் ஆய்வுத்தளங்கள், சென்னை: அகல், 2005.

முத்துமீரான். எஸ்., இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள், சென்னை: நெஷனல் பப்லிஷர்ஸ், 2005.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலச் சூழலில் நாட்டார் கலை இலக்கியங்கள்

திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

## அறிமுகம்

பண்டுதொட்டு நாட்டார் கலை, இலக்கியங்கள் மக்கள் சமூகங்களிடையே செல்வாக்கும் வளர்ச்சியும் பெற்று வந்துள்ளன. நாகரிக வளர்ச்சி, நகரமயமாக்கம், சமூக மாற்றம், செந்நெறிக் கலை இலக்கிய மரபின் ஆதிக்கம் முதலானவற்றுக்கு ஈடுகொடுத்து இற்றைவரை அவை தமது ஆதிக்கத்தையும் செல்வாக்கினையும் வளர்த்து வருவதைக் காணமுடிகின்றது. ஈழத்தமிழர்களிடத்திலும் நாட்டார் கலை, இலக்கியங்கள் அதிகளவில் பயின்று வந்திருத்தலை அவை தொடர்பாக நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் வெளிக்கொணர்ந் துள்ளன. நாட்டார் கலை இலக்கியங்களில் ஆளுமை மிக்க கலைஞர்கள் ஈழத்தில் வாழ்ந்ததுடன், அவர்கள் அவற்றினைப் பல்வேறு சவால்களுக்கூடாகவும் வளர்த்து எதிர்காலச் சமூகத்துக்குக் கையளித்து வந்துள்ளனர். இந் நாட்டார் மரபுகள் இன்றும் ஈழத்தின் கலை இலக்கியப் போக்குகளில் தாக்கத்தினை ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடியும். ஈழத்தில் போர்க்காலச் சூழலில் நாட்டார் கலை இலக்கியங்களின் வளர்ச்சி, தாக்கம், பாதிப்பு என்பன குறித்து நோக்குவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

## போர்ச்சூழல்

தமிழர்வாழ் பிரதேசங்களில் போர்ச்சூழல் என்பது சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிலவிவந்துள்ளது. சுதந்திரத்துக்குப் பின்னதாக சிங்கள - தமிழ் இனமுரண்பாடு, இனப்பிரச்சினையாக, இனமோதல்களாக வடிவெடுத்து இனப்போராட்டமாக வெடித்தது. குறிப்பாக எண்பத்து மூன்றில் நிகழ்ந்த யூலை இனக்கலவரத்தினைத் தொடர்ந்து தமிழர்கள் மத்தியில் போராளிக் குழுக்கள் பல உதயமாகின. இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராகத் 'தனிநாடு' என்ற கோரிக்கையை முன்வைத்து அவை செயற்படத் தொடங்கின. போராளிக் குழுக்களின் செயற்பாடுகள், ஆயுதபலம், இராணுவத்துக்கு எதிரான மோதல்கள் என்பன தொடர்ந்துவந்த காலங்களில் மேலும் தீவிரமடைந்தன. இதனால் போர்ச்சூழல் தமிழ்ப் பிரதேசங்களில் வலுவடைந்து சென்றது.

எண்பத்தாறுகளில் விடுதலைப் புலிகள் பலம்வாய்ந்த போராளி இயக்கமாக வளர்ச்சி பெற்றனர். இவ் இயக்கத்தின் செயற்பாடுகள் பிரதானமாக யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டே நிகழ்ந்து வந்தன. அதன் முக்கியமான அரசியல், போர்க்கட்டுமானங்கள் வலிகாமத்திலேயே அமைந்திருந்தன. குறிப்பாக முதலாம் (1983-1987), இரண்டாம் (1990 -1995) காலகட்ட ஈழவிடுதலைப் போராட்டத்தின் இயங்கு, இயக்கு தளமாக வலிகாமமே விளங்கி வந்துள்ளதை மறுக்கமுடியாது. 1995க்குப் பின்னதாக, போராளிகளின் போராட்ட தளம் வன்னி பெருநிலப்பரப்புக்கு மாற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய போராட்ட சூழல் காணப்பட்ட காலப்பகுதியான பத்து வருட காலங்கள் (1983-86, 1989-1995) மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதிலுங் குறிப்பாக, போராளிக்குழுவின் செயற்பாடுகளும், கட்டுமானங்களும் அதிகளவில் காணப்பட்ட பகுதியான வலிகாமம் பகுதியே இவ் ஆய்வின் களமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

## வலிகாமம்

வலிகாமம் பல ஆண்டு காலமாகப் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமுள்ள பிரதேச மாகும். மரபுவழி மற்றும் நிறுவன ரீதியான கல்வி அமைப்புக்களின் செயற்பாடுகள் மிக அதிகமாக இப்பகுதியில் காணப்பட்டது. குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதிகரித்த மிஷனரிமாரின் செயற்பாடுகள் மற்றும் அதற்கு எதிரான சைவர்களின் எதிர் நடவடிக்கைகள் பல கல்வி நிறுவனங்கள் இப்பகுதியில் தோற்றம்பெற வழிவகுத்தன. இதன் பின்னணியில் கல்வி வளர்ச்சி, நவீனத்துவத்தின் பரம்பல், நாகரிகத்தின் செல்வாக்கு என்பன மிக விரைவாக நிகழ்ந்த பிரதேசமாக இதனைக் குறிப்பிடலாம். சமூக மற்றும் பண்பாட்டுத் தளங்களிலும் மேனிலையாக்கம் மிக வேகமாக இப்பிரதேசத்தில் நிகழ்ந்து வந்துள்ளது. சாதியத்தின் கடுமையான பிடி இப்பிரதேசத்தில் காணப்பட்டது. பிராமணியம் மற்றும் வேளார் மரபு இறுக்கமாகப் பேணப்பட்டு வந்தது. கரையோரப் பிரதேசங்களில் கிறிஸ்தவமும் உள்ளூர்களில் இந்துமதமும் (சைவம்) பலம் பெற்றிருந்தன[1]. தொடர்புச் சாதனங்கள், ஊடகங்களின் செல்வாக்கு இப்பகுதியில் அதிகமாகக் காணப்பட்டது. அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்கள் பலவற்றின் செயற்பாட்டு மையமாகவும் இப்பிரதேசம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். ஆக, வலிகாமப் பிரதேசத்தை நாட்டார் கலை, இலக்கிய மரபுகள் அருகியும், திரிபடைந்தும், செந்நெறி மரபுகளுடன் சேர்ந்து மேனிலை யாக்கம் பெற்றும், சாதிய, மத அடையாளங்களுடன் வரையறுக்கப்பட்டும் தப்பிப்பிழைத்து வளரும் ஒரு பிரதேசமாகக் குறிப்பிட முடியும்.

வலிகாமத்தில் நாட்டார் கலை இலக்கிய மரபுகள் அதிகம் பிரபலம் பெற்ற இடங்களாக பாஷையூர், குருநகர், வட்டுக்கோட்டை, நவாலி, மாதகல், இளவாலை, மயிலிட்டி, குரும்பசிட்டி, கட்டுவன் எனும் இடங்கள் காணப்படுகின்றன.

## போராட்ட சூழலில் நாட்டார் கலை, இலக்கியங்கள்

தனிநாட்டுக் கோரிக்கையினை முன்வைத்து ஆயுதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலங்களில் நாட்டார் கலை, இலக்கிய வடிவங்களைக் கவனத்தில் கொள்வது தவிர்க்க முடியாதிருந்தது. ஆயுதப்போராட்டத்தினை வலுப்படுத்தி அதன் நோக்கங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு இவை சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகப் பின்வரும் நோக்கங்களை அடைதற்பொருட்டு இவற்றினை முதன்மைப்படுத்தும் போக்கு அக்காலத்தில் நிலவியதை அவதானிக்க முடிகின்றது.

1. தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கான ஒரு பிரசார வடிவமாக நாட்டார் கலை இலக்கிய வடிவங்களினைக் கையாளுதல்
2. தமிழ், தமிழ்த்தேசியம், தனிநாடு என்னும் அடையாளத்தினை உருவாக்கி வளர்த் தெடுத்து அதன் பாதுகாவலர்களாகத் தம்மை இனங்காட்டுவதற்காக அவற்றுக்கு முதன்மைதருதல்

என்பனவே அவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசார வடிவமாக நாட்டார் கலை இலக்கியங்கள்

தமிழர்களது ஆயுதப் போராட்டம் வலுவடைந்த சூழலில் போராளிக்குழு தனது நிலைப் பாடுகளை, கொள்கைகளை, செயற்பாடுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்த, நியாயப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பிரசாரம் ஆட்சேர்ப்பு, ஆதரவு தேடுதல் என்னும் இரு தளங்களில் நிகழ்ந்துள்ளமையைக் காணலாம். போராளிக்குழு தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக படைப்பலத்தை விஸ்தரித்துக் கொள்வது தவிர்க்கமுடியாதிருந்தது. இளைஞர்கள் மத்தியில் ஆயுதப்போராட்டம் சம்பந்தப்பட்ட தெளிவினையும் தேவையினையும் எடுத்துரைப்பதன் மூலம் அவர்களை ஆயுதப்போராட்டத்திற்குள் ஈர்த்து தமது படை பலத்தினை விஸ்தரிக்க அவர்கள் முயற்சித்தனர். குறிப்பாக, போராளிக்குழு மரபுவழி இராணுவமாகத் தன்னை மாற்றியமைத்த காலங்களில் இத்தகைய பிரசாரங்கள் இளைஞர்கள், யுவதிகளை நோக்கிப் பல தளங்களில் முன்னெடுக்கப்பட்டன. இப் பிரச்சாரத்திற்கு உதவும் வகையில் நாட்டார் கலை இலக்கிய வடிவங்கள் சிறப்பாகக் கையாளப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

அதேபோலவே தமது போராட்டத்திற்கு மக்களின் ஆதரவினைத் தேடிக்கொள்வதும் போராளிக்குழுவிற்கு அவசியமானதாக இருந்தது. மக்கள் ஆதரவு என்பது உளரீதியான பக்கபலமாகவோ, சரீர உதவியாகவோ, பொருளாதாரப் பங்களிப்பாகவோ அமையலாம். போராட்டத்தின் பலம், உறுதிப்பாடு, திசைவழி, வெற்றி என்பவற்றைத் தீர்மானிக்கும் சக்தியாக அதுவே விளங்கியிருப்பதைக் காணமுடியும். மக்கள் ஆதரவினைத் திரட்டிக்கொள்ள மக்கள் மனங்களை வென்றெடுக்கும் முயற்சிகள் போர்க்காலச் சூழலில் அதிகம் நிகழ்ந்தேறின. மக்களுக்கு ஆயுதப்போராட்டம் சார்ந்த விழிப்புணர்வினை ஏற்படுத்தல், தகவல்களை வழங்குதல், தெளிவினைத் தருதல், பொறுப்புக்களை எடுத்துரைத்தல், தமது செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பித்தல் போன்றவற்றைப் பிரசாரம் செய்து கொள்வதற்காக நாட்டார் கலை இலக்கிய வடிவங்கள் சிறப்பாகக் கையாளப் பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் கலை, இலக்கிய பண்பாட்டுப் பிரிவின் வெளியீடான வெளிச்சம் சஞ்சிகையின் முதலாண்டுச் சிறப்பிதழுக்கு போராளிக் குழுவின் தலைவர் வழங்கிய உரையின் பின்வரும் பகுதி பிரசாரத்திற்காக நாட்டார் கலை இலக்கிய வடிவங்கள் போர்ச்சூழலில் எங்ஙனம் நுட்பமாகப் பயன்பட்டன என்பதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது.

> “எமது போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளைக் கலை இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்க வேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தினை சிருஷ்டி கர்த்தாக்கள் சித்திரித்துக் காட்டவேண்டும். மக்களிடையே விழிப்புணர்வையும் எதிர்ப்புணர்வையும் விடுதலையுணர்வையும் தூண்டிவிடும் கலை இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும். இத்தகைய கலை இலக்கியப் படைப்புகளே தேசிய எதிர்ப்பியக்கத்திற்கு உயிரூட்டுவதாகவும் அமையும்”[2]

அந்தவகையில் நாட்டுக்கூத்து, வசந்தன் ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், பொம் மலாட்டம், ஒயிலாட்டம், கரகம், காவடி, கும்மி, பூத ஆட்டம் முதலான கலை வடிவங்களும் சிலம்பம், தீ விளையாட்டு, கொம்பு விளையாட்டு, வாற்போர் முதலான போர்க்கலைகளும் போர்ச்சூழலில் முதன்மைப்படுத்தப்பட்டன. அவற்றை நிகழ்த்துவதற்கு அல்லது மேடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்றுவதற்கான களங்கள் உருவாக்கித் தரப்பட்டதுடன் பயிற்றுவித்தல் மற்றும் வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாகும்.

நாட்டார் கலை இலக்கிய வடிவங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பிரசாரத்திற்குப் பயன்படுத்தும் போக்கு அக்காலத்தில் காணப்பட்டுள்ளது. நாட்டார் பாடல்கள், நாட்டுக்கூத்து, கரகம், கும்மி, வசந்தன், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை முதலானவற்றின் ஆட்டங்கள், பாடல்கள் என்பன வெவ்வேறு அளவிலும், வடிவங்களிலும் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்ததைக் காணலாம்.

**1. எழுச்சிப்பாடல்கள்**

போர்க்காலச் சூழலில் எழுச்சிப்பாடல்கள் பிரச்சாரத்திற்கான பிரதான வடிவங்களாகக் கையாளப்பட்டன. அவ் எழுச்சிப்பாடல்களுள் பல மக்கள் விரும்புகின்ற நாட்டார் கலை, இலக்கியப் பாடல மெட்டுக்களை தழுவியனவாக அமைந்ததைக் காணலாம். எழுச்சிப் பாடல்கள் பலவற்றில் நாட்டுக்கூத்துப் பாடல் மெட்டுக்களைப் பரவலாக அவதானிக்க முடியும். மேலும் வசந்தன், கும்மி, ஒயிலாட்டம், காவடி, கரகம் எனும் நாட்டார் கலை வடிவங்களில் பயன்படும் பாடல் மெட்டுக்களையும், இசைவடிவங்களையும் நேரடியாகக் கையாண்டும் பாடல்கள் எழுதப்பட்டும் பாடப்பட்டும் உள்ளன. மக்களின் உள்ளத்தினைச் சுண்டியிழுக்கும் - கருத்தைக் கவரும் வகையில் இம் மெட்டுக்களில் அமைந்த பாடல்கள் விளங்கியமை சுட்டிக்காட்டத்தக்கது. பெரும்பாலும் உள்ளூர்க் கலைஞர்களால் பாடப்பட்ட இப்பாடல்கள் மெல்லிசையுடன் இணைந்தே இசை இறுவெட்டுக்களாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் பாரம்பரிய இசைக்கருவிகளுடன் நவீன இசைக்கருவிகளும் இத்தகைய பாடல் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்தன. ஒலிப்பதிவுகளும் நாட்டார் கலைக்களங்களிலின்றிக் கலையகங்களில் நடைபெற்றன. பாடல்கள் சில நாட்டார் கலைகளைப் பாரம்பரியமாக நிகழ்த்திவரும் கலைஞர்களால் பாடப்பட்டமை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

**2. ஆற்றுகைகள் - தெருநாடகங்கள்**

பிரசாரச் சாதனங்களில் போர்க்கால ஆற்றுகைகள் அடுத்து மிக முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. போர்க்கால ஆற்றுகைகள் என்ற வகையில் தெரு நாடகங்கள் மற்றும் மேடை நாடகங்கள் பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. இவற்றுள் தெரு நாடகங்கள் போர்ச்சூழலில் மிகவும் பிரபலம் பெற்ற கலை வடிவங்களாக விளங்கின. சந்திகள், மக்கள் கூடும் தெருக்கள், சந்தைகள், கோவில்கள் என்பனவற்றை அரங்கமாக்கி இவ்வகை ஆற்றுகைகள் எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் அதிகம் நிகழ்ந்து வந்ததை அவதானிக்க முடிகிறது. தெரு நாடகங்களை நடிப்பதில் பயிற்றுவிக்கப்பட்ட கலைஞர்கள் வரையறுக்கப்பட்ட இசைக்கருவிகள், ஒப்பனைகள், நாடகக்காட்சி அமைப்பு களுக்கான உபகரணங்கள் என்பவற்றுடன் பிரசன்னமாகி ஆற்றுகைகளை நிகழ்த்துவர். பார்வையாளர்கள் நாற்புறமும் சூழ்ந்து நிற்க நாடக நடிகர்கள் தமது உடல் அசைவுகள், முக பாவங்கள் என்பன எல்லோருக்கும் தெரியும்படி - நாற்றிசைகளிலும் திரும்பி அல்லது சுற்றி வந்து நடிப்பினை வெளிப்படுத்துவர். தெருநாடகங்கள் சில தற்காலிகமாக உழவு இயந்திரப் பெட்டிகள், எண்ணெய் பரல்கள் கொண்டு அமைக்கப்பட்ட மேடைகளிலும் நிகழ்ந்துள்ளன. ஆற்றுகை நிகழ்த்தப்படுவதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்னதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இசைக்கருவிகளை இசைத்தோ அல்லது ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியோ இது குறித்த தகவல்களை மக்களுக்கு வழங்குவர். மக்கள் குழுமியதும் ஆற்றுகைகள் ஆரம்பமாகும். அரைமணி நேரம் அல்லது அதற்குக் குறைவான நேரமே பெரும்பாலும் ஆற்றுகை நடைபெறும். எளிமையும் வினைத்திறனும் மிக்க இவ்வகை நாடகங்கள் மக்கள் மத்தியில் பிரபலமும் மதிப்பும் பெற்று விளங்கின[3].

போராளிக் குழுக்கள் தமது கொள்கைப் பிரசாரங்களை, நியாயப்படுத்தல்களை, பேரினவாத அடக்குமுறைகளை வெளிப்படுத்த இவ் ஆற்றுகைகளை அதிகம் மேற்கொண்டு வந்தன. மாற்றியக்கங்களைக் கேலி செய்வதற்கும், ஆட்சேர்ப்புக்கும் இவை கருவியாகக் கையாளப்பட்டதுண்டு. குறிப்பாக 80களிலும் 90களிலும் இவ்வகை நாடகங்கள் யாழ்ப் பாணத்தின் பல பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. போராளிகள், நாட்டுப்பற்றாளர்கள், கலைஞர்கள், நாடகக்குழுக்கள் இணைந்து தெருநாடக ஆற்றுகைகளை நிகழ்த்தி வந்தனர். உள்ளூரிலே பிரபலம் பெற்ற நாடகக் குழுக்கள் சில தாமே முன்வந்து தெரு நாடகங்களை ஆற்றியதுமுண்டு. போர்ச் சூழலில் சமூகச் சீர்திருத்தத்தினை முன்வைத்து இந்நாடகக் குழுக்கள் ஆற்றுகைகளை நிகழ்த்தி வந்தன. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், மது ஒழிப்பு (கசிப்பு), சாதியம் என்பவற்றுக்கு எதிரான பிரசாரங்களாக அவை அதிகம் அமைந்தன. 90களில் ஆட்சேர்ப்பு தெருநாடகங்களின் முக்கியமான இலக்காகியது. போராட்டத்தின் தேவை மக்களின் பொறுப்பு, மண்மீட்பின் மகத்துவம், அர்ப்பணிப்பின் அவசியம் என்பவற்றை வலியுறுத்தி நாடகங்கள் நடிக்கப்பட்டன. வட்டுக் கோட்டை நாட்டுக்கூத்துக் குழுவினரின் புகழ்பெற்ற 'போருக்குப் போவோம் புறப்படடா' எனும் நாடடுக்கூத்து இந்த வகையில் சுட்டிக்காட்டத்தக்கது.

தெரு நாடகங்கள் பிரசாரத்தினை முக்கிய நோக்கமாகக் கொண்டதால் மக்கள் மனதினைச் சுண்டியிழுப்பதற்கு ஏற்றவகையில் நாட்டார் கலை இலக்கியக் கூறுகளை அதிகம் உள்ளடக்கியிருந்தன. நாட்டுக்கூத்து மெட்டுக்களில் அமைந்த பாடல்கள், கூத்துப் பாடல்கள், ஆட்டங்கள், பறை, தமுக்கு, ஆர்மோனியம் முதலான இசைக்கருவிகள் என்பன மிக அதிகமாக அவற்றில் பயன்படுத்தப்பட்டன. சில தெருவழி நாடகங்கள் நாட்டார் கலை இலக்கியக் கூறுகளை முழுமையாகவும் சில பகுதியளவிலும் உள்வாங்கியிருந்ததை அவதானிக்கலாம். குறிப்பாக நாட்டுக்கூத்தில் முதன்மைபெற்ற வட்டுக்கோட்டை, பாஷையூர், குருநகர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்களால் நடிக்கப்பட்ட அல்லது பயிற்றுவிக்கப்பட்ட தெருவழி ஆற்றுகைகள் நாட்டார் கலை இலக்கிய மரபுகளைச் செறிவாக உள்வாங்கியிருப்பதைக் காணலாம்.

**மேடை நாடகங்கள்**

போர்ச்சூழலில் நாடகங்கள் பல மேடையேற்றுப்பட்டு வந்தன. தென்னிந்தியச் சினிமாவின் செல்வாக்கு அருந்தலாக இருந்த அக்காலகட்டத்தில் நாடகங்களுக்கு கணிசமான வரவேற்பு இருந்தது. இக்காலகட்டத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் இருவேறு பண்புகளை மிகத் துலாம்பரமாக அவதானிக்க முடிந்தது. ஒருவகை நாடகங்கள் பாரம்பரிய நாடக மரபினை அதிகம் பின்பற்றியவை. கூத்து, இசைநாடக மரபுகள் அதிக அளவில் அவற்றில் வெளிப்பட்டன. அவ்வாறன்றி நவீன நாடக ஆற்றுகை முறைமையை அதிகம் உள்ளீர்த்தவையாக இன்னொரு தொகுதி நாடகங்கள் நடிக்கப்பட்டன. தொன்ம நாடகங்கள், சமுதாய நாடகங்கள், குறியீட்டு நாடகங்கள் என்பன இவ்வகை சார்ந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பகுதியளவில் நாட்டார் கலை இலக்கியக் கூறுகளைக் கொண்டிருந்தன. போராட்டத்தின் நியாயப்பாடுகளை விபரித்தல், பேரினவாத அடக்குமுறைகளைச் சுட்டிக் காட்டுதல், விமர்சித்தல், பேரவலங்களை எடுத்துரைத்தல், மக்களுக்கு நம்பிக்கையூட்டல், போராட்டத்திற்கு ஆட்பல, உளவியல் மற்றும் பொருளாதார ரீதியாக வலுச்சேர்த்தல் என்பன இத்தகைய நாடகங்களின் பிரதான நோக்கமாக இருந்தது. குறிப்பாக 90களில் இவ்வாறான நாடகங்கள் வலிகாமத்தில் உருவாக்கப்பட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டுள்ளன[4]. இவற்றுள் 'கொல் ஈனும் கொற்றம்', 'மானத்தமிழ் மறவன்', 'அடம்பன் கொடிகள்', 'வீர மைந்தன்', 'மண்சுமந்த மேனியர்', 'சகுனியர் மூவர்', 'உயிர்த்த மனிதர் கூத்து' முதலானவை குறிப்பிடத்தக்கவை.

இராமாயண இதிகாசக் கருவை குறிப்பாக இராவணன், கும்பகர்ணன் கதாபாத்திரங்களை மையப்படுத்தி ஜோன்சன் ராஜ்குமாரினால் தயாரிக்கப்பட்ட 'கொல் ஈனும் கொற்றம்' எனும் நாடகம் முழுமையாகக் கூத்து மரபில் அமைந்ததாகும். அதேபோலவே வட்டுக்கோட்டை சிந்துபுரம் நாட்டுக்கூத்துக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட 'வீர மைந்தன்' நாடகம் வடமோடி நாட்டுக்கூத்து மெட்டுக்களை மிக அதிகளவில் கொண்டதாக அமைந்துள்ளது. மேடைநாடகப் பாங்கில் உருவாகிய இந்நாடகத்தில் வட்டுக்கோட்டைக் கலைஞர்களும் போராளிகளும் நடித்துள்ளனர். பொன். கணேசமூர்த்தியின் 'சகுனியர் மூவர்' நாடகம் முழுமையாக சிந்து நடைக் கூத்துப்பாணியில் எழுதப்பட்டது. மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கும் பெற்றிருந்த 'காத்தான்கூத்து' ஆட்டம், பாடல் மெட்டுக்கள் என்பன இந்நாடகத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. சொக்கனின் 'மானத்தமிழ் மறவன்' யாழ்ப்பாணத்தையாண்ட சங்கிலி மன்னனின் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டது. கூத்து மரபுகளையும், இசை நாடகப் பாணியையும் கலந்து எழுதப்பட்ட இந்நாடகம் சங்கிலி மன்னின் வரலாற்றினை புதிய சமூகத்தேவையின் பின்புலத்தில் மீள எடுத்துரைப்பதாக அமைந்தது. இது குறித்துப் பேராசிரியர். அ. சண்முகதாஸ் வெளிச்சம் சஞ்சிகையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "மான மறத்தமிழன் என்ற தலைப்புடன் சங்கிலியனுடைய வரலாற்றை ஆசிரியர் வெளியிட்டிருப்பது இந்நூலின் இக்காலத்தேவையை உணர்த்துகிறது"[5]

'அடம்பன் கொடிகள்' நாடகத்தினை எழுதிய ஸ்ரானி மாஸ்டர் அல்லது மாறன் என அழைக்கப்படும் நாவண்ணன் விடுதலைப் புலிகளின் 'கடற்புலிகள்' அணியில் இணைந்திருந்த போராளியாவார். இந்நாடகத்தில் கிராமியச்சூழல், கூத்துப்பாடல்கள், 'அப்பா பாடல்' (மீனவ சமுதாயத்திற்குரியது) என்பன தாராளமாகப் பயின்று வந்துள்ளதனை அவதானிக் கலாம். குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'மண்சுமந்த மேனியர்' நாடகத்திலும் நாட்டார் பாடல்கள், நாட்டார் கலைகள், கூத்துக்களில் பயிலும் ஆட்டங்கள் என்பன பரவலாகப் பின்பற்றப்பட்டுள்ளன. சிதம்பரநாதனின் 'உயிர்த்த மனிதர் கூத்தில்' சிலம்பாட்டம், தீ விளையாட்டு, அரக்கன் ஆட்டம் எனும் நாட்டார் கலைக்கூறுகள் பயின்று வந்துள்ளன. இவற்றினை ஆசிரியர் நாட்டார் கலைஞர்களைக் கொண்டே பயிற்றுவித்தார் என்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். ஆக, மேலே சுட்டப்பட்ட நாடகங்களில் நாட்டார் கலை இலக்கியக்கூறுகள் நேரடியாகவும், பகுதியளவிலும் பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதைக் காணமுடியும். மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற வடிவங்களைக் கையாண்டு தாம் கருதிய விடயத்தை நாடக ஆசிரியர்கள் சொல்லத் தயங்கவில்லை. மக்களின் விருப்பு, ஆர்வம், ஏற்புடமை, மனப்பதிவு என்பவற்றிற்கு இயைந்தவகையில் நாட்டார் கலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் கூறுகளை உள்வாங்குவது அவர்களுக்குத் தவிர்க்கமுடியாமல் இருந்துள்ளது. போர்ச்சூழல், போர்க்கால மக்களின் வாழ்வியல் பிரசார நோக்கு என்பன இதனை மேலும் பின்பற்ற வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருந்தன.

**4. நாட்டார் கலை அளிக்கைகள்**

போர்க்காலச் சூழலில் பிரசார நோக்கத்திற்காக நாட்டார் கலை அளிக்கைகள் அவ்வப் போது நிகழ்ந்து வந்துள்ளன. மக்கள் மத்தியில் விழிப்புணர்வு, தாய்மண் பற்று, போராட்டத்தில் உறுதி, பங்களிப்பு என்பவற்றை ஏற்படுத்துதற்கு நாட்டார் கலை அளிக்கைகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. கலைவிழாக்கள், போட்டிகள் என்பவற்றிற்கு மட்டுமல்லாமல் மேதின ஊர்வலங்கள், போர் வெற்றி விழாக்கள் என்பவற்றிலும் நாட்டார் கலை அளிக்கைகளுக்கு முதன்மை தரப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். காவடி, கரகம், கும்மி, வசந்தன், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை, பூத ஆட்டம் என்பன இந்நாட்டார் கலை அளிக்கைகளில் குறிப்பிடத்தக்கன. இவற்றில் பாரம்பரியப் பாடல்களுக்குப் பதிலாகப் புரட்சிப்பாடல்கள் சேர்க்கப்பட்டமை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதொரு விடயமாகும்.

போர்காலச் சூழலில் இயங்கிவந்த தொலைக்காட்சி (நிதர்சனம்), வானொலி (புலிகளின் குரல்) எனும் வெகுஜன ஊடகங்களும் பிரச்சாரத்திற்காக நாட்டார் கலை இலக்கிய வடிவங்களைப் பல தளங்களில் உள்வாங்கியிருக்கின்றன. நாட்டார் கலை இலக்கியங்களை நேரடியாக ஒளி, ஒலிப்பதிவு செய்து மக்கள் மயப்படுத்திய அதேவேளை அவற்றினைப் பகுதியளவில் உள்வாங்கிய நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும் அவை ஆர்வங்காட்டின. போர்ச்சூழலில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களிலும் நாட்டார் கலை இலக்கியக் கூறுகளின் செல்வாக்கு ஆங்காங்கே பிரசார நோக்குடன் எடுத்தாளப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம்.

## தமிழ்த்தேசியத்தினை வளர்த்தெடுப்பதற்கான வடிவமாக நாட்டார் கலை இலக்கியங்கள்

போர்ச் சூழலில் நாட்டார் கலை இலக்கியங்களுக்கூடாக தமிழ்த் தேசியத்தினை அடையாளப்படுத்தும் முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. நாட்டார் கலை இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் சொத்துக்கள். அவை காலங்காலமாக அச் சமூகத்தில் பயின்றும், வளர்ந்தும், பாதுகாக்கப்பட்டும், கையளிக்கப்பட்டும் வருகின்றன. இவற்றில் மக்களுக்கு ஈர்ப்பும், பற்றும் இயல்பாக இருந்துவருகிறது. நாகரிக வளர்ச்சியில் நாட்டார் கலை இலக்கியங்கள் ஓரங்கட்டப்பட்டு வந்தாலும் அவைகுறித்த பெருமித உணர்வும், பேணவேண்டும் என்ற அவாவும் மக்களிடத்தில் இன்றும் இருந்துவருகின்றது. நாட்டார் கலை இலக்கியங்களைப் பார்க்க, கேட்க, படிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் அவர்கள் அதைத் தவறவிடுவதுமில்லை, அவற்றைப் பற்றியும் அவற்றின் சிறப்புக்களைப் பற்றியும் அடுத்த சந்ததிக்குச் சொல்லப் பின்னிற்பதுமில்லை. நாட்டார் இசை, பாடல், மெட்டுக்கள் என்பவற்றைக் கேட்குந்தோறும், நாட்டார் கலை ஆட்டங்களைக் காணுந்தோறும் இயல்பாகவே மன மகிழ்ச்சியும், இனம்புரியாத இரசனை அனுபவமும் மக்களிடத்தில் ஏற்படுகின்றது. குறிப்பிட்ட பண்பாட்டு எல்லைக்குள் வாழ்ந்து, பழகி, பயின்று வந்ததன் பயன் இதுவெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறிப்பிட்ட சமூக வட்டத்திற்குள் பேணப்பட்டு வருகின்ற நாட்டார் கலை இலக்கியங்களே அச்சமூகத்திற்கான அடையாளத்தினையும், தனித்துவத்தினையும் பெற்றுத்தருகின்றன. குறிப்பிட்டதொரு நாட்டார் கலை இலக்கிய வடிவத்தினை அவதானித்த உடனே இது எச்சமூகத்துக்குரியது என்பதை உடனடியாகவே கூறிவிடமுடியும். அந்தளவிற்கு ஒரு சமூகத்தின் இயக்கம், வளர்ச்சி, நகர்வு என்பவற்றுடன் நாட்டார் கலை இலக்கியங்கள் பின்னிப் பிணைந்திருப்பதனைக் காணமுடிகின்றது[6]. சுருங்கக்கூறின் மக்களிடையேயான ஒற்றுமை, தன்னம்பிக்கை, மொழிப்பற்று, இனப்பற்று என்பவற்றைப் பேணுவதற்கும், வளர்ப்பதற்கும் மகத்தான சாதனங்களாக நாட்டார் கலை இலக்கியங்கள் காலங்காலமாகத் தொழிற்பட்டு வந்துள்ளன. இதன் அடிப்படையிலேயே தமிழ், தமிழ் உணர்வு, தமிழீழம் என்னும் கொள்கைகளை முதன்மைப்படுத்திய போர்ச்சூழலில் தமிழ் தேசிய தனித்துவ அடையாளத்தினை விளங்க வைக்க நாட்டார் கலை இலக்கிய வடிவங்களைப் பேணும் முயற்சிகள் நடைபெற்றன.

நாட்டார் கலை இலக்கியங்களைப் பேணுதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் அவற்றின் பாதுகாவலர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளுதல் எனும் இருவேறு தளங்களில் போராளிகள் இதனைச் செயற்படுத்த விழைந்தனர். இது குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வெளிச்சம் இதழுக்கு அளித்த வாழ்த்துரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில், நாம் கொள்ளும் பாசமும், நேசமும், தேசியப் பற்றுணர்வாகப் பரிணாமம் பெறுகின்றது. இந்தத் தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும்போது தான் ஒரு தேசம் தனக்கே உரித்தான தனித்துவமான ஆளுமையைப் பெறுகின்றது. இந்தத் தேசிய இனம்தான் ஒரு அரசை அமைத்துக்கொள்ளும் தகுதியைப் பெறுகின்றது."[7]

நாட்டார் கலை இலக்கியங்கள் போர்க்காலச் சூழலில் முதன்மைப்படுத்தப்பட்டமைக்கான நுண் அரசியலை மேற்போந்த கூற்று மிகத்தெளிவாக வெளிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். இதன் அடிப்படையில் நாட்டார் கலை இலக்கியங்களை வளர்த்தெடுப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் நிகழ்த்துதற்குமான நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப்பட்டன. விழாக்கள், கலைஞர் ஒன்றுகூடல்கள், போட்டிகள், கௌரவிப்புக்கள், பேணுகை முயற்சி கள், ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் எனப் பல தளங்களில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1. விழாக்கள்**

நாட்டார் கலை, இலக்கிய வளர்ச்சியை ஊக்குவித்தற் பொருட்டும் கலைஞர்களுக்கான களங்களை உருவாக்கித் தருதற் பொருட்டும் மக்களுக்கு அவை குறித்த ஆர்வத்தை, விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும் கலை விழாக்கள் பல போர்க்காலச் சூழலில் நாடாத்தப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப்பெரிய அளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட முத்தமிழ் விழாக்களும் பிரதேசவாரியாக நாடாத்தப்பட்டு வந்த கலை விழாக்களும் அடங்கும். 1992 மற்றும் 1999 ஆண்டுகளில் முத்தமிழ் விழாக்கள் மிகப்பிரமாண்டமாக ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. செந்நெறிக் கலை, இலக்கியப் படைப்புக்களுடன் நாட்டார் கலை இலக்கியங் களுக்கும் சமதையான முக்கியத்துவமும் வாய்ப்பும் இவ்விழாக்களில் வழங்கப்பட்டிருந்ததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணமுடிகின்றது[8]. கிராமியப் பாடல்கள், கூத்துக்கள், கரகம், காவடி, கும்மி, வேப்பிலை நடனம், வசந்தன் ஆட்டம் என்பன அவ் விழாக்களில் மேடையேற்றப்பட்டன. இவ் விழாக்களின் மற்றோர் அம்சமாக நாட்டார் கலைஞர்களைக் கௌரவிக்கும் முயற்சிகளும் நிகழ்ந்தேறின. சமூகத்தில் இலைமறை காயாக இருந்த கலைஞர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான பரிசில்கள், கௌரவிப்புக்கள், விருதுகள் என்பன வழங்கப்பட்டன. நாட்டார்கலை இலக்கியக் கலைஞர்களுக்கான சமூக அங்கிகாரத்தினை, அடையாளத்தினைப் பெற்றுத்தந்த முக்கியமானதொரு முயற்சியாக இது அமைந்தது. மேலும் நாட்டார் கலை இலக்கியங்களை மேடையேற்றுதற்கான மிகப் பெரியதொரு களமும் உருவாக்கித்தரப்பட்டது. அதற்கான வசதி வாய்ப்புககளும் ஏற்படுத்தி தரப்பட்டன.

**2. போட்டிகள்**

நாட்டார் கலை இலக்கியங்களைப் பேணுதற்கும் வளர்ப்பதற்கும் அவை சம்பந்தமாக அடுத்த இளம் தலைமுறையினர்க்கு விழிப்புணர்வை ஏற்படுத்தற்குமாக போட்டிகளை நடாத்தும் முயற்சிகள் போரக் காலச்சூழலில் நடைபெற்றுள்ளன. இவ்வகையான போட்டிகள் கிராமியக் கலைப் போட்டிகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம்), கூத்துப்போட்டிகள் என இரு பெரும் பிரிவாக நடைபெற்றன. கரும்புலிகள் தினத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கிராமியக் கலை இலக்கிய கூத்துப்போட்டிகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. 1994, 1995ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இப் போட்டிகளில் கிராமியக் கலைஞர்கள் ஆர்வமுடன் பங்கேற்றமை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். போராளிகளின் வரலாறுகள், வீரசாகசங்கள், போர் வெற்றிகள் என்பனவற்றைக் கருப் பொருளாகக் கொண்ட கலை, இலக்கியங்கள் போட்டிக்காகத் தேர்வு செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டன. தரமான கலை இலக்கியங்கள் பரிசில்களும் பாராட்டுக்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

**3. ஒன்றுகூடல்கள்**

நாட்டார் கலை இலக்கியங்களை வளர்த்தற்கும் பேணுதற்கும் எனக் கலைஞர் ஒன்று கூடல்கள் ஒரு சில நிகழ்த்தப்பட்டதை அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் மிகப் பொரும் எடுப்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட மானிடத்தின் ஒன்று கூடல் இந்தவகையில் சுட்டிக்காட்டத்தக்கதொன்றாகும். நவீன கலை இலக்கியக் கலைஞர்கள் எழுத்தாளர்களுடன் நட்டார் கலைஞர்களும் இதில் கலந்து கொண்டமையும், கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். ஒன்று கூடலின் ஓரம்சமாக நடைபெற்ற கலை நிகழ்வுகளில் நாட்டார் கலைகளுக்கும், கூத்துக்களுக்கும் இடந்தரப்பட்டமை சுட்டிக்காட்டத் தக்கது. மட்டக்களப்பு வடமோடிகள், கோவலன் கூத்து என்பன இதில் மேடையேற்றப்பட்டு பாராட்டுதலையும் வரவேற்பினையும் பெற்றன. போர்ச்சூழலில் ஒழுங்குபடுத்தப்பட்ட மேதின ஊர்வலங்கள் நாட்டார் கலை இலக்கியப் பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக அமைந்தமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். காவடி, கரகம், கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், பூத ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் என்பன ஊர்வலங்களை மெருகூட்டியதைக் காணமுடிகின்றது. ஆண்டுதோறும் நடைபெற்ற இவ் ஊர்வலங்களில் நாட்டார் கலைஞர்கள் ஆர்வமுடன் பங்கேற்று வந்தனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. ஆவணப்படுத்தல்**

நாட்டார் கலை இலக்கியங்களை ஆவணப்படுத்திப் பேணும் முயற்சிகள் போர்க்காலச் சூழலில் நிகழ்ந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். நாட்டார் கலை இலக்கியங்களை ஒலி, ஒளிப் பேழைகளில் பதிவு செய்து பேணுதல் அவை குறித்த கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள் என்பவற்றை எழுதுதல் என்ற இரு வேறு தளங்களில் இம் முயற்சி நடைபெற்று வந்ததைக் காணமுடிகின்றது. போராளிகளின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 'புலிகளின் குரல்' வானொலியும் 'நிதர்சனம்' தொலைக்காட்சியும் இவ்வாறான ஆவணப்படுத்தல் முயற்சிகளில் ஆர்வம் காட்டி வந்துள்ளன[9]. புலிகளின் குரல் வானொலியின் 'தாளலயம்' ஒலிபதிவும் ஒலிப்பரப்பும் இவ்வகையில் சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் 'ஆனையை அடக்கிய அரியாத்தை', 'அற்றைத்திங்கள்' முதலான கூத்துக்களும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. 'கொல் ஈனும் கொற்றம்', 'வேழம்படுத்த வீராங்கனை' முதலான கூத்துக்கள் நிதர்சனம் தொலைக் காட்சியினால் ஒளிப்பதிவு செய்யப்பட்டதாக அறிய முடிகிறது. பாரம்பரியக் கலைகள் தொடர்பாக அக்காலத்தில் பல கட்டுரைகளும், ஆய்வுகளும், விமர்சனங்களும், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. குறிப்பாக வெளிச்சம் சஞ்சிகையில் இது குறித்த பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளதைக் காணலாம். அவற்றுள் சில முக்கியமான கட்டுரைகள் வகைமாதிரிக்குக் கீழே காண்பிக்கப்படுகின்றன.

'நாட்டார் கலை இலக்கியத்தில் ஐதீகமும் காரணமும்', அ.நு.வை நாகராசன் (வெளிச்சம்: ஆனி, 1992)

'வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட்டார் பாடலில் கமுகஞ்சண்டை', முல்லைமணி (வெளிச்சம்: ஆடி - ஆவணி, 1992)

'கூத்துக்கலையும் பெண்களின் பங்களிப்பும்', பொன்நிலா (வெளிச்சம்: ஆடி, 1994)

'வன்னிவள நாட்டில் பண்பாட்டுக் கோலங்கள்', க. பார்த்தீபன் (வெளிச்சம்: 1992)

இவற்றை விட சுதந்திரப் பறவைகள், ஈழநாதம் முதலான பிற பத்திரிகைகளிலும் அவ்வப்போது கட்டுரைகளும் விமர்சனங்களும் வெளிவந்ததைக் காணமுடிகின்றது.

## போர்காலச் சூழலில் இயங்கிய கலை இலக்கிய அமைப்புக்கள்

போர்காலச் சூழலில் இயங்கி வந்த கலை இலக்கிய அமைப்புக்கள் பாரம்பரியக் கலைகளை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் ஆவணப்படுத்துவதிலும் உள்ளார்ந்த அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயலாற்றி வந்துள்ளன. பாரம்பரியக் கலைகளை அழியாது பாதுகாத்தல், மீள் புத்துருவாக்கம் செய்தல், அவற்றை நிகழ்த்துவதற்கான வாய்ப்புக்கள், களங்களை உருவாக்குதல், அவை தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தல், கலைஞர்களை ஊக்குவித்தல், கௌரவித்தல் முதலானவற்றைக் கிடைக்ககூடிய வாய்ப்புக்கள் வசதிகளுடன் இந் நிறுவனங்கள் வினைத்திறனாகச் செய்துவந்துள்ளன. குறிப்பாகப் பாரம்பரியக் கலைகளை அழியாது பாதுகாத்தல் என்னும் அவர்களது நோக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்காக

1. கூத்துப்பிரதிகளை, நாட்டார் பாடல்களை அச்சிட்டுப் பேணுதல்
2. பாரம்பரியக் கலைகளை ஒலி, ஒளிப் பேழைகளாக மாற்றுதல்
3. பாரம்பரியக்கலைகளை நவீன தேவைகள், பார்வையாளர்கள், இரசிகர்களுக்கு ஏற்ற வகையில் அவற்றின் பண்பு நலன் கெடாதவாறு மீள் புத்துருவாக்கம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மக்கள் மத்தியில் பாரம்பரியக் கலைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
5. கண்காட்சிகள், விழாக்கள், போட்டிகள் முதலானவற்றை ஒழுங்கு செய்தல்.

என்பவற்றை இவ் அமைப்புக்கள் அக்கறையுடன் முன்னெடுத்தன. 'திருமறைக் கலாமன்றம்', 'குருநகர் நாட்டுக்கூத்து மன்றம்', 'வான்மதி (சென் ஜோஜ்) கலாலயம்', வட்டுக்கோட்டை 'சிந்துபுரம் நாட்டுக்கூத்துக் குழுவினர்', 'பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகம்', யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 'நாட்டார் இலக்கியக் கழகம்' முதலியன சுட்டிக்காட்டத்தக்கவை.

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் பணிகள் இங்கு குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை. மரியசேவியர் அடிகளாரால் தோற்றுவிக்கப்பட்ட திருமறைக்கலாமன்றம் அன்ரனி பாலதாஸ், ஜோன்சன் ராஜ்குமார் முதலான நாட்டுக் கூத்துக் கலைஞர்களின் வழிநடத்துதலின் கீழ் நாட்டுக்கூத்துக்கள் உள்ளிட்ட கிராமியக் கலைகளை வளர்ப்பதில் ஆர்வமும் அக்கறையும் காட்டிவந்தது. குறிப்பாக, வேதாகமப் பொருளை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவக் கூத்துக்களையும், வரலாற்று, இதிகாச கருப்பொருளைக் கொண்ட கூத்துக்களையும் திருமறைக்கலாமன்றம் தயாரித்து மேடையேற்றி வந்தது. கூத்துக்களை மக்கள் மயப்படுத்து வதற்கு ஏற்ற வகையில் மாற்றங்களையும் புதுமெருகூட்டல்களையும் திருமறைக் கலா மன்றத்தினர் செய்தனர். மரபுவழிக் கூத்து ஆட்ட முறையுடன் இசை நாடகப் பாடல், நடிப்பு முறைகளையும் கலந்து அவர்களால் உருவாக்கப்பட்ட படைப்புக்கள் மக்கள் மத்தியில் அதிக வரவேற்பினை பெற்றன. பாரம்பரியக் கூத்துக்களை, கூத்துப் பிரதிகளை பாதுகாக்கும் முயற்சிகளை முன்னெடுத்த அதேவேளை புதிய கூத்துக்களையும் கூத்துப்பிரதிகளையும் தயாரிப்பதில் திருமறைக் கலாமன்றம் ஆர்வம் காட்டி வந்தது. இவற்றை விட அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கூத்துப்போட்டிகள் (1991, 1993, 1998, 2003) கிராமியக் கலைவிழாக்கள் (1993) என்பவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை கிராமியக்கலைகளை வளரத்தெடுத்தல் புதுமெருகூட்டல், கிராமியக் கலைஞர்களைக் கௌரவித்தல், அவற்றை ஆவணப்படுத்தல் அவை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல், கிராமிய கலைகளுக்கான களங்களை ஏற்படுத்தித் தருதல் என்ற பல தளங்களில் திருமறைக்கலாமன்றம் ஆற்றிவரும் சேவைகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை.

போர்க்காலச் சூழலில் நாட்டார் கலை இலக்கியங்களை வளர்த்தெடுப்பதில் குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தினரின் பணிகளும் குறிப்பிடத்தக்கனவாக அமைந்தன. கிறிஸ்தவக் கூத்துக்கள், புராண, இதிகாச, வரலாற்றுச் சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்ட கூத்துக்கள் என்பன அவர்களால் மேடையேற்றப்பட்டன. பாரம்பரியக் கூத்துக்களை மட்டுமன்றிப் புதிதாகக் கூத்துக்களை எழுதியும் தயாரித்தும் இவர்கள் மேடையேற்றி வந்தனர். வான்மதி (சென்ஜோஜ்) கலாலயம் போர்க்காலச் சூழலில் நாட்டுக்கூத்துக்களைத் தயாரிப்பதிலும் மேடையேற்றுவதிலும் ஆர்வம் காட்டி வந்தது. இக் கலாலயத்தின் ஊடாக வி.என். ஜெரால்ட் கூத்துக்கள் பலவற்றைப் பயிற்றி வெளிக்கொணர்ந்தார். பழமையான நொண்டி நாடகப்பிரதிகள் பல அவரது கைவசம் இருந்தன. செங்கையாழியானின் 'களம்பல கண்ட யாழ். கோட்டை' என்னும் நாவலைத் தழுவி அவரால் புதிதாகத் தயாரிக்கப்பட்ட கூத்து மக்கள் மத்தியில் வெற்றிக்களிப்பு, பெருமிதம், இறுமாப்பு என்னும் உணர்வுகளைப் போர்ச்சூழலில் தூண்டுவதாக அமைந்தது.

போர்க்காலச் சூழலில் வட்டுக்கோட்டை சிந்துபுரம் நாட்டுக்கூத்துக் குழுவினரின் பணியும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். அண்ணாவியார் பரநிருபசிங்கம், முருகவேல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகப்பு என்போர் இம்மன்றத்தினூடாக மரபுவழி நாட்டுக்கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றி வந்தனர். வடமோடி ஆட்டமரபுகளை மிகத் தூய்மையாகப் பேணி புதிய மேடைகளுக்கு அமைவாக வெளிப்படுத்தும் பாங்கு குறித்து இக்கலைஞர்கள் சிந்தித்தும் செயற்பட்டும் வந்தனர். நாட்டுக்கூத்து மட்டுமன்றி பொய்க்கால் குதிரை, கரகம், பூத ஆட்டம் என்பனவும் அவர்களால் வளர்க்கப்பட்டன. வன்னிப் பிரதேச நாட்டார் கலைஇலக்கிய முயற்சிகளைப் பாதுகாத்து அளிக்கை செய்யும் நோக்கில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் பல பணிகளை ஆற்றிவந்தது. கல்வி அதிகாரியாகப் பணியாற்றி வந்த மெற்றாஸ்மெயில் இயக்குனராக விளங்கினார். வன்னிப் பிரதேச நாட்டார் கலை இலக்கிய முயற்சிகளைப் பாதுகாத்து அளிக்கை செய்தாலும் இக்கழகத்தின் இயங்குதளம் யாழ்ப்பாணமாகவே இருந்தது. 'வேழம்படுத்த வீராங்கனை', 'கோவலன் கூத்து' என்பன இவர்களால் தயாரிக் கப்பட்டு அளிக்கை செய்யப்பட்ட மிக முக்கியமான கூத்துக்களாகும். பாரம்பரிய மேம் பாட்டுக் கழகம் நாட்டுக் கூத்து, இசைநாடகப் போட்டியையும் நடாத்தியது. முப்பதிற்கும் மேற்பட்ட மன்றங்கள், கழகங்கள் இதில் பங்கேற்று தமது படைப்புக்களை இங்கு மேடையேற்றியதாக அறியக் கிடைக்கின்றது[10].

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாட்டார் இலக்கியக் கழகம் நாட்டார் கலை இலக்கியங் களை நிகழ்த்துவதற்கான களங்களை உருவாக்கித்தருவதில் பெரும்பங்காற்றியிருந்தது. நாட்டார் கூத்துக்கள், பாரம்பரியக் கலைகள் என்பன இக்கழகத்தினூடாக மேடையேற்றப்பட்டன. கலைஞர்கள், அண்ணாவிமார்களை ஒருங்கிணைப்பதனையும் கௌரவிப்பதையும் அவர்களுக்கான சமூக மதிப்பைப் பெற்றுத்தருவதையும் நாட்டார் இலக்கியக் கழகம் தனது துணை நோக்கங்களுள் ஒன்றாக முன்னெடுத்தது. குறிப்பாகக் கலைஞர்களையும் கல்விச் சமூகத்தையும் இணைக்கும் பாலமாக இக்கழகம் செயற்பட்டமை சுட்டிக்காட்டத்தக்க தொன்றாகும். நாட்டார் இசைமாலை, நாட்டுக் கூத்துக்கள் என்பன தயாரிக்கப்பட்டும் இக்கழகத்தினூடாக மேடையேற்றப்பட்டுள்ளன. குருநகர் ஐக்கிய முன்னணி ஒளிவிழாக் காலங்களில் நிகழ்த்தி வந்த நாட்டுக்கூத்துப் பாடல் போட்டிகளும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன.

இங்ஙனம் பெயர் சுட்டிச் சொல்லத்தக்க நிறுவனங்கள் மட்டுமன்றி மாதகல், இளவாலை, கோப்பாய் முதலான இடங்களில் இயங்கிய சிறுசிறு அமைப்புக்களும் நாட்டார் கலை இலக்கிய வடிவங்களைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டன. இவற்றுடன் கிறிஸ்தவ பங்குகள், ஆலயங்கள் என்பவற்றின் பணியும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கனவாக அமைந்தன.

### போர்ச் சூழலில் நாட்டார் கலை இலக்கிய மரபுகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

போர்காலச் சூழலில் நாட்டார் கலை இலக்கிய மரபுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் மெருகூட்டல்களும் நிகழ்ந்துள்ளன. இவை தவிர்க்க முடியாத நியதிகளாக அச்சூழலில் அமைந்ததைக் குறிப்பிட்டாதல் வேண்டும் அவற்றுள் மிக முக்கியமானவை கீழே தரப்படுகின்றன.

1. நாட்டார் இலக்கியங்கள், கூத்துக்கள், பாரம்பரியக் கலைகள் முதலானவற்றில் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் கதைகள், பாடல்கள், கருத்து நிலைகள் என்பன உள்வாங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. புராண, இதிகாச, வரலாற்றுச் சம்பவங்களில் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும், எழுச்சியை உண்டு பண்ணும், வீரத்தினை முதனிலைப்படுத்தும் கதைகள் கூத்துக் களுக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

3. கூத்துக்களை அரங்கேற்றும் நேரம் வரையறுக்கப்பட்டது. ஊரடங்குச் சட்டம், இராணுவ அச்சுறுத்தல்கள், பதட்டம் நிறைந்த வாழ்வியல் என்பன கூத்துக்களை நிகழ்த்துவதற்கான நேரத்தைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றின. குறிப்பாக இரவில் விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்களைப் பகலில் நிகழ்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இரவில் கிடைக்கும் ஓய்வும் அமைதியும் பகலில் கிடைக்கும் என்றில்லை. அதனால் பெரும்பாலும் கூத்துக்கள் மாலை நேரங்களில் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஆடி முடிக்கப்பட்டன.

4. நாட்டுக்கூத்துக்கள் ஆடக் களரிகளுக்குப் பதிலாகப் படச்சட்ட மேடைகளைப் பயன்படுத்தும் போக்கு உருவாகிற்று.

5. மக்களின் விருப்பு வெறுப்புக்களை அனுசரித்து இறுக்கமான கூத்து விதிகள் தவிர்த்துக் கொள்ளப்பட்டன.

6. சடங்கு முறை அடிப்படையிலான கூத்து மற்றும் கலைப் பாரம்பரியங்களை கைவிடும் நிலை உருவாகியது.

7. கலைஞர்களின் புலப்பெயர்வுகள், இடப்பெயர்வுகள் என்பன நாட்டார் கலை இலக்கியங்களைப் பெருமளவு பாதித்தன. இப்பாதிப்பு நன்மையானதும் தீமையானதுமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

8. கலைஞர்கள் தாம் இடம்பெயர்ந்து புலம்பெயர்ந்து சென்ற இடங்கள் தோறும் நாட்டுக்கூத்தினையும் கலைகளைகளையும் வளர்க்க முற்பட்டனர். இதனால் இதுவரை காலமும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் முடங்கிக்கிடந்த நாட்டார் கலை இலக்கிய வடிவங்கள் பரவலடைய வாய்ப்பு உருவாகிற்று. பிற பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் அவற்றைப் பார்க்கவும், ரசிக்கவும், பங்கேற்கவும், வளர்க்கவும் வாய்ப்பு உருவாகிற்று.

9. பழைய கலைஞர்களின் இடப்பெயர்வும் புலப்பெயர்வும் புதிய கலைஞர்கள் அவ்விடத்தை நிரப்ப வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தன. குறிப்பாக ஆர்வமுள்ள, துடிப்பான இளந்தலை முறையினர் நாட்டார் கலை இலக்கியங்களைப் பயிலவும் நிகழ்த்தவும் முன்வந்தனர். ஆனால் அனுபவக் குறைவான புதியவர்களின் வருகை மெட்டுக்களில், உச்சரிப்புக்களில், பாடல் வரிகளில், இராகங்களில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்படுதற்கும் காரணமாகியது.

10. போர்ச்சூழலில் தென்னிந்திய சினிமாக்களுக்கு இருந்த தடை மற்றும் வரையறைகள் நாட்டார் கலை இலக்கியங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வாய்ப்பை ஏற்ப்படுத்தின.

**முடிவுரை**

நாட்டார்கலை இலக்கியங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற கலை இலக்கிய வடிவங்கள் என்ற வகையில் அவற்றின் பங்களிப்பு போர்ச்சூழலில் கணிசமாக இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. தமிழின அடையாளத்தினை ஏற்படுத்துதல், பிரசாரம் என்னும் இரு பெரும் நோக்குகளை அடைதற்கு இவற்றினைத் தனித்தும் பிற கலைவடிவங்களுடன் கலந்தும் பயன்படுத்தும் போக்கு இக்காலப் பகுதியில் காணப்பட்டது. இதன் மூலம் தமிழினப் பற்று, தமிழ்த் தேசியம் பற்றிய புரிதல், ஆயுதப் போராட்டத்தின் நியாயப்பாடு, போராட் டத்திற்கான ஆதரவு என்பவற்றை மக்கள் மத்தியில் போராளிகள் ஏற்படுத்தி வந்துள்ளனர். மக்கள் ஆதரவைப் பெறுதற்கும் தமது கருத்துநிலைகளை அவர்களிடத்தில் கொண்டு செல்வதற்கும் நாட்டார் கலை இலக்கிய வடிவங்களை ஆதரிப்பதும் அவற்றின் ஆதரவாளர் களாகத் தம்மைக் காட்டிக் கொள்வதும் அவர்களுக்குத் தவிர்க்க முடியாததொன்றாக இருந்துள்ளது. நாட்டார் கலை இலக்கியங்களை உயிர்ப்புடனும் உள்ளார்ந்த ஆர்வத் துடனும் வளர்த்து வந்த கலைஞர்களும் இந்நோக்குகளை அடைதற்குத் தம்மாலான பங்களிப்புக்களைப் பல தளங்களில் வழங்கி வந்துள்ளனர். மறுபுறத்தில் எவ்வித பங்களிப்புக்களும், பின்புலங்களும், அரசியல் உள்நோக்கங்களும் இன்றி நாட்டார் கலை இலக்கியங்கள் தமது இயல்பான தளங்களில் இதயபூர்வமாக வளர்க்கப்பட்டு வந்தமையையும் அவதானிக்க முடிகின்றது. கலைஞர்களின் தனிப்பட்ட அல்லது கூட்டு முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட மன்றங்கள், கழகங்கள், அமைப்புக்கள் என்பன ஆத்மார்த்தமாக இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளன. வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் நாட்டார் கலை இலக்கியங்களை வாழவைக்க இவர்கள் எடுத்த முயற்சிகள் குறிப்பிட்டு நோக்கத்தக்கவை. இத்தகைய அர்ப்பணிப்பான கலைஞர்களின் முயற்சிகளே போர்ச்சூழலின் பல்வேறு நெருக்குவாரங்கள், இடையூறுகள், துயர்களுக்கூடாக நாட்டார் கலை இலக்கியங்களை உயிர்ப்புடன் வாழவைத்து இன்று கையளிப்புச் செய்துள்ளன.

## அடிக்குறிப்புகள்

சிவத்தம்பி, கா., யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்துநிலை, குமரன் புத்தக இல்லம், சென்னை, 2000, பக். 9-11

வெளிச்சம், முதலாண்டு நிறைவுச் சிறப்பிதழ், விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம், புரட்டாதி - ஐப்பசி, 1992, பக். 15 – 17

சிதம்பரநாதன், க., சமூகத்தின் அரங்கு, ஆற்றுகை (சிறப்பிதழ்), திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம், 1997 - 1998, பக். 29-30

சண்முகலிங்கம், ம., இலங்கைத் தமிழ் அரங்கு: அது பேசிய பொருள்களும் பேசிய முறைகளும் இனிப் பேச வேண்டியவைகளும், நாடக வழக்கு: அரங்கக் கட்டுரைகளும் நேர்காணல்களும், இணுவில் கலை இலக்கிய வட்டம், 2003, பக் 149 -152

சண்முகதாஸ், அ., மானமறத் தமிழன் மதிப்பீடு, வெளிச்சம், விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம், தை, 1994, ப. 43

மௌனகுரு, சி, கலை இலக்கியக் கட்டுரைகள், பாரிநிலையம், சென்னை, 1997, பக். 18-21

வெளிச்சம், முதலாண்டு நிறைவுச் சிறப்பிதழ், விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம், புரட்டாதி – ஐப்பசி, 1992, பக். 15 – 17

http://www.pathivu.com/?p=7712

http://www.pathivu.com/?p=7712

ஆற்றுகை, திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம், 1997 – 1998, ப. 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும்: கிழக்கிலங்கையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

கலாநிதி வடிவேல் இன்பமோகன்

**அறிமுகம்**

19ஆம் நூற்றாண்டில் நாட்டார் என்ற வழக்கு ஒரு தனிப்பட்ட முழுமையான கருத்தாக்கமாகக் கருதி வரையறுக்கப்படவில்லை. சார்புடைய ஒரு கருத்தாக்கமாகவே வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது மற்றொரு குழுவினருக்கு மாறான அல்லது எதிரான குழுவாகக் கருதியே நாட்டார் வரையறுக்கப்பட்டனர். நாட்டார் சமூகத்தின் மேல்தட்டு வர்க்கத்தினருக்கு அல்லது கற்றோருக்கு எதிரானவர்கள் என்று புரிந்துகொள்ளப்பட்டனர். இன்னொருபுறம் நாகரிகத்திற்கு மாறுபட்டவர்கள் என்றும் வேறுபடுத்தப்பட்டனர். அவர்கள் நாகரிக சமூகத்தில் நாகரிகமற்றோராகக் கொள்ளப்பட்டனர். இது மேலை நாடுகளில் காணப்பட்ட நிலை. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இத்தகைய கருத்தினை உடையவர்கள் காணப்பட்டனர். ஆலம் ஆண்டில் அவர்கள் நாட்டார் யார் என்பதை வரையறுக்கும்போது, “நாட்டார் என்ற சொல் குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு பொதுவான பண்பைக் கொண்ட எந்தவொரு குழுவையும் குறிப்பிடலாம். ஒரு பொதுவான தொழிலாக, மொழியாக, சமயமாக இருக்கலாம். ஆனால் எந்தவொரு காரணத்தையாவது அடிப்படைப் பண்பாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு குழு தனக்குச் சொந்தமானது என்று சொல்லிக் கொள்ளக்கூடிய சில மரபுகளைக் கொண்டிருக்கவேண்டியது முக்கியமாகும். ஒரு குழுவின் உறுப்பினன் ஒருவன் அக்குழுவுக்குரிய மரபுகளின் மூலக்கூறுகளை அறிந்திருப்பான். அதாவது அந்தக் குழுவினருள் அவனும் ஒருவன் என்பதனை அக்குழுவினருக்கு உணர்த்தும் அடையாள மரபுகளை அவன் உணர்ந்திருப்பான்” (லூர்த்து, தே., 1997:17)

நாட்டார் பின்பற்றும் மரபுகள், பொருட்கள் என்பவற்றை நாட்டார் வழக்காறுகள் எனக் குறிப்பிடலாம். இது பாரம்பரியக் கலைகள், இலக்கியங்கள், அறிவு, செயற்பாடுகள், சமயம், நம்பிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக விளங்கும். இவை வாய்மொழித் தொடர்பாடல், மனித செயற்பாடுகள் மூலம் பரப்பப்படுகின்றன. தனித்துவமான அடையாள மாக விளங்கும் இதனை ஒவ்வொரு குழுவும் உணர்வுசார்ந்த அடையாளமாகப் பங்கீடு செய்துகொள்கின்றன. நாட்டார் மரபுகள் அல்லது பொருட்களாக மக்கள் பாரம்பரியமாக நம்பும் (தாவர உற்பத்தி, குடும்ப மரபு, மற்றும் ஏனை உலகப்பார்வைக் கூறுகள்), படைத்துக்கொண்டிருக்கும் (நடனம், இசைப்பாடல், ஆடை நூற்பு), அறிந்திருக்கும் (அணைகட்டல் நுட்பம், நோய்களை குணப்படுத்தும் நுட்பம், உணவு வகைகளை பதப்படுத்தும் நுட்பம்), அவர்களால் உருவாக்கப்படும் (கட்டடம், கலை, கைப்பணி) மற்றும் எடுத்துரைக்கப்படும் (சொந்த அனுபவக் கதை, நொடிகள், தன்னுணர்ச்சிப்பாடல்) போன்றவை உள்ளடக்கப்படும். இவை கடினமானதாகவோ வேகமானதாகவோ இல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்த வாழ்வாகவே நாட்டாரியல் வேலைகளாகவே காணப்படுகின்றன. (http:// www. afsnet. org/?page= WhatIsFolklore).

## நாட்டார் சடங்குகள்

சடங்குகள் நாட்டார் சமூகத்தால் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒன்றாகும். இயற்கைக்கும் மனிதனுக்குமான நெருக்கமான தொடர்பு நாட்டார் சடங்கின் அடிப்படையாகும். தொடக்ககாலத்தில் இயற்கை மனிதனுக்கு புதிராகவே தோற்றமளித்தது. இருள், சூரியன், பாம்பு ஆகிய இயற்கைப் பொருள்கள் மனிதனுக்கு புதிராக இருந்தன. அதே நேரத்தில் அச்சத்தையும் ஊட்டின. ஆயினும் மனிதன் இயற்கையே தனக்கு உணவளிக்கும் என அறிந்து கொண்டான். அச்சமும் உணவுத் தேவையும் கொண்ட மனிதன் இயற்கையின் பேராற்றலை வணங்கத் தலைப்பட்டான். கூட்டு உழைப்பினால் உணவைத் தேட மனிதன் முற்பட்டபோது ஆற்றல் மிகுந்த இயற்கையை தனக்கு இணங்க வைக்க முயன்றான். வேட்டையில் மிருகம் நிறையக் கிடைக்கவும், பின் உணவுக்குரிய பயிர்கள் நிறைய விளைவதற்காகவும் அதற்கான மழை பெய்வதற்காகவும் இயற்கையை அவர்கள் வேண்டினர். இவை மந்திரச் சடங்குகளுடன் தொடர்புடையனவாக அமைந்திருந்தன (பரமசிவன், தொ., 2013: 117). இயற்கை வழிபாட்டின் தோற்றத்தில் கூட்டுச் செயற்பாடு அல்லது கூட்டு உழைப்பு, நம்பிக்கை, வேண்டுதல் என்பன அடிப்படையானவையாக அமைந்திருந்தன.

இவ்வியற்கை வழிபாட்டு முறையே கிழக்கிலங்கையில் இன்று நாட்டார் சடங்குகளாக தொடரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாட்டார் சடங்குகளே மக்களின் வழிபாட்டு முறையின் அடிப்படையான வடிவமாக ஆரம்பகாலத்தில் அமைந்திருந்தது. பிற்பட்ட காலங்களிலேயே ஆகம வழிபாட்டுடன் இணைந்த சமஸ்கிருத வழிபாட்டுப் பாரம்பரியம் உள்வாங்கப்பட்டதன் பின்னர் சடங்கு வழிபாட்டை சிறு தெய்வ வழிபாடு என்று இரண்டாம் நிலைப்படுத்தும் போக்கு சமூகங்களிடையே காணப்பட்டது. இதற்கு பிராமணியப் பண்பாட்டை உயர்ந்ததாகக் கருதும் மக்களின் மனோபாவமே காரணமாக அமைந்திருந்தது. இது தொடர்பாக கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் மட்டக்களப்பில் நிலவிய இந்துசமய வழிபாட்டுமுறையின் இன்றைய நிலை பற்றிய சில புரிதல்களை ஏற்படுத்தும். “மட்டக்களப்பின் வழிபாட்டுப் பாரம்பரியம் எவ்வாறிருப்பினும் இப்பொழுது ஒரு சமஸ்கிருதமயமாக்கம் நிகழ்ந்து கொண்டிருப்பது கண்கூடு... ஆனால் மட்டக்களப்பின் பூசகர் மரபை நோக்கும் பொழுது பிராமணிய மயப்பாடு நடப்பதாகச் சொல்லமுடியவில்லை. பெரும்பாலான இத்தகைய கோயில்களில் பிராமணியத் தொடர்பு அற்றவர்களாகவே பூசகர்கள் உள்ளனர் என்று கூறப்படுகின்றது” (1997:51). கா.சிவத்தம்பி அவர்களின் கருத்தை ஆதாரமாகக் கொண்டு நோக்கும்போது, கிழக்கிலங்கையில் சடங்கு வழிபாடு கிழக்கிலங்கை மக்களினால் நீண்ட காலமாகப் பின்பற்றி வரும் வழிபாடாகவும் பிற்பட்ட காலங்களிலேயே சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட ஆகம வழிபாட்டு முறை கிழக்கிலங்கையின் வழிபாட்டு முறையினுள் உள்வாங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிநிற்கின்றது. இருந்தும் இது இந்தியா மற்றும் யாழ்ப்பாணத்தில் காணப்படுவது போன்று இறுக்கமான வழிபாட்டு மரபாகக் காணப்படவில்லை. இதற்கு காரணம் சடங்கு வழிபாடு கிழக்கிலங்கை சமூகச் செயற்பாட்டில் முக்கியமானதொரு சக்தியாகத் திகழ்வதே யாகும்.

கிழக்கிலங்கையில் நாட்டார் சடங்குகள் இரு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அவை வாழ்வியல் சடங்கு, கோயில் சடங்கு என்பனவாகும். இவ்விரு சடங்குகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்திரிகத்தின் பயன்பாடும், நிகழ்த்தும் பூசாரியின் தேவைப்பாடு, சடங்கை நிகழ்த்தும் சமூகம், சடங்கு தொடர்பான நம்பிக்கைகள் என்பவற்றில் ஒற்றுமை உடையனவாக விளங்கிய போதும் சடங்கை நிகழ்த்தும் நோக்கில் வேறுபாடு உண்டு. வாழ்வியல் சடங்குகள் குறித்த சமூக உறுப்பினர்களின் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு நிகழ்த்தப்படுவவை. இங்கு ஒட்டுமொத்த சமூக உறுப்பினர்களின் இணைவின் அவசியம் வற்புறுத்தப்படுவதில்லை. பிறப்புச் சடங்கு, பூப்பு நீராட்டுச் சடங்கு, மரணச் சடங்கு, விசேட தனிமனிதத் தேவைகளுக்காக மேற்கொள்ளும் சடங்கு என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படும் சடங்குகளிடையே கதவு திறத்தல், கும்பம் மடை வைத்தல், தெய்வமாடல், ஊர்காவல் பண்ணல், தெய்வம் மக்களுக்கு மருந்து கொடுத்தல், தீ மிதிப்பு, விநாயகப்பானை பொங்கல், பலிச்சடங்கு, கன்னிமார் பள்ளையம், வாழிபாடுதல், குளிர்த்தி என்னும் பொதுவான அம்சங்களைக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் கோயிலிலும் மேற்கொள்ளப்படும் சடங்குகளும் அச்சமூகத்திற்கே உரிய தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருக்கும். கல்யாணக் கால் சடங்கு, தவநிலைச் சடங்கு, வதனமார் சடங்கு, நோர்ப்புக் கட்டும் சடங்கு, களுமரம் ஏற்றும் சடங்கு என இச்சடங்குகள் அமைந்திருக்கும். கண்ணகியம்மன் சடங்கில் கல்யாணக்கால் நடும் சடங்கு பிரதானமானது, மாரியம்மன் சடங்கில் தவநிலைச் சடங்கு பிரதானமானது, திரௌபதியம்மன் சடங்கில் மகாபாரதக் கதை நிகழ்த்துகை தனித்துவமானது. வேடர்களினால் நிகழ்த்தப்படும் சடங்கில் தேன் எடுத்தல், குழு மாடு பிடித்தல், வேட்டையாடல் என்பன முக்கியமான சடங்குகளாகும்.

மக்கள் தெய்வமாக/தெய்வத்தின் இயல்புடையவர்களாக அவர்களின் சமூக உறுப்பினர்களை கற்பிதம் செய்து கொள்வதும் அவர்களினால் கூறப்படும் வார்த்தைகளை தெய்வ வாக்காகக் கருதும் அத்தெய்வங்களுக்கு அவர்கள் உண்ணும் உணவுகளைப் படைத்து அவர்களின் குறைகளைத் தீர்த்துத் தருமாறு வேண்டி நிற்பதும் இவ்வழிபாட்டின் தனித்துவமாகும். சமூக உறுப்பினர்கள் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் இவ்வழிபாட்டுடன் இணைக்கப்படுகின்றனர். இவ்வழிபாட்டில் வழிபாட்டை நிகழ்த்துவோர், வழிபடும் பக்தர்கள் என்னும் வேறுபாடு இறுக்கமான முறையில் பேணப்படுவதில்லை. இவ்வேறுபாடு பேணப்படுமாயின் சடங்கு வழிபாட்டில் வழிபாட்டை நிகழ்த்தும் சமூகத்தின் இறுக்கம் குறைந்துவிட்டது என்பதன் அடையாளமாக அதனைக் கொள்ளவேண்டும்.

இவ்வழிபாட்டில் பூசாரியின் இடம் தனித்துவமானது. இவர் சடங்கு வழிபாட்டை முன்நின்று நடத்துபவராக அமைவதுடன் குறித்த சமூகத்தில் அனுபவமும் வயதும் முதிர்ந்த முக்கிய உறுப்பினராகவும் விளங்குவார். இதனால் சமூகச் செயற்பாட்டிலும் அவரின் வகிபாகம் பிரதானமானது.

நாட்டார் வழிபாட்டில் வழிபடப்படும் தெய்வங்களின் இயல்பும் ஆற்றலும் தனித்துவமானதாக விளங்கும். ஆரம்பகாலத்தில் தெய்வங்களை ஒரு ஆற்றலாகவே கருதினர். அவை கை, காலுடன் கூடிய உருவங்களாகவே, மனிதனைப் போன்ற தோற்றமுடையனவாக காணப்படவில்லை. பிற்காலத்தில் தனிமனித சிந்தனை வளர்ந்த போதுதான் குறிகளும், குணங்களும், குலங்களும் கொண்ட கடவுளர் அந்தந்தச் சமூகத்தின் தேவைக்கேற்ப தோற்றம்பெற்றன (பரமசிவன், தொ., 2013, ப: 118). ஒரு குறிப்பிட்ட இனக்குழு என்ன வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்திருந்ததோ அதைப்பொறுத்து அத்தெய்வத்தின் வடிவங்களும் குணங்களும் அத்தெய்வத்தைப் பற்றிய கதைகளும் அமைந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய உற்பத்தியுடன் தொடர்புடையவர் மாரியம்மனைப் பிரதானப்படுத்த, கால் நடை உற்பத்தியுடன் தொடர்புடையவர்கள் வதனமாரைப் பிரதானப்படுத்துவதைக் காணலாம். மீனவ சமூகத்தினரிடம் கடலாச்சியம்மன் பிரதானப்படுத்தப்படுகிறது. சடங்கு வழிபாடு மட்டக்களப்பில் நிலவும் எல்லாச் சாதியினரிடமும் நிலவுகின்றது. சாதியடிப்படையிலும் சில தெய்வங்கள் வழிபடப்படுவதுடன் சில தெய்வங்கள் பொதுவாகவும் வழிபடப்படும். பெரியதம்பிரன், குமாரர், கருமாரியம்மன் என்பன முறையே சலவைத் தொழிலாளர், வேடர், சங்கிலிய சமூகங்களினால் வழிபடப்படுகின்றன.

சாதித்தெய்வக் கல்வெட்டு மட்டக்களப்பில் வழிபடப்படும் தெய்வங்களைச் சாதி அடிப்படையில் பகுத்து நோக்குகின்றது.

*"உழவருக்குச் சிவனாமுடுக்கு மாரியம்மன்*
*நளவருக்கு வயிரவனாம் நாடார்க்குக் கண்ணகையாம்*
*தொழுவருக்குப் பிதுராம் தொண்டருக்கு வேலவனாம்*
*மழுவருக்கு வீரபத்திரன் மறையோர்க்கு நான்முகனே*
*வேந்தருக்கு மாலாம் வேடருக்குக் கன்னிகளாம்*
*ஏந்துபணி செய்வோர்க்குக் காளி யாம் - நேந்துவைக்கின்*
*முட்டன் முடுவன் முனிவரெவரார் வரினும்*
*பட்டமது கட்டிவைத்தான் பாண்டிமன்னன் நிச்சயித்தான்"*

(நடராசா, F.X.C (பதி)., 1998: 97.) மட்டக்களப்பு மான்மியம் இவ்வாறு வரையறுத்தாலும் இங்கு குறிப்பிடும் சிவன், வேலன், நான்முகன் என்னும் தெய்வங்கள் கிழக்கிலங்கையில் சகல சமூகத்தினராலும் இன்று ஆகம முறைப்படி வழிபடப்படுகின்றன. உழவர்கள் கண்ணகியம்மனையும் மாரியம்மனையும் வழிபடுகின்றனர். நளவர் நரசிங்க வைரவரையும், மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் கடலாச்சியம்மனையும், வண்ணார் பெரியதம்பிரான், பரமநயினார் ஆகிய இரு தெய்வங்களையும், வேடர் குமாரர், பெரியசாமி ஆகிய இரு தெய்வங்களையும், பொற்கொல்லர் காளியையும், சங்கிலியர் கருமாரியம்மனையும், பறையர் சுடலை வைரவனையும் வழிபடுகின்றனர். இருந்தும் இன்று வண்ணார், வேடர் களினால் வழிபடப்படும் தெய்வங்களைத் தவிர்ந்த ஏனைய தெய்வங்கள் யாவும் கிழக்கிலங்கையில் சகல சமூகங்களினாலும் பரவலாக வழிபடப்படுகின்றன (இன்பமோகன், வ., 2012:37 - 38). இத்தெய்வங்களுக்கான பூசாரியும் அச்சமூகத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினராகவே விளங்குவர்.

அநேகமான நாட்டார் தெய்வங்கள் கைகளிலே ஆயுதங்களுடன் காணப்படுகின்றன. இது காத்தலின் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது. பயிரைக் காத்தல், நீரைக் காத்தல், விளைந்த பயிரைப் பகைவரிடம் இருந்து காத்தல், அறுவடை செய்த தானியங்களைக் காத்தல், ஊர் எல்லையில் நின்று எதிரிகளிடம் இருந்து ஊரைக் காத்தல் என்பன அவற்றின் பணியாக அமைந்திருந்தன. கிராம மக்கள் தெய்வங்கள் தம்மையும் தமக்குரிய பொருட்களையும் பாதுகாப்பதாலேயே அவர்களின் இயற்கையோடு ஒன்றிய வாழ்வு நல்ல முறையில் இடம்பெறுகின்றது என நம்பினர்.

கிராமிய வழிபாட்டில் ஆண் தெய்வங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது பெண் தெய்வங்களே அதிகளவில் வழிபடப்பட்டன. பெண் தெய்வங்களை உற்பத்தி, வளம் என்பவற்றின் அடையாளமாகக் கொண்டதுடன், பெண் தெய்வங்களை வழிபடுவதனால் அவர்களின் தேவைகளை இலகுவாகத் தீர்த்துக்கொள்ள முடியும் என நம்பினர். சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் "மிகப் பழங்காலத்திலிருந்து மக்களினப் பெருக்கம், அதற்குத் தேவையான உணவு, உற்பத்திப் பெருக்கம், உணவு உற்பத்திக்குத் தேவையான கால்நடைப் பெருக்கம், மழை இவையே மனித குல வரலாற்றில் சமுதாயத்தின் இலட்சியமும் தேவையுமாய் இருந்திருக்கின்றன. உயிர்களைப் பெருக்கும் ஆற்றல் பெண்களுக்கு உரிய பண்பாகும். எனவே பெண் தெய்வங்கள் எல்லாம் சமூகத்தின் இத்தகைய தேவைகளை நிறைவு செய்யப் பிறந்தவையே. நோய்க் காலத்தில் குழந்தைகளை அக்கறையுடன் தாய் பேணிக் காக்கின்றாள். பெண்தெய்வங்களும் நோயிலிருந்து மக்களை காக்கின்றன" (பரமசிவன், தொ., 2013: 119). உடல் வளம், மன வளம், மகப் பேற்று வளம் என்பவற்றை நோக்காகக் கொண்டே பெண் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன.

சமயச் சடங்குகள் ஒட்டுமொத்த சமூக உறுப்பினர்களின் இணைவில் முழுச் சமூகத்தின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக நிகழ்தப்படுவது. ஆண்டுக்கொரு தடவை மேற்கொள்ளப்படுவதாக அமைகின்றன. இதில் இரு விதமான சடங்குகளை இணங்காணலாம். ஒன்று பூர்வ குடிகளினால் மேற்கொள்ளப்படும் சடங்குகள், குறிப்பாக மட்டக்களப்பில் வாழும் வேடர், குறவர்களின் சடங்குகள். அடுத்தது மட்டக்களப்பில் வாழும் ஏனைய சமூகங்களினால் மேற்கொள்ளப்படும் சடங்குகள். இவற்றுக்கிடையே அடிப்படையான வேறுபாடு உள்ளது.

**நம்பிக்கைகள்**

சடங்கு வழிபாட்டு சமூக உறுப்பினர்களைச் சடங்கு வழிபாட்டிற்காக இணைப்பதிலும் மக்களின் உளத்தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. சடங்கு வழிபாடு மட்டக்களப்பு சமூகத்தில் நிலை கொண்டிருப்பதற்கு அது தொடர்பான நம்பிக்கைகளே அடிப்படைக் காரணமாகும். சடங்கு வழிபாட்டிற்காகச் சமூகத்தை இணைப்பதில் இந்நம்பிக்கைகள் முக்கிய இடம்பெறுகின்றன. "சமய வாழ்வு குறித்த நவீன் சமூகவியலின் அடிப்படைகளை இட்டவர்களில் ஒருவராகிய எமில் தர்கைம், புனித சக்தியான இறைமையை வழிபடுவதற்கான சடங்கார்ந்த நிகழ்வுகள் மூலமாகவே தனிமனிதர்கள் தங்கள் தனிமனிதத்துவத்தைத் தாண்டி சமூகமாக ஒன்றுபடுகின்றனர் என்று கூறுகின்றார். தனிமனிதத்துவம் கடந்தநிலையில் சாத்தியப்படும் இக்கூட்டு ஆளுமை ஒருவகையில் தனிமனித ஓர்மை கடந்த ஒன்று என்றும், மறுபுறம் ஒவ்வொரு தனிமனி தருள்ளும் புதைந்திருப்பதாகும். எனவே சடங்கார்ந்த நிகழ்வுகளில் உயிர்பெறும் குறியீடுகள் ஒரு கூட்டு யதார்த்தத்தை வெளிப்படுத்தும் கூட்டுக் குறியீடுகளாகும். சடங்குச் செயற்பாடுகளினூடாக சமூக உடன்பாடானது மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படுகின்றது. அதன் மூலம் புதுப்பிக்கப்படுகின்றது. இந்நிகழ்வு முறையே சமூகத்தின் கூட்டு அடையாளத்தை சாத்தியமாக்குகிறது. அதாவது இது தனிமனிதர்களுக்கிடையிலான சமூக இடைவிலகலின் விளைவாய்த் தோன்றும் உடன்பாடல்ல. மாறாக இங்கு தனிமனித ஆளுமையானது ஆதியிலிருந்தே கூட்டு அடையாளம் அல்லது ஆளுமையின் பிரதிபலிப் பாகும் (சுந்தர், காளி., 2005: 17). இக் கூட்டொருமைப்பாடு சடங்கை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டாலும் அச்சமூக இயக்கத்தின் பலமான சக்தியாக அமைந்து விடுகின்றது. இக்கூட்டுணர்வு ஆரம்பத்தில் உணவுத் தேவைக்காகவும் இயற்கையிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் இத்தேவை இல்லாதிருந்த போதும் இக்கூட்டுணர்வு தொடர்ந்தது (பரமசிவன், தொ., 2013: 122).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கிற்காகச் சேர்வதும் சமூகத்துடன் இணைந்திருப்பதை ஒவ்வொரு தனிமனிதனும் அவனுடைய சமூக அடையாளமாக கருதுவது இக்கூட்டுணர்வு தொடரப்படுவதற்கான காரணமாகக் குறிப்பிடலாம்.

சடங்குகள் நிச்சயமற்றதாகவும், தெளிவற்றதாகவும், முன்னுக்குப் பின் முரணானதாகவும் விளங்கினாலும் மீண்டும் மீண்டும் ஒரு விடயத்தை செய்வதன் மூலம் ஒரு விடயத்தை ஆழமாகப் பதியவைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இங்கு குறிப்பிடத்தக்க சக்திவாய்ந்த குறியீடுகளின் பாவனையும் உணர்ச்சிபூர்வமான செயற்பாடுகளும் இணைகின்றன (Bell, Catherine, 1992:186). உதாரணமாக மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நரசிங்க வைரவர் கோயில் சடங்கில் மூன்றாம் நாள் இடம்பெறும் சடங்காக கொடிமரம் நிறுத்தும் சடங்கு அமைகிறது. சடங்கு வழிபாட்டின்போது தெய்வாதிகள் ஆடிக்கொண்டிருக்கும்போது தெய்வங்களைக் கட்டுவதும், கட்டுண்ட கட்டை அவிழ்த்தலும் (வெட்டுதல்) முக்கியமானதும் சடங்குக்கு விறுவிறுப்பை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வுமாக அமைகின்றது. இது மந்திரவாதிகளின் மந்திர வத்தான்மையைப் பரீட்சிக்கும் களமாகவும் அமைகின்றது. நரசிங்கர் வைரவர் கோயில் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது வெளியில் இருந்து வந்த மந்திரவாதிகள் ஆடிக்கொண்டிருந்த தெய்வங்கள் அனைத்தையும் கட்டி, தெய்வங்களை ஆடவிடாது தடுத்து சடங்கு நிகழ்வுகளைக் குழப்ப முற்பட்ட சம்பவம் ஒன்று பல சகாப்தங்களுக்கு முன்பு ஒரு நாள் இடம்பெற்றது. நரசிங்க வைரவர் கோயில் பூசாரிமார் அக்கட்டை அவிழ்த்து தெய்வங்களைத் தொடர்ந்து ஆடச்செய்து சடங்கு நிகழ்வுகளை முன்னெடுத்ததுடன் அன்றைய தினம் தாங்கள் கட்டவிழ்த்து வெற்றி பெற்றதன் அடையாளமாக ஒரு கம்பத்தை நிறுத்தி அதில் வைரவரின் வாகனமான நாய்க் கொடியையும் தொங்கவிட்டனர். இந்நிகழ்வு பிற்காலத்தில் கொடி மரம் நிறுத்தும் சடங்கு என இடம்பெறுகிறது. இந் நிலையில் கொடிமரம் நிறுத்தும் சடங்கு அவர்கள் எதிரிகளை வெற்றி பெற்றதன் குறியீடாக ஒரு உணர்வு சார்ந்த வரலாற்றுச் சான்றாகவும் விளங்குகின்றது. இச்சடங்கில் ஈடுபடுவோருக்கு நெற்றியில் சந்தனம் சார்த்தப்படுகிறது. இது வீரத்தின் வெற்றியின் அடையாளம் என்று சடங்கு சமூகம் கருதுகிறது (கௌரிஸ்வரன், து., மட்டக்களப்பு).

சடங்கில் மக்களை இணைவதற்கு முக்கியமான காரணிகளில் ஒன்றாக அமைவது சடங்கு காலச் செயற்பாடுகளில் ஒன்றாக அமையும் நோய்நீக்கச் செயற்பாடாகும். சடங்கு காலத்தில் வழங்கப்படும் சிகிச்சைகள் மக்களின் உடல், உள நோய்களில் இருந்து மீட்புப் பெற்று ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு அவசியமானதாக அமைகின்றன. பூசாரியும் தெய்வாதிகளும் நோயாளிகளுடன் உறவாடி அவர்களின் நோய்நீக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர். இச் செயற்பாடு சடங்கு காலத்தில் தொடர்ச்சியாக நடைபெறும். சடங்கில் புனிதப் பொருளாகப் பயன்படுத்தப்படும் நீர், வேப்பம் பத்திரம், வாழைப்பழம், பொங்கல் என்பவற்றை உண்ணக் கொடுத்தல், மஞ்சளை நோயாளரின் நோயுற்ற பாகத்தில் பூசுதல், மஞ்சள் நீராடல், புனித நீராடல், தீ மிதித்தல் என்னும் நோய் நீக்கச் செயற்பாடுகள் நடைபெறும். சடங்கு காலத்தில் வழங்கப்படும் இச்சிகிச்சைகள் அவர்களைப் பீடித்துள்ள நோய்களை குணப்படுத்தும் என்னும் நம்பிக்கையுடன் இணைந்த உளச் சமநிலையை ஏற்படுத்தி நோய்களில் இருந்து விடுவிப்புப் பெறுவதற்குரிய அடிப்படைகளை ஏற்படுத்தி விடுகின்றது. இவ்வாறானதொரு உளச் சமநிலையாக்கச் செயற்பாட்டையே “கதாசிஸ்” என அரிஸ்ரோட்டில் குறிப்பிடுகின்றார். அரிஸ்ரோட்டில் அவரால் எழுதப்பட்ட Politics என்னும் நூலில் “புனித இசையைக் கேட்பதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய சிகிச்சை மூலம் குணப்படுத்தப்பட்டவர்கள் போன்று அல்லது தூய்மையாக்கப் பட்டவர்கள் போன்று சாதாரண நிலைக்குத் திரும்புவார்கள்" (Aristotle., 1991 Edition, The Politics) என இதனைக் குறிப்பிடுகின்றார். இவ் உளச்சமநிலையைப் பெறுவதில் சடங்கு காலத்தில் நடைபெறும் கட்டுக்கூறுதல் என்னும் செயற்பாடு அடிப்படையாக அமைகின்றது. நோயாளியிடம் நோய்க்கான காரணத்தைக் கேட்டு அதில் இருந்து விடுபடுவதற்கான மார்க்கத்தை தெய்வாதி மற்று பூசாரி எடுத்துரைத்தல் இங்கு இடம்பெறும்.

உள நெருக்கடிக்கு உள்ளான மக்கள் வாழ்கையில் நம்பிக்கை இழந்து சோர்வுற்றுப் போகாமல் அவர்கள் வாழ்வை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான உளச்சமநிலையைச் சடங்குகள் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன. உளநெருக்கடிகளில் இருந்து மக்களை மீட்டு மக்களை இயல்பு வாழ்க்கைக்கு வழிப்படுத்திய இச் செயற்பாடு யுத்த காலத்தில் கூடுதலாக இடம்பெற்றது. கணவன், மனைவி, பிள்ளைகள், உறவினரின் இழப்பு மற்றும் காணாமல் போதல், சொத்துக்களின் இழப்பு என்பன ஏற்பட்ட போதெல்லாம் சடங்குக் கோயில்கள் மக்களுக்கு ஆறுதல் அளித்தன. தெய்வாதிகள் மாறும் பூசாரி கூறும் வாக்குகள் மக்கள் மனச்சுமைகளில் இருந்து மீட்புப்பெறுவதில் பெரும் பங்காறறு கின்றன. சடங்கில் மக்கள் வைத்த இந்நம்பிக்கை சடங்கிற்காக மக்களை இணைக்கும் முக்கியமான காரணியாகக் கொள்ளப்படத்தக்கது. சடங்கில் மக்கள் அடையாளங்காணும் மக்களின் புத்திபூர்வமான செயற்பாட்டுக்கு அப்பாற்பட உண்மையாக விளங்கும் மாந்திரிக சக்தியில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் பங்கு இங்கு குறிப்பிடவேண்டியதாகும். மாந்திரிக சக்தியையும் சடங்கையும் பிரித்தறிய முடியாது.

சடங்கு முக்கியமானதொரு சமூக விழாவாக அமைகின்றது. இதில் குறித்த சமூகம் உறுப்பினர்கள் யாவரும் முழு ஈடுபாட்டுடன் ஈடுபடுவர். இங்கு சமூகத்தின் கட்டுக்கோப்பைப் பேணுவதற்குரியதொரு சாதனமாக சடங்கு விளங்குகின்றது. சடங்கில் குறித்த சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படும். சமூக உறுப்பினர்கள் சடங்குடன் அவர்களை இணைத்துக் கொள்ள வேண்டுமானால் அச்சமூகம் வற்புறுத்தும் வாழ்வியல் நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு இல்லாதபோது அவரால் சடங்கில் இணைந்து செயற்பட முடியாது. அச்சமூகத்தில் இருந்து அன்னியப்பட்டவராகவே கொள்ளப் படுகின்றார். இந்நிலையில் சமூகக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும் வாழ்க்கை நியமங்களை சரியாகப் பின்பற்றுவதற்கும் சடங்கு முக்கியமானதொரு சக்தியாகச் செயற் படுகின்றது.

மக்கள் மனதில் ஆழப்பதிந்திருக்கும் விடயங்களை நம்பிக்கைகளை மீள் உறுதிப் படுத்திக் கொள்வதற்கும் பாதுகாப்பதற்கான முக்கியமானதொரு இடமாக சடங்குகள் அமைந்துள்ளன.

சடங்கு மக்களுக்கு பல விடயங்களையும் கற்றுக் கொடுக்கும் ஒரு மத்தியஸ்தான மாகவும் செயற்படுகின்றது. சடங்குடன் இணைந்ததாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. சடங்கு காலத்தில் மூத்த உறுப்பினர்கள் இளைய தலைமுறை யினருக்குப் பல்வேறு வாழ்வியல் விடயங்களைக் கற்றுக் கொடுக்கின்றனர். இங்கு நடைபெறும் கற்றல் செயற்பாடானது அச்சமூக செயற்பாட்டிற்கு மிகவும் அவசியமானதாக உணரப்படுகின்றது. வேடர்களினால் நிகழ்த்தப்படும் குமாரத் தெய்வச் சடங்கில் வேடர் களுக்கு அவர்கள் தேன் எடுக்கும் நுட்பம், வேட்டைக்கான விலங்கைக் குறிவைத்துத் தாக்கும் நுட்பம், குழு மாடு விடுக்கும் நுட்பம் என்பன சடங்கு செயற்பாட்டின்போது கற்றுக்கொடுக்கப்படுகின்றது. வாகரை மற்றும் வெல்லாவெளி மாரியம்மன் கோயிலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்ததாக நடத்தப்படும் வதனமார் சடங்கு குழுமாடு பிடிக்கும் நுட்பங்களையும் குழுமாடு பிடிக்கச் செல்வோர் எதிர்கொள்ளும் சவால்களையும் குறிப்பிடுகிறது. இவை சடங்கு நிகழ்த்துகை மூலம் மேற்கொள்ளப்படும் கற்றல் செயற்பாடாக அமையகின்றது. இன்னொரு நிலையில் சடங்கிற்காகச் சமூக உறுப்பினர்கள் கோயில் சூழலில் கூடியிருக்கும் நாட்களில் சமூக உறுப்பினர்களிடையே இடம்பெறும் உடையாடல்களின் மூலம் பல வாழ்வியல் விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றது. முத்த உறுப்பினர்கள் அவர்களின் சமூக உறுப்பினர்களுக்கு அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்தல் சடங்கு காலத்தில் நடைபெறும் முக்கியமான கற்றல் செயற்பாடாகும். இங்கு தொழில் நுணுக் கங்கள், வைத்தியம், குடும்ப வாழ்வு, தனிமனித ஒழுக்கம், சமூக நியதி, அரசியல், கலைச் செயற்பாடு போன்ற பல விடயங்கள் கற்றுக்கொடுக்கப்படும். சமூக உறுப்பினர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பல புதிய விடயங்களைச் சடங்கு காலத்தில் கற்றுக் கொடுக்கின்றன.

சடங்கு அரசியல் நம்பிக்கைகளுக்கு ஊக்கம் கொடுக்கும் கருவியாகவும் விளங்கு கின்றது. சடங்கின் செயற்பாடுகள் உருவாக்கும் நம்பிக்கை காரணமாக ஒருவரை அக் குழுவுடன் தொடர்புபடுத்தி நோக்குவதற்குக் காரணமாக அமைகின்றது. வெளிப்படையாக அடையாளப்படுத்தும் தன்மை அவர் குழுவுடன் இருக்கும் தனித்துவமான தொடர்பைக் காட்டும். சடங்கு ஒத்த குழுக்களுக்கிடையே ஒத்திசைவை ஏற்படுத்தும் கருவியாக இருந்தபோதும் அவ்வொத்திசைவு பொதுவான நம்பிக்கையை உருவாக்குவதிலும் வெளிப்படுத்துவதிலும் சடங்கின் செயற்பாடு அடிப்படையான காரணியாக அமைகின்றது (Bell, Catherine, 1992: 187). மக்கள் தனிமனிதனின் மீது வைக்கும் நம்பிக்கை, நல்லவிப்பிராயம் வளர்ந்து மக்களின் விருப்பத்துக்குரியவராக ஆக்கிவிடுகின்றது. மக்களின் ஆதரவு சக்தி மிக்கதொரு தலைவனாக்கிவிடுகிறது. இச்சக்தி அரசியல் அதிகாரமாகப் பரிணமிக்கின்றது.

## முடிவுரை

சமகாலத்தில் ஆகம வழிபாட்டின் தாக்கத்தினால் சடங்குக் கோயில்கள் ஆகம வழிபாட்டுக் கோயில்களாக மாற்றமடைவது, மிருக பலி கொடுத்தல் தடைசெய்யப்படுவது, சடங்கு வழிபாட்டுடன் திருவிழா முறை உள்வாங்கப்படுவது, தெய்வமாடுவோரின் எண்ணிக்கை குறைந்து வருவது என்னும் காரணங்களினால் சடங்கு வழிபாடு சில இடங்களில் அதன் உயிர்ப்பை இழந்தாலும் அனேகமான இடங்களில் சடங்கு வழிபாடு உயிர்த்துடிப்புடன் மேற்கொள்ளப்படுவதையும் சமூகத்தின் முக்கியமானதொரு இயங்கு சக்தியாக செயற்படு வதையும் காணலாம். இதற்கு அடிப்படையான காரணமாக அமைவது சடங்கு வழிபாட்டில் மட்டக்களப்பு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையும் அந்நம்பிக்கைகள் சடங்குவழிபாட்டின் மூலம் உறுதிப்படுத்தப்படுவதுமாகும். சடங்கு சொர்க்கம் நரகம் பற்றிப் பேசாமல் இவ்வுலக வாழ்வு பற்றிப் பேசுவதால் அது சமூகத்தின் ஒரு இயங்கு சக்தியாகத் தொடர்ந்து வாழ்ந்துகொண்டே இருக்கும்.

## Reference

Aristotle., 1991 Edition, The Politics, (Trans). Benjamin Jowett, Electronically Enhanced Text, Copyright World Library,

Bell, Catherine, 1992, Ritual Theory Ritual Practice, Oxford University Press, New York,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமோகன், வ., 2012, கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

சிவத்தம்பி, கா., 1997, "விடைகோரும் வினாக்கள் : மட்டக்களப்பை புரிந்து கொள்ளும் முயற்சியின் பொழுது ஏற்படும் சிந்தனைகள் சில பற்றிய ஓர் அறிமுகக் குறிப்பு", கொம்பு, பிரதேச கலாசாரப் பேரவை, மன்முனை தென்மேற்கு, பட்டிப்பளை.

சுந்தர், காளி.,2005, திருமுகமும் சுயமுகமும் : பண்பாட்டாய்வுக் கட்டுரைகள், காரோன் - நீரோன் பதிப்பகம், சொக்கிக் குளம், மதுரை.

நடராசா, F.X.C(பதி)., 1998, மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை, மட்டக்களப்பு.

பரமசிவன், தொ., 2013, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ்(பி) லிட், நாகர் கோயில், சென்னை.

லூர்த்து, தே., 1997, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

What is Folklore? http://www.afsnet.org/?page=WhatIsFolklore

**நேர்காணல்**

கௌரிஸ்வரன், து., ஆசிரியர், வயது 36, பட்டப்படிப்பு, மட்டக்களப்பு, 27.09.2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழரின் நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும்

கலாநிதி எஸ்.ஆர். தேவர்

நாட்டுப்புற நிகழ்த்துகைக் கலைகளில் சடங்கு முக்கியம் பெறுகின்றது. சடங்குகள் மூவகைக்குள் அடக்கப்படுகின்றன. அவை சமயச் சார்புடையனவாகவும் வாழ்க்கை வட்டச் சடங்குகளாகவும் அமைந்துள்ளன.

மொழியைப் போலவே சடங்குகளும் பண்பாட்டைப்பற்றி அறிய உதவுகின்றன. சடங்கு என்ற சொல்லுக்கு இயல்பூக்கத்தால் எழாததும் முன்கூட்டி உரைக்கத்தக்கதும் அறிவார்ந்த தொடர்பற்றதுமான ஒரு செயல் அல்லது செயலின் வரிசை என அகில உலக சமூக விஞ்ஞானக் கலைக்களஞ்சியம் பொருள் கூறுகின்றது. மேலும் சடங்கு என்பது எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படுவதென்றும் அது நிலைபெற்ற அல்லது மரபு வழியான விதிகளின் அடிப்படையில் கடைப்பிடிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட வகையான நடத்தை என்றும் பிரித்தானிய புதுக்கலைக்களஞ்சியம் கூறுகிறது.

ஆரம்ப காலங்களில் ஒரு நோக்கத்தோடும் புரிதலோடும் ஆரம்பிக்கப்பட்ட சமய மற்றும் வாழ்வியல் சடங்குகள் காலப்போக்கில் ஏற்பட்ட எண்ணற்ற மாற்றங்களோடு சடங்குகளின் நோக்கும் போக்கும் பெருமளவு மாறியுள்ளது. இன்றைய நிலையில் தென்கிழக்காசிய மக்களது வறுமைக்குச் சடங்குகளும் ஒரு காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

சடங்குகள் மனிதனின் தேவையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டவை. மனிதனாகப் பாரத்து உருவாக்கியவை. அவை அவனது வாழ்வை மேலும் வளப்படுத்தவும் அர்த்தப்படுத்தவும் தொடக்காலத்தில் உருவாகின. ஆனால் காலம் கடந்து செல்லச் செல்லச் சடங்குகள் அவற்றின் உண்மையான நோக்கத்திலிருந்து விலகி, கௌரவத் திற்காகவும் போட்டிக்காகவும் பொருளாதார வளத்தைக் காட்டவும் நடத்தப்படுகின்றன. மனிதனுக்கு விடுதலை கொடுக்க வேண்டிய சடங்குகள் கட்டிப் போடுகின்ற சங்கிலிகளாக மாறுகின்ற அவலத்தை அன்றாடம் காண்கின்றோம்.

சடங்குகள் பற்றி ராய ராப்பா போர்ட் என்பவர் கூறும்போது,

> "ஒரு சமூகத்தில் வாழும் தனிமனிதர் அல்லது தனி மனிதர்களான ஒரு குழுவில் உடலியல், உளவியல் மற்றும் சமூகவியல் சம்மந்தப்பட்ட நடைமுறை விடயங்களை வெளிப்படுத்துகின்ற அல்லது பரிமாறிக் கொள்கின்ற ஓர் ஊடகமே"

என்கின்றார்.

மலையகத் தமிழரிடையே காணப்படும் சடங்குகளை சமயச் சடங்குகள், வாழ்க்கை வட்டச் சடங்குகள், தொழில்சார் சடங்குகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். மலையகத்தைப் பொறுத்த வரையில் சமயச் சடங்குகளாகக் காப்புக் கட்டுதல், கம்பம் நடுதல் (இராமர் கம்பம், காமன் கம்பம்) முளைப்பாரிச் சடங்கு, கரகம் எடுத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனுக்குக் கண் வைத்தல், எலுமிச்சப் பழத்தினைப் பலியிடுதல், (புது வாகனங்களை வீதியில் ஓடவிடும்போது) முச்சந்தியில் விநாயகரை வைத்தல், மாவிளக்கேற்றல், துள்ளுமா இடித்தல், கண்ணூறு கழித்தல், கோலமிடல், பேயோட்டல், தேர் ஊர்வலத்தின் போது உப்பு வீசுதல், தேர்ச் சில்லுக்கு மஞ்சள் நீரூற்றல் என்பனவும் இடம்பெறும்.

மலையக மக்களின் சடங்குகள் பெரிதும் சமூகத் தொடர்பு சாதனமாகவும் அமைகின்றன. அத்துடன் அவை புனிதம், புனிதமின்மை என்ற இருவகைக்குள்ளும் அடங்கியுள்ளன. அத்தோடு சடங்குகள் இம் மக்களின் குடும்பத் தேவைகளையும், சமூகத் தேவைகளையும் நிவர்த்தி செய்வனவாக அமைந்துள்ளன.

உலகப் பண்பாடுகளிடையே சிறப்பித்துப் பேசத்தக்க இந்தியப் பண்பாடானது தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. அத்தகைய சிறப்புமிக்க பண்பாட்டைக் கொண்டவர்களாக மலையக மக்கள் விளங்குகின்றனர். இம் மக்களின் தொழிற்துறை சார்ந்த வழிபாட்டுச் சடங்குகள் பெரும்பாலும் தென்னிந்திய பூர்வீக வழிபாட்டு மரபுகளைத் தழுவி அமைந்துள்ளன. அத்தோடு இவை காரணமாக காரண காரிய நோக்கம் கருதியும் மேற்கொள்ளப் படுகின்றன. மேலும் இச் சடங்குகள் கொடூரமானவையாகவும் சாந்தமானவையாகவும் அமைவதுடன் ஆண், பெண் ஆகிய இரு சாரராலும் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது.

மலையக மக்களின் தொழிற்துறைசார் சடங்குகள் மூலம் அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதுடன் தொழில் வளத்தினையும் பெருக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இதனை மேற்கொண்டு வருகின்றனர். உதாரணமாக ஆகம விதி சாராத வகையில் அமைந்துள்ள ரோதைமுனி, கம்பிமுனி, வெள்ளாவி கொழுந்துசாமி போன்ற வழிபாட்டுச் சடங்குகள் தொழில் வளத்தைப் பெருக்கும் நோக்கோடும், தற்பாதுகாப்புக்காகவும் மேற்கொள்ளப்படும் சடங்குகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, அம்மக்கள் தமது ஆயுளைக் கூட்டிக் கொள்ளும் பொருட்டு சித்திர புத்திரருக்கும் வழிபாட்டுச் சடங்குகள் பலவற்றைச் செய்கின்றனர்.

தொழிற்துறைசார்ந்த வழிபாடுகளில் கொடூரமான தெய்வங்களுக்கு வேள்விகள் செய்தும் படைக்கப்படுகின்றன. அதேவேளை சாந்தமான தெய்வங்களுக்குப் பால், பழம், மரக்கறிகளுடன் படையல்கள் படைக்கப்படுகின்றன. எனவே வழிபாட்டுச் சடங்குகள் பெரிதும் வழிபாட்டின் தன்மையைப் பொறுத்தே வேறுபடும். உதாரணமாக பத்தினித் தெய்வம், சித்திரபுத்திரருக்கான சடங்குகள் சாந்தமானதாகவும், ரோதைமுனி, மாடன், கறுப்புசாமி பொன்ற தெய்வங்களுக்கான சடங்குகள் கொடூரமானதாகவும் அமையும். மலையகத்தைப் பொறுத்தவரையில் சாதியடிப்படையிலும் வழிபாட்டுச் சடங்குகள் இடம்பெறுகின்றன. உதாரணமாக வெள்ளாவி என்ற சலவை செய்வோருடைய தெய்வத்துக்கான வழிபாடு அத்தகையதே.

மலையக மக்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகள் பெரும்பாலும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களது சடங்குகளைப் போலவே அமைந்துள்ளன. ஒரு சில சடங்குகள் மட்டுமே வித்தியாசமாகக் காணப்படுகின்றன. அவர்களது சில சடங்குகள் சிங்களவரின் சடங்குகளை ஒத்தும் காணப்படுகின்றன.

அம்மக்களின் பிறப்புடன் தொடர்பான சடங்குகள் பிறப்புக்கு முன்பாக சிலவும் குழந்தையின் பிறப்புக்கு பின்பாகச் சிலவும் இடம்பெறுகின்றன. பிறப்புடன் தொடர்பான சடங்குகளாகப் பூச்சூட்டல், சோறு கட்டுதல், வளை காப்பிடல், தாய் வீட்டுக்கு அழைத்து வரல் என்பன குழந்தையின் பிறப்புக்கு முன்னதாகச் செய்யப்படும் சடங்குகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்புக்குப் பின்பு சேனப் பாலூட்டல், பிணி கயிறு கட்டல், காப்பிடல், தொட்டிலிலிடல், தொடக்கு கழித்தல், (தீட்டு) பெயர் சூட்டல், மொட்டையடித்தல், பல்லுக் கொழுக்கட்டை அவித்தல், சோறூட்டல், காது குத்துதல் என்பனவும் இடம்பெறும்.

பூப்புச் சடங்குகளாக பல்வேறு சடங்குகளும் இம்மக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகையில் பருவமடைந்தவளை ஒரு புறமாக அமர்த்தல், மாமனுக்குச் செய்தி கூறல், வண்ணாணுக்குச் செய்தி கூறல், கூரான கத்தியைக் கொடுத்தல், பருவமடைந்தவளை நீராட்ட நேரம் பார்த்தல், வண்ணானின் ஆடையை வழங்குதல், நீராட்டல், களிக் கிண்டுதல், வண்ணான் சடங்கு செய்தல், வீட்டுக்குள் அழைத்தல், வெற்றிலை, பாக்கு வைத்தல், ருது சாந்தி செய்தல், மாமன் சீர் செய்தல் போன்ற சடங்குகளுடன் மாமன் பொட்டிடல், ஆரத்தி எடுத்தல், மாமனுக்கு விருந்தளித்தல் என்பனவும் இடம்பெறுகின்றன.

திருமணச் சடங்குகள் பெரும்பாலும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் மட்டுமே இடம்பெறுகின்றன. பெரியோர்களால் திருமணத்தை நிச்சயித்தல், தாம்பூலம் மாற்றல், பத்திரிகை வைத்தல், தாய் மாமனுக்கு பழம், பாக்கு வைத்தல், பொன்னுருக்கல், பரிசம் போடல், முகூர்த்தக் காலூண்டல், ஓமம் வளர்த்தல், கன்னிகாதானம், மாங்கல யதாரணம், அம்மி மிதித்தல், மிஞ்சி போடல், சாந்தி முகூர்த்தம், ஆடிபதினெட்டு, தாலிப் பொட்டுக் கோர்த்தல் என பல்வேறு சடங்குகள் அமைகின்றன.

வாழ்க்கை வட்டச்சடங்குகளில் இறுதியாக அமைவது மரணச் சடங்குகளாகும். ஒருவர் மரணமடைவதற்கு முன்னரிலிருந்தே சடங்குகள் ஆரம்பமாகின்றன. அவை சேட்டுமை கட்டியிருத்தல், இறந்த செய்தியை தப்படித்து அறிவித்தல், கட்டை மொய் எழுதல், நீர்மாலையெடுத்தல், அரப்பு வைத்தல், கோடியோடுதல், நெய்ப் பந்தம் பிடித்தல், நீதேவி வாங்குதல், வாய்க்கரிசி போடல், கன்னி வாழை வெட்டுதல் (திருமண மாகாத ஆணுக்கு) இறந்தவருக்கு ஆசி கூறல், முச்சந்தியில் கொள்ளிக்குடம் உடைத்தல், குழி மேட்டில் வாய்க்கரிசி போடல், பங்காளி கலந்துரையாடல், சலிப்புச் சோறு பரிமாறுதல், மூன்றாம் குழி மூடல், எட்டு காரியம் செய்தல், கருமாதி (அந்தியேட்டி) செய்தல், தாலி கழற்றுதல், திவசம், மோட்ச விளக்கிடல் என பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மலையக மக்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகளான பிறப்பு, திருமணம், இறப்புச் சடங்குகள் பெரும்பாலும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒத்திருக்கின்றன. ஆனால் பூப்புனிதச் சடங்கு மட்டும் ஏனைய பிரதேசங்களை விட இங்கு வித்தியாசப்படுவதனைக் காணலாம். எனவே மலையகச் சடங்குகளில் இச் சடங்கினை விரிவாக நோக்க வேண்டிய தேவை உள்ளது.

தோட்டப்புறங்களில் 'பூப்படைதல்' நிகழ்வினை 'வயதுக்கு வருதல்' 'பருவமடைதல்' 'பெரிய பிள்ளையாதல்' என்பன போன்ற சொற்களால் விளக்குகின்றனர். பூப்பெய்திய பெண்ணைத் தனிமைப்படுத்திக் குறிப்பிட்ட நாட்கள் வரையிலும் செய்யப்படும் சிறப்பு நிகழ்வுகளுக்குரிய அனைத்துச் செய்முறைகளுமே சடங்குகளாகக் கருதப்படுகின்றன. ஒரு பெண் பருவமடைந்துவிட்டாள் என்றும் பூப்பெய்திவிட்டாள் என்றும் சொல்லப்படுவதன் பொருள் தன்னைப் போன்ற ஓர் உயிரைப் படைப்பதற்குரிய ஆற்றலை அப்பெண் உடல் ரீதியில் பெற்றுவிட்டாள் என்பதே ஆகும். மருத்துவ அடிப்படையில் இவ்வாறாகக் கூறப்படினும் சமூக அடிப்படையில் அந்நிகழ்வு பழங்காலந் தொட்டு பண்பாட்டின் ஒரு கூறாகக் கையாளப்பட்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமைச் சடங்குகள் மூலம் சமூகம் பெண்களுக்குரிய இடத்தை அறிந்து பெருமைப் படுத்துவதாகத் தோற்றத்தில் இன்னும் இச்சடங்கு நிகழ்கின்ற போதும் அதன் சொத்துடைமை உள்ளடக்கத்தை நாம் காணாமல் இருக்கக்கூடாது. ஆண்களுக்குச் சொத்துரிமை வாரிசுகளை உருவாக்கித் தரவேண்டும் என்ற கட்டாயத்தின்படி பெண்கள் இவ்விதமாகக் கௌரவிக்கப்படுகின்றார்கள். இத்தகைய கௌரவிப்பினையே மலையக மக்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விழாவினை விசேடமாகக் கொண்டாடுகின்றார்கள். இவ்வாறு விழாவினை விசேட மாகக் கொண்டாடுவதற்குப் பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன. தோட்ட மக்கள் பெண்பிள்ளைகளைத் தலைப்பிள்ளைகளாகப் பெறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். வீடு இலட்சுமிகரமாக அமைய வேண்டுமாயின் பெண்பிள்ளைகளைத் தலைப்பிள்ளைகளாய் பெற வேண்டும் எனக் கூறுகின்றனர். அதேவேளை அப்பெண் பிள்ளைக்கென வருகின்ற முதல் விசேட நாளான பூப்புனித விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதில் மிக ஆர்வமாகவும் உள்ளனர். அத்தோடு, தாய்க்கு வயது வந்த பெண்பிள்ளை வீட்டிலிருக்கும்போது வீட்டு வேலைகளுக்கு உதவியாக அவர்கள் இருப்பதுண்டு. ஆகையால் அப்பிள்ளைக்கான விழாவைப் பெரிதாகக் கொண்டாடுகின்றனர். முன்பு தாய்மாமன் மருமகளைத் திருமணம் செய்யும் மரபு காணப் பட்டது. எனவே, தாய்மாமன் இவ்விழாவைச் சிறப்பாக நடத்தப் பெரிதும் உதவி வந்தார். இம்மரபு தற்போது சற்று அருகியுள்ளது. எனினும் இவ்விழாவினை நடத்துவதற்கு தாய்மாமனின் பங்களிப்பு இருந்தே வருகின்றது.

இச்சடங்கு குறித்து சமூகம் சில செய்முறை விதிகளை உருவாக்கியுள்ளது. இது சடங்காகச் செய்யப்பட்டபோதும், பெண்ணின் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய மருத்துவ முறையின் சாரம் கற்றுத் தரப்படுகின்றது. சிறுமி என்ற நிலையைக் கடந்து பருவநிலையை எட்டும்போது அவளுக்கு சடங்கு என்னும் நிகழ்வின் வழியாகக் குடும்ப உறவுகள் குறித்த புரிதலை ஆழமடையச்செய்ய உதவுகிறது. உறவுகளுக்குத் தரும் முக்கியத்துவம், பிற சுற்றத்தாரை உபசரித்தல் போன்ற பழக்கவழக்கங்கள், சமூகப் பொறுப்புக்கள் என்பனவும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இச்சடங்கானது பல்வேறு நிகழ்ச்சிப் படிமுறைகளைக் கொண்டு காணப்படுகின்றது. அவை பின்வருமாறு அமைகின்றன.

- **முதலில் பருவமடைந்த பெண்ணை ஒதுக்குப் புறமாகத் தனிமைப்படுத்தி வைக்கின்றனர்.**

பெண் வயதுக்கு வந்த நிகழ்வினை தாய் அல்லது உறவினர் மூலம் அறிந்த பின்னர், அவளைச் சுவாமி அறைப் பக்கமாகவோ வீட்டின் உள் பகுதிகளிலோ தங்க வைக்காது, தங்களது வசதிப்படி வீட்டின் ஒரு மூலையிலோ அல்லது ஒதுக்குப்புறமாகவோ ஒதுக்கி வைக்கின்றனர். ஏனெனில் வயதுக்கு வந்த பெண் ஆண்களின் முகங்களில் விழிக்கக்கூடாது என்பது மரபாகவுள்ளது. அத்தோடு, இப்பெண் சுற்றுச்சூழலில் உலாவுமிடத்து துடக்குடைய (தீட்டினையுடைய) பெண்ணை பேய், பிசாசுகள் நெருங்கலாம் என்ற பயம் அம்மக்களி டையே காணப்படுகின்றது. எனவே வெளியே செல்வதும் உலாவுவதும் இக்காலப்பகுதியில் தடைசெய்யப்பட்டிருக்கும். அதேவேளை மலசலகூடத்துக்குப் போகின்ற தேவை ஏற்படும் போது அவளுடன் கூடவே இன்னொரு வயது வந்த பெண் (தாய் இல்லது சகோதரி) அவளுடன் செல்வது வழமையாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **கூரான கத்தியை (மடக்குக் கத்தி அல்லது பாக்கு வெட்டியை கையில் கொடுத்தல்)**

வயது வந்த பெண்ணிடம் கூரான கத்தி அல்லது பாக்கு வெட்டியைக் கொடுப்பது தொடர்பாக மூன்று வகையான நம்பிக்கைகள் இம்மக்களிடையே காணப்படுகின்றன.

(I) கத்தி கூராக இருப்பது போலவே பெண்ணும் கற்பில் சிறந்தவளாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை

(II) உலோகப் பொருட்களை (இரும்பு) கையில் வைத்திருப்பதன் மூலம் பேய் பிசாசுகள் அவளிடம் அண்டி வராது என்பதற்காகவும் கையில் கத்தியைக் கொடுப்பது உண்டு.

(III) ஆரம்ப காலங்களில் பருவம் அடைந்த பெண் ஆனவள் வீட்டுக்கு வெளிப்புறமாகத் தாய் மாமனைக் கொண்டு கட்டப்பட்ட குச்சு வீட்டிலேயே தங்கவைக்கப்பட்டாள். அவள் தனிமைப்பட்டபோது பயத்தை ஒதுக்கிக் கொள்வதற்காகக் கத்தி கொடுக்கப்பட்டது. காலப்போக்கில் இவ்வழக்கம் அருகி விட்டது.

- **தாய் மாமனுக்குச் செய்தி அனுப்புதல்**

தாயானவள் தன் சகோதரனானவனுக்கு மகள் வயதுக்கு வந்த செய்தியைக் கூறுவாள். மகளுக்கு முதல் தண்ணீர் வார்க்கும்போது தாய் மாமனின் மனைவியான மாமியார் (அத்தை) வந்து நீராட்டுவது வழக்கம் ஆகும். அத்தையுடன் சுமங்கலிப் பெண்கள் பலரும் நீராட்டுவார்கள்.

- **வண்ணாத்தியை அழைத்தல்**

வயதுக்கு வந்த பெண்ணுக்கு முதல் தடவையாக அணிந்திருந்த ஆடைகளை மாற்றி (மாற்றுடை) கொடுப்பது (வண்ணாத்தி கொண்டு வருவது) வண்ணாத்தியின் கடமையாகும். வண்ணாத்தி பெண் பிள்ளை வயதுக்கு வந்திருந்தபோது உடுத்திருந்த உடை அணிகள் என்பவற்றை எடுத்துக் கொள்வதற்கு உரிமை உடையவள் ஆவாள். எனவே அவளது வரவு முக்கியம் உடையதாகக் காணப்படுகின்றது. தாய் ஒருத்தி வண்ணாத்தி ஒருத்தியை அழைத்துப் பாடுவதாகப் பின்வரும் நாட்டார் பாடல் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

*"வேம்புரங்க வேம்புரங்க
சிறுமெல்லியர்க்கே வேம்புரங்க
காட்டில் நிற்கும் அந்த
கன்னி மலை வேம்பு
வீட்டுக்கு வேனுமெனு
விரும்பினார் உன் தகப்பன்
காணி பெருக்கி முத்தம் தெளிக்கையிலே
கட்டும் புடவையிலே
பொட்டும் தெரிச்சதென்ன
கண்ண பிளைஞ்சழுதார்
வண்ணாத்தி வண்ணாத்தி
வண்ணான் எங்கே போனாங்க
ஆழச் செவுரேறி
கூப்பிடடி வண்ணாத்தி
வண்ணாண் எங்கே போனாங்க*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழச் செவுரேறி
அழுக்கெடுக்க போனாங்க
குட்டி செவுரேறி
கூப்பிடடி வண்ணாத்தி
மாமன் அரண்மனைக்கு
மாராயம் சொல்லி வா
சித்த பெருமனைக்கு
சேவுச்சி சொல்லிவா"

அப்பாடலில் என்ன தேவை கருதி வண்ணாத்தி அழைக்கப்படுகிறார் என்பது நாசுக்காகக் கூறப்பட்டுள்ளது.

- **மாமன்முறையினர் சமைத்துக் கொடுத்தல்**

தாய்மாமன் வீட்டில் முதலில் சமைத்து மருமகளுக்குக் கொண்டுவந்து கொடுப்பர். பல மாமன்மார் இருப்பின் அடுத்து அடுத்துக் கொடுப்பது வழக்கமாக உள்ளது. இச்சமையல் அசைவமாகவே அமைவது உண்டு.

- **வண்ணாத்தி சடங்கு செய்தல்**

பருவம் அடைந்த பதினாறாம் நாள் கழிந்த பின்பு வண்ணாத்தியே வண்ணாத்திச் சடங்கினைச் செய்வாள். அச்சடங்கானது வண்ணாத்தியோடு சுமங்கலிப் பெண்கள் பலர் சேர்ந்து செய்வதாக அமைகிறது. பெண்கள் ஐயர் அல்லது எழுவர் சேர்ந்து பருவம் அடைந்த பெண் ஒருத்திக்கு நீர் ஊற்றிப் பின் நீத்து அல்லது ஓணான் கொடி என்று அழைக்கப்படும் கொடியை வட்ட வடிவமாக கட்டி எடுத்து அதனுள் பருவம் அடைந்த பெண்ணை மூன்று முறை உட்சென்று வெளியில் தாண்டி வருமாறு செய்வர். நீராட்ட சவற்காரத்துக்குப் பதிலாக மஞ்சளும் வேப்பிலையும் அரைத்துப் பயன்படுத்தப்படும்.

- **மங்கல நீராட்டல்**

இந்நிகழ்வானது ஊர்ப்பிராமணர் (ஐயர்) நீர் ஊற்றுவதற்காகக் குறித்துத் தருகின்ற நேரத்தில் இடம் பெறும் மஞ்சள் கலந்த நீரால் மாமியார் உற்றார் (சுமங்கலி) பெண்கள் ஐந்து அல்லது ஏழு பேர் நீராட்டுவர்.

- **முடக்கத்தான் மாலை அணிவித்தல்**

பருவமடைந்த பெண்ணுக்கு முடக்கத்தான் மாலையை அணிவிப்பதுண்டு. ஏனெனில் இக்கொடி மருத்துவக் குணமுடையது. எனவே இது உடல் வலியைத் தீர்க்கும் எனவும் இம்மக்கள் நம்புகின்றனர்.

- **மங்கல வரவேற்பளித்தல்**

நீராட்டிய பெண்ணைக் குத்து விளக்கு அல்லது இலட்சுமி விளக்கில் விழிக்கச் செய்வர். அத்துடன் மஞ்சள் கண்ணாடி, பூ, வளையல், தங்கம், போன்ற அணிகளிலும் விழித்து அணிகள் அணிவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **உணவளித்தல்**

பருவமடைந்த பெண்ணுக்கு உடலுக்குக் சத்தூட்டும் வகையில் அமைந்த உணவான அரிசிமா, உழுந்து, கருப்பட்டி, நாட்டு முட்டை, வேப்பஞ்சாறு நல்லெண்ணை என்பவற்றை உணவாகக் கொடுப்பர். பெரும்பாலும் பருவடைந்த பெண்ணுக்குக் கழியை உணவாகக் கொடுப்பது வழமை. பின்வரும் பாடல் களிகிண்ட பெண்ணின் உறவுகளை அழைப்பதாக அமைந்துள்ளது.

*"உச்சியிலே நின்று ஓடியாத நலவேம்பே*
*நாக்கில் நின்று நலியாத நல்வேம்பே*
*மார்பில் நின்று மயங்காதே*
*நாத்தினார் கிண்டுங்கடி நார்த்தாம் பூ போல*
*மாமியார் கிண்டுங்கடி வானத்து (மீன்) போல*
*தாயார் கிண்டுங்கடி சட்டிக் கரி போல*
*சக்காளத்தி கிண்டுங்கடி சட்டிக் கரி போல*
*ஓப்புடியா கிண்டுங்கடி ஓடையில கொட்டுங்கடி"*

- **புண்ணிய தானம்**

மேற்படி சடங்குகள் முடிந்த பின்னர் வீட்டைச் சுத்திகரிக்கும் வகையில் பிராமணர் உதவியுடன் புண்ணிய தானம் செய்யப்படும். அத்தோடு பருவமடைந்த பெண்ணுக்கு தாய்மாமன் மற்றும் உறவினர்கள் பரிசில்கள் வழங்குதுடன் சீர்வரிசையும் இடம்பெறும். மலையகத்தில் கல்யாணத்தில் முதல் சிவப்புப் பொட்டினை அணிவிப்பது தாய் மாமன் ஆவார். மாமன் சீரில் கறுப்பு ஆடு முக்கியமானதாகக் கருதப்படும். மூத்தமாமன் முதல் சீர் எடுப்பார். சீர் வரிசையில் 5, 7, 9 தட்டுக்களாக அமையும். ஆட்டினைப் பிடித்தவாறு தாய் மாமன் வருவார். முறையுள்ள தாய்மாமனையே முன்னர் மணந்து கொண்டமையால் உரிமையுள்ள தம் மருமக்களுக்கு குங்குமப் பொட்டு இட்டுள்ளார். தற்போது இந்நிலைமை மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **ஆரத்தி**

இறுதியாக சடங்கில் கண்ணூறு படாதிருக்குமாறு ஆரத்தி சுற்றப்படும்.

மலையக மக்களின் சடங்குகளைப் போலவே அவர்களின் நம்பிக்கைகளும் அம்மக்களிடையே முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. நம்பிக்கைகள் நன்நம்பிக்கைகளாகவும் மூடநம்பிக்கைகளாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கைகளில் பிறப்போடு தொடர்புட்டவையாகக் 'கொடி சுற்றிப் பிறத்தல்' என்ற விடயம் பற்றி நம்பிக்கை இம்மக்களிடையே காணப்படுகின்றது. குழந்தை பிறக்கும் போது குடல் (கொடி) சுற்றிப் பிறந்தால் தாய் மாமனுக்குக் கூடாது என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. பிறந்த குழந்தைக்கு இடுப்பில் ஐம்பொன் அல்லது ஐம்பொன்களில் ஏதாவது ஒன்றினால் கொடி செய்து இடுப்பில் இடுவதனால் பேய், பிசாசுகள் நெருங்காது என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. அத்தோடு குழந்தை கருவிலிருக்கும்போது கற்பவதிக்கு வளைகாப்பிடல் வைபவத்தில் கண்ணாடி வளையல்களை அணிவிப்பதால் அவ்வளையல்களின் சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் குழந்தை துடிப்போடு வளரும் எனவும் இம்மக்கள் நம்புகின்றனர். பிறந்த குழந்தைக்கு கண்ணூறு படாதவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியிலும் கன்னத்திலும் கறுத்தப் பொட்டிடும் வழக்கம் இம்மக்களிடையே காணப்படுகின்றது.

மேலும் பெண்பிள்ளைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் வயசுக்கு வருதல் அல்லது ருதுவாகுதல் கூடாதென்பது இம்மக்களின் நம்பிக்கையாகும். ஞாயிற்றுக் கிழமையில் வயதுக்குவரும் பிள்ளைகள் திருமணமானது குறுகிய காலத்தில்லேயே தமது தாரத்தை இழப்பதாகவும் நம்புகின்றனர். இதுவொருவகையில் மூடநம்பிக்கையேயாகும்.

இறப்பு தொடர்பான நம்பிக்கைகளில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் ஒருவர் மரணமானால் அக்குடும்பத்தில் தொடர்ந்து மூன்று மரணங்கள் நிகழுமெனவும் நம்புகின்றனர். அதேவேளை செவ்வாய் வெள்ளி தினங்களில் பிணங்களை அடக்குவது பல மரணங்கள் நிகழ்வதைத் தூண்டுவதாக அமையுமெனவும் கருதுகின்றனர்.

நம்பிக்கைகளுடன் இம்மக்கள் வேறும் பல நம்பிக்கைகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அம்மை போன்ற நோய்கள் பரவுகின்ற வரட்சியான காலங்களில் 'மாரியம்மன் தாலாட்டு' பாடினால் நோயின் பரவலைத் தடுக்கலாம் எனக் கருதுகின்றனர். அதே போல, புது வீடுகளைக் கட்டும்போது வைரவருக்கு விசேட பூசை வைத்தால் வீடு செழிப்பாக இருக்கும் எனவும் கருதுகின்றனர். ஏனெனில் "வைரவர்" தான் பூமிக்கு சொந்தக்காரர் எனவும் நம்புகின்றனர். மேலும் முச்சந்திகளில் அமைந்துள்ள வீடுகள் விருத்தி பெறாது என்றும் பேய்கள் அதனுள் குடியேறும் எனவும் அவ்வீடுகளில் குடியிருக்கும்போது அவ்வீட்ட வாசலில் பிள்ளையார் சிலையொன்றை வைப்பதால் வீட்டில் செல்வாக்கை உண்டாக்கலாம் எனவும் நம்புகின்றனர்.

இவை தவிர, ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களிடையே காணப்படும் பொதுவான நம்பிக்கைகள் இம்மக்களிடையேயும் காணப்படுகின்றன.

ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து மலையக மக்களின் சடங்குகள் வாழ்க்கை வட்டச் சடங்காகவும் பொதுச் சடங்காகவும் சாதி அடிப்படையிலான சடங்குகளாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மக்களின் நம்பிக்கைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கேயுரிய அவை தனித்துவமான நம்பிக்கைகளாகவும் பொது நம்பிக்கைகளாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை நூற் பட்டியல்

லூதூர்,தே. (பதிப்பாசிரியர்) 2011 நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், சென்னை. முல்லை நிலையம்.

சுகந்தி சுப்பிரமணியம் (1996) மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும். லண்டன், தமிழ் இந்துமன்றம்.

சிவத்தம்பி, கார்த்திகேசு (1993), இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் கொழும்பு – 3, உதயம் நிறுவனம்.

பிச்சை, அ. தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

வேல்முருகு, ந. மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும், யாழ்ப்பாணம், வாசகர் பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் (தொகுப்பு) (2000), வேரும் விழுதும், சென்னை, அலைகள் வெளியீடு.

சிலம்பு, நா, செல்வராசு (2001), தொல் தமிழர் சமயம், பெங்களூர், காவியா வெளியீடு.

சிவசுப்பிரமணியன் (2010), மந்திரமும் சடங்குகளும், சென்னை, காலச்சுவடு பதிப்பகம்.

பக்தவத்சல பாரதி (1990), பண்பாட்டு மானிடவியல், சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

## Reference

Social Communication In Dravidian Rituals Authorist Bryan Pfaffen Berger Source – Journal of Anthropological Research Vol 36, No 2, Summer 1980, pp 196 – 219 Published By University of New Mexico.

The Female Brigegroom Ritual of Puberty And Marriage In South India And Srilanka, Anthony(S) Anthony Good, Source: Social Anualysis, The International Journal of Social And Cultural Practice: No: 11, October 1982, Pp35-55

Ritual, Perspectives And Dimensions, Catherine Be 11, New York – Ox Ford, Oxford University Press.

Rituals Of First Menstruation In Srilanka, Author(S) Deborah Series Voi – 15, No: 4 (Dec 1980) pp 603 – 625.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு முஸ்லிம் உலகில் தொன்மை அரங்கக் கலை மரபுகள்

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்

கவிதை மொழிதல், கதை சொல்லுதல், பா ஓதுதல் இஸ்லாமிய உலகு முழுக்கத் தொடர்ந்து செயல்பாட்டில் இருந்து வருபவை. காவியப் பாடல்களை மக்கள் முன்னிலையில் பாடுதல் அல்லது சமயக் கதைக் காவியங்களைப் பாடுதல், கதை சொல்லுதல் என்பவை பெரும்பாலும் நாடகக் கலை அம்சங்களை வெளிப்படுத்துவதாகவும் இருந்துள்ளன. இவ்வகை கலை இலக்கிய முயற்சிகள் தற்காலம் வரையில் வெவ்வேறு வடிவங்களில் அனுபவத்திற்குரியனவாகவே இருந்து வருகின்றன. நவீன நாடக மரபின் வளர்ச்சிக்கும் இவை பங்காற்றி உள்ளன.

நாடகங்களுக்கும் இசை நிகழ்வுகளுக்கும் சமய ரீதியில் எதிர்ப்புகள் இருந்ததால் அவற்றில் மக்கள் குறைவாகவே ஆர்வம் காட்டினர். ஆயினும் இவ் வகைக் கலைகளுக்கு மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பிருந்தது. இவற்றில் இருந்த நாடகக் கூறுகளே பிற்கால நாடகக்கலைக்கான அடிப்படைகளாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

'இஸ்லாமியப் பண்பாடு' எனும் நூலில் 1940 களில் அரபு நாட்டில் தாம் நேரில் கண்ட நிழலாட்டக் காட்சியைப் பற்றி மர்மதியூக் பிக்தோல் கூறியுள்ளார். தமது நூலில் அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

> முஸ்லிம் உலகில் நிழலாட்டம் என்ற நிழல் காட்சிகள் தான் முக்கிய இடம் பெற்றிருந்தன. திருவிழாக்களில் இந்த நிழலாட்டம் நடைபெறுவதுண்டு. இதில் வகை வகையான கதைகளைச் சித்திரிப்பார்கள். இதில் அறிஞர் கூட ஆர்வம் காட்டியுள்ளார்கள்.

நிழலாட்டங்கள் பலவற்றை நானே பார்த்துள்ளேன். சின்னாசியா, எகிப்து, சிரியா ஆகிய நாடுகளில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கூட நிழலாட்டக் காட்சிகள் காட்டப்பட்டு வந்தன என்றும் மர்மதியூக் பிக்தோல் கூறுகின்றார். இவற்றைக் காட்டும் - அண்ணாவி- எத்தனை இன்பமான ஹாஸ்ய மொழிகளைப் பேசினார் என்பதை நான் இப்பொழுதும் நினைத்துப் பார்க்கின்றேன் என்றும் நான் பார்த்த காட்சிகளில் நிழலாட்டமே தன்னைப் பெரிதும் கவர்ந்தது என்றும் பிக்தோல் கூறியுள்ளார் (பிக்தோல் அல் - குர் ஆன் மொழி பெயர்ப்பாளர்களில் ஒருவர்). (மர்மதியூக் பிக்தோல் (1952) இஸ்லாமியக் கலைப்பண்பு).

மத்திய கிழக்கிற்குரிய நிகழ்த்து கலைகளின் பல வடிவங்கள் இஸ்லாத்தின் தோற்றத்திற்கும் பதினாறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நிகழ்ந்திருப்பதாக ஆய்வாளர் கருதுகின்றனர். அவை பின்வருமாறு (1) பொம்மலாட்ட நாடகம் (2) கதைசொல் நாடகம் அல்லது நாடக பாணியுடன் கதை கூறல் (3) சமயக் காவிய நாடகம் (4) அங்கதச் சுவை நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் பொம்மலாட்ட நிழல் கூத்து கிழக்குலகு முழுக்க தென்கிழக்கு ஆசியாவரை இன்றும் காணப்படும் ஒரு கலைவடிவமாகும். 13ம் நூற்றாண்டில் மொங்கோலிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து இக்கலை இஸ்லாமிய உலகை வந்து சேர்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

ஆயினும் இதற்கு முன்னரே நிழல் (உருவப்) படங்களுடன் கூடிய சுழலும் விளக்கு இருந்துள்ளது. உமர்கையாம் 'பனுசே கயால்' அலங்கார விளக்கு என்று தமது படைப்புகளில் இவ் விளக்கும் குறிப்பிட்டிருப்பதை உதாரணமாகக் காட்டப்படுகின்றார்.

பொம்மலாட்டக் கூத்திற்கும் இஸ்லாமிய உலகில் எதிர்ப்பிருந்தது. பொம்மைப் படங்கள் உயிர்ப் பொருளின் பிரதிகள் என்று வைதிக இஸ்லாமிய வாதிகள் மறுப்புத் தெரிவித்தனர். இந்தப் பொருள்கள் இருக்கும் வீட்டில் மலக்குகளவானவர்கள் இறங்க மாட்டார்கள் என்றும் அவர்கள் கூறிவந்தனர். இந்த எதிர்ப்புக்கள் இக்கலையின் வளர்ச்சிக்கு பெரிய தடையாக இல்லை என்றாலும் ஓரளவு அதன் தாக்கங்கள் இருந்தன.

ஈரானிய பொம்மலாட்டக் கலை கெய்மே ஷப் பாஸி என்று கூறப்படுகிறது. சிறிய மண்டபத்தில் இது நிகழ்த்தப்படுகிறது. இதில் இரு கலைஞர்கள் சம்பந்தப்படுகின்றனர். ஒருவர் இசைக்கலைஞர் மற்றவர் கதை கூறுபவர். கதை கூறுபவருக்கும் பொம்மைகளுக்கும் இடையில் உரையாடல் இடம் பெறும்.

தொன்மைத் தகவல்கள், இலக்கியங்கள் ஈரானின் பொம்மைக் கூத்தின் பழைமையைக் காட்டுகின்றன. உமர் கையாம் (1048 - 1131) நிஷாபூர் பரித்துத்தீன் அத்தார் (1145 - 1220) போன்றவர்களின் படைப்புக்களில் இது பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. நிழல் பொம்மலாட்டக் கலை பற்றிய தகவல்களை இவை வெவ்வேறு உவமானம் உருவகங்கள் மூலம் முன்வைத்துள்ளன.

ஈரானின் 'கீமே ஷாப் பாஸி' நிழல் பொம்மைக் கூத்து உலக நிழல் பொம்மைக் கூத்துக்களில் கிடைப் பெருமைக்குரிய ஒன்று என்றும் பல சிறப்பு வேறுபாடுகளைக் கொண்ட வடிவம் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. ஈரானிய நிழல் கூத்தில் பொம்மைகளும் மனிதர்களும் நடிக்கின்றனர். (1) பொம்மைகளை ஆட்டுவிப்பவர் (2) இசைக்கலைஞர் (3) பொம்மைகள் என்ற முப்பிரிவும் பொம்மைக் கூத்தில் ஒன்றிணைந்துள்ளனர்.

கதை சொல்லி (மொர்ஷிட்) கதை சொல்லி மட்டுமல்ல அவன் ஒரு பாத்திரமாகவும் செயற்படுகிறான். கதைசொல்லிக்கும் பொம்மைகளுக்கும் இடையில் ஒரு உணர்ச்சி பூர்வமான இணைப்பு உருவாக்கப்படுகிறது. அவர்கள் சில போது அன்பை வெளிப்படுத்துகின்றனர். சில சந்தர்ப்பங்களில் மோதலில் ஈடுபடுகின்றனர்.

**தாஸீயே**

தாஸீயே போன்ற ஈரானின் பண்டைய அரங்கக் கலைகள் பல உள்ளூர்ப் பண்புகளை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. இக் கலை மரபு ஈரானின் தேசிய அரங்கியல் வடிவமாகவும் கருதப்படுகிறது. இது ஈரானியரின் தொன்மங்களையும் சடங்குகளையும் அடிப்படையாகக் கொண்ட பண்டைய கலை வடிவமாகும். பின்னர் இவை இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வருடமும் முஹர்ரம் மாதத்தில் திறந்த வெளியில் சுற்றிவரக் கூடிநிற்கும் மக்கள் மத்தியில் ஆடப்படுவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரஸீக மரபில் தாஸியே பர்தேகானி போன்ற நாட்டாரியல், மற்றும் மரபு நாடகங்கள் வரலாற்றுச் சம்பவங்களையும் மற்றும் சமய நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்ட காவிய மயமான கலைகளாக மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றிருந்தன (பார்க்க எம். எஸ்.எம். அனஸ் ஈரானிய சினிமா 2012).

மத்திய கால இஸ்லாமிய உலகில் நிழல் கூத்துக்களையும் (பாவைக் கூத்து) உணர்ச்சிக் கதை நிகழ்வுகளும் (தாஸியே) தாஸியே வில் நடிகர்கள் முஸ்லிம் வரலாறுகளில் இருந்து கதைகளை எடுத்துக்கொள்வர். ஹஸன் இப்ன் அலியின் கர்பலா நிகழ்வை ஷியாக்கள் தாஸியே மூலம் சித்திரித்து நடிப்பது பிரபலமானது.

இந்தோனேஷியாவில் வேயாங் பிரபலமான பொம்மலாட்டக் கலையாகும். இதில் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலக் கவிதைகள் சித்தரிக்கப்படுவது வழக்கம். வரலாற்றுப் பாத்திரமான அமீர் ஹம்ஸாவின் வீரதீரக் கதைகளை வர்ணிக்கும் இஸ்லாமியக் கதைகளும் பயன்படுத்தப்படும். துருக்கி பொம்மலாட்டக் கலையில் காரகோஸ் ஹாஸிவாட் நன்கறியப்பட்ட பொம்மை பாத்திரங்களாகும்.

பாரம்பரிய கிரேக்க நிழலாட்டக் கலையின் பிரதான பாத்திரங்களாகவும் இவை இரண்டும் விளங்குகின்றன. உதுமானியக் காலப்பிரிவில் இக்கலை பிரசித்தி பெற்று விளங்கியதோடு உதுமானியப் பேரரசுக்கு உட்பட்ட நாடுகளிலும் அவை பிரபலமடைந்தன.

துருக்கிக்கு எப்போது இக்கலை வந்து சேர்ந்ததென்று கூறுவது கடினம் என்று கூறப்படுகின்றது. சுல்தான் செலம் (1572 - 1520) காலத்தில் துருக்கியில் இது பரவி இருக்கக்கூடும். உதுமானிய பெரிய மு.ஃப்தி முஹமட் எப்ஸாப்த் எல் - இமாதி காரகோஸ் பொம்மைக் கலைகளை நிகழ்த்துவதற்கு அனுமதி வழங்கியதால் இது அங்கு பிரபலமடைந்தது.

பழைய இஸ்தன்பூல் நகரிலும் ஏனைய நகரங்களிலும் கிராமங்களிலும் பொம்மலாட்டக் கலையை மக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர். நடிகர்களும் கதை சொல்வோரும், பொம்மலாட்ட மாஸ்டரும் இணைந்தே இதை நிகழ்த்துகின்றனர். கரகோஸ் என்றால் ‘கறுப்புக் கண்’ என்று பொருள். கரகோஸ்தான் துருக்கிய நிழல் பொம்மைக் கூத்தின் நாயகன். அவன் படிப்பறிவில்லாதவன். ஆனால் உள்ளூர் பகிடிகளைக் கூறுவதில் தேர்ச்சி பெற்றவன். இந்த பொம்மலாட்டக் கலை முதலில் துருக்கி அரச சபையில் நிகழ்த்தப்பட்டுள்ளது. 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் பொது இடங்களிலும் தனியார் வீடுகளிலும் மக்கள் கூடி இதனைப் பார்த்து மகிழ்ந்தனர்.

ரமழான் பெருநாள் தினம் போன்ற கொண்டாடப்படக்கூடிய சிறப்புத் தினங்களில் இக்கலையை மக்கள் பார்த்து ரசிப்பர்.

நிழல்கூத்துப் பாவைகள் வர்ணமூட்டப்பட்டவை. அங்கங்கள் துண்டு துண்டாக பொருத்தப்பட்டவை. மஸ்லின் திரையில் மக்கள் பாவைக் கூத்தினைப் பார்த்து மகிழ்வர். மேடைக்கு பின்னால் விளக்கு ஒளியிலிருந்து பாவைகளின் நிழல் காட்சியை திரை வெளிப்படுத்துகிறது. மக்கள் பார்த்து இக் காட்சியை ரசிக்கின்றனர்.

பொம்மை நிழல்கூத்து ஒரு கலை. அது தனக்கான தன்மைகளைக் கொண்ட மிகச் சிறந்த கலை வடிமாகும். இது நடனத்திலிருந்தோ நாடகத்திலிருந்தோ தோன்றிய கிளைக் கலைவடிவம் அல்ல (Eric BRAMALL and c.c Somerville (1963) Expert Puppet Technique , London P.13) இது ஒரு தோன்றி மறையும் கலை. கணப் பொழுதுகளில் நிகழ்வுகள் சபையினர் முன்னில் நிகழ்ந்து முடிகின்றன. பொம்மைகளை ஆட்டுவிப்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஓவியரோ, இசையமைப்பாளரோ எழுத்தாளரோ அல்ல. அவர்களைப் போல் தனியாளாகச் சாதனை புரியும் ஒரு கலைஞன்.

19ஆம் நூற்றாண்டு வரையும் மேடை நாடகம் என்ற பொருளில் அரங்கக் கலை வளர்ச்சியடையவில்லை. இருந்தபோதும் பல நூற்றாண்டுகளாக அரங்கமற்ற நாடக மரபுகள் இருந்து வந்துள்ளன. பாவைக்கூத்து, கதைகூறல், தாஸியா வகை சமய நிகழ்வுகள் என்பன இருந்து வந்துள்ளன. சிரியா, ஈரான், எகிப்து, துருக்கி, ஆப்கானிஸ்தான், இஜர்பன்ஞ்சான் எனப் பல நாடுகளில் இவை பரவியிருந்தன.

மத்திய காலக் கெய்ரோவில் கயால் அல் - ஸில் (கற்பனையின் நிழல்கள்) என்ற பாவைக் கூத்து பிரபலம் பெற்றிருந்தது. இக் கூத்து தொடர்ச்சியாகவும் சில வேளைகளில் சுருக்கப்பட்ட வடிவமாகவும் மக்கள் மத்தியில் காட்டப்பட்டன. இது துருக்கியின் கராகோஸ் என்ற நிழலாட்டத்துக்குச் சமனானதாக கூறப்படுகின்றது.

### கதை சொல்லல்

மக்களிடையே நிலவிய படிப்பறிவுக் குறைபாடு, கதை சொல்லல் மரபுக்கு அதிக இடமளித்ததாகக் கருதப்படுகிறது. அது வாய்வழி நாட்டாரியல் அரங்கக் கலையாகக் குறிப்பிடப்படுகிறது. தொழில் வாண்மைக் கதை சொல்லிகள் மத்திய கிழக்கு முழுக்க பிரபல்யம் பெற்று விழங்கினர். இசை மற்றும்அபிநயம் போன்றவற்றைப் பயன்படுத்தியும் புதிய சொல்லாடல்களை உட்புகுத்தியும் மரபுரிதியாக சொல்லப்படும் கதைகளுக்கும் காவியங்களுக்கும் கதை சொல்லிகள் உயிரூட்டினர்.

நிகழ்த்து கலை இஸ்லாமியருக்கிடையே மிகக் குறைவான இடத்தையே பெற்றிருந்தது. இலக்கியத் துறையில் அவர்களிடம் இருந்த வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் இந்த வேறுபாடு இலகுவாகப் புலப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. நடனத்திற்கும் அரங்கக் கலைக்கும் இஸ்லாம் எதிரானது என்ற வைதீக மற்றும் பழமைவாத மார்க்க அறிஞர்களின் தடைகள் இவற்றின் வளர்ச்சிக்குப் பெரிய தடையாக இருந்துள்ளன.

இதனால் இசை, கட்டடக் கலைகளில் அரேபியர் வழங்கிய பங்களிப்புக்கள் அளவு இக்கலைகளுக்கு வரவேற்பிருக்கவில்லை. இஸ்லாமிய மரபிற்குள் அரங்கக் கலை பெரிய அளவில் வளர்ச்சி அடையவில்லை. எனினும் அரங்கக்கலையின் பல கூறுகள் நயப்பிற்கும் தூய்ப்பிற்கும் உரியதாக மக்கள் மத்தியில் வளர்ச்சி பெற்றிருந்தன. மகிழ்வூட்டும் கலைகளுக்கு முஸ்லிம் மக்களிடையே தவிர்க்க முடியாத ஆர்வம் இருந்ததைப் பற்றி பிக்தோதல் பேசியுள்ளார்.

கிரேக்கர், ரோமர்களிடம் காணப்பட்டது போன்ற அபிநயக் கூத்து (Mime) அல்லது அங்க அசைவுகளினால் முழுக் கதையையும் கூறுவது நிழல்பாவைக் கூத்துகள் பரவலாக மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருந்தன. துருக்கி உதுமானியர் நிழல் பாவைக் கூத்துக்களுக்கு ஆதரவளித்துள்ளனர். (Encycloppaedia Britanica (www.Britanica.com) பாரசீகத்திலும், துருக்கியிலும் இக்கலைக்குப் பெரிய வரவேற்பிருந்தது.

மத்திய காலத்தின் பிற்பகுதியில் அபிநயக் கூத்துக்களுக்கும் நிழல் பாவைக் கூத்துக் கலைக்கும் முஸ்லிம் நாடுகளில் முக்கியத்துவம் தரப்பட்டது. துருக்கி உதுமானிய சுல்தான்கள் தமது படைப் பிரிவுகளின் பயணங்களின் போது நடிகர் பிரிவினருக்கும் இடமளித்தனர். அரச திருமண வைபவங்களிலும் அரச வரவேற்பு நிகழ்வுகளிலும் இக்கலைஞர்கள் பங்கேற்று தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புக்கள் தரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயக் கூத்து (Mime Shows) மக்களின் பொழுது போக்கிற்காக ஆடப்பட்டு வந்த கலை. அனேகமானவை கால வெள்ளத்திற்கிரையாகி விட்டன. மிகச் சில மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அவை அபிநயக் கூத்து இயக்குனர்களுக்கு உதவக்கூடிய வழிகாட்டி களாகவே உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

வரலாற்று விடயங்களே கதைப் பொருட்களாக இருந்துள்ளன. கதைப் பொருட்களில் மாற்றங்கள் இருந்தாலும் விகடம் அல்லது கேலிதான் இந்தக் கூத்தின் அடிப்படையாகும். விரக நகைச்சுவைகளும் இதில் கலந்திருந்தன. உதுமானி (துருக்கி)யப் பேரரசின் பல பகுதிகளில் இக்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இது துருக்கி மொழியில் மெதா (Meddah) அல்லது 'முக்காலித்' (போலச் செய்பவர்) என்று கூறப்பட்டது. இக்கூத்து வடிவத்தைப் பார்ப்பதில் பாமர மக்களே பெரிய அளவில் ஆர்வம் காட்டி உள்ளனர்.

விகடம் செய்பவரின் நடிப்பு முறைகளில் பெரும்பாலும் இக்கலைக்கு முன்னோடியாக இருந்ததெனக் கருதப்படும் செவ்வியல் கிரேக்க அபிநயக் கூத்தின் செல்வாக்குக் காணப் பட்டுள்ளது. அடிப்படையில் விகட பாத்திரமாக நடிப்பவர் அடிப்படையில் கதைகூறுபவர். அங்கு நகைச்சுவைக் கூறுகளே அதிகம் இடம் பெற்றிருந்தன.

தனது குரல் மூலமும் உடற் செயற்பாடுகள் மூலம் அந்நடிகர் விலங்குகளையும் பறவைகளையும் உள்ளூர் வட்டார வழக்குகளையுமே பயன்படுத்துவது வழக்கம். துருக்கி மொழி அரபு மொழி பேசும் மக்கள் மத்தியில் அபிநயக்கூத்து நிகழ்த்துபவர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. நவீன வானொலி, தொ.கா, சினிமா போன்ற ஊடகங்களிலும் இக்கலைக்கு இடமளிக்கப்பட்டு வருகிறது.

## ஓர்ட்டா ஓயூனு

ஓர்ட்டா ஓயூனு (Ortaounu) 'மத்தியில் நடித்தல்' என்று பொருள் பொதுச் சதுக்கங்களின் மத்தியில் இது ஆடப்பட்டது. 12ஆம் நூற்றாண்டில் இது ஆரம்பமானதாகத் தெரிகிறது. இதன் நடிப்புப் பாணி அபிநயக் கூத்தை ஒத்தது. இக் கூத்து மரபு கிரேக்கத்தில் இருந்து துருக்கிற்கு வந்திருக்கக்கூடும் என்று நம்பப்பபடுகிறது.

சில ஆய்வுகளின்படி இது 15ஆம் நூற்றாண்டிலேயே துருக்கியில் ஆரம்பமாகி உள்ளது. 19ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் அரங்கக்கலை அம்சங்களுடன் இதில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த நடிப்பு நிகழும்போது பார்வையாளர்கள் நடிகர்களைச் சூழ்ந்திருப்பதனாலேயே 'ஓர்ட்டா ஓயூனு' என்ற பெயரை அது பெற்றுள்ளது.

இம் 'மத்திய நாடகத்தில்' கவ்க்குலு, பிசேக்கர் என்ற இரு பாத்திரங்கள் பங்கேற் கின்றன. இவ்விரு பாத்திரங்களினதும் உரையாடல்தான் இதில் முக்கியத்துவம் பெறுகிறது. கவ்க்குலு ஒன்றும் தெரியாத பாமரன் எல்லாவற்றிலும் குழப்பமடைபவன். பிசேக்கர் படித்தவன், உற்சாகமானவன், முதியவன்.

காரகோஸ் பொம்மலாட்டக் கலையின் செல்வாக்கு ஓர்ட்டா ஓயூனுவிலும் இடம் பெற்றிருப்பதாகவும் ஓர்ட்டா ஓயூனுவின் சில பண்புகளை கரகோஸ் உள்வாங்கி இருப்ப தாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

விகட பாத்திரத்திற்குரிய வினோத ஆடை அணிகலனுடன் ஒரு கழுதையையும் கூட்டிக்கொண்டு மேடையில் தோன்றுவதுடன் இருந்து ஓர்ட்டா ஓயூனு நாடக அறிமுகம் ஆரம்பமாகிறது. அங்கு தோன்றும் இரு பாத்திரங்களும் நீண்ட தொள தொள ஆடை களுடன் காணப்படுகின்றனர். அவர்கள் ஆடுவார்கள், குதிப்பார்கள், தலைகீழாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரணம் போடுவார்கள். மக்கள் குதூகலம் அடைவார்கள். நடிகர்கள் சபையோருக்கு சலாம் வைத்த பின்னர் நாடகம் ஆரம்பிக்கும்.

நடனம், நகைச்சுவைப் பேச்சு, அங்க அசைவுகளுடனான நடிப்பு என்பவற்றுடன் இரு நடிகர்களும் நடிக்க ஆரம்பிப்பார்கள். நகைச்சுவைக் கோமாளிகளாகத் தோன்றியவர்கள் நடிகர்களாக மாறுவார்கள் 17ஆம் நூற்றாண்டில் அதனை ஆடக்கூடியவர்களும் பார்த்து ரசிக்கக் கூடியவர்களும் அதிகளவில் இருந்துள்ளனர்.

கராகோஸ் காட்சிகளும் ஓர்ட்டா ஒயூனுவைப் போல் நகைச்சுவை கொண்டது. சினிமாவின் வருகையினால் கராகோஸ் அழிந்துவிட்டது. ரமதான் போன்ற பிரதான கொண்டாட்ட நாட்களில் மட்டும் கராகோஸ் இடம்பெறுவதுண்டு. கராகோஸில் பொம்மைகளுக்காகத் தட்டையான தோல் பயன்படுத்தப்படுகிறது. பாவைக்கூத்தாட்டும் அண்ணாவியார் நூலின் மூலம் இதனைக் கதையின் தேவைக்கேற்றவாறு கையாள்வார்.

நிழல் பாவைக் கூத்துக் கலைஞர்களிடம் வெவ்வேறான 28 கதைகள் கைவசம் இருக்கும். பல கதைகள் வரலாற்றைக் கூறுபவை; சில கதைகள் ஆபாசமானவை. ஆனால் எல்லாமே மக்களுக்கு மகிழ்வளிப்பவை. கதைகளில் இடையில் மிருகங்களின் படங்களும் இடம்பெறும். அண்ணாவியும் அவர்களது சீடர்களும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி கதைப்பவற்றை அழகுபடுத்திக் காட்சிப்படுத்துவதோடு குரல் மாற்றிப் பேசுவது இசையைப் பயன்படுத்துவது போன்றவற்றினாலும் தமது காட்சியை மேலும் மெருகூட்டுவர். பிரத்தியேகமாக ஓரிரு இசைக்கலைஞர்கள் அமர்த்தப்படுவதும் உண்டு.

ஓர்ட்டா ஓயூனு அரங்கியல் கலை பிரெஷ்டின் தற்போதைய நாடகக் கலையின் ஊற்றுக்களைக் கொண்ட அரங்கியல் வடிவம் என்று ஆய்வாளர் விதந்து பேசுகின்றனர். அது ஒரு வளம் மிக்க நாடகக்கலை. ஆயினும் பிற்காலத்தில் அது மாற்றங்களுக்கும் அழிவுகளுக்கும் ஆளாகி உள்ளதாக ஆய்வாளர் கருதுகின்றனர்.

ஓர்ட்டா ஓயூனுவின் வெளிப்பாட்டு வடிவமும் பார்வையாளர்களுடன் அது ஏற்படுத்தும் இயல்பான தொடர்பும் அதை மாயை சாராத நாடகமாக்கி விடுகிறது. அங்கு நடிகர் தான் நடிகர் என்ற அடையாளத்தை இழக்காத அதேவேளை பார்வையாளர் பற்றிய விழிப்புணர்வையும் கவனத்தில் கொண்டுள்ளார். பார்வையாளர்களிடம் இருந்து நடிகர்களின் இடம் வேறுபடுத்தப்படவில்லை. பார்வையாளர் பிரிவினரிடமிருந்து இவர்களை வேறுபடுத்தும் எல்லைக்கோடு கிடையாது. வட்டக்களரியில் இவ்வாட்டம் நடைபெறுகிறது. அரிஸ்டோடிலிய பாணியிலான கதைக் கரு (Plot) இங்கு கிடையாது. ஆனால் ஓர்ட்டா ஓயினூவானது கரகோஸ் பாவைக்கூத்தையும் மெதாவின் கதை சொல்லலையும் கலந்த வடிவமாகத் தனது கலை வடிவத்தைப் பூர்த்தி செய்கிறது.

துருக்கியின் நிகழ்த்து கலை இன்று வரை நீட்சி உடைய பல அரங்கியல் வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளது. துருக்கியின் நிகழ்த்து கலை வரலாறு பல நூற்றாண்டுகள் பழைமையானது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கிரேக்கத்தின் அரங்கியல் கலையின் செல்வாக்கினால் துருக்கி போசனை பெற்றிருந்தது. இஸ்தென்பூல் அரங்கியல், விழா, சர்வதேச அங்காரா அரங்கியல் விழா பழைய புதிய அரங்கக்கலையின் செல்வாக்கை வெளிப்படுத்தும் சர்வதேச நாடகவியல் விழாக்களாகும். இவை ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியின் அரங்கவியல் மரபைப் பேசும்போது எழுந்தமான அரங்கியல் (Improvisatory theatre) பற்றி வலியுறுத்திப் பேசப்படுகிறது. இது பொதுவாக ஏனைய அரபு – முஸ்லிம் நாடுகளின் அரங்கக் கலைக்கு பெரிதும் பொருந்தக்கூடிய கருத்தாகவும் கொள்ளலாம்.

எழுந்தமான அரங்கியல் மரபு இரு வேறுபட்ட சமூகச் சுற்றாடலை மையப்படுத்தி வளர்ச்சி பெற்றுள்ளது. ஒருவகை நாட்டாரியல் மரபு கிராமங்களிலும், மற்றொரு வகை மரபு பெரிய பட்டினங்களிலும், இஸ்தன்பூல் போன்ற பெரு நகரங்களிலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. துருக்கிக்கு உரியதெனப் பேசப்படும் பல நாட்டாரியல் நாடகக்கலை ஈரான், அஸர் பஞ்சான், ஈராக் போன்ற நாடுகளுக்கும் பொதுவாகவே இருந்துள்ளது.

எழுந்தமான அரங்கியல் அது கிராமப்புறங்களைச் சேர்ந்ததாயினும் நகர்ப்புறங்களைச் சேர்ந்ததாயினும் அதற்கான இலக்கியமோ எழுத்துப் பிரதிகளோ இருக்கவில்லை. இரண்டுமே எழுத்துக்கு எதிரானவை. நாடகாசிரியருக்கும் எதிரானவை. இரு நாடகங்களிலும் நடிப்பு இயல்பானதாக வெளிப்படுத்தப்படுகிறது. வெவ்வேறு வகையாக நடிகர்கள் அதை வெளியிடுகின்றனர். அது எழுந்தமானமாக நடைபெறுகிறது. மொழியும் அவ்வாறுதான். மொழி இயல்பாக எழுந்தமானமாகப் பேசப்படுகின்றது. எளிமையாகவும் நேரடியாகவும் அங்கு மொழி பயன்படுத்தப்படுகின்றது.

இவற்றிற்கென அரங்கியல் கட்டமைப்பு எதுவும் உருவாக்கம் செய்யப்படுவதில்லை. இவை ஆடப்படுவதற்கென்ற கொட்டகைகளும் கிடையாது. ஆடுமிடம் எப்போதும் நிலம் அல்லது நிலமட்டமாக இருக்கும். நிலமட்டத்தில் நின்று நடிப்பது இறுக்கமற்றது. நடிகர்களுக்கிடையிலும் பார்வையாளர்களுக்கும் நடிகர்களுக்கும் இடையிலும் நெருக்கத்தை இது கொண்டுவருகின்றது. மேட்டிக் மற்றும் அங்காரா போன்ற ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாட்டார் நாடகங்களில் நடிகர்கள் தொழில்வாண்மை என்ற தகுதியைப் பெற்றவர்கள் அல்ல. கிராம மக்கள் எல்லோருமே இந்நாடகங்களில் நடிக்க முடித்துள்ளனர். பார்வையாளர்களாகவும் நடிகர்களாகவும் கிராம மக்கள் நடந்து கொள்வர். மேலும் துருக்கிய தொன்மை நாட்டாரியல் நாடகக் கலைகளுக்கு சமயச் சடங்குகளின் தொடர்புகள் இருந்துள்ளன. 19ஆம் நூற்றாண்டில் மேற்கத்தேய மேடை நாடக அரங்க முறை அரபு – முஸ்லிம் நாடுகளில் பரவும் வரை மக்களின் அரங்கியல் கலை உணர்வுகளுக்கும் அரபு மக்களுக்கான தேசிய நாடகக் கலைக் கட்டமைப்புக்கும் இவைதான் பங்களிப்புச் செய்து வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வு மற்றும் தொகுப்பு முயற்சிகள்

பேராசிரியர் கி. விசாகரூபன்

## தோற்றுவாய்

நாட்டார் வழக்காற்றியல் இன்று அனைத்துலகக் கல்விப்புலமாக (International Discipline) வளர்ந்து வருகின்றது. அதனுடைய தாக்கங்கள், செல்வாக்குகள் ஈழத்திலும் உணரப் பட்டுள்ளன. நாட்டார் வழக்காற்றியல் குறித்த இவ்வாய்வானது, 'நாட்டார் வழக்காற்றியல்' என்ற அறிவுத்துறை ஈழத்தில் அறிமுகமான காலம் முதல் இன்றைய காலம் வரை அதன்மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் மற்றும் தொகுப்பு முயற்சிகள் பற்றி நோக்குவதாக அமைகின்றது. ஆய்வின் பிரதான திருப்பங்கள் பற்றியும், அத்திருப்பங்களுக்கு காலாய் அமைந்த ஆய்வுகள் மற்றும் தொகுப்புக்கள் பற்றியுமே இவ்வாய்வு கவனம் செலுத்தும். அவ்வகையில் 'நாட்டார் வழக்காற்றியல்' என்ற சொற்றொடர் குறித்து நிற்கும் விடயம் பற்றிய தெளிவு இவ்விடத்தில் அவசியமாகின்றது.

## நாட்டார் வழக்காற்றியல்: சுருக்க அறிமுகம்

'நாட்டார் வழக்காற்றியல்' என்றால் என்ன என்பது குறித்து அறிஞர்கள் பலரும் அதன் புறப்பண்புகளை (External Criteria) வைத்து வரையறுக்க முற்பட்டுள்ளனர்.[1] இத்தகைய வரையறுப்புக்களில் குறைபாடுகள் பல காணப்பட்டாலும் 'ஆலன் டண்டிஸ்' என்ற அறிஞர் தரும் நாட்டார் வழக்காற்று வடிவங்கள் பற்றிய பட்டியல் இப் புலமைத்துறையுள் உள்ளடங்கும் விடயங்கள் பற்றி ஓரளவு தெளிவுறுத்துவதாக அமைகிறது. பட்டியல் வருமாறு,

'புராணக்கதைகள், பழமரபுக்கதைகள், நாட்டார் கதைகள், நகைப்புக்கள், பழமொழிகள், விடுகதைகள், இன்னிசை உச்சாடனங்கள், மந்திரங்கள், வாழ்த்துக்கள், சாபங்கள், சபதங்கள், வசவுகள், எதிருரைகள், இடித்துரைகள், நையாண்டிகள், பாராட்டுக்கள், நாப்புரட்டுக்கள், வரவேற்புரைகள், விடைபெறும் வாய்பாடுகள், நாட்டார் ஆடைகள், நாட்டார் நடனம், நாட்டார் நாடகம், நாட்டார் கலை, நாட்டார் நம்பிக்கை, நாட்டார் மருத்துவம், நாட்டார் இசைக்கருவிகளின் வழி இசை, நாட்டார் பாடல்கள், நாட்டார் பேச்சு, நாட்டார் உவமைகள், நாட்டார் உருவகங்கள், பெயர்கள் (பட்டப்பெயர், இடப்பெயர்),[2] இவற்றுடன் விளையாட்டுக்கள், சைகைகள், குறியீடுகள், செபங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், மெத்தை உருவரைகள் (Designs), பின்னல் உருவரைகள், வீடுகள், களஞ்சியங்கள், வேலிகளின் வகைகள், கூவி விற்போர் குரலொலிகள், விலங்குகளை அழைப்பதற்கு அல்லது கட்டளையிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மரபொலிகள் முதலானவை நாட்டார் வழக்காற்றியல் பட்டியலுக்குள் அடங்குவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே சுட்டிய பட்டியலுள் அனைத்து வழக்காறுகளும் உள்ளடங்கியதாகக் கருதமுடியாது. இந்த வழக்காறுகளும் இவை பற்றிய கல்வியும் 'நாட்டார் வழக்காற்றியல்' எனப்படும்.

## ஈழத்தில் நாட்டார் வழக்கியல் ஆய்வுகள்: வகையும், பண்பும்

கி.பி. 18ஆம் நூற்றாண்டின் பின்னரைக் கூறுவரை மானிடவியலின் ஒரு பகுதியாக இருந்து வந்த நாட்டார் வழக்காற்றியல், 19 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தனித்த ஒரு ஆய்வுத்துறையாக சர்வதேச மட்டத்தில் வளர்ச்சி கண்டது. சமூக மாற்றங்கள் பலவற்றைச் சந்தித்த இக்காலப்பகுதி இதற்கான வாய்ப்பான சூழலமைவுகளை ஏற்படுத்தியது. சர்வதேச மட்டத்திலான தாக்கங்கள், செல்வாக்குகள் முதலியன காரண-மாக ஈழத்திலும் இத்துறை குறித்த ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின. இவை தனிநபர் நிலைப்பட்டவையாகவும், நிறுவன நிலைப்பட்டவையாகவும் அமைந்து காணப்பட்டன.

## பிரக்ஞைபூர்வமற்ற தனிநபர் நிலைப்பட்ட ஆய்வுகள்

மேலே குறித்த வகையிலான ஆய்வுகளைச் செய்தோர் தமது சொந்த விருப்பார்வத்தின் காரணமாகவோ, பொழுதுபோக்காகவோ அல்லது ஓய்வுநேர முயற்சியாகவோ நாட்டாரியல் பற்றிய ஆய்வுகளில், தொகுப்புக்களில் அது பற்றிய பிரக்ஞை இன்றித் தொழிற்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வகையான ஆய்வு முயற்சிகளே 'நாட்டார் வழக்காற்றியல்' பற்றிய ஈழத்தின் தொடக்கநிலை ஆய்வுகளாக இனங்காணப்பட்டன. ஏறத்தாழ 1960கள் வரை இவ்வாறான முயற்சிகளே தொடர்ந்ததெனக் கூறலாம்.

ஈழத்துக்கு வருகைதந்த ஆங்கிலேய மிஷனரிமாரும், ஆங்கிலேய அரசுகளினால் நியமிக்கப்பட்ட துறைத்தன உத்தியோகத்தகர்களும் இவ் இருவகைப்பட்ட பிரிவினர்களதும் முயற்சிகளினால் கவரப்பட்ட சுதேசிகளும் இவ்வகையான ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டனர்.[3] இவர்களால் அவ்வப்போது எழுதிவைக்கப்பட்ட 'குறிப்புக்களே' ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வுகளின் 'மூலங்கள்' (Origins) எனக் கருதப்பட்டன. பீற்றர் பேர்சிவல், லாஸரஸ், ஜென்சன், டபிள்யூ.எச். கிளார்க், ஜோன் ஹென்றி, லெவிஸ், எச். ஹோஸ்கி, எச். நெவில், சைமன் காசிச்செட்டி, கனகசபைப்பிள்ளை, வ. குமாரசாமிப பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், மு. இராமலிங்கம், எம்.டி. இராகவன், குல. சபாநாதன் முதலியோர் இவர்களிற் சிலராவார்.

மேலைத்தேசவர்களான மிஷனரிமார்களுக்கும் துறைத்தன உத்தியோகத்தாருக்கும் கீழைத்தேசவர்களது வாழ்வியல் நடைமுறைகளைத் தெரிந்துகொள்வதிலிருந்த ஆர்வமும், சமயம் அல்லது நிர்வாகத் தேவைகளுமே இவர்களை இவ்வாறான முயற்சிகளில் இட்டுச் சென்றதாகக் கருதலாம். இவர்களுடைய ஆய்வுப்புலங்களில் பழமொழி, சாதியமைப்பு, நாட்டுப்புற விளையாட்டு, சடங்கு, நாட்டார்பாடல், பழக்கவழக்கங்கள் முதலானவை பிரதான இடம் பிடித்தன. தனிமனித நிலைப்பட்ட இவ்வாறான ஆய்வுகளில் பெரும்பாலானவை 'விவரண' நிலைப்பட்டனவாகவே காணப்பட்டன. 'நாட்டார் வழக்காற்றியல்' தொடர்பான முறையியலில் எந்தவிதமான பயிற்சிகளும் இவர்களுக்கிருந்ததாகச் சொல்லமுடியாது. தொகுத்தல், ஆவணப்படுத்தல், விவரித்தல் இவையே இவர்களது முயற்சிகளுக்கான அடிப்படைகளாகத் தொழிற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரக்ஞை பூர்வமான நிறுவன நிலைப்பட்ட ஆய்வுகள்

பிரக்ஞை பூர்வமான ஆராய்ச்சி முயற்சிகளின் சாயல்கள் ஈழத்தைப் பொறுத்தவரை 1960 களின் முன்பின்னாக முளைவிடத் தொடங்குகின்றன. தமிழ்நாட்டிலும் இக்காலப் பகுதியில்தான் 'நாட்டார் வழக்காற்றியல்' என்ற புலமைத்துறை கல்விப்புல எல்லைக்குள் வருவதனை அவதானிக்கலாம்.[4] இவ்வகையான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய முறையியல் நுட்பங்களை அறிந்தவர்களாகவும் கல்வி, உயர்கல்வி நிறுவனங்களுடன் தம்மை இணைத்துக்கொண்டவர் களாகவும் காணப்பட்டனர். பேராசிரியர்கள், க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கா. இந்திரபாலா, அ. சண்முகதாஸ், இ. பாலசுந்தரம், சி. மௌனகுரு, க. அருணாசலம்[5] கலாநிதிகளான செ.சுந்தரம்பிள்ளை, நு.ஃமான் முதலியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பேராசிரியர். க. கைலாசபதியின் முயற்சிகளினால் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் 'நாட்டார் வழக்காற்றியல்' ஒரு பாடமாக (As a Subject) உள்வாங்கப்படுவதற்கான அவசியம் உணர்த்தப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது. இந்நிலையில் பிரக்ஞைபூர்வமான ஆய்வுகள் பலவும் நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்படலாயின. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் முதலானவை வாயிலாக இம்முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடாத்திய 'இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல்' கருத்தரங்கு இவ்விடத்தில் விதந்து குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பேராசிரியர். அ. சண்முகதாஸ் குறிப்பிடுவதுபோல, இக் கருத்தரங்கிலேதான் ஈழத்து நாட்டாரியல் பரப்பினை ஓரளவு இனங்காணும் முயற்சியும், இத்துறையில் பல்வேறுபட்ட கூறுகளிலே சிறிதளவிலாவது ஆய்வு செய்கின்ற முயற்சிகளும் முனைப்புப் பெற்றன.[6] இக் கருத்தரங்குக் கட்டுரைகள் பின்னர் பேராசிரியர். கா. சிவத்தம்பியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியீடு செய்யப்பட்டன. இம்முயற்சி, இத்துறை குறித்த ஆய்வு முயற்சிகளைப் புதியதொரு பரிணாமத்திற்கு இட்டுச்சென்றது.

1960 களின் பின்புதான் நாட்டார் வழக்கியல் சார்ந்த ஆய்வு முயற்சிகளை அவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட புலங்களை (Field) அடிப்படையாகக் கொண்டு நோக்குதலே பொருத்தமானதாகும். இவை பெரும்பாலும் பின்வரும் துறைகளின்மீதே மேற்கொள்ளப்பட்டதனை அவதானிக்க முடிகிறது.

1. நாட்டார்பாடல், நாட்டார்இசை
2. நாட்டார் கதை
3. நாட்டார் அரங்கு
4. நாட்டார் பண்பாடு
5. பழமொழி, விடுகதை
6. இடப்பெயராய்வு

## நாட்டார்பாடல் மற்றும் நாட்டார்இசை

ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் கூறுகளில் நாட்டார்பாடலே இத்துறை குறித்த ஆய்வாளர் பலரதும் புலமைச்சிரத்தைக்குரிய கூறாக இருந்து வந்துள்ளதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கலாம். நாட்டார்பாடல் பற்றிய ஆய்வு முயற்சிகள் ஏறத்தாழ ஐம்பதுகளின் முன்பின்னாக மேற்கொள்ளப்படலாயின. இம்முயற்சிகள் தனிநபர் முயற்சிகளாகவும், நிறுவன முயற்சிகளாகவும் அமைந்தன. இலங்கை சுதந்திரம் அடைந்தபின் மொழி, பண்பாடு, வரலாறு ஆகிய துறைகளில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இப்பின்னணியில் 1953இல் அரசாங்க உதவியுடன் இலங்கைக் கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகம் நாட்டார் பாடல்களைச் சேகரித்து வெளியிடும் பணியை மேற்கொண்டது. சமகாலத்தில் பிரதேச ரீதியான கலாமன்றங்கள் பலவும் நிறுவப்பட்டு, மாவட்ட ரீதியாகவும் நாட்டார் பாடல்களைச் சேகரிக்கும் முயற்சிகளும் முனைப்புப் பெற்றன.

நாட்டார்பாடல் தொடர்பான பல்வேறு தொகுப்புக்களும், கட்டுரைகளும் இக்காலத்தில் வெளிவந்தன. பெரும்பாலும் கட்டுரைகளே அதிகம் வெளிவந்தன எனலாம். இவை தினகரன், ஈழகேசரி, ஈழநாடு, வீரகேசரி, சுதந்திரன், சிந்தாமணி முதலான பத்திரிகைகளிலும் இளம்பிறை, ஸ்ரீலங்கா, அஞ்சலி, பூம்பொழில், நுட்பம், வளர்மதி, ஆராய்ச்சி, வெற்றிமணி, கமத்தொழில் விளக்கம், கலைமகள் முதலான கலையிலக்கியச் சஞ்சிகைகளிலும் உலகத் தமிழாராய்ச்சி மற்றும் மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் முதலான பிரதேச ரீதியான தமிழாராய்ச்சி மாநாட்டு மலர்களிலும் வெளிவந்தன.

இவ்வாறான ஆராய்ச்சி மற்றும் தொகுப்பு முயற்சிகளில் ஈடுபட்டவர்களுள் தி. சதா சிவஐயர், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், பேராசிரியர்கள், சு. வித்தியானந்தன், இ. பாலசுந்தரம், அ. சண்முகதாஸ், மற்றும் குல. சபாநாதன், எப்.எக்ஸ்.சி. நடராசா, நவசோதி கணபதிப்பிள்ளை, மாற்றாஸ்மெயில், த. சண்முகசுந்தரம், வி.சி. கந்தையா, அருள். செல்வநாயகம், சி.வி. வேலுப்பிள்ளை, சாரல் நாடன், கோமஸ், மாத்தளை சோமு, எஸ். முத்துமீரான், ஆ.மு. ஷரிப்புத்தீன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் நாட்டார் பாடல்களைப் பிரதேச ரீதியாக பதிப்பிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டினார்.[7] அத்துடன் நாட்டார் பாடல்கள் தொடர்பாகப் பல கட்டுரைகளையும் எழுதினார். பேராசிரியர். இ. பாலசுந்தரத்தினுடைய கலாநிதிப்பட்ட ஆய்வான 'மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள்: ஆய்வும் மதிப்பீடும்' (1979) என்ற தலைப் பிலான ஆய்வு முயற்சி ஈழத்து நாட்டார்பாடல்கள் தொடர்பான ஆய்வுகளில் குறிப்பிட்ட ஒரு பரிணாமத்தை இனங்காட்டுவதாகும். ம. இரகுநாதன் என்பவர் சிலம்பு கூறலைப் பதிப்பித்தார். பேராசிரியர்கள். க. கைலாசபதி, அ. சண்முகதாஸ், சு. சுசீந்திர ராஜா, எம்.ஏ. நு..மான் முதலானோர் மொழியியல், சமூகவியற் பின்னணியில் நாட்டார் பாடல்களை ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

ஈழத்து நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வுகளில் கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தினால் கா.பொ.த. (சா. த) தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கு அமைய வெளியிடப்பட்ட 'நாட்டார் பாடல்கள்' (1976) என்ற தொகுப்பும் அதற்கான முன்னுரையும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முயற்சிகளாகும். மேலே குறிப்பிட்ட முயற்சிகளெல்லாம் பல்கலைக்கழக மட்டத்தோடு தொடர்புடையனவாக அமைந்தன.

வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் அவர்களுடைய பணிகள் இவ்விடத்தில் சிறப்பான கவனத்திற்குரியன. இவருடைய நாட்டார் பாடல் தொகுப்புக்களில் இலங்கை நாட்டுப் பாடல்கள் (1957), கிராமக் கவிக்குயில்களின் ஒப்பாரி (1960), வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள் (1961), நாட்டார் பாடல்களில் பாண்டித்தியம் (1971) முதலானவை குறிப்பிடத்தக்கனவாகும். மற்றாஸ்மெயில் என்பவர் 'வன்னிவள நாட்டார் பாடல்கள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1980) என்ற தொகுப்பினை மொழியியல் பாடாந்தரத் திறனாய்வுக்கமைய பதிப்பித்து வெளியிட்டார்.

நாட்டார் இசை தொடர்பாக சிலர் கட்டுரைகளை எழுதினர். சுவாமி விபுலானந்தர், பேராசிரியர். க. கைலாசபதி முதலானோர் நாட்டார் இசை மரபுகளை செந்நெறி இசை மரபுகளுடன் பொருத்திப்பார்த்துச் சில கட்டுரைகளை எழுதினர். பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் 'நாட்டார் இசை இயல்பும் பயன்பாடும்' (1991) என்ற நூலை எழுதினார். இந்நூல் இத்துறை குறித்த நுண்ணாய்வாக அமைந்தது.

இலங்கை நாட்டுப்பாடல்களின் தொகுப்பு முயற்சிகளில் கதைப்பாடல்களும் முக்கியத்துவம் பெறுவனவாகும். 1800 களில் வெளிவந்த 'கண்டிராஜன் ஒப்பாரி' 1980 களில் மற்றாஸ்மயில் தொகுத்து வெளியிட்ட 'வன்னிவள நாட்டுப்பாடல்கள்' என்ற தொகுப்பில் உள்ளடங்கும் கதைப்பாடல்கள் என்பன இவ்விடத்தில் முக்கியமாகச் சுட்டப்படத்தக்கனவாகும்.

நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வுகளும், தொகுப்புக்களுமாக வெவ்வேறு காலப்பகுதிகளில் பல்வேறு நூல்கள் வெளிவந்தனவாயினும் அவை அனைத்தையும் இவ்விடத்தில் பட்டியலிடுதல் என்பது இயலாத விடயமாகும்.[8]

## நாட்டார்கதை

ஈழத்தமிழர் நாட்டார் இலக்கியத் தொகுப்புமுயற்சிகளில் நாட்டார்கதைத் தொகுப்பு முயற்சிகளும் முக்கியமானவையாகும். இம்முயற்சிகளின் தொடக்கப்புள்ளிகளாக அமைவது எஸ். விஜயவர்த்தனா, A.J. குணவர்த்தன ஆகியோரது கூட்டு முயற்சியில் வெளிவந்த 'இலங்கை நாட்டார் கதைகள்' (தொகுதி I, II, III) என்ற தலைப்பிலான தொகுதிகளாகும். இவற்றுள் இரண்டாவது தொகுதி மட்டுமே கிடைக்கும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்புக்கள் வெளிவந்த ஆண்டு விபரங்கள் கிடைக்குமாறில்லை. 1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் இத்தொகுதிகள் வெளிவந்திருக்க வேண்டும்

திரு. எதிர்மன்னசிங்கம் என்பவர் மட்டக்களப்புத் தமிழரிடையே வழக்கிலிருந்த சில கதைகளைத் தொகுத்து 'மட்டக்களப்பு மாநில உபகதைகள்' என்ற தலைப்பில் வெளியிட்டார்.

2009இல் பேராசிரியர் கி. விசாகரூபன் அவர்கள் 'ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள்' என்ற தலைப்பிலான நூலொன்றை வெளிக்கொணர்ந்தார். ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட கதைகள் பலவும் இத்தொகுப்பில் உள்ளடங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுப்புறக்கதைகள் தொடர்பிலான குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஆய்வாக அமைவது கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் திரு. கோ. குகன் என்பவரால் நிகழ்த்தப்பட்ட 'கிழக்கிலங்கை நாட்டார் கதைகள் புலப்படுத்தும் சமூக பண்பாட்டு மரபுகள்' (2011) என்ற தலைப்பிலான ஆய்வாகும்.

## நாட்டார் அரங்கு பற்றிய ஆய்வுகள்

ஈழத்து நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வு முயற்சிகளை அவதானிக்கும்போது நாட்டார் பாடலுக்கு அடுத்தபடியான ஆய்வுநிலை முக்கியத்துவம் 'நாட்டார் அரங்கு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியதாகவே இருந்துவந்துள்ளதனை அவதானிக்க முடியும். நாட்டார் அரங்கைப்பற்றிய ஆய்வு முயற்சிகள் இரண்டு நிலைகளில் நடைபெற்றன. சிலர் இந்த இரண்டு நிலைகளிலும் நின்று நாட்டார் அரங்கை ஆராய்ந்தார்கள். அவையாவன,

1. இலக்கிய நிலைநின்ற ஆய்வுகள்
2. அரங்க நிலைநின்ற ஆய்வுகள்

## இலக்கிய நிலைநின்ற ஆய்வுகள்

நாட்டார் அரங்கைப்பற்றிய ஆரம்பநிலை ஆய்வுகள் விமர்சனங்கள் என்பன பெரும்பாலும் இலக்கிய நிலைநின்ற ஆய்வு முயற்சிகளாகவே காணப்பட்டன. இவ்வகையான ஆய்வு களில் ஈடுபட்டவர்கள் பலராவர். இவர்களில் பெரும்பாலானோர் தத்தமது பிரதேசங்களில் ஆடப்பட்டுவந்த கூத்துக்கள் பற்றி அவ்வப்போது பத்திரிகைகளிலும், பருவ இதழ்களிலும், வானொலிக்கும் எழுதி வந்தார்கள். வட இலங்கைக் கூத்துக்கள் பற்றி வ. குமாரசாமி, எம்.எஸ். திருவிளங்கம், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் முதலானோரும் மன்னார் பிரதேசத்துக் கூத்துக்கள் பற்றி பென்ஜமின் செல்வம், மக்ஸிமஸ்லம்பேட் முதலானோரும், வன்னிக்கூத்துக்கள் பற்றி முல்லைமணி, சுப்பிரமணியம், மற்றாஸ்மெயில் போன்றோரும், மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றி எப்.எக்ஸ்.சி. நடராசா, வீ.சி. கந்தையா முதலியோரும், மலையகக் கூத்துக்கள் பற்றி சி.வி. வேலுப்பிள்ளை போன்றோரும் அவ்வப்போது எழுதிவந்தனர். கத்தோலிக்கக் கூத்துமரபு பற்றி சுவாமி ஞானப்பிரகாசர், பாவிலுப்பிள்ளை அடிகளார், தியோகுப்பிள்ளை அடிகளார் முதலானோர் எழுதிவந்தனர். பேராசிரியர்கள். சு. வித்தியானந்தன், இ. பாலசுந்தரம் முதலானோர் சகல பிரதேசத்து நாட்டுக்கூத்து மரபுகள் பற்றியும் ஆய்வுக்கட்டுரைகள் எழுதினர்.

வ. குமாரசுவாமி என்பவர், 'கதிரமலைப்பள்ளு' என்ற நூலுக்கு எழுதிய பதிப்புரையும், கலையரசு, சு. சொர்ணலிங்கத்தின் 'ஈழத்தில் நாடகமும் நானும்' என்ற நூலும் க. சொர்ணலிங்கத்தின் 'ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி' என்ற நூலும் இவ்வாறான ஆக்கங் களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கனவாகும்.

மேலே குறிப்பிட்ட ஆய்வுகளிற் பெரும்பாலானவை இரசனை முறையில் அமைந்தன வாகக் காணப்பட்டன. இவை பெரும்பாலும் தரவுக் களஞ்சியங்களாகவே தவிர்க்க முடியாதபடி அமைந்தன. ஆயினும் நாட்டார் அரங்கு குறித்த அரங்க நிலைநின்ற ஆய்வுகளுக்கு இவையே அடிப்படைகளாகவும் அமைந்தன.

## அரங்க நிலைநின்ற ஆய்வுகள்

நாட்டார் அரங்குமீது அரங்கநிலை நின்று ஆய்வு செய்தவர்களுள் பேராசிரியர்கள். சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, சி. மௌனகுரு, இ. பாலசுந்தரம், கலாநிதி. செ. சுந்தரம்பிள்ளை முதலானோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பேராசிரியர். சு. வித்தியானந்தன், 'ஈழத்து நாட்டார் அரங்கு' குறித்த ஆய்வுகளின் முன்னோடிகளில் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார். சமகாலத்தில் சிங்கள மக்களுடைய நாட்டார் அரங்கு குறித்து ஆராய்ந்தவர்களான பேராசிரியர். சரத்சந்திரா, தம்ஜாகொட முதலானோர்களுடைய முயற்சிகளும், பேராசிரியர். க. கணபதிப்பிள்ளையினுடைய ஊக்கமும் இவரை இத்துறையில் ஊக்கப்படுத்தின. கூத்துநூல்களைப் பதிப்பித்தமை, அரங்கு குறித்த கட்டுரைகளை எழுதியமை[9] கலைக்கழகத் தலைவராக இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவிமார் மகாநாடுகளையும், கூத்துப்போட்டிகளையும் நடாத்தியமை, பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு தாமே கூத்துக்களைத் தயாரித்தமை முதலான செயற்பாடுகள் பேராசிரியரது பணிகளில் விதந்து குறிப்பிடக்கூடியனவாகும். நாட்டார் அரங்குமீது இவர் மேற்கொண்ட ஆய்வுகளும், பரிசோதனை முயற்சிகளும் விரிவான தனியான ஆராய்ச்சிக் குரியன.

1960களில் அரங்க நிலைநின்ற ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பேராசிரியர். சி. மௌனகுரு 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களை' ஆராய்ந்து கலாநிதிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். மேலும் நாட்டார் அரங்கு குறித்துப் பல்வேறு கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டார்.[10] கலாநிதி. செ. சுந்தரம்பிள்ளை 'வடஇலங்கை நாட்டார் அரங்கு' பற்றி ஆராய்ந்து கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். மேலும் ஈழத்து இசைநாடக வரலாறு (1990), வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996) முதலான நூல்களையும் வெளியிட்டார். இவ்வாய்வுகள் அரங்க நிலைநின்ற ஆய்வுகளைப் புதியகோணத்தில் இட்டுச்சென்றன.

இவ்விடத்தில் சி. மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம், தாசீசியஸ் முதலானோர் ஈழத்தின் பாரம்பரிய நாடக வடிவமான நாட்டுக்கூத்துக்களில் செய்த பரிசோதனை முயற்சிகள் பற்றியும் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். பாரம்பரியமான நாட்டார்கூத்து வடிவங்களுள் சமூகத்தில் உக்கிரமடைந்திருக்கும் சமகாலப் பிரச்சினைகளை எடுத்துக் கூறமுனைந்ததன் விளைவாக 'சங்காரம்', 'ஏர்முனை வேலன்', 'போடியார் மாப்பிள்ளை', 'கந்தன் கருணை', 'கோபுர வாசல்', 'இராமாயணம்', 'களத்தில் காத்தான்' முதலான படைப் புக்கள் வெளிக்கொணரப்பட்டன.

பேராசிரியர் சு. வித்தியானந்தனது நாட்டார் அரங்கு பற்றிய முயற்சிகளினால் கவரப் பட்ட பேராசிரியர். கா. சிவத்தம்பி, அரங்கு பற்றிய பல்வேறு கட்டுரைகளையும், பதிப்புரைகளையும் எழுதினார். இம் முன்னுரைகளும், பதிப்புரைகளும் அளவில் சிறியன வாயினும் புதிய சிந்தனைகள் பலவற்றைத் தூண்டக்கூடியனவாகவும் இத் துறையின்பால் விரிவான ஆராய்ச்சிகளை ஆற்றுப்படுத்துவனவாகவும் அமைந்தன[11] எனத் துணிந்து கூறலாம்.

பேராசிரியர். இ. பாலசுந்தரம், நாட்டார் அரங்கு குறித்து கட்டுரைகள் பலவற்றை எழுதினார். ஏட்டுப் பிரதிகளிலிருந்த 'காத்தவராயன்' கூத்தினை நூலாகப் பதிப்பித்து வெளியிட்டார். பேராசிரியர். சு. வித்தியானந்தன் பாணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களையும், ஊழியர்களையும் இணைத்துக்கொண்டு கோவலன்கூத்து, காத்தவராயன் கூத்து, சத்தியவான் சாவித்திரி முதலான நாடகங்களை மேடையேற்றினார். ஈழத்தமிழர்களின் நாட்டார் வழக்காறுகளைப் பேணவென 'யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்' என்ற அமைப்பொன்றையும் உருவாக்கிச் செயற்படுத்தினார். இன்றுவரை அந்த அமைப்பு இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டார் பண்பாடு பற்றிய ஆய்வுகள்

ஈழத்தமிழர் நாட்டார் பண்பாடு குறித்து முறையான முழுநிலையான ஆய்வுகள் எவையும் இதுவரை வெளிவரவில்லை என்றே கூறலாம். பலரும் நாட்டார் பண்பாட்டின் சிற்சில கூறுகள் மீது கட்டுரைகளை எழுதிவந்தார்கள். இவை தமிழிலும், ஆங்கிலத்திலுமாக எழுதப்பட்டன.[12] மேல்நாட்டவரும், சுதேசிகளும் மேலே குறிப்பிட்ட முயற்சிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டனர். சாதிப்பிரிவுகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் முதலானவை ஆரம்பகாலக் கட்டுரைகளின் ஆய்வுப்பொருள்களாக அமைந்தன.

ஈழத்தமிழர் நாட்டார் பண்பாட்டியற் கூறுகள் பலவற்றையும் பெருமளவில் பதிவு செய்துள்ள தனிநூல்கள் என்ற வகையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் 'காதலியாற்றுப்படை' (1950), 'ஈழத்து வாழ்வும் வளமும்' (1962) ஆகிய நூல்கள் சிறப்பிடம் பெறுபவை. அத்துடன் வீ.சி. கந்தையாவினுடைய 'மட்டக்களப்புத் தமிழகம்' (1964), எப்.எக்ஸ்.சி. நடராசாவினுடைய 'மட்டக்களப்பு மான்மியம்' (1962), கலாநிதி ம. சண்முகதாஸ் அவர்களுடைய 'சாதியும் துடக்கும்' (1991), எஸ். பொன்னுத்துரையினுடைய 'நனவிடைத் தோய்தல்' (1992) மற்றும் கே. டானியல் முதலானோர்களுடைய நாவல்கள் என்பன இவ்விடத்தில் சிறப்பான கவனத்திற்குரியன.

அண்மைக்கால வரவுகளில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவினால் எழுதப்பட்ட நூல்களான 'யாழ்ப்பாணத்து வாழ்வியல் கோலங்கள்', 'யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும்' என்பன முக்கியமானவையாக உள்ளன. ஈழத்தமிழர் பண்பாட்டின் பல்வேறு கூறுகள் குறித்த பொதுநிலை அறிமுகத்தை இந்நூல்களில் பார்க்கமுடிகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பழமொழி, விடுகதைகள் பற்றிய ஆய்வு

ஈழத்துப் பழமொழிகள், விடுகதைகள் என்பன குறித்த விரிவான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. பலரும் தொகுப்பு முயற்சிகளில் ஆர்வம்காட்டி வந்துள்ளமை யினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தமிழ் மக்களிடையே வாய்மொழி மரபில் வழங்கிவந்த பழமொழிகள் முதன்முதலில் பீற்றர் பேர்சிவல் பாதிரியாரால் தொகுக்கப்பட்டு ஆங்கில மொழிபெயர்ப்புடன் 1843 இல் வெளியிடப்பட்டது. 1888 இல் சத்தியநடேசன் என்பவர் 'பழமொழிகளினதும் தொடர்களினதும் கையேடு' என்ற நூலை வெளியிட்டார்.[13] தொடர்ந்து 1894இல் ஜோன் லாசரஸ் என்பவர் 'தமிழ்ப் பழமொழிகளின் அகராதி' என்ற நூலை வெளியிட்டார். 1897இல் சி.வை. தாமோதரம்பிள்ளையின் முன்னுரையுடன் செர்மன் ஜென்சன் என்பவர் தமிழ்ப் பழமொழித்தொகுதி ஒன்றினை வெளிக்கொணர்ந்தார். இப்பதிப்பு பலராலும் விதந்து குறிப்பிடப்பட்டது.

தொகுப்பு முயற்சிகளைத் தொடர்ந்து பழமொழிகளை விளக்குவதும், ஆய்வுசெய்வதுமான செயற்பாடுகள் நடைபெறலாயின. மு. இராமலிங்கம், எப்.எஸ்.சி. நடராசா, என். செல்வராஜா முதலானோர் இவர்களிற் சிலராவார். மிக அண்மைக்காலத்தில் சச்சிமாஸ்டர், கோப்பாய் சிவம் போன்றோர்[14] பழமொழித் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளனர். ஆ. சிவனேசச்செல்வன், பேராசிரியர். இ. பாலசுந்தரம் முதலானோர் பழமொழிகள் பற்றி ஆராய்ந்து கட்டுரைகள் எழுதினர்.[15]

திரு. தம்பிஐயா தேவதாஸ் என்பவர் 2009 ஆம் ஆண்டு 'இணைப்பழமொழிகள்' (சிங்களம் + தமிழ்) என்ற தலைப்பில் இருமொழிப் பாரம்பரியத்திலும் வழக்கிலிருந்துவரும் பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டார். பழமொழிகள் தொடர்பில் இந்நூலும் முக்கியத்துவமுடைய ஒரு நூலாக விளங்குகிறது.

விடுகதைகளைப் பெறுத்தவரை மு. இராமலிங்கம் என்பவர் 'களவுக்காதலர் கையாண்ட விடுகதைகள்' (1962), 'பொதுஅறிவு விடுகதைகள்' (1970) ஆகிய தொகுப்புக்களை வெளியிட்டார். கோப்பாய் சிவம் யாழ்ப்பாணப் பிரதேசத்து விடுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவற்றைச் சேகரித்துச் சிறுசிறு நூல்களாக வெளியிட்டார். இவை 'நொடியும் விடையும்' என்ற தலைப்பில் வெளிவந்தன.

பழமொழி, விடுகதை பற்றி நாட்டாரியல் சார்ந்த முறையியல் நுட்பத்துடன் ஆராயும் பண்பு ஈழத்தில் இன்னமும் தொடங்கப்படவில்லை.[16] பல்கலைக்கழக மட்டங்களில் தமிழ்ச் சிறப்புக்கலை இறுதியாண்டுத் தேர்வின் ஒரு பகுதியான ஆய்வுக் கட்டுரைக்குச் சிலர் இவற்றை எடுத்து ஆராய முற்பட்டுள்ளனர்.[17] ஆயினும் பேராசிரியர். அ. சண்முகதாஸ் குறிப்பிடுவது போல விடுகதைகளின் அமைப்பு, அவற்றின் பயன்பாடு, கிராமச் சொற்றொடர்வழக்கு ஆகியன பற்றி எவரும் நுண்ணாய்வு செய்ததாகத் தெரியவில்லை.[18]

## இடப்பெயர் பற்றிய ஆய்வுகள்

விஞ்ஞான ரீதியாக இடப்பெயர்களை ஆராயும் முறை இன்று உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆயினும் ஈழத்தில் இத்துறை குறித்த ஆய்வுகள் பெரிதும் முனைப்படையவில்லை என்றே கூறலாம். சைமன் காசிச்செட்டி, சுவாமி ஞனப்பிரகாசர், எஸ்.டபிள்யூ. குமாரசாமி, ஹார்ஸ் பேர்க், எஸ். சபாரத்தினமுதலியார் முதலானோர் இத்துறை ஆய்வின் முன்னோடிகளாக உள்ளனர். இதனைத்தொடர்ந்து ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளின் பின்பு இத்துறை குறித்த மேலும் சில நூல்கள் வெளிவந்தன. இவற்றை ஆங்கிலேய அரச அதிகாரிகளும், நீதிபதிகளும், சுதேசிகளும் எழுதினர்.

மேலே குறிப்பிட்ட முயற்சிகளில் இடப்பெயராய்வின் நெறிமுறைகளாக ஊர்ப்பெயர் களைத் தொகுத்தல், செய்திகளைச் சேகரித்தல், அடையாளம் காணுதல், விளக்குதல், வெளியிடுதல்[19] முதலான பண்புகளை இனங்காணமுடியவில்லை. பேராசிரியர். இ. பாலசுந்தரம், வடமராட்சி, தென்மராட்சி, காங்கேசன் கல்வி வட்டாரத்து இடப்பெயர்களை முறையாக ஆராய்ந்து நூல்களாக வெளியிட்டார். இம்முயற்சிகளில் பேராசிரியர். இ. பாலசுந்தரம் கையாண்ட நெறிமுறைகள் குறித்து இந்நூல்களிலொன்றுக்கு எழுதிய மதிப்புரையில் பேராசிரியர். ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிட்டுச் சொல்கிறார்.[20] உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய இடப்பெயர்கள் குறித்தும் இவர் ஆராய்ந்தாராயினும் அவை இன்னும் அச்சேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கு. பகவதி என்பவரும் இலங்கை இடப் பெயர்கள் சிலவற்றைப் பற்றி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு செய்தார். இவையே ஈழத்து இடப்பெயராய்வு குறித்த இன்றைய நிலையாகும்.

## மதிப்பீடு

ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பாக இதுவரை வெளிவந்த தொகுப்புக்களையும், ஆய்வுகளையும் நோக்குமிடத்து தொகுப்பாளர்களதும், ஆய்வாளர்களதும் புலமைச்சிரத்தை என்பது வாய்மொழி இலக்கியம் (Verbal Lterature) மேலேயே அதிகமாக ஈர்க்கப்பட்டிருப்பதனை அவதானிக்கமுடிகிறது. அதிலும் நாட்டார்கதைகள், பழமொழி, விடுகதை, மொழிவழக்குகள் முதலானவற்றின் மீதான ஆய்வுகள் இல்லை என்று சொல்லுமளவிற்கு அருந்தலாகவேயுள்ளன. பழமைபோற்றும் பண்பும், விவரணத்தன்மைகளும் இவ்வகையான ஆய்வுகளின் பிரதான குறைபாடுகளாக உள்ளன.

வாய்மொழி இலக்கியத்தின் ஒரு கூறாகிய நாட்டார் பாடல்கள் தொடர்பாக நிகழ்த்தப் பட்ட தொகுப்புக்கள், அவை தொகுக்கப்பட்ட நிலையிலும், பதிப்பிக்கப்பட்ட நிலையிலும் பல்வேறு குறைபாடுகளை உடையனவாக உள்ளமை பற்றியும் இவ்விடத்தில் சுட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுதல் வேண்டும். மெற்றாஸ் மயிலினுடைய 'வன்னிவள நாட்டார் பாடல்கள்' என்ற தொகுப்பு இவற்றிற்குப் புறநடையாக உள்ளது. ஆய்வுகள் என்ற நிலையில் பேராசிரியர். இ. பாலசுந்தரம் அவர்களின் 'ஈழத்து நாட்டார் பாடல்கள்' (மட்டக்களப்பு மாவட்டம்): ஆய்வும் மதிப்பீடும் என்ற முயற்சி அமைப்பியல் ஆய்வுமுறையினை உள்வாங்கிய நிலையில் ஈழத்து நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றது.[21]

இலங்கையில் நாட்டாரியலைத் தமிழ் இலக்கியக் கல்வியின் ஒரு பகுதியாகக் கற்பிக்கும் நிலை தொடர்வதானது வாய்மொழி இலக்கியம் தொடர்பான ஆய்வுகளுக்கு மேலும் ஊக்கமளிப்பதாக உள்ளது. இங்கு நடைபெறும் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வுகளை, வழக்கங்கள் சார்ந்த நாட்டார் வழக்காறுகள் (Customary Folklore) மற்றும் பொருள்சார்ந்த நாட்டார் மரபுகள் (Material Folk Traditions) முதலான கூறுகள் மீதும் திருப்பி விடவேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்து மக்களுடைய வழக்காறுகளை மட்டுமே முனைப்புறுத்தி ஆராயும் நிலை விஸ்தரிக்கப்பட்டு ஈழத்தில் தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், மலையகம் மற்றும் முஸ்லீம்கள் செறிந்து வாழும் இடங்களான திக்குவல்லை, மினுவாங்கொடை, பொலனறுவை, அனுராதபுரம் முதலான பகுதிகளிலுள்ள மக்களுடைய வழக்காறுகள் மீதும் ஆய்வுகள் செய்யப்படும்போதே ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் முழுமைபெறும்.

நாட்டார் வழக்காற்றியற் கூறுகளை மானிடவில், சமூகவியல், உளவியல், வரலாறு, மொழியியல் முதலான பிற துறைகளுடன் இணைத்து ஆய்வு செய்கின்ற தன்மை (Inter Disciplinary Study) ஈழத்தில் குறைவாகவேயுள்ளது. பேராசிரியர் அ. சண்முகதாஸ்[22] என். சண்முகலிங்கன்[23] முதலானோர் இத்துறையின் சில கூறுகளை முறையே மொழியியல், சமூகவியல் பின்னணியில் ஆராய்ந்துள்ளனர்.

நாட்டாரியலை தனித்ததொரு ஆய்வுத்துறையாக உருவாக்கி வளர்க்க வேண்டியது ஈழத்தைப் பொறுத்தவரை அவசரமானதும், அவசியமானதுமான நடவடிக்கையாக உள்ளது.

## அடிக்குறிப்புக்கள்

1. மரியாலீச், ஜோன்பாலிஸ், வில்லியம்பாஸ்கம், பி.ஏ. போட்கின் ஸ்ரீபன் பியூக்ஸ் முதலானோர் இவர்களிற் சிலராவார்.
2. Dundes, Alan (1965), The Study of Folklore, Now Jersy: Englewood Cliffs: Prentice Hall, P. 3.
3. கைலாசபதி. க., (1980), இலங்கையில் தமிழ்நாட்டார் வழக்கியல் ஆய்வுகள் வந்தவையும் வரவேண்டியவையும், இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், பக். 03 – 04.
4. லூர்து.எஸ்.டி., (1995), நாட்டார் வழக்காற்றுக் கோட்பாடுகளும் அணுகுமுறைகளும், தமிழ் நாட்டார் வழக்காற்றியல், ப. 02.
5. பேராசிரியர் க. அருணாசலம், மலையகத் தமிழ் இலக்கியம், (1994) என்ற நூலிலே மலையகத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பற்றி ஆராய்ந்துள்ளார்.
6. சண்முகதாஸ். அ., (1995), ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பரப்பும் அதில் நுண்ணாய்வுக்குட்படவேண்டிய கூறுகளும், தமிழ் நாட்டார் வழக்கியல், பக். 218 – 219.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மன்னார் நாட்டுப்படல்கள், (1964), மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள், (1962) ஆகிய நூல் களை வெயியிட்டார்.

8. சதாசிவஐயர். தி., (1940) மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு.

நடராசா. எவ்.எக்ஸ்.சி., (1965), கண்ணகி வழக்குரை.

........................, (1960), எண்ணெய்ச்சிந்து.

........................, (1962) ஈழத்து நாடோடிப்பாடல்கள்

செல்லையா. மா.செ., (1962), கோவலனார் கதை.

செல்வராஜகோபால். க.த., (1970), கபோதகாதை.

கந்தையா. வீ.சி., (1958), கண்ணகை அம்மன் குளிர்த்திப்பாடல்கள்.

........................, (1968), கண்ணகி வழக்குரை.

மாறன் விதானை, (1966), இரணிய சமீகார அம்மானை.

சண்முகசுந்தரம். த., (1988), தாய்தரும் தாலாட்டு.

........................, (1984), நாட்டார் இலக்கியத்தில் மழை இரங்கிப் பாடல்கள்.

........................, (1983), குருவிச்சி நாய்ச்சி சலிப்பு வளர்ப்புத்தாய் புலம்பல்

வேலுப்பிள்ளை. சி.வி., (1983), மலைநாட்டு மக்கள் பாடல்கள்.

புஸ்பராஜன், (1976), அம்பாப்பாடல்கள்.

முத்துமீரான். எஸ்., (1991), கிராமியக் கவியமுதம், கிழக்கிலங்கை முஸ்லீம்களின் நாட்டார்பாடல்கள், (1997).

கோமஸ். ஏ.பி.வி., (1988), அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்.

9. ஈழத்தமிழர் நாட்டார் அரங்கு குறித்த பேராசிரியர். சு. வித்தியானந்தனுடைய கட்டுரைகள் பலவும் பின்னர் ஒருங்கு சேர்க்கப்பட்டு 'நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள்', (1990), என்ற நூலாக வெளிவந்தது.

அலங்காரரூபன் நாடகம், (1964), மூவிராசாக்கள் நாடகம் (1966), ஞானசௌந்தரி, (1967) முதலான கூத்துநூல்களைப் பதிப்பித்தார்.

10. சி. மௌனகுருவின் நூல்களிற் சில வருமாறு,

........................, பழையதும் புதியதும், (1992)

........................, சடங்கிலிருந்து நாடகம் வரை, (1988)

........................, ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, (1993)

11. மார்க்கண்டன் வாளாபிமன் நாடகம், (1963) என்ற நூலைப் பதிப்பித்தார்., பார்க்க: முன்னுரைகள்.

செ. சுந்தரம்பிள்ளையின் ஈழத்து இசைநாடக வரலாறு, (1990)

சி. மௌனகுருவின் பழையதும் புதியதும், (1992)

12. ஆங்கிலக்கட்டுரைகள் வெளிவந்த இதழ்களிற் சில வருமாறு.,

1. Ceylon Literary Register,
2. Ceylon Antiquary and Literary Register,
5. Tamil Culture
6. Social Compass

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Hindu Dharmam, 7. Orientalist
4. Young Ceylon , 8. Anthropological Quarterly
5. The Ceylon Gazetteer, 9. Taprobanian

13. தமிழ்க்கட்டுரைகள் வெளிவந்த பத்திரிகைகள், இதழ்களிற் சில,
    அ. அனைத்துலக மற்றும் பிரதேசரிதியான தமிழாராய்ச்சி மாநாட்டு மலர்கள்
    தினகரன்
    ஆ. சிந்தாமணி
    இ. வீரகேசரி
    ஈ. ஸ்ரீலங்கா
    உ. நுட்பம்
    ஊ. கலைவாணி
    எ. இந்துதர்மம்
    ஏ. சரஸ்வதி

13. சிவனேசச்செல்வன். ஆ., (1980), சிந்தனைத்திறனையும் பண்பாட்டுக் கூறுகளையும் தெரிவிக்கும் பழமொழிகளும், விடுகதைகளும், இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், ப. 348.

14. செல்வராஜா. என்., (1988), உருமாறும் பழமொழிகள்,
சச்சிமாஸ்டர், (1988), மக்கள் வாழ்வியற் பழமொழிகள்.

15. சிவனேசச்செல்வன். ஆ., (1980), சிந்தனைத்திறனையும் பண்பாட்டுக் கூறுகளையும் தெரிவிக்கும் பழமொழிகளும், விடுகதைகளும், இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், ப. 341–361.

16. பாலசுந்தரம். இ., (1976), பழமொழி இலக்கியம் – ஓர் அறிமுகம், இளந்தென்றல், பக். 55–60.

17. சண்முகதாஸ். அ., (1995), ஈழத்துத்தமிழ் நாட்டார் வழக்காற்றியற்பரப்பும் அதில் நுண்ணாய்வுக்குட்படவேண்டிய கூறுகளும், தமிழ் நாட்டார் வழக்காற்றியல், பக். 227 – 230.

18. செல்வி. ஞானாம்பிகை என்பவர் மலையகப் பழமொழிகள் பற்றி ஆராய்ந்ததாகப் பேராசிரியர் க. அருணாசலம், இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள், (1997) என்ற நூலில் குறிப்பிடுவர், ப. 160.

19. சண்முகதாஸ். அ., (1995), மு. கு. கட்டுரை, ப. 227.

20. பகவதி. கு., (1995), ஆய்வுச்சிக்கல்களும் தீர்வுகளும், ஊர்ப்பெயராய்வு, ப. 30.

21. பாலசுந்தரம். இ., (1989), இலங்கை இடப்பெயராய்வு – 2, பக். I – VII.

22. அருணாசலம். க., (1997), இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள், ப. 155.

23. சண்முகதாஸ். அ., (1980), ஈழத்து நாட்டார் பாடல்களின் மொழியமைப்பு, இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், பக். 304 – 337.

24. சண்முகலிங்கன். என்., (1997), A New Face of Durga, Religious and Social Change in Presentday Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பிரதேச நாட்டார் வழக்காற்றியலைச் சூழமைவுபடுத்துதல்: நடைமுறைகளும் பிரச்சினைகளும்

திரு. க. அருந்தாகரன்

## அறிமுகம்

இலங்கையின் பிரதான குடியிருப்பு மையங்களில் ஒன்றாக வன்னிப் பிரதேசம் விளங்குகின்றது. கல்வெட்டுக்கள், சாசனங்கள், அகழ்வாய்வுகள், இலக்கிய மூலங்கள் தொடக்கம் காலனித்துவகாலப் பதிவுகள்வரை வன்னியின் வரலாற்றுத் தடயங்கள் விரவிக் கிடக்கின்றன. வன்னி விவசாயப் பொருளாதார உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட நீர்மைய வேளாண்மைக் குளக்குடியிருப்புப் பிராந்தியமாக மேற்கிளம்புகின்றது. அதாவது குளக்குடியிருப்பு அதன் முக்கிய பங்காகத் துருத்திக் கொண்டு முன்னெழுகிறது. உண்மையில் முல்லையும், மருதமும், நெய்தலும் முயங்கிக் கரையும் ஓர் இயற்கைப் பண்பாட்டு வெளியாக இது அமைகிறது. இப்பிரதேசத்தின் புவியியல் பொருளாதார, சமூகப் பண்பாட்டு உற்பத்தியாக வளமான நாட்டார் பண்பாட்டு வரலாற்று மரபொன்று தோன்றி வளர்ந்து வருவதனை அவதானிக்கலாம். விவசாயப் பொருளாதார உற்பத்தியில் இடையீடின்றி முன்னணியில் இருந்து வருவது போன்று நாட்டார் கலை இலக்கியப் பண்பாட்டு உற்பத்தியிலும் முன்னிலையிலிருந்து வருகின்றது. ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகின்றபோது வன்னிப் பிரதேசம் தனக்கெனத் தனித்துவமான நாட்டார் வழக்காற்று மரபுகளை உருவாக்கிப் பேணிக்காத்து வருவதனை இங்கு அவதானிக்க முடியும்.

வன்னிப் பிரதேசத்தை நீக்கிவிட்டு ஈழத்தமிழர் சமூகப் பண்பாட்டு வரலாற்றினை எழுத முடியாது. எனினும், உடனிகழ்காலத்தின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் அறிவியல் ரீதியாக ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் இவற்றின் இருப்பினையும் உயிர்வாழும் சாத்தியத்தினையும் கேள்விக்குள்ளாக்கி உள்ளன. இதனால் இவற்றை வரலாற்று வளர்ச்சியினடியாக நோக்கி, அவற்றை சூழமைவுபடுத்துவதோடு, அவற்றின் தனித்துவமான சமூகப் பண்பாட்டு முக்கியத்துவத்தையும், அவை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள், சவால்கள் என்பவற்றையும் எடுத்துக்காட்டித் திரைவிலக்குவதுடன், அவற்றினைக் காத்தலும், பேணுதலும், கையளித்தலுக்குமான திட்டமுன்வரைபினையும், அதற்கான புலமைசார் உரையாடலையும் முன்வைக்கவும், தொடக்கவும் இவ் ஆய்வு முயற்சிக்கின்றது.

## வன்னிப்பிரதேச நாட்டார் வழக்காற்று வகைமைகள்

வன்னிப் பிரதேச நாட்டார் வழக்காற்றியல் கூறுகள் மற்றும் வழக்காறுகளை ஒன்றோடொன்று இசைவுறும் கூறுகள் என்ற வகையில் நாட்டார் இலக்கியங்கள், பொருள்சார் நாட்டுப்புறவியல், சமூக நாட்டார் வழமைகள், நாட்டுப்புறக்கலைகள் மற்றும் நாட்டுப்புறவியல் தொடர்பான புலமைத்தொழிற்பாடுகள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டார் இலக்கியம் - வெளிப்பாட்டு இலக்கியம்

வன்னிப் பிரதேசத்தில் கதைக்கூற்று, நாட்டார் இசை, நாட்டார் கவிதை, பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், வாய்மொழிக் காவியங்கள், பழமொழிகள் மற்றும் குழூஉக்குறி மரபுகள் என வளமான நாட்டுப்புற இலக்கிய மரபொன்று செழித்து வளர்ந்து வந்துள்ளதனை அவதானிக்கலாம்.

இவற்றை வாய்மொழிக் கலைகள் அல்லது வெளிப்பாட்டு இலக்கியங்கள் என வழங்குவர். ஆக்கியோன் பெயர் அறியாது, வாய்மொழி மூலமாக வழங்கிவரும் இவை சில சம்பவங்களாகவோ, தொடர்நயம் மிக்க கவிதைகளாகவோ, விரிவான கட்டற்ற புனைதிறன் சார்ந்த காப்பியங்களாகவோ அமையலாம்.

வன்னிப் பிரதேசத்தில் காணப்படும் நாட்டார் இலக்கியங்களைக் குறிப்பாகப் பாடல்களை தொழிற்பாடல்கள் அல்லது உழைப்புப் போக்கினடிப்படையாகத் தோன்றிய பாடல்கள், சமய நம்பிக்கையினடியாகத் தோன்றிய பாடல்கள் மற்றும் மகிழ்வளிப்புப் பாடல்கள் அல்லது கொண்டாட்டப் பாடல்கள் என வகைப்படுத்தி நோக்க முடியும்.

உழைப்பின்போதும் - உற்பத்தி நடவடிக்கையின்போதும் - அதாவது துடுப்பு வலித்தல், அரிவி வெட்டுதல், ஏற்றம் இறைத்தல் முதலான உழைப்பின்போது உற்பத்திக் கருவிகள் செய்யும் அதே வேலையினைச் செய்யும் பாடல்களை உழைப்புப் பாடல்கள் அல்லது தொழிற்பாடல்கள் எனலாம். இப்பிரதேசத்தில் காணப்படும் பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு, சாலிப்பள்ளு முதலான பள்ளுப் பாடல்களும் அரிவி வெட்டுச்சிந்து, முருகையன் சிந்து முதலான சிந்துப் பாடல்களும் இந்தவகையில் முக்கியமானவை. இதைவிட கண்ணகையம்மன் சிந்து, பனிச்சையாடிய சிந்து, நாகதம்பிரான் சிந்து, முறிகண்டியான் சிந்து, பிள்ளையார் சிந்து, பரமசிவன் சிந்து முதலான சமய நம்பிக்கையடியான பாடல்களும் கமக்காரன் வசந்தன், பறவை வசந்தன் முதலான கொண்டாட்டப் பாடல்களும், குளக்கோட்டன் சிந்து, கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கும்மி, கமுகஞ்சண்டை, குருவிச்சி நாச்சியார் சலிப்பு, வன்னி நாச்சியார் மான்மியம், வேலப்பணிக்கன் ஒப்பாரி முதலான கதைப்பாடல்களும் குறிப்பிடத்தக்க வெளிப்பாட்டு இலக்கியங்களாக இனங்காணப்படுகின்றன.

இதைவிட வளமான நாட்டுப்புறக்கதை மரபும் இங்கு தொடர்ந்து வந்துள்ளது. இந்தவகையில் எனவன் கந்தன் கதை, குளக்கோட்டன் கதை, அம்மான் கண்ணுக்கமண் கதை, குளங்கட்டிய பூதங்களின் கதை, பண்டாரவன்னியன் கதை முதலான கதைகள் முக்கியமானவையாக இனங்காணப்படுகின்றன.

இவை யாவற்றிற்கும் அப்பால் பழமொழிகள், விடுகதைகள், வாய்மொழிக் காப்பியம் மற்றும் குழூஉக்குறி மரபுகள் என வளமான நாட்டார் இலக்கிய வகைமைகள் சிறந்த முறையில் பேணப்பட்டு வருவதனை அவதானிக்கலாம். ஆனால் இவற்றின் சமூக அழகியல் முக்கியத்துவம் குறித்து முழுமையான சமூகப் பண்பாட்டு மானிடவியல் அடிப்படையிலான ஆய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

## சடப்பொருள்சார் நாட்டுப்புறவியல்

வன்னிப் பிரதேச நாட்டார் பண்பாட்டு மரபுகள் ஒருவகையான சடப்பொருள்சார் நாட்டுப் புறவியலாக அமைகின்றது. வாய்மொழி நாட்டுப்புறவியல் அம்சங்களுக்கு நேர் எதிரானதாக பொருள்சார் நாட்டுப்புறவியல் அமைகின்றது. கட்புல ஊடுகடத்துலகிற்கும் கருத்தாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் ஒத்திசைந்துவரும் அம்சங்களை மையமாகக் கொண்டியங்கும் இவற்றைப் பருப்பொருள்சார் பண்பாடு அல்லது புழங்குபொருள் பண்பாடு என்று அழைப்பர். பருப்பொருள்சார் கைவினைகள் மற்றும் புழங்குபொருட்கள் வன்னிப் பிரதேசத்தின் சமூகப் பண்பாட்டு வரலாற்று ஆய்வுக்கான மூலாதாரங்களாக அமைகின்றன.

பொருட்கள் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. பொருளும் பண்பாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. பண்பாட்டின் கண்ணாடி புழங்குபொருட்கள் எனலாம். புழங்குபொருள் பண்பாட்டைக் கலை (Art), கைவினை (Craft) எனப் பிரித்துக் காண்கின்றனர். அன்றாட வாழ்க்கை சார்ந்த சமூக, பொருளாதார செயற்பாடுகளுக்கு நேரடியாக உதவக்கூடியவற்றைக் கைவினை என்றும் அழகியல் வெளிப்பாடு சார்ந்த மகிழ்ச்சி தருகின்ற அலங்காரத்தன்மை வாய்ந்தவற்றைக் கலை என்றும் கொள்ளலாம்.

கைவினைப் பொருட்கள் அவை உற்பத்தி செய்யப்படும் காலச்சூழலையும் அவற்றைப் பயன்படுத்துவோர் கொண்டிருக்கக்கூடிய சமூக, பண்பாட்டுக் கருத்துநிலைகளையும் வெளிப்படுத்தும், விளக்கும் கலை வடிவமாகவும், மனவடிவமாகவும் விளங்குகின்றன. கைவினைப் பொருட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு செய்தியை வெளிப்படுத்துவனவாகும். இதனால் இவற்றைப் பொருள் மொழி என்பர்.

வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை வளமான கைவினைப் பாரம்பரியம் உயிர்த்துடிப்போடு இயங்கி வந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. பின்னல் வேலை, புனைவுகள், நகை வேலை, உலோக வேலை, மர வேலை, நெசவு வேலை மற்றும் மட்பாண்ட வேலை முதலியன முக்கியமானவையாக இனங்காணப்படுகின்றன. இவற்றைப் பல்வேறு சாதிக் குழுவினரே மேற்கொண்டு வருகின்றனர். அதாவது, பின்னல் வேலைகள் பெரும்பாலும் சமூகத்தின் அடிநிலையில் உள்ளவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. நகைவேலை, உலோகவேலை மற்றும் தச்சுவேலை பஞ்சகம்மாளர் எனப்படுவோராலும் புனைவு, சாத்துப்படி என்பன பண்டாரங்கள் எனப்படுவோராலும் மட்பாண்ட வேலைகள் குயவர்களினாலும் முன்னெடுக்கப்படுகின்றன. பாய் பின்னுதல் மற்றும் நெசவு செய்தல் ஆகிய தொழில்களில் முஸ்லிம் மக்களுக்கும் கணிசமான பங்குண்டு. இவை இப்பிரதேச நம்பிக்கைகளோடும், சடங்குகளோடும் பெரும்பாலும் தொடர்பு கொண்டிருப்பதனால் அவற்றின் இருப்பு இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. உதாரணமாக, குயவர் சாவுக்குக் கொள்ளிக்குடம், தீச்சட்டி, வாய்க்கரிசிச் சட்டி என்பவற்றையும் கண்ணகையம்மன் வழிபாட்டிற்கான பொங்கல் பானை, வழுந்து கண்குடம் முதலியவற்றையும் செய்கின்றனர். ஆனாலும் மாறிவரும் சூழல் இவற்றின் இருப்பை வெகுவாகப் பாதித்துள்ளதைக் கள ஆய்வின்போது கண்டுகொள்ள முடிகின்றது.

## சமூக நாட்டார் வழமைகள்

வாய்மொழிக் கதைகளுக்கும் நாட்டுப்புற வாழ்வியலுக்கும் இடையிலுள்ள மரபுவழி வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் அம்சங்களை நாட்டுப்புற வழமைகள் எனலாம். இங்கு குழும நிலைச் செயற்பாடுகளுக்கே முதன்மை கொடுக்கப்படும். பிறப்பு, தீட்சை, விவாகம் மற்றும் இறப்பு முதலிய சமூக முதிர்ச்சியைக் குறிக்கும் சடங்குகள், ஓய்வு நேரங்களைப் பயனுடையதாக்கும் விதங்கள், இப்பிரதேச மக்களிடம் வழங்கிவரும் சமயம், நம்பிக்கை, வழிபாட்டுமரபுகள், மந்திரம், மனோவசியம் மற்றும் மாந்திரிகம் முதலியவையும் இவற்றினுள் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பிரதேச நாட்டார் வழமைகளை நம்பிக்கைகள், வழிபாட்டு மரபுகள் என்ற வகையில் நோக்கலாம். வழிபாட்டு மரபென்பது ஒரு குறிப்பிட்ட விலங்கு, தாவரம், இயற்கைப் பொருள், ஆவி, முன்னோர், முனிவர், தெய்வம் ஆகியவற்றுள் ஒன்றின் மீது கொண்டுள்ள அனைத்து வகையான நம்பிக்கைகளும் சடங்குகளும் வழிபாடும் சேர்ந்தே வழிபாட்டு மரபு எனப்படுகின்றது.

வன்னிப் பிரதேச மக்களைப் பொறுத்தவரை ஐயன், விறுமன், வைரவன், காளி, நாச்சிமார், கன்னிமார், அண்ணமார், வதனமார், குறும்பன், இளந்தாரி முதலிய தெய்வங்களும் அவர்கள் பற்றிய பல்வேறு நம்பிக்கைகளும் மக்களிடையே நிலவி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இதைவிட, இப்பிரதேசத்தில் பல்வேறு திருவிழாக்கள் மற்றும் விழாக்கள் முதன்மை பெற்று விளங்குகின்றன. ஆண்டு முழுவதும் வன்னிச் சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் திருவிழாக்கள் மற்றும் விழாக்கள் மூலம் நிலைமாற்றம் செய்யப்படுகின்றன. தைப்பொங்கல், பத்தஞானிப் பொங்கல், வைகாசிப் பொங்கல் மற்றும் கோயில் திருவிழாக்கள் அவ்வகையில் குறிப்பிடத்தக்கனவாகும்.

இவற்றுள் வைகாசி விசாகத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு ஆண்டுதோறும் நடக்கும் பொங்கல் விழா முக்கியமானது. இந்தத் திருவிழா பல சமூகப்படிநிலைகளை உடையது. தற்காலிக செயலுறவின் மூலம் சமூகத்தின் பல படித்திறன்களையும் ஒன்றிணைப்பதுடன், சமூகத்தளத்தைத் தெய்வத்தளத்தோடு ஒன்றிணைக்கின்றது. ஆவேச அம்மன் தளமாற்றம் பெற்று உட்தளத்தில் அமைவதென்பது உள்ளத்தில் படிநிலைப்பட்டுப் போய்க்கிடந்து சமூக இறுக்கம் உடைக்கப்பட்டுப் புத்தாற்றல் பெறுவது என்னும் மாபெரும் இயங்காற்றலை இத்திருவிழா மூலம் வன்னிச் சமூகம் பெற்றுக் கொள்கின்றது.

இதைவிட, வன்னியைப் பொறுத்தவரை பல்வேறு நாட்டுவைத்திய முறைகள் நிலவி வந்திருப்பதனைக் காணமுடிகின்றது. தனது குருவின் மூலம் பெற்ற சக்தியாலோ, வேறுவழியிலிருந்து பெற்ற ஆற்றலாலோ நவீன வைத்திய முறைகளினாலேயே இனங்காண முடியாத நோய்களைத் தீர்க்கும் முறைகளை அறிய வல்லவர்கள் இங்கு உள்ளனர். செங்கண்மாரி, விசக்கடி, நஞ்சுக்கொடி விழுதல், காயாசி வாதம் முதலிய வற்றிற்கான மருத்துவ முறைகள் பற்றிய செய்திகளை இங்கு அறிய முடிகின்றது.

ஆனால் இப்பிரதேச நாட்டார் வழமைகள் பற்றிய ஆழமான ஆய்வுகளோ, அவற்றை முறையாகக் காத்தல், கையளித்தல், பேணுதலுக்கான ஆய்வுகளோ பேண்முறைகளோ எதுவுமே மேற்கொள்ளப்படவில்ல.

## நாட்டுப்புறக் கலைகள்

வன்னிப் பிரதேசத்தின் நாட்டுப்புறவியல் அம்சங்களுள் சமூக மற்றும் அழகியல் முக்கியத்துவம் கொண்டவையாக நாட்டுப்புறக்கலைகள் விளங்குகின்றன. அவற்றைப் புலப்பாடு மற்றும் வழங்கப்படும் முறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காண்பியற்கலைகள் மற்றும் ஆற்றுகைக் கலைகள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

### (i) காண்பியற்கலைகள்

கட்புல நுகர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கலைகளைக் காண்பியற்கலைகள் அல்லது கட்புலக்கலைகள் என்பர். கட்டடம், சிற்பம், ஓவியக்கலைகள் என்பன இவற்றுள் அடங்கும். வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை வட்ட வீட்டுமுறை, கொம்பறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன முக்கியமானவை. வன்னியில் புராதனகால வீடுகள் வட்ட வீடுகளாகவே இருந்துள்ளன. இதற்கு இப்பிரதேசப் புவியியல், காலநிலை ஊடகம், பொருளாதாரம் மற்றும் இந்தியாவுடனான பண்பாட்டுத் தொடர்பு என்பன ஏதுவாக அமைந்துள்ளன.

இதைவிட இங்கு நடைமுறையில் இருந்த 'கொம்பறை' என்னும் வட்டக்கூட்டு முறையும் முக்கியமானது. இப்பிரதேச மக்கள் தமது விவசாய உற்பத்திகளைப் பழுதடையாமல் நீண்டகாலம் பேணி வைப்பதற்கு இக் கொம்பறையையே பெரிதும் பயன்படுத்தியுள்ளனர்.

இதைவிட இம்மக்களிடையே ஓவியம் தீட்டும் முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவும், உணர்வும் இருந்து வந்துள்ளது. வீட்டுச் சுவர்கள், திண்ணைகள், குந்துகள், மால்வெளிகள் மற்றும் வீட்டு முற்றங்களில் இயற்கைப் பொருட்களைக் கொண்டு தீட்டிய ஓவியங்கள், வர்ணப் பூச்சுக்கள், கோலங்கள் பற்றி அறியமுடிகின்றது. ஆனால் இந்நாட்டுப்புறக் கலைகள் (Folk Art) பற்றிய பிரக்ஞைபூர்வமான ஆய்வோ, ஆவணமுறையோ இதுவரையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) **ஆற்றுகைக் கலைகள்**

வன்னிப் பிரதேசத்தை அதன் புதர் விலக்கிப் பார்க்கும் போது செழிப்பான நாட்டுப்புற அவைக்காற்றுக் கலை மரபு உயிர்த்துடிப்போடு இயங்கி வருகின்றமையைக் காணலாம். இங்கு பயில்நிலையிலுள்ள ஆற்றுகை மரபுகள், நாட்டுப்புற இசை, நாட்டுப்புற நடனம், நாட்டுக்கூத்துக்கள், தற்காப்புக் கலைகள், விளையாட்டுக்கள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

நாட்டுப்புறப் பாடல்கள், கூத்துப் பாடல்கள், கதைப்பாடல்கள் முதலியவற்றை வாய்மொழி ரீதியாக ஆற்றுகை செய்யும் வளமான மரபு இங்கு உண்டு. இவற்றை வாய்மொழி இசை வடிவங்கள் என்பர்.

இதைவிட கும்மி, கரகம், கோலாட்டம், வேதாளாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், பாம்பாட்டம், பன்றியாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம் மற்றும் குடமூதல் முதலான நாட்டுப்புற நடனங்கள் இங்கு ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் சடங்குநிலைப்பட்டவையாகவும், வாய்மொழிமூலம் ஊடுகடத்தப்படுபவையாகவும் பாரம்பரியத் தன்மைகளை உள்வாங்கியவையாகவும் அமைவதுடன், சிலசமயங்களில் மகிழ்வளிப்புக் கலைகளாகவும் ஆற்றுகை செய்யப்படுகின்றன.

## நாட்டுக்கூத்துகள்

ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகின்றபோது 'வன்னி' தனக்கெனத் தனித்துவமான வளமான கூத்து மரபு ஒன்றினைக் கொண்டுள்ளது. நாட்டுப்புற இசை, நாட்டுப்புற நடனம் என்பவற்றிலிருந்து முழு வளர்ச்சியடைந்தவைகளாகவும் அழகியற் கவர்ச்சி மிக்கவையாகவும் சமூகப் பண்பாட்டு வரலாற்று ஆக்கச் சுட்டிகளாகவும் கூத்துகள் அமைகின்றன அல்லது விளங்குகின்றன எனலாம்.

இந்தவகையில் காமன் கூத்து, செட்டி வர்த்தகன் கூத்து, காத்தவராயன் கூத்து, மகிடிக்கூத்து, பறைமேளக்கூத்து மற்றும் கோவலன் கூத்து என்பன முக்கியமான கூத்துக்களாக இனங்காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பிரதேசத்திற்கேயுரிய தனித்துவமான கலை அடையாளமாகவும் அழகியல் முழுமை கொண்டதுமான ஓர் ஆற்றுகையாகக் கோவலன் கூத்து விளங்குகின்றது. வன்னியில் பயின்றுவரும் வாய்மொழி ஆற்றுகைகள், நடன வடிவங்கள் முதலான நாட்டுப்புற கலைவடிவங்களின் உட்கூறுகளை ஒன்றிணைத்து முழு வளர்ச்சி பெற்ற கூத்தாக உருத்திரண்டிருக்கும் இக்கலையானது வன்னிப் பிரதேசத்திற்குரிய தனித்துவமான ஆற்றுகைப் பாணியினையும், மோடி முறைமையினையும் சுட்டி நிற்கின்றது.

ஆனால் ஏனைய பிரதேசங்களின் கலை வரலாறுகள் எழுதப்படாதது போலவே இப்பிரதேச நாட்டுப்புறக் கலை வரலாறுகள் குறித்த ஆழமான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

## வன்னிப் பிரதேச நாட்டுப்புறவியல் அடிப்படைகளின் முக்கியத்துவம்

சமூகம் ஒன்றின் மிக முக்கியமான சமூக பண்பாட்டு வரலாற்று அடிப்படைகளாக நாட்டார் வழக்கியல் மரபுகள், அடிப்படைகள் கருதப்படுகின்றன. இதனால் குறித்த சமூகத்தின் சமூக வரலாற்றுப் பண்பாட்டுத் தனி அடையாளமாக நாட்டார் வழக்கியல் அம்சங்கள் அமைகின்றன. இதனை வேறுவகையில் கூறுவதானால் நாட்டுப்புற மரபுகளே குறித்த சமூகத்தின் தனி அடையாளங்களையும், பண்பாட்டுப் பெருமைகளையும் உருவாக்கித் தருகின்றன. அந்தவகையில் குறித்தவொரு சமூகத்தை ஊடாடி இணைத்தும் அதற்கான பொதுப்பிரக்ஞையை உருவாக்கியும் தருகின்றன. இதனால்தான் நாட்டுப்புற வழக்காறுகள், மரபுகளின் அழிவு என்பது குறித்தவொரு சமூகத்தினதும், வரலாற்றுத் தடயத்தினதும் சமூக ஒன்றிணைப்பினதும் சிதைவாக – அழிவாக - கருதப்படுகின்றது.

இதைவிட, நாட்டார் அடிப்படைகள் சமூகப் பண்பாட்டு பேண்மைகளுக்கும் பேண்தகு சமூக அபிவிருத்திக்கும் - எழுச்சிக்குமான அடித்தளமாக அமைகின்றன. அவ்வகையில் காலம் காலமாகச் சமூகக் கூட்டுழைப்பினால் உருவாக்கப்பட்டுக் கைமாற்றப்படும் அறிவாகவும் ஆற்றலாகவும் மனித குல மாண்பின் கடந்தகாலப் பெருமைகளின் சின்னங்களாகவும் அதன் பல்வகைத் தன்மையின் சாட்சியங்களாகவும் நாட்டார் வழக்கியல் அம்சங்கள் அமைகின்றன.

இது மாத்திரமன்றி, ஜனநாயக உள்ளடக்கத்தைக் கொண்ட தேசிய சித்தத்தை உருவாக்கவும், பரந்துபட்ட மக்களின் உலகக் கண்ணோட்டம் பற்றிய விமர்சன ரீதியான புரிதலை எதிர்கால சிந்தனையாளர்களுக்கு வழங்கவும் நாட்டார் வழக்காற்றியல் அம்சங்கள் அடிப்படையாக அமைகின்றன. இதனால்தான் அன்ரனி ஹிராம்சி என்பவர் தேசிய சித்தத்தை உருவாக்குவதன் பொருட்டு நாட்டார் வழக்காற்றை விமர்சன ரீதியாகப் புரிந்து கொண்டு புதிய பண்பாட்டை உருவாக்குவதன் பொருட்டு நாட்டுப்புறவியலிலிருந்து தொடங்க வேண்டும் என்கின்றார்.

எனினும், இவை நிலைகொண்டிருக்கும் பாரம்பரியப் பொருளாதார மற்றும் சமூக அடித்தளத்தில் அதிரடியான மாற்றங்கள் நிகழும் வரை அவற்றினிருப்பு இன்னும் பல நூற்றாண்டுகள் வரை தொடர்ச்சி குன்றாது நீடித்து நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது. ஆனாலும் உடனிகழ்காலத்தில் உள்ளூர் நிலையிலும் தேசிய நிலையிலும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள், வளர்ச்சிகள் இவற்றின் இருப்புப் பற்றிய கேள்விகளையும் சவால்களையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த இடத்தில்தான் இவை எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் என்பவற்றை இனங்கண்டு திரைவிலக்குவதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இவற்றின் தொடர்ச்சியைப் பேணுவதற்கான புலமைசார் மற்றும் செயற்பாட்டிற்கான வழிவகைகளைக் கண்டடைவது முக்கியமான ஒரு புலமைப் பணியாக உள்ளது.

## வன்னிப் பிரதேச நாட்டார் வழக்காறுகளைப் பேணுவதிலுள்ள பிரச்சினைகள்

உலகளாவிய ரீதியில் நாட்டார் வழக்காற்றியல் மரபுகளை இயற்கை மற்றும் சமூக பண்பாட்டு அசைவியக்கம் எப்போதுமே அபாயகரமான நிலையிலேயே வைத்துள்ளது. வன்னிக்கு இது விதிவிலக்காகிவிட முடியாது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட வன்னிப் பிராந்தியம் மேலதிகமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. அத்தகைய பிரச்சினைகள் பினவருமாறு அமைகின்றன.

- வன்னிச் சமூக அமைப்பில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள், மூன்று தசாப்தங்களிற்கும் மேலாகத் தொடர்ந்து இடம்பெற்ற ஆயுத மோதல்கள், இடப்பெயர்வுகள், அகதி முகாம் வாழ்வுநிலைகள், திட்டமிட்ட பண்பாட்டு அழிப்புகள்.
- இராணுவ மோதல் முடிவுக்கு வந்த பின் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார ரீதியான மாற்றங்கள்.
- சுனாமி என்னும் இயற்கைப் பேரனர்த்தத்தினால் ஏற்பட்ட தாக்கங்கள்.
- பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரையிலான கல்வி முறையின் இயலாமை. அதாவது வேறுவிதமாகச் சிந்தித்தல் - மாற்றங்களைச் சிந்திக்கத் தூண்டாத - ஏற்காத மனோநிலை மற்றும் பிரயோக வலுவற்ற கல்விமுறை.
- சரியாகத் திட்டமிடப்படாத நாட்டார் பண்பாட்டு மரபுகளின் சிறப்புத்தன்மைகளைக் கருத்திற் கொள்ளாத யாந்திரிகமான அபிவிருத்தி நடவடிக்கைகள் அல்லது அபிவிருத்தி என்ற எண்ணக்கருவை மேலோட்டமாகப் புரிந்து கொண்டு செயற்படுவதால் ஏற்படும் அழிவுகள் மற்றும் நிர்மாணங்கள் - புனர்நிர்மாணங்கள் - என்பவற்றினால் ஏற்படும் சிக்கல்கள்.
- பண்பாட்டு வினையாளர்களின் செயற்பாடுகள். அதாவது ஜனரஞ்சகப் பண்பாட்டினை ஜனரஞ்சகப்படுத்தப்பட்ட பண்பாடாக உருமாற்றுதல் மற்றும் விற்பனை செய்தல்.
- அரங்கச் செயற்பாடுகளிற்காக நாட்டுப்புறவியல் அம்சங்கள் எடுத்துக் கையாளப்படுதல்.
- நாட்டுப்புற மக்களிடையே உள்ள அக்கறையின்மை, அது பற்றிய தாழ்வுணர்ச்சி, தொடர்ச்சியின்மை, அது பற்றிய சிறப்புத்தன்மையினைப் புரிந்து கொள்ளாமை, மறதி, குழப்பம், அசிரத்தை – உதாசீனம் - துஷ்பிரயோகம்.
- நாட்டார் மரபுகளைப் பேணுதல், காத்தல் மற்றும் கையளித்தலுக்கான சரியான பொறிமுறைகளைப் பிரயோகிக்காமை, நாட்டுப்புறவியல் தொடர்பான உணர்வுபூர்வமான சிந்தனையை – பிரக்ஞையை - உருவாக்குவதற்கான திட்டமிட்ட தரிசனத்துடன்கூடிய செயற்பாடின்மை.
- சமூகக் கூட்டுப் பொறுப்பைப் புலம் ஒதுக்கல்.
- சரியான சமூகத் தலைமைத்துவமின்மை.
- துறைசார் அதிகாரிகளின் மெத்தத்தனமான போக்கு மற்றும் ஏதேச்சதிகாரம் முதலியன இவற்றின் இருப்பு மற்றும் உயிர்வாழ்தலுக்கான சவால்களாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில்தான் எல்லாச் சவால்களையும் எதிர்கொண்டு வன்னிப் பிரதேசமானது தனது நாட்டுப்புறவியல் அம்சங்களினைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில், அவை எமது தேசிய தனித்துவப் பண்பாட்டுச் சொத்துக்களும் பலநூறு சந்ததிகளின் கூட்டுவாழ்வின் பேறுகளும் தலைமுறை தலைமுறையாகச் சேர்ந்து வந்த முதுசொங்களும் வரலாற்று வேர்மூலங்களும் ஆகும்.

## பரிந்துரைகள்

ஆகவே இவற்றைக் காத்தலும் பேணுதலும் எதிர்கால சந்ததியினருக்குக் கையளித் தலுக்குமான பரந்துபட்ட வினைத்திறன்மிக்க பொறிமுறையினை உருவாக்க வேண்டும். அந்தவகையில் நாம் என்ன செய்யலாம் என்பதற்கான சில பரிந்துரைகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

- நாட்டுப்புறவியலைத் தனியானதொரு துறையாக அங்கீகரித்து இத்துறையின் அறிவை – பிரக்ஞையினை - சகல மட்டத்தினரிடையேயும் ஏற்படுத்துவதுடன் அதனைச் சமூக அங்கீகாரமும் கௌரவமும் உள்ள ஒரு துறையாக வளர்த்தெடுத்தல்.
- வன்னிப் பிரதேசம் தொடர்பிலான முழு அளவிலான களப்பணியினையும் ஆய்வினையும் மேற்கொண்டு நாட்டுப்புறவியல் கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான ஆய்வினையும் வகைப்பாட்டினையும் பட்டியலாக்கத்தினையும் மேற்கொள்ளுதல். இதற்குக் கலாசார உத்தியோகத்தர், கிராம சேவகர் ஆகியோரையும் பிரதேச செயலகங்கள் யாவற்றையும் ஒன்றிணைத்து ஒரு செயற்றிட்டத்தின் மூலம் முன்னெடுத்தல்.
- நாட்டுப்புறவியல் தொடர்பாக விருத்தியாக்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் ஆய்வு முறையியல்கள் பற்றிய அறிகைத் தெளிவை எமது பண்பாடு மற்றும் தேவைக்கு ஏற்ப சூழமைவுபடுத்தி வன்னிக்கான தனி ஆய்வு முறையியலைக் கட்டமைத்தல் மற்றும் கண்டுபிடித்தல்.
- சுவடிகள் காப்பகம் மற்றும் தனிநூலகம் என்பவற்றுடன் வன்னிக்கான கூடிய தனிஆய்வு மையம் அல்லது தனி ஆய்வுத்துறையை உருவாக்குதல்.
- நாட்டுப்புறக்கலைப் பண்பாடு குறித்து இப்பிரதேச மக்களிடையே பற்றினையும் ஈடுபாட்டினையும் ஏற்படுத்துதல். அவர்களிடம் அழகான கசடுசாராத அசலான பண்பாடு உள்ளது என்பதை உணர்த்துவதுடன், அவற்றின் தனித்தன்மை தேசிய முக்கியத்துவம் என்பன குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- வெகுசனத் தொடர்பு சாதனங்கள், அரசியல் கட்சிகள், கல்வி மற்றும் சமூக நிறுவனங்கள் இதில் பிரக்ஞைபூர்வமாகப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.
- நாட்டுப்புறப் பண்பாட்டுச் சொத்துக்கள், அரும்பொருட்கள் என்பவற்றை அவற்றின் வேர் மூலங்களிலிருந்து பிரித்தல், வேறு இடத்திற்கு மாற்றுதல், உருமாற்றம் செய்தல், விற்பனை செய்தல் முதலான செய்ற்பாடுகளிற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதோடு, அவற்றை மக்கள் தமது வாழ்க்கை நடைமுறைகளோடு இணைத்துப் பேணுவதற்கு அவர்களை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆற்றுகைக் கலை மரபுகள் தொடர்ச்சியாக ஆற்றுகை செய்யாதுவிடின் விரைந்து அழிந்துவிட வாய்ப்பு அதிகம் உள்ளதனால் அவற்றினை அவற்றினது பாரம்பரியம் மற்றும் கிராமியக் குணப்பண்புகள் சிதையா வண்ணம் பாரம்பரியக் கலைஞர்களே தொடர்ந்தும் ஆற்றுகை செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அதற்கான அனுசரணையை அரசமட்டத்தில் உருவாக்கிக் கொடுத்தல்.

- வன்னிப் பிரதேசத்தில் கோவலன் கூத்து வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் வழிபாட்டோடும் சடங்கோடும் தொடர்புபட்டிருப்பதனால் அது இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் மகிடிக்கூத்து, பறைமேளக்கூத்து முதலானவை ஒப்பீட்டளவில் அழிவடைந்து விட்டன. அவற்றை மீள் வலுவூட்டல் செயற்பாட்டின் மூலமே மீளக் கட்டியெழுப்பமுடியும். இதற்கு வாய்ப்பாகப் பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் என்பன இணைந்து ஆண்டுதோறும் 'வன்னிப்பிரதேச நாட்டார் ஆற்றுகைத் திருவிழா' ஒன்றினை நடைமுறைக்குக் கொண்டு வரலாம். அத்தோடு பிரதேச ரீதியாகப் பயின்றுவரும் கலைகளை ஊக்குவித்து அதன் ஆற்றுகைகளையும் சமூகக் கௌரவத்துடன் ஏற்று நடாத்துதல்.

- இளைய தலைமுறையினரிடையே இவற்றின் சமூக பண்பாட்டு மற்றும் தேசிய முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு இக்கலை மரபுகளை ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் பேணுவதற்கு ஒத்திசைவான செயற்றிட்டங்களை உருவாக்குதல்.

- நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பண்பாட்டு அடிப்படைகளைப் பொருளாதாரத்தோடு இணைத்தல். இதற்கு வாய்ப்பாக இங்கு இனங்காணப்படும் கலை மரபுகளைச் சுட்டும் பண்பாட்டுச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல். இது பண்பாட்டுப் பகிர்வையும் ஊடாட்டத்தினையும் ஏற்படுத்துவதுடன், பிரதேச பொருளாதார வளத்தினை மேம்படுத்தவும் உதவும்.

- கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல். அதாவது பல்தேசியக் கம்பனிகளுக்கும் முதலாளித்துவத்திற்கும் விசுவாசமான கூலிகளை உருவாக்கும் பலவீனமான பிரயோக வலுவற்ற கல்வி முறைகளுக்கு அப்பால் வாழ்க்கைக்கும் வாழ்க்கை அனுபவத்திற்கும் தொடர்புள்ள, பூமியிலுள்ள ஒவ்வொன்றைப் பற்றிய அறிவையும் சார்பற்ற முறையில் பெற்றுக்கொள்வதற்கும் வளர்த்துக் கொள்வதற்கும் வழியாக அமையக்கூடிய அசலான பண்பாட்டுக் கல்வியை – ஒரு மாற்றுக் கல்வித்திட்டத்தை விருத்தி செய்தல்.

- இவை யாவற்றிற்கும் அப்பால் இவற்றைப் பேணுவதற்கும் காப்பதற்குமான தனியான பொருளாதாரக் கட்டமைப்பினை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதுவே பிரதானமான மற்றும் உடனடித் தேவையாக உள்ளது. இது முழுமையடையாதவிடத்து அனைத்து முன்மொழிவுகளும் செயற்றிட்டங்களும் செயற்பாடுகளும் வலுவிழந்து போகும்.

- எந்தவொரு கலையோ, பண்பாட்டுத் தொகுதியோ நிலைபெறவேண்டும் என்றால் அது நிச்சயமாகப் பேரியக்கம் ஒன்றின் அங்கமாக இருக்க வேண்டும். தமிழர்கள் மாறிவரும் தேசிய, சர்வதேசிய மற்றும் பூகோள ரீதியான மாறுதல்களை – நிலவரங்களைத் தீர்க்கதரிசனம் மிக்க இராஜதந்திர செயற்பாட்டின் மூலம் எதிர்கொண்டு தமக்கெனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமான அரசியல் பொருளாதாரக் கட்டமைப்புக்களை உருவாக்குவதன் மூலமே நமது பாரம்பரியங்களையும், பண்பாட்டுத் தனித்துவங்களையும் பேணவும் பாதுகாக்கவும் முடியும் என்பதே வரலாற்றுத் தர்க்கமாக உள்ளது.

## முடிவுரை

இறுதி அர்த்தத்தில் வன்னிப் பிரதேச நாட்டார் வழக்காற்று வகைமைகள் வளமான பல்வகைத் தன்மையுள்ள பண்பாட்டினைக் கட்டியெழுப்புவதுடன், வன்னியின் செழுமையான பண்பாட்டுத் தொன்மையினையும் தொடர்ச்சியினையும் பிரதேசத் தனித்துவத்தையும் அடையாளத்தையும் நிலைநிறுத்துவதற்கான வேர்மூலங்களாகவும் அமைகின்றன. இவற்றைச் சரியான அர்த்தத்தில் எதிர்கொள்வதன் மூலமே தமிழர் சமூக பண்பாட்டு உருவாக்கத்தில் வன்னிப் பிரதேசம் தீர்க்கமான தனது வரலாற்றுப் பணியை நிறைவு செய்ய முடியும்.

## துணை நூல்கள்

குணசேகரன், கே.ஏ., (2003), சேரிப்புறவியல், சென்னை: தன்னானே பதிப்பகம்.

கேசவன், கோ., (1991, இரண்டாம் பதிப்பு), பள்ளு இலக்கியம் - ஓர் சமூகவியல் பார்வை, சிவகங்கை: அன்னம் வெளியீடு.

சண்முகலிங்கம், க., (ப.ஆ), (1993), தமிழர் நாட்டார் வழக்காற்றியல், கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

சிவசுப்பிரமணியன், ஆ., (1999), மந்திரமும் சடங்குகளும், சென்னை: மக்கள் வெளியீடு.

பக்தவத்சலபாரதி, சி., (1999), பண்பாட்டு மானிடவியல், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

பெருமாள், ஏ. என்., (2003), தமிழக நாட்டுப்புறக்கலைகள், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

லூர்து, தே., (1988), நாட்டார் வழக்காற்றியல், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

Handu Jawahalal, (1985) South Indian Folklore : Growth and Development, Manipal: Acadmiy of General Education.

Lewis, J.P., (1993 Reprinted), Manual of the Vanni District, Colombo: Lake House Book Shop.

Navaratnam, C.S., (1960), Vanni and the Vanniyar, Jaffna: Eelanadu Limited.

Obeyasekara, Gananthi, (1984), The Cull of the Goddess Pattrini, Chicaco: Chicaco University Press.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள்

பேராசிரியர் றமீஸ் அப்துல்லா

இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஆங்கிலேய மிஷனறிமாரும் துறைத்தன உத்தியோகத்தர்களும் அவ்வப்போது எழுதிய குறிப்புக்களைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் சிலர் அத்துறையில் அக்கறை காட்டியதுடன் ஆரம்பமானது.[01] 1950கள் வரை இத்தகையோரின் செல்வாக்கே ஈழத்து நாட்டாரியலில் இடம்பெற்றது. இதில் காலத்தால் முற்பட்டவர் சைமன் காசிச் செட்டி அவர்கள். இவருக்குப் பின் வ. குமார சுவாமிப்பிள்ளை (1875–1936), கலைப் புலவர் க. நவரத்தினம் (1898–1962), பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1903–1962), மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் (1908–1978) முதலியோர் இத்துறையில் ஈடுபாடு காட்டினர்.

1956இற்குப் பின் இலங்கை கலை இலக்கியத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களால் கிராமத்தவர்கள், அடக்கப்பட்டவர்களின் இலக்கியம் பற்றிய சிந்தனை வீறுகொள்ளத் தொடங்கியது. இக்காலப் பகுதியிலே நாட்டார் இலக்கியம் பற்றிய ஆய்வுகளும் வெளிவரத் தொடங்கின. இலங்கை வானொலியும் இத்துறையில் அக்கறை காட்டியது. மு. இராமலிங்கம், வீ.சி. கந்தையா, டி.ரி. செல்வநாயகம், வீ.சு. கதிர்காமத்தம்பி, எஸ். வி.ஓ. சோமநாதர், செ. கணபதிப்பிள்ளை, வரதர், இலங்கையர்கோன், சு. வித்தியானந்தன், எப்.எக்ஸ்.சி. நடராசா, கா. நவரத்தினம், அருள்செல்வநாயகம், இ. பாலசுந்தரம், சி.வி. வேலுப்பிள்ளை, ஏ.பி.வி. கோமஸ், ஆ.மு. ஷரிபுத்தீன். எம்.ஸி.எம். ஸுபைர், சாரல் நாடன், எஸ். முத்துமீரான், எம்.ஏ. நு.்.மான், எஸ்.எச்.எம். ஜெமீல், மருதூர் ஏ. மஜீத், வ. சிவசுப்பிரமணியம், மகேஸ்வரலிங்கம், றமீஸ் அப்துல்லா முதலியோர் கிராமிய இலக்கியம் பற்றி எழுதத் தொடங்கினர்.

இந்தப் பின்னணியில் ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்கியலில் ஆக்கபூர்வமான ஓர் ஆய்வு முயற்சியாக 1980இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடாத்திய 'இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல்' பற்றிய கருத்தரங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இதன் பின், இ. பாலசுந்தரத்தின் கலாநிதிப் பட்டத்திற்கான ஈழத்து நாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும் கவனத்திற்குரியது. 1980இல், கா. சிவத்தம்பி அவர்களைப் பதிப் பாசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினரின் 'இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல்' தொகுப்பு வெளிவந்தது. இந்த ஆய்வு முயற்சியின் தொடக்கத்தினால் 1993 இல் இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் தமிழ் சாகித்திய விழாவில் 'இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல்' என்னும் பொருளில் ஒரு கருத்தரங்கு நடந்தேறியது. இக்கருத்தரங்கில் இலங்கை நாட்டாரியல் அறிஞர்களின் கட்டுரை மாத்திரமன்றி தமிழக நாட்டாரியல் ஆய்வாளர்களும் கட்டுரை படித்தனர். இக்கருத்தரங்கு, இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் ஒரு குறிப்பிடத்தக்க கட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று, கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை நடாத்திய 'வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக' என்ற தலைப்பிலான கருத்தரங்கும் நாட்டார் இலக்கிய ஆய்வில் மிக முக்கியமானதாகும். கிழக்கிலங்கை நாட்டார் இலக்கிய ஆய்வில் இத்தொகுப்பு முக்கியமான கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக நாட்டார் கதைகள் தொடர்பான ஆய்வினைத் தொடக்கிவைக்கும் ஒன்றாகவும் இதிலுள்ள பல கட்டுரைகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு மாகாண சபை, வடக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபை முதலானவற்றின் இலக்கிய மாநாடுகளில் நாட்டாரியல் ஆய்வுத்துறை சம்பந்தமாகக் கவனம் செலுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கை, கிராமிய இலக்கியத்தில் ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு பிரதேசமாகும். கிழக்கிலங்கை மக்களிடத்தில் காணப்படும் நாட்டார் வழக்காற்றின் கூறுகளை நாட்டார் இலக்கியம், அரங்கக் கலைகளும் கைவினைகளும், நம்பிக்கைகளும் சடங்கு சம்பிரதாயங்களும் என வகைப்படுத்தி நோக்க முடியும்.[02]

இதில், கிழக்கிலங்கை கிராமிய இலக்கியம் பற்றிய ஆய்வில், பாடல்களையும் பழமொழிகள், விடுகதைகள், கதைகளையும் உள்ளடக்கிப் பார்க்கலாம். கிழக்கிலங்கைக் கிராமிய இலக்கியம் அங்கு செறிவாக வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் பண்பாட்டம்சங்களைப் பிரதிபலிப்பினும் கவி என்ற வடிவம் முஸ்லிம்களிடத்திலே அதிகம் பெருவழக்குப் பெற்றிருந்தது. இங்கு நாட்டரியல் பற்றி ஆய்வு செய்தவர்கள் பெரும்பாலும் நாட்டுப் பாடல்களையே கவனத்திற் கொண்டுள்ளனர். அதிலும் குறிப்பாகக் கவி என்ற வகையே இதில் முக்கியத்துவம் பெற்றது.

கவி என்பது ஈரடிப் பாடலாக அமைவது. எதுகை மோனையும் ஓசை நயமும் இப்பாடல்களில் காணப்படும். இப்பாடல்கள் பல்வேறு கோணங்களில் தொகுக்கப்பட்டு உள்ளன. வித்துவான் வி.சி. கந்தையா, எப்.எக்ஸ்.சி. நடராசா, கவிமணி மு. இராமலிங்கம், எம்.ஸி.எம். ஸுபைர், ஆ.மு. ஷரிபுத்தீன், எஸ். முத்துமீரான், எஸ்.எச்.எம். ஜெமீல், மருதூர் ஏ. மஜீத் முதலியோர் நாட்டார் பாடல்கள் பற்றி விளக்கங்கள் எழுதியுள்ளனர். இவை அத்தனையிலும் காதற் பாடல்களே மிஞ்சியிருப்பதோடு அவற்றுக்கான புனைகதைப்பாங்கான விளக்கங்களும் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளன. இந்த விளக்கம் நாட்டாரியல் ஆய்வின் யதார்த்தத்தை அதன் பண்பாட்டு வெளிச்சம் காண்பதற்கான நோக்கைச் சிதைத்துவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

இவ்வகையில் கிழக்கிலங்கை நாட்டாரியல் ஆய்வில் முதன்முதலாக மிக முக்கியத்துவம் பெற்றதாகக் 'கிராமிய இலக்கியம் பற்றிய ஆய்வுகள்' என்ற தலைப்பில் அமைந்த எம்.ஏ. நு.்.மானின் கட்டுரையைக் குறிப்பிட முடியும்.

> "கிராமிய இலக்கியம் பற்றிய ஆய்வுக்கு முன் தேவையாகக் கிராமிய இலக்கியங்கள் உரிய முறையில் தொகுக்கப்பட வேண்டும். தமிழகத்திலும் இலங்கையிலும் கிராமிய இலக்கியத்தொகுப்பு முயற்சிகள் பல நடைபெற்றுள்ளன. பல தொகுப்புக்களும் வெளிவந்துள்ளன. ஆயினும், இத்தொகுப்புக்களில் ஒரு பொதுவான அடிப்படையான குறைபாடு காணப்படுகின்றது. இத்தொகுப்புக்களில் கிராமிய இலக்கியம் இடம்பெறும் உண்மையான சமூக சந்தர்ப்பங்களும் (Social Context) கிராமிய மக்களின் உண்மையான மொழி வழக்குகளும் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டிருப்பதே இக் குறையாகும்."[03]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இக்கவி வழக்கினை சு. வித்தியானந்தன், மட்டக்களப்பு முஸ்லிம் மக்களால் பெரிதும் பாடப்படும் அகத்திணை சார்ந்த பாடல்கள் என்று குறிப்பிடுகிறார்.[04] இதனையொத்த கருத்தையே வி.சி. கந்தையாவும் முன்வைக்கிறார்.[05]

ஆனால், உண்மையில் கவி காதலை மாத்திரம் குறிப்பிடுகின்ற ஒரு வடிவமல்ல. அது அகத்திணை சாராத பல அம்சங்களையும் எடுத்துரைக்கிறது. எடுத்துக்காட்டாக

*தலமை தெறிச்சிடுவாய்*
*தல மகனைத் திண்டுடுவாய்*
*மூலம் பொறுத்திடுவாய் - என்ட*
*முதுகெலும்பு நோகுதடா*

*வெள்ளி எரிஞ்சி*
*விளக்கடியில் விழுவதுபோல் - ஒன்ட*
*தலமை தெறிச்சி*
*தல வாசலில் விழும்டா.*

என்பன போன்ற அதிகாரக் கொடுமைகளுக்கு எதிரான கவிகளும்

*சம்மாந்துறையாரே*
*சங்ககெட்ட ஊராரே*
*வெயிலேறித் தண்ணிவாக்க - ஒங்க*
*வேதமென்ன சிங்களமோ.*
*சுண்ணாம்புமில்ல*
*சூடுபோடு மாடுமில்ல*
*வண்ணானுமில்ல - இந்த*
*மல்க்கம்பிட்டி ஊராருக்கு.*

*அப்பஞ் சுடும் காத்தான் குடியார்*
*அவல் இடிக்கும் காரை தீவார்*
*முட்டி இடுக்கும் சம்மாந்துறையார்*
*முகப் பழக்கம் நிந்தவூரார்*

என்பன போன்ற ஊர்வசைப் பாடல்களும் என பல்வேறு பாடல்கள் வழங்குகின்றன.

மட்டக்களப்பில் முஸ்லிம்களிடம் வழங்கும் கவி பற்றிய தவறான வியாக்கியனத்துக்குச் சமூக சந்தர்ப்பத்தின் அடிப்படையிலான கருத்துக்களை எம்.ஏ. நு..மான் தனது ஆய்வுகள் மூலம் முன்வைத்தார்.

மேலும், எம்.ஏ. நு..மான் 'நாட்டார் இலக்கியத்தில் காதல் பாடல்கள்' என்ற தனது கட்டுரையில் இது தொடர்பாக எடுத்துக்காட்டுக்களுடன் விரிவாக ஆராய்ந்துள்ளார். காதற்கவிகள் பற்றி வி.சி. கந்தையா 'மட்டக்களப்பு தமிழகத்தில்' கூறுவதையும் ஆ.மு. ஷரிபுத்தீன் 'கனிந்த காதலில்' கூறுவதையும் எஸ். முத்துமீரான் 'கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம்' என்ற நூலில் கூறுவதனையும் எம்.ஸி.எம். ஸுபைர் 'கண்ணானமச்சி' என்ற நூலில் கூறுவதனையும் 'ஈழத்து நாட்டார் பாடல்'களில் இ. பாலசுந்தரத்தின் கருத்தையும் விளக்கி அவற்றின் பொதுத்தன்மையையும் விளக்கமாகக் கூறுகின்றார்.[06] இவை அனைத்துமே காதல் கவிகளுக்குக் கற்பிதம் கூறுவதிலே அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், எம்.ஏ. நு.்.மான் கிராமியக் கவிகளுக்கு விளக்கம் கொடுக்கும் இத்தகைய அபத்தமான முறையில் இருந்து விலகி தமது கிராமிய இலக்கியம் பற்றிய கட்டுரைகளில் ஒரு புதிய கருத்தைச் சொல்கிறார்:

"இக்காதற் பாடல்களைக் கிராமப் புறத்துக் காதலர்கள் தங்கள் உண்மைக் காதல் உறவிலேதான் பாடப் பயன்படுத்துகிறார்களா என்பதே நமது வினாவாகும். கிழக்கிலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை இது அவ்வாறு இல்லை என்பதே உண்மையாகும். அவர்கள் காதல் உணர்வுக்கும் காதல் உறவுகளுக்கும் அப்பாற்பட்டவர்கள் அல்லர் எனினும் அவர்கள் மத்தியில் வழங்கும் காதல் கவிகள் உண்மை வாழ்வில் காதலர்களால் பாடப்படுவன அல்ல"[07]

மேலும் இக்கவிகளின் உண்மையான சமூக சந்தர்ப்பம் பற்றி அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"கிழக்கிலங்கை பெரும்பாலான வயல் நிலங்கள் கிராமங்களை விட்டுத் தொலைவில் உள்ளன. அக்காலத்தில் விதைப்பதற்குரிய முளைநெல்லை வயலுக்கு மாட்டு வண்டிகளிலேயே ஏற்றிச் செல்வார்கள். இப்பயணம் பெரிதும் இரவிலேயே நடைபெறும். இரவு உணவுக்குப் பின் பயணம் தொடங்கினால் விடிபொழுதிலேயே வயலைப் போய் அடைய முடியும். இரவிலே வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும். வண்டியிலே போகும் விவசாயிகள் பொழுதுபோக்காகக் கவிகள் பாடிச் செல்வர். ஒரு வண்டியில் செல்பவன் ஒரு கவிபாட அடுத்த வண்டியில் செல்பவன் அதற்குப் பதில் கவி பாடுவான். இத்தகைய பாடல் நிகழ்வு பயணம் முடியும் வரை தொடர்வதும் உண்டு. பயிர் வளர்ந்ததும் வயலில் இராக் காவல் இருப்பது அவசியமாகும். பன்றிகளும் ஏனைய விலங்குகளும் குருவிகளும் பயிரையும் கதிரையும் அழித்து விடாமல் காவல் இருப்பதற்கு வயலில் ஆங்காங்கே காவல் பரண் கட்டி இருப்பார்கள். பரண்கள் பெரும்பாலும் கூப்பிடு தூரத்தில் அமைந்திருக்கும். இரவில் நித்திரை விழித்திருக்கும் விவசாயிகள் பரணில் இருந்து பொழுதுபோக்காகக் கவி பாடுவார்கள். கவிபாடல் நிகழ்வு விடியவிடிய நடப்பதும் உண்டு. அறுவடை செய்த நெல்லை வண்டிகளில் இரவிலேயே வீட்டுக்குக் கொண்டு வருவார்கள். இந்த வண்டிப் பயணத்திலும் கவி பாடல் நிகழ்வு தொடரும். இந்தக் கவிகள் பெரும்பாலும் காதல் கவிகள்தான். வேறு பொருள் பற்றிய கவிகளும் வசைக்கவிகளும் இவற்றுடன் பாடப்படுவதுண்டு. ஆண்களே இவற்றைப் பாடுவார்கள். கிழக்கிலங்கை வேளாண்மைச் செய்கையின் பெண்களின் பங்கு மிகவும் குறைவாகும். வசதி படைத்த அல்லது மத்திய தரக் குடும்பத்துப் பெண்கள் யாரும் இதில் பங்கு கொள்வதில்லை. பயிர் வளரும்போது வயலில் களை பிடுங்குவதற்கு அல்லது அறுவடையின் பின் தேவை எனின், கதிர் துவைப்பதற்கு வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் சிலர் பயன்படுத்துவர். அறுவடைக் காலத்தில் ஏழைப் பெண்கள் சிலர் வயலில் சிந்திக் கிடக்கும் கதிர்களைப் பொறுக்குவதற்குச் செல்வதுண்டு. இவை தவிர வயலில் அவர்களுக்கு வேறு வேலைகள் இருப்பதில்லை. காதல் பாடல்களில் இடம்பெறும் பாத்திரங்கள் வறிய ஏழைகளாக அன்றி பொதுவாக 'தலைவியராகவே' இருப்பினும் இங்கு நம் கவனத்திற்குரியது."[08]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக எம்.ஏ. நு.ஃமான் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

> "கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வழங்கும் நாட்டார் இலக்கியத்தில் காதல் பாடல்கள் என்று வழங்கப்படுபவை உண்மை வாழ்க்கையில் காதலர்களால் பாடப்படுபவை அல்ல என்பதும் அவை வேளாண்மைத் தொழிலுடன் தொடர்புடையவை என்பதும் ஆண்களால் பாவனை முறையில் பாடப்படுபவை என்பதும் ஆண்களாலேயே படைக்கப்பட்ட புனைவியற் பாங்கான இலக்கியங்கள் என்பதும் தெளிவாகின்றன."[09]

ஆனால், நாட்டாரியல் முயற்சியில் ஈடுபட்டவர்கள் கூறுவது போன்று இந்தக் கவிகள் காதலன் காதலி கூற்றாகவே அமைந்தன என்று கூறுவதும் அதற்குப் புனைந்துரை கதை கூறுவதுமான பொதுத்தன்மை தவறானதே. அதற்கு எம்.ஏ. நு.ஃமானின் கருத்துக்கள் ஆதாரமானவை. ஆனால், ஒருசில பாடல்கள் அவ்வாறு உறவு கொள்ளப்பட்டவர்களாலும் பாடப்பட்டதாகக் 'கிழக்கிலங்கை கிராமிய இலக்கியம்' என்ற நூலில் றமீஸ் அப்துல்லா குறிப்பிட்டுள்ளார். ஆனால், வக்கிரத்தனமான பாலுணர்வு கொண்ட பாடல்கள் நிச்சயமாகப் பாவனையாக ஆண்களால் பாடப்பட்டதே என்பதில் சந்தேகமே இல்லை எனவும் அவர் தமது ஆய்வில் குறிப்பிடுகிறார்.

'கிராமத்து இதயம்' (எஸ்.எச்.எம். ஜெமீல்), 'தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல்' (மருதூர் ஏ மஜீத்) முதலிய நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட சில நூல்கள் வெளிவந்தாயினும் அவையும் தொகுப்பு முயற்சியில் அமைந்தன வென்றே குறிப்பிட வேண்டும்.

இவை தவிர கிழக்கிலுள்ள தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்கள் முதலான சிலவும் தொகுக்கப்பட்டு அவற்றுக்குச் சில விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன. ஆனால், இவை குறித்த விரிவான ஆய்வுகள் எதுவும் இடம்பெறவில்லை. மேலும், குறிப்பிடத்தக்க நாட்டாரியல் தொடர்பான ஆய்வுகள் கிழக்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றாலும் அவை நூலுருப் பெறவில்லை.

மேலும், கிழக்கு மக்களிடம் வழங்குகிற கற்றறியாத ஆனால், நாம் அறிந்த ஆசிரியர் சிலரால் பாடப்பட்ட சில வடிவங்களும் உள. அவற்றை அரைநிலை வாய்மொழிப் பாடல்கள் என கா. சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இத்தகைய நெடும்பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து செ. யோகராசா வெளியிட்ட ஆய்வு நூல் ஒன்று உள்ளது. தற்போது கிழக்கில் சில கவிஞர்கள் நாட்டுப் பாடல்களின் உத்தியைக் கொண்டு பல கவிதைகளை ஆக்கி வருகின்றனர். இத்தகைய பாடல் வடிவங்கள் குறித்த ஆய்வுகளும் பெரிதும் இடம்பெறவில்லை.

இவை தவிர நாட்டார் இலக்கிய வடிவங்களான பழமொழிகள், விடுகதைகள், கதைகள் முதலானவை சில தொகுக்கப்பட்டாலும் அவை முறையான ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. அதேநேரம் இத்தொகுப்பு முயற்சிகளிலும் பலவீனங்கள் உள்ளதாக அறியமுடிகிறது. மொத்தத்தில் கிழக்கில் நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள் நவீன கோட்பாடுகளின் அடிப்படையில் சிறப்பாக இடம்பெற்றதாக அறியமுடியவில்லை. இத்துறை குறித்து தமிழகத்தில் பல்வேறு ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை அடியாகக் கொண்டு நமது நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள் இன்னும் நீண்ட தூரம் மிகக் கூர்மையான நோக்குடன் பயணிக்க வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றாதாரம்


1. சிவத்தம்பி, கார்த்திகேசு, (1980: 07), இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.
2. அதே நூல், பக். 129.
3. தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர், (1993: 27), இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
4. சிவத்தம்பி, கார்த்திகேசு, (1980: 129), இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், யாழ்ப் பாணம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.
5. கந்தையா, வீ.சி., (1964 : 29), மட்டக்களப்புத் தமிழகம், யாழ்ப்பாணம்.
6. நு.்.மான், எம்.ஏ., (1993), "கிராமிய இலக்கியம் பற்றிய ஆய்வில் சமூக சந்தர்ப்பங்கள் முக்கியத்துவம்", தமிழ் சாகித்திய விழா (1993) சிறப்பு மலர், இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
7. அதே கட்டுரை
8. அதே கட்டுரை
9. அதே கட்டுரை
10. வ. சிவசுப்பிரமணியம், (2004), 'மட்டக்களப்பு நாட்டாரியல்', நல்லையா வீதி, மட்டக்களப்பு.
11. லரிப் சுலைமான், 'இறக்காமத்தூர் பண்பாட்டுப் பாடல்கள்', கலாசாரப் பேரபை, பிரதேச செயலகம், இறக்காமம்.
12. எஸ்.எச்.எம். ஜெமீல், (2008), 'கிராமத்து இதயம்', பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, இலங்கை.
13. எஸ். முத்துமீரான், (2013), 'கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்', மீரா உம்மா வெளியீட்டகம், நிந்தவூர்.
14. சுதாராஜ், (2005), 'இலங்கை நாட்டுப்புறப் பாடல்கள்', மணிமேகலை பிரசுரம், சென்னை.
15. எஸ். நஜிமுடீன், 'முள்ளில் படுக்கையிட்டு', டீன்ஸ் பதிப்பகம், கலை இலக்கிய வட்டம், சாய்ந்தமருது.
16. சித்திரலேகா மௌனகுரு (ப), (2004), வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக...., மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
17. யோகராஜா, செ., (2002), ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வு முயற்சிகள்

திரு. வ. செல்வராஜா

அழகும் ஆற்றலும் உடைய நாட்டார் பாடல்களை நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், கிராமிய இலக்கியம், காட்டு மல்லிகை, மக்கள் இலக்கியம் போன்ற பல்வேறு பெயர்களில் ஆய்வாளர்கள் அழைக்கின்றனர். மனித சமூக உருவாக்கத்தின் ஆரம்ப இலக்கியமாக நாட்டார் இலக்கியங்களே காணப்படுகின்றன. இவை தனிமனிதர் அல்லாத சமூகத்தின் அல்லது மக்கள் திறளினது கூட்டுப்படைப்பாகும்.

நாட்டார் இலக்கியங்கள் சமூகத்தின் கூட்டுப்படைப்பு என்பதனால் அதற்கே உரித்தான சிறப்புப் பண்புகளை அவை கொண்டுள்ளன.

1) மனித சமூகத்தின் பெரும்பகுதியினர் அறிந்த இலக்கிய வகை.

2) உலகில் தோன்றிய மிகப் பழமையான இலக்கிய வகை.

3) மனித சமூகத்தின் ஆய்வறிவுத் துறைகளை உள்ளடக்கிய இலக்கிய வகை.

4) ஒரு சமூகத்தின் வரலாற்றை, மொழியை, இசை மரபுகளை, சமய, சடங்குமுறைகளை, சமூக, பண்பாட்டு அம்சங்களை, கற்பனைகளை, உணர்வுகளை, விடுதலை வேட்கைகளை உள்ளடக்கிய இலக்கிய வகை.

5) ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூகப் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய இலக்கிய வகை.

6) ஒரு குறிப்பிட்ட காலகட்ட சமூகத்தின் அல்லது மக்களின் கூட்டான அல்லது பொதுவான உணர்வுகளை வெளிப்படுத்திய இலக்கிய வகை.

7) சமூகக் கூட்டுவாழ்க்கையின் உறுதிப்பாட்டையும் தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்தும் இலக்கிய வகை.

8) மக்கள் சமூகத்தின் கூட்டு அனுபவங்களை வெளிப்படுத்துவனவாய் உள்ள இலக்கிய வகை.

9) மக்கள் கூட்டத்தின் முற்போக்கான உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் இலக்கிய வகை.

10) ஒரு சமூகத்தின் மொழிப் பிரயோகத்தின் பண்புகளை உள்ளடக்கிய இலக்கிய வகை.

போன்ற பல்வேறு பண்புகளைக் கொண்டனவாக நாட்டார் இலக்கியங்கள் காணப்படுகின்றன.

"வரலாற்று விளக்கமும் சமுதாய முக்கியத்துமும் உளவியல் நுணுக்கங்களும் உன்னத இலட்சியங்களும் விரவியிருப்பதனாலேயே ஒவ்வொரு கூட்ட மக்களின் தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுகளைத் திறம்படச் சித்தரிக்கும் ஆற்றலுடையனவாய் நாட்டுப்பாடல்கள் கருதப் படுகின்றன." (பேராசிரியர் க.கைலாசபதி) என நாட்டார் பாடல்களின் பண்பைத் தொகுத்துக் கூறலாம்.

தமிழில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நாட்டார் பாடல்கள் பற்றிய தேடல், தொகுத்தல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் கடந்த 50 ஆண்டுகளாக நாட்டார் பாடல்கள் குறித்த கவனம் பலராலும் செலுத்தப்பட்டு வருகின்றது. கடந்த 25 ஆண்டுகளாக இத்துறையில் பலர் பிரக்ஞை பூர்வமான தேடலிலும் சேகரிப்பிலும் ஆய்வுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் நாட்டில் - பல்கலைக்கழகங்களில் "நாட்டுப்புறவியல்" தனித்துறையாக இயங்கி வருகின்றது. மொழியியல் ஆய்வுகள், மானிடவியல் ஆய்வுகள் என்பன இத்துறைக்கு வளம் சேர்த்து வருகின்றன. பலர் இத்துறையில் கலாநிதிப் பட்டங்களையும் பெற்று வருகின்றனர்.

இலங்கையில் நாட்டாரியல் துறைக்கு அல்லது வளர்ச்சிக்குப் பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்கள் அடித்தளமிட்டார் என ஆய்வுகள் கூறுகின்றன. 1950 வரை தனிநபர்கள், ஆர்வலர்களால் நாட்டார் பாடல்களின் சேகரிப்புகள் இடம்பெற்று வந்தன. சைமன் காசிச்செட்டி இத்துறையில் காலத்தால் முந்தியவர் எனக் கணிப்பிடப்படுகின்றார்.

வ.குமாரசுவாமிப்பிள்ளை (1875) க.நவரத்தினம் (1898-1962) க.கணபதிப்பிள்ளை (1902- 1968) மு. இராமலிங்கம் (1908-1974) போன்றோர் நாட்டாரியல் ஆய்வில் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் வீ.சி. கந்தையா, வீ.க. கதிர்காமத்தம்பி, எஸ்.வீ.ஓ.சோமநாதர் வரதர், சு. வித்தியானந்தன், எப்.எக்ஸி.சி. நடராசா, கா. நவரத்தினம், அருள் செல்வநாயகம் போன்றோர் நாட்டாரியலின் பல்வேறு கூறுகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

1970களில் நாட்டாரியல் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் பொருளாக மாறியது. இதனை ஆரம்பித்து வைத்தவர் பேராசிரியர் க. கைலாசபதி ஆவார். சுசீந்திரராஜா, கா.சிவத்தம்பி, சண்முகதாஸ், எம்.ஏ. நு.்.மான், வேலாயுதம்பிள்ளை, தி. சதாசிவ ஐயர், பாலசுந்தரம், செல்லையா மெற்றாஸ், வி.சி. கந்தையா போன்றோர் நாட்டாரியல் துறைக்கு குறிப்பிடத்தக்களவு பங்காற்றியுள்ளனர்.

தமிழகப் பல்கலைக்கழகங்களைப் போன்று நாட்டாரியல் துறை இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தனித்துறையாக வளர்ச்சி பெறவில்லை. அதனால் தமிழ் நாட்டில் விரவப் பரந்து காணப்படும் நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றன. இலங்கையில் நாட்டாரியல் ஆய்வு முயற்சிகள் திருப்தி கொள்ளக்கூடிய அளவில் விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்களைக் கண்டறிவது அவசியமானதாகும்.

மலையகத்தில் நாட்டாரியல் குறித்த அக்கறைகள் நீண்டகாலமாக இருந்து வந்த போதிலும், போதுமான அளவில், திருப்திகரமான அளவில் இத்துறை குறித்த காத்திரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது கவனத்திற்குரியது.

நாட்டாரியல் துறை, நாட்டார் பாடல்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதை கள், புராணக்கதைகள், சிறுதெய்வ வழிபாடுகள், வாழ்க்கைச் சடங்குகள், கரணப்பயில்வுகள், வாழ்வியல் அம்சங்கள், கைவினைப் பொருட்கள், கவின்கலைகள், கூத்துகள், இசைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கருவிகள் எனப் பல்வேறு கூறுகளாகப் பகுக்கப்பட்டு நுண்ணாய்வுகளாக உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நாட்டாரியல் ஆய்வை

1. சேகரிக்கும் பணி (Collection)
2. வகைப்படுத்தல் (Classification)
3. ஆய்வு செய்தல் (Analysis)

என மூவகையாகப் பகுக்கலாம். (தமிழ் நாட்டார் வழக்காற்றில் P. 187)

சேகரிப்புப் பணிகள் முற்றுப் பெற்றால்தான் ஆய்வுப்பணி காத்திரமானதாக இருக்க முடியும்.

மலையகத்தைப் பொறுத்தவரையில் இன்னும் சேகரிப்புப் பணிகள் முற்றுப்பெறவில்லை. அண்மையில் கூட யட்டியாந்தோட்டை கருணாகரன் குழுவினர் இச்சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தென் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மேல் மாகாணம் போன்ற பெருந்தோட்டத்துறையினர் வாழும் இடங்களில் இச்சேகரிப்புப் பணிகள் ஆரம்பிக் கப்படவே இல்லை எனும் அளவிற்கு சேகரிப்புப் பணிகள் இடம்பெறவில்லை. மத்திய மாகாணம், ஊவா மாகாணங்கள் போன்றவற்றில் மட்டும் இத்துறைச் சார்ந்த செயற்பாடுகள் ஓரளவேனும் இடம்பெற்று வருகின்றன.

மலையகத்தில் நாட்டாரியல் சார்ந்த கதைப்பாடல்கள் முற்றாக மறைந்துவிட்டன. இசைக்கருவிகள், கூத்துக்கள் என்பன சிறிது சிறிதாக மருவி வருகின்றன. சிறுதெய்வ வழிபாடுகள், வாழ்க்கைச் சடங்குகள், நடனங்கள் என்பனவும் மாற்றமுற்று வருகின்றன. இவை சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

சேகரிப்புப் பணிகள் முற்றுப்பெறாத நிலையில் வகைப்படுத்தல் ஆய்வு செய்தல் என்பன பூரணத்துவமானதாக இருக்க முடியாது.

> "பண்பாட்டு நடைமுறைகள் பற்றியும் அந்த நடைமுறைகளுடன் காரண காரியத் தொடர்புடைய கருத்துநிலை பற்றிய தெளிவான கருத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய முதல் தேவை அந்த பண்பாட்டு நடைமுறைகள் பற்றிய ஒழுங்கமைப்புள்ள ஒரு விவரணமாகும். இந்த அடிப்படையில் முதலில் மலையகப் பண்பாட்டாய்வியல் நியமங்களுக்கேற்ற முறையில் விவரித்தல் முதல் கடமையாகின்றது. விவரணத் தெளிவு இல்லையேல் விமர்சனம் தோன்ற முடியாது."
>
> (பேரா.கா.சிவத்தம்பி - இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும்)

மலையக நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வுகளையும் இந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்பது தவிர்க்க முடியாத விடயமாகின்றது. சேகரிப்புகள், வகைப்படுத்தல்கள் சிறியள விலான ஆய்வு முயற்சிகள் இடம்பெற்றுள்ளமையை கவனத்திற் கொள்வது அவசியமானது.

மலைநாட்டு மக்கள் பாடல்கள் (ஸி.வி.வேலுப்பிள்ளை 1983), அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான் (ஏ.வி.வி.கோமஸ்), மலையக வாய்மொழி இலக்கியம் (சாரல் நாடன் 1993), கண்டிச் சீமையிலே (டெஸ்போர்ட் த.வி) ஆசிரிய மாணவர்கள், மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள் (மு.சிவலிங்கம் 2007) ஆகிய தொகுப்புகள் இதுவரை வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வு முயற்சிகள் நீண்ட காலமாகவே நடைபெற்று வருகின்றன.

ஸி.வி. வேலுப்பிள்ளை

மு.க. நல்லையா (சாரல் நாடன்)

சி.வே. ராமையா

டி.எஸ். ராஜூ

ஏ.பி.வி. கோமஸ்

சி. அழகுப்பிள்ளை

வ. செல்வராஜ் (கட்டுரையாசிரியர்)

லெனின் மதிவாணம்

மு. சிவலிங்கம்

போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தகவர்கள். இதனைவிட வேறு தேவையொட்டி எழுதுபவர்கள் நாட்டார் பாடல்களைக் கையாண்டு விவரணக் கருத்துக்களை முன்வைத்துள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கதே.

ஸி.வி. வேலுப்பிள்ளையின் "மலைநாட்டு மக்கள் பாடல்கள்" (1983) எனும் தொகுப்பே மலையக நாட்டாரியலின் முதன்முயற்சி எனக்கொள்ளலாம்.

சாரல் நாடனின் "கும்மியோ கும்மி கோப்பிக்காட்டுக் கும்மி" எனும் பெயரில் 24 பக்கங்களைக் கொண்ட நூல் 1918 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதுவே முதன்முதல் வெளிவந்த மலையக நாட்டார் பாடல் நூல்" எனக் குறிப்பிட்டு "இச்சிறுநூல் மலையகத்தில்" வழங்கி வந்த நாட்டுப் பாடல்களின் தொகுப்பாக இருக்க வேண்டும்" எனும் தனது சந்தேகத்தையும் முன்வைத்துள்ளார்.

எனவே, நம்பகமான தகவலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது மலையக மக்கள் மத்தியில் நிலவிய நாட்டார் பாடல்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவந்தவற்றைக் கொண்டு "மலைநாட்டு மக்கள் பாடல்கள்" எனும் தொகுப்பை முதல் நூலாகக் கொள்ள இடமுண்டு.

ஸி.வி. வேலுப்பிள்ளை "மலைநாட்டு மக்கள் பாடல்கள்" எனும் தொகுப்பில் - இப் பாடல்கள் யாரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது எனும் தகவலை தமது நன்றியுரையில் குறிப்பிட்டுள்ளார். எனினும் பாடல்களை சேகரிக்கும்போது எந்தெந்தப் பாடல் - யாரிடமிருந்து பெறப்பட்டது, அப்பாடல் கிடைத்த இடம் எது யாரிடமிருந்து பெறப்பட்டது அப்பாடல் கிடைத்த இடம் எது பாடல் பிறந்த மண் எது, தகவல்களை போன்றத் தேடுவது சிறப்பானதாக இருக்கும். மலையக நாட்டார் பாடல்கள் சேகரிப்பில் ஈடுபட்ட பலர் இந்த விபரங்களை வெளிக்கொணரவில்லை என்பது கவலைக்குரியதே.

ஸி.வி. வேலுப்பிள்ளை மலையக நாட்டார் பாடல்களைத் தொகுத்து முன்வைத்துள்ள முறை விதந்து போற்றுவதற்குரியதே. வரலாற்று உணர்வு, மலையகச் சமூக உருவாக்கம் குறித்த அக்கறை என்பவை இதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருமாறு அந்த வைப்பு முறை அமைந்துள்ளது.

கோப்பிக்காலப் பாடல்கள்

தேயிலைக் காலப்பாடல்கள்

தோட்ட உத்தியோகத்தர்கள் பற்றிய பாடல்கள்

காதல் பாடல்கள்

தாலாட்டுப் பாடல்கள்

ஒப்பாரிப் பாடல்கள்

கோடங்கிப் பாடல்கள்

காமன் கூத்துப் பாடல்கள்

இவற்றிற்கான உப தலைப்புகளும் உண்டு.

தமிழ் நாட்டில் நாட்டாரியல் துறையில் புகழ்பெற்ற நா. வானமாமலையின் வைப்பு முறையிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. (தெய்வங்கள், மழையும் பஞ்சமும், தாலாட்டு, விளையாட்டு, காதல், திருமணம், குடும்பம், சமூகம், உழவும் தொழிலும், ஒப்பாரி நா. வானமாமலையின் வைப்பு முறை)

ஸி.வி. வேலுப்பிள்ளை "மலைநாட்டு மக்கள் பாடல்கள்" தொகுப்பில் "பின்னுரைக்கான சில குறிப்புகள்" எனும் தலைப்பில் இப்பாடல்கள் குறித்து தமது கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவற்றின் சாராம்சத்தைப் பின்வருமாறு தொகுத்து கூறலாம்.

1. மலையக மக்களின் சமூக கூட்டு வாழ்க்கை, கூட்டு உழைப்பின் தனித்துவமான உருவாக்கமே மலையக நாட்டார் பாடல்கள்.
2. இப்பாடல்களின் வகைகள் விசாலமான பரப்பை உள்ளடக்கியுள்ளன.
3. இந்த பெரும் பரப்புக்கு ஆதாரமாய் இருப்பது தமிழ் நாட்டின் பண்டைய கிராமிய கலாச்சாரமே.
4. மலையக நாட்டார் பாடல்கள் தனித்துவமானவை.
5. மலையக சமூகத்தின் உருவாக்கத்தையும் மனித உழைப்பின் மகோன்னத வெற்றியையும் பிரதிபலிப்பன.
6. தோட்ட அமைப்பை நிராகரித்தமை பற்றிய உணர்வை வெளிப்படுத்துவன.
7. அநாதரவான வஞ்சிக்கப்பட்ட நிலையை உணர்த்துவன
8. உழைப்பைப் போற்றும் உழைப்பாளனின் பண்பை வெளிப்படுத்துவன
9. மலையக மக்களின் வரலாற்றை, வரலாற்றுச் சம்பவங்களை உள்ளடக்குபவை.
10. தொழிலாளர்கள் எதிர்நோக்கிய அடக்குமுறைகளைப் பிரதிபலிப்பன.

இவ்வாறான பண்புகளை எடுத்துக்காட்ட முனைந்த ஸி.வி. வேலுப்பிள்ளை சில சந்தர்ப்பங்களில் தக்க ஆதாரங்களோடு தர்க்க முறையில் முன்வைக்கத் தவறிவிட்டார் என்றே கூறலாம். ஆனால் ஒரு படைப்பாளியாய் இப்பாடல்களின் விவரணங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கூறும் பாங்கு சற்று வித்தியாசமானதாகவும் உணர்ச்சிபூர்வமானதாகவும் இருப்பதை உணரலாம். புறவயமான ஆய்வுப் பார்வைக்கும் அப்பால் உணர்ச்சி செறிந்த விவரணமாகவே அவரது கருத்துக்கள் பெரும்பாலும் அமைந்து விடுகின்றன.

மலையக மக்களின் வஞ்சிக்கப்பட்ட நிலையை வெளிப்படுத்த

> *"கூனி அடிச்ச மலை*
> *கோப்பிகன்று போட்ட மலை*
> *அண்ணனைத் தோத்த மலை*
> *அந்தா தெரியுதடி"*

என்ற பாடலுக்கான விவரணத்தை கவிதா பூர்வமாகவே வழங்குகின்றார்.

"யாரிடம் சொல்கிறாள் இவள் அல்லது யாரிடம் முறையிடுகிறாள் காலத்திடமா அல்லது தனது இளம் தலைமுறையினரிடமா. நீங்கள் பார்த்துப் பார்த்து மகிழும் அந்த அழகிய மலைகள் ஆமாம். என் அண்ணனை விழுங்கியவைகள் தான்" என்கின்றாள்.

காடுகளை அழித்துப் புதிய மலைகளை உருவாக்கும்போது சாவு என்பது சர்வசகஜமானது. மலையகத்தின் ஒவ்வொரு மலைகளும் நிச்சயம் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தத்தக்க யாரோ ஒரு தங்கையின் அண்ணனைத் தோத்த மலைகளாகத் தானிருக்கும்.

மலையகத்தின் மலைகள் மீது உங்களுக்கு ஏறிடச் சந்தர்ப்பம் வாய்த்தால் உங்கள் காலடிகளைக் கவனமாய் எடுத்து வையுங்கள். ஏனெனில் அவை அண்ணனைத் தோத்த மலைகள்.

எனினும் வேறு சில பாடல்கள் பற்றிய விவரணங்களில் இத்தன்மை அதிகம் காணப்படவில்லை. புறவயமான ஆய்வுப் பண்புகளை அவற்றில் காணலாம்.

பெருந்தோட்டத்துறையின் ஆரம்ப காலகட்டத்தில் ""தங்களை ஏமாற்றிக் கொணர்ந்த நிகழ்ச்சியை மீட்டு, இந்த தோட்ட அமைப்பை நிராகரிக்கும் உழைப்பாளர்களின் மன உணர்வை நாட்டார் பாடல்கள் உணர்த்துவதாக ஸி.வி. வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார். அதற்கு உதாரணமாக.

> *"அட்டே கடியும்*
> *அரிய வழிடையும்*
> *கட்டே எடறுவதும்*
> *காணலாம் கண்டியிலே*
> *ஆளு கட்டும் நம்ம சீமை*
> *அரிசி போடும் நம்ம சீமை*
> *சோறு போடும் கண்டிச்சீமை*
> *சொந்தமினு எண்ணாதீங்க"*

எனும் பாடலை ஆதாரம் காட்டுகின்றார்.

மேலும் மலையக மக்களின் வாழ்வியல் கூறுகளை நாட்டார் பாடல்கள் உணர்த்து வதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் வஞ்சிக்கப்பட்ட நிலையினை (ஊரான ஊரிழந்தேன்), தோட்டத்துரைமார்களின் மகிழ்ச்சியினை (கோப்பி பழுத்திருச்சி), உழைப்பைப்பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து போற்றும் மனதினை (காலையில் நெரேபுடிச்சி), தோட்ட நிர்வாகத்தை கோபத்துடன் நோக்குவதை (காலையிலே நெரே புடிச்சி), தேயிலைச் செடியுடன் உறவாடுவதை (செடியே செடிக்கொழுந்தே) தோட்ட துரைமார்கள் நீதிபதிகளாகவும் பணிபுரிந்ததை (நம்ம தொரை நல்ல தொரை) ஆதாரங்களுடன் குறித்துக்காட்டியுள்ளார்.

தொழிற்சாலையின் வரவை, பிரமிப்பை தோட்டத் தொழிலாளர்கள் வரவேற்பதை ஸி.வி. வேலுப்பிள்ளை எடுத்துக்காட்டிச் செல்வது சுவாரஸ்யமானது.

"அவர்கள் தோட்டத்தில் புதிதாகத் தொழிற்சாலை கட்டியாகிவிட்டது. என்ஜின்களும் பூட்டியாகிவிட்டது. இயந்திரங்களின் மகாசத்தமும் இரைச்சலும் அதிரலும் பெரிய உருவங்களும் அவளுக்கு மாயாஜால வித்தை போன்ற பிரமிப்பையும் அந்த அதிசயத்தில் வியப்பும் கலந்த மகிழ்ச்சியையும் தருகிறது." என பாடல்களை (இஸ்டோரும் கட்டியாச்சி) உதாரணமாகக் கொண்டு காட்டுகின்றார்.

தொடர்ந்து "அந்த அதிசயத்தை என்னவென்பது எங்கிருந்து வந்தன இவைகளெல்லாம்". ஆடுதே இஞ்சி நீரு". அரைக்குதே செப்பு ரோத. ஒன்று நீ ஒளிச்சிருந்து பாரு" என்று விவரணப்படுத்துகின்றார்.

உண்மையில் மலையக மக்களுக்கு முதலாளித்துவ அமைப்பின் வருகையை கட்டியம் கூறுவதாக அமைந்த இந்நிகழ்வை மக்கள் எவ்வாறு பார்த்தார்கள், எவ்வாறு உணர்ந்தார்கள் என்பதை இப்பாடல்கள் வெளிப்படுத்தின எனலாம்.

மேலும் மலையக நாட்டார் பாடல்களில் காணப்படக்கூடிய "வர்ணனைகளுக்கும் பஞ்சமற்ற மொழி இவர்களது மொழி" என (மருங்கெல போல் கோலமிட்டு) உதாரணங் களுடன் எடுத்துக்காட்டுகின்றார். "இப்படிப்பட்ட மிகுந்த நளினமான இலக்கிய நயமிக்க உணர்வு இருந்திருக்க வேண்டும்" எனவும் குறிப்பிடுகின்றார்.

காதல் பாடல்களிலும் சமூக வாழ்வியலை ஸி.வி. வேலுப்பிள்ளை எடுத்துக்காட்டத் தவறவில்லை. "வெறுத்திட்டுப் போறமின்னு வேலவிட்டு வந்திராத" என்று பாடும்போது அன்றைய அமைப்பில் தொழிலாளர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட விதத்தை எமக்குத் தெரியப்படுத்துவதாய் உள்ளது. அக்காலத்தில் தோட்டத்திலிருந்த அத்தனை ஆண்களும் பெண்களும் வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். வேலைக்குப் போகாதோர் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டனர்.

"மலையக மக்களைத் தோட்டங்களுடன் பிணைந்த ஏனைய மறைமுகமான சமூகக்காரணிகள் ஒருபுறமிருக்க, கங்காணிமாரிடம் பட்ட கடன்கள் அவர்களைத் தோட்டத்தை விட்டு அசைய முடியாமல் செய்தது மாத்திரமல்ல, பல கொடுமைகளுக்கும் ஆளாக வேண்டிய அவலச் சூழ்நிலைக்கும் கொணர்ந்து தள்ளிச் சேர்த்தது" எனக்கூறி

> *"என்னையே நம்பாதடி*
> *எழுதிக்கடன் வாங்காதடி"*

என்ற பாடலையும் உதாரணமாகக் காட்டியுள்ளார்.

"இப்படியாக மலைநாட்டு நாட்டார் பாடல்களில் எண்ணற்ற விஷயங்கள் தெளிவாகவும் அழகாகவும் கூறப்பட்டுள்ளன." என்றும் பெருந்தோட்ட அமைப்புகள் குறித்த "சமூகங்களின் உருவாக்கங்கள் குறித்துச் சரியான விஞ்ஞானக் கண்ணோட்டங்களைக் கட்டி எழுப்ப முனையும் தற்போதைய முயற்சிகளிலும் இத்தகைய நாட்டார் பாடல்கள் - சிறப்பாக மலையக நாட்டார் பாடல்கள் போன்று வித்தியாசப்பட்டவை பெரும் பங்கை ஆற்ற வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அவரது முடிவுரை அவரது படைப்பாளிக்குரிய பார்வையை விட ஆய்வுப்பார்வை மேலோங்கியதாகவே காணப்படுகின்றது எனலாம்.

"அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்" (நாட்டார் பாடல் இடையிட்ட குறுநாவல்) என்ற தலைப்பில் ஏ.பி.பி. கோமஸ் அவர்களின் நாட்டார் பாடல்களின் தொகுப்பும் - அவற்றை அடியொட்டி எழுதப்பட்ட குறுநாவலும் இணைந்த நூல் - 1988 ஆண்டு வெளி வந்துள்ளது. இது 1965களில் "சுதந்திரன்" பத்திரிகையில் வாராவாரம் வெளிவந்த குறுநாவல் ஆகும்.

ஏறத்தாழ 60 பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. 10 பாடல்கள் ஸி.வி. வேலுப் பிள்ளையின் தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளன. (ஸி.வி. கோமஸ் பற்றிக் குறிப்பிடப்படவில்லை) 55 பாடல்கள் காதல் பாடல்கள், 4 பாடல்கள் மலையக மக்களின் தொழில்சார்ந்த பாடல்கள், ஒரு விளையாட்டுப் பாடல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. காதல் பாடல் களில் மலையகத்திற்கே உரித்தானவை என சில பாடல்களையே அடையாளம் காண முடிகின்றது. ஏனையவை பொதுக்காதல் பாடல்கள் எனலாம்.

நாட்டார் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து குறுநாவல் எழுதப்பட்டதா அல்லது குறுநாவல் எழுதுவதை நோக்கமாகக் கொண்டு நாட்டார் பாடல்கள் இடையிடையே இணைக்கப்பட்டதா? கதையம்சம் குறைவானதாகவும் திருப்புமுனைகள், கூறியது கூறல், போன்றன அதிகமாகவும் கொண்டு கதை பின்னப்பட்டுள்ளது. நாட்டார் பாடல்களுக்கேற்ப கதை நகர்த்திச் செல்லப்பட்டுள்ளது என்றே எண்ண இடமுள்ளது. ஆகவே நாட்டார் பாடல்களைச் சேகரிக்க முற்பட்ட கோமஸ் இதனை வெளிப்படுத்துவதற்கு ஒரு கதையை உருவாக்கிக் கொண்டார் எனலாம். எனவே நாட்டார் பாடல்களின் விவரணங்கள் கதை அல்லது சம்பவங்களின் வடிவிலேயே வெளிப்படுத்தியுள்ளார்.

பாடல்களின் விவரணங்கள் ஆய்வுக்கு உரியதாக இல்லாமல் பாடல்களின் சந்தர்ப்பங்களாகவே விவரணங்கள் வலிந்து கூறப்பட்டுள்ளன. குறுநாவலின் கதையை விடுத்து பாடல்களின் விவரணங்களையும் விடுத்து நாட்டார் பாடல்களை மட்டும் கவனத்தில் எடுத்தால் ஏ.பி.வி. கோமஸ் அவர்களின் மலையக நாட்டார் பாடல்கள் குறித்த அக்கறை, சேகரிப்பு பாடல்களின் விவரணங்கள் என்பன இடம்பெறுவதால் பாடல்கள் பற்றிய ஆய்வுக் கண்ணோட்டம் ஆய்வுக்கருத்துக்கள் இடம்பெறவில்லை என்றே கணிக்க முடிகின்றது.

சேகரிக்கப்பட்ட பாடல்கள் எவ்வாறு சேகரிக்கப்பட்டன என்பதற்கான விபரங்கள் இல்லை என்பதால் விஞ்ஞானபூர்வமான சேகரிப்பு நுட்பங்கள் முறைகள் பயன்படுத்தவில்லை எனத் தெரிய வருகின்றது. இத்தகைய சேகரிப்பு முறையில் கடுமையான ஆர்வமிக்க உழைப்பு தென்பட்ட போதிலும் விஞ்ஞான பூர்வமான முறை பயன்படுத்தாமை கவலைக்குரியதே.

மற்றும் கோமஸ் பற்றி "மலையக நாட்டார் பாடல்களைத் தொகுத்து இவர் நாட்டார் பாடல்கள் பற்றி தொடல் பேச்சுகளை வானொலியில் நிகழ்த்தியுள்ளார். (எஸ்.எம். ஹனிபா) என்ற தகவல் கிடைத்த போதிலும் அவை, பாடல்கள் அல்லது உரைகள் தொகுப்பாக வெளிவராமை துரதிஷ்டமானதே.

மலையக நாட்டார் பாடல்கள் குறித்த ஆய்வு முயற்சிகளுள் சாரல் நாடன் குறிப்பிடத் தக்க பங்களிப்பினைத் தந்துள்ளார். "மலையக வாய்மொழி இலக்கியம்" என்ற நூலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1993) "மலையகம் வளர்த்த தமிழ்" (1997) என்ற நூலில் இடம்பெற்றுள்ள "மலையகப் பாடல்கள்" என்ற கட்டுரையும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

பாடல்கள் சேகரிப்பு முயற்சியிலும் ஈடுபட்ட சாரல்நாடன் தனது தாய், தந்தை, தொழிலாளர்களிடம் இவற்றைப் பெற்றதாகக் குறிப்பிடுகின்றார். எனினும் இவரது சேகரிப்பு முயற்சி பாரிய அளவில் வெற்றி பெற்றதாகக் கூறமுடியவில்லை. அதேவேளை சேகரிப்பட்ட முறைமையும் சிறப்பானது எனக் கூறமுடியவில்லை.

எனினும் இவர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட மலையக நாட்டார் பாடல்கள் ஸி.வி. வேலுப்பிள்ளை, சி.வே. ராமையா, ஏ.பி.வி. கோமஸ் ஆகியோரது சேகரிப்புகளையே அதிகமாகக் கொண்டுள்ளன. சாரல்நாடன் தனது சேகரிப்புகளையும் இதில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வுக் கருத்துக்களைக் கட்டுரையில் சுருக்க மாகவும் "மலையக வாய் மொழி இலக்கியம்" நூலில் சற்று விரிவாகவும் விளக்கியுள்ளார். நூலினை 12 அத்தியாயங்களாக பகுத்துள்ளார். (விளக்கம், முக்கியத்துவம், சூழலில் பிறக்கும் பாடல்கள், தொழிற்பாடல்கள், கங்காணிப் பாடல்கள், கும்மியும் கோலாட்டமும், வாழ்வளித்த வாய்மொழிப் பாடல்கள், ஒப்புநோக்கு, மயக்கும் இன்பம், உணர்வுகளுக்கு வாய்க்கால், அவலக்குரல், முடிவுரை) இதில் தொழிற்பாடல்கள், கங்காணிப் பாடல்கள், கும்மியும் கோலாட்டமும், வாழ்வளித்த வாய்மொழிப் பாடல்கள், ஒப்புநோக்கு ஆகிய ஐந்து அத்தியாயங்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கன.

ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் அப்பாடல்கள் குறித்த பின்னணியை வரலாற்றுப் பின்புலத்தில் நின்று விளக்கம் தருவதும் பாடல்கள் குறித்த விவரணங்களை வழங்குவதும் முக்கியத்துவம் உடையன.

மலையக மக்களது வாழ்வின் உயிர்ப்பான அம்சங்கள் பலவற்றை வெளிப்படுத்தும் நாட்டார் பாடல்கள் குறித்து பின்வரும் முக்கிய பண்புகளை சாரல்நாடன் வெளிக் கொணர்ந்திருக்கின்றார். (பொருத்தமான உதாரணங்களையும் காட்டி விளக்கமளித்துள்ளார்).

1. பரந்த பிரதேசம் ஒன்றில் (தமிழ்நாடு) வழக்கில் இருந்த பாடல்கள் மலையகத்தில் ஒருங்கமைந்து வழங்கும் நிலை.

2. அடிக்கடி தமிழ்நாடு சென்று வருவோரின் அனுபவங்களும் இணைந்து புது உருமாற்றங்கள் ஏற்பட்டமை.

3. தாயகத்தை விட்டுப்பிரிந்த சோகம்

4. விவசாயிகளாக வாழ்ந்த மக்கள் தொழிலாளர்களாக மாற்றப்பட்ட பின் ஏற்பட்ட நிலை.

போன்ற பண்புகளை விதந்துரைக்கின்றார்.

மேலும் "மலையக நாட்டார் பாடல்கள் முழுமையாக தமிழக நாட்டுப் பாடல்களே எனவும் தாயக உறவுகளைப் பிரிந்து வந்ததால் ஏற்பட்ட சோகம் இனி எக்காலம் ஊர்ப் போய்ச் சேர்வோம் என்ற ஏக்கமும் இயலாமையும் வெளிப்படுத்தப்படுகின்றன எனவும் இரண்டு தாலாட்டுப் பாடல்களை (கூடை எடுத்ததில்லை, அடி அளந்து வீடுகட்ட) உதாரணமாகக் கொண்டு விளக்கம் தருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரிப்பாடல்கள் "நேர்ந்துவிட்ட இழப்பை மட்டுமல்ல, எதிர்கொள்ளவிருக்கும் நிச்சயமற்ற வாழ்க்கை பற்றிய அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றது எனப் பாடல்களை உதாரணமாகக் கொண்டு விளக்கியுள்ளார்.

மலையகத்தில் உருவாக்கம் பெற்ற தொழிற் பாடல்கள், புதிய இடம், புதிய சூழல், புதியத் தொழில் முறை என்பவற்றிற்கேற்ப பொருள் மாற்றம் ஏற்பட்டமை குறித்து விளக்கமாக எழுதியுள்ளார். மேலும் பாடல்கள் "தொழிலாள மக்களின் சொந்த அனுபவத்தில் பட்டு வெடித்த உண்மையின் வெளிப்பாடாகக் கொள்ளத்தக்கன" எனவும் "தொழிற் பாடல்களில் மிகக் குறிப்பிடத்தக்கவை கொடுமைகளுக்கு எதிராகப் புரட்சி செய்யும் கருவியாக அமைந்திருக்கும் பாடல்களாகும். (எண்ணிக்குழி வெட்டி) எனவும் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியதே. "கொடுமைகளுக்கு எதிராக புரட்சி செய்யும் கருவி" என மலையக நாட்டார் பாடல்கள் குறித்த கருத்து சற்று மிகையானது எனலாம்.

"கங்காணிமார்களின் வரலாற்று முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் மலையக வாய்மொழிப் பாடல்களில் கணிசமான எண்ணிக்கை அவர்களைப் பற்றியதாகவே இருக்கின்றது" எனக் கூறுவதோடு "தெய்வத்துக்குச் சமமான ஒரு நிலையில் கங்காணியை வைத்து இந்த மக்கள் பாவித்தார்கள், பாடினார்கள், பரிதவித்தார்கள்" எனவும் கூறுவது கவனத்திற்குரியதே. "குதிரைகளை கங்காணிமார் சொந்தமாக வைத்திருக்கவில்லை, ஆனால்" குதிரே மேலே நம்மையா கங்காணி" எனப் புகழ்ந்துப் பாடுவதையும் சாரல் குறிப்பிடத் தவறவில்லை.

"மலையகத்தில் கும்மிப்பாடல்கள்" பெரும்பாலும் தமிழகப் பாடல்களே சிறுசிறு சொல் மாற்றங்களுடன் பாடப்பட்டன எனக் குறிப்பிடுகின்றார். இக்கூற்றும் அவ்வளவு பொருத்தப்பாடுடையதாகத் தோன்றவில்லை. "குழுவாகக்கூடி கும்மி கோலாட்டம் போன்றவைகளைத் துரையின் முன்னிலையில் அவரது பங்களா முறையில் ஆடி மகிழும் போது இந்தப் பாடல் தோன்றியிருக்க வேண்டும் என்பது அறிவுக்கு ஒப்பிவரும் துணிபாகும்" என சாரல் நாடன் கூறுவது வேறொரு கருத்தைத் தருகிறது.

*"கொய்யாப் பழம் பழுக்கும்*
*கொட மல்லிக பூ பூக்கும்*
*சீத்தா பழம் பழுக்கும் - நம்ம*
*சின்ன தொரை வாசலிலே"*

அவர் காட்டிய இப்பாடல் முழுக்க முழுக்க மலையகப் பின்புலம் சார்ந்ததே. இது சிறுசிறு சொல் மாற்றங்கள் கண்ட தமிழகம் என்பது உடன்படக்கூடிய ஒன்றல்ல, மேலும், இவ்விடத்தில்,

"ஒரு சில பாடல்களுக்குத் தொடக்கமும் முடிவும் கிடையாது. இருந்தும் நானே அவற்றைச் சரியென எண்ணிய சில பாடல்களுடன் பொருந்தி விட்டேன்." என ஸி.வி. வேலுப்பிள்ளை கூறுவதும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

சாரல்நாடன் "ஒப்புநோக்கு" என்ற அத்தியாயத்தில் முன்வைத்துள்ள கருத்துக்கள் காத்திரமாகவே காணப்படுகின்றன.

"தென்னிந்திய திருநெல்வேலி பகுதியில் வழங்கப்படும் நாட்டுப்பாடல்கள் மலையகத்தில் ஹட்டன், டிக்கோயா பகுதியில் மிகுதியாகப் பாடப்படுவதையும் குறிப்பிட்டு இது கிராமவாரியாகவும் சாதிவாரியாகவும் குடியேற்றம் நிகழ்ந்த முறைமை எடுத்துக்காட்டுவதாகக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா பகுதிக்கும் யட்டியாந்தோட்டைப் பகுதிக்கும் இடையிலான வேறுபாடுகளும் ஏனைய பிரதேச வேறுபாடுகளும் தமிழ் நாட்டார் பாடல்களுடன் ஒப்பிடுமிடத்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையக நாட்டார் பாடல்கள் குறித்த ஆய்வில் சாரல்நாடன் சேகரிப்புப் பணியை விட ஆய்வில் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார் என்பது மறுப்பதற்கில்லை எனலாம்.

மு. சிவலிங்கத்தின் "மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்" (பல்வகை சேர்க்கை) (2007) எனும் நூல் ஒரு புதிய வரவாகும். இந்நூல் 7 பாகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. (பபூன் பாடல்கள், நாடகப் பாடல்கள், வீதிப்பாடல்கள், கூத்துப்பாடல்கள், பஜனைப் பாடல்கள், கோலாட்டப் பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள்)

இதில் பபூன் பாடல்கள், நாடகங்களில் இடையில் வரும் கோமாளிகள் பாடுவதான பாடல்களாகும். அத்தோடு அவர்கள் பேசும் வசனங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றை நாட்டார் பாடல்களாகக் கொள்ள வேண்டும் என மு.சிவலிங்கம் வலியுறுத்துகிறார். வீதிப் பாடல்களும் மலையக வரலாற்றில் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படல் வேண்டும். அத்தோடு நாடகப் பாடல்கள், கூத்துப்பாடல்கள், பஜனைப் பாடல்கள் என்பன குறித்தும் வழங்கப்பட்டுள்ள விவரணங்களும் கவனத்திற்குரியதே.

மு. சிவலிங்கம் அவர்களது கருத்துக்கள் "கோலாட்டப் பாடல்கள், "நாட்டுப்புறப்பாடல்கள்" குறித்து ஆழ்ந்து கவனிக்கத்தக்கன. பாகம் 6 கோலாட்டப் பாடல்கள் என்ற தலைப்பிற்குரியது.

இதில் "மலையக மக்களின் பிரச்சினைகளைப் பிரச்சினையாகப் பாராமல், அதற்கு கலை வடிவம் கொடுத்து, அவர்களது வீரப்பிரதாபங்களை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இப்பாடல் எழுதப்பட்டது.

எனவும் "நாட்டுப்புறப் பாடலின் பண்பினைக் கொண்டுள்ள இக்கும்மி பாடலினை நூலாசிரியர் மு. சிவலிங்கம் கல்லூரி மாணவனாக இருந்தபோது எழுதியுள்ளார்."

எனக் குறிப்பையும் தந்துள்ளார். இப்பாடல்கள் எந்தளவிற்கு மக்களால் பாடப்பட்டு அது நாட்டார் பாடல் வகைக்குள் வரக்கூடியதாக மாறியதா என்பது ஆய்வுக்குரியதே.

நாட்டுப்புறப் பாடல்கள் பாகம் 7இல் இடம்பெற்றுள்ளன. வேலைக்காட்டுப்பாடல்கள், கோப்பிக்காலம், தேயிலைக்காலம், இறப்பர் காலம், விளையாட்டுப் பாடல்கள், நையாண்டிப்பாடல், குதூகலப் பாட்டு, உபதேசம், ஊடல், ஏக்கம், பெருமை, தாலாட்டு, பல்வகைக் காதல் பாடல்கள், காதல்த் துயரம், பிரிவுத்துயரம், தொழில் வழித்துயரங்கள், தவிப்பு, சமூக நிலைப்பாடல்கள், கண்டிச் சீமைக்கு வந்த பிறகு, மாரியம்மன் பாட்டு, திருமண வாழ்த்துப்பாடல், ஒப்பாரி, உடுக்குப்பாடல் என பல உப தலைப்புகளைக் கொண்டு இப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மு.சிவலிங்கத்தின் சேகரிப்பு இவற்றுள் புதிய பாடல்களாக அமைந்துள்ளன. பாடல் சேகரிப்பு முறை சிறப்பாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடல்கள் விவரணங்கள் நன்று. ஆய்வு கருத்துக்கள் இடம் பெறவில்லை எனலாம்.

"மலையக நாட்டாரியல் பண்புகள்" எனும் வ. செல்வராஜாவின் (கட்டுரையாசிரியர்) (புது வசந்தம் - 1999) கட்டுரை மலையக மக்களின் வாழ்வியல் கூறுகளையும் மொழியியல் அம்சங்களையும் பண்பாட்டு அம்சங்களையும் மலையக நாட்டாரியலில் காணலாம் என்ற குறிப்புடன் தொடங்குகின்றது. இவரது கட்டுரையில் பின்வரும் அம்சங்கள் உதாரணப் பாடல்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மலையக மக்களின் வருகை தொடர்பாக வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்களும் நாட்டுப்பாடல்களின் வெளிப்பாடுகளும்
2. மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களும் பண்பாட்டு அம்சங்களும்.
3. பல்லினச் சூழலில் மக்களின் வெளிப்பாடுகள் அல்லது உணர்வுகள்.
4. ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களின் குரல்
5. உழைப்பை வழங்கி உயிரை இழந்து மலையக சமூகம் உருவாக்கப்பட்டமை.
6. தொழில் சார்ந்த வாழ்க்கை அனுபவங்கள்
7. தமிழ்நாட்டு அனுபவங்களின் வெளிப்பாடுகளை மலையகச் சூழலில் ஏற்றிப்பாடுதல்.

ஆகிய விடயங்களைப் பாடல்களை ஆதாரங்களாகக் காட்டி விளக்கங்களை முன் வைத்துள்ளார்.

மலையக நாட்டார் பாடல்களின் மேற்கூறிய பண்புகள் இன்னும் ஆழமாக ஆய்வு செய்யப்படல் வேண்டும். வேறு சில ஆதாரங்களையும் கொண்டு ஒப்பிட்டு ரீதியான ஆய்வுகளாகவும் அமைதல் வேண்டும். பெறும் சுவாரஸ்யத்திற்கான ஆய்வாக மலையக நாட்டார் பாடல்கள் ஆய்வு அமைந்துவிடக்கூடாது அல்லது இலக்கிய ரசனைக்கானதாக மட்டுமே அமைந்துவிடவும் கூடாது.

மலையக பாடல்களைப் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ள மலையக மக்களின் வரலாற்றுப் பின்னணி பற்றிய அறிவு, சமூக உருவாக்கம் குறித்த அறிவு, அவர்களது பொருளாதாரக் கட்டமைப்பு பற்றிய அறிவு, மற்றும் அவர்களது பண்பாட்டு அம்சங்கள், வாழ்வியல் அம்சங்கள் தோட்டத் தொழிற்துறையின் பண்புகள் போன்றவற்றில் ஓர் ஆழமான அறிவு இருத்தல் அவசியம்.

நாட்டார் பாடல்களைப் புறவயமாக ஆய்வு செய்யும் ஆய்வாளர் மானிடவியல், சமூகவியல், உளவியல், வரலாற்றுவியல், மொழியியல் போன்ற பல்வேறு துறைகளின் ஆழ்ந்த அறிவோடு ஆய்வு செய்வது அவசியமானது.

## உசாத்துணை விபரம்


வேலுப்பிள்ளை ஸி.வி. (1983) மலைநாட்டு மக்கள் பாடல்கள், சென்னை, கலைஞன் பதிப்பகம் முதற்பதிப்பு

கோமஸ் ஏ.பி.வி. (1988) அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான், கண்டி, தமிழ்மன்றம், முதற்பதிப்பு

சாரல் நாடன் (1993) மலையக வாய்மொழி இலக்கியம், சென்னை, தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் சவுத் ஏசியன் புக்ஸ், முதற்பதிப்பு.

சாரல்நாடன் (1997) மலையகம் வளர்த்த தமிழ், சென்னை, துரைவி முதற்பதிப்பு, பக்கம் 107-116

செல்வராஜா, வ. (1999) புதுவசந்தம், தேசிய கலை இலக்கியப் பேரவை, இலங்கை ப. 75-82

ஆனந்தவேல் கு. (2003) லயம் 3வது இதழ் - தமிழ்ச்சங்கம் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, இலங்கை.

லெனின் மதிவானம் (2012) ஊற்றுக்களும் ஓட்டங்களும், கொழும்பு, பாக்யா பதிப்பகம், முதற்பதிப்பு பக்கம் 1-18.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் நாட்டார் பாடலின் செல்வாக்கு

பேராசிரியர் செ. யோகராசா

1. மேற்கூறிய தலைப்பு இரு அடிப்படைகளில் அணுகப்படுகின்றது. அவையாவன:
   (i) ஈழத்து நவீன கவிஞர்கள் நாட்டார் பாடல்களை கையாள்வதன் நோக்கங்கள்
   (ii) அவை கையாளப்படும் முறைகள்.

2.0

2.1 ஈழத்து நவீன கவிஞர்கள் நாட்டார் பாடல்களைக் கையாள்வதன் நோக்கங்களாவன:

(i) சமகால மனித சமூக, அரசியல் பிரச்சினைகளை நன்கு பரிச்சயமான நாட்டார் பாடல்களூடாக சுவையாக வெளிப்படுத்த.

(ii) கிராமத்து வாழ்க்கையைப் பின்புலமாகக் கொள்கின்ற சந்தர்ப்பங்களில்.

(iii) பூடகமாக சில விடயங்களைப் கூற முற்படுகின்றபோது.

(iv) உள்ளடக்க – உருவ இயைபு கருதி.

(v) கவிநயம் - இரசனை இன்பம் - கருதி.

(vi) மெல்லிசைப் பாடல்களுக்கு மெருகூட்ட.

(vii) இலகுவான முறையில் எழுதுவதற்கான சிறந்த முன்மாதிரியாக விளங்குவதால்.

(viii) சிறுவர் பாடல்கள் எழுத ஏற்ற சாதனமாக இருப்பதனால்.

(ix) கலை விழாக்களின் தேவை கருதி (உ-ம்: நடனம் ஆட... கோலாட்டம் அடிக்க...)

3. அவை கையாளப்படும் முறைகள்:

3.1 உள்ளடக்கத்தை முழுமையாகப் பின்பற்றி...

உ-ம் நன்கு பிரபல்யமான ஆக்காண்டிப் பாடலைப் பல்வேறு நோக்குகளில் ஈழத்துக் கவிஞர்கள் பின்பற்றியுள்ளனர்

3.1.1. கவிஞர் சண்முகம் சிவலிங்கம் பார்வையிலே சர்வதேசப் பாட்டாளிகளின் குரலாக...

*ஆக்காண்டி ஆக்காண்டி*
*எங்கெங்கே முட்டை வைத்தாய்*
*கல்லைக் குடைந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலோரம் முட்டை வைத்தேன்
வைத்ததுவோ ஐஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலுகுஞ்சுக் கிரைதேடி
நாலுமலை சுற்றி வந்தேன்
மூன்று குஞ்சுக் கிரைதேடி
மூவுலகம் சுற்றி வந்தேன்

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்

குஞ்சு பசியோடு
கூட்டில் கிடந்ததென்று
இன்னும் இரைதேடி
ஏழுலகும் சுற்றி வந்தேன்

கடலை இறைத்துக்
கடல் மடியை முத்தமிட்டேன்
வயலை உழுது
வயல் மடியை முத்தமிட்டேன்

கடலிலே கண்டதெல்லாம்
கைக்கு வரவில்லை
வயலிலே கண்டதெல்லாம்
மடிக்கு வரவில்லை

கண்ணீர் உகுத்தேன்
கடல் உப்பாய் மாறியதே
விம்மி அழுதேன்
மலைகள் வெடித்தனவே

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்

வண்டில்கள் ஓட்டி
மனிதர்க் குழைத்து வந்தேன்

கையால் பிடித்துக்
கரைவலையை நானிழுத்தேன்

கொல்லன் உலையைக்
கொழுத்தி இரும்படித்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்யும் தறியில்
நின்று சமர் செய்தேன்

சீலை கழுவி
சிகையும் அலங்கரித்தேன்

வீதி சமைத்தேன்

விண்வெளியில் செல்லுதற்குப்
பாதை சமைக்கும்
பணியும் பல புரிந்தேன்

ஆனாலும் குஞ்சுக்கு
அரை வயிறு போதவில்லை
காதல் உருகக்
கதறி அழுது நின்றேன்

கதறி அழுகையிலே
கடல் இரத்தம் ஆயினதே

விம்மி அழுகையிலே
வீடெல்லாம் பற்றியதே

கடல் இரத்தம் ஆகுமென்று
கதறி அழவில்லை
வீடுகள் பற்றுமென்று
விம்மியழவில்லை

3.1.2 அரசியல் சார்புடையதாக....

மற்றொரு கவிஞரான மு.பொன்னம்பலம் ஆக்காண்டி பாடலை ஈழத்து அரசியலை-அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை - விமர்சிப்பதற்கும் ஆன்மீகக் கருத்துக்கள் சிலவற்றை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தியுள்ளார். உரையாடல் பாணியிலமைந்த கலையான அக்கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு.

.............................................

பூர்வ கதை சொல்லவில்லை
புளித்த கதை அது. ஆதனால்
இடையில் நான் முட்டையிட்டு
சீரழிந்த கதை சொல்வேன்.

சரி எனக்கு விளங்குகிற மாதிரி
சொல்லு தாயே.

முன்னர் வயது முதிரா பருவத்தில்
ராணி ஒருத்திக்கு சேவகங்கள் செய்து வந்தேன்.
ஒரு அப்படியா
சொல்லுதாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சேவகங்கள் செய்கையிலோர்*
*"சேர்" என்ற பேர் பெற்ற*
*சீமானை நான் கூடி*
*தேசிய முட்டையிட்டேன்.*
*தேசிய முட்டையிட்டேன்.*
*பிறகு?*
*தேசிய முட்டைமெல்ல*
*தேய்வுற்று தேய்வுற்று*
*தேய் கட்டையாய் போகையிலே*
*அன்னார் வழிவந்த ஐயாவை நான் கூடி*
*ஐம்பதுக் கைம்பதென்னும்*
*அழகான முட்டையிட்டேன்*
*முட்டையிட்ட வேகத்தில்*
*மூலம் எரிந்ததனால்*
*கொக்கரித்து கொக்கரித்து*
*கோமான் குறண்டிவிட்டார்.*
*அடபாவமே, பிறகு?*
*இட்ட முட்டை அடைகாக்க*
*இயலாமல் நான் அழிந்தேன்*

3.1.3. தமிழ் அகதிகளின் குரலாக....

"ஆக்காண்டி" பாடலை புதிய நோக்கில் அணுகிய மற்றொரு 'கவிஞர்' புனைகதை ஆசிரியராக நன்கறியப்பட்ட வ.அ. இராசரத்தினம் அன்னர் "ஆக்காண்டி"யின் அழுகையில் இன்றைய அகதித் தமிழரின் அழுகுரலைக் கேட்கின்றார். நீண்ட அக்கவிதை, பின்வருமாறு முடிகின்றது:

*நானழுத கண்ணீரும் - இந்த*
*நாடழுத கண்ணீரும்*
*வாய்க்கால் நிறைந்து*
*வழிப்போக்கர் கால்கழுவி*
*இஞ்சிக்குப் பாய்ந்து*
*இலாமிச்சை வேரோடி*
*வயலுக்குப் பாய்ந்து*
*வயல்வெள்ளக் காடாகி*
*நாடே அழுததையா*
*நாளை நமதாமோ"*

3.2 உள்ளடக்கத்தில் சில மாற்றங்கள் செய்து

'அரிசிப் பொதியோடு வந்தீரோ தம்பி' என்பது பிரபல்யமானதொரு மருத்துவச்சி பாடல் இங்கே அப்பாடல் இந்திய அமைதிகாக்கும் படையின் வரவுடன் தொடர்புபடுத்திப் பாடப்படுகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிய தமிழீழம் கண்டீரோ தம்பி

பருப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
பருத்தித் துறையூரும் கண்டீரோ தம்பி

சீனிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லிப் பழையூரும் கண்டீரோ தம்பி

எண்ணெய்ப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இணுவிற் பதியூரும் கண்டீரோ தம்பி

ரின்மீன் பொதியோடும் வந்தீரோ தம்பி
திருகோண மலையூரும் கண்டீரோ தம்பி

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உயிலங் குளத்தையும் கண்டீரோ தம்பி

மாவுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மன்னார் முருங்கனும் கண்டீரோ தம்பி

புடைவைப் பொதியோடும் வந்தீரோ தம்பி
புளியங் குளத்தையும் கண்டீரோ தம்பி

மருந்துப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மட்டக்களப்பூருங் கண்டீரோ தம்பி

மருந்துப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மருத்துவர் மூவகைக் கொன்றீரோ தம்பி

வானிற் பொதியோடும் வந்தீரோ தம்பி
வன்னிப் பதிமூதூர் கண்டீரோ தம்பி

அமைதிப் படையோடு வந்தீரோ தம்பி
அழிவைத் துயரத்தைத் தந்தீரோ தம்பி

அமைதிப் படையோடு வந்தீரோ தம்பி
ஆப்பிட்டதையப்பிக் கொண்டீரோ தம்பி

- சோ.பத்மநாதன்

3.3. சில அடிகளை மட்டும் பயன்படுத்தி.....

"காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா"
காக்கைகள் மைவண்ணம் கொணர்ந்தன
"குருவி கொண்டைக்குப் பூக்கொண்டுவா"
குருவிகள் வண்ணப்பூக்கள் கொணர்ந்தன
"பச்சைக்கிளியே பழங்கொண்டுவா"
தின்னப் பழங்கொண்டு கிளிகள் தந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மழலைகள் பறவைகளாகின.*
*சிறகடித்தன. சீர்வரிசைகள் பேணின.*
*மாலைகள் கோத்தன. மைவண்ணம் பேசின.*
*பாடின் கைவீசி விளையாடியிருந்தன.*
*சற்று முன்பு வரையிலும்*
*வேண்டாப் பறவை ஊடுருவிற்று*
*விழுந்து வெடித்தன ராட்சத முட்டைகள்*
*காற்றிலெங்கும் செட்டைகள் சிதறின*
*உதிரக் குஞ்சுகளின் உயிர்கள் துடித்தன*
*அந்தர வெளியில் அறுந்தறுந்து தொங்கின*
*அவை இசைந்த பாடல்கள்,*
*கூட்டிசைத்த குரல்களும், யாழும்*
*கூட்டு மொத்தமாய்த் தோற்றே போயின.*
*மை வண்ணம், மலர் வண்ணம்*
*மழலையின் மெய்வண்ணமெல்லாம்*
*இரத்த வண்ணத்தில் ஏகமாய்த் தோய்ந்தன*
*இவை காக்கைகளினவை*
*இவை குயில்களினவை*
*இளை குயில்களினவை*
*இவை பசுங்கியிகளினவையென*
*இனம் பிரித்தறிய இயலாமல்*
*இறக்கைகளின் சிதறலாய்ப்போன இவ்விடம்*
*நம்புங்கள் சற்று முன்பு வரையிலும்*
*பறவைகளின் சரணாலயமாய்த்தானிருந்தது*
*பாட்டுகள் ஒலிக்க.*

- சு.வில்வரத்தினம் -

நாட்டார் பாடலடிகள் ஆரம்பத்தில் இடம்பெறுவதும் அதனடியாகக் கவிதை வளர்ந்து செல்வதும் குதூகல உணர்ச்சி வளர்ந்து செல்வதும் பின்னர் சடுதியாக ஏற்படும் மாறுபாடான உணர்ச்சியும் ஒட்டுமொத்தமான அவலமும் மனதைத் தொட்டுவிடும் ஆற்றல் வாய்ந்தனவாகவுள்ளன.

3.4. சில அடிகளை மறுபடி மறுபடி கையாண்டு....
(கூற வரும் கருத்து இதனால் அழுத்தம் பெறுகின்றது)

"......................................
*ஒன்றும் அறியாப் பன்றிக் கூட்டம்*
*அழுக்கிலே புரளும் அற்ப சனங்கள்*
*நீங்கள் எம்முடன் நிகராய் நிற்பதா?*

*நாங்கள் வணங்கும் கடவுளின் எதிலே*
*நீங்கள் வந்து நிற்கவும் தகுமா?*
*போங்கள் அப்பால்*
*போங்கள் அப்பால்'..*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் உள்ளே கூடி நின்ற
தர்மகர்த்தாக்கள் சத்தம் இட்டனர்
நீறுபூசிய நெற்றியில் கசிந்த
வியர்வையைப் பட்டுச் சால்வையால் வீசினர்

பூட்டிய கதவின் புறமாய் நின்ற
மக்கள் பெரிதாய்ச் சத்தம் இட்டனர்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக்
கோயிலை எங்கள் குறுக்கே நிறுத்திய
அந்த நாட்கள் அகன்று விட்டன.

உங்கள் வாழ்க்கை உயர்வதற்காக
கோயிலை எங்கள் குறுக்கே நிறுத்திய
அந்த நாட்கள் அகன்று விட்டன.

கலிமுற்றியது. கலிமுற்றியது[1]
தெய்வ நியதியைப் பொய்யாக் கிடவும்
தெய்வத் தலத்தைத் தீட்டுப் படுத்தவும்
பாபாத் மாக்கள் பயப்படவில்லை
அபச்சாரம் இது
அபச்சாரம் இது

குருக்கள் தலையிலே குட்டிக்கொண்டு
வெளியிலே வந்து வீதியை நோக்கினார்.

எம்.ஏ.நு.்.மான்

3.5. பிரபல்யமான நாட்டார் பாடல்களின் அமைப்பு, ஓசை என்பனவற்றைப் பின்பற்றி....

**மட்டம் சரியாய் போடு, மாரியாயி**

மட்டம் சரியாப் போடு மாரியாயி - தேயிலை
மாரெடுத்துக் கீழே போடு மருதாயி
சடப் படிவேலை செய்யும் மூக்காயி மலைக்குச்
சங்கூது முன்னம் வாடி மூக்காயி

முத்தலை காம்பு வேணாம் முத்தம்மர் - நல்ல
மூனெலைக் கொழுந்தை எடு பொன்னம்மா
செத்தை எடுத்துப் போடு செல்லம்மா - வங்கியைச்
சேர்த்து எடுக்காதே கண்ணம்மா

அரும்பை எடுக்காதே அரசாயி - கெதியா
ஆளோடு சேர்ந்து எடு ஆராயி
முருங்கை வாதொடித்துப் போடு மூத்தம்மா - காது
மூட்டுப் பிடுங் கெடுக்காதே மூக்காயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பக்கவாதை யொடிக்காதே பாப்பாத்தி - கணக்கன்*
*பார்த்து விட்டாவெரட்டுவாரு பாப்பாத்தி*
*முக்காடு போடாதே கருப்பாயி - சும்மா*
*முணு முணுத்துப் பேசாதே செல்லாயி*

*மடி கட்டி எடுக்காதே செலம்பாயி விரல்*
*மடித்துக் கொழுந்தை எடு மீனாட்சி*
*தடிபோட்டு மட்டம்போடு தங்காயி - கூடையைத்*
*தலையிலே போட்டு எடு பெருமாயி*

- லிங்கநாதன்

3.6. நாட்டார் பாடல் வகைகளைப் பயன்படுத்தி

3.6.1.சிறுவர் விளையாட்டுப் பாடல்:

இவ்வகைப் பாடல்களுளொன்று சாய்ந்தாடம்மா! இவ்வகைப் பாடல் இங்கே சமயச்சார்புடையதாக வெளிப்படுகிறது.

*சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு*
*தாமரைப் பூவே, சாய்ந்தாடு*
*வாய்ந்த புகழே, சாய்ந்தாடு*
*வளரும் அகழே, சாய்ந்தாடு*

*நெஞ்சக் கழிப்பே, சாய்ந்தாடு*
*நினைவின் விழிப்பே, சாய்ந்தாடு*
*கொஞ்சும் மகிழ்வே, சாய்ந்தாடு*
*குர்ஆன் வாழ்வே, சாய்ந்தாடு*

புரட்சிக்கமால்

3.6.2. ஒப்பாரிப்பாடல்:

வேள்வியில் பலியிடப்படும் குட்டி ஆடுகளின் நிலையெண்ணிக் கதறும் தாய் ஆட்டின் குரலாக...

1. *ஆசை மகனேயென் அன்பான கண்மணியே*
   *நேசத் துரையே நெடும்பயணம் போனாயோ*
2. *ஓராறு மாதம் உடம்பு நொந்து பெற்றெடுத்த*
   *சீராளர் தெற்குத் திசைப்பயணம் போனாயோ*
3. *நேராத கோவிலெல்லாம் நேர்ந்து தவமிருந்தே*
   *ஆராத காதலுடன் ஐயோநான் பெற்றெடுத்தேன்*
4. *கல்லுவைத்த கோவிலெல்லாம் கைகுவித்து நோன்பிருந்து*
   *செல்வக் குமரா சிறப்புடனே பெற்றெடுத்தேன்*
5. *ஆரக் கழுத்தழகா அஞ்சனப்பூக் கண்ணழகா*
   *வார நடையழகா மாராப்பு மேனியனே*
   *பா. அய் பா அய்* - சோமசுந்தரப்புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.6.3. கும்மிப்பாடல்:

ஈழத்துக் கவிஞர்கள் பலரும் கையாள்கின்ற வடிவமாக இது உள்ளது.

*தேசோப காரங் கருதியிக் கும்மியைச்*
*சேப்புகின் றேனாத லாலெவரும்*
*லேசாய் விளங்க இலகு தமிழில்*
*இயம்புவ தேநலம் சங்கமின்னே.*

*மிக்க அரும்பதத் தோடு புணர்ச்சி*
*மிகுந்திடிற் கும்மி போதுச் சனங்கட்(கு)*
*எக்கால மும்விளங் காதத னால்நலம்*
*ஏது வருமடி சங்கமின்னே.*

*கல்வித் திறனை யுலகோ ரறியக்*
*கழறிட வில்லையிக் கும்மியையான்*
*நல்வித மாகநம் நாடு திருந்த*
*நவிலுகி றேனடி சங்கமின்னே.*

பாவலர் துரையப்பாபிள்ளை

3.6.4. பள்ளி எழுச்சி:

முற்பட்ட காலங்களில் அரசர்களைத் துயிலெழுப்ப கையாளப்பட்ட இவ்வகைப்பாடல்முறை பின்னர் தத்துவ நோக்கிலும் இருபதாம் நூற்றாண்டில் சமூக, அரசியல் நோக்கிலும் பயன்படுகிறது:

**மலைப் பள்ளி எழுச்சி**

*தேற்றல நூற்றைம்ப தாண்டுகள் முன்பே*
*நோயற நீயிங்கு நோற்றிட வந்தாய்*
*கூற்றுள கொடுமையில் நாட்டிலும் வாழும்*
*குருடென நீவந்து நோய்பிறி தேற்றாய்*
*சாற்றுவ தெல்லாம் கவிதை என்றிடல்*
*சரியல்ல : நீசிறி தெண்ணுவ தாற்றாய்*
*மாற்றுள வாழ்க்கைதீ மீட்டிடல் வேண்டும்*
*மலைமகனே, பள்ளி எழுந்திடு வரயே:*

*யாரெது கூறினும் ஆய்ந்திடல் அற்றாய்:*
*யாவுமே நலமெனத் தலைசாய்ந்த தகல்வாய்:*
*சீரிதைப் பெருமனம் என்றுநம் மூத்தோர்*
*செப்பினர்: அவர்வழி செல்கிறாய்: ஆனால்*
*பாரிதில் தீதாம் பழிகொளும் மகனே*
*பயப்பேய் என்றெமைப் பிறர்பொருள் செய்தனர்:*
*போரிடத் துடித்தெழு "பெருமணம்" வீழ்த்தி*
*பொன்மக னே, பள்ளி எழுந்திடு வாயே*

- அல் அசுமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.6.5.மீனவர் பாடல்

மீனவர் பாடல், போர்க்காலச் சூழலை வெளிப்படுத்தப் பயன்படுகின்றது.

ஏலே ஏலே ஏலேலோ
ஏலே ஏலே ஏலேலோ

**பல்லவி**

*சத்தமிட்டு முத்தமிடும் வாடைக்காற்று - வந்து*
*சுற்றிச் சுற்றி கடல்மீது கோலம்போடும்*
*தத்தித்தத்தி படகொன்று பயணம்போகும் - இருள்*
*நித்தம்நித்தம் விழியோடு கதைகள் பேசம்*
*சின்னவலை போட்டுக்கைகள் சிவந்துபோகும் - கருங்*
*கண்ணிபட கவலையெல்லாம் மறைந்துபோகும்*
*தென்னைமரம் கரையினிலே அசைந்தாடும் - அவன்*
*துணைவி விழி அதன் நிழலில் வழிபார்க்கும்*
*(சத்தமிட்டு முத்தமிடும்')*

**சரணம்**

*தன்னந்தனிக் கடலில் நிலாமகள் தவமிருப்பாள் - வழி*
*தப்பிவிட்டால் விடிவெள்ளி அங்கே துணையிருப்பாள்*
*வெள்ளியைப்போல் துள்ளி மீன்கள் மடிநிறைக்கும அந்தக்*
*காலமினி என்று வந்து மனம் நிறைக்கும்*
*(சத்தமிட்டு முத்தமிடும்')*

*பாட்டுப்பாடி கடல்முழுதும் நாங்கள் முன்னர் ஆண்டோம் வலை*
*போட்டுப்போட்டு எமது வாழ்வை ஓட்டிவந்தோம்*
*வேட்டுச்சத்தம் இடையில் வந்து விழுந்ததம்மா- எங்கள்*
*இனிமையிலே நஞ்சுவந்து கலந்ததம்மா*
*(சத்தமிட்டு முத்தமிடும்')*

*சத்தம் செய்யும் கடல் இன்று ரத்தம் சுமக்குது - வெண்*
*முத்துக்குளிக்கும் கடலில் எங்கள் மூச்சு அடங்குது*
*கிழக்குவானம் வெளுக்கும் நேரம் கண்ணில் தெரியுது - எங்கள்*
*கண்ணீருக்கு முடிவுகாலம் நெருங்கிவருகுது*
*(சத்தமிட்டு முத்தமிடும்')*

\- புதுவை இரத்தினதுரை

3.6.6. சடங்குப் பாடல்:

சமயச் சார்பான சடங்குப்பாடல் அரசியல் நோக்கிலே பாடப்பட்டுள்ளது:

**பூசாரி கூவுகிறான்:**

*தின்பண்டங் கொண்டு வா*
*திரவவகை கொண்டு வா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய சாமி
பசியாற வேண்டுமே
இன்னமும் நீ நிற்பதேன்
சொன்னதெலாம் கொண்டு வா

பூசினியின் காய் அறுத்தோம்
பலகாரம் பழவகைகள்
பற்பலவும் நாம் படைத்தோம்
பொங்கல் உலைவைத்தோம்
பால் மோரும் இளநீரும் போதாது சாமிக்குச்
சாராயம் கள்வகைகள் சீராக நாமீந்து
கோழி அறுத்தோம் ஆடும் பலி தந்தோம்
காசு பணம் தந்தோம், கட்டிடவும் துணி தந்தோம்

உரக்க உடுக்கடித்துப் பூசாரி கூவுகிறான்:
"தின் பண்டங் கொண்டுவா
திரவ வகை கொண்டு வா"

லட்சக் கணக்கான மானிடரின் உடலங்கள்
வெட்டி வழிந்த வெங்குருதி குடக் கணக்காய்க்
கொட்டிக் கறுத்த தரைமீது நின்றபடி
பறையொலி போல் வேட்டதிர, அழுகை ஒலி சங்கூத
வெறியோடிச் சிவப்பான வழிகள் கனல்க்கக
உடுக்கடித்துப் பூசாரி உரு ஆடிக் கூவுகிறான்:
"கோழிகளும் ஆடுகளும் கொண்டு பசி தீருவதோ
சாராயங் கள்ளருந்தித் தாகம் தணிகுவதோ
பத்தாயிரம் உயிர்கள் பலிகேட்கும் தெய்வமிது
ரத்தத்தைக் கொண்டுவா, நரபலியைக் கொண்டுவா.
கிழடுபட்ட தசை வேண்டாம்.

- சிவசேகரம்

3.6.7 விளையாட்டுப்பாடல்:

போர்க்காலச் சூழலில் இராணுவ - இயக்கச் செயற்பாடுகள் பற்றிப் பேசப்படுகின்றது:

குலை குலையா முந்திரிகள்
நிறைய நிறைய சுத்தி வா
குலை குலையா முந்திரிக்கா
நிறைய நிறைய சுத்தி வா

கொள்ளையடிச்சவன் எங்கிருக்கான்
கூட்டத்தில் இருக்கான் கண்டுபிடி
கண்டுபிடி கண்டுபிடி
கையில் வைச்சிருக்கான் கண்டுபிடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வேட்டு வைச்சவன் எங்கிருக்கான்*
*கிட்ட இருக்கான் கண்டுபிடி*
*கண்டுபிடி கண்டுபிடி*
*கையில் வைச்சருக்கான் கண்டுபிடி*

*குண்டுகள் போட்டவன் எங்கிருக்கான்*
*வானத்திருக்கான் கண்டுபிடி*

- சிவசேகரம்

3.6.8. ஏற்றப்பாடல்:

*சமகாலத்தில் உழவுத்தொழிலில் ஏற்பட்ட பாதிப்புப் பற்றியது*
*பாயுதில்லையே தண்ணி பரபரக்க இறைச்ச போதும்*
*ஓயுதில்லையே வேலை ஒழிச்சலில்லை எங்களுக்கும்*
*சோத்தாலே கெட்டு சுணை யிழந்து போனபோதும்*
*ஏத்தாலே சோறு இனி வரோணும் வாப்பாவோ*
*ஏத்தாலே சோறு வரமுதலே வாப்பாவே*
*எல்லாரையும் விரட்டிப் போட்டானே நம் ஊராலே*
*என்சி ஒப் பிச்சையிலே கெட்டோம்*
*எப்போ நாம் போய் நம்ம வயலுழுவோம் வாப்பாவே*

- சிவசேகரம்

4. ஈழத்து நவீன கவிதைச் செல்நெறியில் நாட்டார் பாடலின் செல்வாக்கு அளப்பரியது என்பதும் அதிகம் என்பதும் நாட்டார் பாடல்கள் நவீன கவிதையை வளப்படுத்தியுள்ளன என்பதும் நவீன கவிதை நாட்டார் பாடல்களுக்கு புது மெருகூட்டியுள்ளது என்பதும் மேற் கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியத்தெய்வ வழிபாட்டு முறையின் அடிப்படைகள்

## (மட்டக்களப்புப் பிரதேசத்தை அடிப்படையாகக்கொண்டது)

கலாநிதி முருகு தயாநிதி

தெய்வவழிபாடு எந்தவொரு பண்பாட்டிலும் மிக முக்கியமான இடத்தை வகிக்கக் கூடியது. சமயம் குறித்த விடயங்களை சமூகவியல் அடிப்படையிலோ அல்லது கோட்பாட்டு அடிப்படையிலோ புரிந்துகொள்வது ஒருவகையாக இருந்தாலும் நடைமுறை ரீதியில் நாம் பல விடயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டி இருக்கின்றது. சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும் என எமிலி தர்கைம் முன்வைக்கின்றார். சமய நம்பிக்கைகள் முன் வரலாற்றுக் காலந்தொடங்கி இன்றுவரை மனித சமுதாயம் எங்கெல்லாம் வாழ்ந்து வந்துள்ளதோ அங்கெல்லாம் மனித வாழ்வியலோடு மிகவும் வேரூன்றியுள்ளன. தெய்வம் ஒன்றே அதைப்பல வடிவங்களில் வணங்கலாம். இக்கருத்து எமக்கு வேதகாலம் தொடக்கம் இன்றுவரை நிலவிவருகின்றது. வேதங்கள். இதிகாசங்கள், புராணங்கள், இந்துமதப் பெரியார்களின் உபதேசங்கள் மூலம் இக்கருத்து தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகின்றது. இந்து மக்களிடையே சைவத்தைச் சார்ந்தவர்கள் சிவனையும், வைஸ்ண வத்தைச் சார்ந்தவர்கள் விஸ்ணுவையும் வணங்குகின்றனர். ஏனைய தெய்வங்கள் இவ்விரு தெய்வங்களின் தோற்றமாகவே அமைகின்றன என்பர். சாதாரண மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இறைவனை இன்றும் பல வடிவங்களில் வணங்கி வருகின்றனர். அவற்றுள் கிராமியத் தெய்வவழிபாடு பயபக்தியின் அடிப்படையில் சிறப்புப்பெறுகின்றது. தொழில் மேன்மைபெறவும், நோய் தீரவும், ஆநிரை பெருகவும், பிள்ளைச் செல்வங்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கம் நிறைவுபெற வேண்டும் என்ற பின்னணியில் இவ்வழிபாடு மக்கள் மத்தியில் பின்னிப்பிணைந்துள்ளது. தெய்வங் களுக்கான பூசை நடைமுறைகள் ஆகமம் சார்ந்தும், ஆகமம் சாராமலும் இடம்பெற்று வருகின்றன. ஆகமம் சாராமல் இடம்பெறுகின்ற சடங்குமுறைகளுள் கிராமியத் தெய்வங்களை வழிபடுகின்றமுறை வருகின்றன. கிராமங்களுக்குக் கிராமம் இத்தெய்வங் களின் செல்வாக்கு பிரபல்யமாகவே காணப்படுகின்றன. அத்தகைய தெய்வங்களின் நிலைக்கு ஏற்ப சடங்குகளும் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன.

பகவத்கீதையில் கிருஸ்ணர் அருச்சுனனுக்கு உபதேசம் செய்யும் போது "காங் சஷந்த கர்மணாம் ஸித்திரம் யஜந்த இஹ தேவதா! சஷிபரம் ஹி மனுஷேலோகே ஸித்தர் பவதி கர்மஜா" என்றார். அதாவது, செயல்களின் பலனை வகுப்பவர்கள் இங்கே தேவதைகளை வழிபடுகின்றார்கள். ஏனெனில், பூமியில் செயல்களின் பலன் விரைவில் உண்டாகின்றது. இறைவனை இலட்சியமாகக் கொள்வதும் உலக இன்பங்களை ஒதுக்கிவிட்டு இறைநெறியில் செல்வதும் எல்லோராலும் இயலாது. உலகம் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் இன்பங்கள் வேண்டும் என்று நினைப்பவர்களுக்காகத் தேவதைகளை இறைவன் படைத்துள்ளார். வேதகாலத்தில் இந்திரன், வர்ணன் போன்ற தேவர்கள் வழிபடப்பட்டனர். இந்தக் காலத்தில் மாடன், முனியாண்டி, இசக்கி போன்ற தேவதைகள் வழிபடப்படுகின்றனர் என்கின்றார். எனவே, நாம் வழிபடுகின்ற பரம்பொருள் ஒன்று என்பது தெளிவு. இதனை வேதம் "ஏகம் சத் விப்ரா வகுதா வதந்தி" என்றது. எனவே, ஒரே தெய்வத்தைப் பல பெயர்கொண்டு வணங்குகின்றோம். அதில் ஒன்றே கிராமியத்தெய்வ வழிபாடாகும். இந்த வழிபாட்டுமுறையானது அடிப்படையில் ஒரே தன்மைகொண்டு இருந்தபோதும் ஊருக்கு ஊர் அல்லது தெய்வங்களுக்குத் தெய்வம் அதன் படிமுறை வளர்ச்சி நிலையில் எவ்வாறான மாற்றங்களைப் பெற்றுவந்து நிலைபேறுடையதாக இருக்கின்றது என்பதனைக் களவழி கண்டுகொள்ளமுடிகின்றது.

## பொதுக்கூட்டம்

வருடாந்தச் சடங்கு இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதற்காக ஆலயங்களில் பொதுக்கூட்டம் இடம்பெறும். இக்கூட்டம் மக்களுக்குப் பல்வேறு செய்திகளைக் கூறும். கடந்த ஆண்டு ஆலயச் சடங்கில் இடம்பெற்ற குறை நிறைகள், சடங்கு இடம்பெறுகின்ற முறைமை, சடங்கு இடம்பெற்று முடிவதற்கான ஆரம்பம் முடிவு, அதற்கான செலவு விபரங்கள், சடங்கு இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள், கிராமிய நடைமுறைகள், வேலைப்பாடுகள் என்று பல மட்டங்களில் ஆராயப்பட்டு பொதுமக்களின் முடிவுகள் பெறப்படும். அவர்களுடைய ஏகோபித்த முடிவுகளின் பிரகாரமே சடங்கு இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

## கட்டாடி ஊர் கூவுதல்

கிராமியத்தெய்வ வழிபாட்டில் வருடாந்தச் சடங்கு இடம்பெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டதன் பின்னர் அதனை அறிவிக்கும் முகமாக கட்டாடிகளின் தலைவனான தண்டக்காரன் சடங்கு தொடங்குவது பற்றியும், துடக்கானவர்கள் சடங்கு காலங்களில் வீடுகளில் இருக்கக்கூடாது என்பது பற்றியும் ஊர் கூவுவான். இந்த அறிவித்தல் பிரதான மானதாகும். இரவு நேரத்தில் இந்தச் செயற்பாடு இடம்பெறும். அதாவது, சடங்கினுடைய முக்கிய செய்திகளைச் சொல்லி ஊ ... என்ற சத்தாம் போடுவான். அதனை மக்கள் ஏற்று அதற்கேற்ப நடந்துகொள்வார்கள். ஓவ்வொரு கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடாகும். தற்பொழுது இது மருவிய செயற்பாடாகவே இருந்துகொண்டு வருகின்றது. மரபு ரீதியான செயற்பாடுகள் சில கிராமங்களில் மாத்திரம் இடம்பெற்று வருகின்றன. உதாரணமாக அம்பிலாந்துறை, களுவுந்தன்வெளி, நாற்பதாம் கிராமம் போன்ற கிராமங்களைக் கொள்ளமுடியும்.

## வாழைக்காய் வருதல் / பழுக்கப்போடுதல்

வாழைக்காய் எடுத்துவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இந்தச் செயற்பாட்டுக்காக இரண்டு நாட்களுக்கு முன்பாகச் செல்வார்கள். முன்னர் மாட்டு வண்டியில் செல்வதுண்டு. தற்காலத்தில் உழவு இயந்திரம், வோன் போன்ற வாகனங்களில் செல்வதனை அவதானிக்கலாம். வாழைக்காய் எடுத்துவரப்பட்ட பின்னர் அதனைப் பழுக்கப்போடும் நிகழ்வு இடம்பெறுவது பொதுவழக்காகும். இந்த நிகழ்வு இடம்பெறுவதற்கு வாழைக்காய்மடு வெட்டப்படும். அப்போது சிறிய மடைவைத்து (அந்த அந்த தெய்வத்தின் பெயரால்) பூசைப்பொருட்கள் கொண்டு மந்திரம் சொல்லி மடுவெட்டுவது இன்றும் இருந்துவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாகும். இந்த மடுவினை முதலில் பூசை செய்யும் பூசாரியாரே வெட்டுவார். பின்னர் தலைமை வண்ணக்கரும், அதனைத்தொடர்ந்து ஏனையோரும் வெட்டுவது வழக்கமாகும். பின்னர் மடுவைத்திறந்து வாழைப்பழம் எடுக்கும்போதும் தெய்வத்தின் பெயரால் மந்திரம் சொல்லி கற்புரம் எரித்து எடுப்பது வழக்கமாகும்.

**ஊர்க்காவல் பண்ணுதல்**

கிராமியத் தெய்வ வழிபாட்டில் மற்றுமொரு சிறப்பம்சம் ஊர்காவல் செய்தலாகும். கடல் நீர், ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர், ஊற்று நீர் சேர்த்து மஞ்சள் போன்ற திரவியங்களைச் சேர்த்து ஊரைச்சுற்றி தெளித்து வருவார்கள் தெளிப்பதற்கு வேப்பம் பத்திரம் பயன்படுத்தப்படும். கண்ணகியம்மன் ஆலயங்களில் கடல் நீர் எடுக்கப்பட்டு ஊரின் நாலா புறமும் வேப்பிலையால் வீசி வருவர். பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தில் பாண்டவர், திரௌபதி ஆகியோரது சிலைகள் கடல் நீரில் கழுவப்பட்டு அங்கிருந்து கொண்டுவரப்பட்டு நீரால் சுத்தம் செய்தல் இடம்பெறும். காரைதீவு கண்ணகி ஆலயத்தில் கடல் நீர் பெறச்சென்று அங்கு கடல்நாச்சிக்கு மடைவைத்து பூசை செய்து நீரை எடுத்து வந்து கதவுதிறக்கப் படுவதோடு, விளக்கும் அந்நீரினால் எரிக்ககப்படும். இவ்வாறாக ஊர்க்காவல் பண்ணுதல் நிகழ்வு இடம்பெற்று வருகின்றன.

**பந்தல் போடுதல்**

கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு பிரதானமானதாகும். புதிதாகக் கம்பு வெட்டி (காட்டில் சென்று விண்ணாங்குக் கம்பு வெட்டுதல்) கம்புகளைத் தோல் களைந்து பந்தல்களை மேடையாக அமைப்பது வழக்கமாகும். பிரதான தெய்வத்துடன் பரிவாரத் தெய்வங்களுக்கும் பந்தல் அமைக்கப்படுகின்றன. இந்தப் பந்தலுக்கு பச்சை ஓலைவெட்டி அதனை கிடுகாகப் பின்னிக் கட்டுவார்கள். நிரந்தரக்கட்டிடங்களாக உள்ள கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கோயில்களில் மூன்றாவது மண்டபத்திற்குள் கும்பம் வைத்து பூசை இடம்பெறும். இன்றையச் சூழலில் படிப்படியாக கிராமியத் தெய்வக் கோயில்கள் கட்டிடங்களாக அமையப்பெற்று வருவதனையும் அவதானிக்கலாம். புன்னைச்சோலை காளிகோயில், கொத்துக்குளம் மாரியம்மன் கோயில், செட்டிபாளையம் கண்ணகி கோயில், பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோயில், காரைதீவு கண்ணகியம்மன் கேயில், தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயில், திருகோணமலைக் காளி கோயில், அம்பிலாந்துறை சிவமுத்துமாரியம்மன் கோயில் போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளமுடியும். கண்ணகியம்மன் கோயில்களில் பெரும்பாலானவை கட்டடங்களாகவே உள்ளன. கல்லடிப் பேச்சியம்மன் ஆலயம் ஓலைக் கொட்டிலாலே அமையப்பெற்றுள்ளன.

**பூசாரியார் கோலம்**

கிராமியத் தெய்வ வழிபாட்டைச் செய்பவர் பூசாரியாராவார். இவரைச் சில இடங்களில் கட்டாடியார் என்றும், கப்புகனார் என்றும் அழைப்பர். இவர் வெள்ளை அல்லது காவிவேட்டி அணிந்திருப்பார், கழுத்தில் முத்துமாலை அணிந்திருப்பார், தீட்சை பெற்றவர்கள் பூநூல் பூண்டு இருப்பர். விபூதி திரிபுண்டரமாகவும் அணிந்திரிப்பர், சிலர் வெள்ளைப் பிரம்பொன்றைக் கையில் வைத்திருப்பர், கையில் சிலர் சிலம்பு அணிந்திருப்பர். இடுப்பில் சால்வை கட்டியிருப்பர், சில நிறத்தினால் உள்ள சால்வையையும் ஒன்றுக்குமேல் ஒன்றாக அணிவதுண்டு. பூசை செய்வதற்குரிய மந்திரம் மட்டுமன்றி தெய்வம் ஆடியவர்களைக் கட்டினால் அதனை இலகுமுறையில் வெட்டும் மந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையப்பெற்றவர்களாகவும் இருப்பார். மொத்தத்தில் சிறந்த உடல் ஆரோக்கியமும், மன ஆரோக்கியமும் உடையவராகவும் இருப்பர். பூசாரியார் கோலம் பூசை நடைமுறைகளைக் கூறும் பத்ததிகளில் வருவதாகத் தெரியவில்லை.

**அபிஷேகம் பண்ணுதல்**

பந்தல் போட்டதன் பின்னர் இஸ்டதெய்வங்களுக்கு அபிஷேகம் செய்யும் நிகழ்வு இடம்பெறும். முதலில் விநாயகருக்கு அபிஷேகம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பிரதான கும்பத்தில் எழுந்தருளப் போகும் தெய்வத்திற்கும் ஏனைய தெய்வங்களுக்கும், பரிவாரத் தெய்வங்க ளுக்கும் அபிஷேகம் இடம்பெறும். அபிஷேகப் பொருட்களாக மா, பலா, வாழை, அன்னாசி, தேசி போன்ற பழ வகைகளுடன், கருப்பஞ்சாறு, கற்கண்டு, சக்கரை, தேன், இளநீர் போன்ற பொருட்கள் சேர்க்கப்பட்டு அபிஷேகம் இடம்பெறும். இதில் வேப்பம் பத்திரமும் கமுகம் பாளையும் பிரதானமானதாகும். இத்தகைய பொருட்களே பாணக்கத்திற்கும் பயன்படுத்தப்படும். அபிஷேகத்தை பிரதான பூசாரியாரே செய்வார்.

**மடைவைத்தல்**

மடைவைத்தல் பத்தாசிகளுக்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்பட்டாலும் மடை பரவுவதில் பொதுத்தன்மையினைக் காணலாம். முதலில் சீலை விரிக்கப்பட்டு நெல் பரப்பப்படும், பின்னர் அதற்கு மேல் சீலை விரித்து அரிசி பரப்பப்படும். நெல்லுக்குக் கீழ் இஸ்ட தெய்வத்தின் பெயரால் யந்திரத் தகடு வைக்கப்படும். அரிசிக்கு மேல் யந்திரம் கீறி மடை வைப்பர். கிராமியத் தெய்வ வழிபாட்டில் முதலில் விநாயகருக்கு மடை அமைவது வழக்கமாகும். "ஓம் ஆம் கணபதியே நம" என்று மடை வைக்கப்படும். பின்னர் பரப்பப்பட்ட மடைகளில் கும்பம் ஏற்றப்படும். உதாரணமாக மாரியம்மன் கும்பம் ஏற்றும் போது "ஓம் றிங்க வாடி வாலெட்சப்பிறவி வாடி வாடி சூலக பாலம் துலங்கிய பத்தினி வாடி வாடி நெற்றியில் இட்ட செந்தூரப்பொட்டு மாய் இலங்காய் வாடி அம்மா வா" பெரிய தம்பிரானுக்கு மடை பரப்பப்படும் பொழுது பெரிய தம்பிரானுக்கு வலப்பக்கமாக பிள்ளையார், கந்தசுவாமி, வள்ளியம்மை, தெய்வானையம்மை, வைரவர், தெய்வேந்திரன், அனுமர், வீரபத்திரர், கட்டாடிமார், விறுமதேவர், பரமையனார், நீலாச்சோதையன் முதலான தெய்வங்களுக்கும் இடப்பக்கமாக கன்னிமார், பணிக்கமார், கடவரசன், நாராயணன், விஸ்ணு, பாலாதனன், தக்கன், சந்திரன், சூரியன், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், முப்பத்தி முற்கோடி தேவர்கள், கருடன், கிருத்தசாமுண்டி, காடேரி, சக்தி, சிவன் முதலான தெய்வங்களுக்கும் மடை கட்டப்படும். இவற்றுள் கன்னிமாருக்கு மடைப்பண்டங்களோடு மணிக்கோர்வை. கண்ணாடி, சீப்பு, கழிப்பாக்கு, எலுமிச்சம் பழம், சாதிக்காய், கராம்பு முதலான பொருட்கள் கட்டாயம் வைக்கப்படும். வன்னிப்பகுதியில் நாச்சிமார் எனும் தெய்வத்திற்கு இத்தகைய பண்டப் பொருட்கள் படைக்கப்படுவதும் இங்கு நினைவு கூறத்தக்கது.

இவ்வாறாக சுடலை வைரவனுக்குக் கிங்கிலியன் மடையும், காளிக்கு வாலை, திரிபுரை, புவனைமடையும், கடல் நாச்சிக்கு ஒரு மடையும், திரௌபதிக்கும் பஞ்சபாண்டவர் களுக்கும் வேறு மடையும் அமைவதுண்டு. ஏனைய தெய்வங்களுக்கும் பத்ததி முறைக்கேற்ப மடைகள் அமையும். இறுதி நாளன்று பரப்புமடை வைக்கப்படும். இது எல்லா கிராமிய தெய்வ வழிபாட்டிற்கும் பொருத்தமுடையதே. மாரியம்மன் ஆலயத்தின் பன்னீராயிரம் கிங்கிலியப் படைகளுக்கும் 1008 பரப்புமடை வைக்கப்படுவதுடன் "பூரண கும்பமும்" வைக்கப்படும். இக்கும்பம் தீர்த்தம் ஆடுவதை நினைவுபடுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பம் வைத்தல்

கிராமியத் தெய்வங்களுக்கும் கும்பம் வைக்கும் போது அது பத்தாசிகளின் அடிப்படையில் நிகழ்கின்றது. அந்தந்தத் தெய்வங்களின் முகங்களின் நிலையிலேயே கும்பம் அமையும் இதனை கும்பவாலாயம் என்பர். கும்பம் அலுமினியம் செம்பில் அமைவது வழக்கம் இதற்கு மேலால் நூல் சுற்றப்படும். உள்ளே அபிஷேகம் செய்யப்பட்ட பொருட்களும், தெய்வங்களைக் குறிக்கும். யந்திரத்தகடும் இடப்படும். கும்ப முட்டிக்கு மேலே பத்திரக்கட்டு வைத்து கமுகம்பாளை, தாமரைப்பூ, வெள்ளிப்பிரம்பு போன்ற பொருட்களை வைத்து தெய்வங்களின் உருவங்கள் மந்திர உச்சாடனம் செய்து அமர்த்தப்படும். பொதுவாக இது முகக்களை வடிவில் அமையும். எனினும், தெய்வங்களின் தன்மைக்கு ஏற்ப இது மாறுபடலாம். கும்பம் வைத்தல் நிகழ்வு கும்பச்சடங்கு என்றே அழைக்கப்படுவது வழக்கமாகும். சில இடங்களில் கதவு திறத்தலாக இது அமையும். எனினும், அங்கும் கும்பச்சடங்கே சிறப்புப்பெறும். மடைவைத்து ஏற்றப்படும் கும்பம் ஒவ்வொன்றும் தெய்வங்களின் அனைத்துச் சக்திகளையும் ஒன்றாய் பிரதிபலிப்பதாகவே அமையும். உதாரணமாக வாலைத்தெய்வத்திற்கு ஒரு கும்பம் அமையும் போது அது வால சக்தி, இச்சாசக்தி, மாரியம்மன், இலட்சுமி, ஆகிய சக்திகளை உள்ளடக்கும் மாரிக்கும், பேச்சிக்கும். காளிக்கும் அமையும் கும்பம் ஒரேவகை ஆனால், இருப்பிடம் மாறுபடும். வாலை, திரிபுரை, புவனை எனும் மூன்று கும்பங்களில் மாரிக்கு வாலைக் கும்பம் நடுவில் அமையும், காளிக்கு திரிபுரைக் கும்பம் நடுவில் அமையும், பேச்சிக்கு புவனைக் கும்பம் நடுவில் அமையும். அப்போது ஏனைய கும்பங்கள் இரண்டு பக்கமாகவும் அமையும்.

கண்ணகியம்மனுக்கு 23 கும்பங்கள் வைக்கப்படும் இதில் பரிவாரத் தெய்வங்களான பேச்சியம்மன், கரகத்து அம்மன், உள் வீதியில் உள்ள சப்த கன்னிகளுக்கும். வெளி வீதியிலுள்ள 7 காவற்காரர்களுக்கும் கும்பம் வைக்கப்படும். எல்லா ஆலயங்களிலும் பரிவாரத் தெய்வங்களுக்கு ஒவ்வொரு கும்பம் அமையும் பாலாவதனன் தெய்வமாகும். கோயில்களில் சுவாதியம் மனுக்கு வேறாக ஒரு பந்தலில் கும்பம் அமையும் உதாரணம், வெல்லாவெளி, நாற்பதாம் கிராமச் சடங்கு முறைகளைக்கொள்ள முடியும்.

சுடலை வைரவன் கோயிலில் சுடலைக் காளிக்கும், சுடலை வைரவனுக்கும் கும்பம் அமையும். பெரியதம்பிரான் ஆலயங்களில் பெரிய தம்பிரானுக்கும் நீலாகோதயனுக்கும் பரிவாரத் தெய்வங்களுக்கும் கும்பங்கள் அமையும். கடல்நாச்சிக்கு கப்பல் கொடிமரத்தடியில் ஒரு கும்பம் அமையும். இவ்வாறாக கும்பம் வைத்தல் இடம்பெறுகிறது. மாரியம்மன் ஆலயங்களில் தவ நிலையடியில் 10 கும்பமும் மேல் ஒரு கும்பமும், கழுமரத்தடியில் ஒரு கும்பமும் (சுப்பிரமணியருக்கு) என்று அமைவதும் வழக்கம். பூரணையில் கும்பமாடுவதற்காக பூரண கும்பம் வைக்கப்படும். கும்ப ஆணை என்பது தெய்வம் ஆடுபவர்கள் அடுத்தவரிடம் சந்தோஷமாக வருவோம் என்பதை சத்தியவாக்காகப் பெறுவதாகும். கும்பத்தில் இருக்கும் அலகை எடுத்து தெய்வமாடுபவர்களின் நாக்கில் குத்தி பூசாரியார் உருத்தணிப்பார்.

## தெய்வம் ஆடுதல்

தெய்வமாக உருக்கொண்டவர்கள் தெய்வமாடுவார்கள். இவர்களை "தேவாதிகள்" என்பர். கிராமிய வழக்கில் "பேயாடுபவர்கள்" என்பார்கள். மந்திரத்தால் உருவேற்றப்பட்டு கை, காலில் சிலம்பணிந்த இவர்கள் பத்திரக்கட்டை கையில் கொண்டு தெய்வமாடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் கொடுக்குக் கட்டியும் பெண்கள் வெள்ளைச் சாறிகட்டி தலைவிரிகோலத்துடனும் ஆடுவர். மாரியம்மன் ஆலயங்களில் தெய்வமாடும் நிகழ்வு சிறப்பானதாகும். திரௌபதை அம்மன் ஆலயங்களில் பஞ்சபாண்டவர்க்கு தெய்வமாடுவார்கள். காளி கோயில்களிலும் காளியின் முகம் கொண்டு தெய்வமாடப்படும். கண்ணகியம்மன் ஆலயங்களில் தெய்வமாடுதல் மிக மிகக் குறைவு. சுடலை வைரவன், வீரபத்திரர், பாலாவதனன், வைரவர், நாககன்னி என்று தெய்வங்கள் ஆடப்படும். தெய்வமாடுபவர்கள் கட்டுச் சொல்வார்கள் இதனை தெய்வ வாக்காக எல்லா மக்களும் ஏற்றுக்கொள்வர். ஊரிலுள்ள குற்றம் குறைகள், தெய்வநினைப்பு என்பன கட்டுச்சொல்வதில் அடங்கும். பூசை செய்யும் பூசாரியாரிடமே பெரும்பாலும் கட்டுச் சொல்லப்படும். கட்டுச் சொல்வது ஒரு கதைப்பாங்கில் அமைந்துள்ளது. தேவாதி கட்டுச் சொல்ல அதை பூசாரி ஆம், ஆம் எனக்கேட்டுக் கொண்டே இருப்பார். சிலநேரங்களில் அதற்குப் பதிலும் சொல்வது வழக்கமாகும்.

தெய்வமாடுபவர்களை மந்திரத்தால் கட்டுவதும் வெட்டுவதும் வழக்கமாகும். 1000 வகையான கட்டும், 1001 வகையான வெட்டு முறையும் உண்டு என்பர். படுகனம் அமைத்தல், கோழிப்பலி கொடுத்தல், கையைக் கீறி இரத்தப்பொலி கொடுத்தல் என்ற வெட்டுமுறைகள் அபாயமான வெட்டு முறைகளாகும். இங்கு கட்டுபவர் உடற்கட்டு சரியான முறையில் கட்டா விட்டால் இந்த அபாயவெட்டால் இரத்தம் கக்கி உயிர் விடுவதுண்டு, பூசாரியிடம் உடற்கட்டு சரியான முறையில் கட்ட வேண்டும். இல்லாவிட்டால் பூசாரிக்கு ஆபத்து நிகழும். வெட்டு என்பது மாறணம் செய்து விடுவதாகும். பொல்லாத வெட்டுவெட்டும் போது பூசாரியார் முதலில் அறிவிப்பார். யாரும் தெரியாமல் கட்டியிருந்தால் விடுங்கோ என்று வினயமாக வேண்டுவதுண்டு. கட்டுபவர்கள் தெய்வ சந்நிதானத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பூ, வேப்பம்பத்திரம், கமுகம்பாளை போன்றவற்றையே பயன்படுத்துவதுண்டு. சிலர் கோயிலுக்கு அப்பால் கும்பம் வைத்து கட்டுவார்கள், சிலர் பூசாரி போட்டியால் நேருக்கு நேர் நின்று ஆவேசத்தொணியுடன் மந்திரம் சொல்லிக் கட்டுவார்கள். சிலர் மறைமுகமாக ஆலய வீதியில் இருந்து கட்டுவார்கள். கட்டுபவர்கள் தங்களுக்கு வெட்டு பலியாவண்ணம் கமுகமரம் இருந்தால் அதன் அடியில் நூலால் வளயமிடுவர். வெட்டுப்பலிக்கும் போது அந்த நூல் மேலால் கமுகமரத்தின் வட்டுப்பகுதியை தெறிக்கச்செய்த வரலாறுகளும் உண்டு. இவ்வாறாக கட்டுகளும் வெட்டுகளும் தெய்வ வழிபாட்டில் மக்கள் மத்தியில் இடம்பிடித்துக் கொண்டது.

## சடங்கு

கிராமியத் தெய்வ வழிபாட்டில் இடம் பெறும் பூசை முறைகளைச் சடங்கு என்றே சிறப்பாக அழைப்பர். சடங்கு காலம் என்றால் மக்கள் பயபக்தியுடன் தூய்மையாக இருப்பது வழக்கம். தெய்வச் செயல்களைத்தவிர வேறு செயல்களைச் செய்யமாட்டார்கள். பொதுவாகச் சடங்கு தியாலங்களாக அமையும் 7, 9, 11, 13 தியாலங்களால் சடங்கு நிகழும். ஒரு நாள் இரண்டு தியாலங்களாகும். ஒரு பகல் பூசை, ஒரு தியாலமாகவும். ஒரு இரவுப் பூசை இன்னொரு தியாலமாகவும் அமையும். எனினும், நாட்களைக் குறித்து சடங்கு வந்த பொழுதும் அங்கும் தியாலங்களின் அடிப்படையிலே சடங்குகள் இடம்பெறும். சடங்குகள், கும்பம் வைத்தல், சடங்கு, அலங்காரச் சடங்கு, ஊர் சுற்றும் சடங்கு, தோரணச் சடங்கு, தவநிலைச் சடங்கு, தீச் சடங்கு, தீத்தச் சடங்கு, எட்டாம் சடங்கு (கும்பம் பிரித்ததில் இருந்து ஏழு நாள் கழித்து வரும் எட்டாம் நாள் இடம் பெறும். கொடியேற்றச் சடங்கு, சுவாமி எழுந்தருளப் பண்ணும் சடங்கு, நாட் கால் வெட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கு, கல்யாணக்கால் வெட்டும் சடங்கு, வனவாசம் போகும் சடங்கு, பாற்பள்ளிச் சடங்கு. கதவு திறக்கும் சடங்கு, கல்யாணச் சடங்கு, பச்சைகட்டுச் சடங்கு, குளிர்த்திச் சடங்கு என்று பலவகையில் சடங்குகள் அமைவதுண்டு.

## ஊர் வலம் வருதல்

ஊர்வலம் வருதல் கிராமியத் தெய்வ வழிபாட்டில் பிரதானமானதாகும். இதனை ஊர்வலச் சடங்கு என்பர். ஊர் மக்களுக்கு அருள் பாலிப்பதற்காகத் தெய்வம் ஊர்வலம் வரும். ஓவ்வொரு இல்லத்திலும் நிறைகுடம் வைத்து தெய்வத்தை வரவேற்பர். மஞ்சள் நீரினால் தெய்வம் ஆடுபவர்களின் காலைக்கழுவி தெய்வவாக்கும் பெறுவர். ஊர்களில் பேய், பிசாசு பார்வையாகாமலும் கொள்ளைநோய் வராமலும் இருப்பதற்கு தெய்வம் அருள்வாக்குக் கொடுக்கும். இதனை "வாக்குச் சொல்லல்" என்பர். ஆலயத்தில் இருந்து ஊர் சுற்றும் கும்பம் அதிசக்தி கொண்டதாக உருவேற்றப்பட்டு பிரதான தெய்வத்துக்கு ஆடுபவரால் எடுத்துவரப்படும். அந்தக் கும்பத்தால் அடியவர்களின் முகங்களில் தடாவி அவர்களுடைய சந்தோஷத்திற்குப் பாத்திரமாகத் தெய்வங்கள் இருக்கும். ஊர்வலத்தின் போது மந்திரத்தால் வெட்டுவதும், கட்டுவதும் தீவிரமாக இடம்பெறும்.

## தோரணம் கட்டுதல்

தெய்வங்களுக்குரிய அடையாளமாகக் கொள்ளப்படும் தோரணம் கட்டும் நிகழ்வு ஓவ்வொரு கிராமியத் தெய்வ வழிபாட்டிலும் சிறப்பாக அவதானிக்கக்கூடிய ஒன்று. ஆகமம்சார் தெய்வ வழிபாட்டிலும் தோரணம் அமைவதுண்டு. பெரும்பாலும் விண்ணாங்குக் கம்பு கொண்டு தோரணம் அமைப்பார்கள். எனினும், தோரணம் கட்டும் நிகழ்வு அம்பிலாந்துறை, கன்னங்குடா, நாற்பதாம் கிராமம் ஆகிய இடங்களில் சிறப்பாக அமைந்துள்ளது. இங்கு இன்றைய நாளை தோரணச் சடங்கு என்று அழைப்பர்.

## தவ நிலைச் சடங்கு

'தவம் செய்தல்' இந்து மரபில் பிரதான இடத்தை வகிக்கின்றது. தவம் புரிந்து சாதனை படைத்தவர்கள் பற்றிப் புராணங்கள் தெளிவுபடுத்தும். அறுபது அடிக் கம்பத்தில் இருந்து உமை தவம் புரிந்து சிவனிடம் வரம் பெற்ற வரலாறுண்டு. கம்பத்தடியில் 10 கும்பம் வைக்கப்படும். மாரிக்குத் தெய்வம் ஆடுபவரே கம்பத்தில் ஏறுவார். வாலபத்ததி தவ நிலையில் ஏறிய பின் தீ மிதிப்பை எடுத்துரைக்க, வராகி பத்ததி தீமிதித்து கம்பத்தில் ஏறுவதை எடுத்துரைக்கும். இதற்கு உதாரணமாக, வெல்லாவெளி மாரியம்மன் வழிபாட்டைக் கூறலாம். அருச்சுனன் சிவனிடம் பாசுபதம் பெறுவதற்காக தவம் செய்திருக் கின்றான். அருச்சுனன் காவி உடை அணிந்து, உருத்திராக்க மாலை தரித்து, கையில் வில், அம்பு தாங்கி, அம்புராக் கட்டுடன் வருவான். அப்போது ஏல கண்ணி, பன்றி என்பன இடைமறிக்கும். அவற்றையும் தாண்டி அவர் தனது பயணத்தைத் தொடர்ந்து மீண்டு வருவார். பாண்டிருப்பு, பழுகாமம் போன்ற திரௌபதை அம்மன் போன்ற ஆலயங்களில் தவ நிலைச் சடங்கு இடம்பெறுகின்றன.

நாவிதன்வெளி, அம்பிலாந்துறை, அரசடித்தீவு, நாற்பதாம் கிராமம், கழுவுந்தன்வெளி, மகிழூர்முனை, வெல்லாவெளி போன்ற மாரியம்மன் ஆலயங்களில் தவநிலை வைபவம் இடம்பெறும். இந்த ஆலயங்களில் காத்தானைக் கழுவேற்றும் நிகழ்வும் இந்த இரவிலே இடம்பெறும். சப்த கன்னியர்கள் உடைகளைக் களைந்து விட்டு நீராடும் போது காத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய கன்னியின் உடையை ஒழித்தான் என்பதை உணர்ந்த அவள் மாரியிடம் முறையிட மாரி கோபம் கொண்டு காத்தானைக் கழுவேற்றி தண்டனை கொடுத்தாள் என்பதனை உணர்த்தும்.

## தீச் சடங்கு

கிராமியத் தெய்வ வழிபாட்டில் பிரதான இடத்தை வகிப்பது தீச் சடங்காகும். பக்தியின் உச்ச நிலையை நேருக்கு நேராக வெளிக்காட்டும் நிகழ்வு இதுவாகும். பெரும்பாலான கிராமியத் தெய்வ வழிபாட்டில் தீமிதிப்பு வைபவம் இடம்பெறுகின்றது. தீமிதிப்பு வைபவத்தின் முதற்படிதான் தீக்கட்டை எழுந்தருளச் செய்யும் நிகழ்வாகும். இன்நிகழ்வு ஆலயத்திற்குப் புறம்பான ஓர் இடத்தில் இடம்பெறுவதுதான் வழக்கம். தீக்கட்டைக்காக வீரை மரம், வேம்பு மரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தீப்பாய்தல் என்பது தீமையில் இருந்து ஒருவர் விடுபடுவதாகும். தீமையில் இருந்து விடுவதற்கான முறைகளில் ஒன்று இது என பக்தர்கள் நம்புகின்றனர். தீக்கட்டை எழுந்தருளப்பட்டு வந்ததும் தீக்குழி வெட்டப்படும். இது பிரதான தெய்வம் இருக்கும் நேர்ப்பக்கம் வெட்டப்பட்டிருக்கும். பின்னர் மடைவைத்து தீக்கட்டை அடுக்கப்பட்டு தீ மூட்டப்படும். இதனை பிரதம பூசாரியாரே மேற்கொள்வார். மந்திரத்தால் தீக்குழியில் வைக்கப்பட்ட மடை கருகாது அப்படியே இருக்கும் என்று கூறுவார்கள்.

தீ மிதிப்பு விடியற் காலையிலும் பின்னேர நேரங்களிலும் இடம்பெறுகின்றது. பழுகாமம், பாண்டிருப்பு, புன்னைச்சோலை போன்ற ஆலயங்களில் பின்னேர நேரங்களிலும் பெரிய போரதீவு காளி கோயில், மாரியம்மன் கோயில்களிலும் விடியற் காலையிலும் தீமிதிப்பு இடம்பெறுவது வழக்கம். இது போன்று ஏனைய ஆலயங்களிலும் இடம்பெறுகின்றன. மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்கள் தங்கள் பாவங்களெல்லாம் நீக்கி புதுப் பிறவி எடுத்தல் எனும் கருத்தினைச் சித்தரிக்கும் வகையிலே தீப்பாயும் நிகழ்வு திரௌபதை அம்மன் ஆலயங்களில் இடம்பெறுகின்றது. இங்கு வீரகும்பம் நிறுத்திய பின்னரே தீமிதிப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்படும். மாரியம்மன் ஆலயங்களில் சிவனுடன் சினமுற்ற உமை கோபங்கொண்டு தீப்பாய்ந்து கம்பத்தில் (60 அடி) ஏறித்தவம் செய்ததை நினைவு கூர்வதாக அமைகின்றது. காளிக் கோயில்களில் தீமிதித்தல் நிகழ்வு சிறப்பானதாகும். பெரும்பாலான காளி கோயில்களில் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது. தீமிதித்து முடிந்ததும் தீக்குழிக்கு பாலூற்றும் நிகழ்வு இடம்பெறுவதும் வழக்கமாகும்.

## பொங்கல்

கிராமியத் தெய்வ வழிபாட்டில் பொங்கல் பிரதான இடத்தை வகிக்கின்றது. பொதுவாக பொங்கல் இறுதி நாளில்தான் இடம்பெறுவது வழக்கமாகும். முதலில் விநாயகருக்கு பொங்கல் இடம்பெறும் இதனை விநாயகர் பானைப் பொங்கல் என்று அழைப்பர். அத்தோடு குறிப்பிடப்பட்ட தெய்வத்திற்குரிய பொங்கல் பானையும், சக்கரை அமுதும் கொடுப்பதற்குரிய பொங்கல் பானையுமாக மூன்று பானைகள் பொங்கப்படுவது வழக்கமாகும். சில கிராமியத் தெய்வ வழிபாட்டில் இது மாறலாம். உதாரணமாகப் பெரியதம்பிரான் வழிபாடு இடம்பெறுகின்ற அக்கரைப்பற்றில் ஒரு பானையும், தாளங்குடா, அரசடியில் மூன்று பொங்கல் பானையுமாக அமைகின்றது. விநாயகர் பானை ஏற்றும் நிகழ்வை "விநாயகர் பானை எழுந்தருளப் பண்ணுதல்" என்பர். இந்தப் பொங்கல் பானை மண்பானையாகவே இருக்கும். அத்தோடு குறிப்பிட்ட தெய்வத்துக்குரிய பானையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்பானையாகவே அமையும். ஆலயமுன்றலில் (சந்நிதானத்தின்) சீலையால் திரை வளைந்து, அக்கினி மந்திரத்தால் அடுப்பு மூட்டி, பாலை மந்திர உச்சாடனம் செய்து ஊற்றிப் பொங்கல் பொங்குவர். பால் பொங்கிய அமிர்தம் அம்மனுக்கு நிவேதனம் செய்யப்படும். இதுவே அதி உன்னதமான நிவேதனமாகும். பொங்குவதற்கான அரிசியை ஆலயத்திற்கு நேர்கடனாக வந்த நெல்லைக் குற்றி அரிசியாசாக்கி எடுப்பர். இந்த நெல் ஆலய முன்றலில் உரலில் போட்டு பெண்களால் குத்தப்படுவது வழக்கமாகும். சக்கரை அமுது இறுதி நாள் இடம்பெறும். தீர்த்தம் ஆடியதைத் தொடர்ந்து சக்கரை அமுது கொடுக்கப்படும். அந்த நிகழ்வு சப்த அல்லது நவ கன்னியர்களை நினைவு கூர்வதாக அமையும். இதற்கு 7 அல்லது 9 பருவமடையாத பெண்பிள்ளைகள் வைக்கப்படுவர். அவர்கள் அம்மனுடைய பிரசாதத்தை மடியிலே வாங்கி வருவர். இவர்கள் யாவரும் அம்மனாகவே பாவனை செய்யப்படுவது மரபுசார்ந்த வழக்காகும். இதன் பின்னர்தான் அடியவர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

### எட்டாம் சடங்கு

கும்பம் சொரிந்து எட்டாம் நாள் இடம்பெறும் சடங்கு இதுவாகும். அடுத்த வருடம் சடங்கு ஆரம்பிக்கப்படும் வரை காவல் தெய்வங்களுக்கு அந்த இடத்தினை ஒப்படைக்கும் சடங்கு இதுவாகும். மாரியம்மனின் இங்கிலியப்படை பன்னீராயிரம் பேருக்கும் அன்று பலி கொடுத்து அனுப்புவார்கள். இவ்வாறே ஏனைய தெய்வங்களுக்கும் பலி கொடுக்கும் நிகழ்வு இடம்பெறும். பலிப்பொருட்களாக உறட்டி, கஞ்சா உறட்டி, பொங்கல், கஞ்சாப் பொங்கல், மொந்தன் வாழைப்பழம், சாராயம், கள் போன்றன அமைகின்றன. சில இடங்களில் எட்டாம் சடங்கு இடம்பெறுவதில்லை. இறுதி நாளே பள்ளையம் கொடுத்து முடிப்பர். கள்ளியந் தீவில் எட்டாம் சடங்கில்தான் பொங்கல் இடம்பெறும். பள்ளயம் கொடுபட்ட தெய்வத்துக்கு கும்பம் இடம்பெற மாட்டாது. ஏனைய தெய்வங்களுக்கு கும்பமும், மடையும் அமையும். வட்டாமடை இங்கு பிரதான இடத்தைப் பெறுகின்றது. வட்டாமேல் வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, கரும்பு, தாமரைப்பூ, கமுகம் பாழை என்பன மடைப் பொருட்களாக அமைகின்றன. வேப்பம் பத்திரம் பிரதானமானது. பூசை முடிவில் வாழி படப்படுவது வழக்கமாகும். உதாரணமாக மாரியம்மன் வழிபாட்டில் பாடப்படுவது வாழிப்பாடல்களில் ஒன்று இது.

*"ஈசனுடன் நாலுமறைவேத நுதல் வாழி*
*இந்துமதி ஒத்தகை ஈசுபரி வாழி*
*வீசு புகழுடைய ராசசிங்கமும் வாழி*
*விளை சென்னல் மழை பெய்து நீடூழி வாழி*
*வாசமுள்ள நாடுநக ரெங்கனும் வாழி*
*வரிசைதெறு விஸ்வர்குல மரபு மிக வாழி*
*ஆசுதமிழ் குற்றம் பொறுத்து மிக வாழி*
*அமிர்த பரிபூரணி வாழ வாழியதே"*

இந்த வாழிப்பாடல் கும்பம் சொரிந்த அன்றும், எட்டாம் சடங்கில் அன்றும் பாடப்படும். இதனைத் தொடர்ந்து நிவேதனப் பொருட்கள் பகிரப்பட்டு முகக்களைகளைப் பெட்டகம் அல்லது கபடா வீட்டுக்குள் வைத்து பூட்டிவிட்டு பூசாரிமாரும் வண்ணக்குமாரும் செல்வார் கள். அடுத்த வருடமே பூசைக்காக முகக்களைகளும் ஏனைய பொருட்களும் எடுக்கப்படும். இது ஒவ்வொரு கிராமியத் தெய்வ வழிபாட்டிலும் நிகழும் பொது நிகழ்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பம் சொரிதல்

கும்பம் சொரிதல் நிகழ்வு ஆலயங்களில் பொதுவாக நிகழ்கின்ற ஒன்று. பூரணையில் தீர்த்தம் ஆடும்போது பூரணகும்பம் வைத்து ஆடுவார்கள். இவ்வாறு ஏனைய நாட்களில் தீர்த்தம் ஆடும்போது பலவகைக் கும்பங்கள் வைக்கப்படும். உருவேற்றப்பட்டு பிரதானமாக வைக்கப்பட்ட கும்பத்தினை மந்திரத்தால் கிளப்பி அதனைக் குளத்திலோ, ஆற்றிலோ, கடலிலோ எடுத்துச்சென்று இவற்றோடு சங்கமிக்கச் செய்வர். இந்நிகழ்வு தீர்த்தம் ஆடுதல் என்று கூறுவர். கண்ணகி அம்மன் ஆலயங்களில் குளிர்த்தில் ஆடுவது என்பார்கள். இந்த நிகழ்வையே கும்பம் சொரிதல் என்றும் கூறுவது மரபாகும். தீர்த்தம் ஆடுவதனால் பக்தர்களுக்கு இறைவன் இலகுவில் அருள் கொடுப்பான் என புராணங்கள் கூறுகின்றன.

இவ்வாறான முறையில் அவதானிக்கும்போது கிராமியத் தெய்வ வழிபாட்டின் அடிப்படைகள் மரபுகளும் வழக்காறுகளும் மாறாத வண்ணம் அமைகின்றபோதும் தெய்வங்களுக்கு ஏற்றாப்போலும், கிராமிய நடைமுறைகளுக்கு ஏற்றாப்போலும் மாறுபட்டு அமைகின்றமையினைக் கள ஆய்வின்வழி அவதானிக்கமுடிகின்றது.

## உசாத்துணைகள்

சிவசுப்பிரமணியம், வ. (2004) மட்டக்களப்பு நாட்டாரியல்.

மனோகரன், எம். (2004) காளி வழிபாடு, அனுராகம், சென்னை.

பக்தவத்சலபாரதி, 1999 பண்பாட்டு மானிடவியல், சென்னை.

பரமசிவன், தொ (1995) தெய்வங்களும் சமூகமரபுகளும்.

மகேஸ்வரலிங்கம், க (1996) மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம்.

ஸ்டீபன், ஞா (1999) பண்பாட்டு வேர்களைத்தேடி, நாட்டார் வழக்காற்றியல், ஆய்வு மையம், பாளயம்கோட்டை.

சண்முகலிங்கம், க. (1993) பதிப்பாசிரியர், தமிழ் நாட்டார் வழக்காற்றியல், இந்து சமய கலாசார திணைக்களம்.

திருமலை பள்ளிக்குடியிருப்பு கும்பாபிஷேக சிறப்பு மலர், (2008)

மாரியம்மன் திவ்விய கரணி.

மாரியம்மன் பத்ததி.

சமயபுரம் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் வரலாறும், பாமாலையும்.

பகவத்கீதை.

இந்து தர்மம (1996) பேராதனை பல்கலைக்கழகம்.

வழிபாட்டோடு சம்மந்தப்பட்டோரை நேர்முகம் கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் வழக்காற்றியலும் ஆவணப்படுத்தலும்

திருமதி விஜிதா திவாகரன்

நாட்டார் வழக்காற்றியல் என்பது இன்று அனைத்துலகினதும் கல்விப் புலமாகவும், ஆய்வுப் புலமாகவும் வளர்ச்சி கண்டுள்ளது. நாட்டார் வழக்காறுகளை இனங்காணுதல், அவற்றை விளக்கியுரைத்தல், சேகரித்துப் பாதுகாத்தல் முதலானவற்றோடு அவற்றைப் பல்வேறு வகையான கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்வு செய்தல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளும் இன்று கல்விப் புலத்தில் பரவலாக நிகழ்ந்து வருகின்றமை அவதானிக்கத்தக்க விடயமாகும்.

இந்தவகையில், முதலில் ஒரு கல்விப் புலத்தில் பயன்படுத்தப்படும் அடிப்படைக் கலைச்சொற்களை நாம் வரையறுத்துக் கொள்ள வேண்டும். நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்லின் வரையறைகள் சமூக, வரலாறு மற்றும் இடத்தின் அடிப்படையில் வேறுபட்டு அமைகின்றன. மரபு வழியாகவோ மரபு வழியைப் பின்பற்றிப் புதிதாகப் படைக்கப்பட்டோ மக்களிடம் இயல்பாக வழக்கில் உள்ளவையும் அல்லது குறிப்பிட்ட களத்தில் சூழலில் பயன்படுத்தப்படுபவையும் பொதுவாக வழக்காறுகள் எனப்படும். இவை பாடல்களாகவோ, விடுகதைகளாகவோ, பழமொழிகளாகவோ, கதைப்பாடல்களாகவோ அமையலாம்.

நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்லானது ஆரம்பத்தில் மரபுசார்ந்த மானுட சமூக நடத்தை என்ற பொருளில் இருந்துள்ளது. மனிதனின் பழக்கங்கள், வழக்கங்கள், சடங்கு முறைகள், மூடநம்பிக்கைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், பழங்கால வழக்காறுகள் முதலியவற்றை அத்தொடர் குறிப்பதாக அமைந்துள்ளது. நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்லுக்கு முன்னர் நாட்டார் வழக்காறுகள், நாட்டுப்புறவியல், வாய்மொழி இலக்கியம், கிராமிய இலக்கியம், பாமர இலக்கியம், ஜனரஞ்சக இலக்கியம் எனப் பல்வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தவகையில், பழங்காலப் பண்பாட்டு எச்சங்களே நாட்டார் வழக்காறுகள் எனப்படுகின்றன. 'Folklore' என்ற ஆங்கிலக் கூட்டுச் சொல்லானது முதலில் வழக்காறுகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. காலப்போக்கில் பின்னர், வழக்காறுகளையும் வழக்காற்றைப் பற்றிப் படிக்கும் ஆய்வுக் கல்வியாகிய அறிவுத்துறையையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

இன்று தமிழ்க் கல்விப் புலத்திலும், ஆய்வுப் புலத்திலும் பரவலாகப் பயன்படுத்தி வரும் நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்லானது நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், இலக்கியங்கள் முதலானவற்றை ஆராயும் ஒரு துறையாக விளங்குகின்றது. அதாவது, கல்வியறிவில்லாத சமூகங்கள் அனுபவத்தால் ஆராய்ந்து பெற்ற கல்வியைக் குறிப்பதாகவும், எழுத்து வழக்கற்ற வாய்மொழிசார்ந்த பண்பாட்டைக் குறிப்பதாகவும் நாட்டார் வழக்காற்றியல் கையாளப்படுகின்றது. எனவே, நாட்டார் வழக்காற்றியல் என்பது வாய்மொழியாகப் பரவுதல், மரபு வழிப்படுதல், பல்வேறு வடிவங்களாகத் திரிபுபடுதல், ஆசிரியர் இல்லாமை, ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குதல் ஆகிய பண்புகளை உள்ளடக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாட்டார் வழக்காற்றியலும் ஆவணப்படுத்தலும்' என்ற விடயத்தில் முதலில் ஆவணப்படுத்தல் என்ற சொல்லின் கருத்தாக்கம் பற்றி அறிய வேண்டியுள்ளது. ஆவணப்படுத்தல் அல்லது ஆவணமயமாக்கல் (Documentation) என்பது பாதுகாத்தல் அல்லது பேணுதல் எனும் முறைசார் செயற்பாடாகும். அதாவது, குறிப்பிட்ட துறைசார்ந்த தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், தொகுத்தல், பாதுகாத்தல், பரவலாக்கம் செய்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ள ஒரு முறையியலாகும். இதனை ஆவண முறையியல் என்று அழைப்பர்.

சமூக பண்பாட்டு மரபுசார் சிந்தனைகள், கருத்துக்கள், விடயங்கள், கலை இலக்கியங்கள், தொல்பொருட்கள் என்பவற்றை அவற்றின் காலப்பகுதியின் அவசியம் குறித்தும் எதிர்காலத் தேவையின் பொருட்டும் அலட்சியம் இன்றி, அவற்றைத் தொகுத்துப் பாதுகாத்தல் ஆவணப்படுத்தல் ஆகும். இச்செயற்பாடானது இடைவில்லாதும் தொய்வில்லாதும் தடயங்களையும் நிகழ்வுகளையும் குறிப்புகளாகவோ அல்லது பொருள்படும் குறியீடுகளாகவோ, ஒலி - ஒளிப் பதிவுகளாகவோ மின்னியல்சார் பேணுகை யாகவோ பாதுகாத்து அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்கும் செயற்பாடாக அமைகின்றது. ஆவணப்படுத்தலில் தொய்வுநிலையும் இடைவெளியும் ஏற்படுமிடத்து நமது எதிர்காலத்தைத் தொலைத்து நிற்கும் நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். ஆவணங்கள் என்பது ஊமையாக இருந்து உண்மையைத் தக்கசமயத்தில் கூறி நிற்பவையாகவும், கல்லில் வடித்த சொல்லாகக் காலம் கடந்து வாழ்பவையாகவும் உள்ளன.

ஆவணப்படுத்தல் என்ற செயற்பாடானது சமூகத்தின் பொறுப்புடைமையாகவும் ஒரு தொடர்வினைச் செயற்பாடாகவும் உள்ளது. எம்மிடையே நிலவிய பண்டைய பாரம்பரியங்கள், மரபுகள், சடங்குகள் யாவும் இல்லாமல் அழிந்து போகின்றதே, சமூகமானது மரபிலிருந்து விடுபட்டு நவீனத்தை முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றதே, ஆதலால் எமது பாராம்பரியங்களை நாம் பாதுகாக்க வேண்டும் என்று முழங்கும் குரல்களுக்கிடையே 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே' என்பதற்கிணங்க புதியன வரும்போது பழையவை அருகிவிடுவதும் மறைந்து விடுவதும் இயல்பானவை என்ற கருத்தில் நிலைநின்று பழையனவற்றைப் பேணிப்பாதுகாக்கும் விதத்தில் நாம் அவற்றை ஆவணப்படுத்த வேண்டியது நமது கடப்பாடாகும்.

ஆவணங்கள் என்பது அனைத்துத் துறைகளிலும் சமூக வரலாற்றுப் பதிவுகளாக விளங்குவதுடன் இவை சமூகவியல் மற்றும் வரலாற்றியல் ஆய்விற்கு பெரிதும் உதவுகின்றன. ஓர் இனத்தின் வரலாறு, பண்பாடு என்பவற்றினைத் தொல்லியல் சான்றின் மூலமாகவே அறிய முடிகின்றது. இதனால் ஆவணப்படுத்தல் என்பது நம்மை நாமே பதிவு செய்தல் ஆகும். ஆவணங்களானவை மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்த கடிதங்கள், தினசரிக் குறிப்பேடுகள் முதலியன உள்ளிட்ட குடும்ப ஆவணங்களாகவும், இலக்கியங்கள், கலைகள் முதலியன உள்ளிட்ட சமூக ஆவணங்களாகவும் இருந்து, ஒட்டுமொத்த ஓர் இன அடையாளத்தின் எதிர்காலத்தை உறுதி செய்வதாக அமைகின்றது.

பொதுவாக ஆவணப்படுத்தல் என்பது எழுத்து வடிவில் அல்லது குறியீட்டு வடிவில் ஒன்றை எழுதி அல்லது வரைந்து அல்லது பிரதியெடுத்து காலங்காலமாகப் பாதுகாப்பான முறையில் வைத்திருத்தல் என்று கருதப்படுகின்றது. ஆவணங்கள் பொதுவாக புதை பொருளாய்வு, அரும்பொருட்காட்சியகம், சுவடிகள் காப்பகம், நூலகம், தனியார் குறிப்புக்கள் இன்று தொழில்நுட்பவியல் வளர்ச்சி காரணமாக மென்பொருட்கள், மின்னியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பகம் என்று பல மூலங்கள் மூலம் ஆவணப்படுத்தப்படுகின்றன. பண்டையகால மக்கள் செப்பேடுகளிலும், கல்வெட்டுக்களிலும், சுவடிகளிலும் ஆவணப்படுத்தும் முறையைப் பின்பற்றியுள்ளார்கள். இதனை விட வாய்மொழியாகவும், பரம்பரை பரம்பரையாகவும், செவி வழியாகவும், மனனஞ் செய்வதன் மூலமும் மக்கள் பண்டைய வழக்காறுகளையும் மரபுகளையும் ஆவணப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறான முறைமையை நாட்டார் வழக்காற்றியல் துறையில் காண முடிகின்றது.

நாட்டார் வழக்காற்றியலானது ஆரம்ப காலத்தில் படிப்பறிவற்ற மக்களால் வாய்மொழி ரீதியாக நிகழ்வுகளிலும் சடங்குகளிலும் மீள் அளிக்கை செய்வதன் மூலம் தலைமுறை தலைமுறையாக ஆவணப்படுத்தப்பட்டு, அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கப் பட்டுள்ளன. ஆனால் இவை ஒரு முறைமைசார் பேணுகையாகக் கருதப்படவில்லை. காரணம், ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் வாய்மொழியாகக் கையளிக்கும்போதும், ஒரு மனிதனைக் கருவியாகக் கொண்டு அவனிடம் உள்ளவற்றை இன்னொரு மனிதன் சேகரித்துத் தொகுத்து ஆவணப்படுத்தும்போதும் அவற்றின் உறுதித்தன்மை, நம்பகத்தன்மை, ஞாபகத்தன்மை, மூலப்பிரதியுடைமை, பொதுமைப்பாடு என்பன தொடர்பாக ஐயமுறும் வகையில் கேள்விகள் எழுப்பப்பட்டன. இவற்றில் தொடர்பாடல் தவறுகள், இடைச்செருகல்கள் என்பன இடம்பெற்றிருக்கலாம் என்றும் கருதப்பட்டன.

ஆவணம் என்பது, எழுத்துருவானவை என்று எமது மனதில் வேரூன்றியுள்ளதனால் வாய்மொழிரீதியான தரவுகளைச் சான்றுகளாகவும் ஆவணங்களாகவும் ஏற்றுக்கொள்வதில் தயக்க நிலையும் அவற்றை ஆவணப்படுத்துவதில் சிக்கல் நிலையும் உள்ளது. எமது வாழ்வில் ஆவணப்படுத்தல் குறித்த விழிப்புணர்வானது குழந்தைக்கு முத்திரை சேகரித்தல் பழக்கம் தொடக்கம் ஆரம்பிக்கப்படுகின்றது. நாம் நமது குழந்தைகளுக்கு நமது பண்பாட்டின் தொடர் நிகழ்வினை அவர்கள் வயது முதிர்ச்சிக்கு ஏற்ப செவி வழியாகக் கூறிவரும்போது, நமது கடந்த மற்றும் எதிர்கால தன்னுணர்வினைச் செப்பம் செய்ய முடிகின்றது. இதுவும் ஓர் ஆவணப்படுத்தல் செயற்பாடாகவே உள்ளது. எனவே, ஆவணப்படுத்தல் என்பது தனியே எழுத்து மூலம் மட்டுமன்றி, குறியீடுகள், தொல்பொருட்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், ஒலி - ஒளிப்பதிவுகள், மீள் அளிக்கை செய்வதன் மூலமான பேணுகை என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

பின்னர், காலப்போக்கில் நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், அவற்றை ஆவணப்படுத்துவதற்கும் கள ஆய்வு முறையினைப் பயன்படுத்தி அவற்றை ஆவணப்படுத்தியுள்ளார்கள். கள ஆய்வு முறையில் பேட்டி, உற்று நோக்கல், பங்குபற்றும் முறையியல் (அதுவாகவே மாறி வாழ்ந்து அவதானித்தல்) கலந்துரையாடல்கள், ஒலிப்பதிவுகள் ஆகிய முறைகள் உள்ளடங்குகின்றன. ஆய்வாளர் தமக்கு ஆய்விற்கு வேண்டிய தகவல்களைச் சேகரிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட களத்திற்கு தாமே நேரடியாகச் சென்று தகவலாளியிடம் தொடர்பு கொண்டு உரையாடி கேள்விகளைக் கேட்டு அவற்றிற்கான விடைகளைப் பெற்று வருவதே ஆய்விற்கான களப்பணி எனப்படுகின்றது. நாட்டார் வழக்காற்றியலில் கள ஆய்வு என்பது அவசியமானதும் கட்டாயமானதுமாகும். ஏனெனில், எல்லா இடங்களிலும் எல்லாவிதமான கலைகளும் இலக்கிய வகைகளும் வழக்கில் இருப்பதில்லை, ஒரு சில இடங்களில் ஒரு சில வகைகள் மட்டுமே வழக்கில் இருந்து வருகின்றன, வேறு சில இடங்களில் வேறு சில வகைகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களும் கலைகளும் பெருமளவில் மக்கள் வாழ்வோடும் வளர்ச்சியோடும் பின்னிப்பிணைந்துள்ளதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மக்களிடமே உண்மையான உறுதியான நேரடியான தகவல்களைச் சேகரிக்க முடியும். வெறுமனே இரண்டாம்நிலைத் தரவுகளைக் கொண்டும் யூகத்தின் அடிப்படையிலும் ஆய்வுகளை மேற்கொள்ள முடியாது என்பதுடன், குறிப்பிட்ட இடத்தைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அறிந்த சிலரிடம் கேட்டறிந்து பெற்றுக் கொள்ளும் தகவல்களும் நேரடியாக ஆய்வாளர் முன்னின்று பெறாத தகவல்களும் முழுமையான ஆதாரங்களாக எடுத்துக்கொள்ள முடியாது. கள ஆய்வினை மேற்கொள்பவனுக்குப் பல்வேறு சிக்கல்களும் இடர்களும் ஏற்படலாம், முறையான விதத்தில் தகவலாளியிடம் தகவல்களைச் சேகரிக்க முடியாமல் போதல், காலவிரயம் பணவிரயம் உள்ளிட்ட பல சிக்கல்கள் ஏற்படும்போது இவை முறையற்ற தொகுப்புக்களுக்கும் இடமளிக்கலாம். இத்தகைய செயற்பாடுகள் நாட்டாரியல் வழக்காற்றில் பொதுவாக ஏற்படுபவையாகும். முறையான களப்பணி மூலம் அதிகமாகத் தரவுகள் கிடைத்தல், ஐயப்பாடுகளை நேரடியாகப் போக்கிக் கொள்ளல், ஏற்கனவே கண்டறியப்பட்ட தரவுகளைத் திருத்தியமைத்துக் கொள்ளல் முதலியவற்றை மேற்கொள்ள முடியும்.

வாய்மொழியாக வழங்கி வரும் நாட்டார் இலக்கியங்களைத் தொகுக்கும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறைமைகளில் தொகுத்துள்ளனர். எப்படிப்பட்ட சூழலில் தொகுக்கப்படுகின்றன, அத்தொகுப்புக்களின் தேவை என்ன? தற்போதைய நிலைப்பாடு, எதிர்காலத்தில் இவற்றைக் கொண்டு எவ்வாறு ஆய்வுகளை மேற்கொள்ளுதல் என்று பலவாறான வினாக்களை இத்தொகுப்புக்களை நோக்கி முன்வைக்க வேண்டியுள்ளன. நாட்டார் இலக்கியங்களைத் தொகுக்கும்போது மக்கள் வழக்கில் வழங்கும் முறையிலேயே அவை பதிவு செய்யப்பட வேண்டும். சில தொகுப்புக்கள் காலத்திற்கு ஏற்ப மாற்றியமைக் கப்பட்டு தொகுக்கப்படுகின்றன. அத்துடன், சில தொகுப்புக்கள் மக்கள் வழக்காக இல்லாமல் இலக்கிய வழக்காக மாற்றப்பட்டுள்ளன. உதாரணமாக: யாப்பு வடிவத்திற்கு ஏற்ப பழமொழிகள் மாற்றியமைத்து தொகுக்கப்பட்டுள்ளன.

நாட்டார் இலக்கியங்களைத் தொகுக்கும்போது ஆராய்ச்சி ரீதியான தொகுப்பு முறைமை பின்பற்றப்படுதல் அவசியமானது. முன்னைய தொகுப்புக்களில் எந்த வகையான ஆய்வு அணுகுமுறையும் இல்லை. ஏனெனில், தொகுப்பு முறை என்பது இன்றுபோல் ஆய்வு அடிப்படையாகவோ கோட்பாட்டின் வழியாகவோ வளர்ச்சி அடைந்திருக்க வில்லை. உதாரணமாக: பழமொழிகளைத் தொகுத்து ஆவணப்படுத்தலில் 'அகரவரிசைப் படுத்தல்' என்ற முறைமை ஒன்று இருந்திருக்கவில்லை. சேகரித்தல், ஆவணப்படுத்தல் என்ற முறையில் மட்டும் இத்தொகுப்புக்கள் அமைகின்றன. பின்னர் காலப்போக்கில் சேகரித்தல், ஒழுங்குபடுத்தல், ஆவணப்படுத்தல், பரவலாக்கம் செய்தல் என்ற ஆய்வுநெறி நின்று தொகுத்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டார் வழக்காற்றியலை ஆவணப்படுத்தல் என்ற செயற்பாடானது தொல்பொருளாய்வு, கல்வெட்டுக்கள், கள ஆய்வுகள் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களைத் தொகுத்து அவற்றை நூல்களாகவும் இறுவட்டுக்களாகவும் வெளியிடுதல், ஏற்கனவே உள்ள சுவடிகளையும் நூல்களையும் பதிப்பித்தல், ஊடகங்களில் குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்களில் (மின்னியல் நூலகம், மின்னியல் ஆவணக் காப்பகம் முதலியன) ஆவணப்படுத்துதல் என்று ஆவணப்படுத்த முடிகின்றது. நாட்டார் வழக்காற்றியலை தனியே காட்சிப் பொருளாகவும் சொத்தாகவும் ஆவணப்படுத்துவது மட்டுமன்றி, அவ் ஆவணங்களைப் பயன்படுத்தும் விதத்தில் பரவாக்கமும் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆவணப்படுத்தல் என்று சொல்லிக்கொண்டும் உண்மையான வழக்காறுகள் என்று உரிமை கொண்டாடிக்கொண்டும் போலியானவற்றையும் கலப்படமானவற்றையும் முன்வைக்கும் போலி வழக்காறுகளும் நிகழ்கின்றன. இந்தப் படைப்புக்கள் களத்தில் தொகுக்கப்பட்டவை அல்ல. இவை முந்தைய இலக்கிய மூலங்களிலிருந்தும் இதழ்களிலிருந்தும் எடுத்துத் தொடர்ச்சியாகப் பன்முறை அசைபோட்டு மறுபடியும் எழுதப்பட்டவையும் அல்ல. முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்டவை. நாட்டார் வழக்காறுகளைத் திருத்தியும் புதுப்பித்துப் பதிப்பதும் ஒரு தகவலாளியிடம் தொகுத்துவிட்டுப பலரிடம் இருந்து தொகுத்தாகக் குறிப்பிடுவதும் பல ஏடுகளைக் கொண்டு பாடபேதம் பார்த்துப் புது ஏடு ஒன்றை உருவாக்குவதும் போலி வழக்காறுகளாகவே (Fakelore or fake folklore) உள்ளன. இதனால் நம்பகத்தன்மையுடைய ஆவணங்களை ஆவணப்படுத்த வேண்டும்.

இறுதியாக தமிழ்நாட்டு நாட்டாரியல் ஆய்வுகளோடு ஒப்பிடும்போது இலங்கையில் பன்முகப்பட்ட ஆய்வுகளின் வருகை குறைவாகவே இடம்பெற்று வருகின்றன. நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான தெளிவான சிந்தனை சில தொகுப்பு முயற்சிகளில் காணப்படாமையும் குறைபாடாக உள்ளது. பெரும்பாலான ஆய்வுத் தொகுப்புக்கள் விவணரங்களாகவும் ஒரு சில ஆய்வுகள் சமூக வரலாற்றுப் பின்புலத்திலும் கோட்பாட்டின் அடிப்படையிலும் நாட்டார் வழக்காற்றியலை அணுகுபவையாகவும் உள்ளன. இவற்றிலும் பெரும்பாலான தொகுப்புக்கள் நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டவையாக உள்ளன. இனிவரும் ஆய்வுகளும் தொகுப்புக்களும் இத்தகைய எல்லைகளிலிருந்தும் ஒற்றைப்படையான ஆய்வுத் தளங்களிலிருந்தும் விரிவடைந்து இலங்கை நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுப்புலத்திற்குப் புதிய பாதையினைக் காட்டுவதாக அமையவேண்டும்.

## துணை நூல்கள்

இராமநாதன், ஆறு., (பதிப்பாசிரியர்), (1991), நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைகள், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

சண்முகசுந்தரம், சு., (1976), நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, சென்னை: இலக்கிய மாணவர் வெளியீடு.

சண்முகலிங்கம், க., (பதிப்பாசிரியர்), (1993), தமிழ் நாட்டார் வழக்காற்றியல், (தமிழ் நாட்டார் வழக்காற்றியல் மாநாட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு), கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மருததுரை, அரு., (1995), நாட்டுப்புற வாழ்வியல், முசிறி: அருணா வெளியீடு.

லூர்து, தே., (1976), நாட்டார் வழக்காற்றியல் - அறிமுகம், பாளையங்கோட்டை: பாரிவேல் பதிப்பகம்.

……………………, (1988), நாட்டார் வழக்காறுகள், சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன ஊடகத்தில் நாட்டுப்புறக் கலைகள்

திரு. இரா. மகேஸ்வரன்

## அறிமுகம்

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் குறிக்கப்பட்ட இனத்தவர்களால் நிகழ்த்தப்படுவையாக உள்ளன. இவை காலப்போக்கில் காலத்தின் நோக்கம் கருதி செழுமைப்படுத்தப்பட்டு நிகழ்த்துகலைகளாக (performing art) ஆயின. இவை ஊடகங்களினால் (mass media) உலகறியச் செய்யப்பட்டன. கிராமத்து கலைகளாக இருந்த இவை நவீன வெகுசன ஊடகங்களினால் அனைவராலும் அறியப்பட்டன.

ஊடகம் என்பது தகவல்களை மக்களுக்குப் பரப்புவன. ஊடக செய்திப் பரிமாற்றத்தில் நாட்டுப்புற இலக்கியம் பரவும் விதத்தினைப் பின்வருமாறு ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். 1. வாய் மொழியாகப் பேசப்பட்டு, 2. இலக்கிய வடிவமெடுத்து 3. பல்வேறு நிகழ்வுகளாகி, 4. செய்தியாக பல நிலைகளாகின்றன என்கின்றனர்.

நவீன யுகம், இடம்பெயர் யுகம், விவசாய யுகம், கைத்தொழில்யுகம், தகவல் யுகம் நவீன யுகம் என யுகங்கள் மாறி வருகின்றன. இதில் விவசாய யுகத்திலேயே நாட்டுப்புற கலைகள் அதிக செல்வாக்குடன் காணப்பட்டுள்ளன. தற்போது நிலவுவது நவீன ஊடக யுகமாகும்.

## ஆய்வின் நோக்கம்

நவீன ஊடகங்களினால் நாட்டார் கலைகளில் ஏற்பட்ட தாக்கம் நன்மையானதாக அமைந்துள்ளதா? பாதிக்கப்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிதல் ஆகும்.

## ஆய்வு முறை

நேரடி அவதானிப்பு, இரண்டாம் நிலை தரவுகளின் அடிப்படையில் பெறப்பட்ட ஆதாரங்களுடன் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவீன ஊடகத்தில் நாட்டுப்புறக் கலைகள் நவீன ஊடகத்தில் கதைகளாகத் தோன்றி, சிறிய கதைப் பாடல்களாகி, பெரிய கதைப் பாடல்களாகி, மீண்டும் கதைகளாகி, கதைப் பாடல்களாகி, கற்பனைகள் பல கலந்து என படிமுறையாக வளர்ச்சியடைந்துள்ளன என்கின்றனர்.

வெகுசன ஊடகங்களாக செய்தி பரப்புவதற்கு கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல் கள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா, கணணி, இணையத்தளம் என விரிந்து செல்கின்றன.

**வெகுசன ஊடகங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.**

- காணுதற்குரியது - அச்சு ஊடகம், எழுத்துக்கள், பாறை ஓவியங்கள், கோலங்கள், வேடங்கள், உடை ஒப்பனைகள், செய்தித்தாள்கள், புகைப்படங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கேட்பதற்குரியது - அலை ஊடகம், பேச்சு, பாட்டு, ஒலிபெருக்கி, பறை, மேளம், வானொலி, நாட்டுப்புற இசை
- காணுவதற்கும், கேட்பதற்கும் உரியது - காட்சி ஊடகம், தொலைக்காட்சி, வீடியோ, கூத்துக்கள், நாடகங்கள், சினிமா மற்றும் இணையத்தளங்கள் என வகைப்படுத்தலாம்.

**நாட்டுப்புறக் கலைகள் பற்றிய தகவல் வழங்குவதில் நவீன ஊடகங்கள்**

1. விமர்சனப் பார்வை (Critical Methods)
2. பாரம்பரியக் கலைகளை ஒப்பிட்டு வழங்குவது (Classical Mrthod)
3. விபரித்து எழுதுதல், படைத்தல், பரப்புதல்
4. (reportorial method)
5. புதிய படைப்பை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்குதல் (organic mrthods) எனப் பல்துறையாக ஆய்கின்றனர்.

நாட்டுப்புறவியல் பற்றி அடிப்படையில் பூரண அறிவைக் டிகாண்டிராதவர் பின்வரும் நான்கு வகைகளினூடாகச் செய்யமுடியாது. செய்ய முடியாது.

இம்மாற்றத்தினை விவரித்தல் (Elaboration), சுருக்குதல் (Condensation), தெய்வீக நிலையாக்குதல் (Sanctification), செய்தியாக்கல் (news) எனக் கூறலாம்.

**ஊடகங்களில் நாட்டுப்புறவியல் உள்வாங்கல்**

பாடல்கள், இசைவகைகள், நாட்டுப்புறக் கதைகள், கூத்துக்கள், நடனங்கள், வாழ்வியல் நிகழ்வுகள், வட்டார மொழி நடைகள் எனப் பல வகைப்படுத்தலாம். இவை நேரடியாகவும் தழுவிய நிலையிலும் மறைமுகமாகவும் உள்வாங்கப்பட்டுள்ளது.

நிகழ்கலைக்கும் நவீன ஊடக கலைக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஒப்பிட்டு நோக்கின்..

| நிகழ்கலை | நவீன ஊடகக் கலை |
|---|---|
| நிறப்பூச்சுக்கு அடுப்புக்கரி, அரிதாரம், செம்மண், செந்சந்தனக் கட்டை உரைசல், மஞ்சள் பயன்படுத்தப்பட்டன. | நிறப்பூச்சுக்கு வண்ணக்கலவை, முகப்பூச்சு பயன்படுத்தப்படுகிறன. |
| வாய்ப்பாடல்கள் குரல்களால் உரத்த குரலில் ஒலித்தன. | வாய்ப்பாடல்கள் ஒலிபெருக்கியினால் வண்ணக்குரலில் மென்மையாகப் பாடப்படுகின்றன. |
| நாட்டுப்புறக் கலைகள் ஏழ்மையானவை, எளிமையானவை. | நவீன ஊடக கலைகள் ஆடம்பரமானவை. |
| வட்டாரத்தன்மை வட்டார பண்பாடு வட்டார உடை, ஒப்பனை, தொழில் முறை காணப்பட்டன. | ஊடகத்துறையில் எல்லோரும் பயன்படுத்தக் கூடியதாக உடை தயாரிக்கப்படுகின்றன. |
| நாட்டார் கலை வடிவங்கள் குழுமை நிலை கொண்டமை. | ஊடகக் கலை வடிவங்கள் தனிநபர் நிகழ்த்துகையாகக் காட்டப்படுகிறது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சிலவற்றை அழுத்தப்படுத்திக் காட்டுதல் சிறப்பாகக் காணப்பட்டது. | நவீன வெகுசன ஊடகத்திலும் வேறாக அழுத்தப்படுத்திக் காட்டப்படுகிறது. |
| திரை மறைவில் பலர் செயற்படுவர். | பிற்புல ஆட்கள் ஊடகங்களில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. |
| தெய்வத்தின் முன் தெய்வ வழிபாட்டுடன் உரு ஏற்று நிகழ்த்தப்படும் கலை | நவீன ஊடகங்களில் கெமராக்களுக்கு முன் நடத்தப்படுகின்றன. |
| நாட்டார் கலைகள் கலைஞர்களின் உழைப்பை முழுமையாக்க கொண்டவை. | நவீன வெகுசன தொடர்பு சாதனங்கள் இயந்திரமய, இயக்குனர்களைக் கொண்டவை |
| நாட்டுப்புறவியல் கிராமச் சூழலை கொண்டவை | ஊடகத்துறை நகர கலாசாரத்தினை பிரதிபலிப்பன. |
| நாட்டுப்புற நிகழ்வுகள் விடிய விடிய நிகழ்த்துவன, சில கலைகள் பல நாட்கள் தொடர்வன | வெகுசன ஊடாக, கலைகள் சில நிமிட மணிநேரம் |
| நாட்டுப்புற மக்கள் ரசனையுடன் கூடியவர்கள் | ஊடகத்துறை பார்வையாளர் நேரத்தைக் கழிப்பதற்காகப் பார்ப்பவை வெகுசன ஊடாக - குழும நிலை - சிறுகூட்டம் தனிநபர் ரசனை கொண்டவை. |
| நாட்டுப்புறக் கலைகளில் இயற்கை மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. | வெகுசன ஊடாகக் கலைகள் வேறுபட்டு, நவீனமய புத்தாக்கம் கொண்டவை |
| ஆடல் ஓசைக்கு வாகைநெத்து, கருவேல் நெத்து குண்டுமணி பயன்படுத்தப்பட்டன. | ஊடகத்துறையில் நவீன இசைப் பொருட் களுடன் சலங்கையும் பாவிக்கப்படுகின்றன. |
| மனித உழைப்பைக் கொண்டவை. | நவீன ஊடகம் இயந்திர உதவி கொண்டவை. |
| இயற்கைத் தன்மையுடனான கலைகள் | செயற்கைத் தன்மையுடன் வடிவமைக்கப் படுகின்றன. |
| படைப்பாளர்களது சுதந்திரத் தன்மைக் காணப்பட்டன | ஊடகங்கள் மூலம் படைப்பாளரது சுதந்திரத் தன்மை பாதிக்கப்படுகிறது. ஊடகத்திற்கு ஏற்றவாறு படைப்படுகின்றன. |
| கூத்து ஆட்டம், நடிப்பு ஆகியன உடை ஒப்பனை திரைச்சீலை போன்றன கலைக் கூறுகளாகக் காட்டப்பட்டன. | காட்சி நிலைக்கு அமையாத கலை வடிவங்கள் நவீன காட்சி வடிவமாக மாற்றப்படுகின்றன. |
| நாட்டு மருந்து விற்பனை, பாவனை குறைந்தது போல நாட்டார் கலைகளும் குறைகின்றன. | நவீன மருந்துகள் மற்றும் விளம்பரம் போல நவீன கலைகள் வளர்ந்துள்ளன |
| தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட மக்களின் கலைகள் | சகலரதும் நடிப்பாலான கலைகளாகவுள்ளன. |
| கலைஞர்களுக்கு வருமானமில்லை | கலைஞர்கள் நல்ல வருமானம் பெறுகிறார்கள் விளம்பரங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறார்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களில் நாட்டுப்புறவியல் புறக்கணிக்கப்படுகின்றமைக்குக் காரணம் அதன் அங்கீகாரம் போதாமை, நையாண்டிப் பார்வை, சமூகத்தில் மதிப்பிழப்பு, சாதிய ஆதிக்கம் - ஒடுக்கல், உலகமயமாதலினால் நவீனத்தாக்கம் அவற்றோடு தொழிற்சங்க அரசியல் தாக்கம், கலைஞர்களின் பற்றாக்குறை, சினிமாத்தாக்கம், கணினி இணையத் தாக்கம் போன்நன காரணமாகின்றன.

வெகுசன ஊடகங்கள் கவனிக்க வேண்டியனவையாக கால அளவு, நவீன உடைப் பயன்பாடு, மென்மைத் வன்மைத்தன்மை, வட்டாரத்தன்மை, குழுமத்தன்மை, அழுத்தப் படுத்திக் காட்டுதல் ஆகியவற்றில் கவனம் கொள்ளுதல் மற்றும், இடம், மக்கள் கூட்டம், அரங்கு, இயற்கைச்சூழல் பாவிப்புப் பொருட்கள் பற்றியும் கவனம் கொள்ள வேண்டும்.

நவீன ஊடகச் சந்தையில் நாட்டுப்புறவியலான இரசிப்புத் தன்மை, ஏற்றுக்கொள்ளப் படும் தன்மை, செல்வாக்கு நிலைகள் ஆகியவற்றோடும் சந்தைப் பொருளாக மாற்றுதல், வேறுபட்ட வாய்ப்புக்கள் உதாரணமாக சினிமாவில் பாடல்களின் பின்னணி இசை, இனிய கனவு, காதல் பாடல் காட்சிகள், ஆவனவோடு சண்டைக் காட்சிகளில் புலியாட்டம், சிலம்படி- வாஸ்தா, மல்யுத்தம், வாளும் கேடயமும், காளையை அடக்குதல் - மஞ்சு விரட்டுதல் ஆகியனவும் வாழ்வியல் நிகழ்ச்சிகளாக பொங்கல், ஏர் மங்கலம் பூட்டல், வில்லுப்பாட்டு என சினிமாவில் நாட்டுப்புற பாடல்கள், கதைகள், ஆடல்கள் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

நவீன ஊடகமான நாட்டுப்புறக் கலைஞர்களை விளம்பரப்படுத்தல், கலைகளை உலகறியச் செய்தல், செய்திகளைப் பரிமாற்றல், பலருக்குச் சென்று சேரும் தன்மையை ஏற்படுத்தல், விளக்கங்களுடன் தெளிவுடன் காட்டுதல். பல்வேறு இன மொழி மக்களுக்கு சென்றடையக் கூடியதாகக் காணப்படுகிறது. அழிந்து வரும், மாற்றமுற்றுவரும் கலை களைக் காப்பாற்றி புத்துயிராக்க முடியும். நிகழ்காலக் கலைஞர்களையும் பார்வையாளர் களையும் இணைக்கக் கூடியதாக இது உள்ளது.

ஆட்டங்களான கரகாட்டம் (சக்தி கரகம், ஆடுகரகம்), காவடி ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம் (நரிக்குறவர் ஆட்டம்), மரதடிப்பு ஆட்டம், புலியாட்டம், பொம்மலாட்டம், ஆலி நடனம், மந்தி நடனம், மயிலாட்டம், மரக்கால் ஆட்டம், பொய்க்கால் ஆட்டம், குதிரையாட்டம், தப்பாட்டம், போன்றவற்றை நவீன வெகுசன ஊடகங்கள் பல்வேறு புதிய வடிவமைப்புக்களை இணைத்து மாற்றங்களை உட்புகுத்தியுள்ளன.

மேளங்களான.... மேளம், உடுக்கடி, தவில், பம்பை, தப்பு, உறுமி போன்றன இவை நையாண்டி மேள நிகழ்ச்சிகளாகக் காட்டப்படுகின்றன.

கூத்துக்களான.காமன்கூத்து, தோற்பாவை, நிழற்கூத்து, புத்மசாலியார் கூத்து, வடமோடி, தென்மோடி காத்தவராயன் கூத்துக்கள் ஆகியன தோட்டங்களில் கிராமங்களில் அழிந்தாலும் ஊடகங்களூடாக, சினிமா ஊடாக ஒரு பகுதியாவது பார்வையிட முடிகிறது.

## சினிமாவில் நாட்டார் கலை

வெற்றிமாறனின் ஆடுகளம், கங்கை அமரனின் கரகாட்டக்காரன், எங்க ஊரு பாட்டுக்காரன், சுரேஸ் கிருஷ்ணாவின் சங்கமம், ராமநாராயணனின் பாளையத்து அம்மன், பாரதி கண்ணனின் ஸ்ரீ பன்னாரி அம்மன், கண்ணாத்தாள் ஆகியன சில உதாரணங்களாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்களால், இணையத் தளங்களால் நாட்டுப்புறக் கதைகளுக்கான ஆர்வம் கூடியுள்ளது. தற்போது தகவல், தேடல், செய்தி ஆய்வு என ஆர்வம் காட்டப்படுகிறது.

### தடைச் சட்டங்களால் ஏற்பட்ட தடைகள்

சேவல் சண்டை - சூதாட்டம், பலி கொடுத்தல் - மிருகவதைச் சட்டம், காளையடக்குதல் - தடைச்சட்டம், கள்ளுக்குடித்தல் - தடைச்சட்டம் (தமிழ்நாடு) சில நாட்டுப்புற நிகழ்வு களுக்குத் தடை ஏற்பட்டுள்ளது.

### முடிவுரை

நாட்டுப்புறவியல் கலைகள், எமது பாரம்பரியம், வாழ்வியல் பண்பாட்டு கூறுகள், நவீன ஊடகங்களினால் நவீனமயப்படுத்தலினால், இயல்பான நிகழ்வினது தன்மையை வெளிக்கொண்டுவராமல் மாற்றியமைப்பதினால் இம் மாற்றம் அழிவிற்கே வழிவகுக்கும். நவீன ஊடகங்களின் தாக்கம் நாட்டுப்புற இயற்கை அமைப்பிற்கு மாறாகவே உள்ளன. நாட்டுபுறக் கலைகளை அதன் உண்மைத்தன்மையோடு காப்பது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை
# ஆய்வுச் செயற்பாடுகள் – 2017

## தமிழ்த்துறையின் கருத்தரங்குகள்

### பருவகாலக் கருத்தரங்கம்

09.09.2017 சென்னைப் பல்கலைக்கழக தமிழியல் துறையின் முன்னைநாள் தலைவர் பேராசிரியர் வீ. அரசு "தமிழியல் ஆய்வுகள்" தொடர்பான சிறப்பு விரிவுரை ஒன்றினை வழங்கினார்.

06.06.2017 அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த புலம்பெயர் எழுத்தாளர் லெ. முருகபூபதி "சுடும் பனி நிலம் - புலம் பெயர் எழுத்தாளரின் தவிப்பும் தகிப்பும்" எனும் தலைப்பில் கலைப்பீட கருத்தரங்க மண்டபத்தில் விசேட உரை நிகழ்த்தினார்.

08.10.2017 தமிழ்த்துறையின் பருவகாலக் கருத்தரங்கொன்று அரச இலக்கிய ஆலோசனைக் குழுவின் அனுசரணையுடன் அரச இலக்கிய விழாவை முன்னிட்டு இலக்கியப் பேருரை நிகழ்ச்சியாக நடாத்தப்பட்டது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறையின் முன்னைநாள் தலைவர் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்கள் "இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் இனத்துவ அடையாளம் - மலையக அடையாள உருவாக்கமும் மலையக இலக்கியமும் பற்றிய சில அவதானங்கள்" எனும் தலைப்பில் சிறப்புரை ஒன்றினை வழங்கினார்.

### மாதாந்தக் கருத்தரங்கம்

15.03.2017 பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் முன்னைநாள் தலைவர் பேராசிரியர் துரை. மனோகரன் அவர்கள் "சிலப்பதிகாரம்: கண்ணகி, பூம்புகார் திரைப்படங்களின் அடிப்படையிலான ஒரு நோக்கு" என்ற தலைப்பில் உரையினை, திரைக்காட்சியும் கருத்துமாக நிகழ்த்தினார். மேலும் அந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறை விடுகை வருட மாணவன் தேவராசா கஜீபன் "எல்லை தாண்டும் பெண் மனம்: சர்மிளா செய்யத்தின் சிறகு முளைத்த பெண் ஐ அடிப்படையாகக் கொண்டு...." என்னும் தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தார்.

### பிறநாடுகளுக்கான கல்விசார் பயணங்களும் பங்கேற்ற கருத்தரங்குகளும்

சென்னை துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியின் தமிழ்த்துறை மற்றும் தமிழ் இலக்கியத் துறை இணைந்து 01.03.2017 இல் நடாத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில், தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் "சங்க அகத்திணை மரபும் காமத்துப் பாலும்" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார்.

சென்னையில் 9 - 11.06.2017 தினங்களில் இடம்பெற்ற இரண்டாம் உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்டு, முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் "ஈழத்துப் பெண் கவிதைகளில் உணர்த்துமுறை உத்திகள்" எனும் தலைப்பிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஈழத்துப் படைப்புலகில் டொமினிக் ஜீவா” எனும் தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் “சங்க இலக்கியத்தில் அறம்” எனும் தலைப்பிலான பயிலரங்கம் ஒன்றினை 17.06.2017 முதல் 27.06.2017 வரையான திகதிகளில் நடாத்தியது. இதில் தமிழ்த்துறையின் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்ரன் அவர்களும், விரிவுரையாளரான எம் .எம். ஜெயசீலன் அவர்களும், உதவி விரிவுரையாளரான சோ. ஜதீனா அவர்களும் தமிழைச் சிறப்புப் பாடமாக கற்கும் மாணர்களும் கலந்து கொண்டனர்.

திருச்சி விஷப் ஹீபர் கல்லூரியின் உயர் தமிழாய்வு நிறுனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்ரன் அவர்களால் “ஈழத்து தமிழ் விமர்சனப் போக்குகள்” எனும் தலைப்பில் சிறப்பு விரிவுரை ஒன்று நிகழ்த்தப்பட்டது.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்தரங்கத்தில் “ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி” குறித்த சிறப்பு விரிவுரை ஒன்று தமிழ்த்துறைத் தலைவர் வ. மகேஸ்வரன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையினரின் வேண்டுகோளிற்கிணங்க மாணவர்களுக்கு “ஈழத்து தமிழ் இலக்கியப் போக்குகள்” எனும் தலைப்பில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களும், “மலையகத் தமிழிலக்கியம்” எனும் தலைப்பில் விரிவுரையாளர் எம்.எம். ஜெயசீலன் அவர்களும் சிறப்பு விரிவுரை வழங்கினர்.

அவுஸ்திரேலியக் கம்பன் கழகம் சிட்னியில் 03.11.2017 அன்று நடாத்திய ஞானவேள்வி கருத்தரங்கில் “அழகியல் நோக்கில் திருமுறையும் திவ்யப்பிரபந்தமும்” எனும் தலைப்பில் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் சிறப்புரையாற்றினார்.

2017ஆம் ஆண்டுக்கான அவுஸ்திரேலியக் கம்பன் விழாவில் கம்பனில் அளவைகள் எனும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் கம்பனில் அனுமானம் எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**மாணவர் அடைவுகள்**

**இளங்கலைமாணி பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகள் - 2016**

அபாறா, ஏ. டபிள்யு., அ.ஸ. அப்துஸ்ஸமதுவின் புனைகதைகள் - ஓர் ஆய்வு

அமல்ராஜ், ஜீ., தெணியானின் நாவல்களில் விளிம்புநிலை மாந்தர்கள் - ஓர் ஆய்வு

அருள்விழி, த., குறுந்தொகையில் சடங்குகள், நம்பிக்கைகள் மற்றும் வழக்காறுகள் - ஓர் ஆய்வு

இளங்கேஸ், ஆர்., செங்கை ஆழியானின் சமூக நாவல்கள் (வாடைக்காற்று, பிரளயம், காட்டாறு ஆகிய நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

கேசவன், சி., வன்னிப் பரதேசத்தில் நாக வழிபாடு (வவுனியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

சல்மியா பாணு, எஸ்., செ. கதிர்காமநாதனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார். ஆர்., தொன்மமும் சிறுகதையாக்கமும் - அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

சுமதி, செ., சமயப் பண்பாட்டுத் தளத்தில் மாற்றுருவாக்கம் ஓர் ஆய்வு (வடமராட்சிப் பிரதேசத்தில் அண்ணமார் வழிபாட்டின் மாற்றங்கள் குறித்த சமூகப் பண்பாட்டு ஆய்வு)

சுரையா, எம்.எம்.எப்., தமிழில் பெருமானார் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் ஓர் ஒப்பீட்டாய்வு

செல்வகுமார், ச., வெருகல் சித்திர வேலாயுதர் கோயில் - ஒரு பண்பாட்டு ஆய்வு

நிதர்சனா, க., பேராசிரியர் க. அருணாசலத்தின் தமிழியல் ஆய்வுகள் - ஓர் ஆய்வு

நிருஜன், க., இலங்கையில் கண்ணகி அம்மன் வழிபாடு (தென்மராட்சிப் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டது)

பஸ்லா, ஏ., அண்ணல் கவிதைகள் ஓர் விமர்சன ஆய்வு

பிரதீபா, சு., பூநகரிப் பிரதேச வேளாண்மைச் சடங்குகள் - ஓர் ஆய்வு

பிறிஸ்கா எல்.சி.ரா., நாவண்ணன் படைப்புக்கள் - ஓர் ஆய்வு

மேகலா, ஆர்., திருக்குறள் இல்லறவியலும் நாலடியார் இல்லறவியலும் ஓர் ஒப்பியல் ஆய்வு

ரிஸ்மியா. எம்.ஏ., சமூக வரலாற்றுப் பின்புலத்தில் புறநானூறு செவியறிவுறூஉ துறைப் பாடல்கள் - ஓர் ஆய்வு

ஷாகிதா, எம்.எம்.பி., சிலப்பதிகாரத்தில் நம்பிக்கைகளும் சடங்குகளும்

ஜதீனா, சோ., ஈழத்துப்பெண் போராளிக் கவிஞர்களின் கவிதைகளின் பேசுபொருள்கள்: அம்புலியின் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

ஜனோஜ், த., தீவகப் பண்பாட்டில் சமயங்கள் - ஓர் ஆய்வு (சப்த தீவுகளை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று ரீதியான ஆய்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாளர் விபரம்

**பேராசிரியர் ச. பிலவேந்திரன்**
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவகம்,
புதுச்சேரி

**பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்**
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் துரை. மனோகரன்**
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

**திருமதி றூபி வலன்டினா**
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி ம. நதிரா**
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி க. இரகுபரன்**
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி அ.ப.மு. அஷ்ரஃப்**
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**கலாநிதி வடிவேல் இன்பமோகன்**
முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி எஸ்.ஆர். தேவர்**
தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் எம்.எஸ்.என். அனஸ்**
முன்னாள் தலைவர், மெய்யியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் கி. விசாகரூபன்**
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**திரு. க. அருந்தாகரன்**
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் றமீஸ் அப்துல்லா**
முன்னாள் தலைவர், மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**திரு. வ. செல்வராஜா**
முன்னாள் உப பீடாதிபதி,
ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி, பத்தனை.

**பேராசிரியர் செ. யோகராசா**
முன்னாள் தலைவர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி முருகு தயாநிதி**
முதுநிலை விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

**திருமதி விஜிதா திவாகரன்**
விரிவுரையாளர், தமிழ்த்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

**திரு. இரா. மகேஸ்வரன்**
நூலகர்,
பேராதனைப் பல்கலைகக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின்

## நான்காவது தமிழியல் கருத்தரங்கக் குழு - 2017

போசகர்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்

தலைவர்

கலாநிதி எஸ்.ஆர். தேவர்

இணைப்பாளர்கள்

கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன்
திரு. எம்.எம். ஜெயசீலன்

பொருளாளர்

திரு. பெ. சரவணகுமார்

செயற்குழு உறுப்பினர்கள்

திருமதி ஆன் யாழினி சதீஸ்வரன்
செல்வி த. அருள்விழி
செல்வி சோ. ஜதீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-955-589-249-0

விலை ரூபா 700.00

Printed by Kumaran Press (Pvt) Ltd. 0112 364550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org